T. 3789

MADRAS UNIVERSITY TAMIL DEPARTMENT

PUBLICATION No. 18 - 8.

*General Editor:*

Dr. R. P. SETHU PILLAI, B.A., B.L., D. LITT.,

*Professor of Tamil*

UNIVERSITY OF MADRAS

---

# TIRUVĀYMOḺI

## ĪṬṬIN TAMILĀKKAM

VOLUME - VIII (Hymns 773 - 882)

முதற்பதிப்பு, 1957
இரண்டாம் பதிப்பு, 1971

பதிப்பாசிரியர்:
மகாவித்துவான்,
**மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை**

**விலை ரூ.**

அச்சிட்டோர்:
அவ்வை அச்சுக்கூடம், சென்னை-13.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பகவத் விஷயம்

# திருவாய்மொழி

பகுதி - 8 (எட்டாம் பத்து)

ஈட்டின் தமிழாக்கம்

சென்னைப்
பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர்
வித்துவான்
புரா. புருஷோத்தம நாயடு
தமிழாக்கம்

சென்னைப் பல்கலைக் கழகம்
1971

Sri

Srīmatē Rāmānujāya namaha

# Bagavat Vishayam

# TIRUVĀYMOḺI

ĪṬṬIN TAMILĀKKAM

VOLUME - VIII (Hymns 773 - 882)

by

VIDVAN

B. R. PURUSHOTHAMA NAIDU

*Lecturer in Tamil*

UNIVERSITY OF MADRAS

UNIVERSITY OF MADRAS

1971

# பொருளடக்கம்


| பொருள் | | | பக்கம் |
|---|---|---|---|
| முன்னுரை | | | |
| முதல் திருவாய்மொழி | ... | ... | 1 |
| இரண்டாந்திருவாய்மொழி | ... | ... | 45 |
| மூன்றாந்திருவாய்மொழி | ... | ... | 74 |
| நான்காந்திருவாய்மொழி | ... | ... | 101 |
| ஐந்தாந்திருவாய்மொழி | ... | ... | 130 |
| ஆறாந்திருவாய்மொழி | ... | ... | 158 |
| ஏழாந்திருவாய்மொழி | ... | ... | 174 |
| எட்டாந்திருவாய்மொழி | ... | ... | 196 |
| ஒன்பதாந்திருவாய்மொழி | ... | ... | 232 |
| பத்தாந்திருவாய்மொழி | ... | ... | 257 |
| **பிற்சேர்க்கை :** | | | |
| செய்யுள் முதற்குறிப்பு அகராதி | ... | ... | 289 |
| ஐதிஹ்யங்கள் | ... | ... | 291 |
| உரை நயங்கள் உள்ள இடங்கள் | ... | ... | 292 |
| உவமைகள் | .... | ... | 293 |

# முன்னுரை

*'தவம்செய் வதும்தழல் வேள்வி முடிப்பதும் தம்மைஒறுத்து*
*எவன்செய்யும் மெய்யன் குருகைப்பிரான்எம்மை இன்னம்ஒரு*
*பவம்செய்கை மாற்றிய பண்டிதன் வண்தமிழ்ப் பாவுமுண்டே*
*அவம்செய்கை மாற்றச் செவிஉண்டு நாஉண்டு அறிவுமுண்டே.'*

—**கம்ப நாடர்**

திருமகள் கேள்வனை சர்வேஶ்வரனால் மயர்வு அற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வாருடைய அருளிச்செயலாகிய திருவாய்மொழியின் **எட்டாம் பத்திற்கு 'ஈட்டின் தமிழாக்கம்'** என்னும் பெயரிய உரை எம் குலக்கொழுந்தாகிய ஆழ்வாருடைய திருவருளால் வெளி வருகின்றது. முன்னர் வெளி வந்த ஏழு பத்துகளையும் ஏற்ற தமிழ் உலகம் இதனையும் ஏற்று, அடியேற்கு ஊக்கம் அளிக்கும் என்பது அடியேன் எண்ணம்.

இவ்வுரையை எழுதி வந்த காலத்தும் பதிப்பித்த காலத்தும் ஆங்காங்கு வேண்டிய உதவிகளைச் செய்த பெரியார்கட்கும் நண்பர்கட்கும் நன்றி செலுத்துங்கடப் பாடுடையேன். இவ்வுரையைத் தொடர்ச்சியாக வெளியிட்டு உதவி வரும் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு என்றென்றும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையேன்.

*'குற்றம் களைந்து குறைபெய்து வாசித்தல்*
*கற்றறிந்த மாந்தர் கடன்.'*

சென்னை
6-3-57.

**பு. ரா. புருஷோத்தம நாயடு.**

# திருவாய்மொழி

## எட்டாம் பத்து

### முதல் திருவாய்மொழி—'தேவிமார்'

#### முன்னுரை

**ஈடு:** முதற்பத்தால், பகவத்கைங்கரியம் புருஷார்த்தம் என்று அறுதியிட்டார்; இரண்டாம் பத்தால், அந்தக் கைங்கரியத்தில் களையறுத்தார்; மூன்றும் பத்தால், களை அறுக்கப்பட்ட அந்தக் கைங்கரியமானது பாகவத சேஷத்துவ பரியந்தமான பகவத்கைங்கரியம் என்றார்; நான்காம் பத்தால், இப்படிப்பட்ட கைங்கரியத்திற்கு விரோதிகள் ஐசுவரிய கைவல்யங்கள் என்றார்; ஐந்தாம் பத்தால், அந்த விரோதிகளைப் போக்குவானும் அவனே என்றார்; ஆறும் பத்தால், விரோதிகளை அழிக்கும் தன்மையனை சர்வேஸ்வரன் திருவடிகளிலே சரணம் புக்கார்; ஏழாம் பத்தால், இப்படிப் பெரிய பிராட்டியார் முன்னிலையாகச் சரணம் புக்க இடத்திலும் தக்தபட நியாயம் போலே சம்சாரம் தொடருகிறபடியைக் கண்டு நோவுபட்டார்; 'இப்படி, பிரபந்நராய் இருக்கச்செய்தே தக்தபட நியாயம்போலே நம்மை விடாமல் தொடருகிறது, நமது ஆத்துமாவிலும் ஆத்துமாவோடு சம்பந்தப்பட்ட பொருள்களிலும் நசை அறுதபடியாலே' என்று பார்த்து, அவற்றில் ஒரு நசை இல்லை என்கிறார், இந்த எட்டாம் பத்தால்.

•

[1]'பிராட்டிமாரோடே நித்திய பரிகரம் சேவிக்க, பரியங்க வித்தியையிற்சொல்லுகிறபடியே திருவனந்தாழ்வான் மேலே சர்வேஸ்வரன், நாம் பாடின திருவாய்மொழி

---

1. மேல் திருவாய்மொழியிலே கூறிய பொருளை அநுவதித்துக் கொண்டு, மேல் திருவாய்மொழிக்கும் இத்திருவாய்மொழிக்கும் உள்ள இயைபினை அருளிச்செய்து, இத்திருவாய்மொழியில் கூறப்பட்ட பொருளினைச் சுருங்க அருளிச்செய்கிறார், 'பிராட்டிமாரோடே'

கேட்கைக்காகத் **திருவாறன்விளை**யிலே எழுந்தருளியிருந்தான்; நாம் அங்கே சென்று திருவாய்மொழி கேட்பித்து, அநுகூலமான கைங்கரியங்களையும் செய்து அனுபவிப்போம்' என்று பாரித்தார்; அது எண்ணமாத்திரமேயாய், நினைத்தபடி தலைகட்டப் பெற்றதில்லை; [2]'பிராட்டிமார் அருகே எழுந்தருளியிருக்க, நித்தியசூரிகள் உளராய் இருக்க, நினைத்தபடி காரியம் செய்து தலைக்கட்டுகைக்குத் தகுதியான ஐசுவரியம் குறைவு அற்று இருக்க, அடியார்கள் உகந்தனவற்றைத் தனக்குத் திருமேனியாகக் கொண்டு உதவும் தன்மையனாய் இருக்க, [3]நான் ருசியில் குறைவு அற்றவனாய் இருக்க, நினைத்த கைங்கரியம் பெறாது ஒழிவோமே!' என்று வெறுத்தார்.

[4]இவர்தாம் சர்வேஸ்வரன் பக்கல் தமக்குத் தஞ்சமாக நினைத்திருப்பது இரண்டு தன்மைகளை: அவை,[5] அடியார்கட்குப் பரதந்திரனாய் இருக்கும் இருப்பும், தனக்கு வேறுபட்ட எல்லாப் பொருள்களும் தனக்குப் பிரகாரமாகத் தான் பிரகாரியாய், இவற்றுக்கு வந்த வியசனம் தனக்கு வந்ததாக நினைத்திருக்கும் சம்பந்தமும். அவை இரண்டும்

---

என்று தொடங்கி. மேல் திருவாய்மொழியிலே 'எழில்மலர் மாதரும்' என்றதனைத் திருவுள்ளம் பற்றிப் 'பிராட்டிமாரோடே' என்றும், 'யாவரும் வந்து வணங்கும்' என்றதனைத் திருவுள்ளம் பற்றி 'நித்திய பரிகரம் சேவிக்க' என்றும், 'பாம்பணையப்பன்' என்றதனைத் திருவுள்ளம் பற்றித் 'திருவனந்தாழ்வான் மேலே' என்றும் அருளிச்செய்கிறார். நித்திய பரிகரம் - நித்திய சூரிகள். பரியங்க வித்தியையாவது, ஆதார சத்தி கிரமத்திலே திருவனந்தாழ்வான் மேலே பிராட்டிமாரோடு கூடினவனாய், நித்தியர்களாலும் முத்தர்களாலும் அனுபவிக்கப்படுகின்றவனாய் எழுந்தருளியிருக்கும் பிரகாரத்தைச் சொல்லுகிற வேதாந்தம். பரியங்கம் - கட்டில். 'அணைவது அரவணை' என்ற திருப்பாசுரத்தின் வியாக்கியானம் பார்க்க.

2. இத்திருவாய்மொழியில் முதற்பாசுரத்தின் முதல் இரண்டு அடிகளைக் கடாட்சித்து, 'பிராட்டிமார்' என்று தொடங்கி, 'உதவும் தன்மையனாய் இருக்க' என்றது முடிய அருளிச்செய்கிறார்.

3. 'காணுமாறு அருளாய்' என்றதனைத் திருவுள்ளம் பற்றி, 'நான் ருசியில் குறைவற்றவனாய் இருக்க' என்கிறார்.

4. 'வெறுப்பது எற்றிற்கு?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'இவர்தாம்' என்று தொடங்கி.

5. இத்திருவாய்மொழியில் வருகிற 'உமர் உகந்து உகந்த உருவம்' என்னும் திருப்பாசுரத்தைத் திருவுள்ளம் பற்றி, 'அடியார்

தம் பக்கல் காரியகரமாகக் கண்டிலர்; 'நான் ஒருவன் தோன்றிச் சர்வேஶ்வரனுக்கு இவையும் பொய்யாகப் புகுகின்றனவோ!' என்று [1]ஐயம் கொண்டார். [2]'குண ஞானத்தாலே ஜீவிக்குமவர் குணங்களிலே ஐயம் கொண்டால் ஜீவிக்க மாட்டாரே! இவர்தம்மை நாம் இழக்க ஒண்ணாது; இவரைச் சமாதானம் செய்யும் விரகு ஏதோ?' என்று பார்த்து, 'வாரீர்! நீர், கண்டது எல்லாவற்றிலும் ஐயம் கொள்ளுகிறது என்? நாமும் உமக்கு ஒன்றும் செய்திலேமோ? இவ்வளவாக உதவிய நாம் மேல் உள்ளனவற்றையும் செய்வோங்காணும்; நீர் இங்ஙனே ஐயம் கொள்ள வேண்டா,' என்று [3]நம்பத்தக்கவனாக இருக்கை முதலான தன்னுடைய கல்யாண குணங்களையும், தான் இவ்வளவாகச் செய்த உபகாரங்களையும் காட்டி, இவருடைய ஐயத்தைத் தீர்த்துச் சமாதானம் செய்ய, சமாதானத்தை அடைந்தவராய், அதனை அநுசந்தித்து இனியர் ஆகிறார்.

[4]'ப்ராஜ்ஞ:- விரும்பியனவற்றைத் தம்மாலே பெற இருப்பார் அறிவிற்குறையால் இழக்க வேண்டாதபடி தம்

---

கட்குப் பரதந்திரனாய் இருக்கும் இருப்பும்' என்றும், 'இறந்ததும் நீயே' என்ற திருப்பாசுரத்தைத் திருவுள்ளம் பற்றி, 'தனக்கு வேறு பட்ட' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார். பிரகாரம்-சரீரம். பிரகாரி-சரீரத்தையுடைய ஆத்துமா. 'இவற்றுக்கு வந்த வியசனம்' என்ற இடத்தில்,

'வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருஶம்பவதி துக்கித:
உத்ஸவேஷு ச ஸர்வேஷு பிதேவ பரிதுஷ்யதி'

என்ற ஸ்ரீராமாயண சுலோகம் (அயோத். 2: 40.) அநுசந்தேயம்.

1. 'அறிவு ஒன்றும் சங்கிப்பன்' என்றதனைத் திருவுள்ளம் பற்றி, 'ஐயம் கொண்டார்' என்கிறார்.

2. இவர் இப்படி ஐயங்கொண்டவாறே சர்வேஶ்வரன் செய்ய நினைத்ததை அருளிச்செய்கிறார், 'குண ஞானத்தாலே' என்று தொடங்கி.

3. 'பெரிய அப்பனை' என்ற திருப்பாசுரத்தைக் கடாட்சித்து 'நம்பத்தக்கவனாக இருக்கை' என்று தொடங்கியும், 'தாள்களை எனக்கே தலைத்தலைச் சிறப்பத் தந்த' என்றதனைத் திருவுள்ளம் பற்றி, 'தான் இவ்வளவாகச் செய்த' என்று தொடங்கியும் அருளிச் செய்கிறார்.

4. 'இப்படி இவரைப்போன்று அவன் குணங்களிலே ஐயம் கொண்டார் உளரோ?' என்ன, 'உளர்' என்று கூறத் திருவுள்ளம் பற்றி, அதற்கு மேற்கோளும், மேற்கோட்சுலோகத்திற்குப் பொருளும் அருளிச்செய்கிறார் 'க்யாத:' என்று தொடங்கி.

அளவையும் அவர்கள் அளவையும் அறிகைக்குத் தகுதியான அறிவினையுடையவர். க்ருதஜ்ஞஶ்ச - கிட்டுமவன் தன் பக்கல் முகம் பாராமை பண்ணுமது தவிர்ந்து ஓர் அடி வர நின்ற எல்லையும் அறிவர். ஸாநுக்ரோஶஶ்ச - அறிவு கொண்டு காரியம் கொள்ளவும் அறியாதே இருக்குமவர்களுக்கு, அவர்கள் இழவை நினைத்து, 'ஐயோ!' என்று இரங்குமவராய் இருப்பர். ராகவ: - இது இவர்தம்மைத் தொற்றி வந்தது அன்று; குடிப்பிறப்பாலே. ஸத்வ்ருத்த: - பிறனுடைய நன்மையையே தம் பிரயோஜனமாகக் கொண்டிருப்பர். க்யாத: - இப்படிப்பகைவர்கள் கோஷ்டியிலும் பிரசித்தர். நிரநுக்ரோஶ: ஶங்கே - 'இந்தக் குணங்களையுடைய பெருமானை, இந்நிலையில் எனக்கு முகங்காட்டக் காணுமையாலே, இந்தக் குணங்களுள் ஒன்றும் இல்லாத அருள் அற்றவரைப் போன்றவராக ஐயப்படாநின்றேன். அவர் குணங்களையுடையவர் அன்றோ? மத்பாக்ய ஸங்க்ஷயாத் - எனக்குப் புண்ணியம் இன்மையாலேயாமித்தனை அன்றோ?' [1]'அறிவு ஒன்றும் சங்கிப்பன் வினையேன்' என்றார் அன்றோ இவரும்? இத்திருவாய்மொழிக்கு ஆளவந்தார் அருளிச்செய்யும் சுலோகம் இது.

773

**தேவிமார் ஆவார் திருமகள் பூமி**
**ஏவமற்று அமரர்ஆட் செய்வார்**
**மேவிய உலகம் மூன்றுஅவை ஆட்சி**
**வேண்டுவேண்டு உருவம்நின் உருவம்**
**பாவியேன் றன்னை அடுகின்ற கமலக்**
**கண்ணதுஓர் பவளவாய் மணியே!**
**ஆவியே! அமுதே! அலைகடல் கடைந்த**
**அப்பனே! காணுமாறு அருளாய்.**

பொழிப்புரை: 'பெரிய பிராட்டியாரும் பூமிப்பிராட்டியாரும் உனக்குத் தேவிமார் ஆவர்; அதற்குமேல், நீ கட்டளை இட, அக்

---

'க்யாத: ப்ராஜ்ஞ: க்ருதஜ்ஞஶ்ச ஸாநுக்ரோஶஶ்ச ராகவ:
ஸத்வ்ருத்த: நிரநுக்ரோஶ: ஶங்கே மத்பாக்யஸம்க்ஷயாத்'

என்பது, ஸ்ரீராமா. சுந். 26 : 13. திருவடியைப் பார்த்துப் பிராட்டி கூறியது.

1. 'நன்று; பிராட்டி 'மத்பாக்ய ஸம்க்ஷயாத்' என்று அருளிச்செய்தது போன்று, இவரும் அருளிச்செய்தது உண்டோ?' என்ன, 'உண்டு' என்று அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'அறிவொன்றும்' என்று தொடங்கி. 'அறிவொன்றும்' என்பது, திருவாய். 8. 1 : 7.

கட்டளையை மேற்கொண்டு அடிமை செய்கின்றவர்கள் நித்திய சூரிகள் ஆவர்; நீ ஆட்சி செய்துகொண்டிருக்கின்ற பொருளோ எனில், பொருந்திய மூன்று உலகங்களும் ஆகும்; உன் உருவங்களோ எனில், அடியார்களால் விரும்பப்படுகின்ற உருவங்களே ஆகும்; பாவியேனுகிய என்னை வருத்துகின்ற தாமரை மலர் போன்ற திருக்கண்களையும் பவளம் போன்ற திருவாயினையுமுடைய மாணிக்கமே! உயிரே! அமுதமே! திருப்பாற்கடலைக் கடைந்த உபகாரகனே! உன்னை நான் கண்கள் ஆரக் காணும்படி திருவருள் புரியவேண்டும்' என்கிருர்.

**விசேடக் குறிப்பு**: 'மற்று ஏவ ஆட்செய்வார் அமரர்' என்க. 'மேவிய' என்பதனை ஆட்சிக்கு அடைமொழி ஆக்கலுமாம். 'கமலக் கண்ணதாகிய மணி' என்க.

இத்திருவாய்மொழி, **எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.**

**ஈடு**: முதற்பாட்டு. [1]'பிரியில் தரிக்க ஒண்ணுதபடி நிரதிசய போக்கியனை நீ, உன்னை நான் காணும்படி திருவருள் செய்தருள வேண்டும்,' என்கிருர்.

தேவிமார் ஆவார் திருமகள் பூமி - [2]'எவன் குற்றம் செய்யாதவன்?' என்பாரும் அருகே இருக்க, நான் வருந்த வேண்டிய காரணம் என்? [3]'மித்ரம் ஔபயிகம் - [4]இராவணன் பிராட்டி திருமுன்பே நின்று சிலவற்றைப் பிதற்றப் புக்கவாறே, [5]குழந்தை நலிந்தது என்னுத் தாய்

---

1. 'அமுதே! காணுமாறு அருளாய்' என்பதனைத் திருவுள்ளம் பற்றி, அவதாரிகை அருளிச்செய்கிருர். நிரதிசயம் - தனக்குமேல் ஒன்று இல்லாதது. போக்கியன் - இனியன்.

2. 'பாபாநாம்வா ஶுபாநாம்வா வதார்ஹாணும் ப்லவங்கம
கார்யம் கருணம் ஆர்யேண நகஶ்சிந்நா பராத்யதி'

என்பது, ஸ்ரீராமா. யுத். 116: 44. இது, பிராட்டி திருவடியைப் பார்த்துக் கூறியது.

3. புருஷகாரத்தின் உறைப்பைக் காட்டுகிருர், 'மித்ரம்' என்று தொடங்கி.

" மித்ரம் ஔபயிகம் கர்த்தும் ராமஃ ஸ்தாநம் பரீப்ஸதா
வதம் சா நிச்சதா கோரம் த்வயா அஸௌ புருஷர்ஷபஃ'

என்பது, ஸ்ரீராமா. சுந். 21: 20. இது, பிராட்டி இராவணனைப் பார்த்துக் கூறியது.

4. மேலே காட்டிய சுலோகத்திற்கு அவதாரிகை முன்னுகப் பொருள் அருளிச்செய்கிருர், 'இராவணன்' என்றது முதல் 'புருஷோத்தமர்காண்' என்றது முடிய.

5. 'பகைவனுக்கு ஹிதம் சொல்லுவான் என்?' என்ன, 'குழந்தை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

சீருளே அன்றே! தாயான முறையாலே, அவன் கேட்டினைக் கண்டு ஹிதம் அருளிச்செய்கிறுள். [1]'அவர் திருவடிகளிலே சரணம் புகு' என்ருல், அவன் தாழ்வாக நினைத்து இசையான் என்னுமதனுலே, 'தோழமை கொள்' என்கிருள்; [2]அன்றிக்கே, அவர் 'தோழமை என்ற அளவாலே' என்ருராதலின், இவள், 'தோழமை கொள்' என்கிருள் என்னுதல். [3]'அவ்வருகு போனுலும் பரம ஸாம்யா பத்தியை அன்ரோ கொடுப்பது? [4]எனக்குப் பகைவராய் இருப்பாரோடு உறவு செய்ய வேண்டுகிறது என்?' என்னுமே! ஸ்த்தாநம் பரீப்ஸதா - கெடுவாய்! வழிபறிப் பார்க்கும் தரையிலே கால் பாவி நின்றுகொள்ள வேண்டுமே! ஆதலால், உன் குடியிருப்பை ஆசைப் பட்டாயாகில், இத்தனையும் செய்யவேண்டும். 'எனக்கு ஒரு குடி இருப்பு வேண்டுமோ? ஆகாசத்தில் சஞ்சரிக் கின்றவனுய் அன்ரோ இருப்பது நான்?' என்பது இராவணனுக்குக் கருத்தாக அருளிச்செய்கிருள்: வதம் சா நிச்சதா - 'அவர் அம்புகள் ஆகாயத்தில் நடவாவோ?'

---

1. 'மேலே ஸ்ரீராமபிரானை, 'சரணுகத வத்சலன்' என்று கூறு கின்றவள், இங்கு அதற்குத் தக, 'சரணம் புகு' என்னுமல், 'தோழமை கொள்' என்பது என்?' என்ன, 'அவர் திருவடிகளிலே' என்று தொடங்கி, அதற்கு விடை அருளிச்செய்கிருர். 'தோழமை கொள்' என்பது, 'மித்ரம் ஔபயிகம்' என்றதன் பொருள்.

2. 'தன் தன்மையாலும் கூறுகிருள்' என்று வேறும் ஒரு காரணத்தை அருளிச்செய்கிருர், 'அன்றிக்கே' என்று தொடங்கி. என்றது, 'தோழமை என்ற அளவாலே' என்ற ஸ்ரீராமபிரானுடைய அபிப்பிராயத்தை அறிந்து 'தோழமை கொள்' என்கிருள் என்றபடி.

> 'மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் சதஞ்சந
> தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யர்த் ஸ்தாம் ஏதத் அகர்ஹிதம்.'

என்பது, ஸ்ரீராமா. யுத். 18 : 3. இது, வானர முதலிகளைப் பார்த்து ஸ்ரீராமபிரான் கூறியது.

3. 'நன்று: இவர்கள் மற்றவர்களைத் தங்களோடு ஒத்தவர் களாக நினைத்திருப்பவர்கள் என்கைக்கு இவர்கள் ஒத்த தன்மை யைக் கொடுப்பவர்களோ?' என்ன, அதற்கு விடை அருளிச்செய் கிருர், 'அவ்வருகு' என்று தொடங்கி. அவ்வருகு - அதற்குமேலே; பரமபதம். பரமசாம்யாபத்தி - அவனை ஒத்த தன்மையை அடை தல்.

4. மேலே காட்டிய சுலோகத்திற்கு அவதாரிகை முன்னுகப் பொருள் அருளிச்செய்கிருர், 'எனக்கு' என்று தொடங்கி. எனக்கு - இராவணனுகிய எனக்கு. கொள்ள வேண்டுமே - பறிக்க வேண்டுமே.

என்கிறாள். கோரம் - உன்னைச் [1]சிங்கவிளக்கு எரித்துக் கொல்லாதே நற்கொலையாகக் கொல்லும்போதும் அவரைப் பற்றவேண்டுங்காண். த்வயா - பல சொல்லி என்? உனக்கு அவர் வேண்டும். அஸௌ - [2]அவர்படி உனக்குத் தோற்றுகிறது இல்லையோ? [3]உருவு வெளிப்பாட்டாலே முன்னிலை இவளுக்கு: அச்சத்தாலே முன்னிலையாகத் தோற்றும் அவனுக்கு. 'தீரக் கழிய அபராதம் செய்து நிற்கும் என்னைக் கைக்கொள்ளுவாரோ?' என்ன, புருஷர்ஷப: 'நீ செய்தவற்றை ஒன்றாக நினைத்திருப்பார் ஒருவர் அல்லர்; புருஷோத்தமர்காண்' என்கிறாள்.

தேவிமார் ஆவார் திருமகள் பூமி - அவர்கள் புருவம் நெளிந்த இடத்தே உனக்குக் காரியம் செய்ய வேண்டும்படி [4]வல்லபைகளாய் இருக்கிற பெரிய பிராட்டியாரும் ஆண்டாளாரும். [5]என்றது, 'குற்றம் செய்யாதவன் யாவன்?' என்று பொறைக்கு உவாத்தாய் இருக்கும் ஒருத்தி; 'பொறுப்பது எதனை? குற்றந்தான் உண்டோ?' என்று அந்தப் பொறை விளையும் பூமியாய் இருக்கும் ஒருத்தி என்றபடி. 'ஆக, [5]அவர்கள் அங்கே இருக்க எனக்கு இழக்க வேண்டுகிறது என்?' ஏவ - [6]கைங்கரியந்

---

1. சிங்க விளக்கு எரித்தல் - தலையிலே சாணியை வைத்து விளக்கு ஏற்றுதல்; வாலிலே பந்தம் கட்டி எரித்தல்.

2. இராவணனைப் பார்த்து, 'அஸௌ' என்கிறவளுடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார், 'அவர்படி' என்று தொடங்கி. 'அஸௌ' என்பதற்கு, 'இந்த' என்பது பொருள்.

3. 'இப்போது சேய்மையிலே இருக்கும் ஸ்ரீராமபிரான் அண்மையிலே முன்னிலையாகத் தோற்றக் கூடுமோ?' என்ன, 'உருவு வெளிப்பாட்டாலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. 'தேவிமார்' என்பதற்கு, 'திவுகீரீடா விஜிகீஷா' என்பது போன்ற தாதுவழிலே, விளையாட்டுக்குரியவர்கள் எனப் பொருள் கொண்டு, 'வல்லபைகள்' என்கிறார். வல்லபை-அன்புக்கு உரியவள்; மனைவி.

5. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார், 'என்றது' என்று தொடங்கி. 'திருமகள் பூமி' என்னும் இருவரையும் கூறுகின்றவருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார், 'அவர்கள்' என்று தொடங்கி.

6. 'கைங்கரியம் உத்தேசியமானால், தாங்களே செய்ய ஒண்ணாதோ? அவர்கள் ஏவ, இவர்கள் செய்யவேண்டுமோ?' என்ன, 'கைங்கரியந்தான்' என்று தொடங்கி அதற்கு விடை

தான் உத்தேசியமானது போன்று ஏவிக்கொள்ளுகையும் உத்தேசியம் என்கை; [1]'செய் என்று என்னை நியமித்தருள வேண்டும்' என்கிறபடியே. [2]மின்னி முழங்கி வில்லிட்டு மழை பெய்யும் மேகத்தின் ஒலி போலே, கம்பீரமாய் அன்றோ திருமிடற்றின் ஓசைதான் இருப்பது? மற்று அமரர் ஆட்செய்வார் - [3]இச்சேர்த்தியில் கிட்டி நின்று அடிமை செய்வார் நித்திய சூரிகள். 'மற்று' என்பது, ஒத்த விகற்பத்தைக் கூறுகின்றது. என்றது, [4]'திரு மார்பிலே அணைந்தால் பிராட்டிமார்க்கு உண்டான இனிமை, இச்சேர்த்தியிலே அடிமை செய்யப் பெறுகை யாலே இவர்களுக்கும் உண்டாம்' என்றபடி. 'வனத்திலே மூவரும் களிக்கின்றவர்களாய் இருந்தார்கள்' என்கிற படியே. என்றது, [5]'அவர் அவர்களுடைய சொரூபங்

---

அருளிச்செய்கிறார். என்றது, 'பாரதந்திரியம் சொரூபம் ஆகை யாலே ஏவுதல் தக்கது' என்றபடி.

1. அதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'செய் என்று' என்று தொடங்கி.

> 'பரவாந் அஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷஶதம் ஸ்திதே
> ஸ்வயந்து ருசிரே தேஶே க்ரியதாம் இதி மாம் வத'

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 15 : 7. இது பெருமாளைப் பார்த்து இளைய பெருமாள் கூறியது.

2. அவனுடைய திருமிடற்றின் ஓசை இனியதாய் இருக்கை யாலும் ஏவ வேண்டும் என்று வேறும் ஒரு காரணம் அருளிச்செய் கிறார், 'மின்னி' என்று தொடங்கி. இங்கே,

> 'கண்ணகன் புரிசை காக்கும் காவலர் அடைக என்றான்
> விண்ணுரும் ஏறு போன்று வெடிபட முழங்கும் சொல்லான்'

(சிந். 265.) என்ற செய்யுள் நினைவு கூர்தல் தகும்.

3. 'திருமகள் பூமி' என்றதன் பின் 'ஆட்செய்வார்' என்று கூறியதன் கருத்தை அருளிச்செய்கிறார், 'இச்சேர்த்தியில்' என்று தொடங்கி.

4. 'ஒத்த விகற்பமாம் போது, பிராட்டிமார்களுக்கு உண்டான சுகம் இவர்களுக்கும் உண்டாகுமோ?' என்ன, 'திருமார்பிலே' என்று தொடங்கி அதற்கு விடையும், 'வனத்திலே மூவரும் என்று தொடங்கி அதற்குப் பிரமாணமும் அருளிச்செய்கிறார்.

> 'ரம்யம் ஆவஸதம் க்ருத்வா ரமமாணா வநே த்ரய:'

என்பது, சங்க்ஷேப ராமா. 31.

5. 'த்ரய: ரமமாணா:' என்றதற்குக் கருத்து அருளிச்செய் கிறார், 'அவர் அவர்களுடைய' என்று தொடங்கி.

கட்குத் தக்கவாறே அன்றோ சுகங்கள் இருப்பன? 'பெருமாளுக்கும் பிராட்டிக்கும் பரஸ்பரம் கலவியால் பிறக்கும் ரசம், இருவருமான சேர்த்தியைக் காண்கையாலே பிறக்கும் இளையபெருமாளுக்கு' என்றபடி. அமரர் ஆட்செய்வார் - [1]'வேதம் வல்லார்களைக் கொண்டு' என்கிற படியே, அவர்களும் புருஷகாரத்தைச் செய்கின்றவர்களாய் அன்றோ இருப்பது?

[2]'பிராட்டிமாரும் அருகே உளராய், 'மற்று' என்று அவர்களோடு ஒக்க விகற்பித்துச் சொல்லலாம்படியான நித்திய சூரிகளும் உளரேயானாலும், ஐஸ்வர்யத்தில் குறை உண்டாகில் காரியம் செய்ய ஒண்ணாதே அன்றோ?' என்னில், மேவிய உலகம் மூன்று அவை ஆட்சி-[3] கீழும் மேலும் நடுவுமான உலகங்களை இவன் ஆளுகின்றவன் என்றால், அதற்குத் தகும்படி இருப்பவன். என்றது, 'இதனுடைய எந்த நாதனால் மூன்று உலகங்களும் **நல்ல நாதனையுடையதாகுமோ!'** என்கிறபடியே, [4]மூன்று உலகங்களையும் கையடைப்பு ஆக்கினாலும் பாதுகாக்கப்படும் பொருள் சுருங்கிப் பாதுகாக்கின்ற தன்மையின் பாரிப்பே விஞ்சி இருக்கும் என்றபடி. இனி, [5]மூன்று விதச்சேதநர்களையும்

---

1. 'இங்கு அமரரைச் சொன்னதற்குக் கருத்து யாது?' என்ன, 'வேதம் வல்லார்களை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'வேதம் வல்லார்' என்பது, திருவாய். 4. 6 : 8.

2. 'மேவிய' என்பதற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார், 'பிராட்டிமாரும்' என்று தொடங்கி.

3. 'மேவிய' என்றதனை ஆட்சிக்கு அடைமொழியாக்கியும், உலகத்திற்கு அடைமொழியாக்கியும் இரு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். ஆட்சிக்கு அடையாக்கி அருளிச்செய்யும் பொருள், 'கீழும் மேலும்' என்று தொடங்கும் வாக்கியம். இப்பொருளுக்குப் பிரமாணம் 'இதனுடைய' என்று தொடங்கும் வாக்கியம்.

'அநுரூபஃ ஸவை நாதோ லக்ஷ்மீவாந் லக்ஷ்மணாக்ரஜஃ
த்ரைலோக்யம் அபி நாதேந யேந ஸ்யாத் நாதவத்தரம்'

என்பது, ஸ்ரீராமா. அயோத். 2 : 13. இது, தசரதசக்கரவர்த்தி கூறியது.

4. சுலோகத்திலேயுள்ள 'நாதவத்தரம்' என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார், 'மூன்று உலகங்களையும்' என்று தொடங்கி.

5. 'உலகம்' என்பதற்கு 'உயிர்கள்' என்று பொருள் கூறத் திருவுள்ளம் பற்றி அருளிச்செய்கிறார், 'மூன்று விதம்' என்று தொடங்கி. மூன்றுவிதச் சேதனர்:- பத்தர், முத்தர், நித்தியர்.

இவன் பாதுகாக்கின்றவன் என்றால் அதற்குத் தக இருப்பவன் என்னுதல். [1]இனி, 'இராச்சியம் தான் பொருந்தி இருக்கும்' என்னுதல். [2]வேண்டு வேண்டு உருவம் நின் உருவம்-அந்த அந்த இரட்சணத்துக்கு வேண்டின வேண்டின உருவம் நின் உருவம். அன்றிக்கே, 'இச்சையாலே கொள்ளப்படுகின்ற உருவம்நின்உருவம்' என்னுதல். அன்றிக்கே, 'அடியார்கள் உகந்தவற்றையே தனக்குத் திருமேனியாகக்கொள்ளும் உருவம் நின் உருவம்' என்னுதல். பாவியேன்தன்னை - [3]புருஷகாரம் உண்டாய், விபூதியையுமுடையனாய், அடியார்கட்கு அதீனமான விக்கிரகத்தையுமுடையனாய் இருக்க, இழத்தற்கு அடியான பாபத்தைச் செய்த என்னை. அன்றிக்கே, [4]'அந்த இல்லற தர்மத்துக்குப் புறம்பாவேனே!' என்கிறார் என்னுதல்.

அடுகின்ற - முடிக்கின்ற. கமலம் கண்ணது ஓர் - [5]உயிர்க்கு எல்லாம் தாயாய் அளிக்கின்ற தண் தாமரைக் கண்ணனே! பவளம் வாய் - [6]'அழகிய முறுவலைக் கொண்டுள்ள முகத்தாமரையைத் தரித்தவனை' என்கிற புன்சிரிப்பையுடையவனே! மணியே - விடாயர் முகத்தே குளிர் நீர் வெள்ளத்தை வெட்டிவிட்டாற்போலே சிரமத்தைப் போக்குகிற வடிவத்தையுடையவனே! இவை கண்டீர் எனக்குப்

1. 'மேவிய' என்றதனை, உலகிற்கு அடைமொழியாக்கிப் பொருள் அருளிச்செய்கிறார், 'இனி' என்று தொடங்கி.

2. 'வேண்டு வேண்டு உருவம்' என்பதற்கு, மூன்று வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். மூன்றாவது பொருளில், 'மனக்கோள் நினக்கென வடிவு வேறிலையே' என்ற பரிபாடற்பகுதியையும், 'அன்பர் மனத்திற்கொண்டனவன்றி நினக்கென வேறு வடிவு உடையை அல்லை' என்ற அதன் உரையையும் நோக்கல் தகும். பரி. 4. 56.

3. 'பாவியேன்' என்பதற்கு, மேலே போந்த பதங்களையும் திருவுள்ளம் பற்றிப் பொருள் அருளிச்செய்கிறார், 'புருஷகாரம்' என்று தொடங்கி. விபூதி - செல்வம்; உலகம்.

4. 'மேவிய உலகம்மூன்றவை ஆட்சி' என்றதனைத் திருவுள்ளம் பற்றி, 'பாவியேன்' என்பதற்கு வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார், 'அந்த இல்லற தர்மத்துக்கு' என்று தொடங்கி.

5. 'உயிர்க்கெல்லாம்' என்பது, பெரிய திரு. 7. 1 : 9.

6. 'ஸவிலாஸ ஸ்மிதாதாரம் பிப்ராணம் முகபங்கஜம்' என்பது, ஸ்ரீ விஷ்ணு புரா. 5. 17 : 21.

பாதகம் ஆகின்றன. ஆவியே-[1] இவர்க்குப் பிராணன், ஒரு காற்று விசேடம் அன்று; நாய்ச்சிமாரோடும் நித்திய சூரிகளோடும் கூடிக் கண்ணும் வாயும் வடிவும் ஆயிற்று இவருடைய உயிர் இருப்பது. அமுதே - தரித்துக்கொண்டிருப்பதான பிராணனாய் இருக்கை அன்றிக்கே, இனிய பொருளைப் புறம்பு தேட வேண்டாதே இனிய பொருளும் தானேயாய் இருக்கை. அலைகடல் கடைந்த அப்பனே - வேறு பிரயோஜனங்களை விரும்புகிறவர்கட்கும் அரியன செய்து விரும்பிய பொருள்களைக் கொடுக்கும் உபகாரகனே! 'என்றது, என் சொல்லியவாறோ?' எனின், இனிய பொருளும் தான் ஆனால் சாதித்துக்கொள்வார் வேறு ஒருவர் ஆதல் அன்றிக்கே, உபாயமும் தானேயாய் இருக்கையைத் தெரிவித்தபடி. 'நன்று; உமக்குச் செய்ய வேண்டுவது என்?' என்ன, காணுமாறு அருளாய் - [2]எனக்குக் கடல் கடைய வேண்டா; அவ்வடிவைக் காட்ட அமையும். [3]வடிவைக் காண்கை, பிராப்பியம். அருள், பிராபகம். 'பிராப்பிய பிராபகங்கள் நீயே' என்று இருப்பார் காரியம் செய்யலாகாதோ? (1)

774

காணுமாறு அருளாய் என்றுஎன்றே கலங்கிக்
கண்ணநீர் அலமர வினையேன்
பேணுமாறு எல்லாம் பேணிநின் பெயரே
பிதற்றுமாறு அருள்எனக்கு அந்தோ!
காணுமாறு அருளாய் காகுத்தா! கண்ணா!
தொண்டனேன் கற்பகக் கனியே!
பேணுவார் அமுதே! பெரியதண் புனல்சூழ்
பெருநிலம் எடுத்தபே ராளா!

பொ - ரை: தீவினையேனாகிய யான் காணும் வழியை அருள் புரிய வேண்டும் என்று என்றே கலங்கி, கண்களினின்றும் நீர்

---

1. மேலே கூறியவற்றை எல்லாம் திருவுள்ளம் பற்றி, 'ஆவி' என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறார், 'இவர்க்கு' என்று தொடங்கி.

2. அத்தேவர்களைக்காட்டிலும் தமக்குள்ள வேறுபாட்டினைக் காட்டுகிறார், 'எனக்கு' என்று தொடங்கி.

3. 'காணுமாறு அருளாய்' என்ற இரண்டு பதங்களாலும் பலித்த கருத்தை அருளிச்செய்கிறார், 'வடிவை' என்று தொடங்கி. பிராப்பியம் - அடையத்தக்க பேறு. பிராபகம் - அதனை அடைதற்குரிய வழி.

பெருக்கு எடுக்க, விரும்பக்கூடிய வழிகளால் எல்லாம் உன்னை விரும்பி, உன்னுடைய திருப்பெயரையே பிதற்றிக்கொண்டு இருக்கும்படியேயோ எனக்கு நீ செய்த திருவருள் இருப்பது! அந்தோ! காகுத்தனே! கண்ணனே! தொண்டனேனுடைய கற்பகக்கனியே! ஆசைப்படுகின்றவர்கட்கு அமுதே! பெரிய குளிர்ந்த தண்ணீரில் மூழ்கிக் கிடந்த பெரிய நிலத்தை எடுத்த பேராளா! உன்னைக் காணுமாறு திருவருள் செய்வாய்.

**வி-கு:** 'கலங்கிப் பேணிப் பிதற்றுமாறு' என்றும், 'அலமரப் பேணிப் பிதற்றுமாறு' என்றும் தனித்தனியே கூட்டுக. பேணி - விரும்பி. பிதற்றுதல் - பத்தி பாரவஶ்யத்தாலே அடைவு கெடப் புகழ்தல். 'பேராளா! காணுமாறு அருளாய்' என்க.

**ஈடு:** இரண்டாம் பாட்டு. [1]'காணவேண்டும் **என்று** மிகவும் நோவுபட்டிருக்கும் இருப்பேயோ என் திறத்துச் செய்தருளப் பார்த்தது? நான் இங்ஙன் படாமே உன்னைக் காணும்படி திருவருள் செய்தருள வேண்டும்' என்கிறார்.

காணுமாறு அருளாய் - ஒருகால் 'காணுமாறு அருளாய்' என்றால், அப்போதே செய்யக் காணவிட்டால், **'நாமே முயற்சி செய்து பெறுகிறோம்'** என்று இருக்குமவர் அன்றோ? [2]மழைத்தாரையாலல்லது தரியாத **சாதகம்** போலே, அவன் அருளே பார்த்திருக்குமவர் ஆகையாலே, மீண்டும் **'காணுமாறு அருளாய்'** என்கிறார். **என்று** என்றே - பலகாலும் வார்த்தை இதுவே. [3]'புறம்பேயும் ஒரு புகல் உண்டு' என்று இருக்கில் அன்றோ அதனைப் பற்றுவது? கலங்கி - [4] கலக்கமே ஆயிற்று ஏறி வருவது; [5]'சடையையுடையவர், மரவுரியையுடையவர்' என்னும்

---

1, 'பிதற்றுமாறு அருள் எனக்கு; காணுமாறு அருளாய்' என்றதனைத் திருவுள்ளம் பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'வறங்கூர் வானத்து **வள்ளுறைக்கு அலமரும்**
**புள்ளிற்கு** அதுபொழிந் தாங்குமற் றுத்தன்
நல்லெழில் மார்பன் முயங்கலின்
அல்லல் தீர்ந்தன் று ஆயிழை பண்பே'

என்பது, கலித்தொகை, 146. சாதகம் - வானம்பாடிப்பறவை.

3. 'ஆயின், வேறு வார்த்தை இல்லையோ?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'புறம்பேயும்' என்று தொடங்கி.

4. இன்ன காலம் கலங்கி என்னுமையாலே, 'கலக்கமேயாயிற்று ஏறி வருவது' என்கிறார்.

5. **'ஜடிலம் சீரவஸநம் ப்ராஞ்ஜலிம் பதிதம் புவி**
ததர்ஶ ராமோ துர்த்தர்ஶம் யுகாந்தே பாஸ்கரம் யதா'

என்பது, ஸ்ரீராமா. அயோத். 100 : 1. இதன் பொருளை, முதற்பத்து ஈட்டின் தமிழாக்கம் 158-ஆம் பக்கத்திற்காண்க.

ஸ்ரீ பரதாழ்வான் போலே. கண்ணநீர் அலமர - நிரம்பின ஏரிகள் உடைந்து பெருக்கு எடுத்து ஓடுமாறு போலே, கலங்கின கலக்கம் உள்ளடங்காமல் கண்ணநீராக வெள்ள மிடாநிற்கும். வினையேன் - [1]இதற்கு முன்பு இந்தப் பொருளைக்காண ஆசைப்பட்டாரில் கலங்கிக் கண்ணநீர் பாய்ந்து அறிவார் இல்லை கண்டீர்! [2]'காண வேண்டும்' என்னும் ஆசை சிறிதுடையார்க்குத் தன்னைக் காட்டி அவர்கள் கண்ணநீரையும் துடைக்குமவனை ஆசைப்பட்டுக் கிடையாதே, கண்ணும் கண்ணநீரும் ஆம்படியான பாவத்தைச் செய்தேன்.

[3]பேணுமாறு எல்லாம் பேணி - பேணி - ஆசைப்பட்டு. முதலிலே 'தாழ்ந்தவன்' என்று அகன்றும், 'அவன் விரும் பாத நானும் என்னுடைமையும் எனக்கு வேண்டா' என்று கூறியும், ஆற்றாமையாலே மடல் எடுக்கையிலே கைவைத் தும், பலபடியும் சரணாகதி செய்தும், பிரணயரோஷம் தலை எடுத்துக் கிலாய்ப்பது செய்தவிடத்திலும். எனக்கு அருள் நின் பெயரே பிதற்றுமாறு-நீ எனக்கு அருளப் பார்த்தபடி, நின்பெயரே பிதற்றுமாறாய்விட்டது. என்றது, 'உன்னைப் பெறாத வியசனத்தாலே உன்னுடைய திருநாமங்களைச் சொல்லி அடைவுகேடாகக் கூப்பிடும்படியோ நீ எனக்குச்

---

1. 'பிரிவு உண்டானால் கண்ணீர் பாய்தல் எல்லாருக்கும் இயல் பாய் இருக்க, தம்மை 'வினையேன்' என்று சொல்லுவான் என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'இதற்கு முன்பு' என்று தொடங்கி.

2. மேற்கூறியதனை விவரணம் செய்கிறார், 'காண வேண்டும்' என்று தொடங்கி. 'ஆசை சிறிதுடையார்க்கு' என்றது, ஸ்ரீ கஜேந் திராழ்வான், ஸ்ரீ கோபிமார் முதலாயினாரை.

3. பேணுமாறுஎல்லாம்-ஆசைப்படும் பிரகாரம் எல்லாம். பிர காரங்களை அருளிச்செய்கிறார், 'முதலிலே' என்று தொடங்கி. 'தாழ்ந்தவன்' என்று அகன்றது, 'வளவேழ் உலகு' என்ற திருவாய்மொழியில். 'அவன் விரும்பாத....எனக்கு வேண்டா' என்றது, 'ஏறாளும் இறையோனும்' என்ற திருவாய் மொழியில். மடல் எடுக்க நினைத்தது, 'மாசறு சோதி' என்ற திரு வாய்மொழியில். பலபடியும் சரணாகதி செய்தது, 'நோற்ற நோன் பிலேன்' முதலிய திருவாய்மொழிகளில். பிரணயரோஷம் தலை எடுத்துக் கிலாய்த்தது, 'மின்னிடை மடவார்' என்ற திருவாய் மொழியில்.

செய்யும் திருவருள்?' என்றபடி. [1] 'அற்ப விஷயங்களை ஆசைப்பட்டுக் கூப்பிடுமது தவிர்ந்து நம் பேரைச் சொல்லிக் கூப்பிடும்படி செய்தோமாகில் இனி என்?' என்று இருக்கிருயோ? சம்சாரிகளில் வேறுபாடோ எனக்கு வேண்டுவது? நான் விரும்பியதைப் பெற வேண்டாவோ?' என்கிருர்.

வினையேன் பேணுமாறு எல்லாம் பேணி - [2] ஆசைப்படும் வழி எல்லாம் ஆசைப்பட்டு. 'பலவழி உண்டோ ஆசைப்பாட்டில்?' என்னில், வகுத்த விஷயத்தில் ஆசை என்றும், விரும்பிய பொருளில் ஆசை என்றும் பல வழிகள் உண்டு. [3] இவர்க்கு வகுத்த விஷயம் விருப்பமாய் இருக்கும். [4] வகுத்த விஷயத்தில் ஆசை, கிரமமாக இருக்கும்; விரும்பிய பொருளில் ஆசை, வரம்பு அழிந்து இருக்கும். [5] வகுத்த விஷயத்தில் ஆசைக்கு, அவனைக் கால் கட்டக் கிடைக்கும். அதுவும் செய்தாரே அன்றோ 'நோற்ற நோன்பு', 'ஆரா அமுது', 'மானேய் நோக்கு', 'பிறந்தவாறும்', 'உலகம் உண்ட பெருவாயா' என்னும் திருவாய்மொழிகளிலே? விரும்பிய பொருளில் ஆசைக்குக் காதலன் பாடு ஏறத் 'தூது விடுகை' தொடக்கமாக 'மடல் எடுக்கை' முடிவாகத் துணிதல். இவற்றையும் எல்லாம் செய்தாரே அன்றோ 'அஞ்சிறைய மடநாராய்' தொடக்கமாக, 'மாசறு சோதி', 'வைகல் பூங்கழிவாய்', 'பொன்னுலகு ஆளீரோ' என்பன போன்ற திருவாய்மொழிகளிலே? 'இப்படிப் பேணுமாறு எல்லாம் பேணியும், நின் பெயரே பிதற்றுமாறே நீ எனக்கு அருளும் அருள்?' என்கிருர். அந்தோ-

---

1. 'எனக்கு அருள், நின் பெயர் பிதற்றுமாறே' என்கிறவருடைய மனேபாவத்தை அருளிச்செய்கிருர், 'அற்ப விஷயங்களை' என்று தொடங்கி. 'நான் விரும்பியது' என்றது, நேரே காணுதலை.

2. மேலே 'ஆறு' என்பதற்குப் 'பிரகாரம்' என்று பொருள் அருளிச்செய்தார். 'வழி' என்று வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிருர், 'ஆசைப்படும்' என்று தொடங்கி.

3. 'இவர்க்கு இரண்டும் வெவ்வேருக இருக்குமோ?' என்ன 'இவர்க்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

4. 'இவ்விரண்டு விதமான ஆசைகட்கும் வேற்றுமை யாது?' என்ன, 'வகுத்த விஷயத்தில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

5. 'இந்த இரண்டு ஆசைகளும் தீரும் வகை யாது?' என்ன, 'வகுத்த விஷயத்தில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

'உன்னை நீ பிரிந்து அறியாய்: பிரிந்தாரைக் கண்டு அறியாய்,' என்றது, 'நித்திய சூரிகள் பிரிந்து அறியார்கள்; சம்சாரிகள் பிரிவு அறியார்கள்; ஆதலால், இந்த ஆற்றாமையுடையேன் நான் ஒருவனுமே ஆயிற்று,' என்றபடி.

காணுமாறு அருளாய் - திருவாறன்விளை என்னும் திவ்விய தேசத்தை அணித்து ஆக்குதல். அன்றிக்கே, 'எனக்கு அவ்வளவும் கால்நடை தருதல் செய்யும்படி பண்ணுவாய்' என்னுதல். 'நன்று; இப்படி, எங்கே அருளக் கண்டு நீர் நிர்ப்பந்திக்கிறீர்?' என்ன, காகுத்தா-நீ ககுத்தன் வமிசத்தில் பிறந்தவனே அன்றோ? 'ககுத்த வமிசத்தில் பிறந்தால் ஆசைப்படுகின்றவர்களுடைய ஆசையைத் தீர்த்து வைக்க வேண்டுமோ?' என்ன, [1]'ஒரு காரியத்தை உத்தேசித்து வந்தவர்கள், ககுத்த வமிசத்தில் பிறந்த அரசர்களிடத்தில் பலன் பெறுதவர்களாய்த் திரும்புகிறார்கள் இல்லை' என்பதே அன்றோ பிரமாணம்? 'நன்று; அப்படி யாருக்குக் காட்டினோம்?' என்ன, [2]'ரூப ஸம்ஹநநம்-திருமேனியை. லக்ஷ்மீம்-சமுதாயசோபையை. ஸௌகுமார்யம் - அநுகூலர்க்கும் அடுத்துப் பார்க்கப் பொறாது இருக்கை. ஸுவேஷதாம்-தாபதவேடம். தத்ருஶுஃ விஸ்மித ஆகாரா:- ஆச்சரியத்தோடு கூடிய அந்தக்கரணங்களையுடையவர்களாய்க்கொண்டு கண்டார்கள்.'யார்தாம்?' என்னில், வநவாஸிந: - படைவீட்டிலுள்ளார் காணப் பெறாததைச் சருகு இலை தின்று தூற்றிலே கிடந்தவர்கள் பெற்றார்கள்.

'அது ஒரு காலம் அங்ஙனே செய்துபோனோமாகில், அதுகொண்டு வளைக்கிறீரோ?' என்ன, கண்ணா - இருடி

1. ககுத்த வமிசத்தில் பிறந்த அரசர்களிடத்தில் வருகின்றவர் பயன் பெறாமல் போகார் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'ஒரு காரியத்தை' என்று தொடங்கி.

'நஹி அர்த்திநஃ கார்யவஶாப்யுபேதாஃ
ககுத்ஸ்த வம்ஶே விமுகாஃ ப்ரயாந்தி'

என்பது, விஷ்ணு புரா. 4. 2: 77.

இது, மாந்தாதாவைப் பார்த்துச் சௌபரி கூறியது.

2. 'ரூப ஸம்ஹநநம் லக்ஷ்மீம் ஸௌகுமார்யம் ஸுவேஷதாம்
தத்ருஶுஃ விஸ்மித ஆகாராஃ ராமஸ்ய வநவாஸிநஃ'

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 1 : 13.

களுக்கே அன்றிக்கே, [1]'அப்பெண்களுக்கு நடுவில் வந்து தோன்றினான்' என்கிறபடியே, ஆயர்கட்கும் ஆய்ச்சியர்கட்கும் காட்டிற்றிலையோ? புறம்பு தேடிப் போகிறது என்? தொண்டனேன் கற்பகக் கனியே - ஐம்புல இன்பங்களிலே நோக்குள்ளவனாய், அவற்றிலே சபலனாய்த் திரிகிற எனக்கு, அதனைத் தவிர்த்து உன்னை முற்றும் கொடுத்தவன் அல்லையோ! பேணுவார் அமுதே - நீயே வந்து மேல் விழாநின்றால் 'அல்லோம்' என்னாதார்க்கு நிரதிசய போக்கியன் ஆனவனே! பெரிய தண்புனல் சூழ் பெருநிலம் எடுத்த பேராளா - [2]யார் உன்னைப் பேணப் பிரளயம் கொண்ட உலகத்தை எடுத்துக் காத்தாய்? பிரளய சமுத்திரம் சூழ்ந்த பெரிய உலகத்தை அதினின்றும் எடுத்துத் தரிப்பித்த பெரியோனே! என்றது, 'உன்னை ஆசைப்படுதல், ஆபத்தை அறிவித்தல் செய்ய மாட்டாத உலகத்தை அன்றோ காத்தாய்?' என்றபடி. அதாவது, 'நீ அறிய ஆபத்து உண்டாமத்தனை அன்றோ காத்தற்கு வேண்டுவது?' இரட்சகனுடைய பாரிப்பு இரட்சிக்கப்படுகின்ற பொருள்களின் அளவிற்கும் விஞ்சி இருத்தலின் '**பேராளா**' என்கிறார். (2)

775

*எடுத்தபே ராளன் நந்தகோ பன்றன்*
*இன்னுயிர்ச் சிறுவனே! அசோதைக்கு*
*அடுத்தபேர் இன்பக் குலஇளங் களிறே!*
*அடியனேன் பெரியஅம் மானே!*
*கடுத்தபோர் அவுணன் உடல்இரு பிளவாக்*
*கைஉகிர் ஆண்டஎம் கடலே!*
*அடுத்ததோர் உருவாய் இன்றுநீ வாராய்*
*எங்ஙனம் தேறுவர் உமரே?*

பொ - ரை: உன்னை எடுத்துக்கொண்ட பேராளனாகிய நந்தகோபனுக்கு இனிய உயிராய் இருக்கின்ற சிறுவனே! யசோதைக்குப் பொருந்திய பேரின்பத்தைக் கொடுக்கின்ற சிறந்த யானைக்கன்றே! அடியேனுடைய அம்மானே! சினங்கொண்ட போரைச் செய்கின்ற இரணியன் உடலை இரண்டு துண்டுகள் ஆகும்படி கைகளிலே உள்ள

---

1. 'தாஸாம் ஆவிரபூத் ஶௌரி: ஸ்மயமாந முகாம்புஜ:
பீதாம்பரதர: ஸ்ரக்வீ ஸாக்ஷாத் மந்மத மந்மத:'
என்பது, ஸ்ரீ பாகவதம், 10. 32 : 2.

2. 'நிலம்' என்பது, அஃறிணை ஆதலால், அதற்குத் தகக் கருத்து அருளிச்செய்கிறார், 'யார் உன்னை' என்று தொடங்கி.

நகங்களால் பிளந்த எம் கடலே! பொருந்திய ஒரு வடிவத்தோடு இன்று வருகின்றாய் இல்லை; இங்ஙனம் இருப்பின், உன் அடியார் எங்ஙனம் உன்னைத் தெளிவர்?

வி — கு: குலம் - குலமுமாம். கடுத்த - தினவுமிகுந்த என்னலுமாம். 'அவுணன் உடலை அடுத்தது ஓர் உருவாய் இரு பிளவாக் கை உகிர் ஆண்ட எம் கடலே' என்று மாற்றிக் கூட்டிப் பொருள் கோடலும் ஒன்று. வாராய் - எதிர்மறை.

ஈடு: மூன்றாம் பாட்டு. [1]'அடியார்க்கு எளியவனாய் இருக்கிற நீஇன்று வந்து என் ஆபத்தை நீக்காது ஒழியின், உன் குணமே ஜீவனமாக இருக்கிற அடியார்கள் உன்னை எங்ஙனே நம்பும்படி?' என்கிறார்.

எடுத்த பேராளன் நந்தகோபன்தன் இன்உயிர்ச் சிறுவனே-[2]நிதி எடுத்துக்கொண்டாற்போலே உன்னைஎடுத்துக் கொண்ட புண்ணியத்தின் மிகுதியையுடையவன். [3]இருவரும் ஒக்க நோன்பு நோற்க, வசுதேவர் பெற்றும் முகத்தில் விழிக்கப் பெறாதே போர விட்டிருக்க, நிதி எடுத்தாற் போலே எடுத்துப் புத்திரன் முகம் கண்டவர் அன்றோ? [4]முன்பு வறியனாய்ப் போந்தவன் சிறக்க வாழப்புக்கவாறே 'இவன் எடுப்பு எடுத்தான்' என்பார்கள் அன்றோ? பேராளன் - பெரியோன். [5]நந்தகோபாலன் பெருமையோபாதி

---

1. திருப்பாசுரம் முழுதினையும் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'எடுத்த' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'நிதி எடுத்துக்கொண்டாற்போலே' என்று தொடங்கி.

3. 'வசுதேவன் நந்தகோபன் என்னும் இருவரும் நோன்பு நோற்று இருக்க, நந்தகோபரை 'எடுத்த பேராளன்' என்பான் என்?' என்ன, 'இருவரும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. 'எடுத்த' என்றால், நிதி எடுக்கையைச் சொல்லுமோ?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'முன்பு' என்று தொடங்கி.

5. 'பேராளன்' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'நந்தகோபாலன்' என்று தொடங்கி. பெருமையோபாதியும் - பெருமையைப் போலவும். இவ்வழக்காறு பண்டைய உரைகளிலும் காண்கிறோம். 'களிறு பல பூட்டி' என்றது, 'அவன் ஏறும் யானைகளை அவனை அவமதித்துச் சாட்டிற்குக் கடாவோபாதியாகப் பூட்டி என்றவாறு' என்பது பதிற்றுப்பத்து செய். 45 உரை.

யும் போரும் கண்டீர் என் சிறுமையும். [1]'நீ மகனை வேண்டும்' எனபார்க்கோ முகங்காட்டலாவது? [2] ஸ்ரீநந்தகோபருடைய நற்சீவன் கண்ணுக்குத் தோற்ற ஒரு வடிவு கொண்டு திரிகிறதித்தனை.

அசோதைக்கு அடுத்த - [3] ஒக்க நோற்கச் செய்தேயும் கிலேசம் மிக்கு இருக்கும் அன்றோ, தேவகி உடம்பு நொந்து பெற்றவள் ஆகையாலே? யசோதை பிரசவ வேதனை அனுபவியாது இருக்கப்பெற்றுக்கொடு நின்றாள் இத்தனை. கிட்டிக்கொண்டு நிற்கக் கண்டதித்தனையே ஆதலின்,'**அடுத்த**'என்கிறார். [4]'தெளிந்தவளான அந்த யசோதையானவள், நீலோற்பல இதழ் போன்று கரிய நிறத்தோடு பிறந்த அந்தக் குழந்தையைக் கண்டாள்; அக்காலத்தில் மிக்க மகிழ்ச்சியை அடைந்தாள்' என்கிறபடியே. பேரின்பம்-நிரதிசய சுகத்தை விளைத்தவன்; [5]'தொல்லை இன்பத்து இறுதி கண்டாளே' என்னும்படி இவளுக்கு எல்லை இல்லாத ஆனந்தத்தை விளைத்தானாயிற்று. [6] அந்தம் இல் பேரின்பத்தைச் சிற்றின்பம் ஆக்கினான்.

---

1. 'பேராளா' என்பாருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார், 'நீ மகனை வேண்டும்' என்று தொடங்கி.

2. 'இன்னுயிர்ச் சிறுவன்' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், ''ஸ்ரீ நந்தகோபருடைய' என்று தொடங்கி.

3. 'பெற்ற சம்பந்தம் தேவகி, யசோதை என்னும் இருவர்க்கும் ஒத்திருக்க, 'அசோதைக்கு அடுத்த' என்பான் என்?' என்ன, 'ஒக்க நோற்க' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. மேலே கூறியதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'தெளிந்தவளான' என்று தொடங்கி;

'ததர்ஸ ச ப்ரபுத்தா ஸா யஸோதா ஜாதம் ஆத்மஜம்
நீலோத்பல தளஸ்யாமம் ததா அத்யர்த்தம்முதம் யயௌ'

என்பது ஸ்ரீ விஷ்ணு புரா. 5. 4 : 23.

5. பேரின்பத்தை விளைத்தான் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'தொல்லை இன்பத்து' என்று தொடங்கி. இது, பெருமாள் திருமொழி. 7 : 8.

6. 'பேரின்பம்' என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார், 'அந்தம் இல்' என்று தொடங்கி. 'அந்தம் இல் பேரின்பத்தைச் சிற்றின்பம் ஆக்கினான்' என்றது, இவ்வுலகில் உண்டாகும் இன்பம் எல்லாம் சிற்றின்பம் என்றும், பரமபதத்தில் உண்டாகும் இன்பமே பேரின்பம் என்றும் இருந்த பிரசித்தியை மாற்றிவிட்டான் என்றபடி. 'பரமபத இன்பத்தைக்காட்டிலும் நூறு மடங்கு பெரியதாய் இருந்தது யசோதைக்குக் கிருஷ்ணாநுபவம்' என்றபடி.

[1] குலம் இளங்களிறே - ஆயர் குலத்துக்கு யானைக் கன்று போலே சிலாக்கியமானவனே! அன்றிக்கே, 'நற் குலத்தில் தோன்றியதாய், பருவத்தாலே மனத்தைக் கவரக் கூடியதாய் இருப்பது ஒரு மதயானை போலே, யசோதைப் பிராட்டிக்குப் பிடிகொடாதே திரியுமவனே!' என்னவுமாம். [2] அகப்பட்டாலும் யானைக் கன்று போலே ஆயிற்று இருப்பது. 'தறியார்ந்த கருங்களிறே போல நின்று' என்கிறபடியே, ஒரு கம்பத்தோடே சேர்ந்த களியானை போலேயாயிற்றுக் கட்டுண்டு நிற்கும் போதும் இருக்கும்படி. தடங்கண்கள் பனி மல்கும் - இவள் [3]'ஆற்றல் இருந்தால் போய்க்காணாய்!' என்றால், பின்னை அவனுக்குக் கண்ணநீர் பாய்கைக்கு மேற்பட இல்லை. [4]சர்வசத்தி ஆற்றல் இல்லாதவன் என்று தோற்ற இருக்கையன்றோ இவள் நியமிக்க வல்லள் ஆகிறது? தன்மையானை - அடியார்கள் இட்ட வழக்கு ஆகையே தன்மையாகவுடையவனை. அடியனேன் பெரிய அம்மானே-[5]உன்னை 'மகன்' என்று இருப்பார்க்கோ உதவலாவது? முறை உணர்ந்து இருப்பார்க்கு உதவலாகாதோ? [6] நான் முறையிலே நின்றவாறே நீயும் முறை

---

1. 'குலம்' என்பதற்கு இரண்டு பொருள்: ஒன்று ஆயர் குலம், மற்றொன்று, யானையின் குலம்; 'யானையின் இனங்களிலே சிறந்த இனத்தில் பிறந்த களிறு' என்றபடி.

2. 'அகப்பட்டாலும்' என்று தொடங்கும் வாக்கியம், 'தறியார்ந்த' என்ற பாசுரத்திற்கு அவதாரிகை.

'தறியார்ந்த கருங்களிறே போல நின்று
தடங்கண்கள் பனிமல்கும் தன்மை யானை'

என்பது, பெரிய திருமொழி, 2. 10 : 6.

எடுத்த பாசுரத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார், 'ஒரு கம்பத்தோடே' என்றது முதல், 'தன்மையாகவுடையவனை' என்பது முடிய.

3. 'யதி ஶக்நோஷி கச்ச த்வம் அதி சஞ்சல சேஷ்டித
இத்யுக்த்வா அத நிஜம் கர்ம ஸா சகார குடும்பிநீ'

என்பது, ஸ்ரீ விஷ்ணு புரா. 5. 6 : 115

4. 'எல்லாவற்றையும் செய்து முடிக்கும் ஆற்றலையுடைய இறைவன் இப்படி இருக்கைக்குக் காரணம் என்?' என்ன, 'சர்வசத்தி' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். சர்வசத்தி - இறைவன்.

5. 'அடியனேன் பெரிய அம்மானே' என்கிறவருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார், 'உன்னை' என்று தொடங்கி.

6. 'அடியனேன்' என்றதன் பின், 'பெரிய அம்மானே' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'நான்' என்று தொடங்கி.

யிலே நில்லாநின்றாய். என்றது, 'அடியேன் என்று நான் சொல்ல, நீ ஈஸ்வரனாய் இராநின்றாய்' என்றபடி.

போர் கடுத்த அவுணன் உடல் இரு பிளவா - யுத்த [1]கண்டூதியை உடையனான இரணியன் உடலை இரண்டு பாதியாகும்படி. கை உகிர் ஆண்ட -'படை ஆண்டான்' என்னுமாறுபோலே. எம் கடலே - [2]'மஹாவிஷ்ணும்' என்னும்படி பெரிய கிளர்த்தியோடே வந்து பிரஹ்லாதனுக்கு உதவின அது தம் பேறாய் இருந்தபடி. அடுத்தது ஓர் உருவாய்-இவன் எங்கே காட்டப்புகுகிறான் என்று அறியாமை யாலே எங்கும் ஒக்கச் சினைத்துக்கொடு நின்றான்; ஒன்றனை அறுதியிட்டுத் தோற்றப் பற்றாதபடி. அவன் மிகைக்கை யாலே அப்போதைக்குத் தகுதியான வடிவைக் கொண்டு. அன்றிக்கே, [3]'மனித வடிவம் பாதியாகவும் சிங்கவடிவம் பாதியாகவும் கொண்டு அவதரித்தார்' என்கிறபடியே, 'அவன் வரத்தில் அகப்படாத வடிவைக் கொண்டு' என்னுதல். என்றது, 'பதற்றத்தாலே ஒன்றன் உடலையும் ஒன்றன் தலையையும் சேர்த்துக்கொண்டு வந்தான்' என்றபடி. அடுத்தது ஓர் உருவாய் ஆயிற்றுக் கடுத்த போர் அவுணன் உடல் பிளந்தது.

இன்று நீ வாராய் -'அன்றும் இன்றும் ஆயிற்று உதவ வேண்டுவது? அன்று உதவினாய்; இன்று உதவுகின்றிலை. விபரீத ஞானமுடையார்க்கு உதவினாய்; உண்மை ஞான முடையார்க்கு உதவினாய்; இந்த இரண்டு கோடிக்கும் புறம்போ நான்?' என்றது, 'மகன் என்று கலங்கினவனுக்கு உதவினாய்; [4]'என்னிடமிருந்தே எல்லாப் பொருள்

---

1. கண்டூதி — தினவு. 'தினவு மிக்கன எமது இணை மேருக் குன்று கொண்டமைந்த தோள்கள்' என்பது வில்லிபாரதம், இராய சூயச் சருக்கம்.

2. 'எம்' என்றதற்கும், 'கடல்' என்றதற்கும் கருத்து அருளிச் செய்கிறார், 'மஹாவிஷ்ணும்' என்று தொடங்கி.

'உக்ரம் வீரம் மஹாவிஷ்ணும் ஜ்வலந்தம் ஸர்வதோ முகம்
ந்ருஸிம்ஹம் பீஷணம் பத்ரம் ம்ருத்யு ம்ருத்யும் நமாம்யஹம்'
என்பது அநுஷ்டுப்பு.

3. 'நரஸ்யார்த்த தநும் க்ருத்வா ஸிம்ஹஸ்யார்த்த தநும் ததா' என்பது, மஹாபாரதம், ஜந்ம ரஹஸ்யம்.

4. 'மத்தஃ ஸர்வம் அஹம் ஸர்வம் மயி ஸர்வம்ஸநாதநே
அஹம் ஏவ அவ்யயஃ அநந்தஃ பரமாத்மா ஆத்ம ஸம்ஶ்ரயஃ'
என்பது, ஸ்ரீ விஷ்ணு புரா. 1. 19 : 86.

களும் தோன்றுகின்றன; என்னிடமே எல்லாப் பொருள்களும் லயம் அடைகின்றன' என்னும் தெளிவையுடையவனுக்கு உதவினுய்; [1]"என்று என்றே கலங்கி' என்கிற 'கலக்கமுடைய எனக்கேயோ உதவலாகாதது?' என்றபடி. [2]நீ வாராது ஒழிந்தாலும் ஜீவிக்க ஆசையுடையார்க்கே அன்ருே உன்னைக் காற்கட்ட வேண்டுவது? 'அது கிடக்கிடீர். ஆனுல் நீர் படுகிறது எற்றிற்கு?' என்ன, [3]எங்ஙனம் தேறுவர் உமரே-இவ்வளவில் நீ முகம் காட்டாவிட்டால், உன் குணஞானத்தாலே ஜீவிக்குமவர்கள் பிழைப்பார்களோ? அன்றிக்கே, 'உன் குணங்களே தஞ்சம் என்று இருக்கிறவர்கள் எங்ஙனே உன்னை நம்பும்படி?' என்னுதல். (3)

776

[4]உமர்உகந்து உகந்த உருவம்நின் உருவம்
ஆகிஉன் றனக்குஅன்பர் ஆனுர்
அவர்உகந்து அமர்ந்த செய்கைஉன் மாயை
அறிவுஒன்றும் சங்கிப்பன் வினையேன்
அமரது பண்ணி அகலிடம் புடைசூழ்
அடுபடை அவித்தஅம் மானே!
அமரர்தம் அமுதே! அசுரர்கள் நஞ்சே!
என்னுடை ஆருயி ரேயோ!

---

1. 'என்று என்றே' என்பது, திருவாய். 8. 1 : 2.

2. 'இன்று நீ வாராய்' என்கிறவருடைய மனேபாத்தை அருளிச்செய்கிருர், 'நீ வாராது' என்று தொடங்கி. 'அது கிடக்கிடீர்' என்றது, 'இன்று நீ வாராய்' என்றது கிடக்கட்டுங்காண்' என்றபடி.

'போன படைத்தலை வீரர் தமக்குஇரை போதாஇச்
சேனை கிடக்கிடு'

என்பது, கம்பராமாயணம், குகப்படலம், 20.

3. 'எங்ஙனம் தேறுவர் உமர்?' என்றதனுல், தாம் ஆசை அற்றவர் ஆகிருர் என்பது போதரும். 'தேறுவர்' என்பதற்கு 'நம்புவர்' என்றும், 'பிழைத்திருப்பர்' என்றும், இரு வகையாகப் பொருள் அருளிச்செய்கிருர்.

4. 'தனக்கோர் வடிவும் பெயரும் இன்றி அன்பராயினுர் கருதிய வடிவே வடிவாகவும், அவர் இட்ட பெயரே பெயராகவுமுடையனுதலின், 'முக்கை முனிவ' என்பது முதலா 'நூருயிரங்கை ஆறறி கடவுள்' என்பது ஈருக வடிவு வேற்றுமையும், பெயர் வேற்றுமையும் சொல்லப்பட்டன' என்னும் பரிமேலழகருரை, இத்

**பொ - ரை :** 'அகன்ற பூமியின் பக்கம் எங்கும் சூழ்ந்த அடுகின்ற சேனையைப் போரினைச் செய்து அழித்த அம்மானே! தேவர்களுக்கு அமுதே! அசுரர்களுக்கு நஞ்சே! என்னுடைய அரிய உயிரே! உன்னுடைய அடியார்கள் எப்பொழுதும் விரும்புகின்ற வடிவமே உன்னுடைய வடிவமாகி, உனக்கு அடியவர்களாகிய அவர்கள் உகந்து ஈடுபடுகைக்கு இடமாக நீ செய்த செயல்கள் உன்னுடைய ஆச்சரியமான செயல்களாகும் என்று கொண்டிருக்கின்ற இந்தத் தெளிந்த அறிவு ஒன்றிலுங்கூட வினையேன் ஐயப்படாநின்றேன்,' என்றவாறு.

**வி - கு :** 'சூழ் அடுபடை' என்பதற்குச் 'சூழ்ந்து அடுதற்கு வந்த படை' என்று பொருள் கூறலுமாம். அடுதல் - கொல்லுதல். 'உயிரேயோ' என்பதில் ஓகாரம் இரக்கத்தைக் காட்ட வந்தது.

**ஈடு:** நான்காம் பாட்டு. [1] 'உன்னை அடியார்கள் இட்ட வழக்கு ஆக்கி வைப்புதி' என்னும் அறிவு ஒன்றிலுமே தரித்திருக்கிற நான், அதுவும் பொய்யோ என்று ஐயப்படாநின்றேன் என்கிறார்.

உமர் [2]உகந்து உகந்த உருவம் நின் உருவம் ஆகி - 'உனக்கே உரியராய் இருக்கும் அடியார்கள் மாறாதே உகந்த வடிவை உனக்குத் திருமேனியாகக் கொள்ளுதி' என்னுதல்; அன்றிக்கே, 'உனக்கு நல்லராய் இருக்குமவர்கள் உகந்ததனாலே நீ உகந்து அதனையே உனக்கு வடிவம் ஆகக் கொள்ளுதி' என்னுதல். [3] 'ஓ அருச்சுன! எவர்கள் எவ்விதமாய் என்னை வணங்குகிறார்களோ, அவர்கட்கு அவ்விதமாகவே நின்று நான் அருள் புரிகின்றேன்,' என்

---

திருப்பாசுரத்தின் முதல் இரண்டு அடிகளோடு ஒப்பு நோக்கல் தகும். (பரிபாடல், 3. 36-43.)

1. திருப்பாசுரம் முழுதினையும் கடாட்சித்து அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. 'உகந்து உகந்த' என்ற அடுக்குத்தொடருக்கு, இரண்டு வகையாகக் கருத்து அருளிச்செய்கிறார் : முதற்கருத்து, 'எப்போதும் உகந்து போருகின்ற வடிவம்' என்பது. விஷய பேதத்தாலே வேற்றுமையை அங்கீகரித்தது இரண்டாவது கருத்து.

3. 'அடியார்கள் உகந்ததனையே திருமேனியாகக் கொள்ளுகின்றவன் இறைவன்' என்பதற்குப் பிரமாணங்கள் காட்டுகிறார், 'ஓ அருச்சுன!' என்று தொடங்கி·

'யே யதா மாம் ப்ரபத்யந்தே தாந் ததைவ பஜாமீ அஹம்
மம வர்த்ம அநுவர்த்தந்தே மநுஷ்யாঃ பார்த்த ஸர்வஶঃ'

என்பது, ஸ்ரீ கீதை, 4 : 11.

றும், [1] 'தமர் உகந்தது எவ்வுருவம்' என்றும் வருகின்ற படியே. உன்றனக்கு அன்பரானார் அவர் - உன் பக்கல் பத்தியினாலே பரவசப்பட்டிருக்குமவர்கள். உகந்து - மிக ஆதரித்து. அமர்ந்த செய்கை உன் மாயை - [2] ஒருவகையான பிரயோஜனத்தையும் விரும்பாமலே கிட்டவேண்டும் செயல்கள், உன்னுடைய ஆச்சரியமான செயல்கள்.

அறிவு ஒன்றும் சங்கிப்பன் - இந்த ஒரு குணத்தையும் பற்றின அறிவாயிற்று இவருடைய இருப்புக்குக் காரணம்; அதிலே ஆயிற்று இப்போது இவர்க்கு ஐயம் தொடர்கிறது. வினையேன் - [3] நான் ஒருவன் கண்ணுஞ் சுழலை இட்டு ஐயப்படுங்காட்டில், சொரூபத்தைப் பற்றி இருக்கிற குணங்கள் இல்லையாகாதே அன்றோ? அந்தக் குணத்திலே ஐயப்படுகிறது நான் செய்த பாவம் அன்றோ? [4]'பெருமாள் குற்றமுடையவர் பக்கலிலும் குணத்தையே காண்கின்றவர்; செய்ந்நன்றி அறிகின்றவர்; அருளோடு கூடினவர்; நன்னடத்தையுடையவர் என்று சொல்லப்பட்டவராயினும், என் புண்ணியக்குறைவால் அருளில்லாதவர் என்று ஐயப்படுகிறேன்,' என்கிறபடியே, 'இப்படிப்பட்ட குணங்களையுடையவர்க்கு நான் ஐயப்படுங்காட்டில் அவை இல்லை ஆகா அன்றோ? நான் ஐயப்படுவதற்குக் காரணம் என் புண்ணியக் குறைவே அன்றோ?' என்றாள் பிராட்டி.

அமரது பண்ணி - அடியார்கள் மாட்டுப் பக்ஷபாதத்தையுடையவர் என்னுமிடத்துக்கு உதாரணம் காட்டுகிறார். அந்த அமரைப் பண்ணி. மஹாபாரதம் அன்றோ?

---

1. 'தமருகந்தது எவ்வுருவம்' என்பது, முதல் திருவந். 44.

2. 'ஒரு வகையான பிரயோஜனத்தையும்.........ஆச்சரியமான செயல்கள்' என்றது, 'அவர்கள் எந்தக் காரியங்களை உகப்பர்களோ, அந்தக் காரியங்களையே இறைவனும் உடையனாய் இருப்பன்' என்றபடி.

3. 'இந்த ஐயம், அவன் உமக்கு உதவாமையாலே வந்தது அன்றோ?' என்ன, 'நான் ஒருவன்' என்று தொடங்கி அதற்கு விடை அளிச்செய்கிறார்.

4. 'இப்படி அதிசங்கை பண்ணினார் உளரோ?' என்ன, 'உளர்' என்று அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'பெருமாள்' என்று தொடங்கி. இப்பொருளையுடைய சுலோகத்தையும் அதன் வியாக்கியானத்தையும் 3-ஆம் பக். காண்க. சுலோகத்திலேயுள்ள மத்பாக்ய ஸங்க்ஷயாத்' என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார், 'இப்படிப்பட்ட' என்று தொடங்கி.

அகல் இடம் புடை சூழ் அடுபடை அவித்த - பூமிப்பரப்பு அடைய நெளியும்படி எல்லாத் திக்குகளிலுமாக வந்து சூழ்ந்துகொண்டு கொல்ல வந்த சேனையை அவித்த. என்றது, [1]'தீயோர் கூட்டம் முழுதும் காட்டுத் தீக் கிளர்ந்தாற் போலே கிளர்ந்து, 'சாரதி, சாரதி' என்று வாய் பாறிக் கொண்டு வந்து தோற்ற, அவர்கள் கிளர்த்தியை அவித்தான்' என்றபடி. [2]'மழைகொலோ வருகின்றது!' என்று சொல்லுகிற கிருஷ்ணன் ஆகிற காளமேகம் அன்றோ ஏறி அவித்தது? அம்மானே - [3]எல்லார்க்கும் ஸ்வாமியாய் இருந்துவைத்து அடியார் மாட்டு உள்ள பக்ஷபாதத்தாலே அடியர் அல்லாதாரைக் கிழங்கு எடுத்துப் போகட்டானித்தனை. அமரர்தம் அமுதே - [4]தேவர்களுக்காக அசுரர்களோடே அம்பு ஏற்றுச் செய்த செயல்களாலே அவர்களுக்கு நிரதிசய போக்கியனாய் இருக்கும்படி. அசுரர்கள் நஞ்சே - பிறவியாலே அசுரர்களாயும், சுபாவத்தாலே அசுரர்களாயும் உள்ளவர்களுக்கு ஆற்ற ஒண்ணாத நஞ்சு ஆனவனே! என்னுடை ஆர் உயிரேயோ - நான் தரித்திருப்பதற்குக் காரணம் ஆனவனே! [5]தேவர்களுக்கு இனியனாய் அசுரக் கூட்டத்துக்கு நஞ்சாய் இருக்கிற இருப்பு, தம்முடைய இருப்புக்குக் காரணமாய் இருக்கிறபடி.

---

1. 'அவித்த' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார். 'தீயோர் கூட்டம்' என்று தொடங்கி.

2. 'ஆயின், அவித்தற்கு அவன் மழையோ?' என்ன, 'ஆம்' என்று அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'மழைகொலோ' என்று தொடங்கி. இது, பெரியாழ்வார் திருமொழி, 3. 4 : 1.

3. 'அம்மானே! அடுபடை அவித்த' என்று கூட்டிக் கருத்து அருளிச்செய்கிறார், 'எல்லார்க்கும்' என்று தொடங்கி.

4. 'அடுபடை அவித்த' என்றதன் பின், 'அமரர்தம் அமுதே' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'தேவர்களுக்காக' என்று தொடங்கி.

5. நான்காம் அடியில், முன்னே உள்ள பகுதிகளையும் திருவுள்ளம் பற்றிக் கருத்து அருளிச்செய்கிறார், 'தேவர்களுக்கு' என்று தொடங்கி.

777

**ஆருயி ரேயோ! அகலிடம் முழுதும்**
**படைத்துஇடந்து உண்டுஉமிழ்ந்து அளந்த**
**[1]பேரிய ரேயோ! பெரியநீர் படைத்துஅங்கு**
**உறைந்துஅது கடைந்தடைத்து உடைத்த**
**சீரிய ரேயோ! மனிசர்க்குத் தேவர்**
**போலத்தே வர்க்குந்தே வாவோ!**
**ஓருயி ரேயோ உலகங்கட்கு எல்லாம்!**
**உன்னைநான் எங்குவந்து உறுகோ?**

**பொ-ரை:** அரிய உயிராய் இருப்பவனே! எல்லா உலகங்களையும் உண்டாக்கி, ஒரு காலத்தில் பிரளயத்தில் அழியாமல் இடந்து எடுத்து, ஒரு காலத்தில் திருவயிற்றிலே வைத்து, வெளி நாடு காண உமிழ்ந்து, ஒரு காலத்தில் மாவலி பக்கல் நீர் ஏற்று அளந்துகொண்ட பெரியோனே! பிரளயத்தை உண்டாக்கி, அந்த வெள்ளத்திலே திருக்கண்வளர்ந்தருளி, அதன் காரியமான பாற் கடலைக் கடைந்து, அதன் இனமான கடலை அணை கட்டி, அதனை வில்லின் நுனியாலே உடைத்த சீரியோனே! மனிதர்கட்குத் தேவர்கள் போலத் தேவர்கட்கு எல்லாம் தேவனாய் இருப்பவனே! உலகங்கட்கு எல்லாம் ஓர் உயிராய் இருப்பவனே! உன்னை நான் எப்படி வந்து கிட்டுவேன்?

**வி-கு:** ஓகாரங்கள், இரக்கத்தின்கண் வந்தன. 'உலகங்கட்கு எல்லாம் ஓர் உயிரேயோ?' என்று மாற்றுக.

**ஈடு:** ஐந்தாம் பாட்டு. [2]'சாஸ்திரம் பயன் பெறுவது செய்யும் கருத்தன் உண்டான போது,' என்கிறபடியே, 'பேறு உம்மதானால் சாதனம் உம்முடைய தலையிலே ஆக வேண்டாவோ?' என்ன, 'நான் முயற்சி செய்து வந்து காண என்று ஒரு பொருள் இல்லைகாண்' என்கிறார்.

**ஆர் உயிரேயோ** - உயிர் நீயாய் இருக்க நான் என்ன சாதனத்தைச் செய்து வந்து கிட்டுவேன்? என்றது, 'சரீரத்தைக் காப்பது ஆத்துமாவின் காரியம் அன்றோ? சரீரம் தானே தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவோ?'

---

1. 'பேருயிரேயோ' என்பது முன்னுள்ள பாடம். 'பெரியர்' என்பது எதுகை நோக்கி முதல் நீண்டு, ஏகார ஓகாரங்களை ஈற்றிற் பெற்று வந்தது. 'கரனேயோ யான்பட்ட கையறவு காணாயோ' (கம். சூர்ப்பண. 107). என்புழிப் போன்று.

2. 'எங்கு வந்துறுகோ?' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

என்றபடி. [1]'சம்பந்த மாத்திரமேயோ, அநுஷ்டானமும் இல்லையோ?' என்கிறார் மேல். அகல் இடம் முழுதும் படைத்து இடந்து உண்டு உமிழ்ந்து அளந்த பெரிய ரேயோ - [2]'பல பொருள்கள் ஆகக்கடவேன்' என்று பூமிப் பரப்பு அடங்கலும் உண்டாக்கி, பிரளயத்தில் நோவுபட மஹாவராஹமாய் எடுத்துக்கொண்டு ஏறி, மீண்டும் பிரளயம் வர வயிற்றிலே வைத்து நோக்கி, உள்ளே கிடந்து தளராதபடி வெளி நாடு காண உமிழ்ந்து, மஹாபலியாலே கவரப்பட்ட நிலையிலே எல்லை நடந்து மீட்டுக் கொண்டு, இப்படி அந்தத் துர்த்தசைகளிலே என்னைக் காப்பாற்ற வேண்டும்' என்று விரும்புவார் இல்லாதிருந்தும், உணர்ந்து நோக்கும் நீயே இது கிட்டும் விரகு பார்க்க வேண்டாவோ? பெரியோனே! பெரியர் - பெரியோன்.

பெரிய நீர் படைத்து அங்கு உறைந்து அது கடைந்து அடைத்து உடைத்த சீரியரேயோ - [3]எல்லார் விஷயமாகச் செய்யும் செயலோடு பிராட்டிக்காகச் செய்யும் செயலோடு வாசி அற்று இருக்கிறபடி. ஏகார்ணவத்தைப் படைத்து, படைப்பின்பொருட்டு அதிலே கண்வளர்ந்து, பிராட்டியைப் பெறுகைக்காக அதனைக் கடைந்து, அவளுடைய கலவிக்காக அதனை அடைத்து, அவ்வருகு உண்டான இராக்கதர்கள் வந்து அடியார்களை நலியாதபடி அதனை உடைத்த சீர்மையையுடையவனே! இங்கே 'சீர்மை' என்றது, பிராட்டியோடு அல்லாதாரோடு வாசி அற அங்கீகரிக்கும் தன்மையினை. மனிசர்க்குத் தேவர் போலத் தேவர்க்கும் தேவாவோ - ஐஸ்வர்யத்தாலும் பெருமையாலும் மனிதர்களுக்குத் தேவர்கள் இருக்குமாறு போலே ஆயிற்று, அந்தத் தேவர்களிற்காட்டில் சர்வேஸ்வரன் இருக்கும்படி.

---

1. 'அகலிடம்' என்பதற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார், 'சம்பந்த மாத்திரமேயோ?' என்று தொடங்கி.

2. 'பஹு ஸ்யாம்' என்பது, தைத்திரீ. ஆனந்.

3. உலகத்துக்காகச் செய்த காரியத்தைக் கூறிய பின் பிராட்டியைப் பெறுகைக்குச் செய்த செயலைக் கூறுவதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'எல்லார் விஷயமாக' என்று தொடங்கி. 'வாசி அற்று இருக்கிறபடி' என்றது, 'பிராட்டி காரியத்தைப் போலவே எல்லாருடைய காரியத்தையும் செய்யுமவன்' என்றபடி.

உலகங்கட்கு எல்லாம் ஓர் உயிரேயோ - [1]ஹிதத்தைச் சிந்தனை செய்வது கேவலம் சரீரமோ, ஆத்துமாவோ? [2]நான் உன்னைப் பெறுகைக்குச் சாதனத்தைச் செய்கிறேன், உன்னைப்போலே இருப்பது வேறு ஒரு பொருள் உண்டாகில் சொல்லிக்காண். [3]உயிராய் இருக்கிற உன்னைச் சரீரமாக இருக்கிற நான் என்ன சாதனத்தைச் செய்து வந்து கிட்டுவேன்? ஆத்துமா சரீரத்துக்கு வேண்டிய ஹிதத்தைச் சிந்தனை செய்யுமது ஒழிய, சரீரம் தன்னைக் காத்துக்கொள்வது என்பது ஒன்று உண்டோ? [4]ஆதாரமாய் நியமிக்கிறவனுய்ச் சேஷியாய் இருக்கிற நீ ஒழிய, ஆதேயமாய் நியமிக்கப்படும் பொருளாய்ச் சேஷமான இது தன்னைத்தான் பாதுகாத்துக்கொள்ளவோ? [5]ஆதார ஆதேய நியந்துரு நியாம்ய பாவங்களால் சரீர லக்ஷணம் இந்த உலகிற்கு உண்டான பின்பு, [6]சிறிது அறிவும் 'நீயே கடவாய்' என்கிற எண்ணத்திற்குக் கண்ட இத்தனை அன்றி ஒரு சாதனத்தைச் செய்யக் கண்டதோ? (5)

---

1. 'உலகங்கட்கு எல்லாம் உயிர்' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறுர், 'ஹிதத்தை' என்று தொடங்கி.

2. 'ஓர்உயிர்' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறுர், 'நான்' என்று தொடங்கி. மேலே 'ஆருயிர்' என்றது, தம்மைக் குறித்தது. இங்கே, 'ஓருயிர்' என்றது, உலகத்தைக் குறித்தது.

3. 'உன்னை நான்' என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறுர், 'உயிராய்' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறுர், 'ஆத்துமா' என்று தொடங்கி.

4. உயிர் உடல் என்னும் இவற்றின் இலக்கணங்களை அருளிச்செய்யாநின்றுகொண்டு, அதன் மூலம் முற்கூறிய பொருளை உறுதிப்படுத்துகிறுர், 'ஆதாரமாய்' என்று தொடங்கி. சேஷம் - சந்தனம் மலர் தாம்பூலம் முதலிய பொருள்களைப்போன்று, உலகமும் உயிர்ப்பொருள்களும் இறைவனுடைய இஷ்ட விநியோகத்திற்குத் தகுதியாக இருத்தல். இவற்றைத் தன் விருப்பத்திற்கு விநியோகம் கொள்ளுகின்றவன் சேஷி.

5. 'இந்த உலகம் சரீரமானபடி யாங்ஙனம்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறுர், 'ஆதார' என்று தொடங்கி. நியந்துரு - நியமிக்கின்றவன் இடத்தில் உள்ள. நியாம்யம் - நியமிக்கப்படும் பொருள்.

6. 'சரீரம் போன்று அறிவு இல்லாத பொருள் அன்றே? சிறிது அறிவு உண்டே?' என்ன, 'சிறிது அறிவும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறுர்.

778

எங்குவந்து உறுகோ? என்னை ஆள் வானே!
ஏழுல கங்களும் நீயே;
அங்குஅவர்க்கு அமைத்த தெய்வமும் நீயே;
அவற்றுஅவை கருமமும் நீயே;
பொங்கிய புறம்பால் பொருள்உள வேலும்
அவையுமோ நீ; இன்னே ஆனால்
மங்கிய அருவாம் நேர்ப்பமும் நீயே;
வான்புலன் இறந்ததும் நீயே.

பொ-ரை: என்னை ஆள்கின்றவனே! ஏழு உலகங்களும் நீ இட்ட வழக்கு; அந்த அந்த உலகங்களிலே அவ்வவர்கட்குச் சமைத்து வைத்த தெய்வங்களும் நீ இட்ட வழக்கு; அந்த அந்தத் தெய்வங்களுக்குச் செய்யப்படுகின்ற ஆராதன ரூபமான காரியங்களும் நீ இட்ட வழக்கு; ஒன்றற்கு ஒன்று விரிந்ததாய் அண்டத்துக்குப் புறம்பாய் அதற்குக் காரணமாய் உள்ள மகத்து முதலான தத்துவங்களும் நீ இட்ட வழக்கு; காரண நிலையில் சுருங்கிக் கிடக்கிற சித்து அசித்துகளும் நீ இட்ட வழக்கு; பரமாகாசத்தில் இருக்கின்ற, புலன்களுக்கு விஷயம் ஆகாத முத்தர்களும் நீ இட்ட வழக்கு; இங்ஙனம் ஆனால், உன்னை நான் எப்படி வந்து கிட்டுவேன்?

வி-கு: 'என்னை ஆள்வானே! எல்லாம் நீயே; இன்னே ஆனால், உன்னை எங்கு வந்து உறுகோ?' என்க.

ஈடு: ஆறும் பாட்டு. சொல்லிய பொருளை விவரிக்கிறார்.

எங்கு வந்து உறுகோ - [1]'மேருவின் சிகரத்திலே நிற்கிறான் ஒருவனை, ஒரு முடவன் சென்று கிட்டவோ! என்னை ஆள்வானே - [2]இவ்வளவும் வர நின்றேன் நான் ஆகில் அன்றோ, மேலும் நான் வந்து கிட்டப் பார்ப்பது? ஏழ் உலகங்களும் நீயே - எல்லா உலகங்களும் நீ இட்ட வழக்காம்படி இருக்கிறவனே! [3]உன்னை அடைய வேண்

---

1. 'எங்கு வந்து உறுகோ' என்றதற்குக் கருத்து அருளிச் செய்கிறார், 'மேருவின்' என்று தொடங்கி. 'எங்கு' என்றதனால், அவன் வசிக்கிற இடத்தின் உயர்வும், 'வந்துறுகோ' என்றதனால், தம்முடைய அசத்தியும் தோன்றுகின்றன.

2. இவ்வளவும் வர - 'உன்பக்கல் ருசி பிறக்கும் அளவும் வர' என்றபடி.

3. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார், 'உன்னை' என்று தொடங்கி.

டும் என்ற விருப்பத்தையுடையேனாய் இருக்கிற என்னை ஒழிய, விருப்பம் இல்லாதார்தாமோ சுவாதீனராய் இருக்கிறார்கள்; அங்கு அவர்க்கு அமைத்த தெய்வமும் நீயே - அவர்களைக் குடிமை கொள்ளுகிற தெய்வங்களும் நீ இட்ட வழக்கு. அவற்று அவை கருமமும் நீயே - அந்த அந்தத் தெய்வங்களினுடைய படைத்தல் முதலான செயல்களோ தாம் அவர்கள் பக்கல் கிடக்கின்றன ஆக, இவ்வருகு உண்டான காரிய வர்க்கம் உன்னுடைய அதீனம் என்னும் இடம் சொல்லிற்று.

பொங்கிய புறம்பால் பொருள் உளவேலும் அவையும் நீ - ஒன்றுக்கு ஒன்று விரிந்ததாய், அண்டத்துக்குப் புறம்பாய், அதற்குக் காரணமான மகத்து முதலான தத்துவங்கள் என்று சில உளவாகில், அவையும் உன் அதீனம். மங்கிய அருவாம் நேர்ப்பமும் நீயே - காரியமாகிற தன்மை முழுதும் அழிந்து சூக்கும நிலையை அடைந்திருக்கிற [1] அவ்யக்தமும் நீ இட்ட வழக்கு. [2] வான் புலன் இறந்ததும் நீயே - இவற்றின்படி அன்றிக்கே, அவ்யக்தத்தையும் வியாபிக்கக் கூடியதாய், கண் முதலான கரணங்களுக்குப் புலப்படாததாய் இருந்துள்ள காரணமான ஜீவர்களின் தொகுதியும் நீ இட்ட வழக்கு. என்றது, 'பத்த ஆத்துமசொரூபமும் நீ இட்ட வழக்கு' என்றபடி. இன்னே ஆனால் எங்கு வந்து உறுகோ - அர்த்த தத்துவம் இதுவான பின்பு, எங்கே வந்து கிட்டக்கடவேன்?

'மங்கிய அருவாம் நேர்ப்பம்' என்பதற்கு, 'பத்த ஆத்துமாக்களின் தொகுதி' என்றும், 'வான்புலன் இறந்தது' என்பதற்கு, 'முத்த ஆத்துமாக்களின் சொரூ

---

1. அவ்யக்தம் - விளக்கம் இல்லாதது; மூலப்பகுதி. மூலப் பகுதியின் ஒரு நிலை வேறுபாடுமாம்.

2. வான்புலன் இறந்ததும் நீ - வான் என்றது, 'வியாபிக்கக் கூடியது' என்றபடி. 'புலன் இறந்தது' என்றது, 'இந்திரியங்களுக்கு எட்டாதது' என்றபடி. என்றது, 'அவ்யக்தத்தையும் வியாபிக்கக் கூடியதாய், கண் முதலிய கரணங்களுக்கு எட்டாததாய்க் காரண மான ஜீவர்களின் தொகுதியும்' என்றபடி. இங்கு, வான் என்றதனால் சொல்லப்பட்ட வியாபகத்துவம் சொரூபத்தினால் அன்று; ஞானத்தினால் என்று கொள்க. ஜீவாத்துமாக்களுக்கு ஞானத்தால் வியாபகத்துவம் உள்ளதே அன்றிச் சொரூபத்தினால் வியாபகத்துவம் இல்லை. வியாபித்தல் - பரந்துறைதல். பத்த ஆத்தும சொரூபம் - மூலப்பகுதியில் சம்பந்தப்பட்டிருக்கின்ற ஆத்துமாக்களின் சொரூபம்.

பத்தைச் சொல்லுகிறது' என்றும் **பிள்ளான்** பணிப்பர். அப்போது, இல்லாததுக்குச் சமமாய்ச் சூக்குமமான ஆத்துமாக்களின் தொகுதி என்பதும், பரமபதத்திலேயாய்க் கண்களுக்குப் புலப்படாத முத்தாத்தும சொரூபம் என்பதும் பொருளாம். 'இதனால் என் சொல்லியவாறோ?' எனின், காரிய நிலையோடு காரண நிலையோடு முத்தனான நிலையோடு வாசி அற உன் கை பார்த்திருக்க வேண்டின பின்பு, நான் என் காரியத்துக்குக் கடவேனாதல் என்பது ஒரு பொருள் உண்டோ?' என்பதனைச் சொல்லியபடி. (6)

779

**இறந்ததும் நீயே; எதிர்ந்ததும் நீயே;**
**நிகழ்வதோ நீ; இன்னே ஆனால்**
**சிறந்தநின் தன்மை அதுஇது உதுஎன்ற**
**அறிவொன்றும் சங்கிப்பன் வினையேன்;**
**கறந்தபால் நெய்யே! நெய்யின் இன் சுவையே!**
**கடலினுள் அமுதமே! அமுதிற்**
**பிறந்தஇன் சுவையே! சுவையது பயனே!**
**பின்னைதோள் மணந்தபே ராயா!**

**பொ-ரை:** கறந்த பாலே! பாலில் இருக்கின்ற நெய்யே! நெய்யிலுள்ள சுவையே! கடலினுள் பிறந்த அமுதே! அமுதில் பிறந்த இனிய சுவையே! சுவையால் உண்டாகும் ஆனந்தமே! நப்பின்னைப் பிராட்டியின் தோள்களைக் கூடிய கிருஷ்ணனே! சென்ற காலத்தில் இருந்தவர்களும் இனி வருங்காலத்து இருப்பவர்களும் இப்பொழுது உள்ளவர்களும் ஆகிய எல்லாரும் நீ இட்ட வழக்கு; இப்படி இருந்தால், தூரத்தில் உள்ள பொருள்களும் அண்மையிலுள்ள பொருள்களும் நடு இடத்திலுள்ள பொருள்களும் ஆகிய எல்லாம் பரம்பரையாக உன்னுடைய தன்மைகளாகும்; சரீரத்துக்கு உண்டான துக்கம் ஆத்துமாவுக்கு ஆனாற்போன்று, எல்லாருடைய துக்கங்களும் சரீரியான உன்னுடையவை என்னும் சம்பந்தஞானம் ஒன்றையுமே அன்றோ நான் உய்வதற்குக் காரணமாக நினைத்திருப்பது? அந்தச் சம்பந்த ஞானம் ஒன்றிலும் ஐயம் கொள்ளாநின்றேன் வினையேன்.

**வி-கு:** 'என்ற அறிவு' என்பது, 'என்றறிவு' என்றானது விகாரம்.

**ஈடு:** ஏழாம் பாட்டு. [1]'எல்லாப்பொருள்களும் பிரகாரமாக இருப்பதனால் சேஷமாய், நீ பிரகாரியாய், நீயே

1. 'அது இது உது சிறந்த நின் தன்மை என்ற அறிவு ஒன்றும் சங்கிப்பன் வினையேன்' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

அவற்றுக்கு நிர்வாஹகன் என்னும் அறிவு ஒன்றுங் கொண்டு தரித்திருக்கிற நான் என் பாவத்தாலே அதிலும் ஐயம் கொள்ளாநின்றேன்,' என்கிறுர்.

இறந்ததும் நீயே எதிர்ந்ததும் நீயே நிகழ்வதோ நீ - [1]'இக்காலத்துக்கு நான் கடவேன், மற்றொரு காலத்துக்கு வேறே சிலர் கடவர்' என்றுதான் உன்ஞலே சொல்ல லாமோ? இறந்த காலத்தில் உள்ளாரோடு வருங்காலத் தில் உள்ளாரோடு நிகழ்காலத்தில் உள்ளாரோடு வாசி அற எல்லாரும் உனக்கு அதீனப்பட்டவர்கள். இன்னே ஆஞல் - இப்படியாஞல். ('இன்னே ஆஞல்' என்பதனை 'எங்கு வந்து உறுகோ' என்ற மேல் திருப்பாசுரத்தோடு கூட்டுக.) அன்றிக்கே 'அது இது உது சிறந்த நின் தன்மை; இன்னே ஆஞல், இறந்ததும் நீயே எதிர்ந்ததும் நீயே நிகழ்வதோ நீ' என்று கொண்டு கூட்டி, 'தூரத்திலே உள்ள தாயும் அண்மையில் உள்ளதாயும் இரண்டும் அல்லாத நடு இடத்தில் உள்ளதாயும் உள்ள எல்லாப் பொருள் களும் சேஷியாந்தன்மையாலே சிறந்திருந்துள்ள உனக் குப் பிரகாரமாய் முடிந்தால் முக்காலங்களிலும் வாழ் கின்ற பொருள்களும் நீ இட்ட வழக்கு எனப்படுகின்ற' என்னுதல். அன்றிக்கே, 'இறந்ததும் நீயே எதிர்ந்ததும் நீயே நிகழ்வதோ நீ இன்னே ஆஞல், அது இது உது சிறந்த நின் தன்மை' என்று கொண்டு கூட்டி, 'இப்படி முக்காலங்களிலும் வாழ்கின்ற பொருள்களும் நீ இட்ட வழக்கு ஆகையாலே எல்லாப் பொருள்களும் உனக்குப் பிரகாரம் எனப்படுகின்ற' என்னுதல்.

என்ற அறிவு ஒன்றும் சங்கிப்பன் - தன்னை ஒழிந்தன அடங்கலும் தனக்குப் பிரகாரமாய்த் தான் பிரகாரியாய் இருக்கையாலே, இவற்றுக்கு வந்தது தனக்கு வந்ததாக நினைத்திருப்பான் ஒருவன் என்கிற அறிவாயிற்று, இவர் உயிர் வாழ்வதற்குக் காரணம்; அது ஒன்றிலும் ஐயம் கொள்ளாநின்றேன்; அது என் காரியத்தைச் செய்யாமை

---

1. முக்காலத்தில் உள்ள பொருள்களையும் தனித்தனியே பிரித் துச் சொன்னதற்குக் கருத்து அருளிச்செய்கிறுர், 'இக்காலத்துக்கு' என்று தொடங்கி. பதப்பொருள் அருளிச்செய்கிறுர், 'இறந்த காலத்தில்' என்று தொடங்கி.

யாலே. வினையேன் - [1]'கலக்கத்தாலே நான் ஐயப்பட்டமாத்திரத்தில் அவன் சொரூபம் இல்லை என்பது ஆகாதே அன்றோ? எனக்கு இப்புத்தி பிறத்தற்கு அடி, என் பாபம் அன்றோ?' என்கிறார். [2]'என் புண்ணியக் குறைவால் அருள் இல்லாதவர் பெருமாள் என்று ஐயப்படுகிறேன்,' என்று பிராட்டி கூறினது போன்று. நாலாம் பாட்டில் ஐயப்பட்டதற்கும், இதற்கும் நெடுவாசி உண்டு. அடியார்கட்குப் பரதந்திரப்பட்டவன் என்கிற தன்மையிலே ஐயப்பட்டால் திருவருள் செய்யாமை நம்முடைய [3]ஆஸ்ரயணத்திற்குறையாலே என்று நினைத்திருக்கலாம்; இப்பாசுரத்தில் அவனுடைய சத்பாவத்திலே அன்றோ ஐயம்? [4]பிரகாரியாய்க் கொண்டு அன்றோ அவனுடைய சத்தை? அவனினின்றும் வேறுபட்ட பொருள்கள் [5]அவனுக்குப் பிரகாரமாய்க் கொண்டே அன்றோ உண்டாவது? 'இப்படிச் சொரூபத்தில் ஐயம் கொள்ளுவதற்கு அடி என்?' என்னில், ஐயங்கொள்ளுதற்குக் காரணம் சொல்லுகிறது மேல்:

கறந்த பால் - **கறந்த போதை ரசத்தை நினைக்கிறது: இன்றேல் கறவாத பால் இல்லையே அன்றோ? [6]வேறு ஒரு காரணத்தால் வந்த ரசவிசேடத்தை வேறுபடுத்துகிறது.** நெய்யே - அதில் சாராமிசம். நெய்யின் இன்

---

1. 'வினையேன்' என்பதற்கு, மேலிற்பதங்களையும் திருவுள்ளம் பற்றிப் பொருள் அருளிச்செய்கிறார், 'கலக்கத்தாலே' என்று தொடங்கி.

2. தாம் கூறிய பொருளுக்குப் பிரமாணம் காட்டுகிறார், 'என் புண்ணியக் குறைவால்' என்று தொடங்கி.

'ஸங்கே மத்பாக்ய ஸங்க்ஷயாத்'

இச்சுலோகத்தை 4-ஆம் பக்கத்திற்காண்க.

3. ஆஸ்ரயணம் - பற்று முறையிலே பற்றுதல். சத்பாவம் - உளதாம் தன்மை.

4. 'ஈண்டு ஐயம், பிரகாரியாக இருக்கும் தன்மையிலே அன்றோ? சத்பாவத்தில் என்று கூறுவது என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'பிரகாரியாய்க்கொண்டு' என்று தொடங்கி. பிரகாரி - பிரகாரமாகவுடையவன். பிரகாரம் - சரீரம். பிரகாரி - சரீரி; ஆத்துமா. சத்தை - இருப்பு; உளதாந்தன்மை.

5. தாம் கூறிய பொருளுக்கு எதிர்த்தட்டான பொருளையும் காட்டுகிறார், 'அவனுக்கு' என்று தொடங்கி.

6. 'வேறு ஒரு காரணத்தால்' என்றது, காய்ச்சுதல் முதலான காரணங்களை.

சுவையே - நெய்யில் இனிய சுவையானவனே! கடலினுள் அமுதமே - மஹாசமுத்திரத்தைக் கலக்கி அதில் சாராமிசமாக வாங்கின அமிருதம் போலே இனியன் ஆனவனே! அமுதில் பிறந்த இன்சுவையே - அதில் ரசத்தின் தன்மையைச் சொல்லுகிறது. சுவையது பயனே - ரசத்தை அனுபவித்தலால் வந்த சுகரூபமானவனே! [1]ஒன்றில் ஒன்று மேம்பட்ட ரசத்தின் தன்மைகளைச் சொல்லி, அது போராமையாலே தன்னையே சொல்லுகிறது மேல்: பின்னை தோள் மணந்த பேர் ஆயா - [2]ஒரு மிதுன அனுபவம் ஆயிற்று இவர்க்கு போக்கியம். [3]சம்சாரியை அவன் ஆனந்திப்பிக்குமாறு போலே ஆயிற்று, ஆனந்தமே உருவமாய் இருக்கிறவனை அவள் உகப்பிக்கும்படி. இருவருடைய சேர்த்தி அழகாயிற்று இவர்க்கு போக்கியம். இத்தால், பிரியில் உலகம் அழியும் என்று நினைக்க வேண்டும்படியான அவனது இனிமையின் மிகுதியே ஐயத்திற்குக் காரணம் என்பதாயிற்று. (7)

780

**மணந்தபே ராயா! மாயத்தால் முழுதும்**
**வல்வினை யேனைஈர் கின்ற**
**குணங்களை யுடையாய்! அசுரர்வன் கையர்**
**கூற்றமே! கொடியபுள் உயர்த்தாய்!**
**பணங்கள்ஆ யிரமும் உடையபைந் நாகப்**
**பள்ளியாய்! பாற்கடற் சேர்ப்பா!**
**வணங்குமாறு அறியேன் மனமும்வா சகமும்**
**செய்கையும் யானும்நீ தானே.**

பொ - ரை: நப்பின்னைப் பிராட்டியின் தோள்களை ஆசையால் கூடிய பேராயனே! வலிய வினையேனுகிய என்னை வருத்துகின்ற குணங்களையுடையவனே! வன்கையராகிற அசுரர்கட்குக் கூற்றமே! கொடிய கருடப் பறவையைக் கொடியில் உயர்த்தியவனே! ஆயிரம்

---

1. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிருர், 'ஒன்றில் ஒன்று' என்று தொடங்கி.

2. 'பின்னை தோள் மணந்த' என்று விசேடித்ததற்குக் கருத்து அருளிச்செய்கிருர், 'ஒரு மிதுன அனுபவம்' என்று தொடங்கி. மிதுனம் - இரட்டை. போக்கியம் - இனிய பொருள்.

3. 'பின்னை தோள் மணந்த' என்றதனுல், பலித்த பொருளை அருளிச்செய்கிருர், 'சம்சாரியை' என்று தொடங்கி. சம்சாரி - பிறப்பு இறப்புகளிலே உழன்று வருகின்றவன்.

படங்களையுடைய ஆதிசேஷனைப் படுக்கையாகவுடையவனே! திருப்பாற்கடலில் சேர்ந்திருப்பவனே! என் மனமும் வார்த்தையும் செயலும் யானும் நீ இட்ட வழக்கு; ஆகையாலே உன்னை வணங்கும் வகையை யான் அறியேன்.

வி - கு: மாயம் - ஆசை. கையர் - வஞ்சகர். ஈர்தல் - பிளத்தல். கொடிய - பகைவர்க்குக் கொடிய. பை - அழகு. 'நீதானே ஆகையால் வணங்குமாறு அறியேன்,' என்க.

**ஈடு:** எட்டாம் பாட்டு. [1]'ஏதேனும் செய்தாலும் பேறு உம்மதாய் அடைவதற்குக் கரணங்களும் உமக்கு உண்டானால் நீரே முயற்சி செய்ய வேண்டாவோ?' என்ன, ஆத்துமாவும் ஆத்துமாவோடு சம்பந்தப்பட்ட பொருள்களும் ஆகிய அனைத்தும் உன் அதீனமான பின்பு என்னால் செய்யலாவது ஒன்று இல்லை; நீயே பாதுகாக்க வேண்டும்,' என்கிறார்.

மாயத்தால் மணந்த பேராயா - காதலாலே நப்பின்னைப்பிராட்டி தோள்களோடே கலந்த பேராயனே! [2]நப்பின்னைப் பிராட்டியைக்காட்டிலும் அச்சாதிக்கு உரிய குணங்களில் கிருஷ்ணனுக்கு உண்டான ஏற்றம் சொல்லுகிறது '**பேராயா**' என்று. வல்வினையேனை முழுதும் ஈர்கின்ற குணங்களையுடையாய் - [3]சில குணங்கள் ஈரச் சில குணங்கள் தாரகமாகை அன்றிக்கே, எல்லாம் ஒக்க ஈரும்படியான குணங்களையுடையவனே! [4]உன் குணங்கள் ஆகையும் நான் ஆகையுமே நோவு படுகைக்கு அடி. [5]'சிலர் குண ஞானத்தாலே வாழ்ந்திருக்க, அது பாதக

---

1. 'வணங்குமாறு அறியேன்; மனமும் வாசகமும் செய்கையும் நீதானே' என்பனவற்றைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. '**பேராயா**' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'நப்பின்னைப்பிராட்டியை' என்று தொடங்கி.

3. 'முழுதும்' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'சில குணங்கள்' என்று தொடங்கி.

4. 'வல்வினையேனை ஈர்கின்ற குணங்கள்' என்று கூட்டிக் கருத்து அருளிச்செய்கிறார், 'உன் குணங்களாகையும்' என்று தொடங்கி.

5. 'சிலர் குணஞானத்தாலே வாழ்ந்திருக்க' என்ற இவ்விடத்தில்,

**'ஒளிவண்ணம் வளைசிந்தை உறக்கத்தோடு இவைஎல்லாம்**
**எளிமையால் இட்டுஎன்னை ஈடுஅழியப் போயினவால்**

மாம்படி பாபத்தைப் பண்ணினேன்,' என்பார், தம்மை **'வல்வினையேன்'** என்கிறார். நலிந்ததாய்விடுகிறது இல்லை ஆதலின், **'ஈர்கின்ற'** என்கிறார். [1]**அம்பு பட்ட புண் மருந்து இட்டு ஆற்றலாம்**; குணத்தால் வந்த நோய்க்குப் பரிகாரம் இல்லையே! வன்கையர் அசுரர் கூற்றமே - முன்கை மிடுக்கரான அசுரர்க்கு அந்தகன் தண்ணீர் என்னும்படி கூற்றமானவனே! கொடிய புள் உயர்த்தாய் - கண்ட போதே பகைவர்களை மாய்க்க வல்ல பெரிய திருவடியைக் கொடியாகவுடையவனே! [2]பகைவர்களை முடிப்பதற்குத் தான் வேண்டா; கொடியைக் காண அமையும் ஆதலின், **'உயர்த்தாய்'** என்கிறார்.

பணங்கள் ஆயிரமுடைய பை நாகணைப் பள்ளியாய் - [3]தன்னுடைய பரிசத்தாலே விரிந்த படங்களையுடையனாய், பகவானை அனுபவித்தலால் உண்டாகும் உவகைக்குப் போக்கு வீடாகப் பல தலைகளையுடையனாய், சர்வேஸ்வரனுக்கும் பிராட்டிமார்க்கும் நினைத்தபடி பரிமாறுகைக்குத் தகுதியான பரப்பையுடையனாய் ஆயிற்றுத் திருவனந்தாழ்வான் இருப்பது; அப்படி இருக்கிறவனைப் படுக்கையாக உடையவனே! பாற்கடல் [4]சேர்ப்பா - அடியார்களுடைய கூக்குரல் கேட்கைக்காகத் திருப்பாற்கடலிலே திருக்கண் வளர்கின்றவனே! வணங்குமாறு அறியேன் - [5]பரமபதத்தை விட்டுத் திருப்பாற்கடலிலே சாய்ந்து என்னைப் பாதுகாப்பதற்கு முற்பாடனாய் இருக்கிற

---

குளிர்அருவி வேங்கடத்துஎன் கோவிந்தன் குணம்பாடி
அளியத்த மேகங்காள்! ஆவிகாத்து இருப்பேனே!'

என்ற ஆண்டாள் திருப்பாசுரம் நினைவு கூர்தல் தகும்.

1. 'நீக்கிக்கொள்ள ஒண்ணாதோ?' என்ன, 'அம்பு பட்ட' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. 'உயர்த்தாய்' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'பகைவர்களை' என்று தொடங்கி.

3. 'பணங்கள், ஆயிரம், பை' என்ற மூன்று பதங்கட்கும் பொருள் அருளிச்செய்கிறார், 'தன்னுடைய' என்று தொடங்கி.

4. சேர்ப்பன் - சேர்ந்தவன்.

5. 'வணங்குமாறு அறியேன்' என்று உபாயம் தேடுவதைக் காட்டிலும், வணங்காதே வாளா இருக்க ஒண்ணாதோ?' என்ன, 'பரமபதத்தை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

உனக்கு நான் ஒரு கைங்கரியத்தைச் செய்தேன் ஆகைக்கு ஒரு விரகு அறிகின்றிலேன்! 'அறியாது ஒழிகின்றது என்? உமக்கு மனம் வாக்குக் காயம் என்னும் கரணங்கள் உண்டு; அவற்றை உபயோகப்படுத்துவதற்கு நீர் உண்டு; வணங்கத் தட்டு என்?' என்ன, மனமும் வாசகமும் செய்கையும் யானும் நீதானே - எனக்கு ஆய் இருப்பது ஒரு நெஞ்சும் வாக்கும் செய்கையும், எனக்கு ஆய் இருப்பது ஒரு நானும் உண்டாக வேண்டுமே; எல்லாம் நீ இட்ட வழக்காய் அன்றோ இருக்கின்றன? [1]வணங்க வேண்டும் என்னும் நினைவு உண்டு; வணங்கும் வகை அறிகின்றிலேன். (8)

781

யானும்நீ தானே யாவதோ மெய்யே
அருநரகு அவையும்நீ யானால்
வான்உயர் இன்பம் எய்தில்என்? மற்றை
நரகமே எய்தில்என்? எனினும்
யானும்நீ தானாய்த் தெளிதொறும் நன்றும்
அஞ்சுவன் நரகம்நான் அடைதல்;
வான்உயர் இன்பம் மன்னிவீற் றிருந்தாய்!
அருளுநின் தாள்களை எனக்கே.

பொ - ரை: எல்லாம் நீயாக இருக்கையாலே, நானும் நீதானே யாய் இருத்தலாகிய இது உண்மையே; அரிய நரகலோகங்களும் நீயே; ஆன பின்பு, பரமபதத்திலே சென்று உயர்ந்த இன்பத்தை அடைந்தால் என்ன, அதற்கு வேறான நரகத்தை அடைந்தால்தான் என்ன? என்றாலும், யான் உனக்கு அடியேன் என்பதை உணரும் போதெல்லாம் நரகத்தை நான் அடைதலைப் பெரிதும் அஞ்சுவன்! பரமபதத்திலே உயர்ந்த இன்பத்திலே நிலைபெற்று வீற்றிருப்ப வனே! உன்னுடைய திருவடிகளை எனக்குத் தந்தருள்வாய்.

வி - கு: நன்று - பெரிது. நரகு - ஈண்டுச் சம்சாரம். 'நின் தாள்களை எனக்கு அருளு,' என மாற்றுக.

ஈடு: ஒன்பதாம் பாட்டு. [2]'எல்லாப் பொருள்களும் நீ இட்ட வழக்கு,' என்கிற இந்த ஞானத்தோடே இருக்கும்

1. 'ஆறு' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'வணங்க வேண்டும்' என்று தொடங்கி.

2. 'நன்றும் அஞ்சுவன் நரகம் நான் அடைதல்; வான் உயர் இன்பம் மன்னி வீற்றிருந்தாய்' என்பதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். 'யானும் நீதானே', 'அருநரகவையும் நீ' என்று. இது, எல்லாப்பொருள்கட்கும் உபலக்ஷணம்.

இடத்தில் சம்சாரத்தோடு பரமபதத்தோடு வாசி இல்லையே யாகிலும், இந்த ஞானத்துக்கு விரோதியான சம்சாரத்தில் இருக்க அஞ்சாநின்றேன்! இதற்குத் தகுதியான பரம பதத்திலே என்னைக் கொண்டுபோக வேண்டும்' என்கிறார்.

யானும் நீதானே ஆவதோ மெய்யே - நான் 'நீ' என்கிற சொல்லுக்குள்ளே அடங்கும்படி எனக்குப் பிரகாரமாய், நான் பிரஹ்ம சப்தத்திற்குப் பொருளாம்படி இருக்கிற இந்த அர்த்தமோ, அது சத்தியம். [1]'ஆத்துமா என்றே தியானம் செய்யக் கடவன்'; 'நான் மநு, நான் சூரியன்' என்பனவே அன்றோ முத்தர்கள் பாசுரம்? மெய்யே - அதில் ஐயம் இல்லை. அருநரகு அவையும் நீ - எனக்குப் பொறுக்க ஒண்ணுதே கால் வாங்கி அல்லது நிற்க ஒண்ணுதபடியான சம்சாரமும் நீ இட்ட வழக்கு. [2]இது இப்போது சொல்லுகிறது, நீ நினைத்த அன்று கழித்துத் தரவல்லை என்கைக்காக. [3]ஆக, நானும் எனக்கு விரோதியான சம்சாரமும் உனக்குப் பிரகாரம். ஆனல் - இருக்கின்ற உண்மை இதுவானல். வான் உயர் இன்பம் எய்தில் என் [4]- சேஷத்துவ ஞானத்தோடே திருநாட்டிலே போய் நிரதிசய ஆனந்தத்தைப் பெற்றிருக்கில் என்? மற்றை நரகமே எய்தில் என் - சுகத்துக்கும் சேஷத்துவ ஞானத்துக்கும் எதிர்த்தட்டான சம்சாரத்திலே இருக்கில் என்?

எனினும் - உடையவன் வைத்த இடத்திலே கிடக்கு மத்தனை அன்றோ என்று ஓர் அர்த்த தத்துவம் உண்டு; இந்த உண்மை இப்படி இருந்தாலும், யானும் நீதானுய்த்

---

1. 'தன்னை அவனுகச் சொல்லலாம்படி இருக்குமோ?' என்ன, 'ஆத்துமா' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

'ஆத்மேத்யேவ து க்ருஹ்ணீயாத்' என்பது, வாக்யகாரவசனம்.

'அஹம் மநுரபவம் ஸூர்யஸ்ச' என்பது, பிரஹதாரணியக உபநிட. 4. முத்தர்கள் பாசுரம் - முத்தரைப் போன்றவர்களுடைய பாசுரம்.

2. சம்சாரமும் உனக்குப் பிரகாரம் என்றதற்குப் பிரயோஜனம் அருளிச்செய்கிறார், 'இது' என்று தொடங்கி.

3. 'யானும் நீ, அருநரகவையும் நீ' என்ற இரண்டாலும் சொல்லப்பட்ட பொருளைச் சேர்த்து அருளிச்செய்கிறார், 'ஆக' என்று தொடங்கி.

4. சேஷத்துவம் - சேஷமாம் தன்மை.

தெளிதொறும் - இந்தச் சம்சாரம் உனக்குப் [1]புறம்பு என்கிற தன்மையால் அன்றிக்கே, 'நான் உனக்கு அத்யந்த சேஷமாய் இருப்பவன்' என்கிற தெளிவு பிறக்கப் பிறக்க. நரகம் நான் அடைதல் நன்றும் அஞ்சுவன் - 'சேஷத்துவ ஞானம் உண்டான பின்பு சேஷமாய் இருக்கும் பொருள் சேஷி செய்தபடி கண்டு அவன் எல்லைக்குள்ளே கிடக்குமித்தனை அன்றோ? நம்மை நிர்ப்பந்திக்கக் கடவதோ?' என்பதே அன்றோ தேவர்க்கு நினைவு? உனக்கு இது நினைவு ஆனாலும், [2]இந்தச் சம்சாரத்தில் இருப்பை நான் மிகவும் அஞ்சாநின்றேன், அடிமை என்ற எண்ணத்திற்கு விரோதி ஆகையாலே. 'நீர் அஞ்சிய மாத்திரத்தில் நம்மால் செய்யலாவது உண்டோ?' என்னில், வான் உயர் இன்பம் மன்னி வீற்றிருந்தாய்! நின் தாள்களை எனக்கு அருளு - இதுவே அன்றிக்கே, [3]நித்திய விபூதியிலே நிரதிசய ஆனந்தத்தையுடையனாய், உன்னுடைய சேஷியாம் தன்மைக்குரிய வேறுபாடு தோற்ற இருப்பதோர் இருப்பு உண்டு; அவ்விருப்பிலே என்னை அழைத்து அசாதாரணர்களுடைய கைங்கரியத்தை எனக்குத் தரவேண்டும். (9)

782

**தாள்களை எனக்கே தலைத்தலைச் சிறப்பத்**
**தந்தபே ருதவிக்கைம் மாறாத்**
**தோள்களை ஆரத் தழுவிஎன் உயிரை**
**அறவிலை செய்தனன் சோதீ!**
**தோள்கள்ஆ யிரத்தாய்! முடிகள்ஆ யிரத்தாய்!**
**துணைமலர்க் கண்கள்ஆ யிரத்தாய்!**
**தாள்கள்ஆ யிரத்தாய்! பேர்கள்ஆ யிரத்தாய்!**
**தமியனேன் பெரிய அப்பனே!**

---

1. 'புறம்பு என்கிற தன்மையால் அன்றிக்கே' என்றது, 'உன்னை ஒழிய, சுவதந்திரம் வாய்ந்தது என்கிற தன்மையால் அன்றிக்கே, உனக்கு அத்தியந்த பரதந்திரம் ஆகையாலே' என்றபடி. அத்தியந்தம் - மிகவும்.

2. 'சேஷத்துவ ஞானத்துக்கு விருத்தமான சம்சாரத்திலே இருக்கில், அகப்பட்ட இந்த ஞானத்தையும் இழப்பன் என்று நான் மிகவும் அஞ்சாநின்றேன்' என்ற இருபத்து நாலாயிரப்படி இங்குச் சிந்தித்தல் தகும்.

3. நித்திய விபூதி - பரமபதம். அசாதாரணர் - உனக்கே உரியவர்களான நித்திய சூரிகள்.

**பொ - ரை :** 'சோதீ! பலபல தோள்களையுடையவனே! பலபல திருவடிகளையுடையவனே! இணைந்திருக்கின்ற மலர் போன்ற பலபல திருக்கண்களையுடையவனே! பலபல திருவடிகளையுடையவனே! ஆயிரம் திருப்பெயர்களையுடையவனே! தமியேனுக்குப் பெரிய அப்பனாய் இருப்பவனே! மேலும் மேலும் சிறப்பு மிகும்படியாக உன் திருவடிகளை எனக்கே கொடுத்த பெரிய உபகாரத்துக்குப் பிரதி உபகாரமாகத் தோள்களை நன்றாகத் தழுவிக்கொண்டு என் உயிரை உனக்கே அறவிலை செய்தேன்,' என்கிறார்.

**வி - கு :** 'என் உயிரைத் தோள்களை ஆரத் தழுவி அறவிலை செய்தனன்' என்க. 'உயிரினுடைய தோள்களைத் தழுவி' என்றது, உறுப்பு இல்லதனை உறுப்புடையதாகக் கூறினபடி; 'மிகவும் சிலாகித்து' என்றவாறு. தலைத்தலை - மிகவும். அறவிலை செய்தல் - சுத்தக்கிரயம் செய்தல்.

**ஈடு :** பத்தாம் பாட்டு. [1]தாம் நினைத்தபடியே திருவடிகளைத் தந்தருளின மஹோபகாரத்துக்குப் பிரதியுபகாரமாக 'இந்த ஆத்தும வஸ்துவை உனக்குத் தந்தேன்,' என்கிறார். இப்போது திருவடிகளைக் கொடுக்கையாவது, சம்சாரத்தோடு பொருந்தாதபடியையும் தன்னை ஒழியச் செல்லாதபடியையும் தமக்குப் பிறப்பித்த நிலையைப் பிரகாசிப்பிக்கை.

தாள்களை எனக்கே தலைத்தலை சிறப்பத் தந்த - [2]'பலர் அடியார் முன்பு அருளிய' என்கிறபடியே, ஸ்ரீவால்மீகி பகவான், முதலாழ்வார்கள் தொடக்கமானார் உளராய் இருக்க, என் பக்கலிலே விசேஷ கடாக்ஷம் பண்ணி, மிகச் சிறக்கும்படி தந்த. என்றது, 'பூர்ணமாகத் தந்த' என்றபடி. பேருதவி - கொள்ளுகிற தம் தரத்தில் அன்றிக்கே, அவன் தரத்திலே தருகை. கைம்மாறு - பிரதியுபகாரமாக. தோள்களை ஆரத் தழுவி - [3]ஒருவனுக்கு ஒருவன்

---

1. 'பேருதவிக் கைம்மாறு' என்றது முதல் 'அறவிலை செய்தனன்' என்றது முடியக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'எனக்கே' என்ற ஏகாரத்தின் பொருளை அருளிச்செய்கிறார் 'பலரடியார்' என்று தொடங்கி. இது, திருவாய். 7 : 10 : 5.

3. 'உயிருக்குத் தோள்கள் உண்டோ?' என்ன, 'ஒருவனுக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

> 'சென்றதுகொல் போந்ததுகொல் செவ்வி பெறுந்துணையும்
> நின்றதுகொல் நேர்மருங்கில் கையூன்றி—முன்றில்
> முழங்கும் கடாயானை மொய்ம்மலர்த்தார் மாறற்கு
> உழந்துபின் சென்றஎன் நெஞ்சு.'

என்னும் செய்யுள் இங்கு ஒப்பிடற்பாலது.

கன்னியை அணைத்துக்கொடுக்குமாறு போலே, இங்கும் அணைத்துக்கொடுக்கலாம்படி உருவம் இல்லாத ஆத்தும வஸ்து தானும் தோளுமாகப் பணைத்ததாயிற்று உபகாரத்தை நினைத்த நினைவாலே. 'எனது ஆவி ஆவியும் நீ, [1]எனது ஆவி ஆர், யான் ஆர்? மனமும் வாசகமும் செய்கையும் யானும் நீதானே?' என்பன போன்றனவற்றை மறந்தார் உவகையின் மிகுதியாலே. என் உயிரை அறவிலை செய்தனன் - என்னுடைய ஆத்தும வஸ்துவைத் தேவர்க்கு [2]அநந்யார்ஹமாம்படி அறவிலை செய்து தந்தேன். சோதீ - இவர் தம்மது அல்லாததது ஒன்றனைத் தம்மதாக மயங்கிக் கொடுத்தாற்போலே, அவனும் தன்னது அல்லாதது ஒன்றனைப் பெற்றாற்போலே மயங்கிப் பேரொளியன் ஆகாநின்றான். [3]'விஜ்வரன்' என்னும்படி இராநின்றான்.

தோள்கள் ஆயிரத்தாய் முடிகள் ஆயிரத்தாய் துணை மலர்க் கண்கள் ஆயிரத்தாய் தாள்கள் ஆயிரத்தாய் பேர்கள் ஆயிரத்தாய் - [4]முன்பு இழவாலே கூப்பிட்டவர் தரித்துப் பிரதியுபகாரத்திலே இழிந்தபடியைக் கண்டு, அதனாலே அவனுக்குப் பிறந்த பௌஷ்கல்யத்தைப் பேசுகிறார். [5]உபகாரத்தின் நினைவாலே இவருடைய ஆத்தும வஸ்து தானும் தோளும் ஆகத் தளிர்த்தாற்போலே, எப்பொழுதும் ஒரு தன்மையதான அவன் வடிவும் நூறு கிளைகள் ஆயிற்று. [6]'பிறப்பு இறப்புகளில் உழன்று

1. 'ஆயின், இங்கு 'உயிரை அறவிலை செய்தனன்' என்னும் இது, மேலே கூறிய பாரதந்திரிய சொரூபத்தோடு முரணாகாதோ?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'எனதாவி' என்று தொடங்கி. 'எனதாவி' என்பது, திருவாய். 2. 3 : 4. 'மனமும்' என்பது, திருவாய். 8. 1 : 8.

2. அநந்யார்ஹமாம்படி - வேறு ஒருவர்க்கு உரியது ஆகாதவாறு உனக்கே உரியதாம்படி.

3. விஜ்வரன்-ஜ்வரம் இல்லாதவன். இது, ஸ்ரீராமா. பாலா. 1 : 85.

4. 'தோள்கள் ஆயிரத்தாய்' என்று தொடங்கி வர்ணிப்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'முன்பு' என்று தொடங்கி. பௌஷ்கல்யம் - நிறைந்த தன்மை.

5. 'திருமேனி, ஒரே தன்மையதாய் இருக்க, பல உறுப்புகளாகப் பணைக்கக் கூடுமோ?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'உபகாரத்தின் நினைவாலே' என்று தொடங்கி.

6. 'உத்தியே அன்றிக்கே, பிரமாணங்கள் கூறுவதாலும் பொருந்தும்' என்கிறார், 'பிறப்பு' என்று தொடங்கி. அவாப்த

திரிகின்ற ஓர் ஆத்துமாவைப் பெற்றதனால் அவாப்த சமஸ்த காமனான அவன் இப்படி உவகையன் ஆனான் என்கிற இது கூடுமோ?' என்னில், 'சக்கரவர்த்தியான க்ஷத்திரியனுக்கு ஓர் உயர்த்தி உண்டு என்று, தன் காதலுக்கு உரிய மனைவி பக்கலிலே ஆசை இன்றிக்கே ஒழியுமோ? அவாப்த சமஸ்த காமனாய் இருக்கும் தன்மையும் பிரமாணத்தாலே சித்தித்ததாய், அடியார்களிடத்தில் [1]வாத்ஸல்யமும் பிரமாண பிரசித்தமானால் அப்படியே கொள்ளுமத்தனை அன்றோ? [2]எனக்கு உவகையைப் பிறப்பித்து, அந்த உவகையைக் கண்டு அதனாலே தான் இப்படி விரிந்தவன் ஆவதே!' என்று கொண்டாடுகிறார். தமியனேன் - [3]இவன் சொரூபத்திலும் அடியார்கட்குப் பரதந்திரப்பட்டிருக்கும் தன்மையிலும் ஐயம் கொண்ட போதை வெறுமையை நினைத்துச் சொல்லுகிறார். பெரிய [4]அப்பனே - செய்த உபகாரம், ஓர் அளவு பட்டு இருந்தது இல்லையே! அன்றிக்கே 'என் பக்கல் ஒரு நன்மை உண்டாய்ச் செய்தாய் அல்லை அன்றோ? சம்பந்தத்தாலே செய்தாயத்தனை அன்றோ?' என்னுதல். (10)

783

**பெரிய அப்பனைப் பிரமன் அப்பனை**
**உருத்திரன் அப்பனை முனிவர்க்கு**
**உரிய அப்பனை அமரர் அப்பனை**
**உலகுக்குஓர் தனிஅப்பன் றன்னை**
**பெரியவண் குருகூர் வண்சட கோபன்**
**பேணின ஆயிரத் துள்ளும்**
**உரியசொல் மாலை இவையும்பத்து; இவற்றால்**
**உய்யலாம் தொண்டீர்நங் கட்கே.**

---

சமஸ்த காமன் - விரும்பப்படுகின்ற பொருள்கள் எல்லாவற்றாலும் நிறைவு பெற்றவன்.

1. வாத்ஸல்யம்-பசு, தன் கன்றினிடத்திலுள்ள தோஷங்களைப் போக்கியமாகக் கொள்ளுமாறு போன்று, இறைவனும் அடியார்களிடத்திலுள்ள குற்றங்களைக் குணமாகக் கொள்ளுகைக்கு அடியான ஒரு குணம்; அன்பு. வத்ஸம் - கன்று.

2. 'தோள்கள் ஆயிரத்தாய்' என்பது போன்று விளிப்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'எனக்கு' என்று தொடங்கி.

3. 'இப்போது ஒரே உவகை மயமாய் இருக்க, 'தமியனேன்' என்கிறது என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'இவன் சொரூபத்திலும்' என்று தொடங்கி.

4. 'அப்பன்' என்பதற்கு, இரண்டு பொருள். அந்த இரண்டு பொருள்களையும் முறையே அருளிச்செய்கிறார், 'செய்த உபகாரம்' என்று தொடங்கியும், 'என் பக்கல்' என்று தொடங்கியும்.

**பொ - ரை :** 'இவ்வுலகம் மேலுலகம் என்னும் இரண்டு உலகங்கட்கும் தலைவனும் பிரமனுக்குத் தமப்பனும் சிவபெருமானுக்குத் தமப்பனும் முனிவர்கட்கு உரிய தமப்பனும் தேவர்கட்குத் தமப்பனும் உலகங்கட்கு எல்லாம் ஒப்பற்ற தனித்த தமப்பனுமான சர்வேஸ்வரன் விஷயமாக, பெரிய வளப்பம் பொருந்திய திருக்குருகூரில் அவதரித்த வண்மையையுடைய ஸ்ரீ சடகோபராலே விரும்பி அருளிச்செய்யப்பட்ட ஆயிரம் திருப்பாசுரங்களுள்ளும் உரிய சொல் மாலையாகிய இவையும் பத்து; தொண்டீர்! இவற்றால் நீங்கள் உய்வு பெறலாம்,' என்றவாறு.

**வி - கு :** நங்கட்கு - உங்களுக்கு.

**ஈடு :** முடிவில், [1]இத்திருவாய்மொழியிற்சொன்ன அர்த்தத்தைச் சுருக்கமாகச் சொல்லி, 'இதனைக் கற்கின்றவர்கள் சர்வேஸ்வரனை அடைந்து உஜ்ஜீவிக்கலாம்,' என்கிறார்.

பெரிய அப்பனை - [2]உபயவிபூதிகளையுமுடையவனை. பிரமன் அப்பனை - பதினன்கு உலகங்கட்கும் ஈஸ்வரனான பிரம்மனுக்குத் தந்தையானவனை. உருத்திரன் அப்பனை - [3]பிரமன் புத்திரனான உருத்திரனுக்கும் நிர்வாஹகனானவனை. சனகன் முதலிய மஹரிஷிகளுக்குப் பிரஹ்ம பாவனையே ஆகையாலே '**முனிவர்க்கு உரிய அப்பனை**' என்கிறது. 'உரிய' என்று அணுமையைச் சொன்னபடி. அமரர் அப்பனை - தேவர்களுக்குத் தந்தையானவனை. உலகுக்கு ஓர் தனி அப்பன்தன்னை - 'இப்படிப் பிரித்துச் சொல்லுகிறது என், எல்லா உலகங்கட்கும் ஒரே நிர்வாஹகன் ஆனவனை? [4]'எல்லாப் பிராணிகட்கும் அழியாத

---

1. 'இவற்றால் உய்யலாம்' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். இத்திருவாய்மொழியிற்சொல்லப்பட்ட அர்த்தமாவது, அடியார்கட்குப் பரதந்திரப்பட்டிருக்கும் தன்மையும், தன்னினின்றும் வேறுபட்ட எல்லாப் பொருள்களும் தனக்குச் சரீரமாகத் தான் சரீரி ஆக இருக்கும் தன்மையும் ஆம்.

2. உபய விபூதி - லீலா விபூதியும் நித்திய விபூதியும்.

3. 'நான்முகனை நாரா யணன்படைத்தான் நான்முகனும்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்.'
'மலர்வந்த நான்முகன் திருமைந்தன்; அவன்மைந்தன் [மதிருடி'
என வரும் பிரமாணங்களைக் காண்க.

4. 'ஒரே நிர்வாஹகன் ஆனவன்' என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'எல்லாப் பிராணிகட்கும்' என்று தொடங்கி. 'பூதாநாம் யஃ அவ்யயஃ பிதா' என்பது, மஹாபாரதம், சஹஸ்ரநாம அத்.

தந்தை' என்றே அன்றோ இருப்பது? [1]இப்போது இவை சொல்லுகிறது என்?' என்னில், நிதி எடுத்தவன், 'இன்னது கண்டேன், இன்னது கண்டேன்' என்னுமாறு போலே, சொரூபத்திலும் குணத்திலும் ஐயம் கொண்ட போது இழந்தாராய் இருந்தனவற்றைப் பெறுகையாலே, இவற்றைப்பிரித்துச் சொல்லுகிறார். [2]'முனிவர்க்குரிய அப்பனை' என்றதனால், அடியார்கட்குப் பரதந்திரப்பட்டிருக்கும் தன்மையைச் சொல்லுகிறது.

பெரிய வண் குருகூர் - [3]காப்பவன் தாழ்த்தவாறே ஐயம் கொள்ளுகையும், செய்ந்நன்றியின் நினைவாலே உவகையர் ஆகையுமாகிற இவற்றுக்கு அடி, அவ்வூரில் பிறப்பு என்கை. வண் சடகோபன் - மாநச அனுபவமாத்திரமாய் விடாதே, பிரபந்தமாகச் செய்து கொடுத்த ஔதார்யம். பேணின ஆயிரத்துள்ளும் உரிய சொல் மாலை இவையும் பத்து - அவனைத் தாம் ஆசைப்பட்ட படியைச் சொன்ன பத்து. [4]'வேதவாக்குகள் எந்த ஆனந்த குணத்தினின்றும் சொல்லமாட்டாது மீண்டனவோ' என்கிறபடியே, மீளுகை அன்றிக்கே, பகவானுடைய குணங்களுக்கு நேரே வாசகமாய் இருத்தலின், '**உரிய சொல் மாலை**' என்கிறது. தொண்டீர் நங்கட்கு இவற்றால் உய்யலாம் - அநாதிகாலம் பகவானிடத்தில் விருப்பு இல்லாதவர்களாய், வேறு விஷயங்களிலே ஈடுபட்டவர்களாய், [5]'இல்லாதவன்

---

1. 'இப்போது இவை' என்றது, 'பெரிய அப்பன்' என்று தொடங்கிச் சொன்னவற்றை.

2. சொரூபத்தில் அதிசங்கை தீர்ந்தமைக்குப் பதங்கள் வெளிப்படையாய் இருப்பது போன்று, அடியார்களிடத்தில் பாரதந்திரனாக இருப்பதில் அதிசங்கை தீர்ந்தமைக்குப் பதங்கள் வெளிப்படையாக இல்லாமையாலே, அது இன்னது என்று தெளிவாக அருளிச்செய்கிறார், 'முனிவர்க்குரிய' என்று தொடங்கி.

3. திருநகரியின் சம்பந்தம் சொல்லுகிறதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'காப்பவன்' என்று தொடங்கி.

4. 'யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ' என்பது, தைத்திரீய ஆனந். 9 : 1.

5. '**அஸந்நேவ ஸ பவதி அஸத் ப்ரஹ்மேதி வேதசேத்**
**அஸ்தி ப்ரஹ்மேதி சேத் வேத ஸந்தமேநம் ததோ விதுః இதி**'
என்பது, தைத்திரீய ஆன. 6.

ஆகின்றான்,' என்கிறபடியே, இல்லாதவர்களைப்போல இருக்கிற [1] நுங்கட்கு 'இருக்கின்றவனை அறிகிறார்கள்' என்கிறபடியே, உஜ்ஜீவிக்கலாம். (11)

## திருவாய்மொழி நூற்றந்தாதி

**தேவன் உறைபதியில் சேரப் பெருமையால்**
**மேவுமடி யார்வசனும் மெய்ந்நிலையும்—யாவையும்தான்**
**ஆம்நிலையும் சங்கித்து அவைதெளிந்த மாறன்பால்**
**மாநிலத்தீர் நங்கள் மனம்.** (71)

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. 'நங்கட்கு' என்பதற்கு, 'நுங்கட்கு' என்று பொருள் அருளிச் செய்கிறார்.

'செங்கயல்போல் கருநெடுங்கண் தேமருதா மரைஉறையும்
நங்கைஇவர் எனநெருநல் நடந்தவரோ நாம்என்ன'

என்ற இடத்தும் 'நாம்' என்பது 'நீர்' என்ற பொருளில் வந்திருத்தல் காண்க. கம்பராமா. சூர்ப்பண. 119.

# இரண்டாந்திருவாய்மொழி—'நங்கள்'

## முன்னுரை

**ஈடு :** [1]மேல் திருவாய்மொழி பிராபகத்திலே நோக்கு; இத்திருவாய்மொழி பிராப்பியத்திலே நோக்காய் இருக்கிறது. [2]மேலே அவன் குணங்களிலும் சொரூபத்திலும் ஐயம் கொண்டு தெளிந்து, 'வணங்குமாறு அறியேன்' என்று தம் தலையில் ஒரு சாதனத்தைச் செய்வதற்கு உரிய தகுதி இல்லாமையைத் தெரிவித்து, 'யானும் நீதானே யாவதோ மெய்யே' என்று தம் பாரத்தை அவன் பக்கலிலே வைத்தமையைச் சொல்லி, இப்படிப் பிராசங்கிகமாக '**அவனே பிராபகன்**' என்னும் இடத்தை அறுதியிட்டார்; [3]அவனே பிராபகனும் இடத்தில் பேற்றுக்குக் கால தாமதத்திற்குக் காரணம் இல்லையாய் இருக்க, அவன் வந்து முகம் காட்டாது ஒழிதற்குக் காரணம் உண்டாக வேண்டும் என்று பார்த்தார்; அதில் அவன் பக்கல் பார்க்கலாவது ஒன்று இல்லை; 'இதற்கு அடி நம் பக்கலிலே ஆகவேண்டும்' என்றும் பார்த்தார்; [4]'என்னுடைய பாபமே சொல்ல முடியாதபடி மிகுதியும் இருக்கிறது; இதில் சந்தேகம் இல்லை,' என்றாளே அன்றோ பிராட்டி ?

இவரும் அப்படியே, 'பல நாள் அலைந்து திரிந்து கண்டவை எல்லாவற்றிலும் ருசி பண்ணிப் போந்தோம்; நம்முடைய முன்னைய செயல்களையும் நமக்கு இப்போது உள்ள அளவையும் முற்றறிவினனான சர்வேஸ்வரன்

---

1. மேல் திருவாய்மொழிக்கும் இத்திருவாய்மொழிக்கும் கருத்து அருளிச்செய்கிறார், 'மேல் திருவாய்மொழி' என்று தொடங்கி.

2. 'மேல் திருவாய்மொழிக்குக் கருத்து, பிராபகமானபடி யாங்ஙனம்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'மேலே' என்று தொடங்கி. பிராசங்கிகம் - இடைப்பிற வரல்.

3. மேல் திருவாய்மொழிக்கும் இத்திருவாய்மொழிக்கும் இயைபு அருளிச்செய்கிறார், 'அவனே' என்று தொடங்கி.

4. 'நம் பக்கலிலே ஆக வேண்டும்' என்றதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'என்னுடைய' என்று தொடங்கி.

'மமைவ துஷ்க்ருதம் கிஞ்சித் மஹத் அஸ்தி நஸம்ஶய:
ஸமர்தாவபி தௌ யந்மாம் நாவேக்ஷேதே பரந்தபௌ'

என்பது, ஸ்ரீராமா. சுந். 38 : 48.

அறியாமை இல்லை; நாம் அறியாது இருக்க, அவன் அறிய அவன் பக்கல் ருசியிலே நமக்குக் குறை உண்டாக வேண்டும்' என்று பார்த்து, 'அது உண்டாகவுமாம், இல்லையாகவுமாம் : புறம்பு உண்டானவற்றில் ருசி இல்லை என்னும் இடத்தை அவன் திருவுள்ளத்லே படுத்துவோம்,' என்று பார்த்து, [1]பிராப்பியத்துக்குத் தடையாக உள்ளனவற்றிலும், பிராபகத்திற்குத் தடையாக உள்ளவர்களிடத்திலும் தமக்கு ருசி இல்லாமையை அந்யாபதேசத்தாலே அருளிச்செய்கிறார்.

[2]சர்வேஸ்வரனோடு கலந்து பிரிந்தாள் ஒரு பிராட்டி, அவன் தானே வரக் கண்டு இருக்கை அன்றிக்கே, அபிஸாரிகையாய் அவன் இருந்த தேசத்து ஏறப்போவதாக ஒருப்பட, இதனை நினைத்த தோழிமார் தொடக்கமானார், 'உனக்கு இது ஆகாதுகாண்' என்று ஹிதம் சொல்லி மீட்கப் பார்க்க, அவர்களைக் குறித்து, தோழிமார் தொடக்கமானவர்களிலும் மற்றும் உள்ளவர்களிலும் நசை இல்லாமையை அவர்களுக்கு அறிவிக்கிற பாசுரத்தாலே தமக்கு நசை இல்லாமையை அவன் திருவுள்ளத்திலே படுத்துகிறார்.

784

**நங்கள் வரிவளை ஆயங் காளோ!**
**நம்முடை ஏதலர் முன்பு நாணி**
**நுங்கட்கு யான்ஒன்று உரைக்கும் மாற்றம்**
**நோக்குகின் றேன்எங்கும் காண மாட்டேன்;**
**சங்கம் சரிந்தன, சாய்இ ழந்தேன்;**
**தடமுலை பொன்னிற மாய்த்த ளர்ந்தேன்;**
**வெங்கண் பறவையின் பாகன் எங்கோன்**
**வேங்கட வாணனை வேண்டிச் சென்றே.**

பொ - ரை : அழகிய வளையல்களைத் தரித்திருக்கின்ற என் தோழிமீர்காள்! நம்முடைய பகைவர்களாகிய தாய்மார் முன்னே கூறுதற்கு நாணம் கொண்டு, உயிர்த்தோழிமீர்களான உங்களுக்கு

---

1. பிராப்பியத்துக்குத் தடையாக உள்ளவை, கிளி முதலானவை. பிராபகத்திற்குத் தடையாக உள்ளவர், தாயார் முதலானோர். அந்யாபதேசம் - வேறு ஒரு வகையாலே பேசுதல்.

2. வேறு ஒரு வகையாலே பேசும் விதத்தை விரித்து அருளிச்செய்கிறார், 'சர்வேஸ்வரனோடு' என்று தொடங்கி. அபிஸாரிகை - நாயகன் குறிப்பிட்ட இடத்திற்கு அவனை விரும்பிச் செல்பவள்.

மட்டும் உரைக்கக் கூடிய ஒரு வார்த்தையைப் பார்க்கின்றேன்; எல்லாவழியிலும் சொல்லும் வகையைக் காண்கிறேன் இல்லை; கொடிய கண்களையுடைய கருடப்பறவையை நடத்துகின்றவனுைய நம் தலைவனுன வேங்கடநாதனை விரும்பிச் சென்றேன்; சென்றதனால், சங்கு வளையல்கள் சரிந்துவிட்டன; ஒளியை இழந்துவிட்டேன்; பெரிய தனங்களும் பொன்னிறமாக, உடலும் தளர்ந்தேன்.

வி-கு: 'நங்கள்' என்பது, 'வளை'க்கு அடைமொழி. ஆயங்களுக்கு அடையாக்கலுமாம். 'நாணி நோக்குகின்றேன்' என்க. 'நோக்குகின்றேன்' என்பது, நோக்கல் நோக்கம். சென்று - செல்ல; எச்சத்திரிபு. 'செல்ல, சரிந்தன, இழந்தேன், தளர்ந்தேன்' என்க.

இத்திருவாய்மொழி, எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஈடு: முதற்பாட்டு. [1]தோழிமார்கள், 'உகவாதார் முன்பே அன்றோ நாண வேண்டுவது? எங்கள் முன்னே நாண வேண்டுமோ! உனக்கு ஓடுகிற நிலையைச் சொல்லு,' என்ன, 'பிறர்க்கு மறைத்து உங்களுக்குச் சொல்லலாம் வார்த்தை, பார்த்த இடத்து ஒன்றும் காண்கின்றிலேன்,' என்கிருள்.

நங்கள் வரிவளை - [2]'முன்பு உங்களோடு என்னோடு வாசி அற எல்லார்க்கும் உண்டான வளை' என்னுதல். அன்றிக்கே, [3]'இன்ப துன்பங்கள் நம் இருவருக்கும் ஒன்றே' என்கிறபடியே, 'இன்ப துன்பங்கள் ஒன்ருகச் சொல்லிப் போந்த நீங்கள், அநுஷ்டானத்தில் வந்தவாறே வேறுபடுவதே!' என்கிருள் என்னுதல். 'இப்போது செய்கையில் வேற்றுமை என்?' என்ன, 'கைமேலே கண்டிலேமோ? [4]நான் சங்கை அற்று இருக்கின்றேன்;

---

1. பாசுரம் முழுதினையும் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிருர்.

2. 'நங்கள்' என்பதனை, 'வளைக்கு' அடைமொழி ஆக்கி, 'பிரிந்திருக்கும் நிலையிலே வளையல் தங்கியிருக்குமோ?' என்னும் வினுவினைத் திருவுள்ளம் பற்றி அதற்கு விடை அருளிச்செய்கிருர், 'முன்பு' என்று தொடங்கி.

3. 'நங்கள்' என்பதனைத் தோழிக்கு அடையாக்கிப் பொருள் அருளிச்செய்கிருர், 'இன்ப துன்பங்கள்' என்று தொடங்கி. இப்பொருளில் 'நங்கள்' என்பது, தனித்தன்மைப்பன்மை.

'த்வம் வயஸ்யஃ அஸி மே ருத்யஃ ஹி ஏகம் துக்கம் ஸுகம் ச நௌ
ஸுக்ரீவோ ராகவம் வாக்யம் இதி உவாச ப்ரஹ்ருஷ்டவத்'
என்பது, ஸ்ரீராமா. கிஷ். 5 : 18.

4. மேல் வாக்கியத்தை ரசோத்தியாக விவரணம் செய்கிருர், 'நான்' என்று தொடங்கி.

நீங்கள் சங்கையுடையீர்கோளாய் இருக்கின்றீர்கோள் அல்லீரோ?' வரிவளை - 'வரியையுடைய வளை' என்னுதல், 'அழகிய வளை' என்னுதல். [1]இவளைத் தரிப்பிப்பதற்காக அவர்களும் வருந்தித் தரித்திருப்பார்கள் அன்றோ? [2]பிராட்டியைப் பிரிந்த இடத்தில் பெருமாளைக்காட்டிலும், தம்முடைய காவற்சோர்வாலே வந்தது என்று தளர்த்தி இரட்டித்து இருக்கச் செய்தேயும், பெருமாள் தளருவர் என்று தம்முடைய தளர்த்தி தோற்றுதபடி இளைய பெருமாள் தரித்திருந்தாற்போலே இவர்களும் தரித்திருப்பர்கள் வளையை. ஆயங்காளோ - [3](தோழிமாரிலும் தரம் உண்டாய் இருக்க, இப்போது எல்லோரும் ஒருபடிப் பட்டிருக்கிறுர்கள்.) தோழிமீர்காள்! ஓகாரம், துக்கத்தின் மிகுதியைக் குறிக்க வந்தது. [4]அவர்களை விளித்தவள், வார்த்தை சொல்லுவதற்கு முன்னே துக்கம் உற்றவள் ஆகிறுள்.

'இந்தத் துக்கத்திற்குக் காரணத்தைப் புறம்பு உள்ளார்க்கு மறைத்தாயாகிலும் எங்களுக்குச் சொல்ல வேண்டாவோ? உனக்கு ஓடுகிற நிலையைச் சொல்லாய்,' என்ன, நம்முடை ஏதலர் முன்பு நாணி - பகைவர்கள் முன்பு நாணம் கொண்டு. [5]தோழிமார்கள் இப்போது ஹிதம் சொல்லி மீட்கப் பாராநின்றுர்களாகிலும், பெறுமிடத்தில் விழுக்காட்டில் ஒத்திருக்கையாலே 'நம்முடை ஏதலர்' என்று உளப்படுத்துகிறுள். [6]இவளுக்குப் பகைவர் இலர் அன்றோ? ஹிதம் சொல்லி மீட்கப் பார்க்கிற தாய்மார்கள் அல்லவோ பகைவர்கள்? ஏதலர் - பகைவர். நுங்கட்கு -

1. 'இவள், கையில் வளை இன்றிக்கே இருக்க, அவர்கள் தரித்திருத்தல் சினேகத்திற்குக் குறை அன்றோ?' என்ன, 'இவளை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறுர்.

2. இதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறுர், 'பிராட்டியை' என்று தொடங்கி.

3. 'ஆயங்காளோ' என்ற பன்மைக்குப் பொருள் அருளிச் செய்கிறுர், 'தோழிமாரிலும்' என்று தொடங்கி.

4. துக்கத்தின் மிகுதியை அருளிச்செய்கிறுர், 'அவர்களை' என்று தொடங்கி.

5. 'என்னுடை ஏதலர்' என்னுமல், மீட்கப் பார்க்கிற தோழிமாரையும் உளப்படுத்திக்கொண்டு, 'நம்முடை ஏதலர்' என்கிறது என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறுர், 'தோழிமார்கள்' என்று தொடங்கி.

6. 'இப்போது 'ஏதலர்' என்றது யாரை?' என்ன, 'இவளுக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறுர்.

தோழிமாரான உங்களுக்கு. யான் ஒன்று உரைக்கும் மாற்றம் நோக்குகின்றேன் - நான் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும் என்று ஆராய்ந்து பாராநின்றேன். எங்கும் காணமாட்டேன் - இதற்கு ஒரு பாசுரம் இட்டுச் சொல்ல வேண்டும் என்று பார்த்த இடத்து ஒருபடியாலும் காண்கின்றிலேன்.

'மாட்டேன் என்கிறது என்? சிலர்க்கு மறைத்து, நம்பத்தக்கவர்கட்குச் சொல்லத் தட்டு என்?' என்ன, சங்கம் சரிந்தன - யான் இதனை யார்க்கு மறைத்து யார்க்கு வெளியிடுவது? [1]'உலகமே அழிந்தது' என்றது போலேகாணும் இருக்கிறது. [2]இவளைக் கிடையாதபோது நாயகன் இலன்; நாயகன் இல்லாதபோது உபய விபூதியும் இல்லை. என்றது, 'இவள் கையும் வளையுமாய் இராத அன்று நாயகன் உளன் ஆகமாட்டான்: இருவருமான சேர்த்தியில் உண்டாகக் கூடிய உபய விபூதியும் அழியும்,' என்றபடி. சாய் இழந்தேன் - [3]அவனோடே கலந்து பெற்ற தாய் அவன் வருமளவும் தரிக்கைக்குக் கைம்முதலான எழிலையும் இழந்தேன். தட முலை பொன் நிறமாய்த் தளர்ந்தேன் - [4]அவன் வந்தாலும் பிரயோஜனம் இல்லாதபடி அவன் கைம்முதலும் அழிந்தது. அநுபவிக்கும் நாயகனால் உண்டு அறுக்க ஒண்ணாத பரப்பையுடைய முலையாதலின் 'தடமுலை' என்கிறது. பொன்நிறம் - பசலை நிறம். [5] நல்ல நிலம் மணலீடாய்ப் போமாறு போலே. 'இழந்தவை வந்தாலும் தொங்குகைக்கு ஆஸ்ரயம் இல்லை' என்பாள், '**தளர்ந்தேன்**' என்கிறாள்.

---

1. 'கழன்றன' என்னுமல், 'சரிந்தன' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'உலகமே' என்று தொடங்கி.

'ஜகத் அஸ்தமிதம்' என்பது, ஸ்ரீ விஷ்ணு புரா.

2. 'அழிந்தது எப்படி?' என்ன, 'இவளைக் கிடையாத போது' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. 'இழந்தேன்' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'அவனோடே' என்று தொடங்கி.

4. 'தடமுலை பொன்னிறமாய்' என்றதற்குக் கருத்து அருளிச் செய்கிறார், 'அவன் வந்தாலும்' என்று தொடங்கி.

5. 'தடமுலை' என்று முலையினுடைய இனிமையைச் சொல்லி, 'பொன்நிறமாயிற்று' என்றதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார், 'நல்ல நிலம்' என்று தொடங்கி. ஆஸ்ரயம்-பற்றுக்கோடான சரீரம்.

வெம் கண் பறவையின் பாகன் எம் கோன் - இழந்த இழவுக்குக் காரணம் சொல்லுகிறது: வெம் கண் பறவை - வெவ்விய கண்களையுடைய பெரியதிருவடி. 'வரும் இடத்தில் உண்டாகும் தடைகளையும் போக்கிக்கொடு வரும்' என்னுதல். 'கலவிக் காலத்திலே பிரித்துக்கொடு போம்' என்னுதல். [1]'அக்குரூரன் குரூர மனத்தை யுடையவன்' என்னுமாறு போலே. பறவையின் பாகன் எம்கோன் - பெரியதிருவடி முதுகில் இருப்பைக் காட்டி ஆயிற்று, என்னை அநந்யார்ஹை ஆக்கிற்று. வேங் கடவாணனை - [2]பரமபதத்தில் இருப்பை ஆசைப்பட்டேன் அல்லேன்; நமக்குக் காட்சி தருகைக்கு வர நின்ற இடத்தே. வேண்டிச் சென்று - நம்மை வேண்டி வந்தவனை நாம் வேண்டிச் சென்று; 'நாம் ஆசைப்பட்டுச் சென்று' என்றபடி. [3]அவன் தான் வரக் கண்டு இருக்கை அன்றிக்கே, அவன் இருந்த தேசத்தளவும் சென்று விரும் பியவை பெருமையாலே, சங்கம் சரிந்தன. அன்றிக்கே, [4]சென்று - 'பால் சென்றாற்போலே சென்று அற்று' என்றுமாம். (1)

785

*வேண்டிச் சென்றுஒன்று பெறுகிற் பாரில்*
*என்னுடைத் தோழியர் நுங்கட் கேலும்*
*ஈண்டுஇது உரைக்கும் படியை அந்தோ*
*காண்கின்றி லேன்இட ராட்டி யேன்நான்!*
*காண்தகு தாமரைக் கண்ணன் கள்வன்*
*விண்ணவர் கோன்நங்கள் கோனைக் கண்டால்*
*ஈண்டிய சங்கும் நிறைவும் கொள்வான்*
*எத்தனை காலம் இளைக்கின் றேனே!*

**பொ - ரை:** என்னிடத்தில் வந்து ஒன்றை விரும்பிப் பெறு மவர்களின் தலைமை பெற்றிருக்கின்ற என் தோழிமீர்காள்! உங்க

---

1. 'வெம்கண்' என்றதற்கு அருளிச்செய்த இரண்டாவது பொருளுக்குப் பிரமாணம் காட்டுகிறார், 'அக்குரூரன்' என்று தொடங்கி. 'அக்ரூரः க்ரூர ஹ்ருதயः' என்பது, ஸ்ரீ விஷ்ணு புரா.

2. 'வேங்கடவாணனை' என்றதற்குக் கருத்து அருளிச்செய் கிறார், 'பரமபதத்தில்' என்று தொடங்கி.

3. 'சென்று' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'அவன் தான்' என்று தொடங்கி.

4. இரண்டாவது பொருளில், 'இளைத்து' என்பது பொருள்.

ளுக்கும்கூட இந்த இடத்தில் இப்பொழுது ஓடுகிற நிலைமையை உரைக்கும் தன்மையை இடராட்டியேனாகிய நான் ஐயோ காண்கின்றிலேன்! காணத்தக்க தாமரைக்கண்ணனும் கண்ணபிரானும் கள்வனும் நித்திய சூரிகளுக்குத் தலைவனுமான என் நாயகனைக் கண்டால் அவனிடத்தில் சேர்ந்த சங்கையும் நிறையினையும் கொள்வதற்கு எத்துணைக் காலமாகத் தளர்கின்றேன்!

**வி - கு:** சென்று - தன்மையின்கண் வந்தது. 'இடராட்டியேன் நான் காண்கின்றிலேன்' என்க. நிறை - 'காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம்' என்பர். 'நிறைஎனப் படுவது மறை பிறர் அறியாமை' என்பது கலித்தொகை.

**ஈடு:** இரண்டாம் பாட்டு. [1]'இப்படி ஆனாலும் அந்தரங்கமானவர்களான எங்களுக்கு நோவில் சொல்லலாகாதது உண்டோ? சொல்லாய்' என்ன, 'துக்க அனுபவத்தால் வந்த இளைப்பின் மிகுதியாலே உங்களுக்குச் சொல்லும் பாசுரம் அறிகின்றிலேன்' என்கிறாள்.

சென்று வேண்டி ஒன்று பெறுகிற்பாரில் என்னுடைத் தோழியர் நுங்கட்கேலும் - என் பக்கலிலே வந்து ஒன்றை விரும்பிப் பெறுமவர்களில் தலையான வரிசையையுடைய தோழிமாரான உங்களுக்காகிலும். 'என்னுடைத் தோழியர்' என்றது, உயிர்த்தோழியரை. 'சென்று' என்றது, 'வந்து' என்றபடி. அங்ஙன் அன்றிக்கே, 'வேண்டிச்சென்று ஒன்று [2]பெறுகிற்பார் இல்' என்று பதத்தைப் பிரித்து நிறுத்தி, 'அவனிடத்தில் ஒன்று விரும்பிச் சென்றாரில் விரும்பியது ஒரு பொருளைப் பெற்றார் இலர்' என்று பொருள் கூறி, [3]'எல்லாப் பலன்களையும் கொடுக்கிறவர் அன்றோ விஷ்ணு?' என்றும், [4]'வேண்டிற்று எல்லாம் தரும்' என்றும் வருகிற இடமெல்லாம் வார்த்தை அளவே ஆம் என்று ஒரு தமிழன் பொருள் கூறினான். ஈண்டு - இப்போது. [5]முன்பு எல்லாம் சொல்லிப் போந்தேனே

---

1. 'ஈண்டு இது உரைக்கும்படியைய அந்தோ காண்கின்றிலேன் இடராட்டியேன்' என்றவற்றைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. தமிழ்ப் புலவருடைய நிர்வாஹத்தில், 'பெறுகிற்பார் - பெற்றவர், இல் - இலர்' என்பது பொருள்.

3. 'ஸகல பலப்ரதோஹி விஷ்ணுঃ'
என்பது, ஸ்ரீ விஷ்ணு தர்மம். மாங்கல்யஸ்தவம்.

4. திருவாய். 3. 9 : 5.

5. 'ஈண்டு' என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'முன்பு எல்லாம்' என்று தொடங்கி.

யாகிலும் இப்போது சொல்லலாவது காண்கின்றிலேன். இது - [1]எல்லாவற்றையும் பாசுரம் இட்டுச் சொல்லிப் போந்தேனேயாகிலும், இது சொல்லுகைக்குப் பாசுரம் காண்கின்றிலேன்.

உரைக்கும்படியை - [2]நெஞ்சிலே விஷம் ஊர்ந்தாற் போலே ஊராநின்றது; பாசுரம் சொல்லலாவது இல்லை. அந்தோ காண்கின்றிலேன் - [3]எனக்கு ஓடுகின்ற நிலையை உங்களுக்குச் சொல்லி அகஞ்சுரிப்படுத்தித் தரித்திருப்பதற்குக் கேட்கிற உங்களிலும் எனக்குத் தேட்டமாய் இருக்க, பாசுரம் காண்கின்றிலேன்; [4]'பிரலாபத்தாலேயே தரிக்கப்படுதல்' என்கிறபடியே. இடராட்டியேன் நான் - நோவாட்டியேன் நான். என்றது, 'என் இடருக்கு அன்றிக்கே, 'சொல்லு, சொல்லு' என்று அலைக்கிற உங்களுக்கு அன்றிக்கே, துக்கப்படுகிற நான்' என்றபடி.

காண் தகு தாமரைக் கண்ணன் - காணத் தக்கிருந்துள்ள திருக்கண்களையுடையவன். என்றது, 'எப்பொழுதும் காண்பதற்கு உரிய கண்கள்' என்றபடி. [5]மலர்த்தி, செவ்வி, குளிர்த்தி, நாற்றம் இவற்றால் தாமரைக்கு ஒத்தனவாய் இருக்கை. கள்வன் - [6]நோக்காலே தன் செல்லாமையைக் காட்டி, என் ஆத்துமாவையும் ஆத்துமாவோடு சம்பந்தப்பட்ட பொருள்களையும் கொள்ளை கொண்டவன். விண்ணவர்கோன் நங்கள் கோனை - நித்திய சூரிகளைப் போலே என்னைத் தனக்கே உரியவளாம்படி

1. 'இது' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், எல்லாவற்றையும்' என்று தொடங்கி.

2. 'உரைக்கும்படியை' என்றதற்குக் கருத்து, 'நெஞ்சிலே' என்று தொடங்கும் வாக்கியம்.

3. 'அந்தோ' என்கிறவளுடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார், 'எனக்கு' என்று தொடங்கி. அகஞ்சுரிப்படுத்தல்-குறைத்தல்,

4. 'சொல்லுதல், தரித்திருப்பதற்குக் காரணமாக இருக்குமோ?' என்ன, 'பிரலாபத்தாலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

'ப்ரலாபைரேவ தார்யதே'

என்பது, உத். ராம. சரி.

5. 'தாமரைக்கண்' என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார், 'மலர்த்தி' என்று தொடங்கி.

6. 'கள்வன்' என்றதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'நோக்காலே' என்று தொடங்கி.

ஆக்கினவன். என்றது, 'ஒரு விபூதியாகப் படுத்தின பாட்டைக் கண்டீர் என் ஒருத்தியையும் படுத்திற்று' என்றபடி. கண்டால் - காணப்பெற்றால். ஈண்டிய சங்கும் - திரண்ட வளையையும். [1]ஒரு வலம்புரி கிடந்த இடத்தே ஆயிரம் சங்குகள் சேரும். [2]'வலம்புரி ஆழியன் வேங்கட வேதியன்' அன்றோ? நிறைவும் - அடக்கத்தையும். கொள்வான் - கொள்கைக்காக [3]தன் பக்கல் தொங்காதவை எல்லாவற்றுக்கும் புகல் அங்கே என்று இருக்கிறாள். இவளுக்குக் கைம்முதல் அங்கே அன்றோ? 'இதுவாகில் உன் துணிவு, காலம் சென்றவாறே நீயே இளைத்து மீளுகிறாய்' என்ன, எத்தனை காலம் இளைக்கின்றேனே - இது சொல்லிப் [4]பகட்டக் கேட்பேனோ? இந்த ஆசையோடே எத்தனை காலம் உண்டு இளைத்துப் போருகிறது? (2)

786

காலம் இளைக்கில் அல்லால் வினையேன்
நான்இளைக் கின்றிலன் கண்டு கொண்மின்;
ஞாலம் அறியப் பழிசு மந்தேன்
நன்னுத லீர்!இனி நாணித் தானென்?
நீல மலர்நெடுஞ் சோதி சூழ்ந்த
நீண்ட முகில்வண்ணன் கண்ணன் கொண்ட
கோல வளையொடு மாமை கொள்வான்
எத்தனை காலமும் கூடச் சென்றே.

---

1. 'இவள் கையில் சங்கு, அவன் கையில் சேர்வதற்குக் காரணம் என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'ஒரு வலம்புரி' என்று தொடங்கி.

'இப்பி ஆயிரம் சூழ்ந்தது இடம்புரி என்று கூறும்
ஒப்பில்சங்கு ஆயி ரம்சூழ் உறுவலம் புரிஎன் றோதும்
அப்படி அதுவும் சூழ்ந்த சலஞ்சல மாகும் மற்றைத்
தப்பிலாச் சலஞ்ச லங்கள் சார்ந்தது பாஞ்ச சன்னியம்'

என்பது, சூடாமணி நிகண்டு, விலங்கின் பெயர். 73.

2. அவன் கையில் வலம்புரி இருப்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'வலம்புரி' என்று தொடங்கி. இது, பெரிய திருமொழி.

3. 'அவனிடத்திலே கொள்ள வேண்டும் என்கிறது என்?' என்ன, 'தன் பக்கல்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. பகட்ட - மயங்கச்செய்ய.

'இளைக்கின்றேன்; ஆதலால், உரைக்கும்படியை இடராட்டியேன் நான் காண்கின்றிலேன்; அந்தோ!' என்று கூட்டுக.

பொ - ரை: நீல நிறத்தையுடைத்தாய்ப் பரந்ததாய் நீண்டதா யுள்ள சோதியாலே சூழப்பட்டு அளவிட முடியாததாய் இருக்கிற மேகம் போன்ற நிறத்தையுடையனை கண்ணபிரான் கொண்ட அழகிய வளையோடு என் நிறத்தையும் பல காலம் கூடவே சென்றா லும் மீட்டுக்கொள்ளுவதற்கு, 'பூலோகம் எல்லாம் அறியும்படி வாசல் கடந்து சென்றாள்' என்ற பழியைச் சுமந்தேன்; நல்ல நெற்றியையுடைய தோழிமார்களே! இனி நாணித்தான் பயன் யாது? காலம் முடியுமத்தனை அல்லது, வினையேனாகிய நான் தளர்ந்து மீளமாட்டேன்; இதனை நீங்களே அனுபவத்தில் பார்த்துக் கொள்ளுங்கள்.

வி - கு: 'கொள்வான் கூடச் சென்று பழி சுமந்தேன்; இனி நாணித்தான் என்?' என்க. 'சூழ்ந்த முகில் வண்ணன்' என்க.

ஈடு: மூன்றாம் பாட்டு. [1]'நாங்கள் சொல்ல மீண்டிலையாகிலும், எட்ட ஒண்ணாத விஷயமாகையாலே நாள் சென்றவாறே நீயே மீளுதி: எங்கள் வார்த்தைக்கு மீண்டாயாக அமையாதோ?' என்ன, 'காலம் என்னும் ஒரு பொருள் முடிவு பெறிலும் நான் அவனைக் கண்டு அல்லது விடேன்,' என்கிறாள்.

காலம் இளைக்கில் அல்லால் - [2]'பெரிய காலமானது நித்தியமாகும்; இதற்கு முடிவு இல்லை' என்கிற காலம் முடிந்து போமித்தனை அல்லது நான் இளைத்து மீளுகின்றிலேன். [3]'பரமபதத்தில் இந்தக் காலம் பிரபு ஆக இல்லை' என்கிறபடியே, காலத்துக்கும் அவ்வருகான விஷயத்தை விளாக்குலை கொண்ட காதலையுடைய நான் மீளுவனோ?' என்பாள், '**நான் இளைக்கின்றிலன்**' என்கிறாள். 'கிடைக்க மாட்டாதது என்றாலும் மீள ஒண்ணாத விஷயத்திலே கை வைக்கும்படியான பாபத்தைப் பண்ணினேன்' என்பாள், '**வினையேன்**' என்கிறாள். அன்றிக்கே, 'நீங்கள் சொல்லும் வார்த்தை நெஞ்சில் படாதபடியான பாபத்தைச் செய்தேன்' என்பாள், '**வினையேன்**' என்கிறாள் என்னுதல். 'இப்போது இங்ஙனே சொன்னாயாகிலும் நீயே மேல் செய்யப்போகிறாய்' என்ன, கண்டுகொண்மின் - 'நேரே

---

1. 'காலம் இளைக்கில் அல்லால் வினையேன் நான் இருக்கின்றிலேன்' என்பதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'நீ இளையாமைக்குக் காரணம் யாது?' என்ன 'பெரிய காலமானது' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

'அநாதிர் பகவாந் கால: நாந் தோஸ்ய'

என்பது, ஸ்ரீ விஷ்ணு புரா. 1. 2 : 28.

3. 'ந கால: தத்ர வை ப்ரபு:' என்பது, ஸ்ரீ விஷ்ணு புரா. 10. 9 :

காணக்கூடிய பொருளைப் பிறர் பக்கலிலே கேட்டு அறிய வேண்டுமோ? உன் துணிவு இதுவான பின்பு எல்லாரும் ஒருசேரப் பழி சொல்லுகிறார்களே?' என்ன, ஞாலம் அறியப் பழி சுமந்தேன் - 'இன்றோ நான் பழி சுமந்தது? [1]'நாடும் இரைக்கவே' என்ற அன்றே பழி சுமந்திலேனோ? 'பழி சுமந்தேன்' என்னுமது வார்த்தையோ? பெண் தன்மைக்குரியதான நாணத்தை நோக்க வேண்டாவோ?' என்ன,

நல் நுதலீர் இனி நாணித்தான் என் - [2]நம் அழகு அழிவதற்கு முன்பு அன்றோ அது நோக்கவேண்டுவது? [3]உலகத்தில் பிரசித்தமாய்விட்டதாகில் இனி நாணி என்ன பிரயோஜனம் உண்டு? [4]உங்கள் முகத்தில் எழில் அழியாதிருக்க என் முகத்தில் எழில் குடிபோனபடி கண்டீர்களே! இந்த நெடுவாசியைப் பார்த்து அன்றோ வார்த்தை சொல்லுவது? அது கிடக்க; அவன் அழகு நம்மை நினைத்தபடி செய்ய ஒட்டாநின்றதோ?' என்கிறாள் மேல்.

நீல மலர் - நீலமான நிறத்தையுடையதாய்ப் பரந்ததாய். நெடு - அளவிடற்கு அரியதாய். சோதி சூழ்ந்த - பேரொளியாலே சூழப்பட்டு. நீண்ட முகில் வண்ணன் - அளவிடற்கு அரியதாய் இருப்பது ஒரு காளமேகத்தின் நிறம்போலே இருக்கிற நிறத்தையுடையனாயிருக்கிற. கண்ணன் கொண்ட - அவ்வடிவைப் பிறர்க்கே ஆக்கி வைக்கும் அவன் கவர்ந்த. கோலம் வளையோடு மாமை கொள்வான் - அழகிய வளையோடேகூட அவன் வாய் புலற்றும் நிறத்தையும் மீட்டுக்கொள்ளுகைக்காக. எத்தனை காலமும் கூடச் சென்று - காலம் எல்லாம் கூடச் சென்றும். 'ஞாலம் அறியப் பழி சுமந்தேன், நன்னுதலீர்! இனி நாணித்தான் என்?' என்க. அன்றிக்கே, 'நெடுங்காலம் கலவியின்பொருட்டுச் சென்று நாணித்தான் என்?' என்னுதல். (3)

---

1, 'நாடும் இரைக்கவே' என்பது, திருவாய். 5. 3 : 10.

2. தோழிமார்களைப் பார்த்து, 'நன்னுதலீர்' என்கையாலே, தன் எழில் அழிந்தமை தோற்றுகையாலே அதனைத் திருவுள்ளத்தே கொண்டு, 'இனி' என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார், 'நம் அழகு' என்று தொடங்கி.

3. 'ஞாலம் அழியப் பழி சுமந்தேன்; இனி' என்று கூட்டிக் கருத்து அருளிச்செய்கிறார், 'உலகத்தில்' என்று தொடங்கி.

4. 'நன்னுதலீர்' என்று விளிக்கின்றவளுடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார், 'உங்கள் முகத்தில்' என்று தொடங்கி.

787

**கூடச் சென்றேன் இனிஎன் கொடுக்கேன்?**
**கோல்வளை நெஞ்சம் தொடக்கம் எல்லாம்**
**பாடற் ருெழிய இழந்து வைகல்**
**பல்வளை யார்முன் பரிசுஅ ழிந்தேன்;**
**மாடக் கொடிமதிள் தென்கு ளந்தை**
**வண்குட பால்நின்ற மாயக் கூத்தன்**
**ஆடற் பறவை உயர்த்த வெல்போர்**
**ஆழி வலவனை ஆத ரித்தே.**

**பொ - ரை:** மாடங்களையும் கொடிகள் கட்டிய மதில்களையு முடைய அழகிய திருக்குளந்தை என்னும் திவ்விய தேசத்தில் மேற் குத் திக்கில் நின்ற திருக்கோலமாய் எழுந்தருளியிருக்கின்ற வண் மையையுடைய மாயக்கூத்தனும், வெற்றி பொருந்திய கருடப் பறவையைக் கொடியிலே உயர்த்திய போரிலே வெல்லுகின்ற திருச்சக்கரத்தை வலக்கையிலே உடையவனுமான எம்பெருமானை விரும்பிக் கலவியின் நிமித்தம் சென்றேன்; அழகிய வளை மனம் முதலானவைகள் எல்லாம் என் பக்கல்நின்றும் நீங்கி ஒழிய இழந்து, தங்கிய பல வகையான வளையல்களையுடைய இப்பெண் களுக்கு முன்னே நாணமும் நீங்கினேன்; இனி எதனைக் கொடுப்பேன்?

**வி – கு:** 'கூத்தனுகிய ஆழி வலவனை ஆதரித்துக் கூடச் சென் றேன்; கோல் வளை நெஞ்சம் தொடக்கம் எல்லாம் அற்று ஒழிய இழந்து பரிசு அழிந்தேன்; இனி என் கொடுக்கேன்?' என்கிருள் என்க.

**ஈடு:** நான்காம் பாட்டு. [1]'உன் துணிவு, இதுவாக, இன்னம் உள்ளவை முழுதும் இழக்கிருய் அன்றே?' என்ன, 'இனி நான் எதனை இழப்பது?' என்கிருள்.

[2]கூடச்சென்றேன் - 'நான் முடிந்து ஒருதலையேயாம்படி கிட்டினேன்' என்னுதல். அன்றிக்கே, 'கலவியின்பொருட் டுச் சென்று கிட்டினேன்' என்னுதல். இனி என்

---

1. 'பரிசு அழிந்தேன், இனி என் கொடுக்கேன்?' என்பதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிருர்.

2. 'கூடச் சென்றேன்' என்றதற்கு இரண்டு விதமாகப் பொருள் அருளிச்செய்கிருர். முதற்பொருளை, 'சரீரத்தை விட்டுப் பரமபதத்திலே போய் அவனேடே கூடும்படி சென்றேன்' என்று விரித்து உரைத்துக்கொள்க.

கொடுக்கேன் - [1]பண்டே எல்லாம் இழந்த பின்பு இனி எதனை இழப்பது? கோல் வளை நெஞ்சம் தொடக்கம் எல்லாம் பாடு அற்று ஒழிய இழந்து - அழகிய வளை, நெஞ்சு தொடக்கமானவை எல்லாம் என்பாடு அற்று வாசனையோடே போம்படியாக இழந்து. அவன் விபூதியைப் போலே ஆகும், இவள் பரிகரத்தின் பரப்பும் ஆதலின், '**எல்லாம்**' என்கிறது. வைகல் பல்வளையார் முன் பரிசு அழிந்தேன் - கழற்றிப் பூணும் ஆபரணமும் இழவாதவர்கள் முன்பே கழற்ற வேண்டாத ஆபரணமான பரிசு உண்டு - பிரகாரம் - நாணம்; அதனையும் இழந்தேன்.

மாடம் கொடி மதிள் தென்குளந்தை - மாடங்களையும் கொடியோடேகூடின மதிளையுமுடைத்தான தென்குளந்தையிலே. வண் குடபால் நின்ற - அழகிதான மேலைப்பக்கத்திலே நின்ற. [2]இதுவும் ஒரு பரத்துவத்திற்குக் காரணம் போலே. மாயம் கூத்தன் - ஆச்சரியமான செயல்களையுடையவன். ஆடல் பறவை உயர்த்த - சர்வேஸ்வரன் வாஹனம் என்னும் உவகையின் மிகுதியாலே களித்து ஆடாநின்றுள்ள பெரிய திருவடியாலே தாங்கப்பட்டிருப்பானுய். வெல் போர் ஆழி வலவனை ஆதரித்து - புக்க போரிலே வென்று அல்லது மீளாத திருவாழியை வலவருகேயுடையனுய் இருக்கிற சர்வேஸ்வரனை ஆசைப்பட்டு. 'மாடக்கொடிமதிள் தென்குளந்தை வண்குடபால் நின்ற, ஆடல் பறவை உயர்த்த, வெல்போர் ஆழி வலவனை மாயக் கூத்தனை ஆதரித்துச் கூடச் சென்றேன்; கோல் வளை நெஞ்சம் தொடக்கம் எல்லாம் பாடு அற்று ஒழிய இழந்து வைகல் பல்வளையார் முன் பரிசு அழிந்தேன்; இனி என் கொடுக்கேன்?' என்று கூட்டுக. (4)

---

1. 'கூடச் சென்றேன்' என்பதற்கு அருளிச்செய்த இருவகையான பொருள்களில், முதற்பொருளைத் திருவுளத்தே கொண்டு, 'பண்டே' என்று தொடங்கி அருளிச்செய்கிருர்.

2. மேலைப் பக்கத்தில் நிலையைச் சொன்னதற்கு பாவம் அருளிச்செய்கிருர், 'இதுவும்' என்று தொடங்கி.

788

ஆழி வலவனை ஆத ரிப்பும்
 ஆங்கவன் நம்மில் வரவும் எல்லாம்
தோழியர் காள்!நம் உடைய மேதான்?
 சொல்லுவ தோஇங்கு அரிய துதான்
ஊழிதோ று ஊழி ஒருவன் ஆக
 நன்குஉணர் வார்க்கும் உணரல் ஆகா
சூழல் உடைய சுடர்கொள் ஆதித்
 தொல்லைஅம் சோதி நினைக்கும் காலே.

பொ-ரை: நினைக்குமிடத்து, நன்கு உணர்வார்க்கும், காலம் என்னும் ஒரு பொருள் உள்ள வரையிலும் அறிய முயன்றாலும் இவ்விதமான தன்மையையுடையவன் என்று அளவிட்டு அறிய ஒண்ணாத, அடியார்களை அகப்படுத்திக்கொள்ளும் சூழ்ச்சியாகிற செயல்களையுடைய ஒளியோடு கூடிய ஆதியும், தொல்லை அம்சோதியுமான ஆழி வலவனை நாம் விரும்பிப் பணிதலும், விரும்பி வணங்கிய அளவிலே அவன் நாம் இருக்குமிடத்துக்கு வருதலும் ஆகிய இவை எல்லாம் தோழிமார்களே! நம் அளவதோ? ஆதலால், நீங்கள் சொல்லும் வார்த்தையாகிற இது சொல்லத் தகாதது; நான் கேட்கத் தகாததுமாம்.

வி-கு: 'நம் உடையமேதான்' என்பதற்கு, 'நம் காரணமாகப் புதியனவாக ஏற்பட்டவை அல்லவே' என்பது கருத்து. 'நன்கு உணர்வார்க்கும் ஊழிதோறு ஊழி ஒருவனாக உணரல் ஆகாச் சூழல் உடைய சுடர் கொள் ஆதி' என்க. 'ஆதியும் சோதியுமான ஆழி வலவன்' என்க. ஆதி-உலககாரணன்.

ஈடு: ஐந்தாம் பாட்டு. [1]'வாக்கிற்கும் மனத்திற்கும் எட்ட ஒண்ணாத விஷயத்திலே மிக்க ஈடுபாடு உடையையாய் எதற்குத் துக்கப்படுகிறாய்?' என்ன, 'ஆனாலும், அவனை அடைதலும் அவனாலே ஏற்றுக்கொள்ளப்படுபவர் ஆதலும் ஆன இம்மரியாதை நம்மைத் தோற்றி உண்டாயிற்றோ? தொன்று தொட்டு வருவது அன்றோ?' என்கிறாள்.

ஆழிவலவனை ஆதரிப்பும்-திருவாழியை வலவருகேயுடையனானவனை அடைதலும். ஆங்கு-அடைகிற நிலை

1. முதல் இரண்டு வரிகளைக் கடாட்சித்து அவதாரிகைஅருளிச் செய்கிறார்.

யிலே. அவன் - [1]மேன்மையைப் போன்று நீர்மையையுடைய னவன். நம்மில் வரவும் எல்லாம் - அடைந்த நாம் இருந்த இடங்களிலே வந்து ஏற்றுக்கொள்ளுகையுமாகிற இவை எல்லாம். தோழியர்காள் - என்னைப் போன்று இவ்விஷயத்திலே மூழ்கினவர்கள் அல்லீர்கோள். நம் உடையமே தான் - நம் அளவதோ? அவனை அடைதலும், நாம் விரும்பியதை அவன் செய்கையுமாய்ப் போருகிற இது, நம்மைத் தோற்றிப் புதியதாக விட்டது ஒரு மரியாதையோ? சொல்லுவதோ இங்கு அரியதுதான் - பொருளின் தன்மை ஏதேனுமாய் இருக்க, தோற்றிற்றுச் சொல்லுகையோ அரியது! என்றது, 'தடைசெய்வார் இலர் என்று தோன்றினவற்றைச் சொல்லக்கடவதோ?' என்றபடி. 'அவன் கிட்ட அரியவனாய் இருக்கிறமை இல்லையோ?' என்ன, அது தானும் நான் சொல்லக் கேட்க வேண்டாவோ உங்களுக்கு?

[2]நன்கு உணர்வார்க்கும் ஊழிதோறு ஊழி ஒருவன் என்று உணரல் ஆகா - எத்துணையேனும் அளவு கடந்த ஞானத்தையுடையராய் இருப்பார்க்கும், காலம் எல்லாம் கூடி அறியப் புக்காலும் அறியப் போகாது, இந்த விதமான சிறப்பையுடையவன் என்று. சூழலுடைய - கிட்டினாரை அகப்படுத்திக்கொள்ளுகைக்கு ஈடான விரகுகளையுடையனாய் இருக்கும். சுடர்கொள் - ஒளி முதலான எல்லை இல்லாத குணங்களையுடையவன். ஆதி - உலகத்திற்குக் காரணன் ஆனவன். தொல்லை அம் சோதி - இயல்பிலே அமைந்ததாய், எல்லை இல்லாத ஒளி உருவமாய், மற்றை இனங்கட்கு வேறுபட்டதான திவ்விய விக்கிரகத்தையுடையனாய் இருக்கும். நினைக்குங்கால் - அவன் பெருமையை ஆராயப் புகில்.

'நினைக்குங்கால் நன்கு உணர்வார்க்கும் ஒருவனை ஊழிதோறு ஊழி உணரல் ஆகாச் சூழலுடைய சுடர்கொள் ஆதித்தொல்லை அம் சோதி ஆழி வலவனை ஆதரிப்பும், ஆங்கு அவன் நம்மில் வரவும் எல்லாம், தோழியர்காள்! நம் உடையமேதான், சொல்லுவதோ

1. 'நம்மில் வரவும்' என்றதனைத் திருவுள்ளம் பற்றி, 'மேன்மையை' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

2. 'உணர்ந்தார்க்கு உணர்வு அரியோன்' என்ற (திருக்கோவையார்) பாடற்பகுதியையும், அதற்குப் பேராசிரியர் எழுதிய உரையையும் இங்குப் படித்தறிதல் தகும்.

இங்கு அரியது தான்?' என்று கூட்டுக. என்றது, [1]'விலக்ஷண வஸ்துவே சுலபமானால், பற்ற அடுக்குமோ? விட அடுக்குமோ?' என்கிறாள் என்றபடி. (5)

789

**தொல்லைஅம் சோதி நினைக்குங் கால்என்**
**சொல்லள வன்றுஇமை யோர்த மக்கும்**
**எல்லை இலாதன கூழ்ப்புச் செய்யும்**
**அத்திறம் நிற்கஎம் மாமை கொண்டான்**
**அல்லி மலர்த்தண் துழாயும் தாரான்**
**ஆர்க்கிடு கோஇனிப் பூசல்? சொல்லீர்**
**வல்லி வளவயல் சூழ்கு டந்தை**
**மாமலர்க் கண்வளர் கின்ற மாலே.**

**பொ - ரை :** 'நினைக்குமிடத்து அவனுடைய இயல்பான அழகிய அந்த ஒளியானது என் சொல்லில் அடங்குமது அன்று; பிரமன் முதலான தேவர்களுக்கும் அளவு இல்லாத ஐயத்தைச் செய்யாநிற்கும் படியான அப்பெரிய மேன்மை நிற்க, வல்லிக்கொடிகள் நிறைந்த வளப்பத்தையுடைய வயல்கள் சூழ்ந்த திருங்குடந்தையில் திருக்கண்வளர்கின்ற திருமாலானவன், என் அழகைக் கொண்டான்; தாதுக்களையுடைய மலர்ந்த குளிர்ந்த திருத்துழாயும் தருகின்றான் இலன்; இப்படியான பின்பு, யாரை நோக்கி யான் முறையிடக் கடவேன்? சொல்லுங்கோள்,' என்கிறாள்.

**வி - கு :** கூழ்ப்பு - ஐயம். பூசல் - ஒலி; முறையீடு. 'மால் மாமை கொண்டான், துழாயும் தாரான், பூசல் ஆர்க்கு இடுகோ? சொல்லீர்,' என்க. குடந்தை - கும்பகோணம்.

**ஈடு :** ஆறும் பாட்டு. [2]'நீ சொல்லுகிறபடியே எளியன் அல்லன்; அரியன்,' என்ன, 'எளியனாகிலும் அரியனாகிலும் தன்னை ஒழியச் செல்லாதபடி நம்மைப் புகுரா நிறுத்தின

---

1. 'நினைக்குங்கால்' என்று தொடங்கி, முன்னே பரத்துவத்தைச் சொல்லி, பின்னர் நீர்மையை - எளிமையைக் - கூறியதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'விலக்ஷணவஸ்து' என்று தொடங்கி. விலக்ஷணவஸ்து - உயர்வற உயர்ந்த பொருள்.

2. 'அத்திறம் நிற்க எம் மாமை கொண்டான், ஆர்க்கு இடுகோ இனிப்பூசல் சொல்லீர்' என்பது போன்றவைகளைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். 'குடந்தை மலர்க்கண் வளர்கின்ற' என்றதனை நோக்கி, 'எளியனாகிலும்' என்றும், 'இமையோர் தமக்கும்' என்பது போன்றவைகளைத் திருவுள்ளம் பற்றி, 'அரியனாகிலும்' என்றும், அருளிச்செய்கிறார். 'மால்' என்றதனைத் திருவுள்ளம் பற்றிச் 'சம்பந்தம் இல்லாதோர்' என்கிறார்.

வன் வாசலிலே கூப்பிடாதே, சம்பந்தம் இல்லாதோர் வாசலிலேயோ கூப்பிடுவது?' என்கிறாள்.

நினைக்குங்கால் தொல்லை அம் சோதி - [1]ஆராயப்புக்கால், மற்றை இனங்கட்கு எல்லாம் வேறுபட்ட விக்கிரகத்தையுடையவன். என் சொல் அளவு அன்று - அவனுடைய வைலக்ஷண்யம், என்னுடைய பேச்சின் அளவு அன்று. என்றது, 'நான் ஓர் அபலை இருந்து சொல்லும் அளவோ அவன் பெருமை?' என்றபடி. இமையோர் தமக்கும் எல்லை இலாதன கூழ்ப்புச் செய்யும் - [2]எத்துணையேனும் மேம்பட்ட ஞானத்தையுடையரான பிரமன் முதலானோர்கட்கும் அளவு இறந்த ஐயங்களைச் செய்யா நிற்கும். [3]'இந்தப் பிரமனும் எந்தப் பரமபதத்தை அறியாது இருக்கிறானோ' என்றும், 'ஓரிடத்திலும் ஒருவனாலும் அறியப்படுகிறான் இல்லை' என்றும் வருகிறபடியே. அன்றிக்கே, 'இமையோர் என்கிறது, நித்திய சூரிகளையாய், அவர்கள் [4]சூட்டு நன்மாலைகள் தூயன ஏந்தி நிற்க, தான் ஈட்டிய வெண்ணெய் தொடு உண்ணப் போரும்படியை' என்னவுமாம். அத்திறம் நிற்க எம் மாமை கொண்டான் - அம்மேன்மையும் கிடக்கச்செய்தே, தன் அழகு முதலாயினவற்றைக் காட்டி என் நிறத்தைக் கொண்டான். [5]என்னோடே இட்டீடு கொண்டு அல்லது

---

1. 'நினைக்குங்கால் அம் சோதி' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'ஆராயப் புக்கால்' என்று தொடங்கி.

2. 'தமக்கும்' என்றதனைத் திருவுள்ளம் பற்றி, 'எத்துணையேனும்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். 'ஐயங்கள்' என்றது, அறியாமைகளை.

3. ஐயங்களைச் செய்யும் என்பதற்கு இரண்டு பிரமாணங்கள் காட்டுகிறார், 'இந்த' என்று தொடங்கியும், 'ஓரிடத்திலும்' என்று தொடங்கியும்.

'யந்நாயம் பகவாந் ப்ரஹ்மா ஜாநாதி பரமம் பதம்'
என்பது, ஸ்ரீ விஷ்ணு புரா. 1. 9 : 59.

'தவாந்தராத்மா மம ச யேசாந்யே தேஹிஸம்ஜ்ஞகா:
ஸர்வேஷாம் ஸாக்ஷிபூதோஸௌ ந க்ராஹ்ய: கேநசித் க்வசித்'
என்பது, பாரதம், மோக்ஷதர்மம், 179 : 4. இது, பிரஹ்ம ருத்திர சம்வாதத்தில் உருத்திரனை நோக்கிப் பிரமன் கூறியது.

4. திருவிருத்தம், 21.

5. ' 'சம்பந்தம் இல்லாதோர் வாசலிலேயோ கூப்பிடுவது?' என்று உபகாரம் சொல்லி, 'மாமை கொண்டான்' என்று அபகாரம் சொல்லுவான் என்?' என்ன, 'என்னோடே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இட்டீடு - விவாதம்.

தரியாதானுய், நம்முடைய நிறத்தைக் கொண்டது தன்னுடைய வைலக்ஷண்யத்தைப் பாராதே அன்றே?

அல்லி மலர்த் தண் துழாயும் தாரான் - நம் நிறத்தைக் கொண்டால் தன்னேடு சம்பந்தம் உள்ளது ஒன்றைத் தந்து நம்மை உஜ்ஜீவிப்பிக்கலாம் அன்றே? அது செய்கின்றிலன். [1]அது செய்தானுகில் 'பூவுக்கு இட்டோம் போலும்' என்று இருக்கலாமே! இனிப் பூசல் ஆர்க்கு இடுகோ சொல்லீர் - நம்மை நலிந்தவன் வாசலிலே கூப்பிடாதே யார் வாசலிலே கூப்பிடுவோம்? சொல்லீர்கோள்! வல்லி வளம் வயல் சூழ் குடந்தை மா மலர்க்கண் வளர்கின்ற மால் - பூங்கொடி படர்ந்த சோலைகளும், வளவியவான வயல்களும் சூழ்ந்த திருக்குடத்தையிலே திருக்கண் வளர்கின்ற சர்வேஶ்வரன். மா மலர்க்கண் வளர்கின்ற மால் - சம்பந்தம் உள்ளவன். மலர்ந்த தாமரைப் பூப் போலே இருக்கிற கண் என் அளவில் அலரக் காண்கின்றிலேன். என்றது, 'விசேஷ கடாக்ஷம் செய்யக் காண்கின்றிலேன்' என்றபடி. கூக்குரல் கேட்க அண்மையில் இருப்பவன் ஆதலின், **'குடந்தை மலர்க்கண் வளர்கின்ற'** என்கிருள்.

'வல்லி வளவயல் சூழ் குடந்தை மா மலர்க்கண் வளர்கின்ற மால், தொல்லை அம் சோதி' என்று தொடங்கி, 'ஆர்க்கு இடுகோ இனிப் பூசல்? சொல்லீர்' என்று முடிக்க. (6)

790

**மால்அரி கேசவன் நாரணன்சீ**
**மாதவன் கோவிந்தன் வைகுந்தன் என்றுஎன்று**
**ஓலம் இடஎன்னைப் பண்ணி விட்டிட்டு**
**ஒன்றும் உருவும் சுவடும் காட்டான்**
**ஏலம் மலர்க்குழல் அன்னை மீர்காள்!**
**என்னுடைத் தோழியர் காள்!என் செய்கேன்!**
**காலம் பலசென்றும் காண்பது ஆணை**
**உங்களோடு எங்கள் இடைஇல் லையே.**

---

1. 'தந்தானுகில் தரம் ஆமோ?' என்ன, 'அது' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர். 'பூவுக்கு இட்டோம் போலும்' என்றது, 'காமுகர் காமினிகளுக்கு இட்டது' என்றபடி. 'பூவுக்கு இட்டோம்' என்றது காமினிகளுக்கு இட்டதை. 'பூவுக்கு இட்டோம்' என்பது சங்கேதச்சொல். இத்தால் 'அவன் திருத்துழாய் தந்தானுகில், நாமும் பூவுக்கு இட்டது என்று இருக்கலாம்

**பொ - ரை :** 'மாலே! அரியே! கேசவனே! நாரணனே! ஸ்ரீ மாதவனே! கோவிந்தனே! வைகுந்தனே!' என்று என்றே கூப்பிடும்படி என்னைச் செய்து கைவிட்டு, ஒரு வகையாலும் உருவத்தையும் தன்னைக் கிட்டுவதற்குரிய அடையாளத்தையும் காட்டான்; வாசனை பொருந்திய மலர்களைத் தரித்த தாய்மார்களே! என்னுடைய தோழிமார்களே! நான் என்ன செய்வேன்! பல காலம் சென்றாலும் காணக் கடவேன்; இது ஆணை; இந்த உறுதியைக் குலைக்கப் பார்க்கிற உங்களோடு எனக்கு ஒரு விதச் சம்பந்தமும் இல்லை; ஆதலால், என்னோடு பேச வேண்டா.

**வி - கு :** விட்டிட்டு - ஒரு சொல்லாகக் கோடலுமாம். இடை - உறவு.

**ஈடு :** ஏழாம் பாட்டு. [1]'அவனைக் கண்டு முடிகை அரிது, விடவல்லையே' என்று உறவு முறையார் அலைக்க, 'அவன் குணங்களிலே அகப்பட்ட நான் காலம் எல்லாங் கூடவாகிலும் அவனைக் கண்டு அல்லது விடேன்; அதற்கு விரோதிகளான உங்களுடைய சம்பந்தம் எனக்கு வேண்டா' என்கிறாள்.

மால் - அடியார்கள் பக்கல் வியாமோகமே வடிவாகவுடையவன். [2]'பொய்ந்நின்ற ஞானம்' தொடங்கி, இவ்வளவும் வரக் கூப்பிடச் செய்த வியாமோகம். அரி - விரோதிகளை அழிக்கும் தன்மையன். கேசவன் - காலம் எல்லாம் அனுபவியாநின்றாலும் மீள ஒண்ணாத செறிந்து நீண்ட மயிர்முடியையுடையவன். நாரணன் - அடியார்களிடத்தில் அன்பையுடையவன். சீ மாதவன் - அதற்கு அடியான திருமகள் கேள்வன் ஆனவன். கோவிந்தன் - அவளுடைய சேர்த்தியாலே அடியார்கட்குக் கையாளாய் இருக்குமவன். வைகுந்தன் - இவற்றிற்கு எல்லாம் அடியான மேன்மையையுடையவன். என்று என்று - எப்பொழுதும். ஓலம் இட - [3]காரியப்பாடு அறக் கூப்பிடும்படி. என்னைப்

---

என்பது கருத்து' என்பது ஈட்டின் அரும்பதம். இந்த வாக்கியம் 'பூவுக்கு இட்டான் போலும்' என்று இருக்கலாம் என்று நினைக்கிறேன்.

1. 'காலம் பல சென்றும் காண்பது ஆணை; உங்களோடு எங்கள் இடை இல்லை' என்பதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச் செய்கிறார். முடிகை - தலைக்கட்டுதல்; முடித்தல்.

2. வியாமோகத்தை 'ஈது' என்று காட்டுகிறார், 'பொய்ந்நின்ற' என்று தொடங்கி.

3. 'என்று என்று ஓலம் இட' என்றதனால் 'காரியப்பாடு அறக் கூப்பிடும்படி' என்கிறார். காரியப்பாடாவது, புகழ் இலாபம் பூசை முதலியவற்றிலே விருப்பம்.

பண்ணி - [1]'வனத்தில் வசிப்பதற்காகவே படைக்கப் பட்டாய்' என்கிறபடியே, இதுவே யாத்திரையாகச்செய்து. விட்டு - என்னைத் தன் பக்கலினின்றும் பிரித்து. இட்டு - அறிவு இல்லாத பொருளைப் போன்று போகட்டு. ஒன்றும் உருவும் [2]சுவடும் காட்டான் - தன் வடிவைக் காட்டுகின்றிலன். தான் இருந்த இடத்திற்கு ஓர் அடையாளம் காட்டுகின்றிலன். என்றது, [3]'கோபிகைகள் நடுவே தோன்றினான்' என்கிறபடியே, வடிவைக்காட்டுதல்; ஸ்ரீராமனுடைய ஆஶ்ரமத்தில் ஸ்ரீபரதாழ்வானுக்கு ஓமப்புகை முதலானவைகள் அடையாளமானாற்போலே, இருந்த இடத்துக்கு ஓர் அடையாளம் காட்டுதல் செய்கின்றிலன்' என்றபடி.

ஏலம் மலர்க்குழல் அன்னைமீர்காள் - [4]நீங்கள் பண்டு இருக்குமாறுபோலே நான் உங்களை என்று காணக் கடவேன்? ஏலம் மலர் - ஏலம்போன்று கமழுகிற வாசனையையுடைய மலர். என்னுடைத்தோழியர்காள் - [5]உங்களுக்கு ஹிதம் சொல்லி மீட்குமது இல்லை. என் பிரியமே அன்றோ உங்களுக்கு உத்தேசியம்? என் செய்கேன் - ஓர் அடையாளமும் காணாத நான் இனி எதனைச் செய்வேன்? 'எங்களைக் கேட்கில், விட அடுக்கும்' என்ன, காலம் பல சென்றும் காண்பது - காலம் எல்லாங்கூடவாகிலும் கண்டு அல்லது மீளேன். 'அது, செய்து தலைக்கட்டலாவது ஒன்று அன்றுகாண்' என்ன, ஆணை - [6]விடுகிறவர்கள்மேல் ஆணை இடாள் அன்றோ? பற்றுகிறவன்மேல் ஆணை இடுகிறாள். இப்படித் துணியச் செய்தேயும், ஹிதம் சொல்லத் தொடங்கினார்கள்: உங்களோடு எங்கள் இடை இல்லை - 'உங்களோடு எனக்கு ஒரு சம்பந்தம் இல்லை; எனக்கு நீங்கள் ஹிதம் சொல்ல வேண்டா' என்கிறாள். (7)

---

1. 'ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய ஸ்வநுரக்தஃ ஸுஹ்ருஜ்ஜநே ராமே ப்ரமாதம் மாகார்ஷீஃ புத்ர ப்ராதரி கச்சதி' என்பது ஸ்ரீராமா. அயோத். 40 : 5.

2. சுவடு - அடையாளம்.

3. அப்படிக் காட்டின இடத்திற்கு இரண்டு பிரமாணங்கள் காட்டுகிறார். 'கோபிகைகள்' என்று தொடங்கும் பொருளையுடைய சுலோகத்தை 16-ஆம் பக். காண்க.

4. 'இப்பொழுது ஏல மலர்க்குழலராய் இருக்கின்றீர்களோ?' என்ன, 'நீங்கள்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச் செய்கிறார்.

5. 'என்னுடை' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'உங்களுக்கு' என்று தொடங்கி.

6. யார்மேல் ஆணை இடுகிறது?' என்ன, 'விடுகிறவர்கள்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

791

இடைஇல்லை யான்வ ளர்த்த கிளிகாள் !
பூவை காள்!குயில் காள்!ம யில்காள் !
உடையநம் மாமையும் சங்கும் நெஞ்சும்
ஒன்றும் ஒழியஒட் டாது கொண்டான்
அடையும் வைகுந்த மும்பாற் கடலும்
அஞ்சன வெற்பும் அவை நணிய
கடைஅறப் பாசங்கள் விட்ட பின்னை
அன்றி அவன்அவை காண்கொ டானே.

பொ - ரை: 'யான் வளர்த்த கிளிகாள்! பூவைகாள்! குயில்காள்! மயில்காள்! நம்முடைய அழகும் சங்கவளையலும் நெஞ்சமும் ஆகிய இவற்றில் ஒன்றும் நம்மிடம் தங்க ஒட்டாது கவர்ந்து கொண்ட சர்வேஸ்வரன் இங்கிருந்து சென்று சேர்ந்திருக்கின்ற ஸ்ரீவைகுண்டமும் திருப்பாற்கடலும் திருவேங்கடமலையுமாகிய அவை அண்மையில் இருக்கின்றன; பாசங்கள் நம்மை விட்டு அடியோடு நீங்கின பின் அன்றி அவன் அவற்றைக் காணக் கொடான்; ஆதலால், உங்களோடு எனக்கு ஒருவிதச் சம்பந்தமும் இல்லை' என்கிறாள்.

வி - கு: பூவையும் கிளியும் வெவ்வேறானவை. சங்கு - சங்க வளையல். 'பாசங்கள் கடை அற விட்ட பின்னை அன்றி அவன் அவை காண் கொடான்; ஆதலால் இடை இல்லை' என்று கூட்டுக.

ஈடு: எட்டாம் பாட்டு. [1]கிளிகள் தொடக்கமான விளையாட்டுக் கருவிகளில் தனக்கு உண்டான விருப்பம் இன்மையைச் சொல்லுகிறாள்.

இடை இல்லை - என் பக்கல் உங்களுக்கு ஓர் இடம் இல்லை. யான் வளர்த்த கிளிகாள் - [2]பழமைகொண்டு பின் நாட்டுகின்றீர்கோள் அன்றோ நீங்களும்? பூவைகாள் குயில்காள் - [3]முன்பு இவள் ஆதரித்தவை, அவனுடைய விளையாட்டுக் கருவிகளிலும் குவால் அன்றோ? அவை எல்லாவற்றிலும் நசை அற்றபடி. எல்லாவற்றிலும் நசை அற்ற படிக்குக் காரணம் சொல்லுகிறாள் மேல்: உடைய நம் மாமையும் சங்கும் நெஞ்சும் ஒன்றும்

---

1. முதல் அடியைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'யான் வளர்த்த' என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார். 'பழமை' என்று தொடங்கி.

3. 'கிளிகாள்' என்பது போன்றவற்றிலுள்ள பன்மைக்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'முன்பு' என்று தொடங்கி. குவால் - கூட்டம்.

[1]ஒழிய ஒட்டாது கொண்டான் - நம்முடையவான நிறமும், வளையும், நெஞ்சும் ஆகிய புறப்பொருள்களோடு உட்பொருள்களோடு வாசி அற நம் பக்கல் ஒன்றும் எஞ்சாதவாறு கைக்கொண்டவன்.

அடையும் வைகுந்தமும் - 'சேரும் பரமபதமும், இத்தலையில் உள்ளன எல்லாம் நேராகக் கொண்டு, எட்ட ஒண்ணாத நிலத்திலே போய்ப் பாரித்து வெற்றி கொண்டாடி இருந்தான்' என்கை. பாற்கடலும் - அதனோடு தோள் தீண்டியான திருப்பாற்கடலும். அஞ்சன வெற்பும்- திருமலையும். பரமபதத்தோடு ஒக்கச் சொல்லலாய் இருக்கிறதாயிற்று. அவை நணிய - பிராப்பிய பூமியானவை கிட்டிற்றின. 'ஆனால், அனுபவிக்கத் தட்டு என்?' என்ன, அவன் சுணையுடையவன்; புறம்பேயும் ஒரு விஷயத்திலே நசை கிடக்கத் தனது அனுபவத்தைக் காட்டிக்கொடான். கடை அறப் பாசங்கள் விட்ட பின்னை அன்றி அவன் அவை காண்கொடான் - பின் நாட்டாதபடி வாசனையோடு புறத்திலே உள்ள ருசி போனால் அல்லது போகஸ்தானங்களைக் காட்டிக்கொடான்.

[2]மேலே 'வணங்குமாறு அறியேன்' என்று பிராபக ஆபாசங்களை விட்டார்; இங்கே பிராப்பிய ஆபாசங்களை விடுகிறார். (8)

792

**காண்கொடுப் பான்அலன் ஆர்க்கும் தன்னைக்**
**கைசெயற் பாலதோர் மாயந் தன்னால்**
**மாண்குறள் கோலம் வடிவு காட்டி**
**மண்ணும் விண்ணும் நிறைய மலர்ந்த**
**சேண்சுடர்த் தோள்கள் பலத ழைத்த**
**தேவ பிராற்குஎன் நிறைவி னேடு**
**நாண்கொடுத் தேன்இனி என்கொ டுக்கேன்**
**என்னுடை நன்னுதல் நங்கை மீர்காள்!**

---

1. ஒழிய ஒட்டாது - எஞ்சாதவாறு.

2. இத்திருவாய்மொழியின் அவதாரிகையிலே, 'இத்திருவாய்மொழி பிராப்பியத்திலே நோக்கு' என்று அருளிச்செய்ததனை இங்கே காட்டுகிறார், 'மேலே' என்று தொடங்கி. ஆபாசங்கள் - போலிப்பொருள்கள்.

பொ - ரை : என்னுடை நல் நுதல் நங்கைமீர்காள்! எத்துணை ஞானத்தையுடையவர்கட்கும் தன் படிகளைக் காட்டிக்கொடாத தன்மையன்; மாயத்தாலே, சித்திரத்திலே எழுதுவதற்கு முடியாததான அழகையுடைய மாட்சிமை பொருந்திய வாமன வடிவத்தைக் காட்டி, பூலோகமும் மேல் உலகங்களும் விம்மும்படி வளர்ந்த நீண்ட ஒளியையுடைய கற்பகத்தருப் பணைத்தாற்போலே தழைத்த பல தோள்களையுடைய தேவபிரானுக்கு என் நிறைவினேடு நாணத்தையும் கொடுத்தேன்; இனி எதனைக் கொடுக்கேன்?

வி – கு : 'ஆர்க்கும் தன்னைக் காண் கொடுப்பான் அல்லன்' என்றும், 'மாயந்தன்னல் கைசெய் அப்பாலது ஓர் கோலம் மாண் குறள் வடிவு காட்டி' என்றும் கூட்டுக. கை செய்தல் - கையால் எழுதுதல். மாண் - பிரமசாரியுமாம்.

ஈடு : ஒன்பதாம் பாட்டு. [1]'இதுவே துணிவாகில் ஆத்துமாவையும் ஆத்துமாவோடு சம்பந்தப்பட்ட பொருள்களையும் நேராக இழக்கிருய் அன்றே?' என்ற தாய்மாரைக் குறித்து, 'முன்பே அடைய இழந்திலேனே? இனி எதனை இழப்பது?' என்கிருள்.

ஆர்க்கும் தன்னைக் காண் கொடுப்பான் அலன் - தம் முயற்சியாலே காணநினைப்பார் எத்தனையேனும் அளவற்ற ஞானத்தையுடையரேயாகிலும், தன்னைக் காட்டும் தன்மையன் அல்லன். மாயந்தன்னல் கை செய் அப்பாலது ஓர் கோலம் மாண்குறள் வடிவு காட்டி - மாயத்தால், [2]கை செய்கைக்கு அப்பாலதான அழகையுடைய வாமனவடிவைக் காட்டி. மாயமாவது, உபயவிபூதிகளையுமுடையனை தான் ஒன்றும் இல்லாதானுய் வருகையும், திருமகள் கேள்வனை தன்னை இரவலன் ஆக்குகையும், சிறுகாலைக் காட்டிப் பெரிய காலாலே அளந்துகொள்ளுகையுமாம். மாயம் - வஞ்சனை. 'கைசெய்கை' என்பது 'கைசெய்' எனக் கடைக்குறைந்து நிற்கிறது. அளவிடற்கு அரிய பெருமையுடைய தான் இரப்பிலே தகண் ஏறின வாமனவேடத்தைக் கொண்டான் ஆதலின், 'மாண்குறள் வடிவு' என்

---

1. மூன்ரும் அடியைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிருர்.

2. 'கைபுனைந்து இயற்ருக் கவின்' என்பது திருமுருகாற்றுப்படை. 'ஓவியத்து எழுத ஒண்ணு உருவத்தாய்' என்பது கம்பராமாயணம். 'எழுத அரிய பெருமான் என்று எண்ணுது எழுதி இருந்தேனே' என்பது, திருவரங்கக் கலம்பகம்.

கிருர். இப்படி [1] அழிவுக்கு இட்ட வடிவுக்கு ஆலத்தி வழிக்க வேண்டி இருத்தலின், '**கோல வடிவு**' என்கிருர். மஹா பலியை வஞ்சிக்கைக்காக இயற்கையான அழகையுடைய மாண் குறளான வடிவைக் காட்டினுன் ஆதலின், '**காட்டி**' என்கிருர். இனி, 'மாயந்தன்னுல்' என்பதனை, '**கோலம்**' என்பதற்கு அடைமொழி ஆக்குதலுமாம். இனி, 'கைசெயற் பாலது ஓர் கோல வடிவு' என்பதற்கு, 'சித்திரம் உயிர் பெற எழுதினுற்போலே இருந்துள்ள கோல வடிவு' என்று பொருள் கூறலுமாம்.

மண்ணும் விண்ணும் நிறைய மலர்ந்த - கையிலே நீர் விழுந்த உடனே எல்லா உலகங்களும் விம்ம வளர்ந்த. சேண் சுடர்த் தோள்கள் பல தழைத்த - நீண்டு ஒளியை யுடைத்தாய், கற்பகத்தருப் பணைத்தாற்போலே பல தோள்களையுடையவன். தேவபிராற்கு - இந்திரன் இழந்த இராச்சியத்தைக் கொடுத்துத் தேவர்களுக்கு உபகாரத் தைச் செய்தவனுக்கு. என் நிறைவினேடு நாண் கொடுத்தேன் - [2] நான் இரண்டு இராச்சியம் இழந்தேன். இந்திரன் இராச்சியம் பெற்றுப் போனுன்; மஹாபலி ஔதார்யம் பண்ணிப் போனுன்; நான் எனக்கு எல்லாச் செல்வமுமான அடக்கத்தையும் நாணத்தையும் இழந் தேன். இனி என் கொடுக்கேன் - இனி எதனைக் கொடுப் பேன்? என்னுடை நல் நுதல் நங்கைமீர்காள் - [3] துக்கம் அறியாமையாலே அழகிலும் குறைவற்று, எல்லாம் நிறைந்தவர்களாய், எனக்கு ஹிதம் சொல்லலாம் அன்றே உங்களுக்கு?

'மேலே நான்காம் பாசுரத்திலே, 'இனி என் கொடுக் கேன்?' என்று சொல்லிற்று; அதற்கும் இதற்கும் வாசி என்?' என்னில், பெரிய திருவடி முதுகில் இருப்பிலும், கையும் திருவாழியுமான சேர்த்தியிலும் தோற்று மாயக் கூத்தனை ஆதரித்துக் கலக்கச் சென்று கிட்டாமையாலே வந்த இழவு அதில்; 'ஸ்ரீவாமனனுடைய அழகிலும் சீலத்

1. அழிவுக்கு இட்ட வடிவுக்கு- தன்மேன்மையை விட்டு நீர்மை யைக் கொள்ளுகைக்காகக் கொண்ட வடிவுக்கு.

2. 'நிறைவும் நாணும்' என்று இரண்டு ஆகையாலே, ரசோக்தி யாக 'நான் இன்று இராச்சியம் இழந்தேன்' என்கிருர். விவரணம் செய்கிருர், 'இந்திரன்' என்று தொடங்கி.

3. 'நல் நுதல் நங்கைமீர்காள்' என்று விளிக்கிறவளுடைய மனேபாவத்தை அருளிச்செய்கிருர், 'துக்கம்' என்று தொடங்கி.

திலும் தோற்ற மஹாபலியைப் போலே எல்லாவற்றையும் இழந்தேன்' என்கிறது இப்பாசுரத்தில். (9)

793

**என்னுடை நன்னுதல் நங்கை மீர்காள் !**
**யான்இனிச் செய்வதென் ? என்நெஞ்சு என்னை**
**'நின்னிடை யேன்அலேன்' என்று நீங்கி**
**நேமியும் சங்கும் இருகைக் கொண்டு**
**[1]பன்னெடுஞ் சூழ்சுடர் ஞாயிற் றோடு**
**பான்மதி ஏந்திஓர் கோல நீல**
**நன்னெடுங் குன்றம் வருவது ஒப்பான்**
**நாண்மலர்ப் பாதம் அடைந்த துவே.**

பொ-ரை: 'என்னுடைய நல் நுதல் நங்கைமீர்காள்! நான் இனிச் செய்வது யாது? என் மனமானது என்னைப் பார்த்து, 'உனக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை,' என்று சொல்லி நீங்கி, சக்கரத்தையும் சங்கையும் இரண்டு கைகளிலே ஏந்திக்கொண்டு, நீண்டு சூழ்ந்த பல சுடர்களையுடைய சூரியனையும் வெண்மை பொருந்திய சந்திரனையும் ஏந்தி ஓர் கோல நீல நல் நெடுங்குன்றம் வருவதைப் போன்று விளங்குகின்ற எம்பெருமானுடைய நாண் மலர் போன்ற திருவடிகளை அடைந்தது,' என்றவாறு.

வி-கு: 'என் நெஞ்சு நீங்கி நாண்மலர்ப்பாதம் அடைந்தது' என்க. 'நேமியும் சங்கும் இரு கைக்கொண்டு குன்றம் வருவது ஒப்பான் நாண்மலர்ப் பாதம்' என்க. நேமிக்கு ஞாயிறும், சங்கிற்குப் பால் மதியும், எம்பெருமானுக்குக் கோல நீல நன்னெடுங் குன்றமும் உவமைகள்.

ஈடு: பத்தாம் பாட்டு. [2]'எல்லாம் செய்தாலும், உன் ஹிதத்தையே நாடுகின்றவர்களான எங்களுடைய வார்த்தைகளைக் கேட்க வேண்டுங்காண்' என்ன, 'நீங்கள் சொல்லும் வார்த்தைகளைக் கேட்கைக்கு நெஞ்சு வேண்டுமே? அது அவன் பக்கல் போயிற்று,' என்கிருள்.

---

1. 'விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக்கொடி உடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகைஅணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையில் ஏந்தி'
என்பது, **சிலப்பதிகாரம்.**

2. 'என் நெஞ்சு நாண்மலர்ப் பாதம் அடைந்தது' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிருர்.

என்னுடை நல் நுதல் நங்கைமீர்காள் - எனக்கு உறவு முறையரான நீங்கள் வடிவழகிலும் பெண்மையிலும் குறை வற்று இருக்கையாலே துக்கம் இல்லாதவர்களாய் இருந் தீர்கோள். யான் - எல்லாம் இழந்த துக்கம் உடையவளாய் இருக்கிற நான். இனிச் செய்வது என் - இப்படியான பின்பு, எதனைச் செய்வேன்! [1]இவற்றை மீட்கவோ, அவனை நியமிக்கவோ? 'எல்லா அளவிலும் தரித்து இருக்க வேண்டாவோ?' என்ன, 'அதற்கும் நெஞ்சு வேண்டாவோ?' என்கிருள். என் நெஞ்சு - எல்லா நிலைகளிலும் எனக்கு அடங்கியிருக்கிற நெஞ்சு. என்னை - தன்னைக்கொண்டு பிழைக்க இருக்கிற என்னை. நின் இடையேன் அலேன் என்று நீங்கி - 'உன்னோடு எனக்கு அடைவு இல்லை' என்று அகன்று. [2]'இராவணனுக்குப் பின் பிறந்த விபீஷணன் இவ்விதமாகக் கடுஞ்சொற்களை இராவணனைப் பார்த்துக் கூறி, எவ்விடத்தில் இலக்குமணனோடு கூட இராமன் இருந்தானோ, அவ்விடத்தில் சிறிது காலத்தில் வந்து சேர்ந்தான்,' என்கிறபடியே, செய்து போயிற்றுச் சம்பந்தம் சொல்லி மீட்க ஒண்ணுதபடி. [3]'என்னாலே நன்கு விடப்பட்டது' என்று போயிற்று. 'உங்களுக்கு நான் நின்ற நிலை அன்றோ, என் நெஞ்சு எனக்கு அவ்வருகே போனபடி? [4]

நேமியும் சங்கும் இரு கைக்கொண்டு பல் நெடுஞ் சூழ்சுடர் ஞாயிற்றோடு பால் மதி ஏந்தி ஓர் கோலம் நீலம் நல் நெடுங்குன்றம் வருவது ஒப்பான் நாள் மலர்ப்பாதம் அடைந்தது - பின் தொடர ஒண்ணுதபடி கடலிலே ஆயிற்றுப் புக்கது. நேமியும் சங்கும் இரு கைக்கொண்டு - வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டும்படி இருக்கிற

---

1. 'இவற்றை' என்றது, மேற்பாசுரத்தில் கூறிய நாணும் நிறைவும் என்னுமவற்றை.

2. அகன்றதன் சரமாவதியை அருளிச்செய்கிருர், 'இராவண னுக்கு' என்று தொடங்கி. சரமாவதி - முடிந்த நிலம்.

> 'இதி உக்த்வா பருஷம் வாக்யம் ராவணம் ராவணாநுஜ:
> ஆஜகாம முஹூர்த்தேந யத்ர ராம: ஸலக்ஷ்மண:'

என்பது, ஸ்ரீராமா. யுத். 17 : 1.

3. 'ஸந்ந்யஸ்தம் மயா' என்பது, பிரமாணம்.

4. 'உங்களோடு எங்கள் இடை இல்லை' என்று நான் போயினமை போன்று, என் நெஞ்சும் என்னை விட்டுப் போயிற்று' என்கிருர், 'உங்களுக்கு' என்று தொடங்கி.

இரண்டு கைகளிலும் ஆழ்வார்களைத் தரித்து. பல் நெடுஞ் சூழ்சுடர் ஞாயிற்றோடு பால் மதி ஏந்தி - பலவாய்த் தூரப் போய் எங்கும் ஒக்க பரவக் கூடியனவான ஒளிகளை யுடைய சூரியனோடே பாலோடு ஒத்த ஒளியையுடைய சந்திரனை ஏந்தி. ஓர் கோலம் நீலம் நல் நெடுங்குன்றம் வருவது ஒப்பான் - அந்த ஒளிகளுக்குப் பரபாகமாய், மற்றை இனங்கட்கு வேறுபட்டதாய், கண்டார் கண் குளிரும்படி நீலமாய், [1]மற்றும் சொல்லப்படாத அழகு களை உடைத்தாய், அளவிடற்கு அரியதாய் இருப்பது ஒரு மலை நடந்து வருமாறு போலே ஆயிற்று, ஆழ்வார்களை ஏந்திக்கொண்டு உலாவும்படி. நாள் மலர்ப்பாதம் அடைந் ததுவே - செவ்விப் பூவிலே வண்டு படிந்தாற்போலே சேர்ந்தது ; யான் இனிச் செய்வது என் ? (10)

794

**பாதம் அடைவதன் பாசத் தாலே**
**மற்றவன் பாசங்கள் முற்ற விட்டுக்**
**கோதில் புகழ்க்கண் ணன்தன் னடிமேல்**
**வண்குரு கூர்ச்சட கோபன் சொன்ன**
**தீதில்அந் தாதிஓர் ஆயி ரத்துள்**
**இவையும்ஓர் பத்துஇசை யோடும் வல்லார்**
**ஆதும்ஓர் தீதிலர் ஆகி இங்கும்**
**அங்கும்எல் லாம்அமை வார்கள் தாமே.**

**பொ - ரை :** 'திருவடிகளை அடைய வேண்டும் என்ற ஆசை யாலே, உலக சம்பந்தமான வலிய ஆசைகளை அடியோடு நீக்கி, குற்றம் இல்லாத புகழ்கள் நிறைந்த கண்ணபிரானுடைய திருவடி களின்மேலே, வளவிய திருக்குருகூரிலே அவதரித்த ஸ்ரீ சடகோப ராலே அருளிச்செய்யப்பட்ட குற்றம் இல்லாத அந்தாதி ஓர் ஆயி ரத்துள் ஒப்பற்ற இவை பத்துப் பாசுரங்களையும் இசையோடு பாட வல்லவர்கள், தீங்கு ஒரு சிறிதும் இல்லாதவராகி, இந்த உலகத் திலும் மேல் உலகத்திலும் எல்லாம் நிறைந்து குறைவற்று இருப் பார்கள்,' என்றவாறு.

**வி - கு :** 'பாதம் அடைவதன் பாசத்தாலே பாசங்கள் முற்ற விட்டுச் சொன்ன இவையும் ஓர் பத்து,' என்க. 'பத்து இசையோடும் வல்லார் தீது இலராகி எல்லாம் அமைவர்கள்' என்பதாம்.

---

1. 'நல்' என்றதன் பொருள், 'மற்றும் சொல்லப்படாத அழகு களையுடைத்தாய்' என்பது.

ஈடு: முடிவில், [1]'இத்திருவாய்மொழி வல்லார், அறிவின்மை முதலிய எல்லாக் குற்றங்களும் நீங்கி, இவ்வுலகத்திலும் மேல் உலகத்திலும் தாங்களே கிருதக்கிருத்தியர் ஆவர்,' என்கிறார்.

பாதம் அடைவதன் பாசத்தாலே மற்ற வல் பாசங்கள் முற்ற விட்டு - திருவடிகளைக் கிட்டுகையில் உண்டான விருப்பத்தாலே புறம்பு உண்டான வலிய பற்றுகளை அடியோடே விட்டார்: [2]இது ஆயிற்று இத்திருவாய்மொழியிற்சொல்லிற்றாயிற்று. என்றது, 'புறம்பு உள்ள பற்றுகள் அற்றுத் திருவடிகளை ஆசைப்பட்டவர் அல்லர்; 'மாற்பால் மனம் சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு' என்கிறபடியே, திருவடிகளிற்பற்றினாலே ஒரு காரணம் பற்றி வந்த புறம்பு உண்டான பற்றினைத் தவிர்ந்தவர் என்றபடி. கோது இல் புகழ் - [3]திருவடிகளில் பற்றுக்குக் காரணம் அவனுடைய கல்யாண குணங்கள். குணங்களுக்குக் கோதாவது, தன்னை ஒழியப் புறம்பேயும் நசை செய்யும்படி இருக்கை. கண்ணன்றன் அடிமேல் வண் குருகூர்ச் சடகோபன் சொன்ன - இப்புகழ்களையுடைய கிருஷ்ணன் திருவடிகளிலே ஆயிற்றுச் சொல்லிற்று. பரம உதாரரான ஆழ்வார் அருளிச்செய்த.

தீது இல் அந்தாதி - பிரபந்தத்துக்குத் தீதாவது, வேறு கதைகளை எடுத்துக் கூறுதல். என்றது, ஸ்ரீராம சரிதம் சொல்லப்புக்கு, முருகனுடைய பிறப்பு, புஷ்பக வர்ணநம் என்னும் இவை தொடக்கமானவற்றிலே இழிந்து பேசுதலைத் தெரிவித்தபடி. [4]'இந்த நாராயணனுடைய சரிதத்தைச்

---

1. பின் இரண்டு அடிகளைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். 'யாதும்ஓர் தீதுஇலராகி' என்றதனைத் திருவுள்ளம்பற்றி, 'அறிவின்மை முதலிய எல்லாக் குற்றங்களும் நீங்கி' என்கிறார்.

2. இத்திருவாய்மொழியிற்சொன்ன அர்த்தத்தைச் சுருங்க அருளிச்செய்கிறார் என்னும் இடம் தோன்ற அருளிச்செய்கிறார், 'இதுவாயிற்று' என்று தொடங்கி. இதனால் இவர்க்கு உண்டான வேறுபாட்டினை அருளிச்செய்கிறார், 'புறம்பு' என்று தொடங்கி. 'மாற்பால்' என்பது, மூன்றாந்திருவந். 14.

3. 'பாதம் அடைவதன் பாசத்தாலே' என்றதனைக் கூட்டிக் 'கோதில் புகழ்' என்பதற்கு இயைபு அருளிச்செய்கிறார், 'திருவடிகளில்' என்று தொடங்கி.

4. இந்த நாராயணனுடைய' என்று தொடங்கும் வாக்கியம், பாரதம். 'நாராயண கதாம் இமாம்' என்பது.

சொல்லப் புகுகின்றேன்' என்று தொடங்கிப் போரின் வகை முதலானவற்றைச் சொல்லுதல். ஓர் ஆயிரத்துள் இவையும் ஓர் பத்து இசையோடும் வல்லார் - ஒப்பற்ற வையான ஆயிரம் திருவாய்மொழியில் இப்பத்தையும் மிக்க பிரீதியோடு சொல்லுமவர்கள். ஆதும் ஓர் தீது இலராகி - [1]அறிவின்மை முதலான குற்றங்களும் நீங்கப் பெறுவர். புறம்பு உள்ள நசை அற்று இருக்கச் செய்தே, பிரபந்தம் தலைக்கட்டுகைக்காக இருக்குமதுவும் அவர்களுக்கு இல்லை. இங்கும் அங்கும் எல்லாம் அமைவார்கள்- இவ்வுலகத்தோடு மேலுலகத்தோடு வாசி அறக்குறைவற்று இருப்பார்கள். என்றது, [2]'இவ்வுலகத்தில் செய்ய வேண்டியதைச் செய்து முடித்தவர்கள் யமனை எதிர் பார்க்கிறார்கள்,' என்கிறபடியே சமைந்திருப்பார்கள்; மேலுலகத்தில் 'நான் எல்லா அடிமைகளும் செய்வேன்' என்று குறைவு அற்று இருப்பார்கள். தாமே - [3]உபய விபூதியிலும் தாங்களே முதன்மை பெற்றவர்கள் ஆவார்கள். (11)

## திருவாய்மொழி நூற்றந்தாதி

**நங்கருத்தை நன்றாக நாடிநிற்கும் மால்அறிய**
**இங்கிவற்றில் ஆசை எமக்குளதென்—சங்கையினால்**
**தன்னுயிரில் மற்றில்நசை தான்ஒழிந்த மாறன்தான்**
**அந்நிலையை ஆய்ந்துரைத்தான் அங்கு.** (72)

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. 'யாதும் தீது' என்றதன் பொருள், 'அறிவின்மை' என்று தொடங்கும் வாக்கியம். 'ஓர் தீது' என்றதன் பொருள் 'புறம்புள்ள' என்று தொடங்கும் வாக்கியம். பிரபந்தம் தலைக்கட்டுகைக்காக இருத்தல், ஆழ்வாருக்கு.

2. இருக்கும் பிரகாரத்தை அருளிச்செய்கிறார், 'இவ்வுலகத்தில்' என்று தொடங்கி.

'க்ருத க்ருத்யாঃ ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும் ப்ரியம் இவாதிதிட என்பது, பாரதம்.

'பவாம்ஸ்து ஸஹவைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே
அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதঃ ஸ்வபதச்ச தே'
என்பது, ஸ்ரீராமா. அயோத். 31 : 25.

3. 'தாமே' என்ற ஏகாரத்தின் பொருளை அருளிச்செய்கிறார், 'உபய விபூதியிலும்' என்று தொடங்கி.

## மூன்றாந்திருவாய்மொழி—'அங்கும் இங்கும்'

### முன்னுரை

**ஈடு :** [1]மேல் திருவாய்மொழியிலே, பத்தாம் பாசுரத்திலே 'ஓர் கோல நீல நல் நெடுங்குன்றம் வருவது ஒப்பான்' என்று வடிவழகை அநுசந்தித்தவாறே, தாம் பட்ட கிலேசத்தை மறந்து, 'சிலர் விரும்பியதுவே காரணமாக இவ்வடிவோடே [2]சம்சாரத்திலே தனியே வந்து அவதரித்து உலாவாநிற்பன்; பகைவர்களும், நடுநியலைரும், வேறு பிரயோஜனங்களை விரும்புகின்றவர்களுமாய் இவனுக்குப் பரிவுடையார் ஒருவரும் இன்றிக்கே இருக்கிற சம்சாரத்திலே, அடியார்கள் விரும்பினவற்றைத் தருவதற்காகச் சம்சாரிகள் இனத்தனாய், சிலர்க்குப் பரதந்திரனாயும் அவதாரத்துக்குப் பிற்பட்டார்க்குக் கோயில்களிலும் வீடுகளிலும் அண்மையில் இருப்பவனாயும் இருந்துகொண்டிருக்கிற இவனுடைய சௌகுமார்யம் அறிந்து பரியக் கூடியவர் ஒருவரும் இலர்; நானும் உதவப் பெறுகின்றிலேன்' என்று அவன் தனிமைக்கு வெறுத்து அஞ்சினாராக, ' 'நமக்குப் பரிவர் இலர்' என்று அஞ்ச வேண்டா; [3]முமுக்ஷுகளும் முத்தரும் நித்தியரும் ஆகிய இவர்கள் நம்மேல் பரிகையே யாத்திரையாய் இருக்குமவர்கள் அல்லரோ? அன்றியும், நமக்குதான் வேறே சிலர் பரியவேண்டி இருந்ததோ?' என்று சர்வேஸ்வரன்

---

1. 'மேல் திருவாய்மொழியிலே ஆத்துமாவிலும் ஆத்துமாவோடு சம்பந்தப்பட்ட பொருள்களிலும் நசை அற்ற படியைச் சொல்லி, இத்திருவாய்மொழியிலே 'அவனுக்குப் பரிவர் இலர்' என்று துக்கப்படுவதற்குக் காரணம் யாது?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'மேல் திருவாய்மொழியிலே' என்று தொடங்கி.

2. இத்திருவாய்மொழியில் வருகின்ற 'என் மனம் சூழ வருவாரே' என்றதனைத் திருவுள்ளம் பற்றிச் 'சம்சாரத்திலே' என்று தொடங்கியும், 'தானவர் யாவரும், வானவர்' என்றதனைத் திருவுள்ளம் பற்றிப் 'பகைவர்களும்' என்றுதொடங்கியும், 'கோளூரகத்தும் புளிங்குடியும்' என்றதனைத் திருவுள்ளம் பற்றிக் 'கோயில்களிலும்' என்று தொடங்கியும், 'கைகளை ஆரத்தொழக் காணேன்' என்றதனைத் திருவுள்ளம் பற்றி 'நானும் உதவப் பெறுகின்றிலேன்' என்றும் அருளிச்செய்கிறார். சௌகுமார்யம் - மிருதுத்தன்மை.

3. 'தலக்கம் இல்லா' என்பது போன்றவைகளைக் கடாட்சித்து 'முமுக்ஷுகளும்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

[1]தன் வரம்பில் ஆற்றலுடைமையைக் காட்டிச் சமாதானம் செய்ய, சமாதானத்தை அடைந்தவராய் உவகையர் ஆகிருர்.

அன்றிக்கே, [2]'சர்வேஸ்வரன்மேல் பரிகைக்குத் தமக்குக் கூட்டு ஆவார் இலர் என்று தம் தனிமைக்கு வெறுக்கிருர்' என்றும் சொல்லுவார்கள். [3]நித்திய சூரிகள் பகவத் அனுபவத்திலே நோக்குள்ளவர்கள்; சம்சாரிகள் ஐம்புல இன்பங்களிலே நோக்குள்ளவர்கள்; பிரமன் சிவன் முதலானவர்கள், தங்களுக்காக [4]'நீள் நகர் நீள் எரி வைத்து அருளாய்' என்று அவனை அம்புக்கு இலக்கு ஆக்குதல், ஏவிக் காரியம் கொள்ளுதல் செய்பவர்கள்; ஆகையாலே, பரிகைக்குத் தமக்கு ஒரு துணை இல்லை என்று தம் தனிமைக்கு வெறுக்கிருர் என்றபடி. [5]சேஷமாக உள்ள இவ்வாத்துமாவுக்குச் **'சேஷியே இரட்சகன்'** என்னும் வெளிச்சிறப்பு அறிவிற்கு முதல் அடி; [6]சேஷவஸ்துவாகில், சேஷிக்கு அதிசயத்தை விளைத்துத் தன் சொரூபம் பெறுமது ஆகையாலே, **'அவன் காப்பாற்றப்படுமவன், நாம் காப்பாற்றுமவர்'** என்னுமளவும் செல்ல அறிகை, சொரூபத்தை உள்ளபடி உணருகையாவது.

---

1. 'மாகடல்தன்னைக் கடைந்தானை' என்பதனைக் கடாட்சித்துத் 'தன் வரம்பில் ஆற்றலுடைமையைக் காட்டி' என்கிருர்.

2. இத்திருவாய்மொழியில் வருகிற 'தாளும் தோளும் கைகளை ஆர' என்பது போன்றவைகளைக் கடாட்சித்து வேறும் ஒரு வகையில் அவதாரிகை அருளிச்செய்கிருர், 'சர்வேஸ்வரன்' என்று தொடங்கி.

3. 'துணை இலர் என்கிறது என்? நித்தியசூரிகள் முதலானோர் இலரோ?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிருர், 'நித்திய சூரிகள்' என்று தொடங்கி.

4. 'நீள்நகர்' என்பது, திருவிருத்தம், 92.

5. 'காப்பாற்றுகிறவனைக் கண்டால், தான் விரும்புகிற காரியங்களை வேண்டிப் பெற்றுக்கொள்வதே அன்றி, 'அவனுக்கு என் வருகிறதோ?' என்று பரியத்தேடுவது என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிருர், 'சேஷமாக உள்ள' என்று தொடங்கி. வெளிச்சிறப்பு - ஞானம்.

6. 'சேஷமாக உள்ள இவ்வாத்துமாவுக்கு முடிந்த நிலம்யாது?' என்ன, 'சேஷ வஸ்துவாகில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

இத்திருவாய்மொழி நம்மாழ்வாருடைய திருப்பல்லாண்டு என்று அருளிச்செய்வர்.

795

***அங்கும் இங்கும் வானவர் தானவர் யாவரும்***
***எங்கும் இனையை என்றுஉன்னை அறியகி லாதுஅலற்றி***
***அங்கம் சேரும் பூமகள் மண்மகள் ஆய்மகள்***
***சங்கு சக்கரக் கையவன் என்பர் சரணமே.***

பொ - ரை : அந்த உலகங்களிலும் இந்த உலகத்திலும் மற்றுமுள்ள எல்லா உலகங்களிலும் தங்கி இருக்கின்ற தேவர்களும் தானவர்களும் மற்றும் உள்ள மனிதர்களும் ஆகிய இவர்கள், இத்தன்மையை என்று உன்னை அறியமாட்டாது துதித்து, 'ஸ்ரீதேவியும் பூதேவியும் நீளாதேவியும் ஆகிய தேவிமார்கள் திருமேனியில் சேர்ந்திருக்கின்ற, சங்கையும் சக்கரத்தையும் தரித்திருக்கும் திருக்கரங்களையுடைய எம்பெருமானே ! நாங்கள் சரணம்,' என்பர்கள்.

வி - கு : 'அங்கும் இங்கும் எங்கும் வானவர் தானவர் யாவரும் இனையை என்று அறியகிலாது அலற்றிச் சரணம் என்பர்' என்க. 'இத்தன்மையை என்று உன்னை அறிய மாட்டாது' என்றது, 'உன் சௌகுமார்யத்தை அறியமாட்டாது' என்றபடி. 'சேரும் அவன்' என்றும், 'சங்கு சக்கரக் கை அவன்' என்றும் கூட்டுக. ஆய் மகள் - நப்பின்னைப்பிராட்டி.

இத்திருவாய்மொழி, கலிநிலைத்துறை.

ஈடு : முதற்பாட்டு. [1]இதில், 'உன் சௌகுமார்யத்தை அறிந்து பரிதல் இன்றிக்கே, தாங்கள் விரும்பியனவற்றை அடைதற்குச் சாதனம் என்று இருப்பர்கள்' என்று, ஐஸ்வர்யங்களை விரும்புகின்றவர்களுடைய செயலைக் குறித்துக் குறை கூறுகிறார்.

அங்கும் இங்கும் - மேல் உலகங்களிலும் பூமியிலும். எங்கும் - சொல்லப்படாத பாதாளம் முதலிய உலகங்களிலும். வானவர் - அநுகூலர். தானவர் - பிரதிகூலர். யாவரும் - இரண்டு வகையினருமான மனிதர்கள் முதலானவர்களும். உன்னை இனையை என்று - சர்வேஸ்வரனை உன்னை இப்படிப்பட்டவன் என்று. என்றது, 'நிரதிசய சௌகுமார்யத்தையுடையவன் என்று' என்றபடி. [2]இவர் நெஞ்சில் அவன் சௌகுமார்யமே ஆயிற்று உறைத்

1. 'இனையை என்று அறியகிலாது சரணம் என்பர்,' என்பதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. ' 'இனையை' என்ற பதம்,சௌகுமார்யத்தைக் காட்டுமோ?' என்ன, 'இவர்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

திருப்பது. இனையை அறியகிலாது - கருமுகை மாலை போலே இருக்கிற உன்படி அறியாதே. [1]பரிய அறியாமைக்கு அநுகூலரான தேவர்களோடு பிரதிகூலரான அசுரர்களோடு, இவ்விரண்டும் கூடின மனிதர்களோடு வாசி இல்லை. [2]அவனைப் பரியக் கண்டவர்கள் எல்லாரும் என்று இருக்கிறாராயிற்று இவர். அலற்றி - [3]'எவன் எல்லாவற்றையும் முழுதும் உணர்ந்தவனே, எல்லாவற்றையும் தனித்தனியாகவும் உணர்ந்தவனே' என்றும், [4]'இவனுடைய ஆற்றல் உயர்ந்தது; பல வகையாகக் கேட்கப்படுகின்றது; இவனுடைய ஞான பலக் கிரியைகள் இயல்பானவை' என்றும் தங்களுடைய இரட்சணத்துக்கு உடலான வார்த்தைகளைக் கதறாநிற்பர்கள். [5]நீ பாதுகாக்கப்படுமவன் என்று அறியார்கள். [6]சௌகுமார்யத்தையும் அழகையும் சொல்லுகிறது இதற்குமேல்:

பூமகள் மண்மகள் ஆய்மகள் அங்கம் சேரும் - [7]அவனை அடைவதற்குப் புருஷகாரமாகப் பிராட்டிமார்

---

1. 'பிரதிகூலரான தானவர்கள் பரிவர்களோ?' என்ன, திருஷ்டாந்தத்தின்பொருட்டு என்கிறார், 'பரிய அறியாமைக்கு' என்று தொடங்கி. அதாவது, 'பிரதிகூலர்கள் பரியாதது போன்று, அநுகூலர்களும் பரிய அறியார்கள்' என்றபடி.

2. மேலதற்கே வேறும் ஒரு வகையில் விடை அருளிச்செய்கிறார், 'அவனை' என்று தொடங்கி. என்றது, 'இந்தச் சரீரத்தைப் படைத்தது சர்வேஸ்வரனை ஆராதிக்கும்பொருட்டேயாதலின், எல்லாரும் பரிய வேண்டியவர்களே' என்றபடி.

3. 'யஃ ஸர்வஜ்ஞஃ ஸர்வவித்'
என்பது, முண்டகோபநிடதம், 1 : 1.

4. 'பராஸ்ய ஶக்திஃவிவிதைவ ஶ்ரூயதே
ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பலக்ரியாச'
என்பது, ஶ்வேதாஶ்வதர உபநிடதம், 6.

5. 'ஆயின், எது செய்ய வேண்டும்?' என்ன, 'அவன் சௌகுமார்யத்தை நினைத்துப் பரியவேண்டும்; அது செய்கிறார்கள் இலர்' என்கிறார், 'நீ' என்று தொடங்கி.

6. புஷ்பத்தில் வசிப்பவள் ஆகையாலே மிகுந்த மிருதுத்தன்மையையும் அழகையுமுடைய பிராட்டி முதலானோர் சேர்ந்திருக்கும் திருமேனி என்கையாலே, அவனுடைய மிருதுத்தன்மையும் அழகும் சித்தம் என்று திருவுள்ளம் பற்றி அருளிச்செய்கிறார், 'சௌகுமார்யத்தையும்' என்று தொடங்கி.

7. 'நம்மைப் பாதுகாப்பவன் அவன்' என்றிருக்குமவர்கள்' பிராட்டிமாரை நினைக்கும் நினைவினை அருளிச்செய்கிறார், 'அவனை' என்று தொடங்கி.

உண்டு என்பர்கள். என்றது, [1]'யாவன் குற்றம் செய்யாதவன்?' என்பாரும், 'குற்றத்தை உணருகிறது என்? பொறுக்குமித்தனை அன்றோ?' என்பாரும், முதலிலே குற்றம் காணாதபடி தன் இனிமையை முன்னிடுவாரும் அங்கே உண்டு என்பர்கள் என்றபடி. [2]'வடிவாய் நின் வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு' என்று அச் சேர்த்திக்கு மங்களாசாசனம் செய்வார் இலர். சங்கு சக்கரம் கையவன் - [3]கையும் திருவாழியுமான அழகை அனுபவிக்கைக்கு இழிவார் இலர். நம் விரோதிகளைத் துண்டிக்கைக்குக் கையிலே திவ்விய ஆயுதங்களையுடையவன் என்பர். [4]'வடிவார் சோதி வலத்துறையும் சுடர் ஆழியும் பல்லாண்டு' என்ன வேண்டி இருக்குமே இவர்களுக்கு. சரணம் என்பர் - விரும்பினவற்றைப் பெருதற்குச் சாதனம் என்பர்; 'விரும்பத் தக்கது என்று அறிவார் இலர்; சுகுமார விஷயம் என்று அறிவார் இலர்,' என்றது, 'முன்தானை ஏற்றல், எதிரிகள் அம்புக்கு இலக்கு ஆக்குதல் செய்வர்கள்' என்றபடி. (1)

796

***சரணம் ஆகிய நான்மறை நூல்களும் சாராதே***
***மரணம் தோற்றம் வான்பிணி மூப்பென் றிவைமாய்த்***
***கரணப் பல்படை பற்றுஅற ஓடும் கனல்ஆழி [தோம்***
***அரணத் திண்படை ஏந்திய ஈசற்கு ஆளாயே.[5]***

பொ - ரை: 'புகலிடமாய் இருக்கின்ற நான்கு வேதங்களாகிற சாஸ்திரங்களில் இழியாமல், வாள் வேல் முதலிய கருவிகளையுடைய

1. புருஷகாரமாக இருக்கும் விதத்தை அருளிச்செய்கிறார், 'யாவன்' என்று தொடங்கி. இப்பொருளையுடைய சுலோகத்தை 6 ஆம் பக். காண்க.

2. அவர்களுடைய நினைவினை இகழ்கின்ற இவருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார், 'வடிவாய்' என்று தொடங்கி. இது, திருப்பல்லாண்டு, 2.

3. 'சங்கு சக்கரக் கையவன்' என்னுமவருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார், 'கையும்' என்று தொடங்கி.

4. 'ஆயின், தாம் எப்படி இருப்பர்?' என்ன, 'வடிவார் சோதி' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'வடிவார்' என்பது, திருப்பல்லாண்டு. 2.

5. இழந்த செல்வத்தைப் பெற விரும்புகின்றவர்கள், புதிய செல்வத்தைப் பெற விரும்புகின்றவர்கள் என்னும் இரு வித ஐஸ்வரிய காமரையும் சொல்லுகிறார் இப்பாசுரத்தால்.

பல வகைப்பட்ட சேனைகளும் பற்று அறும்படி ஓடச் செய்கின்ற, நெருப்பைப் போன்று பிரகாசிக்கின்ற, அடியார்களுக்குப் பாதுகாவலாய் உள்ள வலிய ஆழிப்படையைத் தரித்திருக்கின்ற ஈசனுக்கு அடிமைப்பட்டும், இறப்பு, பிறப்பு, பெரிய வியாதி, முதுமை என்னும் இவற்றையே நாம் போக்கிக்கொண்டோம். என்றது, 'இவற்றைப் போக்கிக்கொண்டது இத்தனை ஒழிய, வேறு அத்தாணிச் சேவகம் பெற்றோம் இல்லையே' என்றபடி.

வி - கு : (நாம்) சாராதே - சாராதும், ஈசற்கு ஆளாய் - ஆளாயும் இவை மாய்த்தோம் என்க. ஓடும் - ஓடச்செய்கின்ற கனல் ஆழி என்க. அன்றிக்கே, 'பல் படை பற்று அறும்படியாகப் பகைவர்கள்மேல் ஓடுகின்ற கனல் ஆழி' என்னலுமாம். 'அரணம் திண்கனல் ஆழிப்படை' என்க.

ஈடு : இரண்டாம் பாட்டு. [1]'ஐஸ்வர்யம் போலே நிலை நில்லாதது ஒன்று அன்றே இது? நித்தியமாய் இருப்பது ஒன்று அன்றோ?' என்று ஆத்தும லாபத்துக்காக வணங்குகிற கேவலர் வந்து தோற்ற, அவர்கள் செயலைக் குறித்துக் குறை கூறுகிறார். என்றது, [2]'சத்துவம் முதலிய குணங்களையுடையாரை விஷயமாகக் கொண்டவை வேதங்கள்' என்கிறபடியே, [3]ஐஸ்வரியத்தையும் அதற்குரிய சாதனங்களையும் தெரிவிக்கிற முற்பகுதியில் இழியாமல் வீட்டு நெறியைத் தெரிவிக்கிற பிற்பகுதியிலே நின்று இறைவனை அடைந்து பிறப்புப் பற்றை மாய்த்தோம் அன்றோ நாம் என்று கேவலர் செயலுக்கு இரங்குகிறார் இதில் என்றபடி.

---

1. 'மரணம் தோற்றம் வான்பிணி மூப்பு என்ற இவை மாய்த்தோம்' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. இப்பாசுரத்திற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'சத்துவம் முதலிய' என்று தொடங்கி.

'த்ரைகுண்ய விஷயா வேதாঃ நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுந' என்பது, ஸ்ரீ கீதை, 2 : 45.

'மாய்த்தோம் அன்றோ நாம்' என்றது, ஈண்டு முன்னிலைக்கண் வந்தது. 'நாமரை யாமத்து என்னோ வைகி நயந்ததுவே' (திருக்கோவையார், 164.) என்றவிடத்து 'நாம்' என்னும் முன்னிலை உளப்பாட்டுத்தன்மை உயர்வுதோன்ற முன்னிலைக்கண் வந்தது' என்றார் பேராசிரியர். இந்த எட்டாம் பத்தின் 44-ஆம் பக்கக் குறிப்புப் பார்க்க.

3. 'நான் மறை நூல் சரணம் ஆகையாவது என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'ஐஸ்வர்யமும்' என்று தொடங்கி. 'அவற்றைப் பெறுதற்குரிய சாதனங்கள்' என்றது, ஜோதிஷ்டோமம் முதலிய யாகங்களை.

சரணமாகிய - ஐஶ்வர்யங்கள் விஷயமாகவும், அவற்றைப் பெறுதற்கு உரிய சாதனங்கள் விஷயமாகவும் உள்ள ஞானங்களுக்குச் சாதனமான, நான்மறை நூல்கள் - நான்கு வேதங்களாகிற சாஸ்திரங்கள். நூல் - சாஸ்திரம். அன்றிக்கே, 'நான்மறைகளும் நூல்களும்' எனப் பிரித்து, நூல்கள் என்பதற்கு, 'ஆகமம் முதலானவைகள்' என்று பொருள் கூறலுமாம். 'நான்மறையாகிற சாஸ்திரம்' என்றே **சீயர்** அருளிச்செய்வர்; [1]'வேத ஶாஸ்த்ரா விரோதிநா' என்னக் கடவது அன்றோ? மரணம் தோற்றம் வான் பிணி மூப்பு என்ற இவை மாய்த்தோம் - பிறப்பு இறப்புகள், பிரபலமான வியாதி, மூப்புத் தொடக்கமான ஆறு விதமான விகாரங்களை மறுவல் இடாதபடி கழித்துக்கொண்ட இத்தனை அன்றோ நாமும் செய்தது? '**மாய்த்தோம்**' என்ற உயர்வு நிந்தையிலே.

கரணம் பல் படை பற்று அற ஓடும் கனல் ஆழி - குதிரை தேர் யானை காலாள் என்பனவாய்ப் பல வகைப்பட்ட பகைவர்கள் சேனையானது அடியோடு ஓடும்படி ஒளி வீசுகின்ற திருவாழி. அன்றிக்கே, [2]'கரணங்களின் கூட்டங்களை விஷயங்களினின்றும் அடியோடு பற்று அற ஓடும்படி ஒளி வீசுகின்ற திருஆழி' என்னுதல். அரணம் திண் படை - அடியார்களுக்கு அரணாய்ப் பகைவர்களாலே வேறுபடுத்த ஒண்ணாதபடியாய் இருக்கை. அன்றிக்கே, 'ஈஶ்வரன் விடினும் அடியார்களை விடாத திண்மையையுடைய படை ஆதலின், '**திண்படை**' என்கிறார்' என்னலுமாம். ஏந்திய ஈசற்கு - திரு ஆழியை ஏந்துகையினாலே சர்வேஶ்வரன் ஆனவனுக்கு. ஆளாயே - 'அவர்கள் [3]ஆள் ஆகையாவது என்?' என்னில், பகவானை அடைய விரும்புமவனைப் போன்று, பகவானை வணங்கு

---

1. 'ஆயின், வேதமான சாஸ்திரம் என்ற இடம் உண்டோ?' என்ன, 'உண்டு' என்று அதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'வேத ஶாஸ்த்ர' என்று தொடங்கி. இது, ஆரிஷம்.

2. 'கரணங்களின் கூட்டங்களை' என்றது, 'ஐந்து இந்திரியங்களான கூட்டங்களை' என்றபடி. கரணம் - இந்திரியங்கள். பல்படை - கூட்டம்.

3. 'ஆள் ஆகையாவது என்?' என்றது, 'பகவானுடைய அனுபவத்தைவிட்டு, ஆத்தும அனுபவத்திலேயே நிறைவு பெற்றவர்களாய் இருக்கின்ற அவர்கள் ஆளாகையாவது என் என்னில்' என்றபடி. அந்திம ஸ்மிருதி - உடலைவிட்டு உயிர் நீங்கும் காலத்தில் பகவானைப் பற்றிய நினைவு.

தலும் அந்திமஸ்மிருதியும் உண்டு ஆகையாலே சொல்லுகிறது. ஆளாய், மரணம் தோற்றும் வான் பிணி மூப்பு என்ற இவை மாய்த்தோம். (2)

797

**ஆளும் ஆளார் ஆழியும் சங்கும் சுமப்பார்தாம்**
**வாளும் வில்லும் கொண்டுபின் செல்வார் மற்றில்லை**
**தாளும் தோளும் கைகளை ஆரத் தொழக்காணேன்**
**நாளும் நாளும் நாடுவன் அடியேன் ஞாலத்தே.**

**பொ - ரை :** ஒருவரை ஆளாகவும் அங்கீகரியார்; சக்கரத்தையும் சங்கையும் தாமே சுமப்பார்; வாளையும் வில்லையும் கொண்டு இளையபெருமாளைப் போன்று பின் செல்கின்றவர் ஒருவரும் இலர்; திருவடிகளையும் திருத்தோள்களையும் என்னுடைய கைகள் நிறையும்படியாக நான் தொழுவதற்கு என் கண்களாலே காணப் பெறுகின்றிலேன்; இந்தப் பூமியில் நாள்தோறும் அடியேன் தேடாநின்றேன்.

**ஈடு:** மூன்றும் பாட்டு. [1]‘வேறு பிரயோஜனங்களை விரும்புகிறவர்கட்காகத் தன் வாசி அறியாதே எதிரிட வல்ல சம்சாரத்திலே தனியே வசிக்கின்றான்; அங்குத்தைக்குக் காவலாக நான் உதவப் பெறுகின்றிலேன்’ என்று இன்னாதாகிறார்.

ஆளும் ஆளார் - [2]இரண்டு உலகங்களிலும் பரிகைக்கு ஆள் இல்லை; தனியே ஒருவரை ஆள வேண்டும் என்று இருக்கிறார். [3]நித்தியசூரிகள் பகவானுடைய அனுபவத்திலேயே நோக்குள்ளவர்கள்; ஆழியும் சங்கும் சுமப்பார் தாம் - [4]ஆபரணமான திவ்விய ஆயுதங்கள், அவனுடைய மிருதுத்தன்மையாலே மலை எடுத்தாற்போலே சுமை

---

1. திருப்பாசுரம் முழுதினையும் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. ‘இம்மை மறுமை என்னும் இரண்டு உலகங்களையும் ஆளாநிற்க, ‘ஆளும் ஆளார்’ என்கிறது என்?’ என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், ‘இரண்டு’ என்று தொடங்கி.

3. ‘ஆள் இல்லாதபடி எப்படி?’ என்ன, ‘நித்தியசூரிகள்’ என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. ‘ஏந்துவார்’ என்னாமல் ‘சுமப்பார்’ என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், ‘ஆபரணமான’ என்று தொடங்கி.

யாகத் தோற்றுகிறது இவர்க்கு. [1]பகைவர்களுக்கு ஆயுதங்களாய், அனுபவிப்பார்க்கு ஆபரணமாய் இருக்கிறவை. தாம் - 'தம்மைப் பார்த்துக்கொள்ள வேண்டாவோ? [2]எப்போதும் கை கழலா நேமியான் அன்றோ? அவனுக்கு நிரூபகங்களான இவை சுமையோ?' என்ன, அதுதான் செய்கிறது. வாளும் வில்லும் கொண்டு - [3]இளையபெருமாளைப் போலே ஒருவர் பின்னே கொடு சென்றால் ஆகாதோ? 'ஆளும் ஆளார், சுமப்பார் தாம், பின் செல்வார் மற்று இல்லை' என்கிறது, 'பரிவரான நீர் அவற்றுக்கு அன்றோ?' என்று தம்மை ஏவுகைக்காக.

தாளும் தோளும் - [4]நடக்கும்போது நடைச்சக்கரவத்துப் பிடிக்கும்படி ஆயிற்று, மாறி இடும் திருவடிகள் இருப்பது. [5]'ஸ்ரீராமபிரான் முன்னே எழுந்தருளினர்' என்னக்கடவது அன்றோ? அதனையும், வீசுதோள்களையும். [6]கைகளை ஆர - 'வயிறு ஆர உண்ண' என்பாரைப் போலே. தொழக் காணேன் - [7]தொழுகையும் பரிதலும் பரியாயம்

---

1. 'ஆயுதங்கள் ஆபரணமானபடி எப்படி?' என்ன, 'பகைவர்களுக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. 'வாளும் வில்லும் கொண்டு' என்பதற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார், 'எப்போதும்' என்று தொடங்கி. நிரூபகங்களான - அறுதி இட்டு உரைப்பவைகளான.

3. 'பின் செல்வார் மற்று இல்லை' என்பதற்கு, 'பின் செல்வார் உண்டோ?' என்ன, 'இளையபெருமாளைப்போலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. 'தாள்களையும் தோள்களையும் தொழுவதற்கு அப்படி மனக் கவர்ச்சியாக இருக்குமோ?' என்ன, 'நடக்கும் போது' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். நடைச் சக்கரவத்துப் பிடிக்கையாவது, 'நடைச் சக்கரவர்த்தி வந்தான்' என்று விருது பிடித்தல்.

5. மாறி இடும் திருவடிகள் மனக்கவர்ச்சியாக இருக்கும் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'ஸ்ரீராமபிரான்' என்று தொடங்கி.

'அக்ரதঃ ப்ரயயௌ ராமঃ ஸீதா மத்யே ஸுமத்யமா
ப்ருஷ்டதஸ்து தநுஷ்பாணிঃ லக்ஷ்மணঃ அநுஜகாமஹ'

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 11 : 1.

6. 'கைகளை' என்பதில் ஐகாரம் அசைநிலை. 'கைகள்' என்பதே பொருள்.

7. ''பரியக்காணேன்' என்னாமல், 'தொழக் காணேன்' என்பான் என்?' என்ன, 'தொழுகையும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார், பரியாயம் - ஒரு பொருட்சொற்கள்.

போலே காணும். தொழக் காணப் பெறுகின்றிலேன். [1]'நம:' என்பதனால், எனக்கு அன்று, அவனுக்கு என்று அன்றோ சொல்லுகிறது? தொழுதலும், நமஃ என்றலும் பரியாயம் அன்றோ? நாளும் நாளும் நாடுவன் - அவன் தனிமையை நினைத்து, 'அவனுக்கு என் வருகிறதோ?' என்று நாள்தோறும் ஆராயாநிற்பன். [2]சம்பந்தம் நித்தியமானால் அதன் காரியமான பரிவும் நித்தியமாகக் கடவது அன்றோ? அடியேன் - சொரூப ஞானமுடைய நான். என்றது, 'சேஷிக்கு மேன்மையை விளைக்கையே சேஷவஸ்துவுக்குச் சொரூபம் என்று அறிந்த நான்' என்றபடி. ஞாலத்தே - [3]பரமபதத்திலே இருந்து அஸ்தாநேபய சங்கை பண்ணுகிறேனோ? பிரஹ்மாஸ்திரம் விடுவார், நாக பாசத்தை இட்டுக் கட்டுவார், அழைத்துவைத்து மல்லரை இட்டு வஞ்சிக்கத் தேடுவார், பொய்யாசனம் இடுவார் ஆகிய இவர்கள் இருக்கிற தேசத்தில் வாழாநின்றால் நான் அஞ்சாதே செய்வது என்? (3)

798

**ஞாலம் போனகம் பற்றிஓர் முற்றா உருவாகி**
**ஆலம் பேரிலை அன்ன வசம்செயும் அம்மானே!**
**காலம் பேர்வதுஓர் காரிருள் ஊழிஒத் துளதால்உன்**
**கோலம் காரெழில் காண லுற்று ஆழும் கொடியேற்கே.**

பொ - ரை: 'உலகத்தை எல்லாம் உண்டு, முகிழ் விரிகின்றது ஓர் ஆல் இலையில் ஓர் இளம்பிள்ளையாய் இடம் வலமாகப் படுத்த அம்மானே! மேகம் போன்ற உன் அழகிய கோலத்தைக் காண வேண்டும் என்று விரும்பி ஆழங்காற்பட்ட கொடியேனாகிய எனக்கு ஒரு கணத்தினின்றும் மற்றொரு கணத்திற்கு மாறுகின்ற சிறிய காலமானது, கரிய இருள் நிறைந்த ஊழிக்காலத்தை ஒத்திருக்கின்றது,' என்றவாறு.

---

1. 'தொழுதலும் பரிதலும் பரியாயமானவாறு யாங்ஙனம்?' என்ன, 'நமஃ' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, 'அவனுக்குப் பரதந்திரமானால் அவனுக்கு அதிசயத்தைப் பண்ணுகை சொரூபமாகையாலே 'நமஃ' என்பதனாலே பரிவைச் சொல்லுகிறது' என்றபடி.

2. 'நாள்தோறும் ஆராய வேண்டுமோ?' என்ன, 'சம்பந்தம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. 'ஞாலத்தே' என்றதற்குக் கருத்துஅருளிச்செய்கிறார், 'பரமபதத்திலே' என்று தொடங்கி. அஸ்தாநே பய சங்கை பண்ணுதல்- அஞ்ச வேண்டிய இடம் அல்லாத இடத்திலும் அச்சத்தாலே 'என் வருகிறதோ!'என்று ஐயங்கொள்ளுதல்.

வி - கு : 'முற்று உருவாகிப் போனகம் பற்றி அன்னவசம் செய்யும் அம்மான்' என்க. அன்னவசம் செய்தல் - உண்ட உணவு ஜீர்ணம் ஆகாதபடி இடம் வலமாகப் படுத்தல். 'கொடியேற்குப் பேர்வது ஓர் காலம் ஊழி ஒத்துளது' என்க. பேர்தல் - மாறுதல்.

ஈடு : நான்காம் பாட்டு. [1] இவர் இப்படி அஞ்சினவாறே 'அழிவு காலத்தில் அவ்வாபத்தினின்றும் உலகத்தை எடுத்து வயிற்றிலே வைத்து நோக்கினவன் அன்றோ நான்? நீர் நம்மை நோக்கி அஞ்ச வேண்டாங்காணும்' என்று, தான் எல்லாப் பொருள்களையும் காப்பாற்றுகின்றவனாய் இருக்கும் இருப்பைக் காட்டினான்; 'எல்லாரையும் இரட்சிக்கின்ற வஸ்து அன்றோ பிரளயத்திலே அகப்படப் புக்கது?' என்று அதற்கும் அஞ்சுகிறார்.

ஞாலம் போனகம் பற்றி - [2] 'இது நமக்கு அரிது' என்று அறியாமல், பூமிப்பரப்பை அன்றோ வயிற்றிலே எடுத்து வைத்தது? 'வெண்ணெயும் ஜீர்ணியாது' என்றே அன்றோ இவர் இருப்பது? ஓர் முற்று உருவாகி - ஒரு [3]கொறுட்டிலே தெறித்தால் மற்றைக் கொறுட்டாலே பால்பாயும் பருவமாயிற்றுப் பருவம். அன்றிக்கே, 'யசோதையின் குழந்தையாகிய கிருஷ்ணனுக்கும் கீழாய் அன்றோ இருப்பது, இந்த இளமை?' என்னுதல். [4]பிரளய ஆபத்திலே வரையாதே பாதுகாத்த பாதுகாப்பும், அகடிதகடநா சாமர்த்தியமும் இவர் நெஞ்சில் படுகின்றன இல்லை; சௌகுமார்யமே ஆயிற்று இவர்க்குத் தோற்றி

---

1. 'ஆலம் பேர் இலை அன்னவசம் செயும் அம்மானே' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'ஞாலத்தைப் போனகமாகப் பற்றி' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'இது' என்று தொடங்கி.

3. 'கொறட்டிலே' என்ற பாடம், சீயர் அரும்பதத்துக்குப் பொருந்தும். 'கொடிற்றிலே' என்று இருக்கலாமோ என்று தோன்றுகிறது.

4. 'பாதுகாக்கும் தன்மையும், அகடித கடநாசாமர்த்தியமும் அச்சம் நீங்குதற்குக் காரணங்களே அன்றோ?' என்ன, 'பிரளய ஆபத்திலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். அகடித கடநா சாமர்த்தியம் - செயற்கரிய செயல்களையும் செய்யும் ஆற்றல். சௌகுமார்யம் - மிருதுத்தன்மை. 'ஞாலம் போனகம்' என்கையாலே பாதுகாக்கும் தன்மையும், 'ஆலம் பேரிலை' என்கையாலே அகடிதகடநா சாமர்த்தியமும் தோற்றுகின்றன.

இருப்பது. ஆலம்பேர் இலை - [1]அங்கு ஒரு தொட்டிலிலே கிடக்கப்பெற்றது, இங்கு ஓர் இளந்தளிரான ஆல் இலையிலே ஆயிற்றுத் திருக்கண் வளர்ந்தருளுகிறது. பேர்இலை - பெயருகிற இலை; அதாவது, 'முகிழ் விரிகிற இலை' என்றபடி. [2]'உலகங்கள் எல்லாம் அழிந்திருக்கும் காலத்தில் ஆலமரத்தினுடைய கிளையில் ஒரு தளிரிலே இக்குழந்தை படுத்துக்கொண்டிருக்கிறதே! இது என்ன ஆச்சரியம்!', 'இளந்தளிரில் கணவளர்ந்த' என்கிறபடியே. அன்றிக்கே, ஆலம் பேரிலை - 'ஆலிலை என்று ஒரு பெயர் மாத்திரமான இலை' என்னுதல். அன்றிக்கே, 'பெரிய இலை' என்று [3]விபரீத லக்ஷணையாய், 'சிற்றிலை' என்னுதல்.

அன்னவசம் செய்யும் - உணவுக்கு ஈடாக இடம் வலம் கொள்ளும். என்றது, 'யசோதைப்பிராட்டியின் தொட்டிலில் செய்யும் செயல்களனைத்தையும் செய்யுமாயிற்று அதற்குள்ளே. [4]'கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும் அதில்' என்றபடி. [5]தனக்கு ஜீர்ணமாகாத பூமியை உண்டலும், 'ஜீர்ணமாகாது' என்று அறியாத இளைஞன் ஆகையும், பிரளயத்திலே சிறிய இடத்தையுடைய ஆலிலையிலே திருக்கண்வளர்ந்தருளுகையும், அதிலே கிடந்த இடத்தில் கிடவாமல் விளையாடுதலும், இவை எல்லாம் பயத்துக்கு இடங்களாய் இருக்கிறதாயிற்று இவர்க்கு. அம்மானே - எல்லாரையும் காப்பாற்றுகின்றவன் ஆனவனே! [6]ஒரு சிறிய மனிதனுக்கு வந்தது ஒன்று

---

1. 'ஆலம்பேரிலை' என்றதனால் போதரும் வேறுபாட்டினைக் காட்டுகிருர், 'அங்கு' என்று தொடங்கி.

2. ஆலந்தளிரில் கண் வளர்ந்ததற்குப் பிரமாணங்கள் காட்டுகிருர், 'உலகங்கள்' என்று தொடங்கி.

'கதம் நுஅயம் ஸிஶுः ஶேதே லோகே நாஶமுபாகதே
ஶாகாயாம் வடவ்ருக்ஷஸ்ய பல்லவேது இதி விஸ்மிதः'

என்பது.

'இளந் தளிரில்' என்பது. பெரியதிரு. 2. 10 : 1.

3. விபரீதலக்ஷணை - குறிப்பு மொழி.

4. 'கிடக்கில்' - பெரியாழ்வார் திரு. 1. 1 : 9.

5. மேலே கூறியவற்றை எல்லாம் முடித்துக்காட்டுகிருர், 'தனக்கு' என்று தொடங்கி.

6. 'அம்மான்' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிருர், 'ஒரு சிறிய' என்று தொடங்கி.

அன்றிக்கே, எல்லாரையும் காப்பாற்றுகின்றவனை வனுக்கு வந்தது என்று இதுவும் அச்சத்திற்கு இடமாகிறது இவர்க்கு. பேர்வது ஓர் காலம் கார் இருள் ஊழி ஒத்துளதால் - உன் தனிமையை நினைக்க நினைக்க, ஒரு கணத்தினின்றும் மற்றொரு கணத்துக்குப் பேருகிற நடுவிலே சந்திக்கிற நேரமானது, மஹா அந்தகாரமான கல்பமாய்க் கொண்டு நெடுகாநின்றது எனக்கு.

உன் கார் எழில் கோலம் காணல் உற்று - 'உன்னுடைய கறுத்த எழிலான திருமேனியைக் காணல் உற்று' என்னுதல். அன்றிக்கே, 'மேகத்தினுடைய எழில் போலே இருந்துள்ள அழகு' என்னுதல். காணலுற்று ஆழுங் கொடியேற்கே - மங்களாசாசனம் செய்கைக்கு உன் அழகிய வடிவைக் காண ஆசைப்பட்டுப் பெறுதே நோவுபடுகிற மஹா பாபியான எனக்கு. [1]சம்சாரத்தின் அச்சம் அவனை அடையப் போம்; 'ஒரு காலத்திலும் முடியாதே நித்தியமாய் இருப்பது ஓர் அச்சம் தொடர்ந்து வரும்படியான பாபத்தைச் செய்தேன்' என்பார், '**ஆழுங் கொடியேற்கே**' என்கிருர். [2]'இரட்சகனுக்கு என் வருகிறதோ!' என்கிற அச்சத்துக்கு முடிவு இல்லையே ! (4)

799

**கொடியார் மாடக் கோளூர் அகத்தும் புளிங்குடியும்**
**மடியாது இன்னே நீதுயில் மேவி மகிழ்ந்தது தான்**
**அடியார் அல்லல் தவிர்த்த அசைவோ? அன்றேல்இப்**
**படிதான் நீண்டு தாவிய அசைவோ? பணியாயே.**

பொ - ரை : கொடிகள் கட்டிய மாடங்களையுடைய திருக்கோளூர் என்ற திவ்விய தேசத்திலும் திருப்புளிங்குடி என்ற திவ்விய தேசத்திலும் சோம்புதல் இல்லாமல் இப்படித் திருக்கண்வளர்ந்தருளி நீ மகிழ்ந்திருக்கிற இது, பல அவதாரங்களைச் செய்து அடியார்களுடைய துன்பத்தை நீக்கிய தளர்ச்சியோ? அன்றேல், திரிவிக்கிரம அவதாரத்தைச் செய்து இவ்வுலகத்தைத் தாவி அளந்த தளர்ச்சியோ? அருளிச்செய்ய வேண்டும்.

---

1. 'ஆழும்' என்ற நிகழ்காலத்தின் பொருளை விவரிக்கிருர், 'சம்சாரத்தின்' என்று தொடங்கி.

2. 'இந்த அச்சம் நித்தியமாக இருக்குமோ?' என்ன, 'இரட்சகனுக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர். என்றது, 'எம்பெருமானுடைய விக்கிரக வைலக்ஷண்யம் நித்தியமாகையாலே பரிவும் நித்தியமாய் இருக்கும்,' என்றபடி.

வி-கு: 'துயில் மேவி மகிழ்ந்தது அசைவோ? அசைவோ? பணியாய்' என்க. மடியாது - இடம் வலமாக மாறாமல். திருக்கோளூரும் திருப்புளிங்குடியும் பாண்டி நாட்டிலேயுள்ள திவ்விய தேசங்கள்.

ஈடு: ஐந்தாம் பாட்டு. [1]பிரளய சமுத்திரத்திலே தனியே கண்வளர்ந்தருளுகிறான் என்று பயப்பட்டவருடைய அச்சம் தீர, பரிவரும் உண்டாய், அச்சம் இல்லாதவையான திருக்கோளூர் திருப்புளிங்குடி தொடக்கமான இடங்களிலே கண்வளர்ந்தருளுகிறபடியைக் காட்டிக் கொடுக்க, அதுதானும் இவர்க்கு அச்சத்திற்குக் காரணமாயிற்று.

கொடி ஆர் மாடம் கோளூரகத்தும் - கொடி மிக்க மாடங்களையுடைய திருக்கோளூரிலும்: பகைவர்கள், கிடந்த இடம் அறிந்து அபிசரிக்கும்படி கொடி கட்டிக் கொண்டு கிடக்க வேண்டுமோ? [2]கொடிக்குப் பயப்பட வல்லார் இவரைப் போன்றார் இலர். கம்ஸ பயத்தாலே ஒளித்து வளர்ந்தாற்போலே இருக்கல் ஆகாதோ? [3]இந்த அச்சம் இல்லை அன்றோ மேற்பாட்டில்? அநுகூலர் என்றும் பிரதிகூலர் என்றும் வேறுபாடு அறத் தன்னோடு கலந்து கிடக்கையாலே. புளிங்குடியும் - [4]இதுவும் ஓர் அச்சத்திற்குக் காரணம். [5]பல இடங்களிலும் படுக்கை படுக்கிறது சிரமத்தின் மிகுதி என்று இருக்கிறார். மடியாது - [6]இடம் வலம் கொள்ளாமல். அன்றிக்கே, 'மடி'

---

1. 'கோளூரகத்தும் புளிங்குடியும் துயில் மேவி மகிழ்ந்தது' என்பதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'கொடியார் மாடம்' என்பதற்கு ரசோக்தியாக அருளிச்செய்கிறார், 'கொடிக்கு' என்று தொடங்கி. கொடி - பெண்ணுமாம்.

3. மேற்பாசுரத்துக்கும் இப்பாசுரத்துக்கும் வாசியை அருளிச்செய்கிறார், 'இந்த அச்சம்' என்று தொடங்கி. இல்லாமைக்குக் காரணத்தை அருளிச்செய்கிறார், 'அநுகூலர்' என்று தொடங்கி.

4. இரண்டு திருப்பதிகளிலும் கண்வளர்வதனைச் சொல்லுகிறவருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார், 'இதுவும்' என்று தொடங்கி.

5. 'அது எப்படி?' என்ன, 'பல இடங்களிலும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. 'இடம் வலம் கொள்ளாமல்' என்றதற்குக் கருத்து, 'பாடோடிக் கிடப்பதே என்று துக்கிக்கிறார்' என்பது.

என்று சோம்பாய், 'சோம்பாதே' என்னுதல். என்றது, 'நமக்காக இவன் கிடக்கிறான்' என்று அறிந்து, 'பரிதலுக்கு ஒருவரைப் பெற்றிலோம்' என்று [1]இளகாது ஒழிதலைக் குறித்தபடி.

இன்னே - இப்படியே. [2]'கிடந்ததோர் கிடக்கை' என்னுமித்தனை ஒழிய, பாசுரம் இடப் போகாதிருக்கை. நீ துயில் மேவி மகிழ்ந்ததுதான் - [3]அவிகாரியாய் இருக்கிற நீ ஒருபடியே கண்வளர்ந்தருளி, அதனாலே இனியன் ஆகைக்குக் காரணம் என்? [4]'இவன் முகத்திலே தெளிவுண்டாய் இருந்தது; அதற்கு அடி முன்பே ஒரு சிரமம் உண்டாகை அன்றோ?' என்று இருக்கிறார்; [5]சிரமமுடையார்க்கு உறங்க உறங்க முகம் தெளிந்து வரக் காண்கையாலே. அடியார் அல்லல் தவிர்த்த அசைவோ - திருவடிகளிலே சரணம் புகுந்த இந்திரன் முதலாயினோர்கட்காக இராவணன் முதலானோர்களை அழியச் செய்து, அவர்களுடைய துக்கங்களைக் கெடுத்த இளைப்போ? அன்றேல் - அன்றாயின், நீண்டு இப்படிதான் தாவிய அசைவோ - அன்றே பிறந்து அன்றே வளர்ந்து மிருதுவான திருவடிகளைக்கொண்டு காடும் ஓடையும் அளந்துகொள்ளுகையாலே திருவடிகள் நொந்தோ? பணியாய் - [6]தோள் நொந்தோ, திருவடிகள் நொந்தோ? அருளிச்செய்யாய். என்றது, 'தோள் நொந்தது என்னில் தோளைப் பிடிக்கவும், தாள் நொந்தது என்னில் தாளைப் பிடிக்கவும் அருளிச்செய்ய வேண்டும்' என்றபடி. அன்றிக்கே, 'வார்த்தைகளின் ஒலியின் தளர்ச்சியைக் கொண்டு அறியலாம் என்று

---

1. இளகாது ஒழிதல் - எழுந்திராது ஒழிதல்.

2. 'இன்னபடி என்று சொன்னால் என்?' என்ன, 'கிடந்ததோர்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'கிடந்ததோர்' என்பது, திருமாலை, 23.

3. அவிகாரி - வேறுபாடு இல்லாதவன்.

4. 'இனியன் ஆகை நல்லது அன்றோ?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'இவன்' என்று தொடங்கி.

5. 'இது எங்கே கண்டோம்?' என்ன, 'சிரமமுடையார்க்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. மேல் வாக்கியத்தை விவரணம் செய்கிறார், 'தோள் நொந்தோ' என்று தொடங்கி.

கேட்கிறூர்' என்னுதல். [1]'உகந்தருளின இடங்களிலும் செய்ய முடியாதன இல்லை; சொல்ல நினையாமல் இருக்கிறுன் இத்தனை' என்று இருக்கிறுர். (5)

800

**பணியா அமரர் பணிவும் பண்பும் தாமேயாம்**
**அணியார் ஆழியும் சங்கமும் ஏந்தும் அவர்காண்மின்**
**தணியா வெந்நோய் உலகில் தவிர்ப்பான் திருநீல**
**மணியார் மேனியொடு என்மனம் சூழ வருவாரே.**

பொ - ரை: 'வேறு ஒருவரையும் வணங்காத நித்தியசூரிகளுடைய வணக்கத்திற்கும் ஞானம் முதலான குணங்களுக்கும் தாமே விஷயமாக இருப்பவரும், அழகு பொருந்திய சக்கரத்தையும் சங்கையும் ஏந்திக்கொண்டிருப்பவருமான இறைவர்காண்மின்; தணியாத கொடிய பிறவியாகிய நோயினை இந்த உலகத்திலே தணிக்கும்பொருட்டு, அழகிய நீலமணி போன்ற திருமேனியோடு என் மனம் மயங்கும்படியாக வந்து உலாவுவர்' என்கிறுர்.

வி - கு: 'ஏந்துமவர், வெம் நோய் தவிர்ப்பான் திரு நீலமணியார் மேனியொடு என் மனம் சூழ வருவார் காண்மின்' என்க.

ஈடு: ஆறும் பாட்டு. [2]'நீர் இங்ஙனே கிடந்து படுகிறது என்? எல்லாரையும் காப்பாற்றுமவன் அல்லனே அவன்!' என்ன, 'நித்தியசூரிகள் பரிய இருக்கக்கூடிய அவன் சம்சாரத்திலே அவ்வடிவோடே வந்து உலாவாநின்றுல் நான் இப்படிப் படாதே செய்வது என்?' என்கிறுர்.

பணியா அமரர் - வேறே சிலரைப் பணிவதற்குக் காரணம் இல்லாத நித்திய சூரிகள். என்றது, 'முன்பு சேவிக்கத் தகாதார் காலே குனிந்து, ஒரு நாளிலே ஞானம் பிறந்து, [3]'அழுக்கு உடம்பு எச்சில் வாய்' என்று கழிந்த

---

1. 'அர்ச்சாவதாரம் வார்த்தை அருளிச்செய்யக் கூடுமோ?' என்ன, 'உகந்தருளின' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச் செய்கிறுர்.

2. திருப்பாசுரம் முழுதினையும் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறுர்.

3. உடம்புக்கு அழுக்காவது, பிறரை வணங்குதல். வாய்க்கு எச்சிலாவது, பிறரைத் துதித்தல்.

'ஆவியை அரங்க மாலை அழுக்குடம்பு எச்சில் வாயால்
தூய்மையில் தொண்டனேன்நான் சொல்லினேன் தொல்லை நாமம்'

என்பது திருக்குறுந்தாண்டகம், 12.

தற்கு வருந்தி, பின்பு வகுத்தார் காலிலே குனிந்தவர்கள் அல்லர் ; [1]பணித்தல் பணிதல் செய்யாதவர்கள்' என்றபடி. இதனால், முத்தரை வேறுபடுத்துகிறது. பணிவும் [2]பண்பும் தாமேயாம் - அவர்கள் பணிவுக்கும் ஞானம் முதலான குணங்களுக்கும் தாமே விஷயமாக இருக்குமவர். அணியார் ஆழியும் சங்கும் ஏந்தும் - [3]எல்லா ஆபரணங்களும் தாமேயாகப் போரும்படியான திவ்விய ஆயுதங்களைத் தரித்து, நித்தியசூரிகளுக்குக் காட்சி கொடுத்தால் அவர்களும் அஸ்தானே பயத்தால் சங்கை பண்ணி மங்களாசாசனம் பண்ணும்படி ஆயிற்று இருப்பது. அவர்களுக்கும் நான் பட்டது பட வேண்டும்.

அவர் காண்மின் - [4]அவர் கண்டீர் அச்சமுள்ள இடத்திலே வந்து பிறக்கிறார். [5]'தமக்கு ஒரு பிரயோஜனத்துக்காகத்தான் வருகிறாரோ?' என்னில், உலகில் தணியா வெம் நோய் தவிர்ப்பான் வருகிறார். தணியா வெம் நோயாவது, ஒரு நாளும் முடியாத தாபத்திரயம் முதலானவைகள். திருநீல மணி ஆர் மேனியொடு - நீலமணி போலே சிரமத்தைப் போக்கக் கூடியதாய்ச் சுகுமாரமான வடிவோடே. 'இங்கே வர வேண்டினால், அவ்வடிவோடே வரவேண்டுமோ ?' என் மனம் - அந்தச் சுகுமாரமான வடிவோடே சம்சாரத்திலே உலாவுகிறான் என்று அறிந்த என் மனமானது. சூழ வருவாரே - சுழன்று வரும்படி வருகிறவர். அன்றிக்கே, 'தணியா வெம் நோய் தவிர்ப்பான் உலகில் வருகிறவர்' என்றுமாம். (6)

---

1. பணித்தல் - துதித்தல். பணிதல் - வணங்குதல்.

2. 'பண்பு' என்றது, நீர்மையைக் காட்டி, அதனால் ஞானம் முதலான குணங்களைக் கூறுகிறது.

3. அணி - ஆபரணம். ஆர்தல்-அமைதல். இதனைத் திருவுள்ளம் பற்றியே, 'எல்லா ஆபரணங்களும்' என்று தொடங்கி அருளிச் செய்கிறார்.

4. 'வருவார்' என்றதனைக் கடாட்சித்துக் கருத்து அருளிச் செய்கிறார், 'அவர் கண்டீர்' என்று தொடங்கி.

5. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார், 'தமக்கு' என்று தொடங்கி. தாபத்திரயமாவது, தன்னைப்பற்றி வருவனவும், பிற உயிர்களைப் பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவும் என மூவகையான் வரும் துன்பங்கள்.

801

**வருவார் செல்வார் வண்பரி சாரத்து இருந்தஎன்**
**திருவாழ் மார்வற்கு என்திறம் சொல்லார் செய்வதுஎன்?**
**உருவார் சக்கரம் சங்கு சுமந்துஇங்கு உம்மோடு**
**ஒருபாடு உழல்வான் ஓர்அடி யானும் உளன்என்றே.**

**பொ-ரை:** திருவண் பரிசாரத்திலிருந்து இங்கு வருகின்றவர்களும், இங்கிருந்து அங்குச் செல்கின்றவர்களுமான மக்கள், திருவண்பரிசாரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என் திருவாழ்மார்பற்கு, 'அழகு பொருந்திய சக்கரத்தையும் சங்கையும் சுமந்துகொண்டு, இந்த உலகத்தில் உம்மோடு கூட ஒருபக்கத்திலே திரிகின்றவனை ஓர் அடியவனும் உளன்' என்பதாக, என்னுடைய தன்மையைச் சொல்ல மாட்டார்கள்; நான் இனிச் செய்வது என்?

**வி-கு:** 'வருவார் செல்வார், என் திருவாழ் மார்வற்கு, சுமந்து உழல்வான் ஓர் அடியானும் உளன் என்று என் திறம் சொல்லார்; செய்வது என்?' என்க.

**ஈடு:** ஏழாம் பாட்டு. [1]'இங்கே வந்து திருப்பரிசாரத்திலே எழுந்தருளியிருக்க, நான் உதவப்பெறாமல் துன்புற்றவனானால், 'ஓர் அடியானும் உளன்' என்று அவனுக்கு அறிவிப்பாரையும் பெறுகின்றிலோம்' என்கிறார்.

வருவார் செல்வார் - [2]திருநகரியினின்றும் திருப்பரிசாரத்திற்குப் பெருவழியாக இசங்காநிற்கும். என்றது, 'இயக்கம் அற்று இருக்கிறது அன்றுகண்டீர்' என்றபடி. அன்றிக்கே, [3]தங்கள் காரியத்தாலே விரைந்து போவாரைத் தம் நிலை அறிவிக்கப்போகிறார்கள் என்றும், அங்கு

---

1. 'வண் பரிசாரத்து இருந்த என் திருவாழ்மார்வற்கு 'ஓர் அடியானும் உளன்' என்று என் திறம் சொல்லார்' என்பதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'அவனுக்குத் தாம் உளர் என்று அறிவிக்கை தேட்டமானால், 'செல்வார்' என்ன அமைந்திருக்க, 'வருவார்' என்பான் என்?' என்ன, 'திருநகரியினின்றும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, 'போவாரும் வருவாருமாய் வழி நடவாநிற்கச்செய்தே, என் திறம் சொல்லாதிருக்கிறார்கள்' என்றபடி. இசங்குதல் - நடத்தல்.

3. 'ஸ்வகாரியார்த்தமாகப் போகிறாரும் வருகிறாரும் திருப்பரிசாரத்து ஏறப்போகிறாராகவும் அங்குநின்றும் வருகிறாராகவும் நிச்சயித்து' என்ற ஆறாயிரப்படி இங்கு நினைவுகூர்க.

நின்றும் வருவாரைத் தம்மை அழைக்க வருகிறார்கள் என்றும் இருப்பர்' என்னுதல். வண்பரிசாரத்து இருந்த என் திருவாழ் மார்வற்கு - [1]திருப்பரிசாரத்தில் இருப்புக்குப் பரிய வேண்டும்; அதற்குமேல், பிராட்டியுடைய சேர்த்திக்குப் பரிய வேண்டும். அன்றிக்கே, [2]'சீதா பிராட்டியோடு கூடித் தேவரீர் மலையடிவாரத்தில் உலாவும் பொழுது நான் தேவருக்கு எல்லா நிலையிலும் எல்லா அடிமைகளும் செய்வேனுக' என்ற இளையபெருமாளைப் போலே தொடர்ந்து போய் அடிமை செய்ய வேண்டும்படி ஆயிற்று இங்கு இருக்கிற இருப்பு' என்னுதல். என் திறம் சொல்லார் - சொன்ன வார்த்தையைக் கேட்பிப்பார் இல்லாமை சொல்லாது ஒழிகிறார் அல்லர்கண்டீர்! என் திருவாழ்மார்வற்கு - என் பிராட்டி சந்நிதி ஆகையாலே [3]சொன்ன வார்த்தை விலை செல்லும்கண்டீர். செய்வது என் - இதற்கு என்றுற்செய்யலாவது என், தங்கள் தங்கள் காரியத்தின் நிமித்தம் போவார்களாகில்?

'நன்று; அவர்கள் அங்குப் போனால் சொல்லும் பாசுரம் யாது?' என்ன, உரு ஆர் சக்கரம் சங்கு சுமந்து - அழகு மிக்கிருந்துள்ள ஆழ்வார்களை விருப்பத்தோடு தரித்து. அன்றிக்கே, 'திருமேனிக்கு எல்லாம் வேறு ஓர் ஆபரணம் வேண்டாதே தானே ஆபரணமாகப் போரும்படியான ஆழ்வார்களைத் தரித்து' என்னுதல். இங்கு - பரிவர் இன்றிக்கே இருக்கிற இவ்வுலகத்திலே. உம்மோடு ஒருபாடு உழல்வான் - இடைவிடாதே ஒரு பக்கத்தைப்

---

1. 'வண்பரிசாரத்திருந்த' என்றதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'திருப்பரிசாரத்தில்' என்று தொடங்கி. 'திருவாழ்மார்வற்கு' என்றதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'அதற்குமேல்' என்று தொடங்கி.

2. கைங்கரியத்தை ஏற்றுக்கொள்ளும் பொருள் ஒரு மிதுனம் என்னும் இடம் தோற்றுகைக்காகப் பிராட்டியினுடைய சம்பந்தம் சொல்லுகிறது என்று இரண்டாவதாக வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார், 'சீதாபிராட்டியோடு' என்று தொடங்கி.

'பவாம்ஸ்து ஸஹவைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே
அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதః ஸ்வபதஶ்சதே'

என்பது, ஸ்ரீராமா. அயோத். 31 : 25.

3. 'புருஷகாரத்திற்காகப் பிராட்டியினுடைய சம்பந்தம் சொல்லுகிறது' என்று மூன்றாவதாக வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார், 'சொன்ன வார்த்தை' என்று தொடங்கி.

பற்றித் திரிவான். [1]ஒரு பக்கத்துக்கு இளையபெருமாள் உளர் அன்றோ? ஓர் அடியானும் உளன் என்றே - [2]வேறு பிரயோஜனத்தைக் கருதாதவனாய் இருப்பான் ஒருவன் உளன் என்று. என்றது, [3]'அந்த மகாத்துமாவானவன் கிடைத்தற்கு மிகவும் அரியன்'என்கிறபடியே, ஒருவர்இலர் என்று கைவாங்கி இருப்பர்; அது வேண்டா; ஒருவன் உளன் என்று என் இடையாட்டம் சொல்லுகின்றிலர்கள் என்கிறார்' என்றபடி. செய்வது என்? (7)

802

**என்றே என்னை உன் ஏரார் கோலம் திருந்துஅடிக்கீழ்**
**நின்றே ஆட்செய்ய நீகொண் டருள நினைப்பதுதான்**
**குன்றேழ் பார்ஏழ் சூழ்கடல் ஞாலம் முழுஏழும்**
**நின்றே தாவிய நீள்கழல் ஆழித் திருமாலே!**

பொ - ரை: 'எழு மலைகளும் எழுதீவுகளும் எழு கடல்களும் ஏழ் உலகங்களும் ஆகிய எல்லாவற்றினையும் நின்று அளந்த நீண்ட திருவடிகளையுடைய சக்கரத்தைத் தரித்த திருமாலே! உனக்கு அடியவனான என்னை, உன்னுடைய அழகு பொருந்திய ஒப்பனை திருந்திய திருவடிகளின்கீழே நின்று அடிமை செய்வதற்கு நீ திருவுள்ளத்தே கொண்டருள நினைப்பதுதான் எப்பொழுதோ?' என்கிறார்.

வி - கு: 'திருமாலே! ஆட்செய்ய நீ கொண்டருள நினைப்பது தான் என்றோ?' என்க. 'உன் நேர்ஆர்' என்றும் பிரித்தல் தகும். 'தனக்குத்தானே ஒத்த' என்பது பொருள்.

ஈடு: எட்டாம் பாட்டு. [4]'பிறரை விடீர்; உம் திருவடிக்கீழே பரிகைக்கு நிலை ஆளாக என்னைக் கொள்வது என்று?' என்று அவனைக் கேட்கிறார்.

---

1. 'மற்றொரு பக்கத்திற்கோ?' என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார், 'ஒரு பக்கத்துக்கு' என்று தொடங்கி.

2. 'அடியான்' என்றதற்கு பாவம், 'வேறு பிரயோஜனத்தை' என்று தொடங்கும் வாக்கியம்.

3. 'ஓர், உளன்' என்றதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'அந்த' என்று தொடங்கி.

> 'பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞானவாந் மாம் ப்ரபத்யதே
> வாஸுதேவஃ ஸர்வம் இதி ஸ மஹாத்மா ஸுதுர்லபஃ'

என்பது, ஸ்ரீ கீதை. 7: 19.

4. 'அடிக்கீழ் ஆட்செய்ய நீ கொண்டருள்' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

என்றே - [1]'உம்முடைய காரியம் செய்கிறோம் அன்றோ?' என்ன, 'அதுதான் என்று?' என்கிறார். என்னை - உன்னிடத்தில் பரிந்து அன்றி உளேன் ஆகாது இருக்கிற என்னை. உன் ஏர் ஆர் கோலம் திருந்து அடிக்கீழ் - அழகு மிக்க ஒப்பனை திருந்தின உன் திருவடிகளின்கீழே. என்றது, 'மங்களாசாசனம் செய்தல்லது நிற்க ஒண்ணாத திருவடிகள்' என்றபடி. நின்றே ஆள் செய்ய - [2]'எனக்குக் கொடுப்பாய்; உனக்குக் கொடுக்கிறேன்' என்று பிரயோஜனத்தைக் கொண்டு போகை அன்றிக்கே, விடாமல் அடிமை செய்ய. நீ கொண்டருள - நான் கிடந்தானைக் கண்டு ஏறுகை அன்றிக்கே, அடிமை செய்வான் என்று திருவுள்ளத்தே கொண்டருள. நினைப்பதுதான் - [3]அவன் நினைவிற்கே பலத்தோடு ஸம்பந்தம் உள்ளது; தம்முடைய காதல் பலத்திற்குக் காரணம் அன்று என்று இருக்கிறார்.

[4]'வண் பரிசாரத்து இருந்த' என்று எழுந்தருளி இருக்கிற இருப்புத் தனக்கே பரிய வேண்டி இருக்க, மனித செயல்களுக்கு அப்பாற்பட்ட செயலைச் செய்தால் மங்களாசாசனம் செய்தே நிற்க வேண்டாவோ?' என்கிறார் மேல்: குன்று ஏழ் பார் ஏழ் சூழ் கடல் ஞாலம் முழு ஏழும் நின்றே தாவிய நீள் கழல் ஆழித் திருமாலே - எழு குல மலைகள் என்ன, ஏழு தீவுகள் என்ன, அவற்றைச் சூழ்ந்துள்ள எழு கடல்கள் என்ன, இப்படி எழு வகைப்பட்ட பூமியை அடைய நின்ற நிலையிலே நின்று அளந்து கொண்டருளும்படி நீண்ட திருவடிகளையுடையையாய்க் கையும் திருவாழியுமான திருமகள் கேள்வனே! என்றது, 'சங்கம் சக்கரம் முதலிய திவ்விய ஆயுதங்களையுடைய திருமகள் கேள்வனாய் வைத்து, காடும் ஓடையுமான பூமியை முழுதும், நின்ற நிலையிலே மெல்லிய திருவடிகளைக் கொண்டு அளந்த சிரமம் தீரக் குளிர்ந்த உபசாரம் செய்யப்பெறும் நாள் என்று?' என்றபடி. அன்றிக்கே,

1. அவன் 'செய்கிறோம்' என்றால் ஒழிய, 'என்று?' என்று கேட்கக் கூடாமையாலே, 'காரியம் செய்கிறோம்' என்று அவன் திருவுள்ளம் பற்றினமையை அருளிச்செய்கிறார், 'உம்முடைய' என்று தொடங்கி.

2. 'தேஹிமே ததாமி தே' என்பது, யஜுர் வேதம்.

3. 'நினைப்பதுதான்' என்றதனால் பலித்த பொருளை அருளிச் செய்கிறார், 'அவன்' என்று தொடங்கி.

4. மேலுக்கு எல்லாம் அவதாரிகை அருளிச்செய்கிறார், 'வண் பரிசாரத்து' என்று தொடங்கி.

[1]'அரியன செய்ய வல்ல நீ, நான் உன் திருவடிகளைக் கிட்டி நின்று அடிமை செய்யும்படி நினைத்தருள வேண்டும் என்கிறார்' என்றலுமாம். (8)

803

**திருமால்! நான்முகன் செஞ்சடை யான்என்ற இவர்கள் [எம்**
**பெருமான் தன்மையை யார்அறி கிற்பார்? பேசிஎன்?**
**ஒருமா முதல்வா! ஊழிப் பிரான்!என்னை ஆளுடை**
**கருமா மேனியன் என்பன்என் காதல் கலக்கவே.**

**பொ - ரை :** நான்கு முகங்களையுடைய பிரமனும் சிவந்த சடையை உடைய சிவனும் என்ற இவர்கள், எம்பெருமானுடைய தன்மையை அறிகின்றவர் யாவர்? இதனைப் பற்றிப் பேசுவதனால் பயன் யாது? நானும், காதலானது என்னைக் கலக்க, 'திருமகள் கேள்வனே! ஒப்பற்ற சிறந்த காரணனே! ஊழிப்பிரானே! என்னை அடிமைகொண்ட கரிய பெருமை பொருந்திய திருமேனியை உடையவனே!' என்று இவ்வளவேயன்றோ சொல்ல வல்லேன்?

**வி - கு :** திருமால் - விளிப்பெயர். 'காதல் என்னைக் கலக்க, மேனியன்' என்பன்' என்க.

**ஈடு :** ஒன்பதாம் பாட்டு. [2]'நம்மிடத்தில் பரிவு கொள்ளுவதற்குப் பிரமன் முதலானோர் இருக்க, நீர் இங்ஙன் அஞ்சுகிறது என்?' என்ன, 'அவர்கள் உன் சௌகுமார்யத்தை அறிவர்களோ?' என்கிறார்.

திருமால் - திருமால் என்று பிரித்து விளிக்கிறார். [3]நீயும் பிராட்டியுமான சேர்த்திக்கு மங்களாசாசனம் செய்வர்களோ அவர்கள்? நான்முகன் - படைப்புக்கு உறுப்பான பல முகங்களையுடையனாய், அதிலே நோக்குள்ளவன். செஞ்சடையான் - சாதக வேஷம் தோன்ற நிற்கின்ற சிவன். என்றது, 'தான் விரும்பிய பலத்தை அடைவதிலே நோக்குள்ளவன்' என்றபடி. எம்பெருமான்

1. 'அரியன செய்ய வல்ல' என்று தொடங்கும் வாக்கியத்துக்குக் கருத்து, 'திரு உலகத்தை அளந்த செயற்கரிய செயல் போலே, என்னையும் உன் திருவடிகளிலே ஆக்கிக்கொள்ளுகையும் செயற்கரிய செயல் அன்றோ? இதனையும் செய்யவேண்டும்' என்பது.

2. 'நான்முகன் செஞ்சடையான் என்றிவர்கள் ஆர் அறிகிற்பார்?' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. 'நான்முகன்' என்றது முதல் 'ஆர் அறிகிற்பார்?' என்றது முடிய, பாவம் அருளிச்செய்கிறார், 'நீயும்' என்று தொடங்கி.

தன்மையை - சர்வேஸ்வரனை உன்னுடைய சௌகுமார்யத்தை. ஆர் அறிகிற்பார் - சிலராலே அறியலாய் இருந்ததோ? வேறு ஒன்றிலே நோக்குள்ளவர்களாய் இருக்கிறவர்கள் உன் சௌகுமார்யத்தை அறிய வல்லர்களோ? [1]வேறு ஒன்றையும் விரும்பாமல் உன்னையே விரும்புகின்றவர்களாய் இருந்தாலேதான் தேவரீருடைய சௌகுமார்யம் சிலரால் அறியலாய் இருந்ததோ? பேசி என் - இது சொல்லி என்ன பிரயோஜனம் உண்டு? என்றது, 'அவர்களைப் பரிவர் ஆக்கவோ? உன் சௌகுமார்யத்தை அளவிற்கு உட்பட்டது ஆக்கவோ?' என்றபடி. 'அவர்கள் நம்மை அறியமாட்டார்களாகில் அறிந்த நீர் பேசிக்காணீர்' என்ன, 'என்னால்தான் பேசலாய் இருந்ததோ!' என்கிறார் மேல்:

ஒரு மா முதல்வா - விலக்ஷணமான பரம காரணன் ஆனவனே! ஊழிப்பிரான் - காலத்தால் சம்பந்தப்பட்ட எல்லாப் பொருள்கட்கும் ஸ்வாமி ஆனவனே! என்னை ஆளுடை கரு மா மேனியன் - புறம்பே ஈடுபட்டிருந்த என்னை உன்னிடத்திலே ஈடுபடும்படி செய்த வடிவை உடையவனே! என்பன் - [2]இவ்வளவே அன்றோ என் அளவும்? [3]எல்லாப் பொருள்கட்கும் நிர்வாஹகனுய் வடிவழகிலே என்னைச் சேர்த்துக்கொண்ட இது அன்றோ என்னைக் கலங்கப் பண்ணிற்று? என் காதல் கலக்கவே - என்னுடைய காதலானது நான் அஞ்சும்படி கலங்கப் பண்ண, உன் வடிவழகிலும் மேன்மையிலும் கலங்கிச் சொன்ன அத்தனை போக்கி, உன் சௌகுமார்யத்தை எல்லை கண்டு சொன்னேன் அல்லேன். என்றது, 'காதலாலே அறிவு அற்றவனுய்க்கொண்டு சொன்னேன் அத்தனை போக்கி, நெஞ்சு ஒழிந்து சொன்னேன் அல்லேன்' என்றபடி. [4]வேறு பிரயோஜனங்களை விரும்புகிறவர்க

---

1. 'ஆர் அறிகிற்பார்?' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார்; 'வேறு ஒன்றையும்' என்று தொடங்கி.

2. 'என்பன்' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'இவ்வளவே அன்றோ' என்று தொடங்கி. என்றது, 'உன் சௌகுமார்யத்துக்குத் தகும்படி சொன்னேன் அல்லேன்; கலங்கிச் சொன்னேன்' என்றபடி.

3. கலங்குகைக்குக் காரணத்தை அருளிச்செய்கிறார், 'எல்லாப் பொருள்கட்கும்' என்று தொடங்கி.

4. இப்பாசுரத்தால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார், 'வேறு பிரயோஜனங்களை' என்று தொடங்கி.

ளான பிரமன் சிவன் முதலானோர்கள் பரிவும் உனக்கு ஒத்தது அன்று; காதலால் கண் இல்லாதவனை என் பரிவும் உனக்கு ஒத்தது அன்று என்றதாயிற்று. (9)

804

**கலக்கம் இல்லா நல்தவ முனிவர் கரைகண்டோர்**
**துளக்கம் இல்லா வானவர் எல்லாம் தொழுவார்கள்**
**மலக்கம் எய்த மாகடல் தன்னைக் கடைந்தானை**
**உலக்க நாம்புகழ் கிற்பதுஎன் செய்வது உரையீரே.**

பொ - ரை: கலக்கம் இல்லாத ஞானத்தையும் நல்ல தவத்தையுமுடைய சனகன் முதலான முனிவர்களும் கரை கண்டவர்களான முத்தர்களும் நடுக்கம் இல்லாத நித்திய சூரிகளுமான எல்லாரும் வணங்குவார்கள்; கலக்கத்தை அடையும்படி பெரிய கடலைக் கடைந்த எம்பெருமானுடைய கல்யாண குணங்கள் முடிவு பெறும்படி நாம் புகழ்ந்தோமாவது கை கூடுமதோ? சொல்லுங்கோள்.

**ஈடு:** பத்தாம் பாட்டு. [1]இவருடைய அச்சத்தைப் போக்குகைக்காக, 'நம்மிடத்தில் சனகன் முதலான முனிவர்கள் முத்தர்கள் நித்தியசூரிகள் இவர்கள் கிட்டி நின்று தொழுகின்றார்கள்; நாம்தான் அரிய செயல்களும் செய்ய வல்லோம் ஆன பின்பு நீர் நம்பொருட்டு அஞ்ச வேண்டா காணும்,' என்ன, முன்பு அச்சத்திற்குக் காரணங்களாக இருந்தவைதாமே அச்சம் நீங்குதற்குக் காரணமாக அதனை நினைத்து இனியர் ஆகிறார். இவர்தமக்கு இன்ன போது இன்னது அச்சத்திற்குக் காரணமாம்; இன்ன போது இன்னது பரிகாரமாம் என்று தெரியாதே அன்றோ?

கலக்கம் இல்லா நல் தவ முனிவர் - தங்கள் ஞானத்துக்கு விஷயங்களால் வரும் கலக்கம் இன்றிக்கே, மிக்க தவங்களையுடையராய் மனனசீலரான சனகன் முதலானோர். கரை கண்டோர் - முத்தர். துளக்கம் இல்லா வானவர் -

---

1. முதல் மூன்று அடிகளையும் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். 'முன்பு அச்சத்திற்குக் காரணங்களாக இருந்தவை' என்றது, திரு உலகு அளந்தது, ஆலிலையில் பள்ளிகோடல் முதலிய செயல்கள். 'மலக்கம் எய்த மாகடல்தன்னைக் கடைந்தானை' என்றதனைத் திருவுள்ளம் பற்றி, 'அச்சம் நீங்குதற்குக்காரணமாக' என்கிறார். 'அச்சத்திற்குக் காரணமாயவை, அச்சம் நீங்குதற்குக் காரணமாகக் கூடுமோ?' என்ன, 'இவர்தமக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

சம்சாரத்தின் சம்பந்தம் இல்லாத நித்தியசூரிகள். அன்றிக்கே, துளக்கம் - சலனம். அதாவது, ஞானக் குறைவு. அது இல்லாத நித்தியசூரிகள் என்னவுமாம். எல்லாம் தொழுவார்கள் - முமுக்ஷுகளும் முத்தரும் நித்தியசூரிகளுமான இவர்கள் அடிமை செய்கிறவர்கள். [1]அடிமையாவது ஸ்வாமிக்கு அதிசயத்தைப் பண்ணுமது ஆகையாலே, மங்களாசாசனமே அன்றோ? மலக்கம் எய்த மா கடல்தன்னைக் கடந்தானை - மிகப் பெரியதான கடலைக் கலக்கும்படி கடைந்த பெருமிடுக்கன். என்றது, 'பரிகிறவர்கள் தாங்களும் [2]குழை சரக்காம்படி பெரு மிடுக்கன்' என்கை. உலக்க நாம் புகழ்கிற்பது என் செய்வது [3]உரையீர் - அவன் படியை நேராக அறியாத நாம் பரிவிலே இழிந்து முடியப் பேசப்புக்கது, என் செய்தோம் ஆனோம்? சொல்லீர்கோள். [4]முன்பு தன் மிடுக்கைக் காட்டின இடங்களில் அதனை நினையாதே, அதனையே சொல்ல இப்போது சமாதானத்தை அடைந்தவர் ஆயினர்: இது, இப்பிரபந்தம் தலைகட்டக் கடவதாகையாலேயாதல்; ஈஸ்வரனுடைய ஜீவன அதிர்ஷ்டத்தாலேயாதல் அன்றோ? (10)

805

**உரையா வெந்நோய் தவிர அருள்நீள் முடியானை**
**வரையார் மாடம் மன்னு குருகூர்ச் சடகோபன்**
**உரைஏய் சொல்தொடை ஓர்ஆயிரத்துள் இப்பத்தும்**
**நிரையே வல்லார் நீடுஉலகத்துப் பிறவாரே.**

பொ - ரை: 'கூற முடியாததான கொடிய கலக்கமாகிய நோய் தீரும்படி திருவருள் செய்கின்ற நீண்ட திருமுடியையுடையவனை, மலைகள் போன்று உயர்ந்திருக்கின்ற மாடங்கள் நிலை பெற்ற திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீ சடகோபராலே அருளிச்செய்யப்

---

1. ''பரிவர்கள்' என்னுமல், 'தொழுவார்கள்' என்கிறது என்?' என்ன, 'அடிமையாவது' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச் செய்கிறார்.

2. குழை சரக்கு - பாதுகாக்கப்படுகின்ற பொருள்.

3. 'உரையீர்' என்றது, அண்மையில் உள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களைப் பார்த்து.

4. இப்போது சமாதானத்தை அடைந்தவர் ஆனமைக்குக் காரணத்தை இரண்டு வகையாக அருளிச்செய்கிறார், 'முன்பு' என்று தொடங்கி.

பட்ட புகழ் நிறைந்த சொல் தொடை அமைந்த ஒப்பற்ற ஆயிரம் திருப்பாசுரங்களுள் இப்பத்துத் திருப்பாசுரங்களையும் முறையாக வல்லவர்கள் நீண்ட இந்த உலகத்திலே பிறக்கமாட்டார்கள்,' என்றவாறு.

**வி – கு :** 'வல்லார் பிறவார்' என்க. உரை - சொற்களுமாம்.

**ஈடு :** முடிவில், [1]'இத்திருவாய்மொழி கற்பவர்கள், அவன் தனிமை கண்டு பயப்படும் சம்சாரத்தில் பிறவார்,' என்கிருர்.

உரையா வெம் நோய் - சொல்லுதற்கு முடியாததாய், மிகக் கொடியதான நோய். [2]தம் அளவில் பொறுத்தல் அன்றிக்கே, 'உபய விபூதி நாதனுக்கு என் வருகிறதோ?' என்று அஞ்சின நோயே அன்ருே? தவிர அருள் நீள் முடியானை - இது போகும்படிக்குத் தகுதியாகத் திருவருள் புரியும் தன்மையனை [3]உபயவிபூதி நாதனை. [4]'இவர் அச்சம் போகும்படி 'நீர் விரும்பிய காரியத்தைச் செய் கிருேம்' என்று தலையைத் துலுக்கினுன் போலேகாண்' என்று **அம்மங்கி அம்மாள்** அருளிச்செய்வர். அன்றிக்கே, 'இவ்வாழ்வாருடைய பயம் நீங்கிய பின்பாயிற்று, உபய விபூதிக்கும் இரட்சகனுய்ச் சூடின முடியும் நிலை நின்ற தாயிற்று' என்றபடியுமாம்.

வரை ஆர் மாடம் மன்னு குருகூர்ச் சடகோபன் - இவர் அச்சம் நீங்கினவாறே நிறைவு பெற்றதுமாய் நிலையுள்ளதுமாயிற்றுத் திருநகரியும். உரை ஏய் சொல் தொடை ஓர் ஆயிரம் - சொற்களால் சேர்ந்த சொல் தொடையையுடைத்தாய் விலக்ஷணமான ஆயிரம். இப்பத்

---

1. 'வல்லார் நீடு உலகத்துப் பிறவார்' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிருர்.

2. உரைக்க முடியாததை விவரிக்கிருர், 'தம்மளவில்' என்று தொடங்கி. 'தம் அளவில் பொறுத்தல் அன்றிக்கே' என்றது. 'சம்சார தோஷத்தைக் கண்டு தமக்காகப் பயப்படுகை அன்றிக்கே' என்றபடி.

3. 'நீள்முடியானை' என்றதற்குப் பொருள், 'உபயவிபூதி நாதனை' என்பது.

4. பரிந்து பேசும் இந்த இடத்திலே 'நீள்முடியானை' என்று திருமுடியை அருளிச்செய்ததற்கு இரண்டு வகையாகக் கருத்து அருளிச்செய்கிருர், 'இவர் அச்சம்' என்று தொடங்கியும், இவ் வாழ்வாருடைய' என்று தொடங்கியும்.

தும் நிரையே வல்லார் - இப்பத்தை அடைவு தப்பாமல் கற்க வல்லவர்கள்: [1]தமக்குப் பிறந்த கலக்கத்தாலே, இதில் இழிவார்க்கும் அடைவுபடச் சொல்ல ஒண்ணுது என்று இருக்கிருர். நீடு உலகத்துப் பிறவாரே - இப்பூமிப் பரப்பை அடைய நினைத்தால், பரப்பேயாய், சர்வேஶ்வரன் தனிமைக்குப் பரிய ஒருவரைக் கிடையாத இத்தேசத்திலே பிறவார்கள்; ஒரு நாடாக மங்களாசாசனம் செய்கிற தேசத்திலே சென்று நித்தியானுபவம் பண்ணப் பெறுவர். (11)

## திருவாய்மொழி நூற்றந்தாதி

அங்குஅமரர் பேண அவர்நடுவே வாழ்திருமாற்கு
இங்கோர் பரிவர்இலை என்றுஅஞ்ச—எங்கும்
பரிவர்உளர் என்னப் பயம்தீர்ந்த மாறன்
வரிகழல்தாள் சேர்ந்தவர்வாழ் வார். (73)

ஆழ்வார் எம்பெருமானுர் சீயர் திருவடிகளே அரண்.

---

1. ''நிரையே' என்கிறது என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிருர், 'தமக்கு' என்று தொடங்கி.

## நான்காந்திருவாய்மொழி—'வார்கடா அருவி'

### முன்னுரை

**ஈடு :** [1]'சர்வேஶ்வரன் சம்சாரிகளுடைய விருப்பத்தையே பற்றுக்கோடாகக் கொண்டு சம்சாரத்திலே வந்து அவதரித்துத் தனியே உலாவாநிற்கும். சம்சாரிகளும் தாங்கள் தாங்கள் விரும்பினவற்றைப் பெறுதற்குக் கிட்டுமது ஒழிய இவன் வாசி அறிந்து பரியக் கூடிய சம்சாரிகள் இலர். 'என் புகுகிறதோ?' என்று அஞ்சின இவர்க்கு, அந்த அச்சம் தீரும்படி 'நமக்குப் பரிவர் உளர்; ஒருவர் பரிய வேண்டாதபடியான மிடுக்கும் நமக்கு உண்டு,' என்று தன் படிகளைக் காட்டிச் சமாதானம் செய்யச் சமாதானத்தை அடைந்தவராய் நின்றார் மேல். [2]இத்திருவாய்மொழியில், 'இவராகிறார் காதலையே இயல்பாக உடையவராய் இருப்பர்; காதல் மையல் ஏறிக் கலங்கி, 'முத்தரும் நித்தியரும் இங்கு இலரே. சனகன் முதலான முமுக்ஷுகள் நல்ல தவத்தையும் மனனத்தையும் தியானத்தையும் விடமாட்டார்கள்; கடல் கடைந்தது தெய்வப் பிறப்பிலே அன்றோ?' என்று கலங்குவர்; 'இன்னம் இவர்க்கு இது மறுவல் இடக்கூடும்' என்று பார்த்து, மறுவல் இடாதபடி தன்னுடைய [3]சூரத்தன்மை

---

1. மேல் திருவாய்மொழிக்கும் இந்தத் திருவாய்மொழிக்கும் இயைபு அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, மேல் திருவாய்மொழியில் அருளிச்செய்தனவற்றை அநுவதிக்கிறார், 'சர்வேஶ்வரன்' என்று தொடங்கி.

2. 'மேல் திருவாய்மொழியில் சமாதானத்தை அடைந்தாரேயாயின், மீண்டும் இத்திருவாய்மொழியில் அச்சத்தை நீக்குவான் என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'இத்திருவாய்மொழியில்' என்று தொடங்கி.

3. இத்திருவாய்மொழியில் வருகின்ற 'சீர்கொள் சிற்றாயன்' என்பது போன்றவைகளைக் கடாட்சித்துச் 'சூரத்தன்மை' என்று தொடங்கியும், 'படைத்து அளித்து அழிக்கும்' என்பது போன்றவைகளைத் திருவுள்ளம் பற்றிப் 'படைத்தல் முதலான' என்று தொடங்கியும், 'கஞ்சனைத் தகர்த்த' என்பது போன்றவைகளைத் திருவுள்ளம் பற்றி 'எதிரிட்ட' என்று தொடங்கியும், 'வண்சிவனும் அயனும் தானும் ஒப்பார்' என்பதனைத் திருவுள்ளம் பற்றி 'மேம்பட்ட' என்று தொடங்கியும், 'மனக்கொள்சீர் மூவாயிரவர்' என்பது போன்றவைகளைத் திருவுள்ளம் பற்றித் 'தனக்குப் பரிவராய்' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்.

வீரத்தன்மை முதலான குணங்களையும் படைத்தல் முதலான ஆச்சரியமான காரியங்களையும், எதிர் இட்ட பகைவர்கள் கூட்டத்தை வேரோடே வாங்கிப் போகட வல்ல ஆற்றலையும் காட்டிக்கொடுத்து, அதற்கு மேலே, 'மேம்பட்ட ஞானத்தையும் சத்தியையுமுடையவர் களாய்த் தனக்குப் பரிவராய் இருப்பார் மூவாயிரம் பிராமணர் உளர்,' என்று காட்டிக்கொடுக்கக் கண்டு கிருதார்த்தராய், [1]அவன் வடிவழகிலேயும் நெஞ்சு சென்று அனுபவித்து இனியர் ஆகிறார்.

[2]ஸ்ரீவிபீஷணாழ்வான் [3]'இராகவனைச் சரணம் அடைந்த வன் ஆகிறேன்' என்று வந்து விழுந்த போது, மஹாராஜர் பெருமாள் பக்கல் பிரேமத்தாலே கலங்கி, துணுக்கு என்று 'இவன் கூறிய சொல் பெருமாள் திருச்செவியிலே படு மாகில் சாலத் தப்பாம்' என்று, 'நாயன் தே! இராவண னுடைய தம்பி, இராக்ஷச சாதி: அவன் புகுரக் கடவன் அல்லன்,' என்ன, 'இவர் நம் பக்கல் பரிவாலே சொல்லு கிற வார்த்தை நம் மிடுக்கைக் காட்டவே தெளிவர்,' என்று பார்த்து, [4]'வானரக் கூட்டத்திற்கு அரசனை சுக்கிரீவா! பிசாசர்களாயும் அசுரர்களாயும் யக்ஷர்களாயும் பூமியில் இருக்கிற இராக்கதர்களையும் விரல் நுனியாலே விரும்பின வனைக் கொல்லுவேன்,' என்பது போன்ற வார்த்தை களாலே தம் மிடுக்கைக் காட்டக் கண்டு அவர் அச்சம் தீர்ந்து, [5]'தேவரீர் கூறிய வார்த்தையில் என்ன ஆச்சரியம்?' என்று இனியர் ஆனாற்போலவும்; மற்

1. 'திருச்செய்ய கமலக்கண்ணும்' என்பது போன்றவைகளைத் திருவுள்ளம் பற்றி, 'அவன் வடிவழகிலேயும்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

2. 'தன் வீரம் முதலியவற்றைக் காட்டிச் சமாதானம் செய்ய, அச்சம் தீர்ந்து சமாதானத்தை அடைந்தவர் உளரோ?' என்ன, 'உளர்' என்று அதற்கு இரண்டு திருஷ்டாந்தங்கள் காட்டுகிறார், 'ஸ்ரீவிபீஷணாழ்வான்' என்று தொடங்கி.

3. 'ஸோஹம் பருஷித꞉ தேந தாஸவச்ச அவமாநித꞉
த்யக்தா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச ராகவம் ஶரணம் கத꞉'
என்பது, ஸ்ரீராமா. யுத். 17 : 14.

4. 'பிஶாசாந் தாநவாந் யக்ஷாந் ப்ருதிவ்யாம் ச ஏவ ராக்ஷஸாந்
அங்குள்யக்ரேண தாந் ஹந்யாம் இச்சந் ஹரிகணேஶ்வர'
என்பது, ஸ்ரீராமா. யுத். 18 : 23.

5. 'கிம் அத்ர சித்ரம் தர்மஜ்ஞ லோகநாத ஸுகாவஹ
யத்த்வம் ஆர்யம் ப்ரபாஷேதா꞉ ஸத்த்வவாந் ஸத்பதே ஸ்தித꞉'
என்பது, ஸ்ரீராமா. யுத். 18 : 36.

போரில், [1]'தேவர்களும் கந்தர்வர்களும் தானவர்களும் தரையில் இருக்கிற பெருமாளுக்கும் தேரின்மீதே இருக்கிற அரக்கனுக்கும் நடக்கும் இந்தப் போரானது ஒத்தது அன்று என்று கூறினார்கள்,' என்கிறபடியே, கூறிய பக்கத்திலுள்ளவர்களுடைய அச்சத்தை அவர்கள் முன்னிலையிலேயே கிருஷ்ணன் மல்லரை அழியச்செய்து தீர்த்தருளினாற்போலவும்; தம்முடைய அச்சத்தைப் போக்கி அருள, அதனாலே [2]கிருதார்த்தராய், 'இனி நமக்கு உண்ணும் சோறும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும் எல்லாம் இவன் அல்லது இல்லை' என்று பிரீதராய், முன்பு அழகினைக் கண்டு பரிவாலே அஞ்சினவர், அழகிலே நெஞ்சு சென்று அனுபவித்துக் கிருதார்த்தராய்த் தலைக்கட்டுகிறார்.

806

*வார்கடா அருவி யானைமா மலையின்*
*மருப்பிணைக் குவடுஇறுத்து உருட்டி*
*ஊர்கொள்திண் பாகன் உயிர்செகுத்து அரங்கின்*
*மல்லரைக் கொன்றுசூழ் பரண்மேல்*
*போர்கடா அரசர் புறக்கிட மாடம்*
*மீமிசைக் கஞ்சனைத் தகர்த்த*
*சீர்கொள்சிற் றாயன் திருச்செங்குன் றூரில்*
*திருச்சிற்றாறு எங்கள்செல் சார்வே.*

பொ-ரை: 'ஒழுகுகின்ற மதமாகின்ற அருவிகளையுடைய யானையாகிய பெரிய மலையினது தந்தங்களாகிய இரண்டு சிகரங்களை முரித்து அதனைக் கீழே தள்ளி, அந்த யானையைச் செலுத்தி வந்த வலிய பாகனுடைய உயிரையும் கவர்ந்து, சபையிலே இருந்த மல்லர்களையும் கொன்று, சுற்றிலுமுள்ள மஞ்சத்தின்மேலே இருந்த போரைச் செலுத்துகின்ற அரசர்கள் புறமுதுகு காட்டி ஓட, உயர்ந்த மாடத்தின்மேலே இருந்த கஞ்சனைக் கொன்ற சீரைக் கொண்ட பாலனை ஸ்ரீ கிருஷ்ணன் எழுந்தளியிருக்கின்ற திருச்செங்குன்றூரில் இருக்கின்ற திருச்சிற்றாறனது நாங்கள் சென்று கிட்டுதற்குரிய புகலிடமாகும்.

வி-கு: 'உருட்டிச் செகுத்துக் கொன்று தகர்த்த சிற்றாயன்' என்க. சார்வு - புகலிடம்.

இத்திருவாய்மொழி, எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

---

1. 'பூமிஸ்தஸ்ய ச ராமஸ்ய ரதஸ்தஸ்ய ச ராக்ஷஸ:
ந ஸமம்யுத்தம் இத்யாஹு: தேவ கந்தர்வ தாநவா:'
என்பது, ஸ்ரீராமா. யுத். 103 : 5.

2. கிருதார்த்தன் - செய்து முடிக்க வேண்டிய காரியங்கள் அனைத்தையும் செய்து முடித்தவன்.

ஈடு: முதற்பாட்டு. [1]'குவலயாபீடம் முதலான விரோதிகளை அழித்த சீர்கொள் சிற்றாயனுடைய திருச் செங்குன்றூரில் திருச்சிற்றாறு எங்களுக்கு அச்சம் இல்லாத புகலிடம்,' என்கிறார்.

வார் கடா அருவி யானை மா மலையின் - வாராநின்றுள்ள மத நீராகிய அருவியையுடைய யானையாகிற மா மலையினுடைய. கடா - மதம். [2]மதத்தை உண்டாக்குகிற பொருள்களைத் தீற்றிப் பிச்சு ஏற்றிப் புகுகிற வாசலிலே நிறுத்தினான்; பிரமாதத்தாலே வந்தது என்று மாதுலனைய்க் கண்ணநீர் விழவிட்டுத் தான் இருப்பானாகை. [3]'புகுவாய் நின்ற போதகம் வீழப் பொருதான்' என்னக் கடவது அன்றோ? மருப்பு இணைக்குவடு இறுத்து - மருப்பாகிற இணைக்குவடுகளை இறுத்து; கொம்பாகிற சிகரங்களை வருத்தம் இன்றியே முரித்து. என்றது, 'அம்மலையிலே இரண்டு சிகரங்களை ஒடித்தாற்போலே ஒடித்து' என்றபடி. உருட்டி - [4]கொம்புகளைப் பறித்தவாறே உளுக்காந்து, திருவடிகளாலே வருத்தம் இல்லாமல் தள்ளி. ஊர்கொள் திண் பாகன் - [5]உயிர் உள்ள பொருளை நடத்துமாறு போலே நடத்த வல்லன் ஆயிற்றுப் பயிற்சியின் பலத்தாலே; அதனாலே, 'ஊர்கொள்' என்கிறார். திண்ணியனாய் யானையை நடத்துகிற பாகன். உயிர் செகுத்து - [6]அதனைத் தள்ளினாலும் இவன் உயிர் போகாத அன்று அதனை முடித்தது ஆகாதுகாணும். அரங்கின் மல்லரைக்

---

1. பாசுரம் முழுதினையும் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. அருவி போலே மதம் ஒழுகுவதற்கு உரிய காரணத்தை அருளிச்செய்கிறார், 'மதத்தை' என்று தொடங்கி. பிரமாதம்-அஜாக்கிரதை.

3. நிறுத்தி இருந்ததற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'புகுவாய்' என்று தொடங்கி. இது, பெரிய திருமொழி. 6. 5. 6.

4. 'உருட்டி' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'கொம்புகளை' என்று தொடங்கி.

5. 'உருட்டின பின் இவன் நடத்தும்படி எப்படி?' என்ன, 'உயிருள்ள' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. 'பாகனையும் முடிப்பது என்?' என்ன, அதற்கு விடைஅருளிச் செய்கிறார் 'அதனை' என்று தொடங்கி.

கொன்று - [1]யானையின் கொம்புகள் இரண்டனையும் இருவரும் கொண்டு சபையின் நடுவில் புக்க அளவிலே, அச்செருக்குப் பொருமையாலே, போரிலே நோக்குள்ளவர்களாய் வந்த சாணூர முஷ்டிகர்களைக் கொன்று. [2]'யானை விலங்கு ஆகையாலே விரகு அறியாதே பட்டது; அது போயிற்றாகிலும் மல்லர் உளர்,' என்று கஞ்சன் நினைத்திருந்தவர்களை அழியச் செய்தபடி. [3]'தேவர்களும் கந்தர்வர்களும் தானவர்களும் தரையில் இருக்கிற பெருமாளுக்கும் தேரின்மீதே இருக்கிற அரக்கனுக்கும் நடக்கும் இந்தப் போரானது ஒத்தது அன்று' என்கிறபடியே, அருகில் உள்ள பெண்கள் முதலானவர்கள் அடங்கக் கூப்பிட்டு அஞ்சினவர்கள் ஆன சமயத்திலே, அவர்கள் அச்சம் எல்லாம் போம்படி வருத்தம் இல்லாமலே மல்லரைக் கொன்று' என்றுமாம்.

சூழ் பரண்மேல் - சுற்றிலும் இருக்கிற மஞ்சத்தின் மேலே நின்ற. போர் கடா அரசர் புறக்கிட - [4]கெடுபடையை வெற்றி உண்டாம்படி கடாவிப் பொரும் அரசர். 'சேனையை நடத்துவதில் ஆற்றல் வாய்ந்தவன்' என்கிறபடியே, தூசித் தலையில் வெற்றியோடு அல்லது மீளாதபடி படை பொருத்திப் போரை நடத்த வல்ல அரசர்கள் முதுகு காட்டி ஓடும்படியாக. மாடம் மீ மிசை - [5]'உயர்ந்த

---

1. யானையையும் பாகனையும் கொன்ற பின் மல்லர்களைக் கொன்றமைக்குக் காரணத்தை அருளிச்செய்கிறார், 'யானையின்' என்று தொடங்கி.

2. இம்மல்லர்களைக் கொன்றமையால் பலித்த பயனை அருளிச்செய்கிறார், 'யானை' என்று தொடங்கி.

3. கொன்றமையால் பலித்த பயனை வேறும் ஒரு வகையாக அருளிச்செய்து, பதங்கட்குப் பொருளும் அருளிச்செய்கிறார், 'தேவர்களும்' என்று தொடங்கி. இப்பொருளையுடைய சுலோகத்தை மேலே பக். 102ல் காண்க.

4. அரசர்கள் போரை நடத்துகின்ற ஆற்றலை அருளிச்செய்கிறார், 'கெடுபடையை' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார், 'சேனையை' என்று தொடங்கி.

'அபியாதா ப்ரஹர்தாச ஸேநாநய விஶாரதः
அப்ரத்ருஷ்யஶ்ச சங்க்ராமே க்ருத்தைரபி ஸுரா ஸுரைः'
என்பது, ஸ்ரீராமா. அயோத். 1. 29.

5. 'மீமிசை மாடம்' என்பதற்குப் பிரமாணம் காட்டி, அதற்குப் பொருளும் அருளிச்செய்கிறார், 'உயர்ந்த' என்று தொடங்கி.

'க்ருதः கம்ஸேந கம்ஸோபி துங்கமஞ்சே வ்யவஸ்திதः'
என்பது, ஸ்ரீ விஷ்ணு புரா. 5. 20 : 26.

கட்டிலில் இருந்தான்' என்கிறபடியே, உயர்ந்த மாடத்திலே இருக்கிற. என்றது, 'தனக்கு அச்சம் எத்துணை உண்டு, அத்துணையும் உயர்த்திருையிற்று மாடத்தை' என்றபடி. கஞ்சனைத் தகர்த்த - [1]அவன் இருக்கிற இடத்தளவும் எழப் பாய்ந்து, 'கஞ்சன் குஞ்சி பிடித்து அடித்த பிரான்' என்கிறபடியே, மயிரைப் பிடித்துக் கீழே விழவிட்டு மேலே பாய்ந்து பசளைக்கலம் போலே உடைத்தான். [2]'பின்பு கிருஷ்ணனாலே அலக்ஷ்யமாகக் கொல்லப்பட்ட கஞ்சனைக் கண்டு' என்றும், 'அந்தக் கண்ணபிரான் கஞ்சனுடைய கிரீடத்தைக் கீழே தள்ளி மயிரைப் பிடித்து இழுத்து அவனைப் பூமியில் தள்ளினார்; அவன்மேல் விழுந்தார்,' என்றும் வருகின்றபடியே, [3]'இராசத் துரோகிகளைக் கொல்லும்போது இராச சின்னங்களை வாங்கிக் கொல்லுமாறு போலே, தான் கொடுத்த முடியை வாங்கிக்காண் கொன்றது' என்று **அம்மங்கி அம்மாள் பணிப்பர்.**

சிற்றுயன் சீர்கொள் - பருவம் நிரம்பாதிருக்கச் செய்தே வீர இலக்குமியால் குறைவற்று இருக்கிறவன். திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு - [4]புலி நின்ற தூறு போலே பகைவர்களுக்கு அஞ்ச வேண்டும் ஊர். எங்கள் -

---

1. மஞ்சத்தில் இருக்கிறவனைக் கொன்ற விதத்தை விளக்காநின்றுகொண்டு, 'தகர்த்த' என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார், 'அவன்' என்று தொடங்கி. 'கஞ்சன்' என்பது, பெரிய திருமொழி, 3. 10 : 3.

பசளைக்கலம் - பச்சைப்பானை.

2. வருத்தம் இன்றியே கொன்றமைக்குப் பிரமாணமும், மயிரைப் பிடித்துக் கீழே விழவிட்டு மேலே பாய்ந்து கொன்றமைக்குப் பிரமாணமும் காட்டுகிறார், 'பின்பு' என்று தொடங்கியும், 'அந்த' என்று தொடங்கியும்.

'அவஜ்ஞயா ஹதம் த்ருஷ்ட்வா க்ருஷ்ணேந மதுரேஶ்வரம்' என்பது, ஸ்ரீ விஷ்ணு புரா. 5. 20 : 91.

'கேஶேஷு ஆக்ருஷ்ய விகளத்கிரீடம் அவநீதலே
ஸ கம்ஸம் பாதயாமாஸ தஸ்ய உபரி பபாத ச'

என்பது, ஸ்ரீ விஷ்ணு புரா. 5. 20 : 86.

3. கிரீடத்தைக் கீழே தள்ளிப் பின் கொன்றதற்குப் பிரயோசனத்தைப் பெரியோர்கள் திருவார்த்தையாலே விளக்குகிறார், 'இராசத் துரோகிகளை' என்று தொடங்கி.

4. 'சூரன் வாழ்கின்ற ஊர்' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'புலி நின்ற' என்று தொடங்கி.

[1]மஹாராஜர் பெரியாழ்வார், ஸ்ரீவிதுரர், தாம், பிள்ளை உறங்காவில்லி தாசர், இன்னோரன்ன பரிவர். செல் சார்வே - அச்சம் இல்லாத இடம் என்று புகும் புகல். [2]மேல், இவர்க்கு ஓடின அச்சம் நீங்கிற்று என்னுமிடம் இயல் தலைப்பிலே தெளிந்திருக்கிறபடி கண்டதே! (1)

807

எங்கள்செல் சார்வு யாமுடை அமுதம்
இமையவர் அப்பன்என் அப்பன்
பொங்குமூ உலகும் படைத்துஅளித்து அழிக்கும்
பொருந்துமூ உருவன்எம் அருவன்
செங்கயல் உகளும் தேம்பணை புடைசூழ்
திருச்செங்குன் றூர்த்திருச் சிற்று று
அங்குஅமர் கின்ற ஆதியான் அல்லால்
யாவர்மற்று என்அமர் துணையே?

பொ - ரை : நாங்கள் சென்று சார்வதற்குப் புகலிடமானவன், எங்கட்கு அமுதமானவன், நித்தியசூரிகட்குத் தலைவன், எனக்குத் தலைவன், நிறைந்திருக்கின்ற மூன்று உலகங்களையும் படைத்துக் காப்பாற்றி அழிக்கின்ற பொருந்திய பிரமன் விஷ்ணு சிவன் என்னும் மூன்று வகையான உருவத்தையுடையவன், எனக்கு அந்தராத்துமாவாய் இருப்பவன், சிறந்த கயல் மீன்கள் துள்ளுகின்ற தேன் நிறைந்த மருத நிலங்கள் பக்கங்களில் சூழ்ந்த திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாறு என்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கின்ற காரணப் பொருளானவன் அல்லாமல், எனக்குப் பொருந்திய துணை வேறு யாவர்?

வி - கு : 'அருவனாகிய ஆதியான்' என்க. அரு - அந்தர்யாமித்துவம். 'அமர் துணை யாவர்?' என்க.

**ஈடு :** இரண்டாம் பாட்டு. [3]'உலகத்தைப் படைத்தல் முதலாயினவற்றில் வல்லவனைத் திருச்செங்குன்றூரிலே நின்றருளினவன் அல்லது எனக்கு நல்துணை இல்லை,' என்கிறார்.

---

1. 'எங்கள்' என்ற பன்மைக்குப் பொருள் அருளிச்செய்கிறார், 'மஹாராஜர்' என்று தொடங்கி. மஹாராஜர் - சுக்கிரீவன். சுக்கிரீவனை மஹாராஜர் என்பது வைணவப் பெருமக்கள் மரபு.

2. 'இத்திருவாய்மொழியிலே அச்சம் நீங்கினதற்குரிய காரணத்தை நாம் எப்படி அறிவது?' என்ன, 'மேல்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. பின் அடிகளைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

எங்கள் செல் சார்வு - அநுகூலராய் இருப்பார்க்கு எல்லாம் அஞ்ச வேண்டாத புகல். யாமுடை அமுதம் - புகல் மாத்திரமேயாய் இனிய பொருள் வேறே தேட வேண்டாதே இருக்கை. 'எங்கள்', 'யாம்' எனப் பலர் உளரே? [1]கேசவன் தமர்க்குப் பின்பு தனியர் அல்லரே? [2]'குன்றம் எடுத்த பிரான் அடியாரொடும், ஒன்றி நின்ற சடகோபன்' என்று அவர்களோடு ஒன்றி நின்று சொல்லுகிற சொல் அன்றோ? இமையவர் அப்பன் என் அப்பன் - [3]நித்தியசூரிகளை அடிமை கொண்டாற்போலே என்னை அடிமை கொண்டவன். என்றது, 'குறைவு அற்றார்க்கும் சத்தைக்குக் காரணமாய், குறைவுக்கு எல்லையான எனக்கும் சத்தைக்குக் காரணமானவன்' என்றபடி. பொங்கு மூ உலகும் படைத்து அளித்து அழிக்கும் - பரந்தவையான மூன்று உலகங்களையும் உண்டாக்கிக் காத்து அழிக்குமவன். [4]பொருந்து மூ உருவன் - இச் செயல்களுக்குப் பொருந்தின மூன்று வடிவையுடையவன். [5]பிரமனுக்கு அந்தர்யாமியாய் நின்று படைப்பான்; உருத்திரனுக்கு அந்தர்யாமியாய் நின்று அழிப்பான்; தனது உருவமாக்வே நின்று காப்பாற்றுவான். அன்றிக்கே, [6]பொருந்துகையாவது, 'இராசத குணத்தால் மிக்க பிரம

---

1. 'கேசவன் தமர்க்குப் பின்பு' என்றது, 'கேசவன் தமர்' என்ற திருவாய்மொழியைப் பாடிய பின்பு என்றபடி.

2. ''எங்கள்' என்பதற்கு, அவர்கள் அருகில் இருக்கின்றார்களோ?' என்ன, 'அருகில் இருக்கிறார்கள்' என்று அதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'குன்றம்' என்று தொடங்கி. இது, திருவாய். 7. 4 : 11.

3. நித்தியசூரிகளுக்குப் பின் தம்மைச் சொன்னதற்குக் கருத்தை அருளிச்செய்கிறார், 'நித்திய சூரிகளை' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார், 'குறைவு அற்றார்க்கும்' என்று தொடங்கி. சத்தை - இருப்பு; உளதாம் தன்மை.

4. 'பொருந்து' என்பதற்கு, 'அச்செயல்களோடே சேர்ந்த' என்பது பொருள்.

5. 'மூன்று வடிவங்களையும் இவன் உடையவன் ஆகையாவது எப்படி?' என்ன, 'பிரமனுக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. 'பொருந்து' என்பதற்கு, 'செயல்களுக்குப் பொருந்தின' என்று மேலே பொருள் அருளிச்செய்து, 'திவ்வியமங்கள விக்கிரகம் போலே பிரிந்து நிற்றல் இல்லாதபடி பொருந்தின மூவுருவன்' என்று வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார், 'பொருந்துகையாவது' என்று தொடங்கி.

னேடு தாமத குணத்தால் மிக்க **சிவனேடு** திவ்விய மங்கள விக்கிரகத்தோடு வாசி அற்று இருக்கை,' என்னலுமாம்.

எம் அருவன் - [1]'மற்று எல்லாருடைய காரியமும் நம் புத்தி அதீநமாய் இருக்கும் அல்லது, நம் காரியம் அல்லாதார் நினைவின்படி அல்லகாணும் இருப்பது,' என்று எனக்கு அறிவித்து, என் அச்சத்தை நீக்கி, எனக்குத் தாரகன் ஆனவன். [2]'படைத்தல் அளித்தல் அழித்தல் என்னும் மூன்றுக்கும் காரணமானவரும் தமக்கு ஒரு காரணம் இல்லாதவரும் சர்வேஸ்வரரும் ஆன பகவானைச் சரணம் அடைமின்,' என்கிறபடியே, தன்னினின்றும் வேறுபட்ட எல்லாப் பொருள்களும் தன் நினைவிலேயாய், தான் ஒருவன் நினைவின்படி அன்றிக்கே இருக்கிறபடியைக் காட்டி என்னைத் தரிப்பித்தவன். செங்கயல் உகளும் - யௌவனத்தாலே சிவந்த கயல்கள் களித்து வாழ்கின்ற தேசம். [3]பரிவர் இலர் என்று முன்பே வருந்தி, பின்பு, 'வார்கடா அருவி'யாய் இருக்கிறபடியைக் கண்டு பிரீதராக வேண்டாதே, எல்லாப் பொருள்களும் களித்தே வாழ்கின்ற தேசம் என்கை. தேம் பணை புடை சூழ் - 'தேனையுடைத்தான நீர் நிலங்கள் சூழ்ந்த' என்னுதல். 'மருத நிலத்தாலே சூழப்பட்ட ஊர்' என்னுதல். அங்கு அமர்கின்ற - அவதாரங்கள் போலே தீர்த்தம் பிரசாதியாதே நித்தியவாசம் செய்கிற ஊர். [4]ஆதியான் - 'எல்லாப் பொருள்களுக்கும் காரணமானவன்' என்னுதல். 'என்

---

1. 'மூ உருவன்' என்றதன் பின், 'எம் அருவன்' என்று தமக்குத் தாரகன் என்று அருளிச்செய்வதற்குக் கருத்து அருளிச்செய்கிருர், 'மற்று' என்று தொடங்கி. தாரகன் - தரித்திருப்பதற்குக் காரணன்.

2. எல்லாவற்றுக்கும் தான் காரணமாய், தனக்கு வேறு ஒரு காரணம் இன்றிக்கே இருப்பதற்குப் பிரமாணம் காட்டுகிருர், 'படைத்தல்' என்று தொடங்கி.

'பராவரேஶம் ஶரணம் வ்ருணுத்வம் அஸுரார்த்தநம்
உத்பத்தி ஸ்திதி நாஶாநாம் அஹேதும் ஹேதும் ஈஶ்வரம்'
என்பது, ஸ்ரீ விஷ்ணு புரா. 1. 9 : 36.

3. 'செங்கயல்' என்பதற்கு பாவம் அருளிச்செய்கிருர், 'பரிவர் இலர்' என்று தொடங்கி.

4. 'ஆதியான்' என்பதற்கு இரு வகையாகக் கருத்து அருளிச்செய்கிருர்: முதல் கருத்து, 'பொங்கு மூ உலகும் படைத்து அளித்து அழிக்கும் பொருந்து மூ உருவன்' என்றதன் அநுவாதம்; இரண்டாவது கருத்து, 'எம் அருவன்' என்றதன் அநுவாதம்.

னுடைய சத்தைக்குக் காரணமானவன்' என்னுதல். [1]குழந்தைக்கு மிக அண்மையில் வசிக்கும் தாயைப் போலே, என் சத்தையே நோக்கிக்கொண்டிருக்கிறவன். அல்லால் யாவர் மற்று என் அமர் துணேயே - இவனே ஒழிய எனக்குச் சேர்ந்த துணே இல்லே. [2]அல்லாதார் கழுத்துக் கட்டியாதல், துணே என்று பேராய் ஆபத்திலே கூட அழுதல் செய்வர் இத்தனே. (2)

808

*என்அமர் பெருமான் இமையவர் பெருமான்*
*இருநிலம் இடந்தஎம் பெருமான்*
*முன்னேவல் வினேகள் முழுதுடன் மாள*
*என்னே ஆள் கின்றஎம் பெருமான்*
*தென்திசைக்கு அணிகொள் திருச்செங்குன் றூரில்*
*திருச்சிற்ருற் றங்கரை மீபால்*
*நின்றஎம் பெருமான் அடிஅலால் சரணம்*
*நினேப்பிலும் பிறிதுஇல்லே எனக்கே.*

பொ - ரை : எனக்குப் பொருந்திய பெருமான், நித்திய சூரிகளுக்குப் பெருமான், பெரிய பூமியை இடந்து கொண்டு வந்த பெருமான், முன்னேய கொடிய தீ வினேகள் முழுதும் ஒரு நொடிப் பொழுதில் அழியும்படி என்னே ஆள்கின்ற எம்பெருமான், தெற்குத் திசைக்கு அலங்காரமாய் விளங்குகின்றதிருச்செங்குன் றூரில் திருச்சிற்ருற்றங்கரையின் மேற்குப் பக்கத்திலே நின்ற திருக்கோலமாய் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானுடைய திருவடியே அல்லாமல் எனக்குப் புகலிடம் நினேவிலுங்கூட வேறு ஒன்றும் இல்லே.

வி - கு : மேல் என்பது 'மீ' என மரீஇயிற்று.

ஈடு: மூன்ரும் பாட்டு. [3]ஸ்ரீவராகமாய்ப் பிரளயம் கொண்ட பூமியை எடுத்தருளித் திருச்செங்குன்றூரிலே நின்றவனுடைய திருவடிகள் அல்லது வேறு புகலிடம் எண்ணத்திலுங்கூட எனக்கு இல்லே.

---

1. இரண்டாவது கருத்தைத் திருஷ்டாந்த மூலமாக விவரணம் செய்கிருர், 'குழந்தைக்கு' என்று தொடங்கி.

2. 'துணேயாவார் வேறு இலரோ?' என்ன, 'அல்லாதார்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

3. பாசுரம் முழுதினேயும் கடாட்சித்து அவதாரிகை அருளிச் செய்கிருர்.

இமையவர் பெருமான் என் அமர் பெருமான் - அயர்வு அறும் அமரர்கள் அதிபதியாய் எனக்கு அமர்ந்த சுவாமியாய் உள்ளான். என்றது, 'நித்தியசூரிகள் தனக்குப் பரிவராய் இருக்கிற இருப்பைக் காட்டி, நான் அஞ்சாதபடி செய்து, என்னுடைய அடிமையாம் தன்மையை நிர்வஹித்தவன்' என்றபடி. இருநிலம் இடந்த எம் பெருமான் - பிரளயம் கொண்ட பெரிய பூமியை எடுத்த தன் ஆற்றலைக் காட்டி என்னை அடிமைகொண்டவன். என்றது, 'பிரளயம் கொண்ட பூமியைப் போன்று எல்லாரும் தனக்குக் குழைசரக்காய் இருக்கிறபடியைக் காட்டித் தம் அச்சத்தைக் கெடுத்தான்' என்கை. முன்னை வல்வினைகள் முழுது உடன் மாள என்னை ஆள்கின்ற எம்பெருமான் - பழையனவான பிரபல கர்மங்களை வாசனையோடே போக்கி என்னை அடிமை கொள்ளுகிற சுவாமி. அன்றிக்கே, 'சூரம் வீரம் முதலியவற்றைக் காட்டி, மேல் எனக்குப் பிறந்த அச்சம் எல்லாம் போம்படி என்னை அடிமை கொண்டவன்' என்னுதல். [1]வல்வினை என்கிறது, பத்தியினால் பரவசப்பட்டிருக்கும் தன்மையை. [2]அதுவே அன்றோ 'வரம்பில் ஆற்றலையுடைய இறைவனுக்கு என் வருகின்றதோ !' என்னும் அச்சத்தைப் பிறப்பித்தது?

தென்திசைக்கு அணிகொள் திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு அம் கரை - ஆரியர்கள் இகழ்ந்த பூமியான தெற்குத் திக்கிற்கு ஆபரணமான ஊர். மீ பால் நின்ற எம் பெருமான் - மேலைத் திக்கில் நிலையும் உயர்விற்குக் காரணமாய், இவர்க்கு அச்சம் நீங்குதற்கு உடலாய் இருக்கிறது. திசைகளைப் பற்றியன்றோ பரத்துவம் இருப்பது? அடி அல்லால் பிறிது சரணம் நினைப்பிலும் இல்லை - அவன் திருவடிகள் ஒழிய மற்றுப் புகலிடமாய் இருப்பது ஒரு பொருள் எண்ணத்திலும் இல்லை. (3)

---

1. 'இரண்டாவது பொருளில் வல்வினையாவது யாது?' என்ன, 'வல்வினை என்கிறது' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. 'அதனை வல்வினை என்பான் என்?' என்ன, 'அதுவே அன்றோ' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இரண்டாவது பொருளில் 'முன்னை' என்பதற்கு, 'மேல் திருவாய்மொழியிலே' என்று பொருள் கொள்க.

809

*பிறிதுஇல்லை எனக்குப் பெரியமூ உலகும்*
*நிறையப்பேர் உருவமாய் நிமிர்ந்த*
*குறியமாண் எம்மான் குரைகடல் கடைந்த*
*கோலமா ணிக்கம்என் அம்மான்*
*செறிகுலை வாழை கமுகுதெங்கு அணிசூழ்*
*திருச்செங்குன் றூர்த்திருச் சிற்றாறு*
*அறியமெய்ம் மையே நின்றஎம் பெருமான்*
*அடிஇணை அல்லதுஓர் அரணே.*

**பொ - ரை :** 'பெரிய மூன்று உலகங்களும் நிறையும்படி பெரிய உருவமாகி நிமிர்ந்த அழகிய வாமனன் ஆன எம்மான், ஒலிக்கின்ற கடலைக் கடைந்த அழகிய மாணிக்கம் போன்ற வடிவையுடைய என் அம்மான், செறிந்த குலைகளையுடைய வாழைகளும் பாக்கு மரங்களும் தென்னை மரங்களும் அலங்காரமாய்ச் சூழ்ந்திருக்கின்ற திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாறு என்னும் திவ்விய தேசத்தில் வசிக்கின்றவர்கள் உள்ளபடி அறியும்படி உண்மைப்பெருமையோடே நின்ற எம்பெருமான் ஆகிய இறைவனுடைய இரண்டு திருவடிகள் அல்லாமல் மற்று ஒரு பாதுகாவல் இல்லை,' என்றவாறு.

**வி - கு :** 'அடி இணை அல்லது பிறிது ஓர் அரண் இல்லை,' என்க. அர்ச்சாவதாரம் 'பூர்ணம்' ஆகையாலே, 'மெய்ம்மையே நின்ற' என்கிறார்.

**ஈடு:** நான்காம் பாட்டு. [1]'மஹாபலியை வென்றும் கடலைக் கடைந்தும் அடியார்களுடைய ஆபத்தைப் போக்கித் திருச்செங்குன்றூரிலே நின்றருளினவன் திருவடிகள் அல்லது வேறு எனக்கு அரண் இல்லை,' என்கிறார்.

எனக்குப் பிறிது இல்லை - அவனை ஒழிய வேறு இரட்சகர் எனக்கு இல்லை. பெரிய மூன்று உலகமும் நிறையப் பேர் உருவமாய் நிமிர்ந்த - பிரமலோகம் முடிய ஆகாசத்தின் இடமுழுதும் விம்ம வளர்ந்த. என்றது, [2]தொடங்கின காரியம் வென்ற பிரீதியின் மிகுதியாலே வளர்ந்தபடி. குறிய மாண் எம்மான் - வளருகைக்கு உட

---

1. பாசுரம் முழுதினையும் கடாட்சித்து அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. 'அன்று பிறந்த இளைஞன் இப்படி வளரக் கூடுமோ?' என்ன, 'தொடங்கின' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச் செய்கிறார்.

லாகக் கொண்ட வாமன வேடத்தையும், [1]இரப்புத் தன்மையையும் காட்டி என்னை அடிமை கொண்டவன். [2]மஹாபலியை வெல்லுகைக்குக் கொண்ட வடிவைக் காட்டி அச்சத்தைக் கெடுத்தபடி. குரை கடல் கடைந்த - பெரிய ஒலி எழும்படி கடலைக் கடைந்தவன். கோலம் மாணிக்கம் - பெருவிலையதான இரத்தினம் போலே இருக்கின்ற அழகிய வடிவைக் கொண்டாயிற்றுக் கடலைக் கடைந்தது. என் அம்மான் - கடல் கடைந்த ஆற்றலையும் அழகையும் காட்டி என்னை அடிமை கொண்டவன்.

செறி குலை வாழை கமுகு தெங்கு அணி சூழ் திருச்செங்குன்றூர் திருச்சிற்றாறு - செறிந்த குலையையுடைத்தான வாழை, அப்படிப்பட்ட கமுகு, தெங்கு, இவற்றின் திரளாலே சூழப்பட்ட ஊர். [3]ஊரின் சிறப்பு என்றும், அரண் என்றும் இரண்டு இல்லை. [4]செறிந்த குலைகளாலும் திரண்டு சூழ்ந்திருக்கையாலும் உகவாதார்க்குப் புகுர ஒண்ணுதபடி இருக்கை. திருச்சிற்றாறு அறிய - [5]திருச்சிற்றாற்றிலுள்ளார் சர்வேஸ்வரன் என்று அறியும்படியாக. 'கட்டில்கள் கூப்பிடுகின்றன' என்பன போல, மெய்ம்மையே நின்ற எம்பெருமான் - [6]'நான் என்னை

---

1. 'மாண்' என்ற பதத்தைத் திருவுள்ளம் பற்றி 'இரப்புத் தன்மை' என்கிறார்.

2. இதனால் பலித்த பாவத்தை அருளிச்செய்கிறார், 'மஹாபலியை' என்று தொடங்கி.

3. 'அச்சம் கெடுகிற இடத்திலே அரணைச் சொல்லாமல், சிறப்பினைச் சொல்லுவான் என்?' என்ன, 'ஊரின்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. 'அது அரண் ஆகுமாறு யாங்ஙனம்?' என்ன, 'செறிந்த' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. 'திருச்சிற்றாறு' என்பது இடவாகு பெயராய் மக்களை உணர்த்துகிறது. இதனையே திருஷ்டாந்தத்தால் தெரிவிக்கிறார், 'கட்டில்கள்' என்று தொடங்கி. கட்டில்கள் - கட்டில்களிலே உள்ள மக்கள்.

6. 'ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தஸரதாத்மஜம்
யோஹம் யஸ்ய யதஸ்சாஹம் பகவான் தத் ப்ரவீது மே'

என்பது, ஸ்ரீராமா. யுத். 120 : 11.

'ந அஹம் தேவோ ந கந்தர்வோ ந யக்ஷோ ந ச தாநவஃ
அஹம்வோ பாந்தவோ ஜாதோ நைதத் சிந்த்யம் இதஃஅந்யதா'

என்பது, ஸ்ரீ விஷ்ணு புரா. 5. 13 : 12.

மனிதனாகவே நினைக்கிறேன்' என்றும், 'உங்களுக்கு உறவினனாகவே பிறந்திருக்கிறேன்' என்றும் மறைக்க வேண்டாதபடி பத்தும் பத்தாக நின்ற என் சுவாமி. அடி இணை அல்லது ஓர் அரண் இல்லை - அவன் திருவடிகள் அல்லது ஒரு பாதுகாவல் இல்லை. அடியிணை அல்லது ஓர் அரண் பிறிது இல்லை எனக்கு. (4)

810

**அல்லதுஓர் அரணும் அவனில்வேறு இல்லை**
**அதுபொருள் ஆகிலும் அவனை**
**அல்லதுஎன் ஆவி அமர்ந்துஅணை கில்லாது**
**ஆதலால் அவன்உறை கின்ற**
**நல்லநான் மறையோர் வேள்வியுள் மடுத்த**
**நறும்புகை விசும்புஒளி மறைக்கும்**
**நல்லநீள் மாடத் திருச்செங்குன் றூரில்**
**திருச்சிற்றாறு எனக்குநல் அரணே.**

**பொ-ரை:** மற்றைய ஒப்பற்ற திவ்விய தேசங்களில் எழுந்தருளியிருக்கின்றவனும் அவனைக்காட்டிலும் வேறுபட்டவன் அல்லன் என்கிற அதுவே உண்மைப்பொருள் ஆனாலும் திருச்சிற்றாற்று எம்பெருமானை ஒழிய என் உயிரானது வேறு ஒருவனைப் பொருந்தி விரும்பமாட்டாது; ஆகையாலே, அவன் எழுந்தருளியிருக்கின்ற, சிறந்த அந்தணர்களால் செய்யப்படுகின்ற யாகங்களிலே அவிர்ப்பாகத்திலிருந்து உண்டாகிற நறிய புகையானது ஆகாசத்தினது பிரகாசத்தை மறைக்கின்ற சிறந்த நீண்ட மாடங்களையுடைய திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு எனக்குச் சிறந்த புகலிடமாகும்.

**வி-கு:** 'பொருள் அது' என மாற்றுக. 'அவன் உறைகின்ற திருச்செங்குன்றூர்' எனக் கூட்டுக. 'மறைக்கும் மாடம் திருச்செங்குன்றூர்' என்க.

**ஈடு:** ஐந்தாம் பாட்டு. [1]'அல்லாத உகந்தருளின தேசங்களும் உண்டாய் இருக்கத் திருச்செங்குன்றூரில் நீர் மிக்க விருப்பத்தைச் செலுத்தி வற்புறுத்துவதற்குக் காரணம் என்?' என்ன, 'அது அங்ஙனே இருக்கச் செய்தேயும் திருச்செங்குன்றூரில் அல்லது என் மனமானது சேர்ந்து அணையாது' என்கிறார்.

---

1. 'ஆகிலும் அவனை அல்லது என் ஆவி அமர்ந்து அணைகில்லாது' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

அல்லது ஓர் அரணும் அவனில் வேறு இல்லை - அல்லாத இடங்களும் அவனுக்குப் புறம்பாக இருப்பது இல்லை. பொருள் அது - பொருளின் உண்மை அது. ஆகிலும் - இங்ஙனே இருந்ததேயாகிலும். அவனை அல்லது என் ஆவி அமர்ந்து அணைகில்லாது - திருச்செங்குன்றூரில் நின்றருளினவனை அல்லது என் மனமானது சேர்ந்து அணையாது; [1]ஸ்ரீவைகுண்டநாதன் ஈஸ்வரன் அல்லாமையும் சம்பந்தம் இல்லாமையுமோ, திருவடி 'வேறு ஒன்றனை என் மனம் விரும்புகிறது இல்லை' என்றது? அப்படியே இவரும். அமர்ந்து அணைகை - உள் வெதுப்பு அற்றுப் பொருந்துகை.

ஆதலால் - இப்படி ஆகையால். அவன் உறைகின்ற - அவன் நித்தியவாசம் செய்கின்ற. 'உறைகின்ற' என்பதனைப் பின் வருகின்ற 'திருச்செங்குன்றூர்' என்றதனோடு கூட்டுக. நல்ல நான்மறையோர் - அவனை அல்லது வேறு பிரயோஜனத்தைக் கருதாத பிராமணர். வேள்வியுள் மடுத்த நறும்புகை - யாகங்களிலே உண்டான அவிர்ப்பாகத்தின் வாசனையோடு கூடிய தூமம். 'அவனை அல்லது வேறு பயன்களை விரும்பாதவர்களாகில் இவர்கள் செய்கிற யாகத்துக்குப் பிரயோஜனம் என்?' என்னில், யாகம் செய்தலே பிரயோஜனமாதல், பகவானுக்கு விரோதிகளாக உள்ளவர்களை அழியச் செய்யும் அபிசாரம் பலமாதல். [2]எம்பெருமானாரைப் போலே ஆயிற்று அவ்வூரில் பிராமணர்களும். விசும்பு ஒளி மறைக்கும் - ஆகாசத்திலே ஒளி உள்ள சூரிய சந்திரர்களை மறைக்கும் என்னுதல்; விசும்புதன்னில் ஒளியை மறைக்கும் என்னுதல். நல்ல நீள் மாடம் - ஒரு கர்மமும் வேண்டா; ஊர் அரண்தானே பகைவர்களுக்கு அடைய முடியாததாய்

---

1. 'சம்பந்தம் எல்லா இடங்களிலும் ஒத்திருக்க, இங்ஙன் அருளிச்செய்யலாமோ?' என்ன, 'ஸ்ரீ வைகுண்டநாதன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். திருவடி - அனுமான்.

'பாவோநாந் யத்ர கச்சதி'

என்பது, ஸ்ரீராமா. உத். 40 : 15.

2. 'ஆயின், அப்படி அபிசாரம் செய்தார் உளரோ?' என்ன, 'எம்பெருமானாரை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, 'கிருமிகண்ட சோழன்பொருட்டு, மேல் நாட்டில் எழுந்தருளியிருந்த எம்பெருமானார் அபிசாரயாகம் செய்த இதிகாசம் இங்கே அறியத்தகும்' என்றபடி.

இருக்கும். திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு - [1]'மாட மா மயிலைத் திருவல்லிக்கேணி' என்னுமாறு போலே. எனக்கு நல் அரணை - அஸ்தாநேபய சங்கை பண்ணும் எனக்கு அச்சம் நீங்குகின்ற தேசம் அது அல்லது இல்லை. திருச்சிற்றாறு என்று திருப்பதிக்கும் பேர்; ஆற்றுக்கும் பேர். (5)

811

**எனக்குநல் அரணை எனதுஆர் உயிரை**
**இமையவர் தந்தைதாய் தன்னைத்**
**தனக்கும்தன் தன்மை அறிவுஅரி யானைத்**
**தடங்கடற் பள்ளிஅம் மானை**
**மனக்கொள்சீர் மூவா யிரவர்வண் சிவனும்**
**அயனும் தானும்ஒப் பார்வாழ்**
**கனக்கொள் திண் மாடத் திருச்செங்குன் றூரில்**
**திருச்சிற்று றதனுள்கண் டேனே.**

**பொ - ரை:** எனக்குச் சிறந்த புகலிடமானவனை, எனக்கு அரிய உயிராய் இருப்பவனை, நித்தியசூரிகட்குத் தந்தையாயும் தாயாயும் இருக்கின்றவனை, தனக்கும் தன்னுடைய தன்மையை அறிதற்கு அரியவனை, விரிந்த திருப்பாற்கடலிலே அறிதுயில் செய்கின்றவனை, ஞான வளப்பத்தையுடைய சிவபிரானையும் பிரமனையும் தன்னையும் ஒப்பவர்களாகிய மனத்திலே கொள்ளப்பட்ட கல்யாண குணங்களையுடையவர்களான மூவாயிரம் அந்தணர்கள் வாழ்கின்ற, செறிவைக் கொண்டு உள்ள வலிய மாடங்கள் சூழ்ந்த திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறதனுள் கண்டேன்.

**வி - கு:** 'அம்மானைத் திருச்சிற்றாறதனுள் கண்டேன்' என்க. 'ஒப்பாராகிய மூவாயிரவர் வாழ் திருச்செங்குன்றூர்' என்க.

**ஈடு:** ஆறும் பாட்டு. [2]'நித்திய சூரிகளுக்கு எல்லா விதமான உறவுமாய், பிரமன் முதலாயினோர்கட்கு அடையப்படுமவனுக்கொண்டு திருபாற்கடலிலே திருக்கண்வளர்ந்தருளுகிற இவனை, தனக்கு என் வருகிறதோ

1. திருச்செங்குன்றூர் என்பது, நகரத்தைச் சொல்லுகிறது. திருச்சிற்றாறு என்பது திருப்பதியைச் சொல்லுகிறது. இதற்கு மேற்கோள் காட்டுகிறார், 'மாடமாமயிலை' என்று தொடங்கி. இது, **பெரிய திருமொழி**, 2. 3 : 1.

2. பரீசுரமுழுதினையும் கடாட்சித்து அவதாரிகை அருளிச் செய்கிறார்.

என்று அஞ்ச வேண்டாதபடி அச்சம் அற்ற திருச்செங்குன்றூரிலே காணப்பெற்றேன்' என்கிருர்.

எனக்கு நல் அரணை - 'பின்னர் [1]உபாஸகனை அவன் பயம் அற்றவன் ஆகிருன்' என்கிற விஷயத்துக்கு என் வருகிறதோ என்று பயப்படுகிற எனக்கு அச்சம் அற்ற அரண் ஆனவனை. எனது ஆர் உயிரை - தன்னுடைய காக்குந் தன்மையைக் காட்டி எனக்குத் தாரகனானவனை. இமையவர் தந்தை தாய் தன்னை - அஸ்தானே பய சங்கை பண்ணும் நித்தியசூரிகளுக்கு எல்லாவித உறவுமானவனை. [2]'சூழ்ந்திருந்து ஏத்துவர் பல்லாண்டே' என்னக் கடவதன்றே? தனக்கும் தன் தன்மை அறிவு அரியானை - இயல்பாகவே முற்றறிவினனான தன்னுலும் தன்னை அளவிட்டு அறிய முடியாது. [3]முதலிலே அச்சத்துக்கு இடம் இல்லை; [4]ஒரு பொருளை அளவிட்டு அறிந்து நலிய வேண்டுமே. தடம் கடல் பள்ளி அம்மானை - [5]சுவேதத் தீபத்திலே வசிக்கின்றவர்கள் பற்றுதற்கும், மது கைடபர் முதலாயினாரை அழிப்பதற்கும், பிரமன் முதலாயினோர் பரிகைக்கும் திருப்பாற்கடலிலே திருக்கண் வளர்ந்தருளுகிறவனை.

மனம் கொள் சீர் மூவாயிரவர் - பகவத் குணங்களை மனத்திலே கொண்டு, 'இக்குணதிகனுக்கு என் வருகிறதோ?' என்று அஸ்தானே பய சங்கை பண்ணிக் கொண்டு வசிக்கின்றவர்கள் மூவாயிரம் பிராமணர்கள்

---

1. 'உபாசகனை அவன் பயம் அற்றவன் ஆகிருன் என்கிற விஷயத்துக்கு' என்றது, 'தன்பக்கல் மனத்தினை வைத்தாரை அச்சம் அற்று இருக்கும்படி செய்கிற விஷயத்துக்கு' என்றபடி.

'அதஸஃ அபயங்கதோ பவதி' என்பது, தைத். உப.

2. 'நித்தியசூரிகள் அஸ்தானே பய சங்கை பண்ணுவரோ?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிருர், 'சூழ்ந்திருந்து' என்று தொடங்கி. இது, திருப்பல்லாண்டு, 11.

3. 'தனக்கும் தன் தன்மை அறிவு அரியானை' என்றதனுல் பலித்த பொருளை அருளிச்செய்கிருர், 'முதலிலே' என்று தொடங்கி.

4. 'அது எப்படி?' என்ன, 'ஒரு பொருளை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

5. திருப்பாற்கடலிலே திருக்கண்வளர்வதற்கு மூன்று காரணங்கள் அருளிச்செய்கிருர், 'சுவேதத் தீபத்திலே' என்று தொடங்கி.

உண்டு. [1]அவ்வூரில் பிராமணர்களும் இவர் கோடியிலே ஆயிற்று; [2]'பரத்வாஜ முனிவரை ஒரு நிலைப்பட்ட மன மொழி மெய்களையுடைய ஸ்ரீராமபிரான் வணங்கினர்,' என்கிற ஸ்ரீபரத்துவாச மஹாமுனிவரோடு ஒக்குமவர்கள். தன்னைப் பிரிந்த அன்று முதல் இராவணனைக் கொன்று மீளும் அளவும் செல்ல, 'இவர்களுக்கு என் வருகிறதோ!' என்று இதனையே நினைத்திருந்தவன் அன்றோ ஸ்ரீபரத்து வாச பகவான்? வண்சிவனும் அயனும் தானும் ஒப்பார் வாழ் - [3]மூவர் செய்யும் காரியங்களையும் ஓர் ஒருவரே செய்ய வல்லவராய் இருப்பார்கள். [4]அதிகாரி புருஷர் களில் இவர்களுக்கு உண்டான ஏற்றம். கனம் கொள் திண் மாடம் - இவர்களும் மிகை. ஊர் அரண்தானே சிலர்க்குப் புகுவதற்குப் போகாது. திருச்சிற்றாறதனுள் கண்டேனே - [5]அஞ்சின தேசத்திலே அச்சம் நீங்கினாற் போலே, சம்சாரத்துக்குள்ளே பயம் அற்றதாய் இருப்பது ஒரு தேசம் உண்டாய், அதிலே காணப்பெற் றேன். (6)

---

1. அவர்கள் பரிவதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார், 'அவ் வூரில்' என்று தொடங்கி. 'இவர் கோடியிலே' என்றது, 'ஆழ்வார் கோடியிலே' என்றபடி.

2. அதற்கே வேறும் ஒரு திருஷ்டாந்தம் காட்டுகிறார், 'பரத் வாஜ முனிவரை' என்று தொடங்கி.

> 'பூர்ணே சதுர்தஶே வர்ஷே பஞ்சம்யாம் லக்ஷ்மணாக்ரஜ:
> பரத்வாஜ ஆஶ்ரமம் ப்ராப்ய வவந்தே நியதோ முநிம்'

என்பது, ஸ்ரீராமா. யுத். 127 : 1. சுலோகத்திலே உள்ள 'முநிம்' என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார், 'தன்னைப் பிரிந்த' என்று தொடங்கி.

3. 'இவர்களைக் கண்டவாறே அச்சம் நீங்கிற்று'என்னும் இடம் தோன்ற அவர்களுடைய ஆற்றலின் உறைப்பை அருளிச்செய் கிறார், 'மூவர்' என்று தொடங்கி.

4. 'மூவாயிரவர்களும் மூவருக்கு ஒத்தவர்கள்' என்னாமல், 'ஓர் ஒருவரே' என்றதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'அதிகாரி புருஷர் களில்' என்று தொடங்கி.

5. 'திருச்சிற்றாறதனுள் கண்டேன்' என்கிறவருடைய மனோபா வத்தை அருளிச்செய்கிறார், 'அஞ்சின தேசத்திலே' என்று தொடங்கி.

812

**திருச்செங்குன் றூரில் திருச்சிற்ரு றதனுள்**
**கண்ட அத் திருவடி என்றும்**
**திருச்செய்ய கமலக் கண்ணுஞ்செவ் வாயும்**
**செவ்வடி யும்செய்ய கையும்**
**திருச்செய்ய கமல உந்தியும் செய்ய**
**கமலமார் பும்செய்ய உடையும்**
**திருச்செய்ய முடியும் ஆரமும் படையும்**
**திகழஎன் சிந்தையு ளானே.**

பொ - ரை : திருச்செங்குன்றூரில் திருச்சிற்ருறதனுள் கண்ட அந்தச் சுவாமி, எப்பொழுதும் அழகிய சிவந்த தாமரை போன்ற திருக்கண்களும் சிவந்த திருவாயும் சிவந்த திருவடியும் சிவந்த திருக்கைகளும் அழகிய சிவந்த திருஉந்தித்தாமரையும் சிவந்த பெரிய பிராட்டியார் எழுந்தருளியிருக்கின்ற திருமார்பும் சிவந்த பீதாம்பரமும் அழகிய சிவந்த திருமுடியும் திருஆரமும் திவ்விய ஆயுதங்களும் விளங்கும்படியாக என் மனத்திலே எழுந்தருளியிருக்கிருன்.

வி - கு : 'திருவடி என் சிந்தையுளான்' என்க.

ஈடு : ஏழாம் பாட்டு. [1]'திருச்செங்குன்றூரிலே நின்றருளின சீர்கொள் சிற்ருயன், தன் அழகோடே மறக்க ஒண்ணுதபடி என் நெஞ்சிலே வந்து புகுந்தான்,' என்கிருர்.

திருச்செங்குன்றூரில் திருச்சிற்ருறதனுள் கண்ட அத் திருவடி - அச்சம் அற்ற இடமான திருச்செங்குன்றூரில் திருச்சிற்ருற்றிலே காணலாம்படி நின்ற சுவாமி. திருவடி - சுவாமி. திருச்செய்ய கமலம் கண்ணும் - அழகியதாய் சிவந்திருப்பதாய மலர்த்தி செவ்வி முதலானவற்ருலே தாமரை போலே இருக்கிற திருக்கண்களும். செவ்வாயும் - [2]நோக்கால் பிறந்த முதல் உறவைக் கிரயம் செலுத்திக் கொடுக்கும் புன்முறுவலும். செவ்வடியும் - புன் முறுவலுக்குத் தோற்று விழும் திருவடிகளும். செய்ய கையும் - திருவடிகளிலே விழுந்தாரை எடுத்து அணைக்கும் திருக்கையும். திருச்செய்ய கமல உந்தியும் - அணைத்தார்க்கு எப்பொழுதும் அனுபவிக்கத் தக்கதாய், அழகுக்கு எல்லையாய், எல்லாப் பொருள்கட்கும் பிறப்பிடம் என்று

1. பாசுரம் முழுதினையும் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிருர்.

2. கண்ணுக்குப் பின் அதரத்தைச் சொன்னதற்குக் கருத்து அருளிச்செய்கிருர், 'நோக்கால்' என்று தொடங்கி.

தோற்றும்படி இருக்கிற திருநாபியும். [1]செய்ய கமல மார்பும் - பகவானுடைய சம்பந்தம் இல்லாதார்க்கும் பற்றுசான பிராட்டிக்கு இருப்பிடம் ஆகையாலே சிவந்த திருமார்பும். 'கமலே' என்றுமாம். செய்ய உடையும் - திருமேனிக்குப் பரபாகமாய் ஆண் தன்மையைக் குறிப்பதான திருப்பீதாம்பரமும். திருச்செய்ய முடியும் - அப்படித் திருமேனிக்குப் பரபாகமாய் அச்சம் தீரும்படி காப்பதற்கு அறிகுறியான திருமுடியும். ஆரமும் - [3]'பெரிய வரை மார்வில் பேர்ஆரம் பூண்டு' என்கிறபடியே, திருமார்விற்குத் தகுதியான திரு ஆரமும். படையும் - வினைத்தலையில் ஆயுதமாய், போக நிலையில் ஆபரணமாய் இருந்துள்ள திவ்விய ஆயுதங்களும். திகழ - [4]'தண்டகாரண்யம் முழுதும் அழகிய சோபை விளங்கச் செய்து' என்கிற படியே, விளங்க. என்றும் என் சிந்தையுளானே - அவன் என்றும் ஒக்க என் சிந்தையிலே வசிக்கையாலே அச்சத்துக்கு ஒதுங்க இடம் இல்லை. (7)

813

**திகழஎன் சிந்தை யுள்இருந் தானைச்**
**செழுநிலத் தேவர்நான் மறையோர்**
**திசைகைகூப் பிஏத்தும் திருச்செங்குன் றூரில்**
**திருச்சிற்றாற் றங்கரை யானைப்**
**புகர்கொள்வா னவர்கள் புகலிடந் தன்னை**
**அசுரர்வன் கையர்வெங் கூற்றைப்**
**புகழுமாறு அறியேன் பொருந்துமூ உலகும்**
**படைப்பொடு கெடுப்புக்காப் பவனே.**

---

1. 'செய்ய கமலம்' என்பதற்கு இரு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார்: 'கமலம் போலே சிவந்த மார்பு' என்பது முதற் பொருள். 'கமலை இருப்பதனாலே சிவந்த மார்பு' என்பது இரண்டாவது பொருள். 'பகவானுடைய சம்பந்தம் இல்லாதார்க்கும்' என்றது, 'பகவானுடைய சம்பந்த ஞானம் இல்லாதார்க்கும்' என்றபடி.

2. பரபாகம் - பல நிறங்கள் தம்மில் கலத்தலால் தோன்றும் நிற வேறுபாடு.

3. 'பெரிய வரை மார்பில்' என்பது, மூன்றும் திருவந். 55.

4. 'ஶோபயன் தண்டகாரண்யம் தீப்தேந ஸ்வேந தேஜஸா
அத்ருஶ்யத ததா ராமோ பாலசந்த்ர இவோதிதঃ'
என்பது, ஸ்ரீராமா. ஆரண். 38 : 15.

பொ - ரை: என் மனத்திற்குள்ளே விளங்க இருந்தவனை, நான்கு வேதங்களிலும் வல்லவர்களும் பூதேவர்களுமாகிய ஸ்ரீவைஷ்ணவர்கள், திசை நோக்கிக் கை கூப்பித் துதிக்கும்படியாகத் திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையில் எழுந்தருளியிருக்கின்றவனை, ஒளியைக் கொண்ட தேவர்களுக்குப் புகலிடமாய் இருப்பவனை, வலிய கையையுடையரான அசுரர்கட்குக் கொடிய யமனானவனை, பொருந்திய மூன்று உலகங்களையும் படைத்து அழித்துக் காப்பாற்றுகின்றவனைப் புகழுமாற்றை அறியேன்.

வி – கு: 'காப்பவனைப் புகழுமாறு அறியேன்' என்க. வன்கையர் - வஞ்சகருமாம்.

ஈடு: எட்டாம் பாட்டு. [1]'இப்படி நிறைவாக அனுபவித்த சீர் கொள் சிற்றாயனுடைய விலக்ஷணமான குணங்களிலும் அழகிலும் அழுந்தி, அவனைப் புகழும்படி அறிகின்றிலேன்,' என்கிறார்.

திகழ என் சிந்தையுள் இருந்தானை - [2]இதுவும் இவர்க்கு ஓர் அச்சம் நீங்குதற்குக் காரணம். தம் நெஞ்சிலே இருக்கையாலே ஓர் அரணுக்குள்ளே இருக்கிறாப் போலே இருக்கிறதாயிற்று. உகவாதார் நெஞ்சிலே இருக்கிற அச்சமும் போயிற்று; 'இனிப் போய்ப் பிறர் ஒருவர் வல் நெஞ்சம் புக்கு இருக்க ஒட்டேன் வளைத்து வைத்தேன்' என்னுமவர்களே அன்றோ? நான்மறையோர் செழுநிலத்தேவர் திசை கைகூப்பி ஏத்தும் திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையானை - நான்கு வகைப்பட்ட வேதங்களும் கைவந்து விலக்ஷணராய்ப் பூதேவரான ஸ்ரீவைஷ்ணவர்கள், திக்குகள்தோறும் நின்று கைகூப்பி ஏத்தாநின்றுள்ள திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையிலே வசிக்கிறவனை. உகவாதார்க்குக் கிட்ட ஒண்ணாதபடி அரணான ஊரிலே நிற்கிறபடி.

---

1. 'புகழுமாறு அறியேன்' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. சிந்தையுள் இருந்தான் என்னாமல், 'திகழ' என்று விசேடித்ததற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'இதுவும்' என்று தொடங்கி. 'அது எப்படி?' என்ன, 'தம் நெஞ்சிலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இதனால், பலித்த கருத்தை அருளிச்செய்கிறார் 'உகவாதார்' என்று தொடங்கி. தம் நெஞ்சில் இருந்தால், 'உகவாதார் நெஞ்சில் இருந்த பயமும் போயிற்று' என்கைக்குக் காரணத்தை அருளிச்செய்கிறார், 'இனிப்போய்' என்று தொடங்கி. இது, பெரிய திருமொழி, 7. 2 : 7.

புகர் கொள் வானவர்கள் புகலிடந்தன்னை - தங்களை ஒழிந்தார்க்கு எல்லாம் புகலிடமாய் இருப்பவர்கள் ஆகையாலே வந்த ஒளியையுடையரான பிரமன் முதலானவர்களுக்கும் ஆபத்து வந்தால் புகலிடமாய் உள்ளவனை. வன்கையர் அசுரர் வெங்கூற்றை - முன்கை மிடுக்கரான அசுர கூட்டத்துக்கு அந்தகன் தண்ணீர் என்னும்படி வெவ்விய கூற்றமாக உள்ளவனை. புகழுமாறு அறியேன் - [1]அவனுக்கு ஒரு குறை இல்லை; என் குறை தீரப் புகழ்வது ஒரு பிரகாரம் அறிகின்றிலேன்; [2]புகழாது ஒழியவும் மாட்டுகின்றிலேன். 'ஆனால், செய்ய அடுப்பது என்?' என்னில், பொருந்து மூன்று உலகும் படைப்பொடு கெடுப்புக் காப்பவன் - தனக்கு வசப்பட்டிருக்கின்ற எல்லா உலகத்தினுடையவும் படைத்தல் முதலானவற்றைச் செய்யுமவன் என்று திரளச் செய்யுமத்தனை; பிரித்து வகை இட்டுச் சொல்லப்புக்கால் சொல்லி முடிக்கப் போகாது. என்றது, 'சுருங்கச் சொல்லுதலிலே சொல்லுவது அத்தனை' என்றபடி. (8)

814

படைப்பொடு கெடுப்புக் காப்பவன் பிரம
பரம்பரன் சிவபிரான் அவனே
இடைப்புக்குஓர் உருவும் ஒழிவில்லை அவனே
புகழ்வில்லை யாவையும் தானே
கொடைப்பெரும் புகழார் இனையர்தன் ஆனார்
கூரிய விச்சையோடு ஒழுக்கம்
நடைப்பலி இயற்கைத் திருச்செங்குன் றூரில்
திருச்சிற்றாறு அமர்ந்தநா தன்னே.

பொ - ரை: கூர்மை பொருந்திய கல்வியோடு அநுஷ்டானமும் நாடோறும் செய்யப்படுகின்ற திருவாராதனமும் ஆகிய இவைகள் இயல்பாகவே அமைந்தவர்களான கொடையால் அமைந்த பெரிய புகழோடு கூடியவர்களும், 'இன்னார்' என்று பிரசித்தமானவர்களும், ஈஸ்வரனாகிய தன்னை ஒத்த ஞானம் சத்தி முதலியவற்றையுடையவர்களுமான ஸ்ரீ வைஷ்ணவர்கள் வசிக்கின்ற திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றில் எழுந்தருளியிருக்கின்ற .

1. 'அவனுக்கு ஒரு குறை இல்லை' என்றது, 'மங்களாசாசனம் செய்யுமவர்கள் உளர் ஆகையாலே குறை இல்லை' என்றபடி.

2. 'ஆயின், வாளா இருப்பின் என்?' என்ன, 'புகழாது ஒழியவும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

சர்வேஸ்வரன், படைத்தல் அழித்தல் காத்தல் ஆகிய முத்தொழில்களைச் செய்கிறவனும் ஆவன்; பிரமனாகிய மேலானவனும் சிவபிரானும் ஆவன்; பிரமனுக்கும் சிவனுக்கும் நடுவே காப்பாற்றுகின்றவனாய்ப் புகுந்து ஒரு பொருளையும் விட்டு நீங்காமல் எல்லாப்பொருள்களிலும் அந்தரியாமியாய் இருப்பவனும் ஆவன்; எல்லாப் பொருள்களும் தன் அதீனமாய் இருக்கப் பெற்றவனும் ஆவன்; யான் கூறுவது புனைந்துரை அன்று.

வி - கு : 'கூரிய விச்சையோடு ஒழுக்கம் நடைப்பலிஇயற்கைக் கொடைப் பெரும்புகழார் இனையர் தன்னானர் (வாழ்கின்ற) திருச்செங்குன்றூர்' என்க. பலி - திருவாராதனம்; பூசை.

**ஈடு:** ஒன்பதாம் பாட்டு. [1]'பிரமன் முதலான எல்லாப் பொருள்களினுடைய படைத்தல் முதலானவைகளைச் செய்கின்றவன் திருச்செங்குன்றூரில் நின்றருளினவன் என்னும் இடம் புனைந்துரை அன்று; மெய்' என்கிறார்.

படைப்பொடு கெடுப்புக் காப்பவன் - படைத்தல், அழித்தல், காத்தல் இவை எல்லாம் தன் உரிமையாகவுடையவன். பிரம பரம்பரன் - மனிதர்களைக்காட்டிலும் இந்திரன் முதலாயினார்கட்கு உண்டான ஏற்றம் போலே, அந்த இந்திரன் முதலாயினார்களில் ஏற்றமுடையனான பிரமனாகிற பரனில் பரன். சிவபிரான் - அப்படியே தேவர்களில் [2]தலை வலித்தானாய் இருக்கிற சிவன். அவர்களும் இவன் இட்ட வழக்கு. இடைப்புக்கு ஓர் உருவும் ஒழிவு இல்லை அவனே - நடுவே புகுந்துள்ள ஒரு பொருளும் சுவதந்தரமாய் இருப்பது இல்லை; முழுதும் சரீரமாகத் தான் ஆத்துமாவாய் இருக்கும். யாவையும் தானே - இங்ஙன் பிரித்துச் சொல்லுகிறது என்? சேதநம் அசேதநம் என்னும் வேறுபாடு அற அவனுக்கு உரிமை ஆகும். புகழ்வு இல்லை - இதில் புனைந்துரை இல்லை. பிரமன் முதலாயினோர்கட்கும் இவ்வேற்றங்கள் சொல்லக்கடவர்; அது உபசாரம். இவ்விஷயத்தில் புனைந்துரை என்ற ஐயமும் இல்லை. 'இப்படி, எல்லாம் தனக்கு உரிமைப்பட்டவை என்னும்படி இருக்கிறவன் யார்?' என்ன, 'திருச்சிற்றாறு அமர்ந்த நாதன்' என்கிறார் மேல்:

---

1. 'படைப்பொடு கெடுப்புக் காப்பவன், திருச்சிற்றாறு அமர்ந்த நாதன், புகழ்வு இல்லை,' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. தலைவலித்தானாய் - முதல்வனாய்.

கொடைப் பெரும்புகழார் - அவ்வூரில் உள்ளார் கொடையால் வந்த பெரும்புகழை உடையார். என்றது, எதிரிகளையும் கொடையாலே வசீகரிக்க வல்லவராய் இருக்கையைத் தெரிவித்தபடி. [1]தானமும், சாமம் முதலானவைகளிலே ஒன்று அன்றோ? அன்றிக்கே, 'பெரும்புகழாவது, ஞானத்தைக் கொடுத்தலால் உண்டாகும் புகழ்' என்னவுமாம். 'கல்வித் தானம் மிக உயர்ந்தது' என்னக் கடவது அன்றோ? இனையர் - 'இன்னார் இன்னார்' என்று பிரசித்தராய் இருக்குமவர்கள். என்றது, [2]'மற்றைய தேசங்களிலுங்கூட எங்கும் பிரசித்தரானவர்கள்' என்கிறபடியே, பகைவர்கள் தேசத்திலும் பிரசித்தராய் இருக்கையாலே, பகைவர்கள் அங்கே சென்றால் மீளப்போகாது என்று இங்கு வர நினையாது இருக்கையைத் தெரிவித்தபடி. **'எனையர்'** என்ற பாடமும் உண்டு; அப்பொழுது, 'இப்படி இருப்பார் பலர்' என்பது பொருள். தன் ஆனார் - தன்னோடு ஒத்தவர்கள். என்றது, 'அவனைப்போலே எடுத்த காரியத்தில் வெற்றி கொண்டு அல்லது மீளாதவர்கள்' என்றபடி.

கூரிய விச்சையோடு ஒழுக்கம் - நல்ல ஞானமும் ஞானத்திற்குத் தக்கவையான நல்ல ஆசாரங்களும். என்றது, 'எதிரிகளை அறிந்து பரிகரிக்க வல்ல ஞானமும், எதிரிகளுக்கு நலிய இடமான ஒழுக்கக் கேடு இல்லாமையும் தெரிவித்தபடி. [3]இந்திரன், கருவினை அழிப்பதற்கு ஒழுக்கக்கேடு அன்றோ இடம் ஆயிற்று? [4]'நல்ல ஒழுக்கத்தோடு இருப்பது பகைவர்களுக்குத் தண்டனை' என்னக்

---

1. 'தானத்தாலே வசீகரித்தல் தாழ்வு அன்றோ?' என்ன, 'தானமும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. 'விதேஶேஷ்வபி விக்யாதா: ஸர்வதோ புத்திநிஶ்சயாத்
சந்தி விக்ரஹ தத்வஜ்ஞா: ப்ரக்ருத்யா ஸம்பதந்விதா:'

என்பது, ஸ்ரீராமா. பால. 7 : 15.

3. 'பகைவர்கள் நலிவதற்கு ஒழுக்கக்கேடு காரணம் ஆமோ?' என்ன, 'இந்திரன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இச்சரிதப் பகுதியைக் கம்பராமாயணம், பாலகாண்டம், அகலிகைப் படலம் 27, 28, 29ஆம் செய்யுள்களால் உணர்தல் தகும்.

4. நல்லொழுக்கம் வெற்றிக்குக் காரணம் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'நல்ல' என்று தொடங்கி.

'ஜ்வர தண்டோபவாஸஶ்ச பார்யாதண்ட: ப்ருதக்சய:
ஆம்நாய: சந்தஸாம் தண்ட: ஶத்ருதண்ட: ஸுவ்ருத்ததா'

என்பது, பிரமாணம்.

கடவது அன்றோ? நடைப்பலி - நித்தியமான பகவானுடைய ஆராதனம். நடை - எப்பொழுதும் இடையறாது இருத்தல். பலி - பூசை. இயற்கை - இதுவே பொழுது போக்காக இருக்குமவர்கள். திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு அமர்ந்த நாதனே - திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றில் எழுந்தருளியிருக்கின்ற சர்வேஸ்வரன். சர்வேஸ்வரன் படைப்பொடு கெடுப்புக் காப்பவன். (9)

815

*அமர்ந்தநா தன்னை அவர்அவர் ஆகி*
*அவர்க்குஅருள் அருளும்அம் மானை*
*அமர்ந்ததண் பழனம் திருச்செங்குன் றூரில்*
*திருச்சிற்றாற் றங்கரை யானை*
*அமர்ந்தசீர் மூவா யிரவர்வே தியர்கள்*
*தம்பதி அவனிதே வர்வாழ்வு*
*அமர்ந்தமா யோனை முக்கண்அம் மானை*
*நான்முக னைஅமர்ந் தேனே.*

பொ - ரை: பொருந்திய தலைவனை, அவர்கள் அவர்களாகி அவர்களுக்கு விருப்பமானவற்றைக் கொடுக்கின்ற அம்மானை, பொருந்திய குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையில் எழுந்தருளியிருக்கின்றவனை, பொருந்திய புகழையுடைய மூவாயிரம் பிராமணர்களுடைய தேசமாய், பூதேவர்களான வைஷ்ணவர்களுடைய வாழ்ச்சிக்கு உரியதாய் இருக்கும் திருச்செங்குன்றூரில் எழுந்தருளியிருக்கின்ற ஆச்சரியமான குணங்களையும் செயல்களையும் உடையவனை, சிவபிரானுக்கும் பிரமனுக்கும் அந்தரியாமியாய் உள்ள எம்பெருமானைப் பொருந்தப் பெற்றேன்.

வி - கு: 'அமர்ந்த நாதனை அவர் அவராகி அவர்க்கு அருள் அருளும் அம்மானை முக்கண் அம்மானை நான்முகனை ஆற்றங்கரையானை அமர்ந்த மாயோனை அமர்ந்தேன்' என முடிக்க.

ஈடு: பத்தாம் பாட்டு. [1]'சர்வேஸ்வரனாய் வைத்து எல்லாப்பொருள்கட்கும் பற்றப்படுமவன் ஆகைக்காகத் திருச்செங்குன்றூரிலே நின்றருளினவனை அனுபவிக்கப் பெற்றேன்,' என்கிறார்.

அமர்ந்த நாதனை - [2]உபய விபூதிகட்கும் காரணம் பற்றாத சேஷி என்றால் போரும்படி இருக்கிறவனை.

---

1. பாசுரம் முழுதினையும் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'அமர்ந்த' என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'உபய விபூதிகட்கும்' என்று தொடங்கி.

[1]'எந்த நாதனால் மூன்று உலகங்களும் நல்ல நாதனை உடையன ஆகுமோ' என்கிறபடியே, மூன்று உலகங்களையும் பெருமாளுக்குக் கை அடைப்பு ஆக்கினாலும் பின்னையும் காக்கப்படுகின்ற பொருள்கள் சுருங்கிக் காப்பாற்றுகின்ற துடிப்பே விஞ்சி இருக்கும். அவர் அவர் ஆகி - [2]இரவலர் கிட்டினால் அவர்கள் தந்தாமுக்கு நல்லர் ஆமாறு போலே, அவர்களுக்கும் நல்லனாய் இருக்குமவன். என்றது, அவர்கள் 'இது நமக்கு வேண்டும்' என்று இருக்குமாறு போலே, 'இவர்களுக்கு இது வேண்டும்' என்று இவன் இருக்கையைத் தெரிவித்தபடி. அங்ஙன் அன்றிக்கே, அவர்களுக்குப் பெறுகையிலே விருப்பம்; கொடுக்கக் கொடுக்கஅவர்கள் கொள்ளுகையிலேவிருப்பம் இவனுக்கு. என்றது, 'பெற்றோம் என்னும் உவகை அவர்களுக்கு; கொடுக்கப் பெற்றோம் என்னும் உவகை இவனுக்கு' என்றபடி. அவர்க்கு அருள் அருளும் - [3]அவர்கள் விரும்பினவற்றைத் தன் பேறாகக் கொடுக்கை; கொள்ளுகிறவருடைய இரப்பைத் தான் உடையனாய்க் கொடுக்கை. [4]'அந்த ஸ்ரீராமபிரான் பிரார்த்திக்கின்ற எல்லோரையும் கண்டு அருகிற்சென்று ஆனந்தத்தை உண்டாக்கியும் இருந்தார்' என்கிறபடியே. அம்மானை - சர்வேஸ்வரனை:

---

1. போரும்படி இருப்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'எந்த நாதனால்' என்று தொடங்கி. இப்பொருளையுடைய சுலோகத்தை 10-ஆம் பக். காண்க. சுலோகத்திலே உள்ள 'நாதவத்தரம்' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'மூன்று உலகங்களையும்' என்று தொடங்கி.

2. அவர் அவராய்க் கொடுக்கும் பிரகாரத்தை இரண்டு வகையாக அருளிச்செய்கிறார், 'இரவலர்' என்று தொடங்கி. 'தங்களுக்குத் தாங்கள் அபிமானிகளாய் நல்லராய் இருக்குமாறு போன்று, இவனும் அவர்களுக்கு அபிமானியாய் நல்லனாய் இருக்கும்' என்பது முதற்பொருள்; 'அவர்கள் இரவலராய் இருக்குமாறு போன்று, இவனும் இரவலனாய் இருக்கும்' என்பது இரண்டாவது பொருள்.

3. 'அவர் அவர் ஆகி' என்பதற்கு அருளிச்செய்த இரு வகையான பொருள்களையும் விவரியாநின்றுகொண்டு, 'அவர்க்கு அருள் அருளும்' என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறார், 'அவர்கள்' என்று தொடங்கி.

4. இரவலர்களுடைய தன்மை இவனுக்கு உண்டு என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'அந்த ஸ்ரீராமபிரான்' என்று தொடங்கி.

'அத மத்யம கக்ஷ்யாயாம் ஸமாகம்ய ஸுஹ்ருஜ்ஜனைஃ
ஸஸர்வாந் அர்த்திநஃ த்ருஷ்ட்வா ஸமேத்ய ப்ரதிநந்த்ய ச'
என்பது, ஸ்ரீராமா. அயோத். 16 : 27.

[1]'நிறைந்தவனை' என்னுதல்; 'சம்பந்தத்தையுடையவனை' என்னுதல்.

அமர்ந்த தண் பழனம் திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையானை - சேர்ந்து குளிர்ந்த நீர் நிலங்களையுடைய திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையிலே நின்றருளினவனை. அமர்ந்த சீர் மூவாயிரவர் வேதியர்கள் தம் பதி - சேர்ந்த குணங்களையுடைய மூவாயிரம் பிராமணர். [2]சேஷியாம் தன்மைக்கு அவன் தக்கிருக்குமாறுபோலே, சொன்ன சொன்ன ஏற்றம் எல்லாம் தகும்படி இருப்பர்கள். வேதியர்கள்தம் பதி - மூவாயிரவர் அளவு அன்றிக்கே, பிராமணசாதிக்காக வசிக்கும் இடம். அவனி தேவர் வாழ்வு - பூதேவரான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அடையத்தக்க பூமி. அமர்ந்த மாயோனை - அத்தேசத்தில் நித்தியவாசம் செய்கிற ஆச்சரியத்தையுடையனை சர்வேஸ்வரனை. முக்கண் அம்மானை நான்முகனை அமர்ந்தேன் - பிரமன் சிவன் இவர்களுடைய இருப்பு முதலானவைகட்கு நிர்வாஹகன் ஆனவனை. [3]பிரமன் சிவன் இவர்களைப் பலகால் சொல்லுகிறது, இவனுடைய நிர்வாஹகத்தன்மை தோற்றுகைக்காகவும், நிர்வஹிக்கப்படுகிற பொருள்களுள் ஒன்றால் நலிவு உண்டாகை கூடாது என்கைக்கும். அன்றிக்கே, 'அமர்ந்த மாயோன்' என்று வைத்து, இவர்களைச் சொல்லித் தலைக்கட்டுகையாலே, சாமாநாதிகரணத்தைக் காட்டுகிற சொற்கள் விசேடியத்திலே சென்று சேரக்கடவன ஆகையாலே, சரீரியாய் இருக்கிறவனை என்கிறார் என்னுதல். அமர்ந்தேனே -

---

1. மேலே, 'தன் பேறாகக் கொடுப்பவன்' என்றும், 'தான் இரந்து கொடுப்பவன்' என்றும் அருளிச்செய்த இரு வகைப் பொருள்கட்கும் காரணம் 'அம்மானை' என்னும் பதம் என்னும் இடம் தோன்ற, 'அம்மானை' என்பதற்கும் இரண்டு வகையில் பொருள் அருளிச்செய்கிறார். என்றது, 'இரவலனுடைய இரப்புத் தன்மை இவனுக்கு உண்டாவது நிறையக் கொடுப்பதற்குக் கைம் முதல் இருந்தாலே அன்றோ? ஆகையாலே, நிறைவு, இரக்கும் தன்மைக்குக் காரணம். இழவுபேறு தன்னதாம்படியான சம்பந்தம், தன் பேறாகக் கொடுப்பதற்குக் காரணம் என்றபடி.

2. 'அமர்ந்த நாதனை' என்றும், 'அமர்ந்த சீர் மூவாயிரவர்' என்றும் பதங்கள் ஒத்திருப்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'சேஷியாம் தன்மைக்கு' என்று தொடங்கி.

3. 'பிரமன் சிவன் என்னும் இவர்களைப் பலகால் சொல்லுவதற்கு இரண்டு வகையாகக் கருத்து அருளிச்செய்கிறார்; 'பிரமன்' என்று தொடங்கி.

'கிட்டப்பெற்றேன்' என்கிருர். [1]'பூதங்கள் எல்லாம் விஷ்ணு, உலகங்கள் எல்லாம் விஷ்ணு, வானங்கள் எல்லாம் விஷ்ணு' என்னக் கடவது அன்றே? (10)

816

**தேனைநன் பாலைக் கன்னலை அமுதைத்**
**திருந்துஉலகு உண்டஅம் மானை**
**வானநான் முகனை மலர்ந்ததண் கொப்பூழ்**
**மலர்மிசைப் படைத்தமா யோனை**
**கோனைவண் குருகூர் வண்சட கோபன்**
**சொன்னஆ யிரத்துள்இப் பத்தும்**
**வானின்மீது ஏற்றி அருள்செய்து முடிக்கும்**
**பிறவிமா மாயக்கூத் தினையே.**

**பொ - ரை:** தேனை, பாலை, கருப்பஞ்சாற்றினை, அமுதினை, திருந்திய உலகினைப் புசித்த அம்மானை, வானிலே இருக்கிறபிரமனை மலர்ந்த குளிர்ந்த திருநாபிக்கமலத்திலே படைத்த மாயோனை, தலைவனை, வளப்பம் பொருந்திய திருக்குருகூரிலே அவதரித்த உதாரரான ஸ்ரீ சடகோபராலே அருளிச்செய்யப்பட்ட ஆயிரத்துள் இந்தப் பத்தும் பரமபதத்திற்குக் கொண்டு சென்று கைங்கரியமாகிற, பகவானுடைய திருவருளைக் கொடுத்து, மகா வஞ்சனை பொருந்திய பிறப்பாகிய கூத்தினை அறுக்கும்.

**வி - கு:** 'வானின்மீது' என்ற இடத்தில் 'நிலமிசை நீடுவாழ் வார்' என்ற திருக்குறளை நினைவுகூர்க.

**ஈடு:** முடிவில், 'இத்திருவாய்மொழியைக் கற்றவர்கட்கு இதுதானே முதலிலே பரமபதத்து ஏறக் கொடுபோய், பின்பு சம்சாரமாகிற மஹா நாடகத்தினை அறுக்கும்,' என்கிருர்.

தேனை நன்பாலைக் கன்னலை அமுதை - [2]இவர் ஐயங்கொண்டு அஞ்சுதற்கு உரிய காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவனுடைய இனிமை அன்றே இவரை அஞ்சப் பண்ணுகிறது? எனக்கு எல்லா விதமான இனிய பொருள்களுமானவனை. 'ஸர்வரஸ:' என்னக்கடவது அன்றே?

---

1. எல்லாப் பொருள்களுக்கும் இவன் ஆத்துமா என்பதற்குப் பிரமாணம் காட்டுகிருர், 'பூதங்கள் எல்லாம்' என்று தொடங்கி.
'பூதாநி விஷ்ணு: புவநாநி விஷ்ணு: வநாநி விஷ்ணு:' என்பது, ஸ்ரீ விஷ்ணு புரா. 2. 12 : 38.

2. அவனுடைய இனிமையை வர்ணிப்பதற்குக் கருத்து அருளிச்செய்கிருர், 'இவர்' என்று தொடங்கி.

மேலே அச்சம் நீங்குதற்கு உரிய காரணங்கள் சொல்லப் படுகின்றன: திருந்து உலகு உண்ட அம்மானை - கட்டளைப் பட்ட உலகத்தைப் பிரளயத்திலே அழியாதபடி திருவயிற் றிலே வைத்துப் பாதுகாத்த பெரியோனை. கொப்பூழ் மலர்ந்த தண் மலர்மிசை வான நான்முகனைப் படைத்த மாயோனை - வானிலே இருக்கிற பிரமனைப் படைப்பிற்குத் தகுதியாகச் செவ்வியையுடைய திருநாபிக்கமலத்திலே படைத்த ஆச்சரியத்தையுடையவனை. கோனை - காரணம் பற்றாத தலைவனை. மேலே பிரமன் சிவன் இவர்களுக்குச் சொன்ன ஐக்கியம் சொரூபத்தால் அன்று, காரியகாரண பாவத்தாலே சொல்லிற்று என்னுமிடம் இங்கே தெளி வாகும். [1]'ஆபத்திற்குத் துணைவனாய், அழிந்தவற்றை உண்டாக்க வல்லவனாய், சம்பந்தத்தை உடையவனாய் இருக்குமவன்' என்கை.

வண் குருகூர் வண்சடகோபன் சொன்ன ஆயிரத்துள் இப்பத்தும் வானின்மீது ஏற்றி அருள்செய்து பிறவி மா மாயம் கூத்தினை முடிக்கும் - [2]அராஜகமானால் அரச புத்திரன் தலையிலே முடியை வைத்து விலங்கு வெட்டி விடுமாறு போலே, இப்பத்துத் தானே முந்துறப் பரமபதத் தைக் கொடுத்து, பின்பு சம்சாரமாகிற மஹா நாடகத்தை யும் அறுக்கும். (11)

## திருவாய்மொழி நூற்றந்தாதி

**வாராமல் அச்சம்இனி மால்தன் வலியினையும்**
**சீரார் பரிவருடன் சேர்த்தியையும்—பாரும்எனத்**
**தானுகந்த மாறன்தாள் சார்நெஞ்சே ! சாராயேல்**
**மானிடவ ரைச்சார்ந்து மாய்.** (74)

**ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.**

---

1. 'உலகு உண்ட அம்மானை, மலர்மிசைப் படைத்த மாயோனை, கோனை' என்ற மூன்று பெயர்களாலும் பலித்த பொருளை அருளிச் செய்கிறார், 'ஆபத்திற்கு' என்று தொடங்கி.

2. 'பிறவியை அறுத்த பின் அன்றோ, வானின்மீது ஏற்றுவது?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'அராஜகமானால்' என்று தொடங்கி. அராஜகமானால் - அரசன் இல்லாமற்போனால்.

## ஐந்தாந்திருவாய்மொழி—'மாயக்கூத்தா'

### முன்னுரை

ஈடு: [1]மேல் இரண்டு திருவாய்மொழிகளிலுமாகப் 'பகவான் ஆகிய பரம்பொருள் பிறராலே அழியப் புகுகிறது' என்று வெறுத்தார்; இதில் தம்முடைய துயர ஒலியாலே அவனை அழிக்கப் பார்க்கிறார். மேல் திருவாய்மொழியிலே அவனுக்குப் பரிவர் உளர் என்று பயமும் தீர்ந்து வடிவழகினை அனுபவித்தாராய் நின்றார்; அவ்வழகு, நெஞ்சிலே [2]'திகழ என் சிந்தையுள் இருந்தான்' என்கிறபடியே, ஊற்றிருந்து புறக்காட்சியிலே விருப்பம் பிறந்து, அது பெருமையாலே, 'மேலே பட்ட கிலேசங்களும் எல்லாம் ஒன்றும் அல்ல: இதற்கு அது ஒரு கலை மாத்திரம்' என்னும்படி நொந்து, காட்டுத்தீக் கதுவினாரைப் போலே தாபத்தையுடையராய், [3]தம்மிற்காட்டிலும் விடாய்த்த உறுப்புகளையுடையராய், 'என்விடாய் எல்லாம் தீரும்படி திவ்விய உறுப்புகளோடே வரவேண்டும்; அழகிய திருமுடியோடே வரவேண்டும்; [4]மேகம் போலே வரவேண்டும்; அழகிய வடிவோடே வரவேண்டும்; உதய

---

1. மேல் திருவாய்மொழிக்கும் இத்திருவாய்மொழிக்கும் இயைபு அருளிச்செய்கிறார், 'மேல் இரண்டு' என்று தொடங்கி. 'வெறுத்தார்' என்றது, 'வெறுத்து, அவன் சமாதானம் செய்யச் சமாதானத்தை அடைந்தார்' என்றபடி.

2. 'திகழ' என்பது, திருவாய். 8. 4 : 8.

3. இத்திருவாய்மொழியில் வருகின்ற 'கண்ணும் வாயும் துவர்ந்து' என்றதனைத் திருவுள்ளம் பற்றித் 'தம்மிற்காட்டிலும்' என்று தொடங்கியும், 'கண் கை கால்' என்பது போன்றவைகளைத் திருவுள்ளம் பற்றி, 'என் விடாய் எல்லாம்' என்று தொடங்கியும், 'பவளவாயும் நால் தோளும்' என்பது போன்றவைகளைத் திருவுள்ளம் பற்றித் 'திவ்விய உறுப்புகளோடே' என்று தொடங்கியும், 'முடிசேர் சென்னி' என்பதனைத் திருவுள்ளம் பற்றி, 'அழகிய திருமுடியோடே' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்.

4. 'தூ நீர் முகில்' என்றதனைத் திருவுள்ளம் பற்றி, 'மேகம் போலே' என்று தொடங்கியும், 'கொண்டல்வண்ணா!' என்றதனைத் திருவுள்ளம் பற்றி, 'அழகிய வடிவோடே' என்று தொடங்கியும், 'கருநாயிறு உதிக்கும்', 'இளநாயிறு இரண்டுபோல்' என்பனவற்றைத் திருவுள்ளம் பற்றி, 'உதய காலத்தில்' என்று தொடங்கியும், 'எங்கே காண்கேனோ' என்றதனைத் திருவுள்ளம் பற்றி, 'நாம்' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்.

காலத்தில் சூரியனைப்போலே பெரிய புகரோடே வர வேண்டும்,' என்றாற்போலே கூப்பிட்டு, பின்னையும் அவன் வந்து முகங்காட்டக் காணாமையாலே, 'நாம் இந்தக் கிலேசத்தோடே முடிந்து போம் இத்தனை ஆகாதே,' என்று இழவோடே தலைக்கட்டுகிறது.

817

**மாயக் கூத்தா ! வாமனா !**
**வினையேன் கண்ணா ! கண்கைகால்**
**தூய செய்ய மலர்களாச்**
**சோதிச் செவ்வாய் முகிழதாச்**
**சாயல் சாமத் திருமேனி**
**தண்பா சடையாத் தாமரைநீள்**
**வாசத் தடம்போல் வருவானே !**
**ஒருநாள் காண வாராயே !**

**பொ - ரை :** 'ஆச்சரியமான செயல்களையுடைய கூத்தனே வாமனனே ! வினையேனுடைய கண்ணனே ! திருக்கண்களும் திருக்கைகளும் திருக்கால்களும் ஆகிய இவை பரிசுத்தமான சிவந்த பூக்களாகவும், ஒளி பொருந்திய சிவந்த திருவாயானது அரும்பாக வும், ஒளி பொருந்திய சாமநிறத்தையுடைய திருமேனி குளிர்ந்த பசுமை நிறம் பொருந்திய இலையாகவும் பெற்று, பெரியதாய் வாசனை மிக்கதாய் உள்ள தாமரைத் தடாகம் போன்று வருகின்ற வனே! ஒரு நாள் ஆகிலும் நான் காணும்படி வரவேண்டும்,' என் கிறார்.

**வி - கு :** இத்திருப்பாசுரத்தில், இறைவன் திருமேனியைத் தாமரைத் தடாகமாக உருவகம் செய்திருத்தலைக் காண்க. சாமம் - கருமை. வாராய் - விதிவினை.

இத்திருவாய்மொழி, **அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.**

**ஈடு :** [1]'என் விடாய் எல்லாம் தீரும்படி ஒரு தாமரைத் தடாகம் போலே வந்து தோற்றி அருளவேண்டும்,' என்கிறார்.

மாயம் கூத்தா - ஆச்சரியங்களையும் மனத்தினைக் கொள்ளை கொள்ளுகின்ற செயல்களையுமுடையவனே! [2]இந்திரனுடைய இரப்புத் தலைக்கட்டுகைக்காக அன்றே

---

1. நான்காம் அடியைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. ஆச்சரியத்தையும் மனத்தினைக் கொள்ளை கொள்ளுகின்ற செயல்களையும் அருளிச்செய்கிறார், 'இந்திரனுடைய' என்று தொடங்கி.

பிறந்து அன்றே வளர்ந்து அன்றே இரப்பிலே அதிகரிக்கையும், மஹாபலியினுடைய வேள்விச்சாலை அளவும் காட்சிக்கு இனியதாம்படி நடந்து சென்று, 'மாவலி' என்றாற்போலே சில மழலைச் சொற்களைச் சொல்லுதல் முதலான மனத்தினைக் கொள்ளை கொள்ளுகின்ற செயல்களையுமுடையவனே! நடந்து சென்ற நடை, வல்லார் ஆடினாற்போலே இருக்கிறதாயிற்று இவர்க்கு; ஆதலின், **'கூத்தா'** என்கிறார். வாமனா - [1]இரந்தும் இரந்தவர்க்கு ஈகைதானே பிரயோஜனமாக இருக்கின்றவன்காண் தன்னைக் காண்கையே பிரயோஜனமாக இருக்கிற என்னை இரப்பாளன் ஆக்கி இரங்காதிருக்கிறான். வினையேன் கண்ணா - [2]ஸ்ரீவாமனனாய் வந்து அவதரித்தது இந்திரனுக்கு ஆனாற்போலே, கிருஷ்ணனாய் வந்து அவதரித்தது தமக்காக என்று இருக்கிறார். அன்றிக்கே, எல்லார்க்கும் பொதுவானவனுடைய அவதாரம் ஆகையாலே, உகந்தவர்களுக்கு எல்லாம் **'எனக்கு'** என்னலாய் இருக்கையாலே சொல்லுகிறார் என்றுமாம். [3]மற்றை அவதாரங்களைக் காட்டில் கிருஷ்ணாவதாரத்தில் அண்ணிமையாலே சொல்லுகிறார். பல்லிலே பட்டுத் தெறித்தாற்போலே, அவதாரத்திற்குப் பிற்பட்டபடியாலே, தம்மை **'வினையேன்'** என்கிறார்.

கண் கை கால் தூய செய்ய மலர்களா - [4]கிட்டினாரோடு முதல் உறவு பண்ணும் கண், நோக்குக்குத் தோற்றவர்களை அணைக்கும் கை, பரிசத்திற்குத் தோற்று விழும் திருவடிகள், [5]அங்கே கிடந்து தலை எடுத்து அனுப

---

1. துன்பத்தைக் கூறும் இங்கு, 'வாமனா' என்று விளிப்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'இரந்தும்' என்று தொடங்கி.

2. 'கண்ணன் எல்லார்க்கும் பொதுவாளனாயிருக்க, இவர் 'வினையேன் கண்ணா' என்பது என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'ஸ்ரீ வாமனனாய்' என்று தொடங்கி.

3. 'மற்றை அவதாரங்கள் இருக்க, கிருஷ்ணாவதாரத்தை மட்டும் தம்பொருட்டு என்பான் என்?' என்ன, 'மற்றை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். ஸ்ரீ கிருஷ்ணன் திருநாட்டுக்கு எழுந்தருளின சில நாள்களுக்குள்ளே ஆழ்வார் அவதரித்தனர் என்று கூறுவது மரபு ஆதலின் இங்ஙனம் அருளிச்செய்கிறார்.

4. 'கண் கை கால்' என்ற முறைக்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'கிட்டினாரோடு' என்று தொடங்கி.

5. 'செய்ய' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'அங்கே' என்று தொடங்கி.

விக்குமதாய்க் கண்டபோதே விடாய் தீரும்படி கரியதான திருமேனிக்குப் பரபாகமான நிறத்தையுடைத்தான தாமரைப்பூ ஆக. **சோதிச் செவ்வாய் முகிழது ஆ** - புகரை யுடைத்தாய்ச் சிவந்திருக்கிற திருவதரமானது அதில் அரும்பு ஆக. [1]**'உரையாடாதவன், விருப்பம் அற்றவன்'** என்னப்படும் இறைவன் ஆகையாலே, மிக்க காம்பீர் யத்தாலே, புன்சிரிப்பு மலர்ந்து தோன்றும் அளவே அன்றோ இருப்பது? ஆகையாலே, **'அரும்பு'** என்கிறது. **சாயல் சாமம் திருமேனி தண் பசுமை அடையா** - ஒளியை யுடைத்தாய்க் கரிய நிறமான திருமேனி, குளிர்ந்த பச்சிலை யாக; [2]பரமாத்துமாவான புருஷன், தாமரை இலையைப் போன்ற நிறமுடையன்' என்றும் 'அக்கமலத்து இலைபோ லும்' என்றும் வருகின்றபடியே.

**தாமரை நீள் வாசம் தடம் போல் வருவானே** - [3]பரப்பு மாறத் தாமரை மலர்ந்திருப்பதாய், மகாப்பிரளயத்தை ஒரு தடாகம் ஆக்கினாற்போலே பரந்திருப்பதாய் அப் பரப்பு அடங்கப் பரிமளத்தாலே நிரம்பி இருப்பது ஒரு தடாகம் நடந்து வருமாறு போலே ஆயிற்று, பரிமளம் முன்பே அலை எறிய வரும்போது இருப்பது: [4]**'ஸர்வ கந்தஃ'** என்னக்கடவது அன்றோ? **வருவானே** - வரும் தன்மையனே! [5]முன்பு தம் பக்கல் வரும்படியை உபகாரத்

---

1. 'மலர்' என்னுமல் 'முகிழ்' என்றதற்கு பாவம் அருளிச்செய் கிறார், 'உரையாடாதவன்' என்று தொடங்கி.

'அவாக்ய நாதாஃ' என்பது, **சாந்தோக்.** 3 : 14.

2. திருமேனி பச்சிலை போலே இருக்கும் என்பதற்குப் பிர மாணங்கள் காட்டுகிறார், 'பரமாத்துமாவான' என்று தொடங்கி யும், 'அக்கமலத்து' என்று தொடங்கியும்.

'புருஷஃ புண்டரீகாபஃ ரூபம் தத் பரமாத்மநஃ'

என்பது, **வராஹ புராணம்.**

'அக்கமலத்து' என்பது, **திருவாய்.** 9. 7 : 3.

3. 'தாமரை நீள்' என்றதற்குப் பொருள், 'பரப்பு மாறத் தாமரை மலர்ந்திருப்பதாய்' என்பது. அந்நீட்சியை உருவகிக்கிறார், 'மகாப்பிரளயத்தை' என்று தொடங்கி.

4. 'அப்படி வாசம் உண்டோ?' என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார், 'ஸர்வகந்தஃ' என்று. இது, **கடவல்லி உப.** 2 : 23.

5. 'இப்போது தம் பக்கல் வாராதுஇருக்க, வரும் தன்மையன் என்பது தோன்ற 'வருவானே' என்பது என்?' என்ன, 'முன்பு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

தின் நினைவாலே சொல்லுகிறார். ஒரு நாள் - [1]'ஒருகால் நாக்கு நனைக்க' என்பாரைப் போலே. காண - [2]வந்தால் கொள்ளும் பிரயோஜனங்காணும் இதுவே; [3]ஒரு தேச விசேடத்திலும் எப்பொழுதும் காண்கையே அன்றோ இருப்பது? அப்பேறு பெறும்படி. வாராயே - [4]அத்தலையாலே வரக்காண இருக்குமவர் அல்லரோ? [5]'தான் விரும்பிய ஜீவனுக்கு இந்தப் பரமாத்துமாவானவன் தனது திருமேனியைக் காட்டுகிறான்' என்கிறபடியே. அன்றிக்கே, தாம் கிட்டிக் காணுமது சொரூப விரோதம் என்று இருக்கிறார் என்னுதல். (1)

818

**காண வாராய் என்றுஎன்று**
**கண்ணும் வாயும் துவர்ந்துஅடியேன்**
**நாணி நல்நாட்டு அலமந்தால்**
**இரங்கி ஒருநாள் நீஅந்தோ!**
**காண வாராய்; கருநாயிறு**
**உதிக்கும் கருமா மாணிக்க**
**நாணல் மலைபோல் சுடர்ச்சோதி**
**முடிசேர் சென்னி அம்மானே!**

**பொ - ரை:** 'கரிய சூரியன் உதிக்கின்ற காட்சிக்கு இனிய கரிய சிறந்த மாணிக்க மலையைப் போன்று, மிக்க ஒளி பொருந்திய மயிர் முடி பொருந்திய சென்னியையுடைய அம்மானே! அடியேன் காணும்படி வரவேண்டும்' என்பதாகக் கண்களும் வாயும் பசை

---

1. 'ஒரு நாள் போதியதாமோ?' என்ன, 'ஒருகால்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. 'அனுபவிக்க' என்னாமல், 'காண' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'வந்தால்' என்று தொடங்கி.

3. 'ஆயின், காண்கை போதியதாமோ? அனுபவிக்க வேண்டாவோ?' என்ன, 'ஒரு தேசம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். ஒரு தேசம் - பரமபதம்.

4. 'தாமே செல்லலாமே? அவனை 'வாராய்' என்பான் என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'அத்தலையாலே' என்று தொடங்கி.

5. அத்தலையாலேயே காண வேண்டும் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'தான்' என்று தொடங்கி.

'தஸ்யு ஏஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்'

**என்பது, முண்டகோபநிட. 2 : 3.**

அற உலர்ந்து, நாணம் உற்று, நல்ல இந்த நாட்டிலே தடுமாறினால், நீ இரங்கி ஒரு நாளாகிலும் காணுமாறு வருகின்றாய் இல்லையே! அந்தோ!

வி - கு : வாராய் - மறைவினை. 'கருநாயிறு உதிக்கும் நாள் நல் கரு மா மாணிக்க மலை போல் சுடர்ச்சோதி முடி சேர் சென்னி' என்க. கருநாயிறு, மயிர் முடிக்கு உவமை. 'அம்மானே ! காண வாராய்' என்க.

ஈடு : இரண்டாம் பாட்டு. [1]'என் விடாய் கெடும்படி அழகிய மயிர் முடியுடனே வந்து தோற்றி அருள வேண்டும்' என்கிறார்.

காண வாராய் என்று என்று - [2]ஒருகால் 'காண வாராய்' என்றால் வரக் காணவிட்டால், ஆறி இருக்க வல்லர் அல்லரே? பின்னையும் 'காணவாராய், காண வாராய்' என்பார் ஆயிற்று. கண்ணும் வாயும் துவர்ந்து - [3]எங்ஙனே வரும் என்று அறியாமையாலே, திக்குகள் தோறும் பார்த்துக் கண்கள் பசை அற உலர்ந்தன. என்றது, 'கண்ணநீர் கைகளால் இறைக்கும்' என்னும் நிலையும் கழிந்தது என்றபடி. கூப்பிட்டு வாயும் பசை அற உலர்ந்தது. அடியேன் நாணி - அத்தலைக்கு வரும் குற்றம் நம்மது ஆம்படியான சம்பந்தமுடைய நான் நாணி. என்றது, 'இவனை உலகத்தார் என் சொல்லுவார்களோ !' என்று அதற்காக நாணி என்றபடி. அன்றிக்கே, 'பிரயோஜனத்தின்பொருட்டுக் கூப்பிடுகை அன்றியே, முறை அறிந்து காண்கைக்குக் கூப்பிட்ட நமக்குத் தன்படி அழகியதாய் இருந்தது என்று நாணி' என்னுதல். நல் நாடு - எல்லை இல்லாத கிலேசங்களுக்கு எல்லாம் இருப்பிடம் ஆகையாலே விபரீத லக்ஷணையாலே சொல்லுகிறார். அன்றிக்கே, ஐம்புல இன்பங்களின் அனுபவத்தாலே மக்கள் களித்து வசிக்கும் தேசம் ஆகையாலே சொல்லுகிறாராதல். அன்றிக்கே, **பிள்ளான்** 'எம்பெருமானைப் பெற்று அனுப

---

1. பின் இரண்டு அடிகளைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. 'மீண்டும் 'காண வாராய்' என்றது என்?' என்ன, 'ஒருகால்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. கண்ணும் வாயும் துவர்தற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார், 'எங்ஙனே வரும்' என்று தொடங்கி. 'கண்ணநீர்' என்பது, திருவாய். 7. 2 : 1.

விக்கும் நாடுகாண்' என்பராம்; 'இல்லையாகில் கூப்பி டார்களோ?' என்று.

அலமந்தால் - தடுமாறினல், இரங்கி - உனக்கு விருப்பம் இல்லாவிட்டால் பிறர் கேட்டிற்கு இரங்க வேண்டாவோ? என்றது, [1]'முனிவர்களுக்கு உள்ள இரக்கமும் இல்லையோ?' என்றபடி. ஒரு நாள் - பல நாள் வேண்டும் என்கிறேனே? நீ - கண்டுகொண்டு நிற்க வேண்டும்படி வேறுபட்ட சிறப்பினையுடைய நீ. அந்தோ உன் வேறுபட்ட சிறப்பினை அறியாது ஒழிந்தால், என் துயரத்தையும் அறியாது ஒழிவதே! காண வாராய் - பிரயோஜனத்தின் பொருட்டு அழைக்கிறேனே? கருநாயிறு உதிக்கும் - கரிய நிறத்தையுடைய சூரியன் தோன்றுகிற. கரு மா மாணிக்க நாள் நல் மலை போல் - அந்தச் சூரியன் உதிக்கிற உதயகிரி இருக்கிறபடி. நீலமாய்ப் பெருவிலையதான இரத்தினமலை போலே, **'நாட்பூ'** என்னுமாறு போலே, புதியதாய்க் காட்சிக்கு இனியதான மலை ஆதலின், **'நாள் நல் மலை'** என்கிறது. அன்றிக்கே, 'கரு மா மாணிக்கம் நல் மலைமேல் கருநாயிறு உதிக்கும் பொழுது போல முடிசேர் சென்னி அம்மான்' என்று கூட்டிப் பொருள் கோடலுமாம். நாள் - பொழுது.

சுடர்ச்சோதி முடி - மிக்க புகரையுடைய முடி. 'கருநாயிறு உதிக்கும்' என்கிற திருஷ்டாந்த பலத்தாலே, முடி என்றது, மயிர் முடியைக் காட்டுகிறது. சேர் சென்னி - அதற்குப் பற்றுக்கோடான திருமேனி இரத்தின மலை போலே ஆயிற்று இருப்பது. அம்மானே - சர்வேஸ்வரனே! [2]சம்சாரி முத்தனைச் சென்றால், தாபத்தைப் போக்குவதற்காக இவனால் செய்யப்படுவது திருக்குழலைப் பேணுதல் இத்தனை. [3]'கேசவன் கிலேசத்தைப் போக்குகிறவன்' என்றே அன்றே இருப்பது? (2)

---

1. 'முனிவர்களுக்கு உள்ள இரக்கமும்' என்றது, காட்டிலே பிராட்டியின் நிலையைக் கண்டு அருள்செய்த ஸ்ரீ வால்மீகி பகவானைத் திருவுள்ளம் பற்றி.

2. மயிர் முடியைச் சொன்னதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'சம்சாரி' என்று தொடங்கி.

3. அப்படித் தாபத்தைப் போக்குவதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'கேசவன்' என்று தொடங்கி.

'கிம் த்வயா நார்சிதோ தேவஃ கேஶவஃ க்லேஶநாஶநஃ' என்பது, பிரமாணம்.

819

முடிசேர் சென்னி அம்மா! நின்
மொய்பூந் தாமம் தண்துழாய்
கடிசேர் கண்ணிப் பெருமானே!
என்றுஎன்று ஏங்கி அழுதக்கால்
படிசேர் மகரக் குழைகளும்
பவள வாயும் நால்தோளும்
துடிசேர் இடையும் அமைந்ததுஓர்
தூநீர் முகில்போல் தோன்றாயே.

பொ-ரை: 'திருமுடி சேர்ந்திருக்கின்ற சென்னியையுடைய அம்மானே! உனக்குத் தகுதியானதாய்ச் செறியத் தொடுக்கப் பட்டதாய் அழகிய ஒளியையுடையதாய் வாசனை பொருந்தியதாய் உள்ள திருத்துழாய் மாலையைத் தரித்திருக்கின்ற பெருமானே!' என்பதாக ஏங்கி அழுதால், இயல்பாகவே அமைந்துள்ள மகர குண்டலங்களும் பவளம் போன்ற திருவாயும் நான்கு திருத்தோள் களும் துடியைப்போன்ற திரு அரையும் அமைந்திருப்பதாய் ஒப் பற்றதாய்ப் பரிசுத்தமானதாய்த் தண்ணீரையுடையதாய் உள்ள மேகம் போன்று வந்து தோன்ற வேண்டும்.

வி-கு: 'அழுதக்கால் தோன்றாய்' என்க. தோன்றாய் - விதி வினை. படி - திருமேனியுமாம். துடி - உடுக்கை; ஒரு வகை வாத்தியம்.

ஈடு: மூன்றாம் பாட்டு. [1]'தெளிந்த நீரைப் பருகின காளமேகம் போலே சிரமத்தைப் போக்குகிற வடிவோடே என் துயரம் தீர வந்து தோற்ற வேண்டும்' என்கிறாள்.

முடி சேர் சென்னி அம்மா - ஆதிராஜ்ய சூசகமான திருமுடி சேர்ந்த சென்னியையுடைய சர்வேஸ்வரனே! நின் மொய் பூந்தாமம் தண்கடி சேர் துழாய்க்கண்ணிப் பெரு மானே - உனக்குத் தகுதியாய்ச் செறியத் தொடுக்கப்பட்டு மனத்திற்கு இன்பத்தைக் கொடுப்பதாய், ஒளியையுடைத் தாய்ச் சிரமத்தைப் போக்கக் கூடியதாய், நாட்செல்ல நாட்செல்லப் பரிமளம் மிக்குச் செல்லுகிற திருத்துழாய் மாலையையுடைய சர்வேஸ்வரனே! என்று என்று - ஒரு கால் சொல்லி ஆறி இருக்கிறேனாய்த்தான் ஆறி இருக் கிறாயோ? ஏங்கி அழுதக்கால் - பொருமி அழுதக்கால்.

1. 'தூநீர் முகில் போல் வந்து தோன்றாயே' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

என் அழுகைக் குரலின் தளர்த்தியைக் கேட்டால் சடக்கென வந்து கொடு நிற்க வேண்டாவோ? [1]படி சேர் மகரக் குழைகளும் - 'படியாய்ச் சேர்ந்த' என்னுதல்; 'படியிலே சேர்ந்த' என்னுதல். என்றது, 'இயல்பாகவே சேர்ந்த' என்னுதல்; 'திருமேனியிலே சேர்ந்த' என்னுதல் என்றபடி. 'படி கண்டு அறிதியே' என்னக்கடவது அன்றோ? பவள வாயும் - உறவு எல்லாம் தோற்றும் திருப்பவளமும். நால் தோளும் - ஆணைக்கைக்குக் கற்பகத்தருப் பணைத்தாற் போலே இருக்கிற நான்கு தோள்களும். துடி சேர் இடையும் அமைந்தது ஓர் தூ நீர் முகில் போல் - துடி போலே இருக்கிற இடையுமாய்க் கொண்டு சமைந்தது ஒரு முகில் போலே ஆயிற்று வடிவு இருப்பது. இந்த விசேஷணங்கள் கேவலம் முகிலுக்கு இல்லாமையாலே, [2]அபூத உவமை. தூ நீர் முகில் - தெளிந்த நீரை முகந்த முகில். தோன்றாயே - [3]அகவாயில் தண்ணளி எல்லாம் வடிவிலே காணலாம்படி வந்து தோற்ற வேண்டும். (3)

820

**தூநீர் முகில்போல் தோன்றும்நின்**
**சுடர்கொள் வடிவும் கனிவாயும்**
**தேநீர்க் கமலக் கண்களும்**
**வந்துஎன் சிந்தை நிறைந்தவா**
**மாநீர் வெள்ளி மலைதன்மேல்**
**வண்கார் நீல முகில்போலத்**
**தூநீர்க் கடலுள் துயில்வானே!**
**எந்தாய்! சொல்ல மாட்டேனே.**

பொ - ரை: 'மிக்க நீர் வெள்ளத்திலே ஒரு வெள்ளி மலையின் மேலே கார் காலத்திலே வளவியதாய் உள்ள ஒரு நீலமுகில் படிந்தாற்போன்று, பரிசுத்தமான தன்மையையுடைய திருப்பாற்கடலிலே ஆதிசேஷசயனத்தின்மேலே அறிதுயில் செய்கின்றவனே!

---

1. 'படி' என்பதற்கு இரண்டு பொருள்: இயல்பாக என்பதும், திருமேனி என்பதும். திருமேனி என்ற பொருளில் மேற்கோள் காட்டுகிறார், 'படி கண்டு' என்று தொடங்கி. இது, முதல் திருவந். 85.

2. அபூத உவமை - இல்பொருள் உவமை.

3. 'தூநீர் முகில்போல் தோன்றாய்' என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'அகவாயில்' என்று தொடங்கி.

என் தந்தையே! பரிசுத்தமான தண்ணீரை முகந்த மேகம் போன்று தோன்றுகின்ற பிரகாசம் பொருந்திய உன் திருமேனியும் கொவ்வைக்கனி போன்ற திருவாயும், தேனாகிய நீரையுடைய தாமரை போன்ற திருக்கண்களும் வந்து என் மனத்திலே நிறைந்திருக்கும் தன்மையைச் சொல்ல அறிகின்றிலேன்,' என்றவாறு.

வி - கு : 'எந்தாய்! என் சிந்தை நிறைந்தவா சொல்ல மாட்டேன்' என்க. நிறைந்தவா- (நிறைந்தவாறு) கடைக்குறை; வெள்ளி மலை, அரவணைக்கு உவமை. ஈற்றடியில் உள்ள 'நீர்' தண்ணீருமாம். இரண்டாம் அடியில் உள்ள 'நீர்' தன்மையுமாம்.

ஈடு: நான்காம் பாட்டு. [1]'உன்னுடைய வடிவழகு வந்து என் மனத்திலே நிறைந்து நலிகிறபடி என்னால் பேச முடிகிறது இல்லை,' என்கிறார்.

தூ நீர் முகில் போல் தோன்றும் - [2]கண்ட போதே விடாய் கெடும்படியான கார் காலத்தில் தோன்றுகிற மேகம் போலே ஆயிற்றுத் தோன்றுவது. நின் சுடர் கொள் வடிவும் - [3]சுத்த சத்துவமயம் ஆகையாலே எல்லை அற்ற ஒளி உருவமான விக்கிரகத்துக்கு அன்னலும் துன்னலுமாய்த் திரண்ட மேகத்தை ஒப்பாகச் சொல்ல ஒண்ணாதே அன்றோ? [4]'ஒண்சுடர்க்கற்றை' அன்றோ? கனி வாயும் - கண்டபோதே நுகரலாம் கனி போலே இருக்கிற வாயும். தே நீர் கமலம் கண்களும் - தேனாகிற நீரையுடைய தாமரைப்பூப் போலே இருக்கிற திருக்கண்களும். இதனால் செவ்வியை நினைக்கிறது. அன்றிக்கே, 'தேனினுடைய நீர்மை வாய்ந்த திருக்கண்கள்' என்றுமாம். அதாவது, கண்ணாலே பருகலாம்படி இருக்கிற இனிமையைத் தெரி

1. 'சுடர்கொள் வடிவும் கனிவாயும் கண்களும் சிந்தை நிறைந்தவா சொல்ல மாட்டேன்' என்பதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'தூநீர்' என்று விசேடித்ததற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'கண்ட போதே' என்று தொடங்கி.

3. 'சுடர்கொள்' என்று விசேடித்ததற்கு பாவம் அருளிச் செய்கிறார், 'சுத்த சத்துவமயம்' என்று தொடங்கி. அன்னல்-புகை. துன்னல் - சிறு திவலை.

4. 'திருமேனி, பேரொளிப் பிழம்பு' என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'ஒண் சுடர்க்கற்றை' என்று. இது, திருவாய். 1. 7 : 4.

வித்தபடி. வந்து என் சிந்தை நிறைந்தவா - [1]மற்றைய விஷயங்கள் அனுபவித்துவிட்டால் மறக்கக்கூடியவாய் இருக்கும்: இவ்விஷயம் அனுபவித்துப் பேர நின்றாலும் நெஞ்சிலே ஊற்று இருக்கும். 'சிந்தை நிறைந்தவா' என்னு மதனைப் பின்னே வருகின்ற 'சொல்ல மாட்டேன்' என்னு மதனோடு கூட்டுக.

மா நீர் வெள்ளிமலைதன்மேல் - மிக்க நீர் வெள்ளத்தே ஒரு வெள்ளிமலையின்மேலே. வண் கார் நீல முகில் போல - வள்ளல் தன்மையுடையதாய்க் கறுத்து நெய்த்து இருப்பது ஒரு முகில் படிந்தாற்போலே. அன்றிக்கே, 'வள்ளல் தன்மையுடையது ஒரு முகில் கார் காலத்திலே படிந்தாற்போலே' என்னுதல். தூ நீர்க் கடலுள் துயில்வானே - தூய்மை பொருந்திய தண்ணீரிலே திருவனந் தாழ்வான் மேலே திருக்கண்வளர்ந்தருளுகிறவனே! 'வெள்ளி மலை' என்ற உவமையால் 'அரவணை' என்னும் உபமேயத்தினை அமைத்துக்கொள்ளுமித்தனை. எந்தாய் - மேலே கூறிய வேறுபட்ட சிறப்பு இல்லையேயாகிலும் விட ஒண்ணாத சம்பந்தம் இருக்கிறபடி. எந்தாய்! வந்து என் சிந்தை நிறைந்தவா சொல்ல மாட்டேன் - மனத்திலே பிர காசிக்கின்ற பிரகாசம் துக்கத்திற்குக் காரணம் ஆகா நின்றது; இதற்கு ஒரு பாசுரம் அறிகின்றிலேன். [2]விரக நிலையில் குணங்களைச் சொல்லுதல் துக்கத்துக்குக் காரண மாம் அத்தனை அன்றோ? 'தூ நீர்க் கடலுள் துயில்வான்' என்றதனால், [3]காணவேண்டும் என்னும் விருப்பம் இல்லா தார்க்கு முற்பாடனாய் வந்து சாய்ந்தபடி சொல்லு கிறது. (4)

---

1. 'துயரத்தைப் பேசும் இந்நிலையிலே, 'நிறைந்தவா' என் கிறது என்?' என்ன, 'மற்றைய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. 'மனத்திலே பிரகாசிப்பது, துக்கத்திற்குக் காரணமாமோ?' என்ன, 'விரக நிலையில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச் செய்கிறார்.

3. தூநீர்க் கடலுள் துயிலுவதனை இங்குக் கூறுவதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார், 'காண வேண்டும்' என்று தொடங்கி.

821

சொல்ல மாட்டேன் அடியேன்உன்
துளங்கு சோதித் திருப்பாதம்
எல்லை இல்சீர் இளநாயிறு
இரண்டு போல்என் உள்ளவா
அல்லல் என்னும் இருள்சேர்தற்கு
உபாயம் என்னே! ஆழிசூழ்
மல்லை ஞாலம் முழுதுஉண்ட
மாநீர்க் கொண்டல் வண்ணனே!

பொ - ரை : 'கடலால் சூழப்பட்ட மிகப்பெரிய உலகம் முழுதினையும் புசித்த, நிறைந்த நீரையுடைய மேகத்தைப் போன்ற நிறத்தையுடையவனே! அடியேன் என் மனத்தில் உள்ள ஒளியைப் பற்றி ஒன்றும் சொல்ல அறியாதவனாய் இருக்கிறேன்; விளங்குகின்ற பிரகாசத்தையுடைய உன் திருவடிகள் எல்லை இல்லாத அழகையுடைய இரண்டு இளஞ்சூரியர்களைப் போன்று என் மனத்திற்குள்ளே இருக்கின்றன; இங்ஙனம் இருக்க, அறிவின்மையாகிய இருள் சேர்வதற்கு ஓர் உபாயம் சொல்லாய்' என்பதாம்.

வி - கு : அல்லல் - துன்பமுமாம். மல்லை - வளப்பமுமாம். 'மல்லை ஞாலம் முழுது உண்ட' என்பதனைக் கொண்டலுக்கு அடைமொழி ஆக்கலுமாம். ஞாலம் முழுது உண்ட மாநீர் - பிரளயம். வண்ணன் - தன்மையனுமாம்.

ஈடு: ஐந்தாம் பாட்டு. [1]'உன்னுடைய அழகு என் மனத்திலே நினைவிற்கு விஷயமாய் நலியாநின்றது; இது மறக்க ஒரு விரகு சொல்ல வேண்டும்' என்கிறார்.

சொல்ல மாட்டேன் - [2]என் உள்ளத்திலே நின்று நலிகிறபடிக்குப் பாசுரம் இடப்போகிறது இல்லை. அடியேன் - [3]சம்பந்தத்தாலே தவிர மாட்டுகின்றிலேன். உன் துளங்கு சோதித் திருப்பாதம் - 'மாட்டாத பிரகாரம்

1. 'உன் துளங்கு சோதித் திருப்பாதம் என் உள்ளவா, அல்லல் என்னும் இருள் சேர்தற்கு உபாயம் என்னே!' என்பதனைத் திருவுள்ளம் பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'இரண்டு போல் உள்ளவா, சொல்ல மாட்டேன்' என்று கூட்டிப் பொருள் அருளிச்செய்கிறார், 'என் உள்ளத்திலே' என்று தொடங்கி.

3. 'ஆயின், விட்டுவிடலாமே?' என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார், 'சம்பந்தத்தாலே' என்று தொடங்கி.

ஏது ?' என்ன, விளங்காநின்றுள்ள ஒளியையுடைய உன் திருவடிகள். எல்லை இல் சீர் இள நாயிறு இரண்டு போல் என் உள்ளவா - அளவு இறந்த அழகையுடைய இளஞ் சூரியர் இருவரைப் போலே என் உள்ளத்தே நின்று நலிகிறபடி. கண்களாலே பருகலாம்படி இருக்கையாலும், வருத்தத் தொடங்கின இத்தனை என்று தோற்றுகையாலும் 'இளநாயிறு' என்கிருர். அன்றிக்கே, இளநாயிறு என்பதற்கு, 'என்னை வருத்த வருத்த இளமை மிகுகிறபடி' என்னலுமாம். 'என் உள்ளவா சொல்ல மாட்டேன்' என்று கூட்டுக.

அல்லல் என்னும் இருள் சேர்தற்கு உபாயம் என்னே - இதற்கு, 'உன்னைக் காட்டாதே அருமைப்படுத்தப் பார்த்தாயாகில், நாட்டார் 'தண்ணிது' என்கிற அஞ்ஞானம் வருவதற்கு ஓர் [1]உபாயம் ஏதோ?' என்று அருளிச்செய்வர் பட்டர்; அப்போது மறந்து பிழைக்கலாம் என்னுமதனாலே. அன்றிக்கே, 'திருவடிகள் என் உள்ளத்திலே பிரகாசியாநிற்க, துக்கத்திற்குக் காரணமான அறிவின்மை வருதற்கு [2]உபாயம் உண்டோ?' என்று அருளிச்செய்வர் அம்மாள். உண்டாகில் உண்டு உடுத்துத் திரியலாமே உலகத்தாரைப் போன்று! ஆழி சூழ் மல்லை ஞாலம் 'முழுது உண்ட மா நீர்க் கொண்டல் வண்ணனே - [3]கடல் சூழ்ந்த மிகப்பெரிய பூமி முழுதினையும் பிரளயத்திலே அழியாமல் வயிற்றிலே வைத்துக் காத்த ஒப்பு உயர்வு அற்ற வள்ளலே! அன்றிக்கே, 'ஆழி சூழ் மல்லை ஞாலம் முழுது உண்ட மா நீர்' என்பதற்குப் பிரளயம் என்று பொருள் உரைத்து, 'அப்பிரளய நீர் முழுதினையும் பருகின

---

1. 'உபாயம் ஏதோ?' என்றது, 'உபாயம் யாது? சொல்ல வேண்டும்' என்று அவனைக் கேட்கிருர் என்பது பட்டர் திருவுள்ளம். அறிவின்மையைப் பிரார்த்திப்பதற்குக் காரணத்தை அருளிச்செய்கிருர், 'அப்போது' என்று தொடங்கி.

2. 'உபாயம் உண்டோ?' என்றது, 'இல்லையே' என்றபடி. 'இருந்தால், என்?' என்ன, 'உண்டாகில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர். 'அல்லல்' என்றது, ஈண்டுத் துக்கத்தினை.

3. 'ஆழி சூழ் மல்லை ஞாலம் முழுது உண்ட' என்பதனை, ஈசுவரனுக்கு அடைமொழி ஆக்கியும், நீருக்கு அடைமொழி ஆக்கியும் பொருள் அருளிச்செய்கிருர், 'கடல் சூழ்ந்த' என்று தொடங்கியும், 'அன்றிக்கே' என்று தொடங்கியும்.

மேகம் போலே இருக்கிற வடிவையுடையவன்' என்னுதல். மல்லை ஞாலம் - மிகப் பெரிய பூமி. (5)

822

**கொண்டல் வண்ணா ! குடக்கூத்தா !**
**வினையேன் கண்ணா ! கண்ணா!என்**
**அண்ட வாணா ! என்றுஎன்னை**
**ஆளக் கூப்பிட்டு அழைத்தக்கால்**
**விண்டன் மேல்தான் மண்மேல்தான்**
**விரிநீர்க் கடல்தான் மற்றுத்தான்**
**தொண்ட னேன்உன் கழல்காண**
**ஒருநாள் வந்து தோன்றாயே.**

பொ - ரை : "மேகம் போன்ற வடிவையுடையவனே ! குடக் கூத்தை ஆடியவனே ! தீவினையேனுக்குக் கண் ஆனவனே! கிருஷ்ணனாய் அவதரித்தவனே! பரமபதத்தில் வாழ்கின்றவனே !' என்று என்னை ஆள்வதற்குக் கூப்பிட்டு அழைத்தால், அடியேனாகிய யான் உன் திருவடிகளைச் சேவிக்கும்படி பரமபதத்திலேநின்றுதல் பூமியிலேநின்றுதல் திருப்பாற்கடலிலேநின்றுதல் அந்தராத்துமாவாய் நிற்கிற அகவாயிலே நின்றுதல் ஒருநாள் வந்து தோன்ற வேண்டும்' என்கிறார்.

வி - கு : 'தொண்டனேன் அழைத்தக்கால் உன் கழல் காண ஒரு நாள் வந்து தோன்றாய்' என்க. தோன்றாய் - விதிவினை. 'என்' என்பது, 'அண்டவாணா' என்பதற்கு அடைமொழி. 'வாழ்நன்' என்பது 'வாணன்' என மருவிற்று.

ஈடு: [1]''உன் வனப்பு முதலானவற்றை நினைத்துக் 'காண வேண்டும்' என்று கூப்பிடுகிற நான் காணும்படி ஏதேனும் ஓரிடத்திலே வந்து தோற்றியருள வேண்டும்,' என்கிறார்.

கொண்டல் வண்ணா - [2]காணவே விடாய் ஆறும்படியான வடிவையுடையவனே! குடக்கூத்தா - மனத்தினைக் கொள்ளை கொள்ளும்படியான செயல்களையுடையவனே! வினையேன் கண்ணா கண்ணா - எனக்குக் கண்களாய் இருக்

1. முன் அடிகளைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'கொண்டல் வண்ணா' என்பதற்கு பாவம் அருளிச்செய்கிறார் 'காணவே' என்று தொடங்கி.

கிறவனே! கிருஷ்ணனே! [1]'கண்ணை இழந்திருக்கும்படியான பாவத்தைச் செய்தவன்' என்பார், தம்மை **'வினையேன்'** என்கிறார். என் அண்டவாணா என்று - என்னை இலக்கு ஆக்கிக்கொள்ளுவதற்காக அண்டத்திற்கு அதிபதி ஆனவனே என்று. [2]கல்யாண குணங்களை உடைத்தாய் இருத்தல், அடியார்களுக்காக இருக்குமாறு போன்று, விபூதியை உடைத்தாய் இருக்கிற இருப்பும் தமக்காக என்று இருக்கிறார். என்னை ஆள - வேறு ஒரு பிரயோஜனத்தின்பொருட்டு அழைக்கிறேனோ? ஒழிவில் காலம் எல்லாம் உடனாய் மன்னி என்னை வழுவிலா அடிமை கொள்ளவேண்டும் என்று அன்றோ அழைக்கிறது? கூப்பிட்டு அழைத்தக்கால் - [3]கிரமப் பிராப்தி பொறுக்க வல்லேனாய்த்தான் தாழ்க்கிறாயோ? என் துயர ஒலி கேட்டால் 'கிரமத்திலே வருகிறோம்' என்று ஆறி இருக்கலாய் இருந்ததோ?

விண்தன் மேல்தான் - மா நீர்க் கொண்டல் சஞ்சரிக்கும் ஆகாசத்திலே தோற்றவும் அமையும். அன்றிக்கே, பரமபதத்திலே இருக்கிற இருப்போடே வந்து தோற்றவுமாம். மண்மேல்தான் - அவதரித்துத் தோற்றவுமாம். விரி நீர்க் கடல்தான் - திருப்பாற்கடலில் திருக்கண்வளர்ந்தருளுகிறபடி வந்து தோற்றவுமாம். மற்றுத்தான் - தூணிலே வந்து தோற்றினாற்போலேயாதல், யானைக்கு வந்து தோற்றினாற்போலேயாதல் தோற்றவுமாம். தொண்டனேன் - உன் திருவடிகளில் கைங்கரியத்தில் ஆசை கொண்ட யான். உன் கழல் காண - எனக்கு உய்விடமான திருவடிகளைக் காண. ஒரு நாள் வந்து தோன்றாய் - 'பல நாள் வேண்டும்' என்று நிர்ப்பந்திக்கிறேனோ? 'என் ஆத்

---

1. 'வினையேன்' என்பதற்கு, 'வினை யாது?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'கண்ணை' என்று தொடங்கி.

2. 'தம்மை இலக்கு ஆக்கிக்கொள்வதற்காகவோ இறைவன் விபூதியை உடையனாய் இருக்கிறான்?' என்ன, 'கல்யாணகுணங்களை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. 'கூப்பிட்டு' என்றும், 'அழைத்தக்கால்' என்றும் இரு சொற்களைச் சேர்த்ததற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'கிரமப் பிராப்தி' என்று தொடங்கி. கிரமப் பிராப்தி - முறையாக அடைதல். அதனை விவரணம் செய்கிறார், 'என் துயர ஒலி' என்று தொடங்கி.

4. 'ஒரு நாள் அமையுமோ?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கின்றார், 'என் ஆத்துமா' என்று தொடங்கி.

துமா கிடக்கைக்கு ஒரு நாள் வந்து தோற்றியருள வேண்டும். (6)

823

**வந்து தோன்றாய் அன்றேல்உன்**
**வையம் தாய மலரடிக்கீழ்**
**முந்தி வந்து யான்நிற்ப**
**முகப்பே கூவிப் பணிகொள்ளாய்**
**செந்தண் கமலக் கண்கைகால்**
**சிவந்த வாய்ஓர் கருநாயிறு**
**அந்தம் இல்லாக் கதிர்பரப்பி**
**அலர்ந்தது ஒக்கும் அம்மானே!**

**பொ - ரை :** செந்நிறத்தையும் குளிர்ச்சியையுமுடைய தாமரை போன்ற திருக்கண்களையும் திருக்கைகளையும் திருக்கால்களையும் சிவந்த திருவாயினையுமுடையதான ஒரு கரிய சூரியனானவன், எல்லை இல்லாத கிரணங்களைப் பரப்பிக்கொண்டு மலர்ந்திருத்தலை ஒத்திருக்கின்ற அம்மானே! அந்த வனப்போடு வந்து தோன்ற வேண்டும்; அங்ஙனம் தோன்றாயேல், பூவுலகத்தை அளந்த தாமரை மலர் போன்ற உன் திருவடிகளின்கீழே யான் முன்னே வந்து நிற்கும்படி திருமுன்பே அழைத்து அடிமை கொள்ள வேண்டும்.

**வி - கு :** மூன்றும் அடி இல்பொருள் உவமை. 'அம்மானே! வந்து தோன்றாய்; அன்றேல், நிற்பக் கூவிப் பணிகொள்ளாய்' என்க. 'தோன்றாய், கொள்ளாய்' என்பன, விதி வினைகள்.

**ஈடு :** ஏழாம் பாட்டு. [1]'இங்கே வந்து தோற்றியருளுதல், அது திருவுள்ளம் அன்றாகில் அங்கே அழைத்து அடிமை கொள்ளுதல் செய்தருள வேண்டும்,' என்கிறார்.

வந்து தோன்றாய் - என் கண் வட்டத்திலே வந்து தோற்ற வேண்டும். [2]தந்தை காலில் விலங்கு அற வந்து தோன்றிய தோன்றலை அன்றோ **வந்துதோன்றாய்** என்கிறது? அன்றேல் - என் துன்பத்தைப் பார்த்து உன்னுடைய கிருபையாலே வந்து முகங்காட்டப் பார்த்திலை

---

1. 'வந்து தோன்றாய்; அன்றேல், உன் முகப்பே கூவிப் பணிகொள்ளாய்' என்பதனைக் 'கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'வந்து தோன்றாய்' என்கைக்கு, 'முன்பு யார்க்கு வந்து தோன்றினோம்?' என்ன, 'தந்தை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இது, பெரிய திருமொழி, 8. 5 : 1.

யாகில். அன்றிக்கே, [1]'உன் நிறைவினையும் என் சிறுமை யையும் பார்த்து முகங்காட்டப் பார்த்திலையாகில்' என்று மாம். உன் வையம் தாய மலர் அடி - வசிஷ்ட சண்டாள வேறுபாடு பாராத திருவடிகள். தாய மலர் அடி - ஒரு செவ்விப்பூவைக் கொண்டாயிற்றுக் காட்டையும் ஓடையை யும் அளந்தது. மலர் அடிக்கீழ் முந்தி வந்து யான் நிற்ப - தனக்குமேல் ஒன்று இல்லாத இனிய பொருளான திருவடி களின் கீழே முற்பாடனாய் வந்து நிற்கும்படியாக. முகப்பே - கண் வட்டத்திலே. கூவிப் பணிகொள்ளாய் - [2]சோற்றை இட்டுப் பணிகொள்ளாய்.

அன்றிக்கே, [3]'பணி செய்வாய் என்று என்னைச் சொல் வீராக' என்கிறபடியே, 'கண்முகப்பே அடிமை கொள்ள வேண்டும்' என்றுமாம். [4]'குணஞானத்தாலே தரித்திருக் கும் ஸ்ரீபாதாழ்வான் தன்மையன் அல்லேன்; [5]'தண்ணீரி னின்றும் மேலே எடுக்கப்பட்ட மீன்களைப் போன்றவர்' என்னும் இளையபெருமாள் தன்மையனான என்னை அடிமை கொள்ளவேண்டும்' என்பார்,'பணிகொள்ளாய்' என்கிறார். [6]'வழுவிலா அடிமை செய்ய வேண்டும்' என்றும் 'நின்ன லால் இலேன்' என்றும் இட்டுவைத்த இடத்தில் கிடக்க

1. 'உன் நிறைவினை' என்று தொடங்கிக் கூறும் பொருளோடு திருவிருத்தம் 33-ஆம் பாசுரம் ஒப்பு நோக்கல் தகும்.

2. 'கூவி' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார்,'சோற்றை இட்டு' என்று தொடங்கி. என்றது,'திருமிடற்றின் ஓசை இனிமை யாக இருக்கையாலே கூவிப் பணிகொள்ள வேண்டும்' என்பது கருத்து.

3. இரண்டாவது கருத்து,'பிராப்தம் ஆகையாலும் கூவிப்பணி கொள்ள வேண்டும்' என்பது. 'பணிசெய்வாய்' என்று தொடங்கும் பொருளையுடைய சுலோகத்தை 8-ஆம் பக். காண்க.

4. ''பணிகொள்ளாய்' என்று நிர்ப்பந்திக்கிறது என்?' என்ன, 'குணஞானத்தாலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச் செய்கிறார்.

5. 'நச ஸீதா த்வயா ஹீநா நச அஹம் அபி ராகவ
முஹூர்த்தம் அபி ஜீவாவः ஜலாத் மத்ஸ்யாவிவ உத்ருதௌ'
என்பது, ஸ்ரீராமா. அயோத். 53 : 31.

6. 'இளையபெருமாள் தன்மையரானபடி எப்படி?' என்ன, 'வழுவிலா' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'வழுவிலா' என்பது, திருவாய். 3. 3 : 1. 'நின்னலால்' என்பது, திருவாய். 2. 3 : 7.

மாட்டேன். [1]'நன்றும் அஞ்சுவன் நரகம் நான் அடைதல்' என்னுமவர் அன்றோ? செங்கண் கமலம் கண் கை கால் சிவந்த வாய் ஓர் கருநாயிறு—சிவந்து குளிர்ந்த தாமரை போலே கண்ணையும் கையையும் காலையுமுடையவனாய், சிவந்த வாயையுமுடையவனாய் நீலமான நிறத்தையுமுடையான் ஒரு சூரியன். அந்தம் இல்லாக் கதிர் பரப்பி அலர்ந்தது ஒக்கும் - 'ஆயிரம்' என்னும் ஒரு கணக்கு இன்றிக்கே, அளவு இறந்த [2]கிரணங்களைப் பரப்பிக்கொண்டு மலர்ந்தாற்போலே வந்து தோன்ற வேண்டும். [3]அம்மானே - உன் மேன்மையைப் பார்த்து அங்கே அழைத்து அடிமை கொள்ளுதல், அன்றிக்கே, உன் உடைமை நசியாமைக்கு விரைவு உண்டாகில் இங்கே வந்து அடிமை கொள்ளுதல் செய்தருள வேண்டும் என்னுதல். (7)

824

**ஒக்கும் அம்மான் உருவம்என்று**
**உள்ளம் குழைந்து நாள்நாளும்**
**தொக்க மேகப் பல்குழாங்கள்**
**காணுந் தோறும் தொலைவன்நான்**
**தக்க ஐவர் தமக்காய்அன்று**
**ஈர்ஐம் பதின்மர் தாள்சாயப்**
**புக்க நல்தேர்த் தனிப்பாகா!**
**வாராய் இதுவோ பொருத்தமே?**

பொ - ரை: திரண்ட மேகங்களின் பல கூட்டங்களைக் காணும் பொழுது எல்லாம் 'சர்வேஸ்வரனுடைய வடிவத்தை இவை ஒக்கும்' என்று உள்ளம் குழைந்து நாள்தோறும் நான் அழியாநின்றேன்; பாரதப் போரிலே தகுந்தவர்களான பாண்டவர்களுக்காகத் துரியோதனாதியர்கள் நூற்றுவரும் வழி அற்றுப் போகும்படி போர்க்களத்திலே சேர்ந்த, சிறந்த தேரினை நடாத்திய ஒப்பற்ற பாகனே!

---

1. 'அப்படி இட்டு வைத்த இடத்தில் கிடக்க மாட்டாரோ?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'நன்றும்' என்று தொடங்கி. இதி, திருவாய். 8. 1 : 9.

2. கிரணங்கள் ஸ்தானத்தில் எம்பெருமானுடைய அவயவங்களைக் கொள்க.

3. 'அம்மான்' என்பதற்கு இரு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார்: முதற்பொருள், பரத்துவத்திலே நோக்கு. இரண்டாவது பொருள், ஸ்வாமித்துவத்திலே நோக்கு. ஸ்வாமித்துவம் - ஸ்வம்மை உடையனுந்தன்மை. ஸ்வம் - சொத்து; செல்வம்.

வருகின்றிலே; அடியார்கள் விஷயத்தில் பொருத்தம் இருந்தபடி இதுவோதான்?

வி – கு: 'காணுந்தோறும் உள்ளம் தொலைவன்' என்க. தாள் சாய்தல் - கால் அறுதல்; சந்ததி அறுதல். வாராய் - மறைவினை. 'புக்க பாகன்' என்க.

ஈடு: எட்டாம் பாட்டு. [1]'உனக்குப் போலியான மேகத்தின் காட்சியாலே நோவுபடாநிற்க, வந்து முகம் காட்டுகின்றிலே; இதுவோ உன் சார்வின் தன்மை?' என்கிறார்.

ஒக்கும் அம்மான் உருவம் என்று - 'சர்வேஸ்வரன் வடிவு மற்றைப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் வேறுபட்டது' என்று எண்ணுநிற்கச்செய்தே, [2]புகையும் ஒளியும் தண்ணீரும் காற்றும் ஆகிய இவற்றின் கூட்டமான மேகத்தை ஒப்பு என்று மயங்குவர். உள்ளம் குழைந்து - [3]இது தோற்புரை அன்றியே மனமும் அழிந்து. நாள் நாளும் - இந்த அழிவு ஒரு நேரத்தில் வருதல் அன்றிக்கே இடைவிடாமல் செல்லுகை. தொக்க மேகம் பல் குழாங்கள் - மேகங்களின் துண்டங்களுக்கு இடையார்; திரண்ட மேகக் கூட்டங்களைக் காணுந்தோறும். நாள் நாளும் தொலைவன் - [4]தர்மிலோபம் பிறக்கிறதும் இல்லை; வாழ்ந்

1. பாசுரம் முழுதினையும் கடாட்சித்து அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. 'தூம ஜ்யோதிஃ ஸலிலமருதாம் ஸந்நிபாதஃ க்வ மேகஃ' என்பது, மேக சந்தேசம், 1 : 5. 'கருவி வானம்' என்பதற்குத் 'தொகுதியையுடைய மேகம்' என்றனர் நச்சினார்க்கினியர். (பொருநராற்றுப்படை, அடி, 235)

'ஆகுதித் தழலின் அறுதொழி லாளர்
அருமறை மனுஎடுத்து ஓதி
ஓகையில் சொரிநெய் தெறித்துஎழு பிதிர்வும்
ஒலிபடு புலிங்கமும் கொண்டு
மேகமாய்ப் படர்ந்த தூமமே இடித்து
மின்னிநீர் பொழிவன போலும்,
ஈகைசால் வேள்வி மறுத்துழி மாரி
இன்மையே இதற்குறு சான்றால்.' (காஞ்சிப்புராணம்.)

என்பதும் இக்கருத்தே பற்றி வந்தது.

3. 'இது' என்றது, மேகக்கூட்டத்தைக் காணுதலால் உண்டாகும் துக்கத்தை என்றபடி.

4. தர்மிலோபம் - ஆத்துமாவுக்கு லோபம்; லோபம் - நஷ்டம்: மரணம்.

திருக்கவும் பெறுகின்றிலேன். நான் - [1]மேகத்தைக் காணுதல் உலகத்தார்க்குத் தளர்ச்சி நீங்குவதற்குக் காரணம் அன்றோ?

தக்க ஐவர் - [2]எந்த மேகத்தைக் காண்பதற்கு இடைந்தார்கள்? அதற்காகப் பாண்டவர்களை நோக்கிற்று, 'பந்துக்கள் ஜீவிக்க வேண்டும், எங்களுக்கும் ஐந்து குடிக்காடு அமையும்,' என்னும் தக்கோர்மையுடைய ஐவர். தமக்கு ஆய் - [3]'இரண்டு சேனைகளின் நடுவில் என் தேரைக் கொடுபோய் நிறுத்து,' என்னும்படி கையாளாய். அன்று - அவர்கள் தனியரான அன்று. ஈர் ஐம்பதின்மர் தாள் சாய - 'பந்துக்கள் ஜீவிக்கில் ஜீவியோம்' என்ற நூற்றுவரும் கால் அறும்படியாக. புக்க - தூசித் தலையிலே புக்க. நல்தேர் - இவனைச் சாரதியாக உடையது ஆகையாலே மிக மேம்பட்ட தேர். தனிப்பாகா - தனியே நிர்வாஹகன் ஆனவனே! [4]இரதியைக் காண்கின்றிலர். [5]'கிருஷ்ணா! வெற்றியையாவது இராச்சியத்தையாவது சுகத்தையாவது நான் விரும்பவில்லை' என்றவனைச் சேமம் சாத்தி வைத்துத் தானே செயலைச் செய்கையாலே, சாரதியை

---

1. 'நான்' என்றது, 'உலகத்தாரினின்றும் வேறுபட்ட நான்' என்று திருவுள்ளம் பற்றி. அந்த வேறுபாட்டினை அருளிச்செய்கிறார், 'மேகத்தை' என்று தொடங்கி. என்றது, 'எனக்குத் தளர்ச்சி உண்டாவதற்குக் காரணமாய் இருக்கிறது' என்றபடி.

2. 'தக்க ஐவர்' என்கிறவருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார், 'எந்த' என்று தொடங்கி. 'தக்க ஐவர்' என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறார், 'பந்துக்கள்' என்று தொடங்கி. குடிக்காடு - குப்பம்; கிராமம். தக்கோர்மை - நன்மை.

3. 'ஆய்' என்றதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'இரண்டு' என்று தொடங்கி.

'ஸேநயோ: உபயோ: மத்யே ரதம் ஸ்தாபய மே அச்யுத' என்பது, ஸ்ரீ கீதை, 1 : 21.

4. 'சாரதிக்குத் தனிமை ஏது?' என்ன, 'இரதியைக் காண்கின்றிலர்' என்று அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. 'காணாமைக்குக் காரணம் யாது?' என்ன, 'கிருஷ்ணா' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

'ந காங்க்ஷே விஜயம் க்ருஷ்ண நச ராஜ்யம் ஸுகாநி ச
கிம்ந: ராஜ்யேந கோவிந்த கிம் போகை: ஜீவிதேந வா'
என்பது, ஸ்ரீ கீதை, 1 : 32.

ஆயிற்று இவர் காண்கிறது. வாராய் - [1]'இரண்டு சேனைகளின் நடுவே தேரைக் கொடுபோய் நிறுத்து,' என்ன, இரண்டு சேனைகளின் நடுவே தேரை நிறுத்தின நீ, அந்தத் தேரை இந்த மேகங்களின் நடுவே நிறுத்தினால் ஆகாதோ? [2]ஐவருமாய், எதிரிகள் ஓர் அளவிற்கு உட்பட்டவர்களும் ஆனாலோ உதவலாவது? தனியனுமாய், மேகக் கூட்டங்கள் அளவிற்கு உட்படாதவையானால் உதவலாகாதோ?

இதுவோ பொருத்தம் - 'அடியார்களோடு முன்பு நீ பொருந்திப் போந்தபடி இதுவோ?' என்றது, [3]அடியார்களுக்காகத் தூது சென்றும், சாரதியாய் நின்றும், 'ஆயுதம் எடேன்' என்று ஆயுதத்தை எடுத்தும், பகலை இரவு ஆக்கியும் ஒரு சார்வாக்க் காரியங்களைச் செய்தது பொய்யோ?' என்றபடி. [4]'நான் இந்த நாராயணன் சரிதையைச் சொல்லப் போகிறேன்,' என்றவனும் கைக்கூலி கொண்டு புலமை பாடினன் ஆகாதே என்கிறார். என்றது, [5]'இப்போது தமக்கு உதவில் அவை மெய்யாவன என்று இருப்பர்,' என்றபடி. வாராய் - எனக்கு இவை எல்லாம் வேண்டுமோ? முகம் காட்ட அமையாதோ? (8)

---

1. 'தேர்த் தனிப்பாகா! வாராய்' என்கிறவருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார், 'இரண்டு' என்று தொடங்கி.

2. பாண்டவர்களைக்காட்டிலும் தமக்கு உண்டான வேறுபாட்டினை அருளிச்செய்கிறார், 'ஐவருமாய்' என்று தொடங்கி.

3. பொருந்திப் போந்தபடியை விவரணம் செய்கிறார், 'அடியார்களுக்காக' என்று தொடங்கி.

4. 'இதிகாசத்திலே சொல்லப்பட்ட, அடியார்கட்குப் பரதந்திரப்பட்டிருக்கும் தன்மை பொய்யாகக் கூடுமோ?' என்ன, 'நான்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். புலமை - கவி.

'நமோ பகவதே தஸ்மை வ்யாஸாய அமிததேஜஸே
யஸ்ய ப்ரஸாதாத் வக்ஷ்யாமி நாராயண கதாமிமாம்'

என்பது, மஹாபாரதம்.

5. 'ஆனால், அது மெய்யாவது எப்போது?' என்ன, 'இப்போது' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். வாராய் - வருகின்றிலை.

825

'இதுவோ பொருத்தம் ? மின்ஆழிப்
படையாய் ! ஏறும் இருஞ்சிறைப்புள்
அதுவே கொடியா உயர்த்தானே !'
என்றுஎன்று ஏங்கி அழுதக்கால்
எதுவே யாகக் கருதுங்கொல் ?
இம்மா ஞாலம் பொறைதீர்ப்பான்
மதுவார் சோலை உத்தர
மதுரைப் பிறந்த மாயனே !

பொ - ரை : 'பொருத்தம் இருக்கும்படி இதுவோதான்? மின்னுகின்ற சக்கரப்படையையுடையவனே! வாகனமாக ஏறுகின்ற பெரிய சிறகையுடைய அந்தக் கருடப்பறவையினையே கொடியாகவும் உயர்த்தோனே!' என்று என்று ஏங்கி அழுதால், இந்தப் பெரிய பூமியினது பாரத்தைத் தீர்க்கும்பொருட்டு, தேன் ஒழுகுகின்ற சோலைகள் சூழ்ந்த வடமதுரையிலே பிறந்த மாயோனாகிய அவன் இதனை எத்தன்மைத்தாகக் கருதுவானோ?

வி - கு : 'மாயன் கருதுங்கொல்?' என்க. ஏகாரம் - ஈற்றசை. அன்றிக்கே, 'பிறந்த மாயனே! அழுதக்கால், இம்மாஞாலம் எதுவேயாகக் கருதுங்கொல்?' என்று கூட்டலுமாம். இப்பொருளுக்கு 'இம்மா ஞாலம்' என்பதனை இடைநிலைத் தீவகமாகக் கோடல் வேண்டும்.

ஈடு : ஒன்பதாம் பாட்டு. [1]'இறுதிக்காலத்தில் சுவர்க்கத்து ஏறப்போன இவர்கள் நிற்க; திருவாழியாழ்வான் முதலான நித்தியரோடும் பொருத்தம் இதுவோ?' என்று தமக்குள்ளே விசாரிக்கிறார். அன்றிக்கே, 'இருந்ததே குடியாகக் காப்பாற்ற வந்த ஸ்ரீகிருஷ்ணன், தன்னைக்

---

1. இந்தப் பாசுரத்திற்கு இரண்டு வகையாக அவதாரிகை அருளிச்செய்கிறார்: 'மின் ஆழிப் படையாய், புள்அதுவே கொடியா உயர்த்தானே, இதுவோ பொருத்தம்?' என்பனவற்றைக் கடாட்சித்து முதல் அவதாரிகை. இந்த அவதாரிகைக்குச் சேரப் 'படையாய், உயர்த்தானே, இதுவோ பொருத்தம், என்று என்று ஏங்கி அழுதக்கால், ஞாலம் பொறை தீர்ப்பான், மதுரைப் பிறந்த மாயன், எதுவேயாகக் கருதுங்கொல்?' என்று பாசுரத்தை அந்வயப்படுத்திக்கொள்க. இரண்டாவது அவதாரிகைக்கு ஏற்ப, 'ஞாலம் பொறை தீர்ப்பான் மதுரைப் பிறந்த மாயனாகிய மின்னாழிப் படையாய், உயர்த்தானே, என்று ஏங்கி அழுதக்கால் (அவன்) எதுவேயாகக் கருதுங்கொல்?' என்று பாசுரத்தை அந்வயப்படுத்திக் கோடல் வேண்டும். இரண்டாவது அவதாரிகைக்கு, 'இதுவோ பொருத்தம்' என்றது அநுவாதம்.

காண்கையே தேட்டமான எனக்கு என் செய்ய நினைக்கிறான் ?' என்று நினைக்கிறாராகவுமாம்.

[1]இதுவோ பொருத்தம் - இப்படிக் கூப்பிடச் செய்தேயும் வரக் காணாமையாலே கண்ணுஞ்சுழலை இட்டு, மீண்டும் **'இதுவோ பொருத்தம் ?'** என்கிறார். மின் ஆழிப் படையாய் - மேகத்திலே மின்னினாற்போலே, அடியார்களுடைய விரோதிகளை அழித்தலையே இயல்பாகவுடைய திருவாழியைப் படையாக உடையவனே ! என்றது, 'அத் திருவாழியைக்கொண்டு என்னுடைய தடைகளின்மேலே செலுத்தினால் ஆகாதோ ?' என்றபடி. ஏறும் இருஞ்சிறைப் புள் அதுவே கொடியா உயர்த்தானே - ஏறக்கடவ பெரிய சிறகையுடைய கருடப்பறவைதன்னையே கொடியாக எடுத்தவனே ! [2]அடியார்களை எல்லா அடிமைகளையும் கொள்ளுமவன் அன்றோ ? என்று என்று ஏங்கி அழுதக்கால் - இப்பாசுரம் மாறாதே பொருமிப்பொருமி அழா நின்றால். எதுவேயாகக் கருதுங்கொல் - இக்கூப்பீட்டுக்கு முகங்காட்ட நினைக்கிறானோ ? கூப்பிட்டே போவான் என்று இருக்கிறானோ ? அன்றிக்கே, [3]'இக்கூப்பீட்டுக்கு அவன் திருவுள்ளம் எங்ஙனே புண்படுகிறதோ ?' என்னுதல்.

இம் மா ஞாலம் பொறை தீர்ப்பான் - இந்தப் பெரிய பூமியினுடைய பாரத்தைப் போக்குகைக்காக. மது வார் சோலை - தேன் பெருக்கு எடுக்கின்ற சோலையையுடைய. உத்தர மதுரை - வடமதுரையில். பிறந்த மாயன் - பகைவர்களான கஞ்சன் முதலியோர் நடுவே பிறந்த மாயனே ! தோன்றுதல் அன்றிக்கே, [4]'அதன்பின் பன்னிரண்டாம் மாதத்தில்' என்கிறபடியே கர்ப்பவாசம் செய்து பிறந்த ஆச்சரியத்தையுடையவனாதலின், **'பிறந்த மாயனே'** என்

---

1. இரண்டாவது அவதாரிகைக்குச் சேரப் பாசுரத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார்.

2. கருடப்பறவையை வாகனமாகவும், கொடியாகவும் கூறியதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'அடியார்களை' என்று தொடங்கி.

3. முதல் அவதாரிகைக்குத் தகுதியாகப் பொருள் அருளிச் செய்கிறார், 'இக்கூப்பீட்டுக்கு' என்று தொடங்கி.

4. 'ததஸ்ச த்வாதஸே மாஸே சைத்ரே நாவமிகே திதௌ' என்பது, **ஸ்ரீராமா. பால.** 18 : 10.

கிருர். [1]'பூமியின் பாரத்தைப் போக்குதல் என்னும் வியா ஜத்தாலே தனக்கு வேறுபட்ட சாதியினையுடையனாய் வந்து அவதரித்து அடியார்களுடைய விரோதிகளைப் போக்கும் தன்மையனானவன், நம் கூப்பீட்டுக்கு என் நினைத்திருக்கிறுன்?' என்கை. (9)

826

**பிறந்த மாயா! பாரதம் பொருத மாயா! நீஇன்னே**
**சிறந்த கால்தீ நீர்வான்மண் பிறவும் ஆய பெருமானே!**
**கறந்த பாலுள் நெய்யேபோல் இவற்றுள் எங்கும்**
**[கண்டுகொள்**
**இறந்து நின்ற பெருமாயா! உன்னை எங்கே காண்கேனே?**

**பொ - ரை:** இங்கே வந்து பிறந்த மாயனே! பாரதப் போரைச் செய்து முடித்த மாயனே! நீ இங்ஙனே எளியனாய் இருந்து வைத்தும், சிறந்த காற்றும் தீயும் நீரும் ஆகாசமும் மண்ணும் மற்றைப் பொருள்களுமாகி நிற்கின்ற பெருமானே! கறந்த பாலின் உள்ளே மறைந்து நிற்கின்ற நெய்யைப் போன்று, மேலே கூறிய எல்லாப் பொருள்களிலும் எல்லா இடத்திலும் காண்பதற்கு அரிதாம்படி நிற்கின்ற பெருமாயனே! உன்னை எந்த இடத்தில் காண்பேன்?

**வி - கு:** 'கண்டுகொள் இறந்து நின்ற' என்றது, 'கண்டுகொள்வதற்கு அப்பாற்பட்டு நின்ற' என்றபடி.

**ஈடு:** பத்தாம் பாட்டு. [2]'அவதாரத்துக்கும் பிற்பாடனாய், அந்தர்யாமித்துவம் கண்களுக்குப் புலப்படாதவாறு ஆயின பின்பு, உன்னை நான் எவ்விடத்தே காண்பது?' என்கிருர்.

பிறந்த மாயா - [3]கர்மங்கட்குக் கட்டுப்படாதவனாய் வைத்து, பிரகிருதி சம்பந்தம் இல்லாத திவ்விய திருமேனியைத் தனக்கு வேறுபட்ட சாதியையுடையதாக்கி அவதரித்த ஆச்சரியத்தையுடையவனே! பாரதம் பொருத

---

1. இப்பாசுரத்தால் சித்திக்கும் பொருளை அருளிச்செய்கிருர், 'பூமியின்' என்று தொடங்கி.

2. பாசுரம் முழுதினையும் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிருர்.

3. 'அவதாரத்தில் ஆச்சரியம் யாது?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிருர், 'கர்மங்கட்கு' என்று தொடங்கி. 'பிறந்த மாயன்' என்றது, 'பிறத்தலாகிற மாயத்தைச் செய்தவன்' என்றபடி.

மாயா - பிறந்தாற்போலே இருப்பது ஒன்றாயிற்று இவ் வாச்சரியமும்! என்றது, [1]'சத்தியத்தை மேற்கொண்ட இறைவன், அசத்தியத்தை மேற்கொண்டவன் ஆன ஆச்ச ரியம்' என்றபடி. அதாவது, 'ஆயுதம் எடேன்' என்று ஆயுதம் எடுக்கையும், பகலை இரவு ஆக்குதலும் முதலா யின. நீ இன்னே - நீ இப்படிச் சுலபனாய் இருக்கச் செய்தே. சிறந்த கால் தீ நீர் வான் மண் - காரணமான மண் முதலான பூதங்கட்கும். பிறவும் - அவற்றின் காரிய மான தேவர் முதலான பொருள்களுக்கும். ஆய பெரு மானே - ஆத்துமாவான சர்வேஸ்வரனே! காற்றுக்குச் சிறப்பாவது, [2]காரணமாம் தன்மை ஒத்திருக்க, தரிக்கும் தன்மையால் வந்த ஏற்றம்.

கறந்த பாலுள் நெய்யே போல் இவற்றுள் எங்கும் கண்டுகொள் இறந்து நின்ற பெருமாயா - கண்களாலே காண்கிற பாலினுள்ளே நெய் உண்டாய் இருக்கக் காண அரிதானாற்போலே, எல்லாப் பொருள்களிலும் நின்று வைத்துக் காண ஒண்ணாதபடி நிற்கிற மிக்க ஆச்சரியத்தை யுடையவனே! [3]'பலவகைப்பட்ட நிறங்களை உடைய பசுக் களுடைய பாலோ எனின், ஒரே நிறமுடையது; அதுபோல ஞான சொரூபமான ஆத்துமா பார்க்கத்தக்கது; தேவர்கள் முதலான சரீர பேதங்கள் பசுக்களைப் போன்றவை; எப்படிப் பாலில் நெய் மறைந்து இருக்கிறதோ, அது போன்று, கடவுள் எல்லாப் பொருள்களிலும் வசிக்கிறார்; மனம் என்னும் மத்தினால் எப்போதும் கடைய வேண்டும்;

---

1. 'பாரதம் பொருகையில் ஆச்சரியம் யாது?' என்ன, 'சத்தி யத்தை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. 'காரணமாம் தன்மை ஒத்திருக்க' என்றது, 'மற்றைய பூதங்களைப் போன்று காரணமாகும் தன்மை ஒத்திருக்க' என்றபடி.

3. பாலுக்குள் நெய் இருக்குமாறு போன்று, அந்தர்யாமியாய் இறைவன் இருப்பானோ?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'பல வகைப்பட்ட' என்று தொடங்கி.

'கவாம் அநேக வர்ணாநாம் க்ஷீரஸ்யது ஏகவர்ணதா
க்ஷீரவத் பஶ்யதி ஜ்ஞாநம் லிங்கிநஸ்து கவாம்யதா
க்ருதமிவ பயஸி நிகூடம் பூதே பூதேச வஸதிவிஜ்ஞாநம்
ஸததம் மந்தேதவ்யம் மநஸா மந்தாநபூதேந
ஸர்வபூதாதிவாஸம் யத் பூதேஷு ச வஸத்யபி
ஸர்வாநுக்ராஹகத்வேந தத்அஸ்மி அஹம் வாஸுதேவஇதி'

என்பது, பிரஹ்மவித் உபநிடதம்.

'எந்தப் பொருளானது எல்லாப் பிராணிகளுக்கும் இருப்பிடமோ, எல்லாப் பூதங்களிலும் எந்தப் பொருள் வசிக்கின்றதோ, அந்தப் பொருள் எல்லாவற்றிற்கும் சத்தியை உண்டாக்குகிறது; அந்த வாசுதேவன் நான் ஆகிறேன்,' என்பது, **உபநிடதம்.** [1]காலத்தாலும் கடைதல் முதலான செயல்களாலும் தோற்றுகிற நெய், கறந்த காலத்தில் தோற்றுதே அன்றே? ஆதலால், **'கறந்த பால்'** என்று விசேடிக்கிறார் என்கை. 'உன் பக்கல் பாரத்தை வைத்தவனுகை ஆகிற செயலால் அல்லது காண அரியை' என்றவாறு.

உன்னை எங்கே காண்கேனே - [2]பரமபதத்தில் காட்சிக்குச் சரீர சம்பந்தம் அற வேண்டும்; அவதாரத்துக்குப் பிற்பாடன் ஆனேன்; அர்ச்சாவதாரம் நான் நினைத்தபடி கிடையாது; அந்தர்யாமித்துவம் கண்களுக்கு விஷயம் அன்று; இனி இவ்விழவோடே முடிந்து போமித்தனையே அன்றே? (10)

827

**'எங்கே காண்கேன் ஈன்துழாய்**
**அம்மான் றனையான்?' என்றுஎன்று**
**அங்கே தாழ்ந்த சொற்களால்**
**அந்தண் குருகூர்ச் சடகோபன்**
**செங்கேழ் சொன்ன ஆயிரத்துள்**
**இவையும் பத்தும் வல்லார்கள்**
**இங்கே காண இப்பிறப்பே**
**மகிழ்வர் எல்லியும் காலையே.**

பொ - ரை: 'குளிர்ந்த திருத்துழாய் மாலையைத் தரித்த அம்மான்தன்னை யான் எங்கே காண்பேன்?' என்று என்று அவனுடைய இனிமையிலும் தலைமையிலும் ஈடுபட்ட சொற்களாலே, அழகிய குளிர்ந்த திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீசடகோபராலே செவ்விதாக

---

1. பால் என்னுமல், 'கறந்த பால்' என்று விசேடித்ததற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'காலத்தாலும்' என்று தொடங்கி. உபநிடதச் சுலோகத்திலே உள்ள, 'மந்தாந பூதேந, மநஸா, ஸததம் மந்தேதவ்யம்' என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார், 'உன் பக்கல்' என்று தொடங்கி.

2. பரத்துவத்தையும்அர்ச்சாவதாரத்தையும் சேர்த்து, மேலே அருளிச்செய்ததை முடிக்கிறார், 'பரமபதத்திலே' என்று தொடங்கி.

அருளிச்செய்யப்பட்ட ஆயிரம் திருப்பாசுரங்களுள் இப்பத்துத் திருப்பாசுரங்களையும் வல்லவர்கள், இந்த உலகத்திலேயே இப்பிறப்பிலேயே எல்லாரும் காணும்படி இரவும் பகலும் பகவானை அனுபவித்தலால் உண்டாகும் இன்பத்தினையுடையவர்கள் ஆவர்கள்.

வி - கு : ஈன் - குளிர்ச்சி ; இனிமையுமாம். செங்கேழ் - செவ்விதான. 'எல்லியும் காலை இப்பிறப்பே மகிழ்வர்' என்க.

**ஈடு :** முடிவில், [1]இத்திருவாய்மொழி வல்லார், தாம் பட்ட துக்கம் படாதே, இந்த உலகத்திலே இப்பிறப்பிலே அவனைப் பெற்று எப்பொழுதும் இன்பத்தினை அனுபவிப்பர் என்கிறார்.

ஈன் துழாய் அம்மான்தன்னை யான் எங்கே காண்கேன் - 'இறைமைத் தன்மைக்கு அறிகுறியான திருத்துழாய் மாலையையுடைய சர்வேஸ்வரனைக் கண்டு தரிக்கமாட்டாதபடி ஆசையுடையனான யான் எங்கே காணக்கடவேன் ?' என்று என்று - பரத்துவம் முதலானவற்றைப் பெறாத நான் உன்னை எக்காலத்தும் சொல்லி. [2]'ஒருகால் சொல்லி ஆசையை வெளிப்படுத்தினோம் அன்றோ?' என்று ஆறியிருக்கிறார் அல்லரே ; இலாபத்து அளவும் சொல்லும் இத்தனை அன்றோ? ஆதலின், **'என்று என்று'** என்கிறார். [3]அங்கே தாழ்ந்த சொற்களால் - தோளும், தோள்மாலையிலும், அந்த இறைமைத் தன்மையிலும் ஈடுபட்ட சொற்களாலே. அம் தண் குருகூர்ச் சடகோபன் - [4]'எல்லா நோய்களும் என்னை வந்து அடையட்டும் ; நான்

---

1. 'இவையும் பத்தும் வல்லார்கள் இங்கே, இப்பிறப்பே மகிழ்வர் எல்லியும் காலையே' என்பதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. அடுக்குத் தொடருக்குப் பொருள் அருளிச்செய்கிறார், 'ஒருகால்' என்று தொடங்கி.

3. 'அங்கே' என்றது, 'ஈன் துழாய் அம்மான்தன்னை' என்றதனைச் சுட்டுகிறது.

4. 'ஆழ்வார் துக்கத்தையுடையவராய் இருக்க, 'அந்தண் குருகூர்' என்னலாமோ?' என்ன, 'எல்லா நோய்களும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

'உபதிஷ்டந்து மாம் ஸர்வே வியாதயஃ பூர்வஸஞ்சிதாஃ
அந்ருணஃ அஹம் கமிஷ்யாமி தத்விஷ்ணோஃ பரமம் பதம்'

என்பது மகாபாரதம், வீடுமன் கூற்று. என்றது, 'தனக்கு ஒரு கிலேசம் உண்டானால் கர்மபலம் என்றுதல் கிருபாபலம் என்றுதல் பிறக்கும் 'பிரீதியும்' (ஸ்ரீ வசனபூஷணம்) என்கிறபடியே, சலியாதிருக்கையாலே ஊரும் தழைத்தது,' என்றபடி.

விஷ்ணுவினுடைய அந்தப் பரமபதத்தைக் கடன் கழிந்த வனாகச் சொல்லப்போகிறேன்' என்கிறபடியே, இவ்வாற்றுமைக்கு எல்லாம் [1]ஆடல் கொடுத்த ஆழ்வார் என்பது **ஆளவந்தார்** நிர்வாஹம்.

செங்கேழ் சொன்ன ஆயிரத்துள் இவையும் பத்தும் - மனம் வாக்குக் காயம் என்னும் இம்மூன்றும் ஒரே தன்மையராய்ச் சொன்ன ஆயிரத்திலும் இப்பத்தையும். வல்லார்கள் - கற்க வல்லவர்கள். இங்கே இப்பிறப்பே எல்லியும் காலை காண மகிழ்வர் - இந்த உலகத்திலே இந்தப் பிறப்பிலே பகல் இரவு என்னும் வேறுபாடு இன்றிக்கே பகவத் அனுபவம் பண்ணி மகிழப் பெறுவர். [2]'ஆளக் கூப்பிட்டு அழைத்தக்கால்' என்று கூப்பிட வந்து முகங்காட்டாத தாழ்வினை இப்பத்தினைக் கற்று வல்லவர்களோடே கடுக வந்து முகங்காட்டித் தீருமாயிற்று ஈஸ்வரன்; **மனைவியோடே வெறுப்பு உண்டானால் அவள் பக்கல் முகம் பெறுகைக்காகக் குழந்தைகளைக் கொண்டாடுவாரைப்** போலே. (11)

## திருவாய்மொழி நூற்றந்தாதி

**மாயன் வடிவழகைக் காணாத வல்விடாய்**
**ஆயதுஅற விஞ்சி அழுதுஅலற்றும்—தூயபுகழ்**
**உற்றசட கோபனைநாம் ஒன்றிநிற்கும் போதுபகல்**
**அற்றபொழு தானதெல்லி யாம்.** (75)

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. ஆடல் கொடுத்த - இடம் கொடுத்த.

2. 'இவர்க்குப் பகவானுடைய அனுபவம் கிடையாது இருக்க, இப்பதிகத்தைக் கற்றார்க்குக் கிடைக்கக் கூடுமோ?' என்ன, 'ஆளக் கூப்பிட்டு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார், 'மனைவியோடே' என்று தொடங்கி.

## ஆறுந்திருவாய்மொழி—'எல்லியும்'

### முன்னுரை

ஈடு: [1]'மாயக் கூத்தா' என்ற திருவாய்மொழியில், ஆழ்வார் தமக்கு ஓடின விடாய் பேச்சுக்கு நிலம் ஆகையாலே பேசினர்; சர்வேஸ்வரனுக்கு ஓடின விடாய் பேச்சுக்கு நிலம் அல்லாமையாலே பேசிற்று இல்லை. [2]'ஒரு மாதத்திற்குமேல் நான் உயிர் வாழமாட்டேன்' என்கிற படியே, இத்தலையில் விடாய்; 'ஒரு கணநேரத்திற்குமேல் உயிர் வாழேன் நான்' என்றே அன்றோ அத்தலையில் விடாய் இருப்பது? [3]'மாயக் கூத்தா' என்ற திருவாய்மொழியில் 'இவர்க்கு ஓடின விடாய்க்கு உதவப் பெற்றிலோம்' என்னுமதனாலே தபிக்கப்பட்டவனாய், ஆகுலத்தையுடையனாய், பிற்பாட்டுக்கு [4]'உங்களுடைய வருகையினால் நான் மிக்க நாணத்தை அடைந்தேன்' என்கிறபடியே, நாணி, [5]'இனி நாம் கடுக முகங்காட்டில் பிரீதியாலே உடை

---

1. 'தம்முடைய விடாயைக் கூறியது போன்று, சர்வேஸ்வரனுடைய விடாயையும் சொல்ல வேண்டாவோ?' என்ன, 'மாயக் கூத்தா' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. ஈஸ்வரனுக்கு விடாய் மிக்கு இருக்கும் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'ஒரு மாதத்திற்குமேல்' என்று தொடங்கியும், 'ஒரு கண நேரத்திற்குமேல்' என்று தொடங்கியும்.

'ஜீவிதம் தாரயிஷ்யாமி மாஸம் தஸரதாத்மஜ
ஊர்த்வம் மாஸாத் ந ஜீவிஷ்யே ஸத்யேந அஹம் ப்ரவீமி தே'
என்பது, ஸ்ரீராமா. சுந். 38 : 68. இது, பிராட்டி கூற்று.

'சிரம் ஜீவதி வைதேஹீ யதி மாஸம் தரிஷ்யதி
ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாம் அஸிதேக்ஷணாம்'
என்பது, ஸ்ரீராமா. சுந். 66 : 10. இது, பெருமாள் கூற்று.

3. மேல் திருவாய்மொழிக்கும் இதற்கும் இயைபு அருளிச்செய்கிறார், 'மாயக் கூத்தா' என்று தொடங்கி. ஆகுலம் - துன்பம்; பூமியில் கால் பாவாமை.

4. 'ப்ரஸீதந்து பவந்தோ மே ஹ்ரீரேஷா ஹி மமாதுலா
யத் ஈத்ருஸை: அஹம் விப்ரை: உபஸ்த்தேயை: உபஸ்திதः'
என்பது, ஸ்ரீ ராமா. ஆரண். 10 : 9. இது, முனிவர்களைப் பார்த்து ஸ்ரீராமபிரான் கூறியது.

5. 'அப்படி விடாய் கொண்டவரைப் பூர்ணமாக அனுபவிப்பியாதே, திருக்கடித்தானத்திலே வந்து நிற்பதற்குக் காரணம் என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'இனி, நாம்' என்று

குலைப்படுவர், பிரீதியைப் பொறுப்பித்து உளர் ஆக்கிப் பரிமாற வேண்டும்' என்று, [1]பதினுன்கு ஆண்டு பிரிவாலே நொந்த ஸ்ரீ பரதாழ்வானைத் தரிப்பித்து முகங்காட்டுகைக் காகத் திருவடியைப் போகவிட்டு, ஸ்ரீ பரத்துவாசப்பகவான் ஆஶ்ரமத்தில் இருந்தாற்போலவும்; பாண்டவர்களுக் காகத் தூது போகிற போது, அன்பினுல் பரவசப்பட் டிருக்கிற ஸ்ரீ விதுராழ்வான் முதலாயினேர்கள் பிரீதியைக் குறைத்து முகங்காட்டுகைக்காக, [2]'குஶத்தலத்திலே தங்கி யுள்ளான், அவன் காலையில் இங்கு வருவான்' என்கிற படியே, குசத்தலத்திலே விட்டுக்கொண்டிருந்து, பிற்றை நாள் அஸ்தினபுரத்திற்கு எழுந்தருளினுற்போலவும்; தம் மோடே கலவியிலே நோக்குள்ளவனுன சர்வேஶ்வரன் தம்முடைய பிரீதியைப் பொறுப்பித்துத் தம்மோடே கலக் கைக்காகத் திருக்கடித்தானத்திலே எழுந்தருளியிருந்து, தம் பக்கல் செய்கிற வியாமோகத்தை நினைத்து இனிய ராய், அதனைப் பேசி அனுபவிக்கிருர்.

[3]மேல் திருவாய்மொழியிலே துக்கத்துக்குக் காரண மான நினைவுதானே இப்போது உஜ்ஜீவனமாம்படி செய் தான், [4]செறுவாரும் நட்பாகுவர் அன்ருே செங்கோன் அருள் பெற்றவாறே?

---

தொடங்கி. இங்கே, 'நாளை வதுவை' என்ற நாய்ச்சியார் திரு மொழிப்பாசுரத்தை அருளிச்செய்வர். அதாவது, 'இன்று வதுவை' என்னுமல், 'நாளை வதுவை' என்றது, பிரீதி அடங்குவதற்காக என்றபடி. வதுவை - திருமணம்.

1. பொறுப்பித்து உளராக்கிப் பரிமாறவேண்டும் என்பதற்கு இரண்டு திருஷ்டாந்தங்கள் காட்டுகிருர்,'பதினுன்கு' என்று தொடங் கியும், 'பாண்டவர்களுக்காக' என்று தொடங்கியும்.

2. 'உபப்லாவ்யாத் இஹ க்ஷத்தః உபயாதோ ஜநார்த்தநః
குஶஸ்தலே நிவஸதி ஸ ச ப்ராதః இஹ ஏஷ்யதி'

என்பது, பாரதம், உத்யோக பர்வம். 86 : 1.

3. 'மேல் திருவாய்மொழியும் குண அநுசந்தானமேயாக இருக்க, அங்கே துக்கமும் இங்கே பிரீதியும் ஆவான் என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிருர், 'மேல் திருவாய்மொழியிலே' என்று தொடங்கி.

4. 'இது கூடுமோ?' என்ன, 'செருவாறும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர். இங்கே, திருவிருத்தம். 27-ஆம் செய்யுள் காணல் தகும்.

828

**எல்லியும் காலையும் தன்னை நினைந்துஎழ**
**நல்ல அருள்கள் நமக்கேதந்து அருள்செய்வான்**
**அல்லிஅம் தண்அம் துழாய்முடி அப்பன்ஊர்**
**செல்வர்கள் வாழும் திருக்கடித் தானமே.**

**பொ - ரை :** இரவும் பகலும் தன்னையே நினைந்து வாழும்படியாகச் சிறந்ததிருவருளைநமக்கே கொடுத்துக் கிருபை செய்கின்றவனை, அல்லியையுடைய அழகு பொருந்திய குளிர்ந்த திருத்துழாய் மாலையைத் தரித்த என் தந்தையானவன் எழுந்தருளியிருக்கின்ற நகரம், கைங்கரிய செல்வத்தையுடைய வைஷ்ணவர்கள் வாழ்கின்ற திருக்கடித்தானம் என்னும் திவ்விய தேசமேயாகும்.

**வி - கு :** 'நினைந்து எழ அருள்செய்வானுகிய அப்பன்' என்க. 'அப்பன் ஊர் திருக்கடித்தானம்' என்க.

இத்திருவாய்மொழி, **கலி விருத்தம்.**

**ஈடு :** முதற்பாட்டு. [1]'என்னுடைய துன்பத்தைத் தீர்த்தருளுவான் சர்வேஶ்வரனே ; அவன் ஊர் திருக்கடித் தானம்' என்கிருர்.

எல்லியும் காலையும் தன்னை நினைந்து எழ - பகல் இரவு என்னும் வேறுபாடு இன்றிக்கே எல்லாக் காலத்திலும் உபகாரகனை தன்னை நினைத்து உஜ்ஜீவிக்கும்படி. நல்ல அருள்கள் - [2]என் குற்றத்தை ஆதல், தன்னுடைய முற்றறிவினை ஆதல் பாராமல், தன் பேருகப் பண்ணின அருள். [3]'மாயக் கூத்தா' என்ற திருவாய்மொழியில் விடாய்க்கு அருளினன் என்று இருக்கின்றிலர். நமக்கே தந்து அருள் செய்வான் - [4]'பலர் அடியார் முன்பு அருளிய' என்கிறபடியே, நித்திய சூரிகளும் தாம் பெற்ற பேறு

---

1. 'நமக்கே தந்து அருள் செய்வான் அப்பன் ஊர் திருக்கடித் தானம்' என்பதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிருர்.

2. 'அருளுக்கு நன்மை ஏது?' என்ன, 'என் குற்றத்தையாதல்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

3. 'தன் பேருக என்பது என்? மேல் திருவாய்மொழியில் உண்டான விடாய்க்காக அன்றோ என்றுல் என்?' என்ன, 'மாயக் கூத்தா' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

4. 'நமக்கே' என்ற ஏகாரத்தின் பொருளை விவரிக்கிருர், 'பலர் அடியார்' என்று தொடங்கி. 'பலர் அடியார்' என்பது, திருவாய். 7. 10 : 5.

பெற்றிலர் என்றுயிற்று நினைத்திருப்பது. அல்லி அம் தண் அம் துழாய் முடி - மேல் திருவாய்மொழியிலே 'மொய் பூந்தாமம் தண்துழாய்க் கடி சேர் கண்ணிப் பெருமானே' என்று இவர் ஆசைப்பட்டபடியே காட்டிக் கொடுத்தான். ஊர் - 'இப்படி உபகாரகனானவன் வாசம் செய்கையாலே நமக்கு அடையத்தக்க பூமி திருக்கடித்தானம்' என்கிறார். செல்வர்கள் வாழும் - [1]மாயக் கூத்தனும் எல்லியும் காலையுமாக வேண்டாமலே, அனுபவத்தோடே காலம் கழிக்கிறவர்கள்; [2]'இலக்ஷ்மணன் கைங்கரிய இலக்ஷ்மியோடு கூடினவன்' என்கிறபடியே இருப்பார் சிலர்.

செல்வர்கள் வாழும் திருக்கடித்தானம், அருள்செய்வானாகிய அப்பனுடைய ஊராகும். அன்றிக்கே, 'அருள்செய்வானாகிய அப்பனுடையதாய்ச் செல்வர்கள் வாழும் ஊர் திருக்கடித்தானம்' என்னுதல். அன்றிக்கே, 'தண் அம் துழாய் முடி அப்பன் எல்லியும் காலையும் தன்னை நினைந்து எழ நல்ல அருள்கள் நமக்கே அருள்செய்வான். அவன் ஊர் செல்வர்கள் வாழும் திருக்கடித்தானம்' என்னுதல். (1)

829

**திருக்கடித் தானமும் என்னுடைச் சிந்தையும்**
**ஒருக்கடுத்து உள்ளே உறையும் பிரான்கண்டீர்**
**செருக்கடுத்து அன்று திகைத்த அரக்கரை**
**உருக்கெட வாளி பொழிந்த ஒருவனே.**

**பொ - ரை :** அக்காலத்தில் போரிலே சீற்றம் கொண்டு அறிவு மயங்கிய இராவணன் முதலான அரக்கர்களுடைய உருவங்கள் அழியும்படியாக அம்பு மழையைப் பொழிந்த ஒருவன், திருக்கடித்தானத்தையும் என்னுடைய மனத்தினையும் ஒன்றாக நினைத்து உள்ளே வசிக்கின்ற பிரான் ஆவான்.

**வி - கு :** 'ஒருவன், உறையும் பிரான்' என்க. ஒருங்க அடுத்து- ஒருக்கடுத்து. செரு கடுத்து – செருவிலே கடுத்து.

---

1. 'வாழும்' என்ற நிகழ்காலத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார், 'மாயக் கூத்தனும்' என்று தொடங்கி.

2. 'அனுபவம் சம்பத்து ஆகுமோ?' என்ன, 'இலக்ஷ்மணன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

'ஸர்வ ப்ரியகர: தஸ்ய ராமஸ்யாபி ஶரீரத:
லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந: பஹி: ப்ராண இவாபர:'

என்பது, **ஸ்ரீராமா. பால.** 18 : 28.

**ஈடு :** இரண்டாம் பாட்டு. [1]'**என் பக்கல்** வருகைக்கு உள்ள தடைகளையும் தானே போக்கி, திருக்கடித்தானத்திலும் என் மனத்திலும் ஒக்கக் காதல் கொண்டு என் உள்ளே வசிக்கிறான்,' என்கிறார்.

ஒருக்கடுத்து - ஒருங்க அடுத்து. என்றது, ஒக்க நினைக்கை. திருக்கடித்தானத்தையும் **என்** மனத்தையும் ஒக்க விரும்பி. உள்ளே உறையும் பிரான் - மனத்திலே நித்தியவாசம் பண்ணுநின்றான். 'விரோதி செய்தது என்?' என்னில், 'அது, அரக்கர்கள் பட்ட பாட்டினைப் பட்டது' என்கிறார்; செருக் கடுத்து - போரிலே கண்டுதி எடுத்து. அன்று - [2]'ஒருவரையும் வணங்கேன்' என்ற அன்று. திகைத்த அரக்கரை - சக்கரவர்த்தி திருமகனை வெல்லலாம் என்று நினைத்த மதிகேடரான இராக்கதர்களை. உருக்கெட - [3]சின்னங்களாகவும் பின்னங்களாகவும் அம்புகளால் கொளுத்தப்பட்டவைகளாக. வாளி பொழிந்த - [4]'அம்பு மழையைப் பெய்தாரன்றோ?' என்கிறபடியே. ஒருவன் - [5]ஏக வீரன் ஆனவன். (2)

830

**ஒருவர் இருவர் ஓர்மூவர் எனநின்று**
**உருவு கரந்துஉள்ளுந் தோறும் தித்திப்பான்**
**திருஅமர் மார்வன் திருக்கடித் தானத்தை**
**மருவி உறைகின்ற மாயப் பிரானே.**

**பொ - ரை :** 'ஒருவர் என்னும்படியாகவும் இருவர் என்னும் படியாகவும் ஒரு மூவர் என்னும்படியாகவும் நின்றும், சாரிகை

---

1. பாசுரம் முழுதினையும் கடாட்சித்து அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. 'த்விதா பஜ்யேயம் அப்யேவம் நநமேயம் து கஸ்ய சித்
ஏஷமே ஸஹஜ: தோஷ: ஸ்வபாவ: துரதிக்ரம:'
என்பது, ஸ்ரீராமா. யுத். 36 : 11. இது, இராவணன் கூற்று.

3. '**சிந்நம் பிந்நம் ஶரை: தக்தம் ப்ரபக்நம் ஶஸ்த்ரபீடிதம்**
பலம் ராமேண தத்ருஶு: ந ராமம் ஶீக்ரகாரிணம்'
என்பது, ஸ்ரீராமா. யுத். 94 : 22. இது, கவி கூற்று.

4. 'ததோ ராமோ மஹாதேஜா: தநுராதாய வீர்யவாந்
த்ருஷ்ட்வா ராக்ஷஸ ஸைந்யம் தத் **ஶரவர்ஷம் வவர்ஷ ஹ**'
என்பது, ஸ்ரீராமா. யுத். 94 : 18. இதுவும் கவி கூற்று.

5. 'கூட்டுஒரு வரையும் வேண்டாக் கொற்றவ'
என்றார் கம்பநாட்டாழ்வார்.

வந்த வேகத்தாலே கண்களால் காண முடியாதவாறு நின்றும் உருக்கெட வாளி பொழிந்த ஒருவனும், திரு அமர்ந்த மார்பனும், திருக்கடித்தானத்தை மருவி எழுந்தருளியிருக்கின்றவனுமான என் மாயப்பிரான், நினைக்குந்தோறும் இனியன் ஆகாநின்றான்,' என்றவாறு.

வி - கு : 'கரந்து' என்னும் எச்சத்தை, மேல் திருப்பாசுரத்திலே உள்ள 'பொழிந்த' என்னும் எச்சத்தோடு கூட்டுக. 'கரந்து பொழிந்த ஒருவன் திரு அமர் மார்வன். அவன் திருக்கடித்தானத்தை மருவி உறைகின்ற மாயப்பிரான் ஆவான். அவன் உள்ளுந்தோறும் தித்திப்பான்,' என்க.

ஈடு : மூன்றாம் பாட்டு. [1]'பிராட்டியோடுகூடத் திருக்கடித்தானத்திலே நித்தியவாசம் செய்கிற ஆச்சரியத்தையுடையனான உபகாரகன் நினைக்குந்தோறும் இனியன் ஆகாநின்றான்' என்கிறார்.

[2]'மேற்பாசுரத்தில் கூறியவாறு வாளி பொழிந்தபடி எங்ஙனே?' என்ன, 'இங்ஙனே' என்கிறார் : ஒருவர் இருவர் ஓர் மூவர் என நின்று உருவு கரந்து - [3]ஒருவராய்த் தோன்றி, இருவராய்த் தோன்றி, மூவராய்த் தோன்றி, பின் கட்புலனாலே காண முடியாதவாறு சாரிகை வந்து. 'ஒருவர் இருவர் மூவர் என நின்று செருக்கடுத்து அன்று திகைத்த அரக்கரை உருக்கெட வாளி பொழிந்த ஒருவன், திருக்கடித்தானமும் என்னுடைச் சிந்தையும் ஒருக்கடுத்து உள்ளே உறையும் பிரான் கண்டீர்' என்று மேல் பாசுரத்தோடே சேர்க்கடவது. திரு அமர் மார்வன் - [4]'குற்றம் செய்யாதார் யாவர்?' என்னும் பிராட்டியோடேகூட

1. பின் அடிகளைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'ஒருவர் இருவர் ஓர் மூவர்' என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறார், 'மேற்பாசுரத்தில்' என்று தொடங்கி.

3. இங்கே, 'மூலபலம் சாம்படி அருளுகிற அன்று முந்துற ஒருவனாய்த் தோற்றி, சாரிகையில் வேகம் மிக மிக இருவரும் மூவருமாய்த் தோற்றி, வேகம் மிக்கவாறே இந்திரிய சம்யோகத்துக்கு இடம் இல்லாதபடியாகையாலே, ரூபக்ரஹணம் அரிதாய், உருக்கெட வாளி பொழிந்த ஒருவன்' என்ற இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானத்தையும், கம்பராமாயணம் மூலபலவதைப் படலத்தில் 115 முதல் 119 முடியவுள்ள செய்யுள்களையும், 209 முதல் 228 முடிய உள்ள செய்யுள்களையும் படித்து அறிதல் தகும்.

4. இப்பொருளையுடைய சுலோகத்தை மேலே 6-ஆம் பக். காண்க.

ஆயிற்று வந்தது. திரு அமர் மார்வன் திருக்கடித் தானத்தை மருவி உறைகின்ற மாயப்பிரான் உள்ளுந் தோறும் தித்திப்பான் - பெரிய பிராட்டியார் நித்தியவாசம் செய்கிற திருமார்விலேயுடையனாய், திருக்கடித்தானத்தை மருவி உறையாநின்றுகொண்டு என் பக்கலிலே ஆச்சரிய மாம்படி ஈடுபட்டிருக்குமவனானவன் நினைக்குந்தோறும் புதியனாய் இனியன் ஆகாநின்றான். (3)

831

**மாயப் பிரான்என் வல்வினை மாய்ந்துஅற**
**நேசத்தி னால்நெஞ்சம் நாடு குடிகொண்டான்**
**தேசத்து அமரர் திருக்கடித் தானத்தை**
**வாசப் பொழில்மன்னு கோயில்கொண் டானே.**

**பொ - ரை:** 'ஒளியையுடைய நித்தியசூரிகள் எழுந்தருளியிருக்கின்ற, வாசனையையுடைய சோலைகள் சூழ்ந்த திருக்கடித்தானத்தை நிலை பெற்ற கோயிலாகக்கொண்டு நித்தியவாசம் செய்கின்ற மாயப்பிரான், என்னுடைய கொடிய வினைகள் எல்லாம் வாசனையோடு அழியும்படியாக அன்போடு என் நெஞ்சமாகிய நாட்டினைப் பரமபதத்தைப் போலக் குடி இருப்பாகக் கொண்டான்.

**வி - கு:** 'தேசத்து அமரர் வாசம் பொழில் திருக்கடித்தானத்தை மன்னுகோயில் கொண்டானாகிய மாயப்பிரான் வினை மாய்ந்து அற நெஞ்சம் நாடு குடிகொண்டான்' என்க. தேசம் - ஒளி.

**ஈடு:** நான்காம் பாட்டு. [1]'திருக்கடித்தானத்தைப் பகல் இருக்கை மாத்திரமாகக்கொண்டு, அன்பின் மிகுதியாலே என் மனத்தையே எப்பொழுதும் வசிக்கும் இடமாகக் கொண்டான்' என்கிறார்.

மாயம் பிரான் - ஆச்சரியமான குணங்களையும் செயல்களையுமுடைய உபகாரகன். என் வல்வினை மாய்ந்து அற - [2]தன்னைப் பிரிந்து நான் பட்ட கிலேசம் எல்லாம் நசித்துப்போம்படி. என்றது, 'மாயக் கூத்தா' என்ற திருவாய்மொழியில் 'காண வாராய் என்று என்று கண்ணும்

1. 'திருக்கடித்தானத்தைக் கோயில் கொண்டான், நேசத்தினால் நெஞ்சம் நாடு குடி கொண்டான்' என்று கூட்டி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. மேல் திருவாய்மொழியில் உண்டான துயரத்துக்குத் தகுதியாகப் பொருள் அருளிச்செய்கிறார், 'தன்னைப் பிரிந்து' என்று தொடங்கி.

வாயும் துவர்ந்து' பட்ட விடாய் எல்லாம் வாசனையோடே போம்படி' என்றபடி. நேசத்தினால் - தான் என் பக்கல் செய்த அன்பினாலே. நெஞ்சம் நாடு - [1]கலவியாலும் பிரிவினாலும் ஒரு பரமபதத்தைப் போலே ஆக்கினாயிற்று, இவர் திருவுள்ளத்தை. குடி கொண்டான் [2]பரிகரங்களோடு நித்தியவாசம் பண்ணாநின்றான் 'அரவத்து அமளியினோடும்' என்ற பாசுரப்படியே. தேசத்து அமரர் திருக்கடித்தானத்தை - நித்தியானுபவம் பண்ணுகையால் உண்டான ஒளியையுடைய நித்தியசூரிகளுக்கு அடையத் தக்கதான திருக்கடித்தானத்தை. வாசம் பொழில் மன்னு - வாசத்தையுடைய சோலையோடே கூடின.

'தேசத்து அமரர் திருக்கடித்தானத்தைக் கோயில் கொண்டான், நேசத்தினால் நெஞ்சம்நாடு குடி கொண்டான்' என்க. (4)

832

**கோயில்கொண் டான்தன் திருக்கடித் தானத்தைக்**
**கோயில்கொண் டான்அத னோடும்என் நெஞ்சகம்**
**கோயில்கொள் தெய்வம்எல் லாம்தொழ வைகுந்தம்**
**கோயில்கொண் டகுடக் கூத்தஅம் மானே !**

**பொ - ரை :** ஒவ்வொரு கோயிலிலே தங்கி இருக்கின்ற தெய்வங்கள் எல்லாம் தொழும்படியாக ஸ்ரீ வைகுண்டத்தைக் கோயிலாகக் கொண்ட குடக்கூத்து ஆடிய அம்மான், திருக்கடித்தானத்தைத் தனக்குக் கோயிலாகக்கொண்டான்; திருக்கடித்தானத்தோடே கூடவந்து என் நெஞ்சினைக் கோயிலாகக் கொண்டான்.

**வி - கு :** 'குடக்கூத்த அம்மான் கோயில்கொண்டான்,' என்க. கோயில் - விமானங்கள். தெய்வம் - நித்தியசூரிகள்.

**ஈடு :** ஐந்தாம் பாட்டு. [3]'என் பக்கல் உண்டான மிக்க காதலாலே திருக்கடித்தானத்தோடேகூட என் மனத்திலே புகுந்தருளினான்,' என்கிறார்.

---

1. 'அணு அளவினதான நெஞ்சம் ஒரு நாடு ஆனவாறு யாங்ஙனம்?' என்ன, 'கலவியாலும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. 'குடிகொண்டான்' என்றதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'பரிகரங்களோடு' என்று தொடங்கி. அதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'அரவத்து அமளியினோடும்' என்று. இது, பெரியாழ்வார் திருமொழி, 5. 2 : 10.

3. முதல் இரண்டு அடிகளைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

திருக்கடித்தானத்தைத் தன் கோயில் கொண்டான் - திருக்கடித்தானத்தைத் தனக்கு அசாதாரணமான கோயிலாகக் கொண்டான். அதனோடும் என் நெஞ்சகம் கோயில் கொண்டான் - [1]'**செருப்பு வைத்துத் திருவடி தொழுவாரைப் போலே ஆக ஒண்ணாது**' என்று, திருக்கடித்தானத்தோடே கூட வந்து என் நெஞ்சிலே புகுந்தருளினன். கோயில் கொள் தெய்வம் எல்லாம் தொழ வைகுந்தம் கோயில்கொண்ட - ஒரோ கோயில்கள் உண்டாய் இருக்கும் அன்றோ, திருவடி, திருவனந்தாழ்வான், சேனை முதலியார் இவர்களுக்கு? இவர்கள் தொழும்படி ஸ்ரீவைகுண்டத்தைத் தனக்குக் கோயிலாகக்கொண்ட சர்வேஸ்வரன். குடக்கூத்த அம்மான் - கிருஷ்ணனாய் வந்து அவதரித்துக் குடக்கூத்து ஆடினவன். குடக்கூத்து ஆடின அந்தச் சிரமம் எல்லாம் ஆறும்படி திருக்கடித்தானத்தைக் கோயிலாகக்கொண்டான்; அதனோடேகூட என் மனத்தினைத் தனக்குக் கோயிலாகக்கொண்டான்; [2]'அழகிய பாற்கடலோடும்' என்கிறபடியே.

[3]'திருக்காடித்தானத்தில் நிலை, என்னைப் பெறுகைக்கு ஆகையாலே, சாத்தியம் கைப்பட்டால் சாதனத்தில் இழிவார் இல்லையாய் இருக்க, என்னைப் பெற்றது அத்தேசத்திலே நிற்கையாலே என்று அத்தேசத்தோடே வந்து புகுந்தான்' என்கிறார். (5)

---

1. 'அதனோடும்' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'செருப்பு வைத்து' என்று தொடங்கி.

2. 'திருக்கடித்தானத்தோடே தம் நெஞ்சினைக் கோயிலாகக் கொள்ளக் கூடுமோ?' என்ன, 'அழகிய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

'அரவத்து அமளியி னோடும் அழகிய பாற்கட லோடும்
அரவிந்தப் பாவையும் தானும் அகம்படி வந்து புகுந்து
பரவைத் திரைபல மோதப் பள்ளிகொள் கின்றபி ரானைப்
பரவுகின் றான்விட்டு சித்தன் பட்டினம் காவற்பொ ருட்டே.'

என்பது, பெரியாழ்வார் திருமொழி.

3. 'திருக்கடித்தானத்தோடே இவர் திருவுள்ளத்திலே நித்திய வாசம் செய்வதற்குக் கருத்து யாது?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'திருக்கடித்தானத்தில் நிலை' என்று தொடங்கி. சாத்தியம் - சாதனத்தால் பெறுவது; பேறு. சாதனம் - கருவி.

833

**கூத்தஅம் மான்கொடி யேன்இடர் முற்றவும்**
**மாய்த்தஅம் மான்மது சூதஅம் மான்உறை**
**பூத்த பொழில்தண் திருக்கடித் தானத்தை**
**ஏத்த நில்லா குறிக்கொண்மின் இடரே.**

பொ - ரை : குடக்கூத்து ஆடிய அம்மானும், கொடியேனுடைய துன்பம் முழுதினையும் அழித்த அம்மானும், மதுசூதனனாகிய அம்மானுமாகிய எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற, மலர்ந் திருக்கின்ற சோலைகள் சூழ்ந்த குளிர்ந்த திருக்கடித்தானத்தைத் துதித்த அளவிலே துன்பம் முழுதும் நில்லாவாம். இதனை நினையுங் கோள்.

வி - கு : 'உறை திருக்கடித்தானம்' என்க. 'அதனை ஏத்த இடர் நில்லா' என்க.

ஈடு : ஆறும் பாட்டு. [1]தம்முடைய மிக்க பிரீதியாலே, 'திருக்கடித்தானத்தை எல்லாரும் அடையுங்கோள்' என்கிறார்.

கூத்த அம்மான் - மனத்தினைக் கொள்ளை கொள்ளுகின்ற செயல்களையுடைய சர்வேஸ்வரன். கொடியேன் - மஹாபாவியான என்னுடைய. இடர் முற்றவும் மாய்த்த அம்மான் - தன்னைப் பிரிந்து நான் பட்ட கிலேசத்தை எல்லாம் வாசனையோடே போக்கின என் சுவாமி. மதுசூத அம்மான் உறை - பகைவர்களை அழிக்குந்தன்மையனான சர்வேஸ்வரன் நித்தியவாசம் செய்கின்ற தேசம். பூத்த பொழில் - அவன் நித்தியவாசம் செய்கையாலே எப்பொழுதும் மலர்களோடு கூடின பொழில். [2]திருவருளாகிய மழை மாறினால் அன்றோ பூக்கள் மாறுவது? தண் திருக்கடித்தானத்தை - சிரமத்தைப் போக்குகிற திருக்கடித்தானத்தை. ஏத்த இடர் நில்லா - [3]இனியதனைச் செய்ய,

1. 'குறிக்கொண்மின்' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். இதில் பரோபதேசம் செய்வதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார், 'தம்முடைய' என்று தொடங்கி.

2. 'அவன் நித்தியவாசம் செய்தால், எப்பொழுதும் 'பூத்த பொழிலாக' இருக்கவேண்டுமோ?' என்ன, 'திருவருளாகிய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'பூத்த பொழில்' என்கையாலே, 'இனிமையாலே ஏத்தினர்' என்பது கருத்து.

3. 'இனிமையாலே ஏத்தினால் இடர் போமோ?' என்ன, 'இனியதனை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

இடரானது 'நமக்கு இது தேசம் அன்று' என்று [1]சும்மெனுதே கைவிட்டு ஓடும். குறிக்கொண்மின் - இதனை 'ஓலக்க வார்த்தை' என்று இராமல் புத்தி பண்ணுங்கோள். (6)

834

**கொண்மின் இடர்கெட உள்ளத்துக் கோவிந்தன்**
**மண்விண் முழுதும் அளந்தஒண் தாமரை**
**மண்ணவர் தாம்தொழ வானவர் தாம்வந்து**
**நண்ணு திருக்கடித் தான நகரே.**

**பொ - ரை:** கோவிந்தனுடைய மண்ணுலகம் விண்ணுலகம் முழுதினையும் அளந்த ஒள்ளிய தாமரை போன்ற திருவடிகளை மக்கள் தொழாநிற்க நித்தியசூரிகள் வந்து சேரும்படியான திருக்கடித்தானமாகிற நகரத்தை உங்கள் துன்பம் எல்லாம் நீங்கும்படி மனத்திலே கொள்ளுங்கோள்.

**வி – கு:** 'நகரை உள்ளத்து இடர்கெடக் கொண்மின்,' என்க.

**ஈடு:** ஏழாம் பாட்டு. [2]உங்கள் துன்பம் நீங்குவதற்கு ஏத்த வேண்டா; திருக்கடித்தானத்தை நெஞ்சாலே நினைக்க அமையும்,' என்கிறார்.

இடர் கெடத் திருக்கடித்தான நகர் உள்ளத்துக் கொண்மின் - உங்கள் எல்லாத் துன்பங்களும் போகும்படியாகத் திருக்கடித்தானத்தை மனத்தாலே நினையுங்கோள். கோவிந்தன் - சர்வசுலபனானவனுடைய. மண் விண் முழுதும் அளந்த ஒண் தாமரை - [3]ஒரு தாமரைப்பூவைக் கொண்டாயிற்று, பூமியையும் வானுலகத்தையும் அளந்து கொண்டது. மண்ணவர் தாம் தொழ - இடக்கை வலக்கை அறியாத பூமியில் உள்ளார் தொழ; [4]பரமபதம் நித்திய சூரிகளுக்கேயாக இருக்குமாறு போலே, உகந்தருளின தேசம் சம்சாரிகளுக்கேயாக இருக்கை. வானவர்

1. 'சும்மெனுதே' என்பது, பெரியாழ்வார் திரு. 5. 4 : 3.

2. 'இடர்கெட உள்ளத்துக் கொண்மின்' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. 'தாமரை' என்றதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'ஒரு தாமரைப்பூ' என்று தொடங்கி.

4. 'மண்ணவர் தொழ' என்றதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'பரமபதம்' என்று தொடங்கி.

தாம் வந்து நண்ணு - [1]சம்சாரிகட்கு முகங்கொடுத்துக் கொடு நிற்கிற நீர்மையை நினைத்து நித்தியசூரிகளும் வந்து கிட்டுகிற. திருக்கடித்தான நகர் - திருக்கடித்தான நகரை. கொண்மின் இடர் கெட உள்ளத்து - [2]இங்கு உள்ளார் அங்குப் போவது மேன்மையை அனுபவிக்க; அங்கு உள்ளார் இங்கு வருவது சீலகுணத்தை அனுபவிப் பதற்கு. (7)

835

தான நகர்கள் தலைசிறந்து எங்குஎங்கும்
வான்இந் நிலம்கடல் முற்றும்எம் மாயற்கே
ஆன இடத்தும்என் நெஞ்சும் திருக்கடித்
தான நகரும் தனதாயப் பதியே.

பொ - ரை: பரமபதம் என்ன, இந்த உலகம் என்ன, திருப் பாற்கடல் என்ன, ஆகிய எல்லா இடங்களிலும் மேன்மை உற்று விளங்குகிற தலங்கள் முழுதும் எம் மாயவனுக்கே வசிக்கும் நகரங் கள் ஆனாலுங்கூட, என்னுடைய மனமும் திருக்கடித்தான நகரும் தன்னுடைய தாயம் பதிகளாகும்.

வி - கு: தாயம் - முறையாக வந்தது.

ஈடு: எட்டாம் பாட்டு. [3]'அவனுக்கு, வேறுபட்ட சிறப் பினையுடைய நகரங்கள் பலவும் உண்டாய் இருக்கச்செய் தேயும், என்னுடைய நெஞ்சையும் திருக்கடித்தானத்தை யும் தாயத்தால் கிடைத்த இடமாக விரும்பி இருக்கிறான்,' என்கிறார்.

வான் இந்நிலம் கடல் எங்கு எங்கும் தலைசிறந்த தானம் நகர்கள் முற்றும் எம் மாயற்கே ஆன இடத்தும் - மேலில் உலகங்களிலும், பூமியிலும், கடலிலும், கண்ட இடம் எல்லாம் மிகவும் சிலாக்கியமான இருப்பிடமான

---

1. 'சம்சாரிகளுக்காக நிற்கிற இடத்திலே வானவர்கள் வருவான் என்?' என்ன, 'சம்சாரிகட்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. 'இங்குள்ளார் அங்கும் அங்குள்ளார் இங்கும் வருவது போவது எதற்காக?' என்ன, 'இங்கு உள்ளார்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. 'தலைசிறந்த, தானம் நகர்கள், என் நெஞ்சும் திருக்கடித் தான நகரும் தன தாயப் பதியே' என்பதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

22

நகரங்கள் முற்றும் என் பக்கலிலே காதலையுடையனை ஆச்சரியத்தையுடையவனுக்கு ஆயிருக்கச்செய்தேயும். என் நெஞ்சும் திருக்கடித்தான நகரும் தன தாயம் பதியே- என் நெஞ்சும் திருக்கடித்தான நகரும் தனக்குத் தாயபாக மாகக் கிடைத்த இடமாக விரும்பி இராநின்றான். (8)

836

**தாயப் பதிகள் தலைசிறந்து எங்குஎங்கும்**
**மாயத்தி னால்மன்னி வீற்றிருந் தான்உறை**
**தேசத்து அமரர் திருக்கடித் தானத்துள்**
**ஆயர்க்கு அதிபதி அற்புதன் தானே.**

**பொ - ரை :** 'தாய நகரங்களாகிய எல்லா இடங்களிலும் தனது இச்சையாலே நிலை பெற்று உயர்வு தோன்ற எழுந்தருளி யிருக்கின்ற எம்பெருமான், ஒளியோடு கூடிய நித்தியசூரிகள் வந்து தங்கியிருக்கின்ற திருக்கடித்தானத்தில் உறைகின்ற ஆயர்க்கு அதிபதியாகிய அற்புதனே யாவன்" என்க.

**வி - கு :** 'தாயம்பதிகள் எங்கு எங்கும் மாயத்தினால் மன்னித் தலைசிறப்ப வீற்றிருந்தான்' என்க. தலைசிறந்து : எச்சத்திரிபு. வீற்றிருந்தான் - பெயர். 'அற்புதன் தானே வீற்றிருந்தான்,' என்னலுமாம்.

**ஈடு :** ஒன்பதாம் பாட்டு. [1]'அல்லாத திருப்பதிகளும் எல்லாம் அவனுக்கு அப்படியே அன்றோ?' என்னில், 'அது அப்படியேயாகிலும், என்னோடே கிட்டுகைக்கு உறுப்பான நிலம் என்று திருக்கடித்தானத்திலே மிக்க காதலன் ஆனான்' என்கிறார்.

தலைசிறந்த தாயம் பதிகள் எங்கு எங்கும் - மிகவும் வேறுபட்ட சிறப்பினையுடையதாய்ப் பழையதாய் வருகிற தலங்கள் எங்கும். மாயத்தினால் - 'காதலாலே' என்னுதல். 'இச்சையாலே' என்னுதல். [2]'மாயா வயுநம் ஞானம்'. மன்னி வீற்றிருந்தான் - விரும்பி, தன் ஐஸ்வர்யம் எல்லாம் தோற்றும்படி இருந்தருளினவன். அன்றிக்கே, 'ஐஸ்வர்

1. 'எங்கு எங்கும் தலைசிறந்த தாயப்பதிகள் (ஆக இருந்தும்) திருக்கடித்தானத்துள் மாயத்தினால் வீற்றிருந்தான்' என்பதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'மாயை' என்ற பதம், 'இச்சை' என்ற பொருளில் வருதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'மாயா வயுநம் ஞானம்' என்று. இது, நிகண்டு.

யத்தால் வந்த வேறுபாடு தோற்ற இருந்தவன்' என்றுமாம். உறை - நித்தியவாசம் செய்கிற. தேசத்து அமரர் திருக்கடித்தானத்துள் - ஒளியையுடைய நித்தியசூரிகளுக்கு அடையத்தக்க பூமியான திருக்கடித்தானத்துள். ஆயர்க்கு அதிபதி - ஆயர்குலத்தினுய் வந்து அவதரித்து அவர்களில் தலைவன் ஆனவன். அற்புதன் - ஆச்சரியமான படிகளையுடையவன்.

[1]'உகந்தருளின தேசங்கள் எல்லாவற்றிலும் விருப்பம் உண்டாகிலும், என்னைப் பெறுவதற்காகத் திருக்கடித்தானத்திலே, தன் மேன்மையும் நீர்மையும் எல்லாம் பிரகாசிக்க நின்ருன்' என்கை. (9)

837

*அற்புதன் நாரா யணன்அரி வாமனன்*
*நிற்பது மேவி இருப்பதுஎன் நெஞ்சகம்*
*நற்புகழ் வேதியர் நான்மறை நின்றுஅதிர்*
*கற்பகச் சோலைத் திருக்கடித் தானமே.*

பொ - ரை: அற்புதனும் நாராயணனும் அரியும் வாமனனுமான எம்பெருமான் பொருந்தி வீற்றிருப்பது என் நெஞ்சகமாகும். நின்றுகொண்டிருப்பது, நல்ல புகழ் நிறைந்த பிராமணர்களுடைய நான்கு வேதங்களும் நிலைபெற்று முழங்கிக்கொண்டிருக்கின்ற கற்பகச் சோலை சூழ்ந்த திருக்கடித்தானம் என்னும் நகரம் ஆகும்.

வி - கு: 'மேவி இருப்பது என் நெஞ்சகம்; நிற்பது திருக்கடித்தானம்' என்க.

ஈடு: பத்தாம் பாட்டு. [2]'என்னைப் பெறுமளவும் திருக்கடித்தானத்திலே நின்ருன்; என்னைப் பெற்ற பின்பு நிற்பதும் இருப்பதும் என் நெஞ்சிலே' என்கிருர்.

நாராயணன் - தன் உடைமையை விட்டுக் கொடாத [3]வத்சலன். அரி - அடியார்களுடைய விரோதிகளை அழிக்கின்ற ஆற்றலன். வாமனன் - தன்னைச் சிறுகவிட்டு அடி

1. இப்பாசுரத்தால் பலித்த பாவத்தை அருளிச்செய்கிருர், 'உகந்தருளின' என்று தொடங்கி.

2. 'சோலைத் திருக்கடித்தானத்து நாராயணன் நிற்பதும் மேவி இருப்பதும் என் நெஞ்சகம்' என்று கொண்டு அவதாரிகை அருளிச்செய்கிருர்.

3. வத்சலன் - அன்பையுடையவன்.

யார்களுடைய விருப்பங்கள் அனைத்தையும் முடிக்குமவன். அற்புதன் - இப்படிகளாலே ஆச்சரியத்தையுடையவன். நல் புகழ் வேதியர் நான்கு மறை நின்று அதிர் கற்பகம் சோலைத் திருக்கடித்தானம் - [1]அநந்யப்பிரயோஜனர் என்னும் புகழையுடைய வைதிகராலே உச்சரிக்கப்படுகின்ற நாலுவகை வேதங்களும் முழங்காநின்றுள்ள கற்பக வனத்தையுடைய திருக்கடித்தானத்திலே அவன்நிற்பது ; மேவி இருப்பது என் நெஞ்சகம். அன்றிக்கே, 'திருக்கடித்தானத்து நாராயணன் அரி வாமனன் அற்புதன் நிற்பதும் என் நெஞ்சகம், மேவி இருப்பதும் என் நெஞ்சகம்' என்னுதல். 'திருக்கடித்தானம்' என்பது, ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்த முதல் வேற்றுமை. (10)

838

**சோலைத் திருக்கடித் தானத்து உறைதிரு**
**மாலை மதிள்குரு கூர்ச்சட கோபன்சொல்**
**பாலோடு அமுதுஅன்ன ஆயிரத்து இப்பத்தும்**
**மேலை வைகுந்தத்து இருத்தும் வியந்தே.**

*பொ - ரை : 'சோலைகள் சூழ்ந்த திருக்கடித்தானத்திலே உறைகின்ற திருமாலை, மதிள்களையுடைய திருக்குருகூரிலே அவதரித்த ஸ்ரீ சடகோபராலே அருளிச்செய்யப்பட்ட, பாலையும் அமுதையும் போன்ற ஆயிரம் திருப்பாசுரங்களில் இப்பத்துத் திருப்பாசுரங்களும் எல்லா உலகங்களிலும் மேலே உள்ள பரமபதத்திலே வியக்க இருத்தும்,' என்க.*

*வி - கு : 'இப்பத்தும் வைகுந்தத்து வியக்க இருத்தும்,' என்க. வியந்து - எச்சத் திரிபு.*

ஈடு : முடிவிலே, [2]'இத்திருவாய்மொழி கற்றவர்களை, இது தானே திருநாட்டிலே கொடுபோய் விடும்,' என்கிறார்.

சோலைத் திருக்கடித்தானத்து உறை திருமாலை - சிரமத்தைப் போக்குவதாய்க் காட்சிக்கு இனியதான சோலை

---

1. வேதியர் புகழுக்கு நன்மையாவது, வேறு ஒரு பிரயோஜனத்தையும் விரும்பாமை. அதனை அருளிச்செய்கிறார், 'அநந்யப்பிரயோஜனர்' என்று தொடங்கி. அநந்யப்பிரயோஜனர் - பகவானைத் தவிர வேறு பேறுகளைக் கருதாதவர்கள்.

2. 'மேலை வைகுந்தத்து இருத்தும் வியந்தே' என்பதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

யையுடைய திருக்கடித்தானத்திலே நித்தியவாசம் செய்கிற திருமகள் கேள்வனை. மதிள் குருகூர் - சம்சாரம் காரணமாக உண்டாகின்ற பாபகூட்டங்களுக்குப் புக ஒண்ணுத அரணையுடைய திருநகரி. சடகோபன் சொல் - [1]'ஸ்ரீ வால்மிகி முனிவராலே சொல்லப்பட்ட ஸ்ரீ ராகவனுடைய சரிதத்தை' என்னுமாறு போலே, 'பாலோடு அமுது அன்ன ஆயிரம்' என்னுதல்; 'பாலோடு அமுது அன்ன இப்பத்து' என்னுதல். [2]வாச்சிய வாசகங்களினுடைய சேர்த்தி இருக்கிறபடி. பால் என்றது, சோலைத் திருக்கடித்தானத்து உறை திருமாலை. அமுது என்றது, சடகோபன் சொல் என்கிற வாசகத்தை. இது **ஆளவந்தார்** நிர்வாஹம். இப்பத்தும் வியந்து மேலை வைகுந்தத்து இருத்தும் - 'சம்சாரத்திலே இதனைக் கற்பான் ஒருவன் உண்டாவதே!' என்று ஆச்சரியப்பட்டு எல்லா உலகங்கட்கும் மேலான பரமபதத்திலே கொடுபோய் வைக்கும். என்றது, [3]'மாயக் கூத்தா' என்ற திருவாய்மொழியில் உண்டான விடாய் நடையாடாத தேசத்திலே வைத்து, ஒரு நாளும் பிரியாத அனுபவத்தைக் கொடுக்கும்' என்றபடி. (11)

## திருவாய்மொழி நூற்றந்தாதி

**எல்லி பகல்நடந்த இந்தவிடாய் தீருகைக்கு**
**மெல்லவந்து தான்கலக்க வேணும்என—நல்லவர்கள்**
**மன்னுகடித் தானத்தே மால்இருக்க மாறன்கண்டு**
**இந்நிலையைச் சொன்னுன் இருந்து.** (76)

ஆழ்வார் எம்பெருமானுர் சீயர் திருவடிகளே அரண்.

---

1. 'திருமாலைச் சடகோபன்' என்பதற்கு பாவம் அருளிச்செய்கிருர், 'ஸ்ரீ வால்மீகி முனிவராலே' என்று தொடங்கி.

'ரகுவர சரிதம் முநிப்ரணீதம்'

என்பது, ஸ்ரீராமா. பால. 2 : 43.

2. வாச்சியம் - சொற்களின்பொருள். வாசகம் - சொற்கள்.

3. இடத்துக்குத் தகுதியாக விவரணம் செய்கிருர், 'மாயக் கூத்தா' என்று தொடங்கி.

# ஏழாந்திருவாய்மொழி—'இருத்தும்'

## முன்னுரை

[1]கீழ் அடைய இத்திருவாய்மொழியில் பேற்றுக்குக் கிருஷி செய்தபடி; மேல் இப்பேற்றுக்கு வேலியாய் இருக்கிறது. [2]'இத்திருவாய்மொழியில் செய்கிறது என்?' என்னில், தாம் அநாதி காலம் புத்தி பூர்வகமாகச் செய்து போந்த பாவங்கள் முழுதினையும் மறந்து, தம்மாட்டுப் பத்தி பிறந்த பின்பு அறியாமலே செய்து போந்த பாவங்களைக் காணக் கண்ணிட்டு, [3]இவர் தம்முடைய பேற்றுக்கு அவன்தானே முயற்சி செய்து இவர்க்குப் பிறந்த விடாய் தீரும்படி கலந்து, இதுதான் இவர்க்கு உபகரித்தானாய் இருக்கை அன்றிக்கே, தன் பேறாய் இருக்கிறபடியை நினைத்து, 'தானே விரும்பினவனைத் தன் பேறாக வந்து கலந்தவனை நாம் இரப்பாளராய்க் கூப்பிட்ட இடம் என் செய்தோமானோம்!' என்று நாணங்கொண்டு, 'ஒரு சம்சாரி சேதநன் பக்கல் சர்வேஸ்வரன் செய்யும் அங்கீகாரம் இருக்கும்படியே இது!' என்று வியப்பு அடைந்தவரானார்.

---

1. 'மாயக் கூத்தா' என்ற திருவாய்மொழியில் உண்டான விடாய்தீரக் கலந்த கலவியால் இத்திருவாய்மொழியில் உண்டான பிரீதி சொல்லும் தரம் அன்று என்று அருளிச்செய்யத் திருவுள்ளம் பற்றி, 'கீழும் மேலும் பிரீதி உண்டாய் இருக்க, இத்திருவாய்மொழியில் உண்டான பிரீதிக்கு உயர்வு யாது?' என்ற வினாவிற்கு விடை அருளிச்செய்கிறார், 'கீழ் அடைய' என்று தொடங்கி. 'வேலியாய் இருக்கிறது' என்றது, 'வளர்க்கக் கூடியதாய் இருக்கிறது' என்றபடி.

2. சொல்லும் தரம் அல்லாததான பிரீதியை விரித்துப் பேசுவதற்குத் திருவுள்ளம் பற்றி அது சம்பந்தமான சங்கையை அனுவதிக்கிறார், 'இத்திருவாய்மொழியில்' என்று தொடங்கி.

3. 'எதிர் சூழல் புக்கு' என்றதனைத் திருவுள்ளம் பற்றி, 'இவர் தம்முடைய பேற்றுக்கு அவன் தானே முயற்சி செய்து' என்கிறார். இத்திருவாய்மொழியில் வருகின்ற 'என்னுள் இருள்தான் அற வீற்றிருந்தான்' என்றதனைத் திருவுள்ளம் பற்றி, 'இவர்க்கு' என்று தொடங்கியும், 'இருந்தான் கண்டுகொண்டு' என்றதனைத் திருவுள்ளம் பற்றி, 'இதுதான்' என்று தொடங்கியும், 'அர்த்தித்து எனைத்தோர் பல நாள் அழைத்தேற்கு' என்றதனைத் திருவுள்ளம் பற்றித் 'தானே விரும்பினவனை' என்று தொடங்கியும், 'என்றன் கருத்தை உற வீற்றிருந்தான்' என்றதனைத் திருவுள்ளம் பற்றி, 'ஒரு சம்சாரி' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்.

அங்ஙனம் விப்பப்பு அடைந்தவராய், [1]'இராகவன் அபயத்தைக் கொடுத்த அளவிலே இராவணன் தம்பியான விபீஷணன் வணங்கினான்,' என்கிறபடியே, 'இராவணன் பின் பிறந்த நாம் இரகு குலத்தில் உள்ளார்க்கு ஆளாகப் புகாநின்றோமோ?' என்று இருந்தவன், பெருமாள் பாடு நின்றும் அருளப்பாடு இட்டு வந்தவாறே, 'என்னையே இப்படிக் கைக்கொண்டு அருள்வது! அவன் பின் பிறந்த தண்மை எங்கே போயிற்று?' என்று வேர் அற்ற மரம் போலே, கூட வந்த நால்வரோடும் திருவடிகளிலே விழுந்து தரைப்பட்டாற்போலவும்; [2]இராம குணங்கள் நடையாடாத அசோகவனத்திலே திருவடி சென்று சேர்ந்து, [3]'கேட்ட போதே இனிமையான வார்த்தையை வைதேவிக்குச் சொன்னார்' என்கிறபடியே, பிராட்டி உள்ளாம்படி இராமநாம சங்கீர்த்தனத்தைச் செய்ய, 'இந்நிலத்தில் இது நடப்பது ஒன்று அன்று; [4]இது மனத்தின் விகாரத்தால் வந்த மயக்கமோ? அன்றி, இது காற்றின் செயலால் வந்த மயக்கமோ? அன்றி, இது, பிரிந்தார்க்கு வரும் மயக்கமோ? அன்றி, அனைவருக்கும் வரும் கானல் நீர் போன்ற மயக்கமோ?' என்று பலபடிகளாக ஐயங்கொண்டு, 'முன்னே நின்று வார்த்தை சொல்லாநின்றான்; 'இது கேட்டு நாம் வேறுபடுகிற தன்மையும் உண்டு; ஆனபின்பு, இது மெய்யாமித்தனை' என்று ஸ்ரீ ஜனகராஜன்

---

1. பகவானுடைய அங்கீகாரத்தைக் கண்டு ஈடுபட்டமைக்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார், 'இராகவன்' என்று தொடங்கி.

'ராகவேண அபயே தத்தே ஸம்நதஃ ராவணாநுஜஃ
விபீஷணஃ மஹாப்ராஜ்ஞஃ பூமிம் ஸமவலோகயந்'

என்பது, ஸ்ரீராமா. யுத். 19 : 1. இச்சுலோகத்திலே உள்ள 'ஸம்நதஃ' என்றதிலே நோக்காக 'இராவணன்' என்று தொடங்கி அருளிச் செய்கிறார். இங்கே, கம்பராமாயணம், விபீடணன் அடைக்கலப் படலம், 126, 140-ஆம் செய்யுள்களைப் படித்து அறிதல் தகும்.

2. ஐயம் கொண்டு தெளிந்ததற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார், 'இராம குணங்கள்' என்று தொடங்கி.

3. 'ஏவம் பஹுவிதாம் சிந்தாம் சிந்தயித்வா மஹாகபிஃ
ஸம்ஸ்ரம்வே மதுர வாக்யம் வைதேஹ்யாஃ வ்யாஜஹார ஹ'

என்பது, ஸ்ரீராமா. சுந். 31 : 1.

4. 'கிம் நு ஸ்யாத் சித்தமோஹஃ அயம் பவேத் வாதகதிஃ து இயம்
உந்மாதஜஃ விகாரோவா ஸ்யாத் இயம் ம்ருகத்ருஷ்ணிகா'

என்பது, ஸ்ரீராமா. சுந். 34:23. இங்கே, கம்பராமாயணம் உருக்காட்டு படலம் 22 முதல் 28 முடிய உள்ள செய்யுள்களைப் படித்து அறிதல் தகும்.

திருமகள் தெளிந்து உவகையள் ஆனாற்போலவும்; [1]இவரும், 'இதுவும் மயக்கம் கனவு முதலியவைகளிலே ஒன்று' என்று ஐயங்கொண்டு, 'அங்ஙன் அன்று, மெய்' என்று தெளிந்து, பிரீதராய், [2]'நமக்குத் துவேஷம் இன்மையை உண்டாக்கி, ஆபிமுக்கியத்தை உண்டாக்கித் தன்னால் அல்லது செல்லாமையைப் பிறப்பித்து, தன் மேன்மை பாராதே, இப்படித் தாழ நின்று வந்து கலந்து பரிமாறுவதே! இது என்ன அடியார்கட்குப் பரதந்திரப்பட்டிருக்கும் தன்மை! இது என்ன நீர்மை!' என்று அவன் படிகளைச் சொல்லி உவகையர் ஆகிறார்.

839

**இருத்தும்வியந்து என்னைத்தன் பொன்னடிக் கீழ்என்று**
**அருத்தித்து எனைத்தோர் பலநாள் அழைத்தேற்குப்**
**பொருத்தமுடை வாமனன் தான்புகுந்து என்றன்**
**கருத்தைஉற வீற்றிருந் தான்கண்டு கொண்டே.**

**பொ - ரை :** 'அடியேனைத் தன் அழகிய திருவடிகளின்கீழே திருவுள்ளம் உவந்து இருத்தியருள்வானாக' என்று பிரார்த்தித்து எத்துணைப் பல நாள்கள் ஒரே தன்மையாக அழைத்துக் கூப்பிட்ட என் விஷயத்தில், பொருத்தமுடைய வாமனன் தான் புகுந்து என் கருத்தைத் தான் உடையனாய்க்கொண்டு என்னையே பார்த்த வண்ணமாக எழுந்தருளியிருக்கிறான்,' என்க.

**வி - கு :** 'புகுந்து, கண்டுகொண்டு, உற வீற்றிருந்தான்,' என்க. உற - உற்று.

இத்திருவாய்மொழி, **கலி விருத்தம்.**

**ஈடு :** முதற்பாட்டு. [3]இத்திருவாய்மொழியில் தமக்கு உண்டான இலாபத்தைச் சுருங்க அருளிச்செய்கிறார்.

---

1. இத்திருவாய்மொழியில் வருகிற 'மருள்தான் ஈதோ மாய மயக்கு மயக்கே' என்றதனைத் திருவுள்ளம் பற்றி, 'இவரும்' என்று தொடங்கியும், 'மாய மயக்கு மயக்கான்' என்றதனைத் திருவுள்ளம் பற்றி, 'அங்ஙன் அன்று, மெய்' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்,

2. 'வைத்தேன் மதியாலே' என்றதனைத் திருவுள்ளம் பற்றி, 'நமக்குத் துவேஷம் இன்மையை' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். ஆபிமுக்கியம் - எதிர்முகமாம் தன்மை.

3. பாசுரம் முழுதினையும் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

என்னைத் தன் பொன் அடிக்கீழ் வியந்து இருத்தும் என்று தன் வாசி அறியாமல் ஐம்புல இன்பங்களிலே நோக்குள்ளவனான என்னை, சிலாக்கியமான தன் திருவடிகளின்கீழே, [1]'மஹாத்துமாவான ஒருவன் இவ்வுலகில் கிடைப்பது மிகவும் அரிது என்று கை வாங்கி இருக்கும் சம்சாரத்திலே நம்மை விரும்புவான் ஒருவன் உண்டாவதே!' என்று ஆச்சரியப்பட்டு இனி ஒரு நாளும் பிரியாதபடி இருத்தி அடிமை கொள்ளும். [2]இதனால், பிராப்பிய பிராபகங்களைச் சொல்லுகிறது. 'யாங்ஙனம்?' எனின், **'தன் பொன்னடி' என்று பிராப்பிய சொரூபம் சொல்லிற்று; 'இருத்தும்' என்று பிராபகனும் அவனே என்று சொல்லிற்று.** வியந்து இருத்தும் - தன் பேறாக இருத்தும். அருத்தித்து - [3]சேதநனை வாசிக்கு இத்தனையும் வேண்டும் அன்றோ? எனைத்தோர் பல நாள் - [4]'நாள் நாளும்' என்றதனைச் சொல்லுகிறார். அழைத்தேற்கு - [5]'என்னை ஆளக் கூப்பிட்டு அழைத்தக்கால்' என்றதனைச் சொல்லுகிறார். ''இவன், காதலை அறியாதே தாழ்த்தானாகவும், நாம் காதலையுடையோமாகவும் நினைத்துக் கூப்பிட்டு என்ன காரியம் செய்தோம்?' என்கிறார்காண்!' என்று **பிள்ளான்** பணிப்பர். [6]அத்தலையில் காதலை நினைத்தால் விரும்புத

---

1. 'வியந்து' என்றதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'மகாத்துமாவான' என்று தொடங்கி.

> 'பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே
> வாஸுதேவஃ ஸர்வம் இதி ஸ மஹாத்மா ஸுதுர்லபஃ'

என்பது, ஸ்ரீ கீதை, 7 : 19.

2. இப்படிச் சொன்னதால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார், 'இதனால்' என்று தொடங்கி.

3. 'தன் பேறாக இருத்தினால் இவன் அர்த்திப்பது என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'சேதநனை' என்று தொடங்கி.

4. 'நாள்நாளும்' திருவாய். 8. 5 : 8.

5. 'என்னை' திருவாய். 8. 5 : 6.

6. ''என்ன காரியம் செய்தோம்!' என்று அநுதபிப்பது எற்றிற்கு? அர்த்திக்க வேண்டாவோ?' என்ன, 'அத்தலையில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். அத்தலையில் - எம்பெருமானிடத்தில்.

லுங்கூட மிகையாய் அன்றோ இருப்பது? [1]‘எழுதும்’ என்னும் இது மிகையாய் அன்றோ இருப்பது?

பொருத்தமுடை - [2]இப்படிப் பொருத்தமுடையவனையே ‘இதுவோ பொருத்தம்?’ என்றது. வாமனன் - [3]தன் உடைமை பெறுகைக்குத் தான் இரப்பாளன் ஆனவனை நான் விரும்பிய இடம் என் செய்தேன் ஆனேன்? தான் புகுந்து - என்னைத் தான் பெறுகைக்கு இரப்பாளனாய் வந்து புகுந்து. என்றன் கருத்தை உற - [4]‘தனக்கேயாக எனைக்கொள்ளும் ஈதே’ என்னும் [5]என் நினைவினைத் தான் கைக்கொண்டான். வீற்றிருந்தான் - இவரைப் பெற்றதனால் உண்டான வேறுபாடு வடிவிலே தோற்றக் கிருதக்கிருத்தியனாய் இராநின்றான். கண்டுகொண்டே - [6]**பெரிய நோய்க்குத் தப்பின புத்திரனைத் தாய் தந்தையர்கள் பார்த்துக்கொண்டு இருக்குமாறு போலே,** ‘மாயக்கூத்தா’ என்ற திருவாய்மொழியில் விடாய்க்குத் தப்பினவர் என்று பார்த்துக்கொண்டு இராநின்றான். (1)

840

***இருந்தான் கண்டுகொண்டு எனதுஏழை நெஞ்சுஆளும்***
***திருந்தாத ஓர்ஐவரைத் தேய்ந்துஅற மன்னிப்***
***பெருந்தாள் களிற்றுக்கு அருள்செய்த பெருமான்***
***தரும்தான் அருள்தான் இனியான் அறியேனே.***

---

1. ‘விரும்புவதும் மிகை’ என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார், ‘எழுதும்’ என்று தொடங்கி. ‘எழுதும்’ என்பது; திருவாய். . 3 : 9.

2. ‘பொருத்தமுடை’ என்றவருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார், ‘இப்படி’ என்று தொடங்கி. ‘இதுவோ’ என்பது, திருவாய். 8. 5 : 8.

3. ‘வாமனன்’ என்கிறவருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார், ‘தன் உடைமை’ என்று தொடங்கி.

4. ‘தனக்கே’ என்பது, திருவாய். 2. 9 : 4.

5. ‘என் நினைவினைத் தான் கைக்கொண்டான்’ என்றது, ‘நான் தனக்கே உறுப்பாக விநியோகப்பட வேண்டும் என்னுமாறு போன்று, தான் எனக்கே உறுப்பாக விநியோகப்படவேண்டும் என்று விரும்புகிறான்’ என்றபடி.

6. ‘கண்டுகொண்டே’ என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் ‘பெரிய’ என்று தொடங்கி.

பொ - ரை : என்னுடைய ஆசை பொருந்திய மனத்தினை அடிமை கொண்டு இருக்கின்ற திருந்தமாட்டாத ஒப்பற்ற ஐந்து இந்திரியங்களும் அடியோடு அழியும்படியாக நிலைபெற்று இருந்து என்னைப் பார்த்துக்கொண்டேயிருக்கிறான். பெரிய கால்களையுடைய கஜேந்திராழ்வானுக்குத் திருவருள் செய்த பெருமான் தான் அவ்யானைக்குச் செய்த அந்த அருளை, என் பக்கல் செய்த அருளைக் கண்ட பின்பு, அருளாக மதிக்கின்றிலேன்.

வி - கு : 'மன்னி கண்டுகொண்டு இருந்தான்' என்க. 'பெருமான் தான் தரும் அருள்தான்' என்க. தரும் - தந்த.

ஈடு : இரண்டாம் பாட்டு. [1]'நான் இந்திரியங்களுக்குக் கட்டுப்பட்டு இருந்த தன்மையைத் தன் அழகாலே தவிர்த்து என்னை அங்கீகரித்த உபகாரத்துக்கு ஒவ்வாது ஸ்ரீ கஜேந்திராழ்வானுடைய ஆபத்தை நீக்கிய தன்மையும்' என்கிறார்.

கண்டுகொண்டிருந்தான் - [2]வறிஞன் செல்வப்பேறு உண்டானால் பார்த்துக்கொண்டிருக்குமாறு போலே, பார்த்தபடியே இராநின்றான். [3]'சுக்கிரீவனும் ஸ்ரீராமபிரானும் ஆகிய இவர்களும் மிகவும் களித்த மனமுடையவர்களாய் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு மனநிறைவு பெற்றார்கள் இலர்' என்கிறபடியே, சொல்ல எதிர்த்தலையான தம்மைக் காண்கின்றிலர். எனது ஏழை நெஞ்சு ஆளும் - கண்டன எல்லாவற்றிலும் ஆசை கொள்ளுகின்ற என்னுடைய மனத்தை, அதுவே பற்றாசாக இந்திரியங்கள் பொதி எடுக்கத் தொடங்கிற்று. என்றது, 'ஒரு பிரபலனைப் பற்றாதே விஷயங்களில் உள்ள ஆசையால் நடுவே நின்றவாறே பணிகொள்ளத் தொடங்கிற்று,' என்றபடி. திருந்தாத - [4]வரம்பு இல் ஆற்றலையுடையனான சர்வேஶ்வர

---

1. பின் அடிகளைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'கண்டுகொண்டிருந்தான்' என்பதற்குத் திருஷ்டாந்த மூலமாக பாவம் அருளிச்செய்கிறார், 'வறிஞன்' என்று தொடங்கி.

3. 'தாம் பார்த்துக்கொண்டிருந்ததைச் சொல்லாமல், அவன் கண்டுகொண்டிருந்ததை மட்டும் சொல்லுவான் என்?' என்ன, 'சுக்கிரீவனும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

'ததஃ ஸுப்ரீதமநஸௌ தௌ உபௌ கபிராகவௌ
அந்யோந்யம் அபி வீக்ஷந்தௌ ந த்ருப்திம் உபஜக்மதுஃ'

என்பது, ஸ்ரீராம. கிஷ். 5 : 18.

4. இந்திரியங்களினுடைய வலிமையை அருளிச்செய்கிறார், 'வரம்பில்' என்று தொடங்கி.

ணுலும் பல காலம் திருத்தப்போகாதபடி அன்றே இவற்றின் வன்மை இருப்பது? ஓர் ஐவர் - இனி இப்படி ஓர் ஐவரைத் தேடப்போகாது. இவற்ருல் பட்ட நலிவின் மிகுதியாலே 'ஐவர்' என்று உயர்திணையாகக் கூறுகிருர்.

தேய்ந்து அறமன்னி இருந்தான் - கண்களுக்கு இலக்கான உலக விஷயங்களிலே பற்று நேராக அழியும்படி, தன் வடிவழகைக் காட்டிக்கொண்டு புகுந்திருந்தான். [1]வேறு விஷயங்களிலும் வடிவழகிலே அன்றே இவன் துவக்குண்டு இருப்பது? [2]அரசர்கள், பகைவர்கள் ஆசன பலத்தாலே வெல்லுமாறு போலே, இருப்பாலே இந்திரியங்களை வெல்ல வேண்டும் என்று வந்து புகுந்திருந்தான். [3]'போதரே என்று சொல்லிப் புந்தியிற் புகுந்து தன்பால் ஆதரம் பெருக வைத்த அழகன்' அன்றே? பெருந்தாள் களிற்றுக்கு அருள் செய்த பெருமான் - பெரிய தாள்களையுடைய களிற்றுக்கு அருளின சர்வேஸ்வரன். [4]வடிவில் கனமும், நோவில் பாடு அற்ற ஒண்ணுமைக்குக் காரணமாதலின், 'பெருந்தாள்' என்கிருர். பெருமான்தான் தரும் அருள்தான் - 'தரும்' என்கிற இது, தந்த தருகின்ற தரும் என முக்காலத்திலும் சொல்லலாய் இருக்கையாலே 'தரும் அருள்' என்கிருர். அடியார்க்குச் [5]செய்ததும் தமக்குச் செய்ததாக அன்றே இவர் நினைத்திருப்பது? ஆதலின், 'கொடுத்த' என்னுது 'தரும்' என்கிருர். இனி யான் அறியேனே - எனக்கு உதவின பின்பு, நான் அதனை

---

1 'குணங்கள் இருக்க, வடிவழகினைக் காட்டுவான் என்?' என்ன, 'வேறு விஷயங்களிலும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச் செய்கிருர்.

2. 'மன்னி இருந்தான்' என்றதற்கு பாவம் அருளிச்செய்கிருர், 'அரசர்கள்' என்று தொடங்கி.

3. இந்திரியங்களுக்குக் கட்டுப்பட்டிருத்தலைத் தன் அழகாலே போக்கிக்கொண்டு புகுந்திருந்தான் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிருர், 'போதரே' என்று தொடங்கி. இது, திருமாலை, 16.

4. களிறு என்னுமல், 'பெருந்தாள்' என்ற அடைக்குக் கருத்து அருளிச்செய்கிருர், 'வடிவில்' என்று தொடங்கி.

5. 'தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீ ரிடத்த.'
'ஏனை இரண்டும் ஏனை இடத்த.' (தொல். சொல். 29, 30.)
என்பன இலக்கணம்.

ஒன்றாக நினைத்திரேன். [1]யானை நோவுபட்டது, பல ஆண்டுகள்; அகப்பட்ட பொய்கை, அளவிற்கு உட்பட்டது; முதலை ஒன்று; எனக்குக் காலம் அநாதி; அகப்பட்டது பிறவிப்பெருங்கடலில்; முதலை ஐந்து. இதனை மீட்டுக் கொண்ட மஹா குணத்துக்கு அது ஒரு குணமாய்ற்றதோ? ஸ்ரீ கஜேந்திராழ்வான் பக்கல் செய்த அருளையிட்டுப் புறம்பு உள்ளாரைப் பிரித்து வேறுபடுத்தினர்; தமக்குச் செய்த அருளையிட்டு அதனையே பிரித்து வேறுபடுத்துகிறார். (2)

841

**அருள்தான் இனியான் அறியேன் அவன்என்னுள்**
**இருள்தான் அறவீற் றிருந்தான் இதுஅல்லால்**
**பொருள்தான் எனின்மூ வுலகும் பொருள்அல்ல**
**மருள்தான்ஈ தோ?மாய மயக்கு மயக்கே.**

**பொ - ரை:** அந்த எம்பெருமான் என் மனத்திற்குள்ளே அறிவின்மை முதலான குற்றங்கள் எல்லாம் நீங்கும்படி எழுந்தருளியிருக்கிறான்; ஆதலால், நான் இந்திரியங்களுக்கு வசப்பட்டிருத்தலைத் தவிர்த்த அந்தத் திருவருள்தன்னையும் இனி ஒன்றாக நினைத்திரேன்; 'என் உள்ளே வீற்றிருத்தலாகிய இது அல்லாமல் அவனுக்கு வேறு பேறு உளதோ?' எனின், வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல் செல்ல இருத்தலும் அவனுக்கு ஒரு பேறு அன்று; நான் இங்ஙனம் கூறுகின்ற இது மயக்கமோ? அவன் தன்னுடைய மாயத்தாலே மயக்குகின்ற மயக்கந்தானோ? அறியேன்.

**வி - கு:** 'வீற்றிருந்தான்; ஆதலால், அருள்தான் இனி யான் அறியேன்,' என்க. 'இது அல்லால் மூவுலகும் பொருள் அல்ல,' என்க. மாயம் - ஆச்சரியம்.

**ஈடு:** மூன்றாம் பாட்டு. [2]எல்லாவற்றாலும் நிறைவுற்றிருக்கின்றவனான சர்வேஸ்வரன், தம் பக்கல் இப்படிக் காதலைச் செலுத்துவது கூடாதது ஒன்று என்று ஐயங்கொண்டு, 'இவ்வனுபவம் மயக்கம் முதலானவைகளாலே பிறந்ததோ?', என்கிறார்.

அருள்தான் இனி யான் அறியேன் - நான் இந்திரியங்கட்குக் கட்டுப்பட்டு இருத்தலைத் தவிர்த்த இதுதன்னையும்

1. நினையாமைக்குக் காரணத்தை அருளிச்செய்கிறார், 'யானை' என்று தொடங்கி.

2. பாசுரம் முழுதினையும் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். 'மருள்தான் ஈதோ' என்றதிலே நோக்கு.

இப்போது ஒன்றாக நினைத்திரேன். 'எதனைப் பற்ற?' என்னில், அவன் என் உள் இருள்தான் அற வீற்றிருந்தான் - அவன் என்னுடைய மனத்தில் அறிவின்மையாகிய இருள் எல்லாம் போகும்படி பெருப்பேறு பெற்றானாய், அவ்வேறுபாடு தோற்ற இராநின்றான்; இனி, எனக்கு [1]வேறு ஒன்று தோற்றுமோ? இது அல்லால் மூன்று உலகும் பொருள்தான் எனின் பொருள் அல்ல - [2]இதற்குத் **திருமாலையாண்டான்** பணிக்கும்படி: 'உலகத்தார் செல்வங்களிலே தலையாகச் சொல்லுவது, மூன்று உலகச் செல்வத்தையும் அன்றோ? அதுவும் எனக்கு ஒரு சரக்கு அன்று,' என்கிறார் என்பது. அங்ஙன் அன்றிக்கே, 'என்னுடைய மனத்திலே புகுந்து எழுந்தருளியிருக்கிற இருப்பு ஒழிய, வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல் செல்ல இருக்கும் இருப்பையும் தனக்கு ஒரு ஐஸ்வரியமாக நினைத்து இருக்குமோ என்று பார்த்தால், அதுவும் ஒரு சரக்காக நினைத்திருக்கின்றிலன் எம்பெருமான்' என்று **எம்பெருமானார்** அருளிச்செய்வர். [3]இதுவே இடத்துக்குப் பொருந்துவது.

மருள்தான் ஈதோ - [4]ஒரு சம்சாரி சேதநனைப் பெற்றுச் சர்வேஸ்வரன் இப்படி இருந்தான் என்னுமது கூடுவது ஒன்று அன்று; இது என் அறிவு கேட்டாலே சொல்லுகிறேனோ? மாயம் மயக்கு மயக்கே - அன்றிக்கே, அவன் தன்னுடைய ஆச்சரியமான மயக்கத்திற்குச் சாதனங்களாய் இருப்பவற்றைக்கொண்டு மயங்கச் செய்தானோ?

---

1. 'வேறு ஒன்று தோற்றுமோ?' என்றது, 'இந்திரியங்கட்குக் கட்டுப்பட்டிருத்தலைப் போக்கினதும் ஓர் அதிசயமாகத் தோற்றுமோ?' என்றபடி.

2. இன்னார்க்குப் பொருள் அல்ல என்னுமையாலே இரண்டு விதமாகப் பொருள் அருளிச்செய்கிறார், 'இதற்கு' என்று தொடங்கியும், 'அன்றிக்கே' என்று தொடங்கியும். 'மாயக் கூத்தா' என்ற திருவாய்மொழியில் உண்டான விடாய் தீரக் கலந்த எம்பெருமானை அனுபவித்து இருக்குமதொழிய, மூன்று உலகங்களின் செல்வமும் செல்வமோ என்று பார்த்தால், அது எனக்கு ஒரு செல்வமாகத் தோற்றாது என்பது திருமலையாண்டான் திருவுள்ளம்.

3. 'இதுவே இடத்துக்குப் பொருந்துவது' என்றது, 'சர்வேஸ்வரனுடைய காதலின் பெருக்கைக் கூறும் இடம் ஆகையாலே இதுவே பொருந்தும்,' என்றபடி.

4. 'மயக்கம் ஆவான் என்? உண்மையாகக் கூடாதோ?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'ஒரு' என்று தொடங்கி.

[1]நெடுநாள் இந்தச் சரீரத்தைக் கொடுத்து அறிவு கெடுத்தான், இப்போது தன்னுடைய காதலாலே என்னை மயங்கச் செய்தான். (3)

842

மாய மயக்குமயக் கான்என்னை வஞ்சித்து
ஆயன் அமரர்க்கு அரிஏறு எனதுஅம்மான்
தூய சுடர்ச்சோதி தனதுஎன்னுள் வைத்தான்
தேயம் திகழும்தன் திருவருள் செய்தே.

பொ-ரை: கிருஷ்ணனாய் அவதரித்தவனும் நித்தியசூரிகளுக்கு அரி ஏறு போன்றவனும் என்னுடைய அம்மானுமான சர்வேஸ்வரன், உலகம் எல்லாம் விளங்கும்படியாகத் தன்னுடைய திருவருளை எனக்குச் செய்து, தன்னுடைய பரிசுத்தமான பேரொளிப் பிழம்பான திவ்விய மங்கள விக்கிரகத்தை என் நெஞ்சுக்குள்ளே வைத்தான்; ஆதலால், ஆச்சரியமான மயக்கத்திற்குரிய சாதனங்களாலே என்னை மயக்கான்.

வி-கு: 'அம்மான் திருவருள் செய்து தனது சோதியை என்னுள் வைத்தான்; என்னை வஞ்சித்து மயக்கான்,' என்க.

ஈடு: நான்காம் பாட்டு. [2]'அவன் என்னை மயங்கச் செய்தான் அல்லன்; என் உள்ளே கலந்தருளினானே! இதில் ஒரு ஐயம் இல்லை,' என்கிறார்.

என்னை வஞ்சித்து மாய மயக்கு மயக்கான் - [3]அடியர் அல்லாதாரான துரியோதனாதியர்களைக் குறித்து 'ஆயுதம் எடேன்' என்று ஆயுதம் எடுத்தும், பகலை இரவு ஆக்கியும் வஞ்சித்தானித்தனை அல்லது, பாண்டவர்கள் விஷயத்தில் அதனைச் செய்தானோ? ஆகையால், தனக்கே பரமான என்னை வஞ்சித்து, ஆச்சரியமான மயக்கத்திற்கு உரிய சாதனங்களாலே மயங்கச் செய்யான். 'காரணம் என்?' என்ன, ஆயன் அமரர்க்கு அரி ஏறு எனது அம்மான் -

---

1. 'அவன் எப்போதும் மயங்கச் செய்கின்றவனே?' என்ன, 'நெடுநாள்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. 'மாய மயக்கு மயக்கான், தனது என்னுள் வைத்தான்' என்பதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. ''என்னை வஞ்சித்து, மாய மயக்கு மயக்கான்' என்பது, என்ன உறுதிகொண்டு?' என்ன, 'அடியார்கட்குப் பரதந்திரப்பட்டிருக்கும் அவனுடைய தன்மையை நினைத்து' என்கிறார், 'அடியர் அல்லாதாரான' என்று தொடங்கி.

நித்தியசூரிகளுக்கும் அவ்வருகான ஏற்றத்தையுடையனைய் வைத்து, கிருஷ்ணனாய் வந்து அவதரித்து, என்னுடைய அடிமையை நிர்வகித்த [1]பரம ஆப்தன், என்னை வஞ்சித்து மாய மயக்கு மயக்கான். 'ஆனால் இப்பேறு வந்தபடிதான் என்?' என்ன, தேயம் திகழும் தன் திருவருள் செய்து தூய சுடர்ச்சோதி தனது என் உள் வைத்தான் - உலகம் எல்லாம் அறியும்படி என் பக்கலிலே காரணம் இல்லாமலே திருவருளைச் செய்து, குற்றங்கட்கு எல்லாம் எதிர்த்தட்டாய், வேறுபட்ட சிறப்பினையுடைய ஒளி உருவமாய், சுத்த சத்துவ மயமாய், தனக்கே உரியதான வடிவை என்னுள்ளே வைத்தான். புறம்பு ஒருவர்க்கு இன்றிக்கே தனக்கே உரியதான அருள் ஆதலின், '**தன் திரு அருள்**' என்கிறார். [2]தான், வேறு ஒரு சாதனத்தைக்கொண்டு சாதித்துக்கொள்ளப்படாதவன் என்னும்படியைக் கொண்டு என் உள்ளே பிரகாசிப்பித்தான் ஆதலின், '**என்னுள் வைத்தான்**' என்கிறார். [3]'பரமாத்துமா எவனை விரும்புகிறானோ, அவனாலேயே அடையத்தக்கவன்; அவனுக்கே இந்தப் பரமாத்துமா தன் சொரூபத்தைக் காட்டுகிறான்,' என்கிறபடியே. (4)

843

**திகழும் தன்திரு அருள்செய்து உலகத்தார்**
**புகழும் புகழ்தான் அதுகாட்டித் தந்துஎன்னுள்**
**திகழும் மணிக்குன்றம் ஒன்றேஒத்து நின்றான்**
**புகழும் புகழ்மற்று எனக்கும்ஓர் பொருளே?**

பொ - ரை: 'பிரகாசிக்கின்ற தன்னுடைய திருவருளை எனக்குத் தந்து, உலகத்தார் என்னைப் புகழ்கின்ற புகழையும் தான் எனக்குக் காட்டித்தந்து, என் உள்ளே விளங்குகின்ற ஒரு மணிக்குன்றத்தை ஒத்து நிலை பெற்று நின்றான்; ஆதலால், இதற்கு

---

1. ஆப்தன் - நம்பத்தகுந்தவன்.

2. 'ஈஸ்வரன் வைக்க வேண்டுமோ?' என்ன, 'தான்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. 'வேறு ஒரு சாதனத்தைக் கொண்டு சாதித்துக்கொள்ளப் படாதவன்' என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'பரமாத்துமா' என்று தொடங்கி.

'யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:
தஸ்ய ஏஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்'

என்பது, கடஉபநிடதம், 2.

வேருக அவனைப் புகழும் புகழ்ச்சி எல்லாம் எனக்கு ஒரு பொருளாக இருக்கின்றனவோ? இல்லை,' என்றபடி.

வி - கு : 'உலகத்தார் புகழும் புகழ் அதுதான் காட்டித் தந்து' எனக் கூட்டுக.

**ஈடு:** ஐந்தாம் பாட்டு. [1]''ஒருவர் பெறும் பேறே!' என்று உலகம் அடங்கக் கொண்டாடும்படி என் உள்ளே வந்து நின்றருளினன்; அதனால் வந்த புகழை அல்லது இவனுடைய மற்று உள்ள புகழையும் ஒன்ருக மதியேன்' என்கிருர்.

திகழும் தன் திருவருள் செய்து - [2]பிறருடைய அளவிற்கு உட்பட்ட அருள் போல அன்றிக்கே, இரண்டு தலைக்கும் நிறமாம்படியான தன் திரு அருளை என் பக்கலிலே செய்து. உலகத்தார் புகழும் தான் புகழ் அது காட்டித் தந்து - [3]நான் பெற்ற பேற்றினைக் குறித்து உலகத்தார் செய்யும் தோத்திரத்தைத் தான் காட்டித் தந்தான். என்றது, [4]''பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும் ஆயிரம்' என்று உலகமாகக் கொண்டாடும்படி செய்கையைக் காட்டித்தந்தான் என்றபடி. 'இவர்கள் முனி

---

1. 'உலகத்தார் புகழும் புகழ் தான் அது காட்டித் தந்து என்னுள் நின்ருன்; புகழும் புகழ் மற்று எனக்கும் ஓர் பொருள்' என்பதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிருர்.

2. 'தன் திருவருள்' என்றதற்கு பாவம் அருளிச்செய்கிருர், 'பிறருடைய' என்று தொடங்கி. 'இரண்டு தலைக்கும் நிறமாம்படி' என்றது, இன்னுனுக்கு அருள் செய்தோம் என்று அவனும் பெருமை அடைந்து, 'இவ்வருளுக்கு நாம் இலக்காகப் பெற்ருேமே!' என்று இவனும் பெருமை அடைந்து நிற்கையைத் தெரிவித்தபடி.

3. 'நான் பெற்ற பேறு' என்றது, 'என்னைக்கொண்டு திருவாய்மொழி பாடுகையாகிற பேறு' என்றபடி,

4. உலகம் புகழ்வதற்கு இரண்டு பிரமாணங்கள் காட்டுகிருர், 'பாலேய்' என்று தொடங்கியும், 'இவர்கள்' என்று தொடங்கியும். 'பாலேய்' என்பது **திருவாய்மொழி,** 1. 5 : 11.

'இவர்கள்' என்று தொடங்குவது, **ஸ்ரீராமா, பால.** 4 : 32.

'இமௌ முநீ பார்த்திவ லக்ஷணந்விதௌ
குஸீலவௌ சாபி மஹா தபஸ்விநௌ
மமாபி தத் பூதிகரம் ப்ரவக்ஷ்யதே
மஹாநுபாவம் சரிதம் நிபோதத'

என்பது அச்சுலோகம்.

வேடம் தரித்தவர்கள் ஆயினும், இராஜ சிங்கங்களோடு கூடியுள்ளனர்; பாடகர்கள் ஆனாலும், பெருந்தவமுடைய வர்களாய் இருக்கிறார்கள்,' என்றாற்போலே உலகமுழுதும் புகழா நின்றது என்றபடி. என் உள் திகழும் மணிக் குன்றம் ஒன்றே ஒத்து நின்றான் - என் உள்ளே வந்து புகுந்து, பெரும்பேறு பெற்றானாய், [1]நிலைபெற்றுப் புகர் உடையனாய்க் கால்வாங்கிப் போகமாட்டாதே, விளங்கா நின்ற ஒரு இரத்தினமலை போலே நின்றான். மற்றுப் புகழும் புகழ் எனக்கு ஓர் பொருளே - என் உள்ளே நின்ற இம்மஹா குணத்தை அல்லது, மற்றுள்ள புகழை ஒரு புகழாக மதியேன். [2]'நான் இந்திரியங்கட்குக் கட்டுப்பட்டு நிற்கும் நிலையைப் போக்கினேன் என்று நான் சொன்ன தனை ஒரு சரக்காக நினைத்திரேன்' என்றபடி. (5)

844

**பொருள்மற்று எனக்கும்ஓர் பொருள்தன்னில் சீர்க்கத்**
**தருமேல்பின் னையார்க்கு அவன்தன்னைக் கொடுக்கும்?**
**கருமாணிக் கக்குன்றத் துத்தா மரைபோல்**
**திருமார்வு கால்கண்கை செவ்வாய் உந்தியானே.**

**பொ - ரை :** கரியது ஒரு மாணிக்க மலையிலே தாமரைகள் பூத்தாற்போன்ற அழகிய மார்பு திருவடிகள் திருக்கண்கள் திருக் கைகள் சிவந்த திருவாய் திரு உந்தி இவற்றையுடைய எம்பெரு மான், ஒருவர் பெறுகிற பேறுகளுள், வேறு ஒரு பேற்றினை எனக் கும் சிறப்பாகக் கொடுப்பானேயானால், உயர்ந்த புருஷார்த்தமான அவனை வேறு யார்க்குக் கொடுப்பான்?

**வி - கு :** 'உந்தியான் பின்னை யார்க்குத் தன்னைக் கொடுக் கும்?' எனக் கூட்டுக. பொருள் - பேறு. சீர்க்க - சிறக்க.

**ஈடு :** ஆறாம் பாட்டு. [3]'எனக்குத் தன்னை ஒழிய வேறு ஒன்றனைத் தந்துவிட்டால், புறம்பு தன்னை வேறு ஒருவர் கொள்வார் இல்லாமை எனக்குத் தந்தானோ? என் பக்கல் காதலாலே தந்தருளினான்' என்கிறார்.

---

1. 'குன்றம்' என்றதனை நோக்கி, 'நிலைபெற்று' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

2. 'மற்றுள்ள புகழ்' என்றது, இன்னது என்று விவரணம் செய்கிறார், 'நான்' என்று தொடங்கி.

3. 'பின்னை ஆர்க்கு அவன் தன்னைக் கொடுக்கும்?' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்,

பொருள்தன்னில் மற்று எனக்கும் ஓர் பொருள் சீர்க் கத்தருமேல் - பேறுகளுள் வேறே கனத்தது ஒரு பேற்றினை எனக்குத் தந்துவிட்டால். பின்னை யார்க்கு அவன் தன்னைக் கொடுக்கும் - பின்னை இப்பொருள் கடிதாகக் கைக்கொள்வார் உளரோ? 'என்? கைக்கொள்வார் இலரோ?' என்னில், கருமாணிக்கக் குன்றத்துத் தாமரை போல் திருமார்வு கால் கண் கை செவ்வாய் உந்தியான் - என்றது, 'இவ்[1] வேப்பங்குடி நீரைப் புறம்பு பருகுவோர் உளரோ?' என்றபடி. கருமாணிக்கக் குன்றம் - திருமேனிக்குத் திருஷ்டாந்தம். தாமரை போல் - அவயவ சோபைக்குத் திருஷ்டாந்தம். திருமார்வு - புருஷகாரமான பிராட்டி எழுந்தருளியிருக்கிற திருமார்வு. கால் - அச்சேர்த்திக்குத் தோற்று விழும் திருவடிகள். கண் - திருவடிகளில் விழுந்தாரைக் குளிர நோக்கும் கண். கை - அவர்களை எடுத்து அணைக்கும் கை. செவ்வாய் - இன்சொற்களைச் சொல்லும் திரு அதரம். உந்தி - அனுபவிக்கத் தக்க திரு உந்தி. [2]'உந்தி மேலது அன்றோ' என்னக்கடவதன்றோ? (6)

845

**செவ்வாய் உந்திவெண் பல் சுடர்க்குழை தம்மோடு**
**எவ்வாய்ச் சுடரும் தம்மில்முன் வளாய்க்கொள்ளச்**
**செவ்வாய் முறுவலோடு எனது உள்ளத்து இருந்த**
**அவ்வாய் அன்றியான் அறியேன்மற்று அருளே.**

**பொ - ரை :** சிவந்த திருவாயும் வெண்மை பொருந்திய பற்களும் பிரகாசம் பொருந்திய மகரகுண்டலமும் இவற்றோடு மற்று எல்லா உறுப்புகளினுடைய பிரகாசமும் தம்மில் தாம் முற்பட்டுச் சூழ்ந்துகொள்ள, சிவந்த திருவாயின் புன்சிரிப்போடு எனது உள்ளத்திலே இருந்த அந்தத் தன்மையை அன்றி வேறு ஒரு தன்மையை யான் அறியேன்.

**வி - கு :** வளாய்க்கொள்ளல் - சூழ்ந்துகோடல். 'மற்று அருளை யான் அறியேன்' எனக் கூட்டுக.

---

1. வேப்பங்குடி நீர் - வேப்பஞ்சாறு; கஷாயம். இது, குறிப்பு மொழி. இங்கு இனிமையைக் காட்டுகிறது.

2. திருவுந்தி அனுபவிக்கத் தகுந்தது என்பதற்கு மேற்கோள் காட்டுகிறார், 'உந்தி' என்று தொடங்கி. இது, **'அமலன் ஆதி பிரான்'**, 3.

**ஈடு:** ஏழாம் பாட்டு. [1]அவன், தம்மோடு கலந்த கலவியாலே உவகையனாய், அது தன் பேறாக முறுவல் செய்த திருப்பவளத்தை அனுபவித்துப் பிரீதர் ஆகிறார்.

செவ்வாய் உந்தி வெண்பல் சுடர்க்குழைதம்மோடு - சிவந்த திரு அதரம், திரு உந்தி, வெளுத்த திருமுத்து, புகரையுடைத்தான திருமகரக்குழை இவற்றோடே கூட. எவ்வாய்ச் சுடரும் - மற்றும் எல்லா இடத்திலும் உண்டான ஒளியும். வாய் - இடம். தம்மில் முன் வளாய்க்கொள்ள - ஒன்றற்கு ஒன்று [2]'நான், நான்' என்று தம்மில்தாம் முற்பட்டு வளைத்துக்கொள்ள. அதாவது, 'நான் நான் என்பதற்காக முற்பட்டு வளைத்துக்கொள்ள' என்னுதல்; அன்றிக்கே, 'முற்பட்டு என்னை வளைத்துக்கொள்ள' என்னுதல். செவ்வாய் முறுவலோடு எனது உள்ளத்து இருந்த - [3]'பேசாதவன், விருப்பமற்றவன்' என்று இருக்கக் கூடிய பரம்பொருள், இவரைப் பெற்று, இது தன் பேறு என்று தோற்ற முறுவல் செய்திருந்தபடி. [4]பூ அலரும் போது எங்கும் ஒக்க செவ்வி பிறக்குமாறு போலே, திவ்விய அவயவங்கள்தோறும் ஒரு வேறுபாடு பிறக்கும் படி ஆயிற்றுப் புன்முறுவல் பூத்தது. அவ்வாய் அன்றி - அவ்விடம் அன்றி. என்றது, 'புன்முறுவல் செய்துகொண் டிருந்த இருப்பு அல்லது' என்றபடி. [5]'புன்சிரிப்பை

---

1. 'செவ்வாய் முறுவலோடு' என்பது போன்றவைகளைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'நான் நான் என்று தம்மில்தாம் முற்பட்டு வளைத்துக் கொள்ள' என்றதனை இரண்டு வகையாக அருளிச்செய்கிறார்: முதல் வகையில் 'தம்மில்முன்' என்பதனை ஒரு சொல் நீர்மைய தாகக் கொள்க. 'தம்மில்தாம் முற்பட்டு, பரஸ்பரம் வளைத்துக் கொள்ள' என்றபடி. இரண்டாவது வகையில் 'தம்மில், முன்' என்பன இரண்டு சொல். 'தங்களிலே முன்பு ஆழ்வாரை வளைத்துக் கொள்ள' என்றபடி. முன் - முன்பு.

3. 'செவ்வாய் முறுவல்' என்றதற்கு பாவம் அருளிச்செய்கிறார் 'பேசாதவன், விருப்பம் அற்றவன்' என்று. 'அவாகீ அநாதர:' என்பது, **சாந்தோக்கிய உபநிடதம்**, 3 : 14.

4. முறுவலின் தன்மையை எடுத்து அருளிச்செய்கிறார், 'பூ அலரும் போது' என்று தொடங்கி.

5. 'செவ்வாய்' என்றும், 'செவ்வாய் முறுவல்' என்றும் கூறியது, கூறியது கூறல் அன்றோ?' என்ன, 'புன்சிரிப்பையுடைய வளானை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

யுடையவளான சீதை' என்று பிராட்டியின் இயற்கையைச் சொல்லி, 'சிரித்துக்கொண்டு' என்றதே அன்றோ, அப்போதை உவகையால் உண்டான வேறுபாடு என்னும் இடம் தோற்ற? மற்று அருள் யான் அறியேன் - மற்று உண்டான அருளை நான் அறியேன். [1]'இதுவே அமையும்; மற்று ஒன்று வேண்டா,' என்கை. (7)

846

**அறியேன்மற்று அருள்என்னை ஆளும் பிரானார்**
**வெறிதே அருள்செய்வர் செய்வார்கட்கு உகந்து**
**சிறியே னுடைச்சிந் தையுள்மூ வுலகும்தம்**
**நெறியா வயிற்றில்கொண்டு நின்றொழிந் தாரே.**

**பொ-ரை:** 'வேறே ஓர் அருளை அறிகின்றிலேன்; என்னை ஆளும் எம்பெருமானார், தாம் திருவருள் செய்ய நினைத்தவர்கட்கு மனம் உவந்து காரணம் இல்லாமலே திருவருள் செய்வர்; மூன்று உலகங்களையும் தம்முடைய வயிற்றிலே முறைப்படி வைத்துக் கொண்டு, சிறியேனாகிய என்னுடைய மனத்திலே நிலைபெற்று நின்றுவிட்டார்.

**வி-கு:** 'பிரானார் செய்வார்கட்கு உகந்து வெறிதே அருள் செய்வர்' என்றும், 'மூவுலகும் தம் வயிற்றிலே நெறியாகக் கொண்டு சிறியேனுடைச் சிந்தையுள் நின்றொழிந்தார்' என்றும் கூட்டுக. வெறிது - நிர்ஹேதுகம் - காரணம் இல்லாமல். நின்றொழிந்தார் - ஒரு சொல்.

**ஈடு:** எட்டாம் பாட்டு. [2]அவன் தம்மோடே வந்து கலக்கைக்கு அடி அவனுடைய திருவருள் காரணம் என்கிறார்.

---

'அஸ்மிந் மயா ஸார்த்தம் உதார ஸீலா
ஸிலாதலே பூர்வம் உபோபவிஷ்டா
காந்தஸ்மீதா லக்ஷ்மண ஜாதஹாஸா
த்வாம் ஆஹ ஸீதா பஹுவாக்யஜாதம்'

என்பது ஸ்ரீராமா. ஆரண். 63 : 12. அப்படியே இங்கும், 'செவ்வாய்' என்று அதன் இயல்பினைச் சொல்லி, 'செவ்வாய் முறுவல்' என்று இவரைப் பெற்ற பிரீதியாலே உண்டான புன்முறுவலைக் கூறுகிறது.

1. இதனால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார், 'இதுவே' என்று தொடங்கி.

2. 'வெறிதே அருள்செய்வர்' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

மற்று அருள் அறியேன் - வேறு ஓர் அருளும் அறியேன். என்னை ஆளும் பிரானார் - என்னை அடிமை கொள்ளுகிற உபகாரகரானவர். வெறிதே அருள் செய்வர் - நிர்ஹேதுகமாகத் திருவருள் செய்வர். 'யாருக்கு?' என்னில், செய்வார்கட்கு - [1]"எவனைப் பரம்பொருள் விரும்புகிறானோ' என்கிறபடியே, தாம் அங்கீகரிக்க நினைத்தார்க்கு. [2]'தாம் தாம் ஒன்று செய்வார்க்கு என்னில், 'வெறிதே' என்னக்கூடாதே அன்றோ? ஆயினும், ஒரு காரணம் வேண்டாவோ அருள் செய்வதற்கு?' என்னில், ஈஸ்வரனுடைய உகப்பே ஆயிற்றுக் காரணம்: [3]'விரும்பப்படுவான் அன்றோ பற்றப்படுவான் ஆகிறான்?' என்னக் கடவது அன்றோ? [4]ருசி உண்டானாலும், இவன் அறிவுடையவன் என்னும் வாசிக்கு அறிவின் காரியமான தன்மை என்று அதனைக் கொள்ளலாமித்தனை அல்லது, பேற்றுக்குச் சாதனமாகச் சொல்ல ஒண்ணாதே அன்றோ? 'காரணம் இல்லாமலே செய்யப்படும் அருளை இப்படி வேறு எங்கே கண்டீர்?' என்ன, புறம்பு தேடிப் போக வேண்டுமோ? சிறியேனுடைச் சிந்தையுள் - மிகச் சிறியேனான என்னுடைய மனத்துக்குள்ளே. மூன்று உலகும் தம் வயிற்றில் நெறியாக் கொண்டு நின்றொழிந்தார் - [5]உடையவன் உடைமையை நோக்குவது முறையா

---

1. 'யமே வைஷ வ்ருணுதே' என்பது, கடவல்லி உப. 2.

2. ''செய்வார்க்கு' என்பதற்கு, 'ஒரு சாதனத்தைச் செய்து அதனாலே அருளைப் பெறுதற்குத் தகுதியானவர்கட்கு' என்று பொருள் கூறின் என்?' எனின், 'தாம் தாம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'வெறிதே அருள் செய்வர்' என்று இவ்வர்த்தத்தை ஸ்பஷ்டமாக அருளிச் செய்தாரிறே; செய்வார்க்கு' என்று அருளுக்கு ஹேது ஸுக்ருதம் என்னா நின்றதே?' எனின், 'அப்போது வெறிதே என்கிற இடம் சேராது' என்ற ஸ்ரீ வசநபூஷண ஸ்ரீ சூக்தி (4 . 399.) இங்கு நினைக்கத் தகும்.

3. ஈஸ்வரனுடைய உகப்பே அங்கீகாரத்துக்குக் காரணம் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'விரும்பப்படுவான்' என்று தொடங்கி.

'ப்ரியதம ஏவ ஹி வரணீயோ பவதி' என்பது, ஸ்ரீ பாஷ்யம்.

4. 'அவன் அருள் செய்வது கேவலம் நிர்ஹேதுகம் என்னலாமோ? ருசி முதலானவைகளைச் சாதனமாகக் கொண்டாலோ?' எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'ருசி' என்று தொடங்கி.

5. 'மூன்று உலகங்களையும் வயிற்றில் கொண்டது முறையோ?' என்னு, 'உடையவன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்

லேயாய் இருக்குமன்றோ? தம்மாலே பாதுகாக்கப்படுகின்ற பொருள்களை முறையாலே நோக்குகிறவர், என்னுடைய மனத்திலே பொருந்தி முறை கெடப் பரிமாறாநின்றார். [1]தம்மைச் சிறுமைக்கு எல்லையாக நினைத்தபடியாலே முறை கேடாகத் தோற்றாநின்றதாயிற்று இது. [2]அவன் இதுவரை மூவுலகுக்கும் அவ்வருகாக நினைத்திரா நின்றான்; இவர், தம்மை மூவுலகங்கட்கும் இவ்வருகாக நினைத்திராநின்றார். (8)

847

**வயிற்றில் கொண்டுநின் றொழிந்தாரும் யவரும்**
**வயிற்றில் கொண்டுநின்று ஒருமூ வுலகும்தம்**
**வயிற்றில் கொண்டுநின்ற வண்ணம்நின்ற மாலை**
**வயிற்றில் கொண்டுமன்ன வைத்தேன் மதியாலே.**

பொ - ரை: காப்பாற்றும் தொழிலிலே தலைநின்ற அரசர்களையும், அவர்களைக்காட்டிலும் மேன்மை பொருந்திய பிரமன் முதலாயினோரையும், இவர்களை எல்லாம் தமக்குள்ளே கொண்டிருக்கிற மூன்று உலகங்களையும் தம்முடைய திருவுள்ளத்தாலே நடத்திக்கொண்டு ஒரு விகாரமும் இன்றிக்கே நின்ற சர்வேஸ்வரரை, அவர் தந்த அனுமதியாலே என் மனத்திலே நிலைபெறும்படி வைத்தேன்.

வி - கு: 'நின்றொழிந்தாரும்' என்றது, 'நின்றவர்களும்' என்றபடி. 'நின்ற ஒரு மூவுலகும்' என்க. 'மாலை மதியாலே மன்ன வைத்தேன்' என்க.

ஈடு: ஒன்பதாம் பாட்டு. [3]'இப்படி அவன் அங்கீகரித்ததற்கு நீர் செய்தது என்?' என்னில், 'அனுமதி மாத்திரம் செய்தேன் இத்தனை,' என்கிறார்.

---

செய்கிறார். 'முறையாலேயாய் இருக்குமன்றோ?' என்பதனைப் பின்னே வருகின்ற 'முறை கெடப் பரிமாறாநின்றார்' என்றதனோடே கூட்டுக. முறை கெடப் பரிமாறுகையாவது, இவரைச் சேஷியாக வைத்து, தான் சேஷனாக இருந்து பரிமாறுகை.

1. 'அடியவனை ஆண்டான் அங்கீகரிப்பது முறை கேடோ?' என்ன, 'தம்மை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. 'ஆயின், அவன் படி யாது?' என்ன, 'அவன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. 'மதியாலே மன்ன வைத்தேன்' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

வயிற்றில் கொண்டு நின்றொழிந்தாரும் - [1] தாயானவள் குழந்தையை வயிற்றிலே வைத்து நோக்குமாறு போலே, உலகத்தைப்பாதுகாக்கும் அரசர்கள் முதலாயினோர்களை யும். யவரும் - இந்த [2] அரசர்கள்தங்களையும் நோக்கிக் கொண்டு போருகிற அந்தணர் முதலாயினோர்களையும். வயிற்றில்கொண்டு நின்ற ஒரு மூன்று உலகும் - அந்தணர் முதலாயினோரையும் அரசர் முதலாயினோரையும் தன்னுள்ளே கொண்டு இருந்துள்ள மூன்று உலகங்களையும். தம் 'வயிற்றில் கொண்டு - தம்முடைய நினைவில் ஆயிரத்தில் ஒரு கூற்றிலே நடத்திக்கொண்டு என்னுதல். அன்றிக்கே, 'வயிற்றில் கொண்டு நின்றொழிந்தாரையும் யவரையும் தம் வயிற்றிற்கொண்டு, நின்ற ஒரு மூவுலகையும் தம் வயிற்றிற்கொண்டு' என்று பிரித்துச்சொல்லுதல். நின்ற வண்ணம் நின்ற மாலை - இவற்றை அடையத் தன் வயிற் றில் கொண்ட இடத்திலும், ஒரு விகாரம் இன்றிக்கே நின்ற சர்வேஸ்வரனை. வயிற்றில் கொண்டு மன்ன வைத்தேன் - உலகத்தையுடையனை சர்வேஸ்வரனை என்னுடைய மனத்திலே பேராதபடி வைத்தேன். மதியாலே - இதற்கு, 'இவன் படியை அறிந்துகொண்டேன் என்கிறார்' என்று **அம்மாள்** பணிப்பர். அன்றிக்கே, 'மதி - அனுமதி' என்று ஆக்கி [3] 'அனுமதி மாத்திரத்தாலே' என்பர் **பட்டர்**. என்றது, 'அவன் புகுகிற இடத்தில் விலக்கிற்றிலன்' என்றபடி. (9)

---

1. 'வயிற்றில் கொண்டு' என்ற அடைமொழிக்கு பாவம் அருளிச்செய்கிறார், 'தாயானவள்' என்று தொடங்கி.

2. 'அரசர்கள்தங்களையும் நோக்கிக்கொண்டு போருகிற அந்தணர்' என்றது, வசிஷ்டபகவான், இக்ஷ்வாகு வமிசத்தில் அரசர் களைத் தம்முடைய தவ வலிமையாலே நோக்கிக்கொண்டிருந்தமை யைத் திருவுள்ளம் பற்றி.

'எந்தை நீ உவந்து இதம்சொல் எம்குலத்து அரசர்
அந்த மில்அரும் பெரும்புகழ் அவனியில் நிறுவி
முந்து வேள்வியும் முடித்துத்தம் இருவினை முடித்தார்
வந்தது அவ்வருள் எனக்கும்என்று உரைசெய்து மகிழ்ந்தான்.'

என்பது **கம்பராமாயணம்**. 'முதலாயினோர்' என்றது, தேவர்களை.

3. 'மதியால் இசைந்தோம் என்னும் அனுமதி இச்சைகள் இருத்துவம் என்றது என்னை இசைவித்த என் இசைவினது' என்ற ஸ்ரீ சூக்தியின் பொருள் இங்கு அறியத்தகும். (**ஆசார்ய ஹ்ருதயம்**, 2 : 110)

848

**வைத்தேன் மதியால் எனதுஉள்ளத்து அகத்தே**
**எய்த்தே ஒழிவேன்அல் லேன்என்றும் எப்போதும்**
**மொய்த்துஏய் திரைமோது தண்பாற் கடலுளால்**
**பைத்துஏய் சுடர்ப்பாம்பு அணைநம் பரனையே.**

பொ - ரை : செறிந்து பொருந்திய அலைகள் மோதுகின்ற குளிர்ந்த திருப்பாற்கடலிலே, படத்தையுடைய ஒளி பொருந்திய பாம்பினைப் படுக்கையாகக் கொண்டு அறிதுயில் செய்கிற நம் மேலானவனை, என் மனத்திலே மதியாலே வைத்தேன் ; இனி, எக்காலத்தும் எந்நேரத்தும் பிரிந்து தளரக் கடவேன் அல்லேன்.

வி - கு : எய்த்தல் - தளர்தல். பை - படம். 'பரனை வைத்தேன்' என்க.

ஈடு : பத்தாம் பாட்டு. [1]'எம்பெருமான் தன் உடைமைப் பொருள்களோடு என் உள்ளே புகுந்தான் ; அவனை நான் இனி ஒரு நாளும் பிரிந்து துக்கப்படேன்,' என்கிறார்.

மதியால் எனது உள்ளத்து அகத்தே வைத்தேன் - அநுமதியாலே என் நெஞ்சினுள்ளே வைத்தேன் : [2]ஓர் அநுமதி மாத்திரத்திற்கு இத்தனை பலம் உண்டாவதே! எய்த்தே ஒழிவேன் அல்லேன் - இனி ஒரு நாளும் இளைத்துத் துக்கப்படக்கடவேன் அல்லேன். 'இந்த வார்த்தை எத்தனை குளிக்கு நிற்கும் ?' என்ன, என்றும் எப்போதும் - எல்லா நாள்களிலும் எல்லா நிலைகளிலும். மொய்த்து ஏய் திரை மோது தண் பாற்கடலுள் - திரண்டு தகுதியான திரைகள் மோதாநின்றுள்ள சிரமத்தைப் போக்கத் தகுந்த திருப்பாற்கடலிலே. [3]சிறு திவலை படிலும் 'மோதிற்று' என்னும்படி அன்றோ சௌகுமார்யம் இருப்பது ! பைத்து ஏய் சுடர்ப் பாம்பு அணை - திரைகள் வந்து திருமேனியில் படாதபடி மலர்ந்த படங்களையுடையனாய், பகவானுடைய அநுபவத்தால் வந்த தகுதியான புகரையுடையனான திருவனந்தாழ்வான் மேலே திருக்கண் வளர்ந்தருளுகையால் உண்டான

---

1. 'பாம்பணை நம்பரனை எனது உள்ளத்து அகத்தே வைத்தேன் மதியால், எய்த்தே ஒழிவேன் என்றும் எப்போதும்' என்பதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'மன்ன வைத்தேன் மதியால்' என்று மேலே கூறியவர், மீண்டும் 'வைத்தேன் மதியால்' என்று அருளிச்செய்ததற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'ஓர் அநுமதி' என்று தொடங்கி.

3. ''ஏய்திரை' என்றவர், 'மோது' என்னலாமோ?' என்ன, 'சிறு திவலை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். ஏய்திரை - தகுந்த அலை.

ஏற்றத்தையுடையவன். நம் பரனை - அந்த ஏற்றத்தை நமக்கு வெளியிட்டுத் தந்தவனை. 'வைத்தேன் மதியால் எனது உள்ளத்து அகத்தே, எய்த்தே ஒழிவேன் அல்லேன் என்றும் எப்போதும்,' என்றது, [1]அரவத்து அமளியினோடும் அழகிய பாற்கடலோடுங்காணும் இவர் திருவுள்ளத்திலே புகுந்து இருந்தது' என்றபடி. (10)

849

**சுடர்ப்பாம்பு அணைநம் பரனைத் திருமாலை**
**அடிச்சேர் வகைவண் குருகூர்ச் சடகோபன்**
**முடிப்பான் சொன்னஆ யிரத்துஇப்பத் தும்சன்மம்**
**விடத்தேய்ந்து அறநோக்கும் தன்கண்கள் சிவந்தே.**

**பொ - ரை:** ஒளி பொருந்திய பாம்பாகிய படுக்கையையுடைய நம் பரனாகிய திருமகள் கேள்வனுடைய திருவடிகளைச் சேர்கின்ற வகையை, வளப்பம் பொருந்திய திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீ சடகோபர், முடிப்பான் அருளிச்செய்த ஆயிரம் திருப்பாசுரங்களிலே இப்பத்துத் திருப்பாசுரங்களும், பிறவியானது அடியோடு தேய்ந்து மாயும்படியாகக் கண்கள் சிவந்து நோக்கும்.

**வி - கு:** 'இப்பத்தும் தன் கண்கள் சிவந்து சன்மம் அறத் தேய்ந்துவிட நோக்கும்,' என்க.

**ஈடு:** முடிவில், [2]'இப்பத்தானது, தன்னைக் கற்றவர்களுடைய பிறவிக்குத் திட்டி விடம்,' என்கிறார்.

சுடர்ப்பாம்பு அணை நம் பரனைத் திருமாலை - [3]இப்பத்தும் கற்றார்க்குப் பிறவி அறுகையன்றோ பலமாகச்

---

1. 'பாம்பு அணை நம் பரனை' என்றதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'அரவத்து' என்று தொடங்கி. இது, பெரியாழ்வார் **திருமொழி.**

2. 'சன்மம் தேய்ந்து அற, கண்கள் சிவந்து நோக்கும் விடம்' என்பதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். 'அவதாரிகையையும் வியாக்கியானத்தையும் நோக்குமிடத்து, இப்பத்தும், சன்மம் தேய்ந்து அறத் தன் கண்கள் சிவந்து நோக்கும் விடம்' என்று கொண்டு கூட்டிப் பொருள் அருளிச்செய்கிறார் எனத் தோற்றுகிறது. நோக்கும் விடம் - திட்டி விடம், 'திட்டிவிடம்' என்பது, கண்ணில் விடமுடையதொரு பாம்பு. இதன் விழிக்கு எதிர்ப்பட்டோர் இறப்பர். இது, 'அழற்கண் நாகம், நஞ்சுவிழி அரவம்' எனவும் வழங்கப்படும். மணிமேகலை, பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை, 48-50 ஆம் அடிகளைப் பார்க்க. 'திட்டியின் விடமன்ன கற்பின் செல்வியை, விட்டிலையோ இது விதியின் வண்ணமே' என்பது கம்பராமாயணம், கும்பகர்ணன் வதைப்படலம், செய். 80.

3. பிறவிக்கு இப்பத்தும் திட்டிவிடம் என்று சொல்லும் பிரகரணத்திலே 'சுடர்ப்பாம்பணை நம்பரனைத் திருமாலை' என்று விசே

சொல்லுகிறது? அதனால் சென்று அனுபவிக்கும் பேற்றினைச் சொல்லுகிறது; பரியங்கவித்தையிற்சொல்லுகிறபடியே திருவனந்தாழ்வான் மடியிலே பெரிய பிராட்டியாரோடே எழுந்தருளியிருக்கக் கண்டு அனுபவிக்கை அன்றோ முத்தனாலே அடையப்படுகின்ற இன்பந்தான்? [1]அடிச்சேர் வகை வண் குருகூர்ச் சடகோபன் - திருவடிகளில் சேருகையே தமக்குச் சுபாவமாகவுடைய ஆழ்வார். அன்றிக்கே, 'அடிச்சேர் வகை முடிப்பான்' என்றுமாம். [2]ஞான ஆனந்தங்கள் அன்று இவருக்கு நிரூபகம்; அடிமையே ஆயிற்று. முடிப்பான் சொன்ன ஆயிரத்து இப்பத்து - சம்சார சம்பந்தத்தை அறுக்கைக்காகச் சொன்ன ஆயிரத்து இப்பத்தும். சன்மம் தேய்ந்து அற நோக்கும் - பிறவியானது விட்டுப் போம்படியாக நோக்கும். அது செய்யுமிடத்தில், தன் கண்கள் சிவந்து நோக்கும் விடம் - அதாவது, 'பிறவிக்கு இப்பத்தும் திட்டிவிடம்,' என்கை. என்றது, 'இப்பத்துக்கும் பிறவிக்கும் ஒரே இடத்தில் இருக்கக் கூடிய தன்மையில் விரோதம் உண்டு' என்றபடி. (11)

## திருவாய்மொழி நூற்றந்தாதி

**இருந்தவன் தான் வந்து இங்கு இவர்எண்ணம் எல்லாம்**
**திருந்தஇவர் தம்திறத்தே செய்து—பொருந்தக்**
**கலந்துஇனிய னாய்நிற்கக் கண்டசட கோபர்**
**கலந்தநெறி கட்டுரைத்தார் கண்டு.** (77)

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

டித்துக் கூறுவதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'இப்பத்தும்' என்று தொடங்கி. பரியங்க வித்தையை, திருவாய்மொழி 'அணைவது அரவணை' என்ற பாசுர வியாக்கியானத்திற்காணல் தகும்.

1. 'அடிச்சேர் வகை' என்பதற்கு இரு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார்: முதல் வகை, 'அடிசேர் வகையையுடைய சடகோன்' என்று சடகோபருக்கு அடைமொழி. வகை - சுபாவம், தன்மை. 'அடிசேர் வகையை முடிப்பான் சொன்ன ஆயிரத்து இப்பத்து' என்பது இரண்டாவது வகை. 'திருவடிகளிலே சேரும் வகையை முடித்துக்கொள்ளுவதற்காகச் சொன்ன ஆயிரம்' என்பது பொருள். இந்த இரண்டு வகையான கருத்தையும் முறையே அருளிச்செய்கிறார், 'திருவடிகளில்' என்று தொடங்கியும், 'அன்றிக்கே' என்று தொடங்கியும்.

2. 'அடிசேர் வகை' என்றதனால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார், 'ஞான ஆனந்தங்கள்' என்று தொடங்கி.

## எட்டாந்திருவாய்மொழி - 'கண்கள் சிவந்து'

### முன்னுரை

**ஈடு :** [1]' 'மாயக் கூத்தா' என்னும் திருவாய்மொழியில் இவர்க்கு ஓடின விடாய் எல்லாம் ஆறும்படி 'இருத்தும் வியந்து' என்ற திருவாய்மொழியிலே வந்து கலந்து, இவர் விடாயும் தீரத் தன் விடாயும் தீர்ந்து, இவரைப் பெற்ற பேற்றினாலே பிரீதனாய், நினைவு இன்றிக்கே இருக்கச் செய்தே இங்ஙனே சேர விழுந்தது. 'யாங்ஙனம் விழுந்தது?' எனின், 'இனி, உண்டான கலவி உலைய ஒண்ணாது; [2]இவர் ஆகிறார், 'வளவேழ் உலகின்' என்ற திருவாய்மொழியைப் பாடின ஆழ்வார் ஆயிற்று; நாம் கிட்டக் கொள்ளச் 'சிறியேனுடைச்சிந்தையுள்' என்று தம் தாழ்வினை நினைத்தவர், இன்னம் அது பின் நாட்டி அகலப் பார்ப்பர்; அங்ஙனம் அகலப் பார்ப்பதற்கு முன்னே அதனை நீக்க வேண்டும்' என்று பார்த்து, [3]'இனி இவர் தாம் அகலப் பார்ப்பதும் 'அநாதிகாலம் சம்சாரத்தில் உழன்று போந்த ஆத்மவஸ்து அங்குத்தைக்கு இனியது அன்று' என்று ஆயிற்று; இது அங்ஙன் அன்று, வந்தேறியான இதனைப் பாராமல் [4]அடியைப் பாரீர்' என்று, 'இந்த ஆத்மவஸ்துவினுடைய சிறப்பினை இவர் நெஞ்சிலே படுத்த வேண்டும்' என்று பார்த்தான்; அங்ஙனம் பார்த்து, [5]'என்

---

1. இத்திருவாய்மொழி ஆத்தும சொரூபத்தின் வைலக்ஷண்யத்தைச் சொல்லுகிறது. 'அங்ஙனமாயின், முன்னும் பின்னும் பகவானைப் பற்றிய விஷயமாக இருக்க, இத்திருவாய்மொழியில் ஆத்துமசொரூப வைலக்ஷண்யத்தைச் சொல்லுகிறதற்குக் காரணம் என்?' என்கிற சங்கையிலே இயைபு அருளிச்செய்கிறார், 'மாயக் கூத்தா' என்று தொடங்கி.

2. உண்டான கலவி உலைவதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார், 'இவராகிறார்' என்று தொடங்கி. 'சிறியேனுடைச் சிந்தையுள்' என்று தம் தாழ்வினை நினைத்தவர் என்றது, 'இருத்தும் வியந்து' என்ற திருவாய்மொழியிலே நினைத்தவர்' என்றபடி.

3. அதனை நீக்கும் விதத்தை அருளிச்செய்கிறார், 'இனி இவர் தாம்' என்று தொடங்கி.

4. 'அடியைப் பாரீர்'என்றது, இவ்வாத்தும வஸ்துவிற்கு இயல்பாகவே அமைந்துள்ள தன்மையைப் பாரீர்,' என்றபடி.

5. 'அடியைப் பாரீர்' என்றதனை விவரணம் செய்கிறார், 'என்றும் உள்ளதாய்' என்று தொடங்கி. கௌத்துவம் என்பது, இறைவன் திருமார்பிலே அணிந்துள்ள ஒரு மணி விசேடம். நிறமாம் - ஒளியைத் தருவனவாம்.

றும் உள்ளதாய், ஞான ஆனந்த லக்ஷணமாய், நமக்கே உரிய அடிமையாய்க்காணும் இருப்பது; நீர் கிட்டுமது நமக்குத் தாழ்வு அன்று; கௌத்துவத்தைப் போன்றும் பிராட்டிமாரைப் போன்றும் நமக்கு நிறமாமித்தனே' என்று இவருடைய சொரூபத்தின் சிறப்பினை இவர் நெஞ்சிலே படுத்துகிறான்.

[1]'அங்ஙனம் படுத்துமிடத்து 'உம்முடைய ஆத்தும சொரூபம் இருக்கும்படி காட்டுவதற்கு வாரீர்' என்றால், 'மின்மினிபோலே இருக்கிற இதில் சரக்கு என்?' என்று இசைவார் ஒருவர் அல்லர் இவர்; [2]'அவ்வாய் அன்றி யான் அறியேன் மற்று அருள்' என்று நம் வடிவழகிலே துவக்குண்டிருப்பது ஒன்று உண்டு; ஆதலால், நம் வடிவினைக் காட்டி அதன் மூலமாக நமக்குப் [3]பிரகாரமாக இருக்கிற ஆத்தும சொரூபத்தைக் காட்டிக்கொடுப்போம்' என்று பார்த்து, 'வாரீர், நம்முடைய வடிவழகு இருக்கிறபடி கண்டீரே; [4]நம்மைக் காணும் காட்சியிலே உம்மையும் காணலாய்க்காணும் இருப்பது' என்று தன்னுடைய வடிவழகினை முற்பட அனுபவிப்பித்து, தனக்கு [5]நூபுரம் முதலியவைகளைப் போன்று மிக இனிய பொருளுமாய்த் தனக்கே அடிமையுமாய் இருக்கிற ஆத்தும சொரூபத்தினைக் காட்டிக்கொடுக்க, அதனை அனுபவித்து இனியர் ஆகிறார்.

இத்திருவாய்மொழியில், முதல் இரண்டரைப் பாசுரங்களாலே, தன்னை அனுபவிப்பித்து, பின்னர் ஆத்தும சொரூ

---

1. 'நன்று ; அங்ஙனமாயின், முதற்பாசுரத்திலேயே ஆத்தும சொரூபத்தினைப் பற்றிக் கூறாமல், மூன்றாவது பாசுரத்தில் கூறுவதற்குக் காரணம் என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'அங்ஙனம்' என்று தொடங்கி. 'மின்மினி போலே இருக்கிற இதில்' என்றது 'மின்மினியைப் போன்று சிற்றின்பமாய் இருக்கிற இந்தக் கைவல்யத்தில்' என்றபடி.

2. 'அவ்வாய்' என்பது, திருவாய். 8. 7 : 7.

3. பிரகாரமாக - விசேஷணமாக, சரீரமாக.

4. 'நம்மைக் காணும் காட்சியிலே' என்று தொடங்கும் வாக்கியத்துக்குக் கருத்து, 'நம்முடைய விக்கிரஹம் முதலியனவற்றைப் போன்று உம்முடைய ஆத்துமாவும் நமக்குப் பரதந்திரமான தன்மையாலே இனிய பொருளாக இருக்கும்,' என்பது.

5. 'மேலே 'கௌத்துபத்தைப் போன்றும்' என்றார்; இங்கே 'நூபுரம் முதலியவைகளைப் போன்று' என்கிறார், 'கருத்து என்?' எனின், அங்குக் காதல் காரணமாக வந்த ஈஸ்வர அபிப்பிராயத்தாலே அருளிச்செய்தார்; ஆத்துமசொரூபத்தின் தன்மையால் வந்த ஆழ்வார் அபிப்பிராயத்தாலே அருளிச்செய்கிறார் இங்கு.

பத்தைக் காட்டிக் கொடுத்தானுய் இருக்கும். [1]'அதற்கு அடி என்?' என்னில், 'ஆத்துமவஸ்துவானது சர்வேஸ்வரனுகிய தன்னைப் பற்றி அல்லது இராமையாலே பற்றுக்கோடான தன்னைக் காட்டி, பின்பு சொரூபத்தைக் காட்டிக் கொடுக்கிறுன்,' என்பாரும் உளர். அன்றிக்கே, 'சொரூபம் இருக்கும்படியைக் காட்டித் தருதற்கு வாரும் என்றுல் இசையார் என்று தன்னை முற்படக் காட்டிக்கொடுக்கிறுன்' என்பாரும் உளர். அன்றிக்கே, 'இரண்டரைப்பாசுரங்களாலும், 'இருத்தும் வியந்து' என்னும் திருவாய்மொழியிற் கூறிய கலவி பின் நாட்டுகிறது' என்பாரும் உளர்.

850

கண்கள் சிவந்து பெரியஆய்
வாயும் சிவந்து கனிந்துஉள்ளே
வெண்பல் இலகு சுடர்இலகு
விலகு மகர குண்டலத்தன்
கொண்டல் வண்ணன் சுடர்முடியன்
நான்கு தோளன் குனிசார்ங்கன்
ஒண்சங் கதைவாள் ஆழியான்
ஒருவன் அடியேன் உள்ளானே.

பொ - ரை: திருக்கண்கள் செந்நிறத்தை அடைந்து பெருத்திருப்பனவாக, திரு அதரமும் சிவந்து கனிந்திருக்க, உள்ளே வெள்ளிய பற்களினுடைய விளங்குகின்ற பிரகாசத்தையும், விளங்கி அசைகின்ற மகரகுண்டலத்தையுமுடையவனும், மேகம் போன்ற திருநிறத்தையுடையவனும், ஒளி வீசுகின்ற திருமுடியையுடையவனும், நான்கு தோள்களையுடையவனும், வளைந்த வில்லையுடையவனும், பிரகாசம் பொருந்திய சங்கு கதை வாள் சக்கரம் என்னும் இவற்றை உடையவனுமான ஒப்பற்ற எம்பெருமான் அடியேன் மனத்திலே எழுந்தருளியிருக்கிறுன்.

வி - கு: 'சங்கு கதை' என வரற்பாலது 'சங்கதை' என வந்தது விகாரம். இத்திருவாய்மொழி, **அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.**

ஈடு: முதற்பாட்டு. [2]அவன், தம்முடைய் கல்வியாலே புதுக்கணித்த தெய்வத்தன்மையுடைய வனப்பு முதலான

---

1. 'அதற்கு அடி என்? என்னில்' என்பது, 'ஆத்தும சொரூபத்தின் சிறப்பினைக் காட்டுகிற இடத்திலே முதல் இரண்டரைப் பாட்டுகளாலே அனுபவிப்பிக்கைக்கு அடி என் என்னில்' என்றபடி.

2. பாசுரம் முழுதினையும் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறுர்.

வைகளோடே 'என்னுடைய மனத்திலே புகுந்திருந்தான்' என்கிறார். [1]நம் ஆழ்வார்கள் வடிவழகிற்கு அவ்வருகு சொரூப குணங்களில் இழிய மாட்டார்கள்: [2]திவ்விய விக்கிரகத்தைப் பற்றுக்கோடாகப் பற்றின பின்னை அவ்வருகு போவான் என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன; இதனை விட்டுப்போகச் சொல்லுகின்றன அல்ல: [3]சொரூப குணங்களும் உபாசிக்கத் தக்கவை என்கைக்காகச் சொல்லுகிறது. [4]அவன்தன்னோடு பிராட்டிமாரோடு அடியார்களோடு வாசி இல்லை; எல்லார்க்கும் விரும்பத்தக்கதாய் இருக்குமாயிற்றுத் திருமேனி.

கண்கள் சிவந்து - [5]'சூரியனைக் கண்டு மலர்கின்ற தாமரை மலர் எவ்வண்ணம் இருக்குமோ, அவ்வண்ணமே, அந்தப் பரம்பொருளினுடைய திருக்கண்களும்' என்கிறபடியே, இறைவனுடைய கண்கள் சிவந்திருக்குமே அன்றோ? [6]இப்படி இருக்கச் செய்தே 'மாயக்கூத்தா' என்ற திருவாய்மொழியில் பிரிவினாலே வெண்ணிறத்தை அடைந்தது,

---

1. 'சொரூப குணங்களை விட்டு விக்கிரகத்தை அனுபவிப்பான் என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'நம் ஆழ்வார்கள்' என்று தொடங்கி.

2. 'விக்கிரகத்தை விட்டுச் சொரூப குணங்களிலே போவான் என்று சாஸ்திரம் சொல்லாநின்றதே?' எனின், 'திவ்விய விக்கிரகத்தை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. 'ஆயின், எதற்காகச் சொல்லுகிறது?' என்ன, 'சொரூப குணங்களும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. 'விக்கிரகமானது பிராட்டிமார்க்கு ஒழிய அடியார்கட்கு விரும்பக் கூடியதாக இருக்குமோ?' என்ன, 'அவன் தன்னோடு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. இயற்கையிலே சிவந்திருக்கும் திருக்கண்களை இப்போது 'சிவந்து' என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'சூரியனை' என்று தொடங்கி.

'தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகம் ஏவம் அக்ஷிணீ' என்பது, சாந்தோக்யம், 1 : 6.

6. ''மூவாறு மாசம் மோஹித்து' என்ற இடத்து 'மாயக் கூத்தனில் தாம் கண்ணும் வாயும் துவர்ந்தாற்போலே, தம்மைப் பிரிகையாலே அவன் கண்ணும் வாயும் துவர்ந்து தம்மோடு கலந்த பின்பு அவை தன் நிறம் பெற்றபடியை அநுசந்தித்து, 'ஈதென்ன பிரகாரம்!' என்று ஆறு மாசம் மோஹித்து' என்ற மணவாளமாமுனிகள் வியாக்கியானம் இங்கு அநுசந்திக்கத் தகும். (ஆசார்ய ஹ்ருதயம், சூத். 58.)

'இருத்தும் வியந்து' என்ற திருவாய்மொழியில் கலவியாலே தன் நிறம் பெற்றபடி. [1]கண்ணிலே துவக்குண்டு கால் வாங்க மாட்டாதே இருக்கிற இருப்பு, இசையிலே காணுமித்தனை. பெரிய ஆய் - பெருத்தல் குறைதல் முதலானவைகள் உண்டாகிறதாயிற்று. [2]'எப்பொழுதும் ஒருப்படிப்பட்ட உருவமுடையவன்பொருட்டு' என்கிறது, கர்மம் காரணமாக உண்டாகின்ற விகாரங்கள் இல்லை என்ற இத்தனை ஒழிய, அடியார்களோடு கலக்கின்ற கலவியாலே பிறக்கும் விகாரத்தை இல்லை என்கிறது அன்று; [3]அப்படியேயான அன்று பற்றத்தக்கவன் அல்லனாய் ஒழியுமே. [4]அவனும் தன் அளவிலே வேறுபாடு அடையத் தக்கவன் ஆவன் அன்றோ?

வாயும் சிவந்து - கண்களே அன்றிக்கே, திரு அதரமும் தன் நிறம் பெற்றபடி சொல்லுகிறது. [5]'செவ்வாய், வெண்பல் சுடர்க்குழை' என்றது பின் நாட்டுகிறபடி. கனிந்து - இந்தச் சிவப்பு, தன்னிலே ஊறி நெய்த்துத் தோற்றுநின்றதாயிற்று. உள்ளே - திரு அதரத்தில் சிவப்பை விட்டு, உள்ளே புகுகையில் உண்டான அருமை அடையத் தோற்றுகிறது. வெண்பல் இலகு சுடர் - [6]திரு அதரத்தில் சிவப்புக்குப் பர பாகமான வெண்மையுடைத்தாய், ஒளி நின்று சுழியாநின்றதாயிற்று. இலகு விலகு மகர குண்டலத்தன் - திருக்குழலில் இருட்சிக்குப் பிரகாசகமாய்,

---

1. 'சிவந்து' என்ற எச்சத்துக்கு பாவம் அருளிச்செய்கிறார், 'கண்ணிலே' என்று தொடங்கி.

2. 'பெருத்தல் குறைதல் உண்டானால், 'எப்பொழுதும் ஒரே தன்மையதான உருவமுடையவன்' என்பதனோடு முரண் ஆகாதோ?' எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'எப்பொழுதும்' என்று தொடங்கி. 'ஸதைகரூப ரூபாய' என்பது, ஸ்ரீ விஷ்ணு புரா. 1. 2 : 1.

3. 'அப்படியே ஆனாலோ?' எனின், 'அப்படியேயான' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. 'பெரிய ஆய்' என்றதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'அவனும்' என்று தொடங்கி.

5. ''இருத்தும் வியந்து' என்ற திருவாய்மொழியிற்கூறிய கலவி பின் நாட்டுகிறது' என்று மேலே அருளிச்செய்ததனை விளக்கிக் காட்டுகிறார், 'செவ்வாய்' என்று தொடங்கி.

6. 'உள்ளே' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'திரு அதரத்தில்' என்று தொடங்கி.

அலைந்து வருகின்ற திரு மகர குண்டலங்களையுடையவன். [1]'இக்கலவி நமக்கு உண்டாயிற்றே!' என்று தலை சீய்த்துப் படாநின்றான் போலே. [2]கடல் உடைந்தாற்போலே தன் அளவிலே உவகையன் ஆகாநின்றான். கொண்டல் வண்ணன் - மழைமுகில் போலே வடிவும் குளிர்ந்து கறுத்தது. [3]முன்பு வெண்ணிறத்தையுடையதாப்போலே திருமேனி இருந்தது. சுடர் முடியன் - அழகாலே மற்றைய அழகை எல்லாம் முட்டாக்கிடும் திருமுடியையுடையவன். [4]'மாயக் கூத்தா' என்ற திருவாய்மொழியில் இவர் விடாய் தீர்ந்த பின்பாயிற்று நல் முடியும் தரித்தது. [5]'முடிசேர் சென்னி அம்மா' என்றே அன்றோ கூப்பிட்டது?

நான்கு தோளன் - இவரை அணைத்த பின்பு தோள்கள் பணைத்தபடி. குனி சார்ங்கன் - [6]'மகரகுண்டலத்தன்' என்பது போன்று, இவையும் சில ஆபரணங்கள் இருக்கிறபடி. வீரர்கள் கையில் வில், வினை இல்லாத போதும் வளைந்தே இருக்குமாதலின், 'குனி சார்ங்கன்' என்கிறது. ஒண் சங்கு - [7]'உண்பது சொல்லில்', 'உன் செல்வம் சால அழகியது!' என்னும்படியான ஒண் சங்கு. கதை வாள் ஆழியான் - இவற்றையுடையவன். ஒருவன் - [8]தாமரைக் கண்ணனாய், மழைமுகில் போன்ற நிறத்தையுடையனாய்,

---

1. மகர குண்டலம் அசைவதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார், 'இக்கலவி' என்று தொடங்கி.

2. மேலே கூறியவற்றிற்கு எல்லாம் பாவம் அருளிச்செய்கிறார், 'கடல்' என்று தொடங்கி.

3. இப்போது 'கொண்டல் வண்ணன்' என்பதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'முன்பு' என்று தொடங்கி.

4. இப்போது 'சுடர்முடியன்' என்பதற்கு பாவம் அருளிச் செய்கிறார், 'மாயக் கூத்தா' என்று தொடங்கி.

5. 'இதுதான் இவர் ஆசைப்பட்டபடியே வந்து அனுபவிப்பிப்பதற்குச் சான்றாக உள்ளது' என்கிறார், 'முடிசேர்' என்று தொடங்கி. இது, திருவாய். 8. 5 : 3.

6. ஆபரணங்களோடே ஆயுதங்களைக் கூறுதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'மகரகுண்டலத்தன்' என்று தொடங்கி.

7. 'சங்குக்கு ஒண்மை யாது?' என்ன, 'உண்பது' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இது, நாய்ச்சியார் திரு. 7 : 8.

8. 'ஒருவன் ஆயவாறு யாங்ஙனம்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'தாமரைக் கண்ணனாய்' என்று தொடங்கி.

நான்கு தோளனாய், சங்க சக்கரம் முதலான திவ்விய ஆயுதங்களைத் தரித்தவனாகையாலே ஒப்பற்றவன். அடியேன் - [1]அவனுடைய இறைமைத்தன்மை ஒப்பற்றதாய் இருப்பது போன்று, இவருடைய அடிமையும் ஒப்பற்றது. என்றது, 'சொரூப ஞானத்தால் அன்றிக்கே அழகுக்குத் தோற்று 'அடியேன்' என்கிறார்' என்றபடி. உள்ளானே - [2]புறத்திலே திரியும் மனத்தினை உள் முகம் ஆக்கினவாறே, 'யுவா குமார:' என்று கேட்டே போம் வடிவழகு, வயிரப் பேழை திறந்தாற்போலே அவயவசோபையும் ஆயுத சோபையும் ஆபரண சோபையுமாய் மிளிராநின்ற தாயிற்று. (1)

851

அடியேன் உள்ளான் உடல்உள்ளான்
அண்டத்து அகத்தான் புறத்துஉள்ளான்
படியே இதுஎன்று உரைக்கலாம்
படியன் அல்லன் பரம்பரன்
கடிசேர் நாற்றத் துள்ஆலை
இன்பத் துன்பக் கழிநேர்மை
ஒடியா இன்பப் பெருமையோன்
உணர்வில் உம்பர் ஒருவனே.

பொ - ரை : 'அண்டத்திற்கு உள்ளே இருக்கும் எல்லாப் பொருள்களுக்கும் அந்தரியாமியாய் இருப்பவனும், அண்டத்திற்குப் புறத்திலே இருக்கும் எல்லாப் பொருள்களுக்கும் அந்தரியாமியாய் இருப்பவனும், 'இதுதான் எல்லா வகையாலும் ஒத்த பொருள்' என்று எடுத்துக் கூறத்தக்க உவமையை உடையன் அல்லாதவனும், மேலானவர்களுக்கும் மேலானவனும், புதுமை சேர்ந்த வாசனையிலும் தேனிலும் உள்ள இன்பத்தினுடைய குற்றம் நீங்கின சாரமான பாகம்போல இருக்கிற அழியாத ஆனந்தத்தின் பெருமையையுடையவனும், ஞானத்தில் மேம்பட்டிருக்கின்ற ஒருவனுமான எம்பெருமான், என் ஆத்துமாவிலும் இருக்கிறான்; என் சரீரத்திலும் இருக்கிறான்,' என்றவாறு.

வி - கு : 'உணர்வில் உம்பர் ஒருவன், அடியேன் உள்ளான்; உடல் உள்ளான்' என்று கூட்டுக. படி - ஒப்பு. ஆலை - தேன்; கரும்

---

8. 'ஒருவன்' என்றதனை 'அடியேன்' என்றதனோடு கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார், 'அவனுடைய' என்று தொடங்கி.

1. பாசுரம் முழுதிற்கும் பாவம் அருளிச்செய்கிறார், 'புறத்திலே' என்று தொடங்கி. வயிரப்பேழை - வச்சிரங்கள் இருக்கும் பெட்டி.

புமாம். கரும்பு என்ற பொருளில், ஆகுபெயர்; ரசம் என்பது பொருள். ஒடியாத - அழியாத.

**ஈடு :** இரண்டாம் பாட்டு. [1]'என்னுடைய மனத்திலே புகுந்திருந்த அளவு அன்றிக்கே, என் சரீரத்திலும் புகுந்து கலந்தான்' என்கிறார்.

அடியேன் உள்ளான் - [2]**திருக்கோட்டியூர் நம்பியின்** ஸ்ரீபாதத்திலே ஆறு மாதங்கள் **ஆழ்வான்** சேவித்து நின்று மீளப் புக்கவாறே, '**ஆழ்வான்!** ஆழ்வார் '**அடியேன் உள்ளான்**' என்றபடி கண்டாயே' என்ன, '**கிருதார்த்தன் ஆனேன்**' என்று போந்தாராம். [3]'**என்** உள்ளான் என்ன' வேண்டுமிடத்தில் '**அடியேன் உள்ளான்**' என்கையாலே, 'ஆத்துமாவுக்கு நிரூபகம், ஞானமும் ஆனந்தமும் அன்று;

---

1. 'உடல் உள்ளான்' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. ஆத்துமாவுக்கு ஞான ஆனந்தங்களும் நிரூபகமாக இருக்க, அடிமையை நிரூபகமாகச் சொன்னதற்கு ஐதிஹ்யம் காட்டுகிறார், 'திருக்கோட்டியூர் நம்பி' என்று தொடங்கி. என்றது, 'எம்பெருமானார் கோஷ்டியிலே உபய வேதாந்த கிரந்தங்கள் காலக்ஷேபம் நடவாநிற்கச்செய்தே, 'ஆத்துமாவுக்கு ஞான ஆனந்தங்களும் அடிமையும் நிரூபகமாகச் சொல்லப்படுகின்றனவே? இவற்றுள் அந்தரங்க நிரூபகம் ஏது?' என்று திருவோலக்கத்திலே ஓர் ஆராய்ச்சி உண்டாக, எம்பெருமானார் தாம் முற்றறிவினராய் எழுந்தருளியிருக்கச்செய்தேயும், இதனை ஆசாரியர் மூலமாக வெளியிட வேண்டும் என்று திருவுள்ளம் பற்றி ஆழ்வானை நோக்கி, 'வாரீர் ஆழ்வான்! திருக்கோட்டியூர்க்குச் சென்று நம்பியைச் சேவித்து இதனை அறிந்து வாரும்' என்று நியமிக்க, ஆழ்வானும் நம்பி சந்நிதிக்கு எழுந்தருளித் தண்டன் சமர்ப்பித்துச்செய்தியை விண்ணப்பம் செய்து, ஆறு மாதங்கள் சேவித்திருந்தும், அவர் திருவுள்ளம் இரங்காமையாலே, புறப்படப் புக, நம்பி அவரை அழைத்து, 'மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார் 'அடியேன் உள்ளான் உடல் உள்ளான்' என்று அருளிச்செய்தபடி கண்டாயே' என்று கூறியருள, ஆழ்வானும் 'கிருதார்த்தன் ஆனேன்' என்று எழுந்தருளி, எம்பெருமானார் திருவடிகளிலே அதனை விண்ணப்பம் செய்ய, சேமவைப்பான இந்த ஸ்ரீ சூக்தியின் பொருளைத் திருவோலக்கத்திலே விவரித்தருளினமையைத் தெரிவித்தபடி. கிருதார்த்தன் - பேறு பெற்றவன்.

3. ஐதிஹ்யத்துக்கு வியாக்கியாதா பாவம் அருளிச்செய்கிறார், 'என் உள்ளான்' என்று தொடங்கி.

'அஹம் அர்த்தத்துக்கு ஜ்ஞாநாநந்தங்கள் தடஸ்தம்' என்னும்படி தாஸ்யமிறே அந்தரங்க நிரூபகம்' என்ற ஸ்ரீ வசனபூஷண

அடிமையே,' என்கிருர். [1]ஞான ஆனந்தங்களைக்காட்டிலும் நெருங்கிய தொடர்புடையது பகவானுக்கு அடிமையாக இருக்கும் தன்மை. உடல் உள்ளான் - [2]சேதனனுக்குப் பகவானுடைய சொரூபத்தைக்காட்டிலும் திவ்விய மங்கள விக்கிரகமே உத்தேசியமானுற்போலே, ஈஸ்வரனுக்கும், இவருடைய ஆத்துமாவைக்காட்டிலும் இவர் கழிக்கிற சரீரம் உத்தேசியமாய்த் தோற்றுநின்றது, [3]செருக்கர் தாம் உகந்த விஷயத்தில் அழுக்கு உகக்குமாறு போலே. இதனுல், [4]'**ஜீவபரபேதமும், ஜீவர்களுக்குள் பரஸ்பர பேதமும், சேஷசேஷி சம்பந்தமும் இல்லை**' என்று சொல்லுகின்ற மதங்கள் பொருள் ஆற்றலால் மறுக்கப் பட்டனவாம். 'உம்முடைய திருமேனியை விரும்புகின்றவன் யார்?' என்ன, இன்னுன் என்கிருர் மேல்: அண்டத்து அகத்தான் புறத்துஉள்ளான் - அண்டத்துக்குள்ளே இருக்கிற பொருள்களோடு, [5]புறம்புள்ள பொருள்களோடு வாசி

---

ஸ்ரீ சூக்திக்கு 'அடியேன் உள்ளான் என்ருரிறே ஆழ்வார்; திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீ பாதத்திலே ஆழ்வான் ஆறு மாசம் சேவித்து நின்று மஹாநிதியாகப் பெற்ற அர்த்தமிறே இது' என்று மணவாள மாமுனிகள் அருளிச்செய்த வியாக்கியானம் ஈண்டுக் கருதல் தகும்.

1. 'ஆத்துமாவுக்கு ஞான ஆனந்தங்களும் நிரூபகமாக இருக்க, 'அன்று' என்கிறது என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிருர், 'ஞான ஆனந்தங்களை' என்று தொடங்கி. என்றது, 'பகவானுக்குச் சரீரமாக இருப்பதனுலே கிடைத்த இருப்பையுடைய வஸ்து ஆத்துமா ஆகையாலே, முதலில் சேஷத்துவத்தை இட்டு நிரூபித்துக்கொண்டு, பின்னர் ஞான ஆனந்தங்களைக்கொண்டு நிரூபிக்க வேண்டும்படி இருக்கிறது' என்றபடி.

2. 'ஆத்துமாவில் இருந்தால் போராதோ? தாழ்வான இந்த உடலையும் விரும்புகைக்குக் காரணம் யாது?' என்ன, சேதனனுக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

3. 'பகவானுடைய விக்கிரகம் அப்ராக்ருதம் ஆகையாலே விரும்புதல் தகும்; இது பிராக்ருதம் அன்றே? உத்தேசியமாகக் கூடுமோ?' என்ன' 'செருக்கர்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

4. 'அடியேன்' என்றும், 'உள்ளான்' என்றும் சொல்லுகையாலே ஜீவபரபேதமும், 'அடியேன்' என்ற ஒருமையாலும், 'அண்டத்தகத்தான்' என்கையாலும் ஜீவர்களுக்குள் பரஸ்பர பேதமும், 'அடியேன்' என்று சேஷத்துவம் சொல்லுகையாலே சேஷசேஷி சம்பந்தமும் பெறப்படுதல் காண்க.

5. 'புறம்புள்ள பொருள்கள்' என்றது, மகான் முயலிய தத்துவங்களை.

அற எங்கும் பரந்திருப்பவன் ஆனவன். [1]'எங்கும் பரந் திருக்கிற பொருள்கண்டீர் ஓர் உருவத்திலே ஏகதேசமான சரீரத்தின் கூற்றிலே அகப்பட்டது' என்கை.

படியே இது என்று உரைக்கலாம் படியன் அல்லன் - எல்லா வகையாலும் ஒத்ததாய் இருப்பது ஓர் உபமானத்தை உடையன் அல்லன். என்றது, 'எல்லா இடத்திலும் பரந்திருப்பதுமாய், எல்லாப் பொருள்களையும் நிர்வஹித்துக்கொண்டு இருப்பதுமாய் இருப்பது ஒரு பொருள் உண்டாகில் அன்றோ ஒப்புச் சொல்லலாவது?' என்றபடி. 'சொல்லலாம்படிதான் என்?' என்னில், பரம் பரன் - மேலானவற்றுக்கு எல்லாம் மேலானவன். [2]'இவ்வளவு அன்று, இவ்வளவு அன்று' என்கிறபடியே, இவ்வளவு அன்று என்னுமித்தனை. 'ஆனாலும், இவ்விஷயத்தை நினைக்கும்படிதான் என்?' என்னில், [3]கடிசேர் நாற்றத்துள் ஆலை - கடி என்பதும், நாற்றம் என்பதும் ஒரு பொருளனவே ஆதலின், மீமிசைச்சொல்லாய், மிக்க வாசனை என்பதனைக் குறிக்கின்றது. அன்றிக்கே, 'கடி' என்பது, புதுமையாய், 'செவ்விப் பரிமளம்' என்னலுமாம். நாற்றத்துள் என்றாரேனும், வாசனைக்கு உள்ளும் புறம்பும் இல்லாமையாலே நாற்றத்திலே என்று கொள்க. ஆலை - தேன். இன்பம் துன்பம் கழி நேர்மை - அதனுடைய அனுபவத்தால் வந்த சுகத்தில் துக்கத்தின் பகுதியைக் கழித்த நுண்மையான சுகத்தின் பகுதி. என்றது, 'மலரில் மணத்தை உவமையாகச் சொல்லுகையாலே அதில் அற்பம், அழிந்து போதல் முதலானவைகள் துக்கத்தின் பகுதி; அவை கழிந்த நுண்மை, சுகத்தின் பகுதி; துன்பம் கழிந்த இன்பம், என்றபடி.

ஒடியா இன்பப் பெருமையோன் - அழியாததுமாய்ப் பெரியதுமான சுகம்; அதாவது, 'அழியாததுமாய், தனக்கு மேல் ஒன்று இல்லாததுமான ஆனந்தத்தையுடை

---

1. 'அண்டத்தகத்தான், புறத்துள்ளான், உடல் உள்ளான்' என்று கூட்டி பாவம் அருளிச்செய்கிறார், 'எங்கும்' என்று தொடங்கி.

2. 'மேலானவற்றுக்கு எல்லாம் மேலானவன்' என்றதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'இவ்வளவு' என்று தொடங்கி. 'நேதி நேதி' என்பது, பிருகதாரண்ய உப. 4 : 3.

3. 'கடிசேர் நாற்றம்' என்கையாலே சர்வ கந்தங்களையும், 'ஆலை' என்கையாலே சர்வ ரசங்களையும் கூறியபடி.

யவன்' என்றபடி. 'ஆநந்தமய:' என்கிருர் என்றபடி. உணர்வில் உம்பர் ஒருவன் - ஞானத்தில் வந்தால் மேலான ஒருவன். ஒப்பற்ற ஞான ஆனந்த சொரூபன் என்றபடி. ஒடியா இன்பப் பெருமையோன் உணர்வில் உம்பர் ஒருவன், அடியேன் உள்ளான், உடல் உள்ளான் - [1]எல்லார்க்கும் விரும்பத் தக்கவனுய் இருக்கிறவன்காண் என் சரீரத்தை விரும்புகிருன்! (2)

852

உணர்வில் உம்பர் ஒருவனை
அவனது அருளால் உறற்பொருட்டுஎன்
உணர்வின் உள்ளே இருத்தினேன்
அதுவும் அவனது இன்னருளே
உணர்வும் உயிரும் உடம்பும்மற்று
உலப்பி லனவும் பழுதேயாம்
உணர்வைப் பெறஊர்ந்து இறஏறி
யானும் தானுய் ஒழிந்தானே.

பொ - ரை: 'ஞானத்திலே மேம்பட்டவர்களான நித்தியசூரிகளுடைய காரியங்களுக்கு எல்லாம் நிர்வாஹகனை ஒப்பற்றவனை, அவனது திரு அருளால் கிட்டுதற்பொருட்டு என்னுடைய விருப்பமாகிற ஞானத்துக்குள்ளே அவனை இருக்கச்செய்தேன்; அவ்வாறு விரும்பியதும் அவனுடைய திரு அருளாலேயாம்; விஷயங்களை அறிகின்ற அறிவும் உயிரும் உடம்பும் மேலும் எல்லையில்லாதனவான மகத்து முதலான தத்துவங்களும் மூலப்பகுதியும் ஆகியவை எல்லாம் புருஷார்த்தங்கள் அல்லாதனவாம்என்னும் அறிவினையான் பெறும்படி நடத்தி, அதற்கு மேலும் முடியச்சென்று, நானும் தனக்குப் பிரகாரமாக இருக்கிறபடியைக் காட்டித் தந்தான் என்றபடி.

வி – கு: 'உணர்வினுள்ளே இருத்தினேன்' என்பதற்கு 'விரும்பினேன்' என்பது பொருள். ஊர்ந்து - நடத்தி. 'அதற்குமேலும் முடியச் சென்று' என்றது, 'ஞான ஆனந்த சொரூபமாய்ப் பகவானுக்கு அடிமைப்பட்டிருத்தலையே தனக்கு இன்பமாகக் கொண்டிருக்கும் ஆத்தும வஸ்து என்னும் அதன் எல்லை நிலமான ஞானத்தை உண்டாக்கி' என்றபடி. ஏறி - ஏற்றி; பிறவினையில் வந்தது என்னவுமாம்.

ஈடு: மூன்ரும் பாட்டு. [2]'காரணமில்லாத கிருபையாலே தன் விஷயமாக இச்சையையும் பிறப்பித்து,

1. அந்வயித்ததற்கு பாவம் அருளிச்செய்கிருர், 'எல்லார்க்கும்' என்று தொடங்கி.

2. 'என் உணர்வினுள்ளே இருத்தினேன்' என்றது முதல், 'யானும் தானுய் ஒழிந்தான்' என்றது முடியக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிருர்.

என்னோடே கலந்து, அக்கலவி நிலைத்து நிற்கும்பொருட்டு, சிறப்பினையுடையதாய்த் தனக்கேயுரியதுமான ஆத்துமாவின் சொரூபத்தையும் காட்டி அருளினன்' என்கிறார்.

**உணர்வில் உம்பர் ஒருவனை** - உணர்விலே உளரான நித்திய சித்தர். என்றது, ஞானத்தில் மேம்பட்டவரான நித்தியசூரிகளுடைய இருப்பு முதலானவைகள் தன் ஆதீனமாம்படி இருக்கிற ஒப்பற்றவனை. இதனால், அடையத்தக்க பேற்றின் சொரூபம் சொல்லிற்று. [1]அயர்வு அறும் அமரர்கள் அதிபதியாய் இருக்கும் இருப்பே அன்றோ அடையத்தக்க பேறு? 'அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்றுகொலோ!' என்றே அன்றோ இவர் வேண்டிக்கொண்டது? **அவனது அருளால்** - அவனுடைய திரு அருளாலே. **'அடையத்தக்க பேறு அவனே'** என்கிற நிர்ப்பந்தத்தைப் போன்று, **அவனை அடைதற்குரிய வழியும் அவன் திரு அருளேயாய்** இருக்கிறபடி. **உறற்பொருட்டு** - அடையும்பொருட்டு. 'பேறும், பேற்றினை அடைதற்கு உரிய வழியும் அவனே ஆகில், நீர் அதிலே தொடர்பு உற்ற காரியம் யாது?' என்ன, **என் உணர்வினுள்ளே இருத்தினேன்** - அவனை என் ஞானத்துக்கு விஷயமாக்கினேன். [2]'வைத்தேன் மதியாலே' என்றது தானே அன்றோ? என்றது, 'விரும்பினேன்' என்கை. 'அவ்வாறு விரும்புதலும் தன்செயலோ?' எனின், **அதுவும் அவனது இன் அருளே** - அந்த விருப்பம் பிறந்ததுவும் அவனுடைய திரு அருளாலே, [3]நின்ற நின்ற அளவுகள் தோறும், 'இவ்வளவும் அவனாலே பிறந்தது' என்னும்படி ஆயிற்று இருப்பது அவனுடைய நல்ல எண்ணம். [4]'தன்

1. 'அயர்வு அறும்' என்று தொடங்கும் வாக்கியத்துக்குக் கருத்து, 'அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்றுகொலோ' என்று பாரித்தவர் ஆகையாலே, அதற்கு உறுப்பாக,'அயர்வு அறும் அமரர்கள் அதிபதி' என்று அவ்வடியார்களைக் கூட்டிப் பேசுகிறார் என்பது. 'அடியார்கள்' என்பது, **திருவாய்.** 2. 3 : 10.

2. 'பின் நாட்டுகிறது' என்று மேலே அருளிச்செய்த யோஜனைக்குச் சேரக் காட்டுகிறார் 'வைத்தேன் மதியாலே' என்று தொடங்கி. 'வைத்தேன்' என்பது, **திருவாய்.** 8. 7 : 9.

3. 'பேற்றுக்கு அவன் வேண்டும் ; இச்சைக்கும் அவன் வேண்டுமோ?' என்ன, 'நின்ற நின்ற' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. ''உணர்வு' என்ற சொல் 'இச்சை' என்ற பொருளைக் காட்டுமோ?' என்ன, 'தன் பொன்னடி' என்று தொடங்கி அதற்கு

பொன் அடிக்கீழ் இருத்தும் வியந்து' என்று பேறும், பேற்றுக்கு வழியும் அவனே என்று கூறி, 'அருத்தித்து' என்றார் அன்றே? அதனை அன்றோ இங்குச் சொல்லுகிறது? ·

[1]இரண்டரைப் பாட்டு என்றது அற்றது; மேல் ஆத்தும சொரூபத்தின் சிறப்பினைக் காட்டித் தந்தான் என்கிறார்; உணர்வும் - விஷயஞானமும். உயிரும் - [2]பஞ்ச விருத்தி பிராணனும்; உயிரும். உடம்பும் - சரீரமும். மற்று உலப்பு இல்லனவும் - மற்றும் எல்லை இல்லாதனவான மகத்து முதலான மூலப்பகுதியின் விகாரங்களும், மூலப் பகுதியும். பழுதே ஆம் உணர்வைப் பெற ஊர்ந்து - இவை எல்லாம் தாழ்ந்தவை என்னும்படியான அறிவை நான் பெறும்படி நடத்தி;[3] அங்வர்த்தபிரயோஜனத்தேர் ஊருமாறு போலே. என்றது, 'இவை புருஷார்த்தங்கள் அல்லாதவை என்னும் உணர்வு உண்டு - மயர்வு அற்ற மதி; அதனை நான் உடையேனும்படி செய்து' என்றபடி. இற ஏறி - பிரகிருதியும் பிரகிருதி சம்பந்தப்பட்ட பொருள்களும் புருஷார்த்தங்கள் அல்லாதவைகள் என்னும் அளவே அன்

---

விடை அருளிச்செய்கிறார். 'என்றார் அன்றே' என்றது, 'ஏழாந் திருவாய்மொழியில் முதற்பாசுரத்தில் அருளிச்செய்தார் அல்லவா?' என்றபடி.

1. 'இரண்டரைப் பாட்டு என்றது அற்றது' என்றது. 'இத் திருவாய்மொழியில், முதல் இரண்டரைப் பாசுரங்களாலே தன்னை அனுபவிப்பித்து' என்று இத்திருவாய்மொழியின் முன்னுரையில் கூறியது முடிந்தது என்றபடி.

2. பஞ்சவிருத்திபிராணன் - பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன் என்னும் ஐந்து இடங்களில் இருக்கும் பிராணனை உயிர்.

3. 'ஊர்ந்து' என்ற பதத்தால் கிடைக்கும் கருத்துப் பொருளை விளக்குகிறார் 'அங்வர்த்தப் பிரயோஜனத்தேர் ஊருமாறு போலே' என்று. என்றது, ஓர் அரசன் வறிஞன் ஆனால் செல்வத்தைத் தேடும்பொருட்டுத் தேர்களிலே ஏறித் தானே ஓட்டுமாறு போலே' என்றபடி. இதற்கு, 'வெற்றிக்கு நிலைக்களமான அருச்சுனன் தேரிலே தானே சாரதியாக ஏறி, வீடுமன் முதலாயினோர்களுடைய ஆற்றல்கள் எல்லாம் பயன் அற்றுப் போம்படி அத்தேரை நடத்தினாற்போலே, சரீரத்துக்குத் தேர் என்பது பெயர் ஆகையாலே, அந்தச் சரீரமான தேரின் ஓரிடமான மனத்திலிருந்துஉண்டாகின்ற விஷய சம்பந்தமான ஞானம் முதலானவைகள் பயன் அற்றுப் போம்படியான ஞானத்தை நடத்தினான்' என்று அருளிச்செய்வர்கள் பெரியோர்கள்.

றிக்கே முடியப்போய். என்றது, 'ஞான ஆனந்த சொரூபமாய், பகவானுக்கு அடிமைப்பட்டிருக்கும் அதனையே தனக்கு இன்பமாகக் கொண்டிருக்கும் ஆத்துமவஸ்து என்னுமளவும் காட்டித்தந்து' என்றபடி. அன்றிக்கே, 'இற ஏறி - முடிய ஏற்றி' என்னுதல். யானும் தானாய் ஒழிந்தானே - அவ்வளவிலும் முடியாமல் என்னைச் சொல்லும் சொல்லாலே தன்னைச் சொல்லலாம்படி தனக்குப் பிரகாரமாகையாலே அடிமை என்னுமிடத்தையும் காட்டித் தந்தான். [1]'ஆழ்வீர்!' என்றால், 'ஏன்' என்பான் ஈஸ்வரனே போலுங்காணும். [2]நான் என்னும் சொல்லும் நான் என்னும் புத்தியும் தன்னளவும் செல்லும்படி சரீரமாக இருக்கையே சொரூபமாம்படி இருக்கிறபடியைக் காட்டித் தந்தான். [3]'தத்' சப்தம், குணங்களோடு கூடின இறைவனைக் காட்டுவதைப் போன்று, 'த்வம்' சப்தமும், சரீரத்தோடு கூடின ஆத்துமாவிற்குள் அந்தரியாமியாய் இருக்கிற சர்வேஸ்வரன் அளவும் செல்லக் கடவது அன்றோ? (3)

853

**யானும் தானாய் ஒழிந்தானை**
**யாதும் யவர்க்கும் முன்னோனை**
**தானும் சிவனும் பிரமனும்**
**ஆகிப் பணைத்த தனிமுதலைத்**
**தேனும் பாலும் கன்னலும்**
**அமுதும் ஆகித் தித்தித்துஎன்**
**ஊனில் உயிரில் உணர்வினில்**
**நின்ற ஒன்றை உணர்ந்தேனே.**

பொ - ரை : 'அஃறிணைப்பொருள் உயர்திணைப்பொருள்கள் எல்லாவற்றிற்கும் காரணமானவனும், தானான தன்மையனும், சிவனும் பிரமனும் ஆக விரிந்த ஒப்பற்ற காரணமானவனும்,

---

1. 'என்னைச் சொல்லும் சொல்லாலே தன்னைச் சொல்லலாம்படி' என்றதனாலே பலித்த பொருளினை அருளிச்செய்கிறார், 'ஆழ்வீர்' என்று தொடங்கி.

2. 'காட்டித் தந்த விதம் யாது?' என்ன, 'நான்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. ''யானும் தானாய் ஒழிந்தான்' என்றால், சொரூப ஐக்கியத்தைச் சொல்லுமே ஒழிய, சரீர சரீரி பாவத்தைச் சொல்லுமோ?' என்ன, 'தத்வமஸி' என்ற இடத்திற்போலச் சொல்லும் என்கிறார், 'தத்சப்தம்' என்று தொடங்கி. தத் - அவன், த்வம் - நீ, அஸி - ஆகிறாய்.

தேனும் பாலும் கருப்பஞ்சாறும் அமுதுமாகித் தித்தித்து, என் சரீரத்திலும் என் உயிரிலும் என் அறிவிலும் பரந்து நிற்கின்ற ஆத்துமாவைச் சரீரமாக உடையவனும், நானும் தானுய்விட்டவனுமான எம்பெருமானை அறியப் பெற்றேன்' என்கிருர்.

வி - கு: 'நின்ற ஒன்றை' என்றது, ஜீவாத்தும சொரூபத்தினை. 'தேனும் பாலும் கன்னலும் அமுதும் ஆகித் தித்தித்து நின்ற ஒன்று' என்க. ஆனுலும், இங்கு இது, பிரகாரியான பரமாத்துமா அளவும் சொல்லி நிற்கிறது. 'என்னை?' எனின், 'யாதும் யவர்க்கும் முன்னேனைத் தானும் சிவனும் பிரமனுமாகிப் பணைத்த தனிமுதலை' என்ற அடைகள் பரமாத்துமாவுக்கு அன்றி ஜீவாத்துமாவிற்குப் பொருந்தாது ஆதலின். ஆத்தும சொரூபத்தைச் சொல்லும் இவ்விடத்தில், அதனைத் தனியே எடுத்துக் கூருது, பரமாத்துமா அளவும் செல்லும்படி சொன்னதானது, 'ஆத்தும சொரூபம் தனித்து நிற்கமாட்டாது, பரமாத்துமாவைப் பற்றியே நிற்கும்' என்னும் உண்மையின் நுட்பத்தைக் காட்டுவதற்கு என்க. பரமாத்துமா அளவும் செல்லும்படி சொற்கள் அமைந்திருப்பினும், ஆத்தும சொரூபத்தளவில் மட்டுமே பொருள் கோடல் வேண்டும்.

ஈடு: நாலாம் பாட்டு. [1]'தொடர்பினைக் காட்டின அளவே அன்றிக்கே, இவ்வாத்துமா, தனக்கு மிக இனிய பொருள் என்னும் இடத்தையும் காட்டித் தந்தான்' என்கிருர்.

யானும் தானுய் ஒழிந்தானை - [2]மேலே கூறிய அநந்யார்ஹ சேஷத்துவத்தில் உள்ள பிரீதியாலே மீண்டும் அதனையே அருளிச்செய்கிருர். யாதும் யவர்க்கும் - காரண நிலையிலே உள்ள அசேதனங்களையும் சேதனங்களையும் சொல்லுகிறது. முன்னேனை - [3]காரியத்துக்கு அவசியமாக முன் கணத்தில் இருப்பது ஒன்றே அன்றே காரணமாவது? தானும் சிவனும் பிரமனும் ஆகிப் பணைத்த தனி முதலை - பிரமன் சிவன் இவர்கள் நடுவே அவதரித்த தானும், பிரமன் சிவன் முதலான காரியங்களின் கூட்டமுமாய்க்கொண்டு விரிந்த [4]அத்விதீய காரண

---

1. 'தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகி' என்ற பதங்களைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிருர்.

2. 'யானும் தானுய் ஒழிந்தானை' என்று மீண்டும் அருளிச்செய்வதற்குக் காரணம் அருளிச்செய்கிருர், 'மேலே' என்று தொடங்கி.

3. காரணன் என்னுமல் 'முன்னேனை' என்றதற்கு பாவம் அருளிச்செய்கிருர், 'காரியத்துக்கு' என்று தொடங்கி.

4. அத்விதீயம் - இரண்டாவது இல்லாதது; ஒன்று.

மானவனை; [1]அறிவுடைப்பொருள்கள் அறிவு இல்லாத பொருள்கள் முழுதும் அழிந்தபோது தன் திருமேனியிலே **நீறு மூடிய நெருப்புப் போலே** சூக்கும ரூபமாக இவை கிடக்கும்படி ஏறிட்டுக்கொண்டு நோக்கி, படைப்புக்காலம் வந்தவாறே தன் பக்கல்நின்றும் பிரித்து, அண்ட சிருஷ்டி அளவும் தானே நடத்தி, அண்டத்திலே வசிக்கின்றவர்களுக்குள்ளே பிரதானரான பிரமன் முதலாயினோர்களை உண்டாக்கி, தன் உருவமாக நின்று பாதுகாத்தலைச் செய்தும், பிரமன் சிவன் இவர்களுடைய சரீரங்களையும் ஆத்துமாக்களையும் தொடர்பு கொண்டு நின்று படைத்தல் அழித்தல்களைச் செய்தும், அவர்கள் செய்கிற காரியங்களோடு தான் செய்கிற காரியத்தோடு வேற்றுமை இல்லாமல் எல்லாம் தானே நடத்துகிறவனை.

தேனும் பாலும் கன்னலும் அமுதும் ஆகித் தித்தித்து - [2]'இப்படி இனிதாய் இருக்கிறது யார்க்கு?' என்னில், **'ஸர்வரஸ:'** என்கிறபடியே, இவனுக்கு அவன் இனியனாகை இருக்குமாறு போலே, ஈஸ்வரனுக்கும் இது இனியதாக இருக்கும் அன்றோ? [3]அவனுக்கு **'என்னது'** என்பதனால் இனியதாக இருக்கும்; இவனுக்கு **'அவனது'** என்பதனால் இனியதாக இருக்கும். [4]'ஈஸ்வரனுக்குப் பரதந்திரப்பட்டது இவ்வாத்துமா' என்று அறிவதற்கு முன்னும் **'தன்னைத் தானே அனுபவிக்கிற ஆத்தும அனுபவம் அமையும்'** என்னும்படி இனியதாய் இருக்கிறது அன்றோ? **என் ஊனில் உயிரில் உணர்வினில் நின்ற ஒன்றை உணர்ந்தேன்** - என் சரீரத்திலும் பிராணனிலும் ஞானத்திலும் பரந்திருப்பதாய், சிறந்ததான ஆத்துமாவைத் தனக்குச்

---

1. 'யாதும் யவர்க்கும்' என்றது முதல் 'தனி முதலை' என்றது முடியப் பொருள் அருளிச்செய்கிறார், 'அறிவுடைப்பொருள்கள்' என்று தொடங்கி.

2. இன்னார்க்குத் 'தித்தித்து' என்னுமையாலே, பாவம் அருளிச் செய்கிறார், 'இப்படி' என்று தொடங்கி.

3. 'ஈஸ்வரனுக்கும் இவருக்கும் இனிய பொருளாகும் இடத்தில் வாசி யாது?' என்ன, 'அவனுக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். அவனது - ஈஸ்வரனுக்கு உரியது; அடிமைப்பட்டது.

4. 'அப்படி ஆத்துமவஸ்துவானது இனிய பொருளாய் இருக்குமோ?' என்ன, 'ஈஸ்வரனுக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

சரீரமாகவுடையவனை அறியப்பெற்றேன். [1]'நின்ற ஒன்று' என்னும் சீவாத்தும சொரூபத்தைக் காட்டும் இந்தச் சொல்லானது, இந்தச் சீவாத்தும சொரூபத்திற்குப் பற்றுக்கோடாய், இதனைச் சரீரமாகவுடைய பரமாத்துமா அளவும் சென்று அவனைக் காட்டுகிறது. [2]சீவாத்தும சொரூபத்தைக் காட்டும் அச்சொல் தன் அளவில் நிற்பது அல்லாமையாலே பகவானைக் காட்டும் அளவாய் அன்றோ இருப்பது?

'நன்று; இத்திருப்பாசுரம், [3]'ஆத்துமாவினுடைய இனிமையைச் சொல்லப்புகுந்ததேயாகில், காரணமாக இருக்கும் ஈஸ்வரனுடைய தன்மையைச் சொல்லுகிறது என்?' என்னில், தன் பக்கல் பத்தி இல்லாத ஆத்துமாக்களைக் கர்மங்கட்குத் தகுதியாகப் படைத்துவிட்டான்; ஐஸ்வரியத்தை விரும்பிய பிரமன் முதலாயினோர்க்கு அவர்கள் உகந்த ஐஸ்வரியத்தைக் கொடுத்துவிட்டான்; [4]எனக்கு, இந்தச் சரீரம் விடத்தக்கது என்னுமிடத்தையும், ஐஸ்வர்யம் புருஷார்த்தம் அல்லாதது என்னுமிடத்தையும், ஆத்துமவஸ்து தனக்கு அநந்யார்ஹசேஷமாய் எல்லை இல்லாத இனிய பொருளாய் இருக்குமிடத்தையும் காட்டித் தந்தான் என்கைக்காகச் சொல்லுகிறார். [5]'நின்றனர் இருந்

1. ''நின்ற ஒன்றை' என்பது, ஆத்துமாவை அன்றோ காட்டுகிறது? இச்சொல் ஈஸ்வரனைக் காட்டும் வகை யாங்ஙனம்?' என்ன, 'நின்ற ஒன்று' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. காட்டு வகையை விளக்குகிறார், 'சீவாத்தும சொரூபத்தை' என்று தொடங்கி.

3. ஆத்துமாவினுடைய இனிமையைச் சொல்லுகிற இடத்திலே காரணத்துவம் சொன்னதற்குப் பயன் இல்லையே?' என்று சங்கித்து, அச்சங்கைக்கு விடை அருளிச்செய்கிறார், 'ஆத்துமாவினுடைய' என்று தொடங்கி. 'யாதும் யவர்க்கும் முன்னோனை' என்றதனைக் கடாட்சித்துத் 'தன் பக்கல்' என்று தொடங்கியும், 'சிவனும் பிரமனுமாகி' என்றதனைக் கடாட்சித்து 'ஐஸ்வரியத்தை' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்.

4. 'தேனும்.........ஒன்றை உணர்ந்தேன்' என்றதனைத் திருவுள்ளம் பற்றி, 'எனக்கு' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

5. ''நின்ற ஒன்றை' என்ற சாமாநாதிகரண்யத்தாலே, சரீரியான தன்னைக்காட்டித் தந்தான் என்றே அன்றோ தோற்றுகிறது? ஆத்துமசொரூபத்தின் இனிமையைக் காட்டித் தந்தான் என்று தோற்ற இல்லையே?' எனின், 'நின்றனர்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'சுத்த பேதம் அன்று' என்றது, அரசனு

தனர்' என்ற திருப்பாசுரத்திற்போலே, இந்தச் சாமாநாதிகரண்யத்துக்கு இனிமையோடு கூடியிருக்கிற சொரூபத்தில் விசேஷண அமிசமான இனிமையிலே தாத்பரியம். வையதிகரண்யத்துக்கும் உலகத்தார் சொல்லுகிற சுத்த பேதம் அன்று பொருள்; சாமாநாதிகரண்யத்துக்கும் சொரூப ஐக்கியம் அன்று பொருள். [1]அன்றிக்கே, 'யாதும் யவர்க்கும் முன்னோனை' என்று தொடங்கி, 'என் ஊனில் உயிரில் உணர்வினில் நின்ற ஒன்றான யானும் தானாய் ஒழிந்தானை உணர்ந்தேன்' என்னுதல். (4)

854

**நின்ற ஒன்றை உணர்ந்தேனுக்கு**
**அதன் நுண் நேர்மை அதுஇதுஎன்று**
**ஒன்றும் ஒருவர்க்கு உணரலாகாது**
**உணர்ந்தும் மேலும் காண்புஅரிது**
**சென்று சென்று பரம்பரமாய்**
**யாதும் இன்றித் தேய்ந்துஅற்று**
**நன்று தீதுஎன்று அறிவுஅரிதாய்**
**நன்றாய் ஞானம் கடந்ததே.**

பொ-ரை: நித்தியமாய் ஒப்பற்றதாய் உள்ள ஆத்துமாவை எம்பெருமான் தனக்குப் பிரகாரமாகக் காட்டிக் கொடுக்கக் கண்ட

---

டைய ஊழியர்களுக்குப் போலே, அப்ருதக் சித்த சேஷ சேஷி பாவம் காரணமாக வந்த பேதம் பொருள் என்றபடி. அப்ருதக் சித்தமாவது, பிரிந்து நிற்றல் இல்லாதது. ப்ருதக்சித்தம் - பிரிந்து நிற்றல். 'சொரூப ஐக்கியம் அன்று பொருள்' என்றது, 'சரீர சரீரி பாவம் காரணமான ஐக்கியம் பொருள்' என்றபடி.

சாமாநாதிகரண்யம் - ஒரே இடத்தைப் பற்றித் தெரிவிப்பது. அதாவது, வேறு வேறு பொருள்களைக் காட்டுகின்ற சொற்கள் அனைத்தும் முக்கியப் பொருள் ஒன்றையே காட்டுவது என்றபடி. சமானம் - ஒன்று. அதிகரணம் - இடம். அன்றிக்கே, 'பல விசேஷணங்களோடு கூடியும் ஒன்றாக இருப்பது' என்று கூறுதலுமாம். வையதிகரண்யம் - இதற்கு மாறான பொருளைத் தெவிப்பது. அதாவது, 'ஒவ்வொரு சொல்லும் தனித்தனியே ஒவ்வொரு பொருளைக் காட்டுவது' என்றபடி. வி அதிகரணம் - வையதிகரண்யம். வி - வேறுபட்டது.

1. 'அன்றிக்கே' என்றது, 'மேலே கூறிய பொருள் அன்றிக்கே' என்றபடி. அதாவது, 'யானும் தானாய் ஒழிந்தானை' என்பதற்கு, 'மேலே கூறிய அநந்யார்ஹ சேஷத்துவத்தில் உள்ள பிரீதியாலே மீண்டும் அதனையே அருளிச்செய்கிறார்' என்று முன்னே கூறிய பொருளைத் தவிர' என்றவாறு.

என்னைப்போன்று, அந்த ஆத்துமாவின் சிறப்பினை அனுபவித்த பொருள்களின் படி என்றுதல் அனுபவிக்கப்போகும் பொருள்களின் படி என்றுதல் எத்தகைய ஞானியர்கட்கும் ஒரு சிறிதும் உணரலாகாது; வருந்தி ஒரு சிறிது உணர்ந்தாலும், அதற்குமேல் நேரே காண்டல் ஒண்ணுது; 'எம்பெருமான் காட்டக் கண்ட அவ்வாத்தும சொரூபம் எப்படி இருக்கிறது?' எனின், மேலும் மேலும் ஒன்றுக்கு ஒன்று மேம்பட்டதாய், அவற்றின் தன்மை ஒன்றும் இல்லாமல் மிக நுண்ணியதாய், அவற்றோடு தொற்று அற்று, உலகப் பொருள்களில் வைத்து நல்லது என்றும் தீயது என்றும் அறிய அரிதாய், வேறுபட்டதாய், இந்திரிய ஞானங்கட்கு எட்டாததாய் இருக்கின்றது.

**வி - கு:** உணர்ந்தேனுக்கு - உணர்ந்த எனக்கு. அதாவது, 'உணர்ந்த என்னைப் போன்று' என்றபடி. (அவ்வான்மா) 'பரம்பரமாய், இன்றி, தேய்ந்து. அற்று, அறிவரிதாய், நன்றுய், ஞானம் கடந்தது' என்க.

**ஈடு:** ஐந்தாம் பாட்டு. [1]'மேல் பாசுரத்திலே பகவானுக்குச் சரீரமாக ஆத்துமா பேசப்பட்டது; இதற்குமேல் நான்கு பாசுரங்கள், ஆடையிலே உள்ள வெண்மையைப் பிரித்து நிஷ்கர்ஷக சப்தத்தை இட்டுச் சொல்லுமாறு

---

1. மேற்பாசுரத்தில் கூறப்பட்ட பொருளை அநுவதித்துக் கொண்டு. இது முதலாக உள்ள நான்கு பாசுரங்கட்கும் இரண்டு வகையாகச் சங்கதி அருளிச்செய்கிருர். ஆத்தும சொரூபத்தைத் தனிப்படக் காட்டிக் கொடுத்தான் என்பது எம்பாருடைய நிர்வாஹம். 'தனக்குச் சரீரமாக இருக்கும் தன்மையிலே காட்டிக் கொடுத்தான்' என்பது திருமலையாண்டானுடைய நிர்வாஹம். இவ்விரண்டு நிர்வாஹங்களையும் முறையே அருளிச்செய்கிருர், 'மேல் பாசுரத்திலே' என்று தொடங்கி. 'நிஷ்கர்ஷக சப்தத்தை இட்டுச் சொல்லுமாறு போலே' என்றது, வஸ்திரத்தினுடைய வெண்மை நிறம் என்று சொல்லுமாறு போலே என்றபடி. சொற்கள்தாம், 'நிஷ்கர்ஷகம்' என்றும், 'அநிஷ்கர்ஷகம்' என்றும் இரண்டு வகைப்படும். அவற்றுள், நிஷ்கர்ஷகமாவது, தர்மத்தையும் தர்மத்தையுடையபொருளையும்பிரித்துப் பேசுவது. அநிஷ்கர்ஷகமாவது தர்மத்தையும் தர்மத்தையுடைய பொருளையும் அபேதமாகப் பேசுவது. இவற்றுள், நிஷ்கர்ஷகமும், 'நியத நிஷ்கர்ஷகம்' என்றும், 'வைவக்ஷிக நிஷ்கர்ஷகம்' என்றும் இரண்டு வகைப்படும். நியத நிஷ்கர்ஷகமாவது, தர்ம தர்மிகளைப் பிரித்தே பேசுதல். இதற்கு உதாரணம், 'வாசனையையுடையது மண்' என்பது. வைவக்ஷிக நிஷ்கர்ஷகமாவது, தர்ம தர்மிகளைத் தன் விருப்பத்திற்குத் தகப் பிரித்துச் சொல்லுவது. இதற்கு உதாரணம், 'வஸ்திரம் வெண்மை நிறத்தையுடையது' என்பது. ஆக, மேல் நான்கு பாசுரங்களும் வைவக்ஷிக நிஷ்கர்ஷகம் என்பது எம்பார் நிர்வாஹம். அநிஷ்கர்ஷகமாக ஆண்டான் நிர்வாகம். ஆண்டான், 'நின்ற ஒன்றை' என்பதற்குப்

போலே, 'எம் பெம்மானோடு' என்கிற பாசுரம் முடிய, கேவல ஆத்தும சொரூபத்தைச் சொல்லுகிறது' என்று எம்பார் அருளிச்செய்யும்படி. ஆண்டான் 'சரீரமான தன்மையிலே வைத்துச் சொல்லுகின்றன' என்று பணிப்பர். [1]'நின்ற ஒன்றை' என்கிற இதில், 'பகவானுடைய திருவருளாலே நான் அறிந்த இவ்வாத்தும வஸ்து ஒருவர்க்கும் அறியப்போகாது; வருந்தி அறிந்தாலும் கண்கூடாகக் காணப் போகாது' என்கிறார்.

[2]நின்ற - தேகம் இந்திரியம் மனம் பிராணன் ஞானம் இவற்றைக்காட்டிலும் வேறுபட்டதாய் நின்ற. அன்றிக்கே, 'இவை அழியும் அன்றும் அழியாதே ஒரே தன்மையதாய் நின்ற' என்னுதல். ஒன்றை - இவற்றை நியமிக்கின்றதுமாய், வேறுபட்ட சிறப்பினையுடையதுமான ஆத்துமாவை. உணர்ந்தேனுக்கு - ஆராய்ந்தேனுக்கு. [3]'உயர்வற உயர் நலம்' என்று அவனுடைய கல்யாண குணங்களிலே இழிந்தவர் ஆகையாலே, இதற்கு முன்பு மின்மினி போலே இருக்கிற ஆத்தும சொரூபத்தில் கண் வைத்திலர். அன்றிக்கே, பரிகரமும் பத்தியின் உருவத்தை அடைந்த ஞானமாகையாலே இதனை நினைப்பதற்குப் போதுபெற்றிலர் என்னுதல். 'இதனை ஆராய்ந்தேனுக்கு இது இருந்தபடி என்?' என்ன, அருளிச்செய்கிறார் மேல்: அதன் நுண்

---

பிரகாரி பரியந்தமாக்கி, பிரகாரமான தன்மையிலே சொல்லுகிறது என்று பொருள் அருளிச்செய்வர்.

1. மேற்பாசுரத்திலே உள்ள 'ஒன்றும் ஒருவர்க்கு உணரலாகாது உணர்ந்தும் மேலும் காண்பு அரிது' என்ற பதங்களைக் கடாட்சித்து, இப்பாசுரத்தின் பொருளை அருளிச்செய்கிறார், 'நின்ற' என்று தொடங்கி.

2. 'மாத வங்கள்என் றுஓத வங்களின்
மருவு சீவன்என் றுஒருவ நீபெரும்
பூத மல்லைஇந் திரிய மல்லைஐம்
புலனு மல்லைநற் புந்தி அல்லைகாண்
சீத ரன்புரந் தாமன் வாமனன்
திருவ ரங்கனுக்கு அடிமை நீஉனக்கு
ஏதும் இல்லைஎன் றறிஅ றிந்தபின்
ஈதின் மாதவம் இல்லை எங்குமே.'

என்னும் திருவரங்கக் கலம்பகச் செய்யுள் இங்குக் கருதுதல் தகும்.

3. ''உணர்ந்தேனுக்கு' என்று இப்பொழுது உணர்ந்ததாகச் சொல்லுவது என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'உயர்வற' என்று தொடங்கி. பரிகரம் - கருவி; ஈண்டு, ஞானம்.

நேர்மை - அதனுடைய வேறுபட்ட சிறப்பு. அது இது என்று - அனுபவித்த பொருள்களின்படி என்றுதல், அனுபவிக்கிறவற்றின்படி என்றுதல் அறியப் போகாது. ஒருவர்க்கு ஒன்றும் உணரல் ஆகாது - எத்தனையேனும் மேம்பட்ட ஞானியர்கட்கும் ஒரு சிறிதும் அறியப்போகாது. உணர்ந்தும் மேலும் காண்பு அரிது - [1]'என்னிடத்திலேயே வைக்கப்பட்ட பத்தியினாலே உண்மையாக அறிகிறதற்கும் பார்க்கிறதற்கும் என்னுடைய சொரூபத்தை அடைகிறதற்கும் தகுந்தவனாக இருக்கிறேன்' என்கிறபடியே, அறியப் போகாது, அறிந்தாலும் கண்கூடாகப் பார்க்கவும் போகாது.

சென்று சென்று பரம்பரமாய் - [2]செல்லச் செல்ல ஒன்றுக்கு ஒன்று மேலாய் இருக்கிற அன்னமயம் பிராணமயம் மனோமயம் என்னும் இவற்றுக்கு அவ்வருகாய். யாதும் இன்றித் தேய்ந்து அற்று - [3]அவற்றின் தன்மை ஒன்றும் இன்றிக்கே அவற்றோடு அறத் தேய்ந்து அற்று. நன்று தீது என்று அறிவு அரிதாய் - [4]சரீரம், சரீரத்தைக்காட்டிலும் இந்திரியம், இந்திரியங்களைக்காட்டிலும் மனம், மனத்தைக்காட்டிலும் பிராணன் என்று ஒன்றுக்கு ஒன்று சிறப்பு உடைத்தாய் இருத்தல் போன்று, பிரகிருதி சம்பந்தப்பட்ட பொருள்களின் படியால் நன்று என்றும் தீது

---

1. உணர்தலுக்கும் காண்டலுக்கும் திருஷ்டாந்தம் காட்டுகிறார், 'என்னிடத்திலேயே' என்று தொடங்கி.

> 'பக்த்யாது அநந்யயா ஶக்ய: அஹம் ஏவம் விதஃ அர்ஜுந
> ஜ்ஞாதும் த்ரஷ்டும்ச தத்வேந ப்ரவேஷ்டும்ச பரந்தப'

என்பது, ஸ்ரீ கீதை, 11 : 54.

2. தைத்திரீய உபநிடதத்தில் முதலில் அந்நமயனைச் சொல்லி, அதற்குமேல் பிராணமயனைச் சொல்லி, அதற்குமேல் மனோமயனைச் சொல்லி, அதற்குமேலாக 'அந்யோந்தர ஆத்மாவிஜ்ஞாநமயஃ' என்று ஆத்துமாவைப் பிரஸ்தாபிக்கையால், அதனைத் திருவுள்ளம் பற்றிச் 'செல்லச் செல்ல' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். அன்றிக்கே, 'தேஹ இந்திரிய மநஃ ப்ராண தீப்யோந்யஃ' என்கிற உபநிடதவாக்கியத்தைத் திருவுள்ளம் பற்றி அருளிச்செய்கிறார் என்னலுமாம்.

3. 'அவற்றின்' என்றது, சரீரம் முதலானவற்றைக் குறித்தது.

4. சரீரம் முதலானவைகள் நன்று தீது என்று அறிய இருக்கைக்குக் காரணத்தையும், ஆத்துமா அங்ஙனம் அறியப்போகாது என்னுமதனையும் அருளிச்செய்கிறார், 'சரீரம்' என்று தொடங்கி.

என்றும் அறிய அரிதாய் இருக்கும். நன்றாய் - இயல்பாகவேவேறுபட்டதாய்.ஞானம் கடந்தது - இந்திரியங்களால் உண்டாகின்ற ஞானத்துக்கு எட்டாது இருக்கும். [1]மேலே, 'அவை ஒன்றுக்கு ஒன்று நெடுவாசியாய் இருக்கச்செய்தேயும் ஒரு பிரமாணத்தால் அறியக்கூடிய ஒப்புமை உண்டு' என்றார்; இங்கு 'அதுவும் இல்லை' என்கிறார். ஆக, இப்பாட்டில் சாங்கிய சாஸ்திரத்தில் தத்துவங்களை எண்ணும் முறையாலே ஆத்துமசொரூபத்தைச் சொல்லும்படியையும், அதனை அறிகையில் உண்டான அருமையையும் சொல்லிற்று. (5)

855

நன்றாய் ஞானம் கடந்துபோய்
நல்இந் திரியம் எல்லாம்ஈர்த்து
ஒன்றாய்க் கிடந்த அரும்பெரும்பாழ்
உலப்பில் அதனை உணர்ந்துஉணர்ந்து
சென்றுஆங்கு இன்பத் துன்பங்கள்
செற்றுக் களைந்து பசைஅற்றால்
அன்றே அப்போ தேவீடு
அதுவே வீடு வீடாமே.[2]

பொ - ரை : ஐம்பொறிகளால் அறியப்படுகின்ற ஐம்புல இன்பங்களைக் கடந்து சென்று கொடிய ஐந்து இந்திரியங்களையும் அடக்கிப் பிரிக்க முடியாதவாறு பொருந்தியிருக்கிற கடத்தற்கு அரிய பெரிய எல்லை இல்லாத பிரகிருதி தத்துவத்தை ஆத்துமாவைக்காட்டிலும் வேறுபட்டதாக உணர்ந்து, அதற்குமேல் ஆத்தும சொரூபத்து அளவும் நன்கு சென்று, இன்ப துன்பங்களுக்குக் காரணமான புண்ணிய பாவங்களையும் விட்டு, அவற்றில் உள்ள ருசி வாசனைகளும் நீங்கினால், நீங்கிய அன்றே அந்தக் கணத்திலே இவ்வுலக வாழ்வினின்றும் விடுபட்டவன் ஆவான் ; அவ்வாறு விடுபட்ட அதுவே ஆத்தும அனுபவ மோக்ஷமாகும்.

வி - கு: 'கடந்துபோய், ஈர்த்து, உணர்ந்து, உணர்ந்து, செற்றுக்களைந்து, பசை அற்றால், அன்றே அப்போதே வீடு' என எச்சங்களை முடிக்க. 'ஞானம்' என்றது, ஈண்டு ஞானத்தால் காணப்படும் விஷயங்களை. 'நன்றாய்' என்பதனைச் 'சென்று' என்றதனோடு கூட்டுக. 'நல் இந்திரியம்' என்பதில் 'நல்'

---

1. மேலே கூறியவற்றால் பலித்த பொருளை அருளிச் செய்கிறார், 'மேலே' என்று தொடங்கி.

2. இத்திருப்பாசுரத்தை, 'ஆரா இயற்கை அவா நீப்பின்' என்ற திருக்குறளின் விசேட உரையில் மேற்கோளாகக் காட்டினர் பரிமேலழகர்.

என்பது கொடுமையின் மிகுதியைக் காட்ட வந்தது ; 'நல்ல பாம்பு' என்பது போன்று. 'அதனை' என்பதனைப் 'பாழ்' (பாழதனை) என்பதனோடு கூட்டுக.

**ஈடு :** ஆறும் பாட்டு. [1]'யோக சாஸ்திரத்திற்சொல்லுகிறபடியே இந்திரியங்களை அடக்குதல் முதலியவற்றின் வடிவமான யோகத்தாலே பிரகிருதியினின்றும் விடுபட்ட ஆத்தும சொரூபத்தை வருந்தினால் நேரே காணலாம்' என்கிறார்.

[2]நன்றாய் ஞானம் கடந்து போய் - வேறுபட்டதான நன்மையுடைத்தாய், இந்திரிய ஞானத்துக்கு அறிய முடியாததாய் இருக்கும் என்று அவற்றை மீண்டும் அருளிச்செய்கிறார் என்னுதல். அன்றிக்கே, 'நன்றாய்' என்கிற இது கிடக்க, ஐம்புல இன்பங்களைத் தப்பிப் போய் என்னுதல். [3]'ஜ்ஞாயத இதிஜ்ஞாநம்' என்கிற பிரக்கிரியையாலே, ஞானம் என்கிறது. என்றது, 'ஞானத்தால் காணப்படும் விஷயங்களை, ஞானம் என்ற சொல்லாலே சொல்லுகிறது' என்றபடி. நல் இந்திரியம் எல்லாம் ஈர்த்து - விஷயங்களைத் தப்பிப் போனாலும், அவை இருந்த இடங்களிலே கொடுபோய் மூட்டக் கடவனவான ஆற்றலையுடைய இந்திரியங்களைக் கழித்து. ஒன்றாய்க் கிடந்த அரும்பெரு உலப்பு இல் பாழ் அதனை உணர்ந்து உணர்ந்து - அநாதி காலம் இவ்வாத்துமாவோடு கலந்து கிடப்பதாய், [4]'என்

---

1. பாசுரம் முழுதினையும் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'நன்றாய் ஞானம் கடந்து போய்' என்பதற்கு இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். முதற்பொருள், மேற்பாசுரத்தின் அநுவாதம். இரண்டாவது பொருள், 'அன்றிக்கே' என்று தொடங்குவது. 'நன்றாய் என்கிற இது கிடக்க' என்றது, 'நன்றாய்' என்பதனைப் பின்னே வருகின்ற 'சென்று' என்பதற்கு அடைமொழி ஆக்கிப் பொருள் கூறுகின்றமையின் இங்கு அதற்குப் பொருள் இல்லை என்றபடி. 'நன்றாய்' என்றதனை, 'ஞானம் கடந்து போய்' என்பதற்கு அடைமொழி ஆக்கலாகாது என்பதாம்.

3. 'ஆயின், 'ஞானம்' என்ற சொல், 'விஷயங்கள்' என்ற பொருளைக் காட்டுமோ?' எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'ஜ்ஞாயத இதிஜ்ஞாநம்' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார், 'ஞானத்தால்' என்று தொடங்கி. பிரக்கிரியை - பிரித்துப் பொருள் கூறல்.

4. 'தைவீ ஹி ஏஷா குணமயீ மம மாயா துரத்யயா
மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாம் ஏதாம் தரந்தி தே'
என்பது, ஸ்ரீகீதை, 7 : 14.

னுடைய மாயை தாண்ட முடியாதது,' என்கிறபடியே, ஒருவரால் கடக்க அரிதாய், மகத்து அகங்காரம் முதலிய நிலை வேறுபாடுகளால் பரப்பையுடைத்தாய், போக மோக்ஷங்களை விளைத்துக்கொள்ளலாம்படியாய், [1]'பிரவாஹ ரூபத்தாலும் சொரூபத்தாலும் நித்தியமாய் இருக்கிற அசித்துத் தத்துவத்தை மிகவும் உணர்ந்து. 'மிக உணர்தல்' என்றது, பிரகிருதியானது, காரியங்களாயும் காரணங்களாயும் நிற்கும் என்னுமதனை உணர்தலைத் தெரிவித்தபடி.

ஆங்கு நன்றாய்ச் சென்று - தன் பக்கல் இனிமை உண்டு என்னும் புத்தியைப் பிறப்பிக்கக் கூடியதான இதில் கால் தாழாமல், ஆத்தும சொரூபத்து அளவும் சென்று. இன்பம் துன்பங்கள் செற்றுக் களைந்து - அதனை 'விடத்தக்கது' என்று விட்டாலும், சுக துக்கங்களுக்குக் காரணமான புண்ணிய பாப கர்மங்கள் கிடக்குமாகில் பின்னையும் கொண்டு மூட்டுமே அன்றோ? அவற்றையும் விட்டு. பசை அற்றால் - அவற்றை விட்டாலும் ருசி வாசனைகள் கிடக்குமாகில் பின்னையும் கருவிலே தள்ளும் அன்றோ? ஆதலால், ருசி வாசனைகள் அற்றால். அன்றே அப்போதே அக்காலத்திலே அம்முகூர்த்தத்திலே, [2]வீடு - பிரகிருதி சம்பந்தப்பட்ட பொருள்களிலும் தொற்று அறும். [3]பிரகிருதியைப் போன்று சுணையும், மிருதுத் தன்மையும் உடையர் இலர். தன் பக்கல் பராமுக புத்தி பண்ணினாரைத் தானும் முகம் பாராது. அதுவே வீடு - 'அற்றது பற்று எனில் உற்றது வீடு உயிர்' என்கிறபடியே, பிரகிருதி சம்பந்தப்பட்ட பொருள்களில் தொற்று அற்றவாறே ஆத்துமாவை அடைதலாகிற அதுவே மோக்ஷமாய் இருக்கும். 'அதற்கு என்று ஒன்று செய்ய வேண்டுவது இல்லை' என்பார், 'வீடாமே' என்கிறார். வீடாமே -

---

1. மஹான் முதலான காரியாவஸ்தையைத் திருவுள்ளம் பற்றிப் 'பிரவாஹ ரூபத்தால் நித்தியமாய்' என்றும், காரணாவஸ்தையைத் திருவுள்ளம் பற்றிச் 'சொரூபத்தால் நித்தியமாய்' என்றும் அருளிச்செய்கிறார்.

2. வீடு - விடப்படுதல் உளதாம்.

3. 'இவன் ஆசை அற்றாலும் அநாதியாக வருகிற பிரகிருதி சம்பந்தம் விடுமோ?' என்ன, 'பிரகிருதியைப் போன்று' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். சுணை - நாணம்.

[1]'சர்வேஸ்வரனுக்குப் பிரகாரமாக ஆத்தும வஸ்துவை நினைத்து, அவ்வழியாலே இதனைப் பேருக அன்றோ இவர்தாம் நினைத்திருப்பது? [2]அவ்வளவு போகமாட்டாமல், இதன் நன்மையைக் கண்டு இவ்வளவிலே கால் தாழ்வார்க்கும் போந்திருந்ததே!' என்கிருர். [3]தம்முடைய உத்தேசியத்தில் ஒரு சிறு பகுதியைப் புருஷார்த்தத்தில் முடிந்த நிலமாகக் கொள்ளுகையாலே அன்றோ முன்பு இவர் இதனைச் சிரித்திருந்தது? (6)

856

**அதுவே வீடு வீடுபேற்று இன்பந் தானும் அதுதேறி**
**எதுவே தானும் பற்றுஇன்றி யாதும் இலிகள் ஆகிற்கில்**
**அதுவே வீடு வீடுபேற்று இன்பந் தானும் அதுதேருது**
**எதுவே வீடு?ஏது இன்பம்என்று எய்த்தார் எய்த்தார்**
**[எய்த்தாரே.**

**பொ-ரை:** 'எம்பெருமானுக்குச் சரீரமாக மேலே கூறப்பட்ட அந்த ஆத்துமாவின் அனுபவமே மோக்ஷமாகும்; அம்மோக்ஷத்தை அடைதலால் உண்டாகும் இன்பமும் அதுவேயாம்,' என்று இப்படித் தெளிந்து, எந்தப் பொருள்களிலும் ஆசை இல்லாமல் அவற்றில் ருசி வாசனைகளும் இல்லாதவர்கள் ஆனுல், அதுவேதான் மோக்ஷம்; மோக்ஷ இன்பமும் அதுவேயாம்; இப்படித் தெளியாது, 'மோக்ஷம் என்பது யாது? மோக்ஷ இன்பம் என்பது யாது?' என்று கலங்கினவர்கள், என்றும் கலங்கினவர்களே ஆவார்கள்,' என்றவாறு.

**வி-கு:** 'தேறிப் பற்று இன்றி ஆகிற்கில் அதுவே வீடு' என்றும், 'தேருது எய்த்தார் எய்த்தார்' என்றும் முடிக்க.

---

1. 'சர்வேஸ்வரனுக்குப் பிரகாரமாக' என்று தொடங்கும் வாக்கியத்துக்குக் கருத்து,'சர்வேஸ்வரன் பிராப்பியனும் இடத்தில், அவனுக்குப் பிரகாரமாய்க்கொண்டு ஆத்துமாவும் பிராப்பியமாகக் கடவது ஆகையாலே, இதுவும் புருஷார்த்தமாமே' என்கிருர் என்பது.

2. 'நன்று; இப்படி நினைத்திருப்பவர் 'வீடாமே' என்று அதிலே ஈடுபடுவான் என்?' எனின், அதற்கு விடை அருளிச்செய்கிருர், 'அவ்வளவு' என்று தொடங்கி.

3. 'நன்று; இப்போது இதனைக் கொண்டாடுகின்றவர் முன்பு 'அது செற்று' (திருவாய். 1. 2:5.) என்று கூறுவான் என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிருர், 'தம்முடைய' என்று தொடங்கி. 'ஒரு சிறு பகுதியை' என்றது, தமக்கு உத்தேசியமான பகவத் அனுபவசுகத்திற்கு மிகமிக அற்பமான ஆத்தும அனுபவசுகத்தை. ஆக, ஈடுபடுகிறது அவர்கள் அபிப்பிராயத்தாலே. சிரித்திருப்பது தம் அபிப்பிராயத்தாலே என்பதாம்.

**ஈடு:** ஏழாம் பாட்டு. [1]'மேலே கூறிய உபாயத்தின் படியே அந்த ஆத்துமாவை அடையாமல், அதிலே ஐயம் தொடரப்பெற்றவர்கள் உருவக் கிலேசப்பட்டே போமித்தனை,' என்கிறார்.

அதுவே வீடு - மேலே கூறிய அதுவே ஆத்துமாவை அடைதலாகிற மோக்ஷம் ஆகிறது. வீடு பேற்று இன்பந் தானும் அது - அந்த மோக்ஷத்தை அடைந்தால் வரும் இன்பமும் அதுவே. தேறி - இப்படித் தெளிந்து. எதுவே தானும் பற்று இன்றி - சரீரத்திலும் சரீர சம்பந்தப்பட்ட பொருள்களிலும் தொற்று அற்று. யாதும் இலிகள் ஆகிற்கில் - அவற்றில் ருசி வாசனைகளும் அறப்பெறில். என்றது, [2]'கர்மங்களைச்செய்து ஞானத்தையுடையனாய், ஸ்திதப் பிரஜ்ஞாக்ய அவஸ்தை பிறந்து, யோகமும் தலை நின்று, ஆத்துமாவை அடைதலே மோக்ஷம். வீடு பேற்று இன்பம் தானும் அது - மோக்ஷத்தை அடைதலால் வரும் இன்பமும் அந்த ஆத்தும அனுபவம். தேறாது - இப்படித் தெளியமாட்டாமல். எதுவே வீடு ஏது இன்பம் என்று எய்த்தார் - 'மோக்ஷம் ஆகிறது எது? மோக்ஷ இன்பமாகிறது எது?'என்று இளைத்தவர்கள். எய்த்தார் எய்த்தாரே- இளைத்தார் இளைத்தார் என்று உருவக் கிலேசப்பட்டே போமித்தனை; [3]'நிராஸ்ரயமாக ஆத்தும சொரூபத்தை நினைப்பதனால் பயன் இல்லை,' என்றபடி. (7)

---

1. 'மேலே கூறிய உபாயம்' என்றது, மேலே கூறிய யோக சாஸ்திரத்தை.

2. 'கர்மங்களைச் செய்து' என்றது, 'ஒரு பலத்தையும் விரும்பாமல் தத்தம் சாதிகளுக்கு உரிய தர்மங்களைச் செய்தல். 'ஞானத்தையுடையனாய்' என்றது, 'ஆத்துமாவை அடைதற்குச் சாதனமுமாய், ஐம்பொறிகளையும் அடக்குதல் ஆன ஞானயோகத்திலே நிற்றலையுடையனாய்' என்றபடி. ஸ்திதப் பிரஜ்ஞாக்ய அவஸ்தை பிறத்தலாவது, உலக விஷயங்கள் வந்து மேலிட்டாலும் கலங்காத தைரியத்தையுடையவனாகை. இங்கே, பகவத்கீதை இரண்டாம் அத்தியாயம் 55-ஆம் சுலோகத்தைக் காணல் தகும். யோகம் தலை நிற்கையாவது, ஞான ஆனந்த லக்ஷணமான ஆத்துமவஸ்து விளங்கும்படி அட்டாங்க யோகத்திலே முதிர நிற்றல். முதல் அடியில் கூறியது ஞானத்தை; மூன்றாம் அடியிற்கூறியது பல தசையை.

3. 'நிராஸ்ரயமாக' என்பதற்கு, 'யோகசாஸ்திரக்கிரமத்தால் அன்றிக்கே' என்னுதல். 'விசுவாசம் இல்லாமல்' என்னுதல் என்பர் அரும்பத உரைகாரர். 'இந்த ஆத்துமா எம்பெருமானுக்குப் பிரகாரமாக - சரீரமாக - இருப்பது என்றே ஆத்தும அனுபவம்

857

எய்த்தார் எய்த்தார் எய்த்தார்என்று
இல்லத் தாரும் புறத்தாரும்
மொய்த்துஆங்கு அலறி முயங்கத்தாம்
போகும் போதுஉன் மத்தர்போல்
பித்தே ஏறி அநுராகம்
பொழியும் போதுஎம் பெம்மானோடு
ஒத்தே சென்றுஅங்கு உளம்கூடக்
கூடிற் றாகில் நல்உறைப்பே.

பொ - ரை : 'இறந்தார் இறந்தார் இறந்தார்' என்று வீட்டில் உள்ளவர்களும் வெளியில் உள்ளவர்களும் அந்த நிலையிலே ஒன்றாகக் கூடி அழுது கட்டிக்கொள்ள, தாம் உடலை விட்டுப் பிரிகிற காலத்தில் உன்மத்தரைப்போன்று நெஞ்சு கலங்க, அதனால் ஆசையானது மிக மிகப் பெருகுங்காலத்தில் கலக்கம் அற்றுத் தெளிவு பிறந்து எம்பெருமானிடத்தில் பொருத்தம் உண்டாகி அப்பெருமான் பக்கலிலே மனம் கூடினால் நல்ல வாய்ப்பு ஆகும்.

வி - கு : உன்மத்தர் - அறிவு கலங்கினவர். அநுராகம் - ஆசை. உறைப்பு – உறுதி.

ஈடு : எட்டாம் பாட்டு. [1]'இப்படி அரிதில் பெறத்தக்க ஞானம் கை வந்தாலும், அந்திமஸ்மிருதி இல்லையாகில் செய்தன எல்லாம் பயன் அற்றவையாம்,' என்கிறார்.

எய்த்தார் எய்த்தார் எய்த்தார் என்று - [2]இவனுக்கு உடலை விட்டு உயிர் பிரியும் நிலை வருவதற்கு முன்னே இவன் இறப்பது விருப்பம் ஆகையாலே, 'முடிந்தான் முடிந்தான் முடிந்தான்' என்று பலகாலும் சொல்லாநிற்பர்கள் ஆயிற்று. என்றது, 'இவன் கலங்கிய நிலையிலே நெஞ்சினைத் தெளிவித்து உத்தேசியமான எம்பெருமானை நினைக்க வல்லனும்படி செய்கை அன்றிக்கே, 'முடிந்தான் முடிந்தான் முடிந்தான்' என்று இதனையே சொல்லாநிற்பர்

---

செய்யவேண்டும் ; தனித்திருப்பதாகக்கொண்டு ஆத்தும அனுபவம் செய்யலாகாது,' என்றபடியாம். ஆஶ்ரயம் - பற்றுக்கோடு. நிராஶ்ரயம் - பற்றுக்கோடு இல்லாதது.

1. மேற்பாசுரத்தின் பொருளை அநுவதித்துக்கொண்டு, 'அங்கு உள்ளம் கூட' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'எய்த்தார் எய்த்தார் எய்த்தார்' என்ற அடுக்குக்கு பாவம் அருளிச்செய்கிறார், 'இவனுக்கு' என்று தொடங்கி.

கள்,' என்றபடி. இல்லத்தாரும் புறத்தாரும் - [1]இவன் தான் வாழ்கிற நாளில் இவர்களுக்கு ஒன்றும் கொடாமை யாலே, 'இவனும் இது ஒரு நடுவிற்பெருங்குடியும் என்? இவன் இறக்க, உள்ள செல்வங்களை நாமே எடுத்துக் கொண்டால் ஆகாதோ?' என்று இருப்பர்கள் மனைவி முதலாயினோர்கள். அவனும் இவர்களுமான கூட்டம் பொறுமையாலே, 'போக அமையும்' என்று இருப்பர்கள் புறம்புள்ளார். மொய்த்து - [2]கல்யாணத்துக்கு அழைத்தாலும் வாராதவர்கள், துக்கம் உண்டானவாறே தாங்களே வந்து மேல் விழுவர்கள்.

ஆங்கு அலறி - இவனுக்கு உள்ள தெளிவும் போம்படி கூப்பிடாநிற்பர்கள். என்றது, 'மீண்டாலும் மீளலாம் என்று ஐயம் உண்டான நிலையிலே, அச்சத்தாலே பிராணன் போகும்படி கூப்பிடாநிற்பர்கள்' என்றபடி. முயங்க - கட்டிக்கொள்ள. என்றது, [3]'கூப்பீட்டுக்குப் போகாத குறை பிராணனும் போம்படி, அன்புள்ளவர்களைப் போன்று மேலே விழுந்து கட்டிக்கொள்வர்கள்' என்றபடி. தாம் போகும் போது - [4]'இவர்களையும் இந்தச் செல்வத்தையும் விட்டுப் போகாநின்றோமே!' என்று மனம் இங்கே இழுக்க, தன்னாலே மீள ஒண்ணாமையாலே சரீரத்தை விட்டுத் தாங்களே போகாநிற்பர்கள். '**தாம் போகும் போது**' என்கிறார்காணும், அப்பொழுதைய துக்கத்தைப் பற்ற. உன்மத்தர் போல் பித்தே ஏறி - ஆசை அற்ற பெரியோர்களுங்கூட, உன்மத்தனுடைய நிலையைப் போன்று அறிவு கெட்டு. என்றது, 'தெளிவு பிறந்து தன்னையும் சர்வேஸ்வரனையும் நினைக்க வேண்டிய நிலையிலே கலங்கி' என்றபடி. அநுராகம் பொழியும் போது - [5]இளையாளைப்

1. 'இல்லத்தாரும் புறத்தாரும் மொய்த்து எய்த்தார்' என்கைக்குக் காரணம் என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'இவன் தான்' என்று தொடங்கி. நடுவிற்பெருங்குடி - கிராமணியம்; அதிகாரம்.

2. 'மொய்த்து' என்றதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'கல்யாணத்துக்கு' என்று தொடங்கி.

3. 'கூப்பீட்டுக்கு' என்றது, 'எய்த்தார் எய்த்தார் எய்த்தார்' என்று அலறியதைக் குறித்தபடி.

4. 'தாம்' என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறார், 'இவர்களையும்' என்று தொடங்கி.

5. அநுராகம் பொழிவதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார், 'இளையாளை' என்று தொடங்கி. இளையாள் - இளைய மனைவி.

பொன்னையும் பூட்டிக் கொடுவந்து முன்னே நிறுத்துவர் கள். அன்றிக்கே, 'புத்திரர் முதலாயினோர்கள் பக்கல் அன்பு செலுத்தாத நாள்களுக்கும் போர அன்பு செலுத்தத் தொடங்குவான்' என்னுதல். [1]வாழ்கிற காலத்தில், உலோபத்தாலே இவர்களுக்கு ஒன்றும் செய்யான்; இப்போதாக, 'புதைத்து வைத்த செல்வத்தை ஆபரணமாகப் பூட்டிக் காணப்பெற்றிலோம்!' என்று மதகு திறந்து அன்பு செலுத்துவான்.

எம்பெருமானோடு ஒத்தே சென்று அங்கு உள்ளம் கூடக் கூடிற்றாகில் - [2]இப்படிக் கலங்குகிற சமயத்திலே தெளிவு உண்டாய், தன்னையும் அவனையும் நினைத்து, **'அவனோடு ஒத்த சுத்தியையும் இது உடைத்து,'** என்று நினைத்தல் ஆகிற இவ்வர்த்தம் கூடிற்றாகில். என்றது, 'எம்பெருமானும் ஞான ஆனந்த லக்ஷணமாய் இருப்பன்; இவ்வாத்துமாவும் ஞான ஆனந்த லக்ஷணமாய் இருக்கும்' என்று நினைக்கும்படி அவ்வாத்தும வஸ்துவிலே மனம் சேர்தலாகிற இவ்வர்த்தம் கூடுமாகில்' என்றபடி. நல் உறைப்பு - நல் வாய்ப்பு. அல்லாத போது செய்தன எல்லாம் பயன் இல்லாதவையேயாம். [3]உன்மத்தர்போலப் பித்தே ஏறில் விரும்பிய பயன் சித்தியாது; அநுராகம் பொழியில் ஆதிபரதனைப்போல மாறுகப் போமித்தனை.

[4]'நின்ற ஒன்றை உணர்ந்தேனுக்கு' என்னும் பாட்டுத் தொடங்கி, நிஷ்கிருஷ்ட ஆத்தும அநுசந்தானமாத்

---

1. 'ஆயின், முன்பு அன்பு செலுத்த இல்லையோ?' எனின், 'வாழ்கிற காலத்தில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச் செய்கிறார். 'பொழியும்' என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறார், 'இப்போதாக' என்று தொடங்கி.

2. எம்பார் நிர்வாஹத்துக்குச் சேரப் பொருள் அருளிச்செய்கிறார் 'இப்படி' என்று தொடங்கி. 'அவனோடு ஒத்த சுத்தியையும் இது உடைத்து' என்றது, ஆத்துமாவினுடைய இயல்பான தன்மையைத் திருவுள்ளம் பற்றி. அங்கு - அந்த ஆத்துமாவிலே. 'உள்ளம் கூட' என்றது அநுசந்திக்கையாய், 'அநுசந்திக்கிற இத்தன்மை' என்றபடி.

3. 'பயன் இல்லாதவையேயாம்' என்றதனை விளக்குகிறார், 'உன்மத்தர்' என்று தொடங்கி.

4. ஆண்டான் நிர்வாஹத்தை அருளிச்செய்கிறார், 'நின்ற ஒன்றை' என்று தொடங்கி. ஆண்டான் நிர்வாகத்தில், 'எம்பெருமானோடு ஒத்தே சென்று' என்பதற்கு, எம்பெருமான் நினைவோடு

திரமே அன்றிக்கே, பகவானுக்கு அடிமையாம் தன்மை பரியந்தமாக அநுசந்திக்கிறது என்றும், இப்பாட்டில், 'எம் பெம்மானோடு ஒத்தே சென்று அங்கு உள்ளம் கூடக் கூடிற் றாகில்' என்னும் அந்திம ஸ்மிருதியும், எம்பெருமான், தனக்கு அடிமையாக இவ்வாத்துமாவை நினைத்திருக்கு மாறு போன்று, இவனும் அவன் நினைவோடு ஒத்து அந் நிலையிலே அடிமையாம் தன்மையை நினைக்கிற நினைவு கூடுமாகில் நல்ல வாய்ப்பு என்றும் **ஆண்டான்** அருளிச் செய்வர். 'நன்று; பகவானுடைய குணங்களிலே ஈடுபட்ட வராய் இருக்கிற இவர் இவற்றை எல்லாம் பேசுவது என்?' என்னில், 'இப்படி அரிதாய் இருக்கிற இதனைக் கண்டீர் எனக்குக் காட்டித் தந்தது' என்று அவன் பக்கல் செல்லுகின்ற செய்ந்நன்றி அறிதலே காரணமாம் என்க. (8)

858

**கூடிற் றாகில் நல்உறைப்புக்**
**கூடா மையைக் கூடினால்**
**ஆடற் பறவை உயர்கொடிஎம்**
**மாயன் ஆவது அதுஅதுவே**
**வீடைப் பண்ணி ஒருபரிசே**
**எதிர்வும் நிகழ்வும் கழிவுமாய்**
**ஓடித் திரியும் யோகிகளும்**
**உளரும் இல்லை அல்லரே.**

**பொ - ரை :** 'ஜீவாத்துமசொரூபமும் பரமாத்துமசொரூப மும் ஒன்றாகப் பெற்றால் நல்ல வாய்ப்புதான்; ஆயின், பொருத்தம் இல்லாத பொருள்கள் இரண்டு ஒன்றாகக் கூடுமேயானால், ஜீவாத் துமசொரூபமும் ஆடுபுட்கொடி ஆதிமூர்த்தியின் சொரூபம் ஆகக் கூடும். அது இன்று; ஆதலால், அந்த ஜீவாத்தும சொரூபம், ஜீவாத்தும சொரூபமாகவே இருக்கும்; (பரமாத்தும சொரூபம் ஆகாது.) தம் மனம் சென்றது ஒரு வகையாலே மோக்ஷம் என்பது

ஒத்துச் சேர்ந்து; அதாவது, அவன் இவனைச் சேஷமாக நினைத் திருக்குமாறுபோன்று, இவனும் அவனோடு ஒத்துத் தன்னை அவனுக் குச் சேஷமாக நினைத்து என்றும், ('ஒத்தே சென்று' என்பதில் உள்ள ஏகாரம், இப்பொருளுக்கு அசைநிலை.) 'அங்கு' என்பதற்கு, அந்நிலையில்; அதாவது மரணதசையில் என்றும், 'உள்ளம் கூட' என்பதற்கு, அடிமையாக நினைத்திருத்தல் என்றும் பொருள் கோடல் வேண்டும். அந்திம ஸ்மிருதி - உயிர் உடலினின்றும் நீங் கும் காலத்து இறைவனை நினைக்கும் நினைவு.

ஒன்றனைக் கற்பித்துக்கொண்டு சம்சாரத்தில் உழன்று திரியும் யோகிகளும் முக்காலத்திலும் உளராய் இருக்கின்றார்கள்; இல்லாமல் இலர்' என்றவாறு.

வி-கு: 'கூடாமை கூடினால் எம் மாயன் ஆவதும் கூடும்,' என்க. 'கூடாமையை' என்றதிலுள்ள ஐகாரம் அசைநிலை. 'வீட்டை' என வரற்பாலது, எதுகை நோக்கி 'வீடை' என நிற்கிறது. 'யோகிகளும், உளரும்' என்பனவற்றில் உள்ள 'உம்' அசைநிலை. 'யோகிகள்' என்பது, இகழ்ச்சியின்கண் வந்தது.

**ஈடு:** ஒன்பதாம் பாட்டு. அந்திமஸ்மிருதியிலே ஜீவாத்துமாவுக்கும் பரமாத்துமாவுக்கும் பேதம் கூறப்பட்டவாறே, 'இந்த **பேதம் உண்மை அன்று: தத்துவ ஞானம் பிறந்த ஆத்துமாவும் பிரஹ்மமும் ஒன்று'** என்று கொண்டு, எப்பொழுதும் பிறவியிலே உழன்று திரிகிற ஆத்துமாவையே பிரஹ்மமாகச் சொல்லுகிற மாயாவாதிகளை இகழ்கிறார்.

கூடிற்றாகில் நல் உறைப்பு - முன் கூறியதனையே மீண்டும் கூறுகிறார். கூடாமை கூடினால் - முயற்கொம்பு ஆதல், ஆகாயத்தாமரை மலர் ஆதல், மலடி மகனாதல் பொருந்தாதன உலகத்திலே இருப்பனவாகப் பேசப்படுமாகில், ஆடல் பறவை உயர் கொடி எம் மாயன் ஆவது - சர்வேஸ்வரனுடைய வாகனம் என்னும் உவகையின் மிகுதியாலே ஆடாநின்றுள்ள பெரிய திருவடியைக் கொடியாக உடையனாய், ஆச்சரியமான குணங்களையும் செயல்களையுமுடையனாய், பெரிய திருவடி திருத்தோளிலே பின்பும் [1]பிறகுவாளியுமாய், சம்சாரியாகிய இவ்வாத்துமா இருப்பது. அது அதுவே - அந்த ஆத்தும வஸ்து அந்த ஆத்தும வஸ்துவே. ஒரு பொருள் வேறு ஒரு பொருள் ஆகாதே அன்றோ? 'நித்தியசூரிகளுக்கும் [2]அவ்வருகாக இச்சம்சாரத்தில் உழலுகின்ற ஆத்துமாக்களைச் சொல்லுவாரும் உளரோ?' என்ன, ஒரு பரிசே வீடைப் பண்ணி - சாஸ்திரங்களின் மூலமாக அன்றிக்கே, **அஞ்ஞானம் கழிதலே மோக்ஷம்** என்று தம்முடைய அறிவாலே ஒன்றைக் கட்டி. எதிர்வும் நிகழ்வும் கழிவுமாய் - இறந்தகாலம் எதிர்காலம் நிகழ்காலம் என்னும் மூன்று காலங்களிலும் உளராய். ஓடித்

---

1. பிறகு வாளி - பின்புறம் சார்த்துகின்ற ஆபரண விசேடம். சம்சாரி – பிறப்பு இறப்புகளில் நன்றாக உழன்று திரிகின்றவன்; ஆன்மா.

2. அவ்வருகாக - அப்பாற்பட்டு இருக்கின்ற சர்வேஸ்வரனாக.

திரியும் யோகிகளும் உளர் - பிரயோஜனம் இல்லாமலே தட்டித் திரியும் மஹாயோகிகளும் உளர். இல்லை அல்லரே - இல்லாமை இல்லை. [1]'காலம் அநாதி; செய்துவைக்கும் பாவங்களுக்கு எல்லை இல்லை; ஆன பின்னர், இப்படி இருப்பார் மஹாபுருஷர்கள் சிலர் உண்டாகக் கூடாதோ? இவ்வுலகத்தில் கூடாதது உண்டோ?' என்கிறார். (9)

859

**உளரும் இல்லை அல்லராய்**
**உளராய் இல்லை ஆகியே**
**உளர்எம் ஒருவர் அவர்வந்துஎன்**
**உள்ளத் துள்ளே உறைகின்றார்;**
**வளரும் பிறையும் தேய்பிறையும்**
**போல அசைவும் ஆக்கமும்**
**வளரும் சுடரும் இருளும்போல்**
**தெருளும் மருளும் மாய்த்தோமே.**

**பொ - ரை:** அடியார்களுக்கு 'இலர்' என்னுதபடி உளராய் இருப்பவரும், அடியர் அல்லாதார்க்கு 'இலர்' என்று சொல்லலாம் படியே உளராய் இருப்பவருமான எம் ஒருவர் உளர்; அவ்விறைவர் வந்து என் மனத்திலே நித்தியவாசம் செய்கிறார்; ஆதலால், வளர் பிறைக்கு இருப்பது போன்ற வளர்ச்சியும் தேய்பிறைக்கு இருப்பது போன்ற குறைவும் உடையதாகிச் சூரியனும் இருளும் போன்று மாறி மாறி வரக் கூடியதான ஞானத்தையும் அஞ்ஞானத்தையும் அழித்தோம்.

**வி - கு:** 'இல்லை அல்லராய் உளர்; இல்லையாகியே உளராய் எம் ஒருவர் உளர்,' என்று கூட்டுக. மூன்றும் அடி, எதிர் நிரல் நிறை; நான்காம் அடி, முறை நிரல் நிறை. 'சந்திரனுக்கு உள்ளது போன்று மாறி மாறி வரக் கூடியதான வளர்ச்சியும் குறைவும் இல்லாதபடியாகவும், சூரியனும் இருளும் மாறி மாறி வருவது போன்று ஞானமும் அஞ்ஞானமும் மாறி மாறி வாராதபடியாகவும் உள்ள ஒரே தன்மையதான ஞானம் கைவரப்பெற்றேம்' என்பது பின் இரண்டு அடிகளின் கருத்து.

**ஈடு:** பத்தாம் பாட்டு. [2]'சாங்கியம் முதலான குத்ருஷ்டி மதங்களிலே நான் புகாதபடி தானே யாதொரு

1. மாயாவாதிகளை 'யோகிகள்' என்று சொல்லுகிற ஆழ்வாருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார், 'காலம் அநாதி' என்று தொடங்கி.

2. பாசுரம் முழுதினையும் கடாட்சித்து அவதாரிகை அருளிச் செய்கிறார். 'சாங்கியம்' என்றது, நிரீஶ்வர சாங்கியனை. 'முத

பயனையும் கருதாது என்னை அங்கீகரித்து, நினைவிற்கு வாய்த்தலையான மனத்திலே நித்தியவாசம் செய்கையாலே, என்னுடைய எல்லாத் துக்கங்களும் போயின,' என்கிறார்.

இல்லை அல்லராய் உளரும் - [1]'**ஈஸ்வரன் என்பான் ஒருவன் உளன்; இல்லை என்ன ஒண்ணாதே இருக்கிறான் என்ற மாத்திரமாய் இருப்பன்**' என்பது, **ஸேஸ்வர சாங்கிய மதம்**: என்றது, 'விதி விலக்குகளைச் செய்வதற்கு ஆற்றல் இன்றிக்கே இருக்கும் கணவனைப்போன்று, ஈஸ்வரன் என்பான் உலகத்தை நியமித்தலில் ஆற்றல் இல்லாதவனாகி உளன் என்ற மாத்திரமேயாய் இருப்பன்' என்றபடி. இல்லை ஆகியே உளராய் - '**இல்லையாகியே காண் அவனுடைய உண்மை**' என்பான் **நிரீஸ்வர சாங்கியன்**: அந்த மதங்களை மறுக்கிறார். அன்றிக்கே, 'அடியர் அடியர் அல்லாதார் விஷயமாக்கி, இல்லை அல்லராய் உளராய் இருப்பர் அடியார்கட்கு; இல்லையாகியே உளராய் இருப்பர் அடியர் அல்லாதார்க்கு,' என்னுதல். உளர் எம் ஒருவர் - குணம் உலகம் முதலியவைகளால் நிறைந்தவராய்க்கொண்டு உளராய், அவற்றைக் காட்டி என்னை அங்கீகரித்த ஒப்பற்றவர். அவர் வந்து என் உள்ளத்துள்ளே உறைகின்றார் - குணங்களால் மேம்பட்டவரான அவர் என்னளவும் வந்து, மயர்வு அற மதிநலம் அருளித் தாம் திருத்தின நெஞ்சிலே நித்தியவாசம் செய்யாநின்றார்.

வளரும் பிறை போல ஆக்கமும், தேய் பிறை போல அசைவும், வளரும் சுடரும் போல் தெருளும் இருளும் போல் மருளும் மாய்த்தோம் - விளக்கின் முன்னர் இருள் நில்லாதவாறு போன்று, அவர் எம் மனத்திலே நித்திய

---

லான' என்றதனால், ஈஸ்வரன் உளன் என்கிற சாங்கியனைக் (ஸேஸ்வர சாங்கியன்) கொள்க. குத்ருஷ்டி – வேதவாக்கியங்களுக்கு நேர்ப்பொருள் காணாது மாறுபடப் பொருள் காண்பவன்.

1. முதல் அடிக்கு இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். 'இல்லை அல்லராய் உளரும்' என்பதனை ஸேஸ்வர சாங்கிய மத அநுவாதமாகவும், 'இல்லையாகியே உளர்' என்பதனை நிரீஸ்வர சாங்கியமத அநுவாதமாகவும் திருவுள்ளம் பற்றி முதற்பொருள் அருளிச்செய்கிறார், 'ஈஸ்வரன் என்பான்' என்று தொடங்கி. இரண்டாவது பொருளை அருளிச்செய்கிறார், 'அன்றிக்கே' என்று தொடங்கி.

வாசம் செய்கையாலே, [1]சந்திரனுக்கு வருதல் போன்று மாறி மாறி வரக்கூடியனவான வளர்ச்சியும் குறைவும், சூரியனும் இருளும் மாறி மாறி வருதல் போன்று மாறி மாறி வரக்கூடியனவான ஞான அஞ்ஞானங்களும் மாய்க்கப் பெற்றோம். (10)

860

**தெருளும் மருளும் மாய்த்துத்தன்**
**திருந்து செம்பொன் கழல்அடிக்கீழ்**
**அருளி இருத்தும் அம்மானும்**
**அயனும் சிவனும் திருமாலால்**
**அருளப் பட்ட சடகோபன்**
**ஓர்ஆ யிரத்துள் இப்பத்தால்**
**அருளி அடிக்கீழ் இருத்தும்நம்**
**அண்ணல் கருமா ணிக்கமே.**

**பொ - ரை:** மாறி மாறி வருகின்ற ஞானத்தையும் அஞ்ஞானத்தையும் அழித்து, தனது திருந்திய செம்பொன்னாற்செய்யப்பட்ட வீரக்கழலை அணிந்த திருவடிகளின்கீழே அருள் செய்து இருத்துகின்ற அம்மானும் பிரமனும் சிவனும் திருமாலால் கிருபை செய்யப்பட்ட ஸ்ரீசடகோபராலே அருளிச்செய்யப்பட்ட ஒப்பற்ற ஆயிரம் திருப்பாசுரங்களுள் இப்பத்துத் திருப்பாசுரங்களையும் கற்றவர்களை நம் அண்ணலாகிய கருமாணிக்கம் திருவருள் செய்து திருவடிகளின் கீழே இருத்துவான்.

**வி - கு:** 'திருந்து அடி, செம்பொன் கழல் அடி' என்றும், 'அம்மானும் திருமால், அயனும் சிவனும் திருமால்' என்றும் தனித் தனி கூட்டுக. 'மாய்த்து இருத்தும் அம்மான்' என்க. 'இப்பத்தால் கருமாணிக்கம் அருளி இருத்தும்' என்க.

**ஈடு:** முடிவில், [2]'இப்பத்தும் கற்றாரைத் தம்மை அங்கீகரித்தாற்போலே அங்கீகரித்துத் தன் திருவடிகளின் கீழே வைத்துக்கொள்வான்' என்கிறார்.

---

1. 'சந்திரனுக்கு வருதல் போன்று மாறி மாறி வரக்கூடியனவான வளர்ச்சியும் குறைவும்' என்றது, சரீரத்தினுடைய வளர்தல் தேய்தல்களைச் சொல்லுகிறது. 'மாறி மாறி வரக்கூடியனவான ஞான அஞ்ஞானங்கள்' என்றது, இவ்வுலக விஷய சம்பந்தமான ஞான அஞ்ஞானங்களைச் சொல்லுகிறது.

2. 'இப்பத்தால் அருளி அடிக்கீழ் இருத்தும் நம் அண்ணல் கருமாணிக்கம்' என்பதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். 'அருளப்பட்ட' என்றதன் பின் 'அருளி அடிக்கீழ் இருத்தும்' என்கையாலே, 'தம்மை அங்கீகரித்தாற்போலே அங்கீகரித்து' என்கிறார்.

தெருளும் மருளும் மாய்த்து - [1]பிரஹ்மாவின் இராஜசம் அடியாக வந்த குத்ருஷ்டி ஞானமானதும், சிவனுடைய தாமச ஞானம் அடியாக வந்த ஆகமம் முதலான புற ஞானமான அஞ்ஞானமும் மாய்த்து. அன்றிக்கே, 'தம்முடைய அநுபவத்துக்கு விரோதியான [2]இவ்வுலக விஷயமான ஞான அஞ்ஞானங்களை வாசனையோடே போக்கி' என்னுதல். தன் திருந்து செம்பொன் கழல் அடிக்கீழ் - [3]அடியார்களை வேறு ஒருவர் காலில் குனிய விடாததாய், விரும்பத்தக்கதாய், வீரக் கழலையுடைத்தான திருவடியின்கீழே. [4]இப்போதைய வீரக்கழல், பிராட்டி முன்னாக அடைந்தாரை அவன் கையிலும் பிறர் கையிலும் காட்டிக்கொடாத வீரக் கழல். அருளி இருத்தும் - கேவல கிருபையாலே இருத்தும். அயனும் சிவனும் அம்மானும் திருமாலால் - பிரமன் சிவன் முதலிய எல்லா ஆத்துமாக்களுக்கும் நிர்வாஹகனாய், சர்வேஸ்வரனை திருமகள் கேள்வனாலே. அருளப்பட்ட சடகோபன் - 'மயர்வு அற மதிநலம் அருளினன்' என்கிறபடியே, அருளுக்குப் பாத்திரரான ஆழ்வார். இந்த அருளுக்கு [5]வாய்த்தலை பிராட்டி ஆதலின், '**திருமாலால்**' என்கிறார்.

ஓர் ஆயிரத்துள் இப்பத்தால் நம் அண்ணல் கருமாணிக்கம் அருளி அடிக்கீழ் இருத்தும் - எல்லாப்

---

1. இப்பாசுரத்தில் மாய்த்ததாகச் சொல்லப்பட்ட ஞான அஞ்ஞானங்களை இரண்டு வகையாக அருளிச்செய்கிறார், 'பிரஹ்மாவின்' என்று தொடங்கி. 'குத்ருஷ்டி ஞானம்' என்றது, 'ஈஶ்வரன் உளன்' என்கிற சாங்கியனுடைய இராஜசத்தின் காரியமான அந்யதா ஞானத்தை. 'புற ஞானமான அஞ்ஞானத்தை' என்றது. 'ஈஶ்வரன் இலன்' என்கிற சாங்கியனுடைய தாமதத்தின் காரியமான விபரீத ஞானத்தை. அந்யதா ஞானமாவது, பிற தெய்வங்கட்குத் தன்னை அடிமையாக நினைத்தல். விபரீத ஞானமாவது, தனக்குத்தானே உரியவனாகவும் ஆத்துமாவோடு அநுபவிக்கிற இன்பமே இன்பமாகவும் நினைக்கும் கேவலனுடைய ஞானம்.

2. 'இவ்வுலக விஷயமான ஞான அஞ்ஞானங்கள்' என்றது, அவற்றின் பிரிவாலும் சேர்க்கையாலும் வருங்கலக்கமும் தெளிவும்.

3. 'திருந்து' என்றதன் பொருள், 'அடியார்களை வேறு ஒருவர் காலில் குனிய விடாததாய்' என்பது.

4. வீரக்கழலைச் சொன்னதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'இப்போதைய' என்று தொடங்கி. 'திருமாலால்' என்றதனைத் திருவுள்ளம் பற்றிப் 'பிராட்டி முன்னாக' என்கிறார்.

5. வாய்த்தலை - பிறப்பிடம்.

பொருள்கட்கும் நிர்வாஹகனாய் [1]விரும்பத்தக்க வடிவழகையும் குணங்களையுமுடையனான சர்வேஸ்வரன் தானே அருள் செய்து தன் திருவடிகளின்கீழே சேர்த்துக்கொள்ளும். [2]இத்திருவாய்மொழி கற்றார்க்குத் தாம் பெற்ற பேறு என்கிறார். (11)

## திருவாய்மொழி நூற்றந்தாதி

**கண்நிறைய வந்து கலந்தமால் இக்கலவி**
**திண்ணிலையா வேணுமெனச் சிந்தித்துத்—தண்ணிது**
**ஆருயிரின் ஏற்ற மதுகாட்ட ஆய்ந்துரைத்தான் [எனும்**
**காரிமா றன்தன் கருத்து.** (78)

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. மாணிக்கம் முடிந்து ஆளலாய் இருக்கையாலும், இனிய பொருளாய் இருக்கையாலும் 'விரும்பத்தக்க வடிவழகையும் குணங்களையுமுடையனான சர்வேஸ்வரன்' என்கிறார்.

2. 'அருளப்பட்ட சடகோபன் அருளி அடிக்கீழ் இருத்தும்' என்றதனால் பலித்த பாவத்தை அருளிச்செய்கிறார், 'இத்திருவாய்மொழி' என்று தொடங்கி.

## ஒன்பதாந்திருவாய்மொழி—'கருமாணிக்கமலை'

### முன்னுரை

ஈடு: [1]மேல் திருவாய்மொழியிலே, முதல் இரண்டரைப் பாசுரங்களாலே அவனுடைய அழகு, சீலம் முதலானவைகளை அருளிச்செய்து, அவற்றைப்போன்று சிறந்ததாய் அநந்யார்ஹமுமாய் இருக்கிற ஆத்துமசொரூபத்தை மற்றைப் பாசுரங்களாலே அருளிச்செய்து இனியர் ஆனார். அந்த அடிமை இன்பத்தாலே பிரீதராய், [2]பிரீதியின் பரவசத்தாலே தாமான தன்மை அழிந்து ஒரு பிராட்டி நிலையை அடைந்தவராய், தம்முடைய நிலையை அந்யாபதேசத்தாலே பேசி இனியர் ஆகிறார் இத்திருவாய்மொழியில். [3]'பிரீதியில் அந்யாபதேசம் உள்ளது இத்திருவாய்மொழி ஒன்றுமே' என்று ஆழ்வான் நிர்வஹிப்பர்.

[4]திருப்புலியூரில் எம்பெருமானோடே இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து பிரிந்தாள் ஒரு பிராட்டி, அவனாலே கொள்ளப்பட்ட மனத்தினையுடையளாய் இருக்கிறபடியை உயிர்த்தோழியானவள் கண்டு, [5]இவள் வடிவில் வேறுபாட்டாலும் சொற்களின் வேறுபாட்டாலும் புணர்ச்சி உண்டானமையை அறிந்தாள்; இவற்றில் ஒன்றையும் அறியாதே,

---

1. மேல் திருவாய்மொழிக்கும் இத்திருவாய்மொழிக்கும் உள்ள இயைபினை அருளிச்செய்கிறார், 'மேல் திருவாய்மொழியிலே' என்று தொடங்கி. அநந்யார்ஹம் – எம்பெருமானைத் தவிர வேறு ஒருவர்க்கும் உரியது அல்லாதது.

2. இத்திருவாய்மொழியில் வருகின்ற 'அப்பன் திருவருள் மூழ்கினளே' என்றதனைத் திருவுள்ளம் பற்றிப் 'பிரீதியின் பரவசத்தாலே' என்கிறார்.

3. 'பிரீதியின் பரவசத்தாலே அந்யாபதேசமாகப் பேசுகிறார் இத்திருவாய்மொழியில்' என்பதற்கு, ஆப்த சம்வாதம் காட்டுகிறார், 'பிரீதியில்' என்று தொடங்கி.

4. மேலே அருளிச்செய்ததனை விரித்து அருளிச்செய்கிறார், 'திருப்புலியூரில்' என்று தொடங்கி.

5. இத்திருவாய்மொழியில் வருகின்ற 'புனை இழைகள் அணிவும்' என்ற திருப்பாசுரத்தைத் திருவுள்ளம் பற்றி, 'இவள் வடிவில் வேறுபாட்டாலும்' என்றும், 'அருமாயன் பேர் அன்றிப் பேச்சு இலள்' என்பது போன்றவைகளைத் திருவுள்ளம் பற்றிச் 'சொற்களின் வேறுபாட்டாலும்' என்றும் அருளிச்செய்கிறார்.

[1]'என்னுடைய தந்தையாரான ஜனகமஹாராஜர், கணவனுடைய கலவிக்குத் தகுந்த என் வயதைப் பார்த்து' என்கிறபடியே, தகுந்த யௌவனப் பருவமுடையவள் என்னும் இவ்வளவே கொண்டு, தந்தை முதலியோர் 'சுயம் வரத்துக்கு இராஜபுத்திரர்கள் வருவது' என்று நகரத்திலே மணமுரசு அறைவிக்க, அதனைக் கேட்ட தோழியானவள், '**பரதன் இராஜா**' என்று அறைவித்த முரச ஒலி செவிப் பட்ட போது ஸ்ரீபரதாழ்வான் பட்ட எல்லாம் பட்டு, 'இம் முரச ஒலி பெண்பிள்ளை செவிப்படுமாகில் [2]மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழாத தன்மையளாய் இருக்கிற இவள் உயிர் தரியாள்; ஏற்கவே தடுக்க வேண்டும்; அது செய்யுமிடத்தில் திருப்புலியூர் நாயனாரோடே புணர்ச்சி உண்டானமையை அறிவிப்போமாகில் நம் காவற்சோர்வாலே வந்ததாம் என்றும்; அறிவியாது ஒழியில் இவள் வாழாள்; இனி, இவ்வளவில் செய்வது என்?' என்று பார்த்தாள்.

அங்ஙனம் பார்த்தவள், [3]'இவர்கள்தாமும் 'இவளுக்கு வடிவிலே ஒரு வேறுபாடு உண்டு; இதற்குக் காரணம் யாதோ?' என்று விசாரியாநின்றார்கள்; நாமும் இவர்கள் தம்மோடே ஆராய்வதிலே இழிந்து அவ்வழியாலே அறிந் தோமாய் இதனை விலக்க வேண்டும் என்று அறுதியிட்டுக் கொண்டு, 'இவள் வடிவு இருந்தபடியால் இவளுக்குத் **திருப்புலியூர் நாயனாரோடே** புணர்ச்சி உண்டாயிற்றுப் போலே இருந்தது; அவனுடைய குணங்களையும் செயல் களையுமே வாய் புலற்றாநின்றாள்; நீங்கள் செய்கிறவற்றைத் தவிருங்கோள்,' என்று [4]அறத்தொடு நிற்க எண்ணி

---

1. 'பதி ஸம்யோக ஸுலபம் வயோ த்ருஷ்ட்வா ச மே பிதா
சிந்தார்ணவகதః பாரம் நாஸஸாத ஆப்லவோ யதா'

என்பது, **ஸ்ரீராமா. அயோத்.** 118 : 34.

2. 'மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில்லேன் கண்டாய் மன்மதனே' என்பது, **நாய்ச்சியார் திரு.** 1 : 5.

3. 'தோழிக் குரியவை கோடாய் தேஎத்து
மாறுகோள் இல்லா மொழியுமா ருளவே'

என்ற களவியற்சூத்திரத்திற்கு நக்கீரனார் எழுதியுள்ள உரையை இங்குப் படித்து அறிதல் தகும்.

4. 'அறத்தொடு நிற்றல்' என்பது, தக்கதனைச் சொல்லி நிற்றல் என்றபடி. அறம் - தக்கது. அன்றிக்கே, 'பெண்டிர்க்கு அறம் என்பது கற்பு; கற்பின் தலைநிற்றல்' என்னலுமாம்.

ளாய், **'இது தருமம் அன்று'** என்ன, 'ஆனால், நீ சொல்லுகிற **திருப்புலியூர் நாயனுருக்கு** இவளுக்குத் தகுதியான சிறப்பு உண்டாக வேண்டும்; ஒப்பனையும் ஆண்மையும் குணமும் செல்வமும் கொடையும் காதலும் உண்டாக வேண்டும்; நல்ஒழுக்கமுடையனாக வேண்டும்; வேதார்த்த தத்துவஞானமுடையனாக வேண்டும்; இவை எல்லாம் உளவோ?' என்ன, கூறுகிறாள் மேல்: 'நீங்கள் கேட்கிற அளவு அன்று: இவை எல்லாம் குறைவு அற்றவன்: இவை ஒன்றும் இல்லையேயாகிலும், இவள்தான் **திருப்புலியூர் நாயனுருக்கே** உரியவள் ஆனாள்; நீங்கள் செய்கிற இவற்றைத் தவிர்மின்' என்று அதனை விலக்குகிறாள். இது, [1]**'மணவிலக்கு'** என்பது ஒரு கிளவித்துறை ஆகும்.

[2]திருமந்திரத்திலே, தனக்கும் பிறர்க்குமாய் இருக்கும் இருப்பைக் கழித்து அவனுக்கே அடிமையாதல் என்னும் தன்மையைச் சொல்லக்கடவது அன்றோ? அதனை இங்குச் சொல்லுகிறது. [3]மேல் திருவாய்மொழியில், அவனுக்கே அடிமையாக இருத்தல் என்னும் தன்மை சொல்லிற்று; இத்திருவாய்மொழியில் 'பிறர்க்கு உரியனாய் இருத்தலும், தனக்குத்தானே உரியனாய் இருத்தலும் ஆகிய இரண்டும் பேறு அன்று,' என்கிறது. [4]ஒரு கன்னி ஆகில், ஒருவனுக்கேயாய் இருக்கையும், ஒருவனுக்கே ஆனால் பிறர்க்கு உரியள் அல்லளாய் இருக்கையும் அன்றோ சொரூபம்?

---

1. 'மணவிலக்கு' என்பது, அகப்பொருள் துறைகளுள் ஒன்று.

2. சுவாபதேசப் பொருள் அருளிச்செய்கிறார், 'திருமந்திரத்திலே' என்று தொடங்கி. 'தனக்கும் பிறர்க்குமாய் இருக்கும் இருப்பைக் கழித்து' என்றது, 'பிரணவத்தில் நடுப்பதமான உகாரத்திலே, அவனுக்கே உரியனாக இருத்தலுக்கு விரோதியான பிறர்க்கு உரியனாக இருத்தல், தனக்குத்தானே உரியனாக இருத்தல் என்னும் இவற்றைக் கழித்து' என்றபடி.

3. 'ஆனால், மேல் திருவாய்மொழிக்கும் இத்திருவாய்மொழிக்கும் வேற்றுமை யாது?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், மேல் திருவாய்மொழியில்' என்று தொடங்கி.

4. 'அது யாங்ஙனம்?' என்ன, 'ஒரு கன்னி' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

861

**கருமா ணிக்க மலைமேல் மணித்தடம்**
**தாமரைக் காடுகள்போல்**
**திருமார்வு வாய்கண் கைஉந்தி கால்உடை**
**ஆடைகள் செய்யபிரான்**
**திருமால் எம்மான் செழுநீர் வயல்குட்ட**
**நாட்டுத் திருப்புலியூர்**
**அருமாயன் பேரன்றிப் பேச்சிலள் அன்னைமீர்!**
**இதற்குஎன் செய்கேனோ?**

பொ - ரை: கரியதாகிய ஒரு பெரிய மாணிக்கமலைமேலே தெளிந்த தடாகத்தில் பரப்பு மாறத் தாமரைகள் மலர்ந்தாற் போலே, திருமார்பும் திருவாயும் திருக்கண்களும் திருக்கைகளும் திரு உந்தியும் திருவடிகளும் தரித்திருக்கின்ற சிவந்த திருப்பீதாம் பரமும் என்னும் இவற்றையுடைய உபகாரகனும், திருமாலும், எம்மானும், செழுநீர் வயல் சூழ்ந்த குட்டநாட்டிலேயுள்ள திருப்புலி யூரில் எழுந்தருளியிருக்கின்ற அருமாயனும் ஆன எம்பெருமானது திருப்பெயரை அல்லாமல் வேறு ஒரு வார்த்தையும் பேசுகின்றாள் இலள்; அன்னைமீர்! இதற்கு என் செய்கேன்?

வி - கு: முதல் இரண்டு அடிகள் இல்பொருள் உவமை. இத் திருவாய்மொழி, அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஈடு: முதற்பாட்டு. [1]'அவனுடைய திவ்விய அவய வங்களின் அழகினைக்கண்டு மற்று ஒன்று அறியாதபடி ஈடுபட்டாள்,' என்கிறாள். 'கருமாணிக்கக் குன்றத்துத் தாமரைபோல் திருமார்பு கால் கண் கை செவ்வாய் உந்தி யான்' என்று 'இருத்தும் வியந்து' என்னும் திருவாய் மொழியில் அனுபவித்த அதனைத் தோழி பேச்சிலே பேசி இனியர் ஆகிறார்.

கருமாணிக்க மலைமேல் - [2]அனுபவிப்பார் நெஞ்சு குளிரும்படி கருமையையுடைத்தாய், பிரகாசத்தால் மிக்கு

---

1. பின் மூன்று அடிகளை நோக்கி அவதாரிகை அருளிச்செய் கிறார். 'இருத்தும் வியந்து' என்னும் திருவாய்மொழியில் அனு பவித்த அனுபவம் பின் நாட்டுகிறது என்கிறார், 'கருமாணிக்கம்' என்று தொடங்கி.

2. மாறுபட்ட நிறங்களாகிய கருமையும் செம்மையும் ஒரு பொருளில் இருத்தல் கூடாமையாலே, கருமையால் குளிர்த்தியை யும், மாணிக்கம் என்கையால் ஒளியின் மிகுதியையும், மலை என் கையாலே இனிமையின் மிகுதியையும் நினைக்கிறது என்கிறார், 'அனுபவிப்பார்' என்று தொடங்கி.

இருப்பதாய், தனக்குமேல் ஒன்று இல்லாததான இனிமையையுடையதாய் இருப்பது ஒரு மலைமேலே. அன்றிக்கே, 'கரிய நிறத்தோடு கூடியே இருள் நீக்குவது ஒருமலை' என்றுமாம், இல்பொருள் உவமை இருக்கிறபடி. மணித்தடம் தாமரைக்காடுகள் போல் - இப்படி இருப்பது ஒரு மலைமேலே, தெளிந்தது ஒரு தடாகமாய், அது காடுபடத் தாமரை பூத்தாற்போலே ஆயிற்றுத் திருமேனியும் அழகிய உறுப்புகளும் இருப்பது. செய்ய திருமார்வு - [1]பற்றுசான பெரிய பிராட்டியார் எழுந்தருளியிருக்கும் திருமார்வு. திருமார்விற்குச் சிவப்பு, பிராட்டி எழுந்தருளியிருப்பதனாலே. வாய் - [2]அவள் வழியாலே உறவு செய்தார்க்கு அனுகூலமான வார்த்தைகளைப் பேசுகிற திருப்பவளம். கண் - இன்சொற்கள் சொல்லப்புக்கு இனியனான தன்னைக் கண்ட காட்சியாலே தடுமாறினால், குறையும் தலைக்கட்டிக்கொடுக்கும் கண். கை - நோக்கிற்குத் தோற்றாரை அணைக்கும் கை. உந்தி - [3]உத்தேசியமான நிலத்திலே விழாநின்றால் நடுவே காற்கட்ட வல்ல திருவுந்தி. [4]நடுவே அமுக்கும் சுழி அன்றோ? கால் - இவை எல்லாவற்றிற்கும் தோற்று விழும் திருவடிகள். செய்ய உடை ஆடைகள் - [5]அங்கே கிடந்து அனுபவிக்கும் திருப் பீதாம்பரம்; [6]'கமலபாதம்' என்ன, 'சிவந்த ஆடை' என்னக் கடவது அன்றோ?

பிரான் - [7]'இவ்வுறுப்புகளினுடைய அழகுமுழுதும் பத்தர்களுக்காகவே' என்று இருக்குமவன். திருமால் -

---

1. பற்றுசு - பற்றுக்கோடு.

2. திருமார்பினைக் கூறிய பின் வாயினைக்கூறுதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'அவள் வழியாலே' என்று தொடங்கி. 'அவள்' என்றது, பெரிய பிராட்டியாரை.

3. உத்தேசியமான நிலம் - திருவடிகள்.

4. ரசோக்தியாக அருளிச்செய்கிறார், 'நடுவே' என்று தொடங்கி. சுழி - நீர்ச்சுழியும் திருநாபித்தடமும்.

5. அங்கே கிடந்து - திருவடிகளிலே கிடந்து.

6. 'திருவடிகளிலே விழுந்து அனுபவிக்கக் கூடியதாக இருக்குமோ?' என்ன, 'கமலபாதம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இது அமலனாதிபிரான். செய். 1. 'சிவந்த ஆடை' என்பது, ஷை. செய். 2.

7. 'பிரான்' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'இவ்வுறுப்புகளினுடைய' என்று தொடங்கி. பிரான் - உபகாரகன்.

[1]அழகே அன்றிக்கே, இவளுக்கு ஈடான மேன்மையும் உண்டு. 'யாவர் ஒருவருக்கு அந்த ஜனககுலத்தில் பிறந்த பிராட்டி மனைவி ஆக இருக்கிருளோ, அந்தப் பெருமானுடைய பராக்கிரமம் அளவிட்டு அறியக் கூடாததாய் இருக்கிறது' என்கிறபடியே. எம்மான் - [2]'இவளை அவனுக்குக் கொடுங்கோள்' என்ருல், 'இவளுக்கு அவன் தரம் போருமோ?' என்ன வேண்டாதபடி இருப்பதே என் **நாயன்!'** என்கிருள். செழு நீர் வயல் - அழகிய நிறைந்த தண்ணீரையுடைத்தான வயல் சூழ்ந்த. குட்டநாட்டுத் திருப்புலியூர் - குட்டநாடு என்பது அந்நாட்டுக்குப் பெயர். அருமாயன் - பெறுதற்கு அரிய ஆச்சரியத்தையுடையவன். பேர் அன்றிப் பேச்சு இலள் - பரம் வியூகம் விபவம் என்னும் இவைகட்கு உரிய திருநாமங்களைச் சொல்லுகின்றிலள். அன்றிக்கே, 'அல்லாத உகந்தருளின திவ்விய தேசங்களில் நிற்கிறவர்கள் பெயர்களும் சொல்லுகின்றிலள்' என்னுதல். அன்னைமீர் இதற்கு என் செய்கேனே - 'அவர்களோடு ஒக்கத் தானும் இப்போது அறிந்து சொல்லுகிருள்' என்னும் இடம் தோற்ற, 'இதற்கு நான் எதனைச் செய்வேன்?' என்கிருள். (1)

---

'நதேரூபம் நச ஆகாரஃ ந ஆயுதாநி ந ச ஆஸ்பதம்
ததாபி புருஷகாரோ பக்தாநாம் த்வம் ப்ரகாஶஸே'

என்பது, ஜிதந்தா தோத்திரம், 5.

1. திருமகள் கேள்வனுய் இருப்பது இறைமைத் தன்மைக்கு அடையாளம் ஆகையாலே அருளிச்செய்கிருர், 'அழகே' என்று தொடங்கி. அதற்குப் பிரமாணம் காட்டுகிருர், 'யாவர் ஒருவருக்கு' என்று தொடங்கி.

'அப்ரமேயம் ஹி தத் தேஜஃ யஸ்ய ஸா ஜநகாத்மஜா
நத்வம் ஸமர்த்தஸ்தாம் ஹர்த்தும் ராம சாபாஶ்ரயம் வநே'

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 37 : 18.

2. 'தோழியானவள் தலைவியைப்போன்று, தலைவனை 'எம்மான்' என்றல் பொருந்துமோ?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிருர், 'இவளை' என்று தொடங்கி.

'அன்னை என்னை என்றலும் உளவே
தொன்னெறி முறைமை சொல்லினும் எழுத்தினும்
தோன்ரு மரபின என்மனர் புலவர்.' (தொல். பொருள்.246.)

என்பது இலக்கணம்.

862

**அன்னை மீர்! இதற்கு என்செய் கேன்? அணி**
**மேருவின் மீது உலவும்**
**துன்னு சூழ்சுடர் நாயிறும் அன்றி**
**யும்பல் சுடர்களும்போல்**
**மின்னு நீள்முடி ஆரம் பல்கலன்**
**தானுடை எம்பெருமான்**
**புன்னை அம்பொழில் சூழ்திருப் புலியூர்**
**புகழும் இவளே.**

**பொ - ரை :** தாய்மார்களே ! அழகிய மஹா மேருமலையின் மேலே சஞ்சரிக்கின்ற, நெருங்கிச் சூழ்ந்த ஒளியையுடைய சூரியனை யும் அப்படியே ஒளியையுடைய பலவகைப்பட்ட நக்ஷத்திரங்களை யும்போலே, மின்னுகின்ற நீண்ட திருமுடியையும் ஆரங்களையும் பல வகைப்பட்ட ஆபரணங்களையும் ஆகிய இவற்றை எல்லாம் தரித் திருக்கின்ற எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற, புன்னை மரங் கள் நிறைந்த அழகிய சோலைகள் சூழ்ந்த திருப்புலியூர் என்னும் திவ்வியதேசத்தை இவள் புகழ்கிருள்; இதற்கு நான் என் செய் வேன் ?

**வி - கு :** மேரு திருமேனிக்கும், நாயிறு திருமுடிக்கும், பல்சுடர் கள் ஆரம் பல்கலன்கட்கும் உவமை.

**ஈடு :** இரண்டாம் பாட்டு. [1]'அவனுடைய ஆபரணங் களின் அழகில் அகப்பட்டாள்' என்கிருள்.

**அன்னைமீர் இதற்கு என் செய்கேன் -** [2]நீங்கள் கற்பித் திலீர்கோள்; நான் கற்பித்திலேன்; இதற்கு நான் எதனைச் செய்வேன்? **அணி மேருவின்மீது உலவும் துன்னு சூழ் சுடர் நாயிறும் -** அழகிதான மேருவின்மேலே சஞ்சரிக் கின்றவனுமாய், காண்கிற அளவு அன்றிக்கே, நெருங்கிச் சூழ்ந்த ஒளியையுடைய வேறுபட்ட சிறப்பினையுடைய ஞன சூரியனும். **அன்றியும் பல்சுடர்களும் போல் -** மற் றும் [3]அப்படியே இருக்கிற நக்ஷத்திரங்கள் முதலான

1. மூன்ரும் அடியை நோக்கி அவதாரிகை அருளிச்செய்கிருர்.

2. மீண்டும் இத்திருப்பாசுரத்தில் 'இதற்கு என்செய்கேன்?' என்கிறவளுடைய கருத்தினை அருளிச்செய்கிருர், 'நீங்கள்' என்று தொடங்கி. 'இதற்கு' என்றது, 'புகழ்ந்து பேசுகிற இதற்கு' என்ற படி.

3. 'துன்னு சூழ்சுடர்' என்றதனை, 'பல்சுடர்கள்' என்றதற்கும் அடையாகக் கூட்டிப் பொருள் அருளிச்செய்கிருர், 'அப்படியே' என்று தொடங்கி.

ஒளிப்பொருள்களும் போலே. மின்னு நீண்முடி - 'துன்னு சூழ் சுடர் ஞாயிறு' என்று சொன்ன திரு முடி. ஆரம் - [1]'அம் சுடர் மதியம் பூண்டு' என்கிறபடியே, பூண்ட திரு ஆரம். [2]பல்கலன் - அல்லாத திவ்விய ஆபரணங்கள். எம் பெருமான் - பிரீதியின் வார்த்தை. என்றது, 'இத்தன்மைகள் பொய் ஆகாதபடி இருந்த என் நாயன்' என்கிருள் என்றபடி. புன்னை பூம்பொழில் சூழ் - [3]சோலை வாய்ப்பை அன்றோ இவள் சொல்லுகிறது? என்றது, 'சோலையிலே கலந்தார் வார்த்தையாய் அன்றோ இது இருக்கிறது?' என்றபடி. திருப்புலியூர் புகழும் இவளே - [4]பிள்ளாய்! இவ்வூர் வாசி எங்கே அறிந்தாள்? [5]அவனுடைய ஆபரணங்களின் அழகினைப் போன்று அவ்வூரில் சோலையிலும் அவ்வூரிலும் குமிழிநீர் உண்டாளாய்த் தோற்றுகிறது இல்லையோ இவள் வார்த்தையாலே? (2)

863

**புகழும் இவள்நின்று இராப்பகல்**
**பொருநீர்க் கடல்தீப் பட்டுஎங்கும்**
**திகழும் எரியொடு செல்வது**
**ஒப்பச் செழுங்கதிர் ஆழிமுதல்**
**புகழும் பொருபடை ஏந்திப்**
**போர்புக்கு அசுரரைப் பொன்றுவித்தான்**
**திகழும் மணிநெடு மாடம்**
**நீடு திருப்புலி யூர்வளமே.**

---

1. 'அம் சுடர் மதியம் பூண்டு' என்பது, திருவாசிரியம், 1.

2. 'அம் சுடர் மதியம்' என்று ஆரத்தை மதியமாக உருவகம் செய்தபடியால், 'பல்கலன்' என்பதற்குப் 'பல்சுடர்களை' உவமையாகக் கொள்க.

3. புணர்ச்சிக்கு அடையாளம் சொல்லுகிற இவ்விடத்திலே, சோலையை வர்ணிக்கின்ற தலைவியின் வார்த்தையை அநுவதிக்கிற தோழியினுடைய மனக்கருத்தை அருளிச்செய்கிருர், 'சோலை வாய்ப்பை' என்று தொடங்கி.

4. 'இவள்' என்கிறவளுடைய கருத்தை அருளிச்செய்கிருர், 'பிள்ளாய்' என்று தொடங்கி. 'இவள்' என்றது, 'நனி இளையளான இவள்' என்றபடி.

5. 'இவள் புகழும்' என்கிறதற்குக் கருத்து அருளிச்செய்கிருர், 'அவனுடைய' என்று தொடங்கி.

**பொ - ரை :** அலைகள் மோதுகின்ற தண்ணீரையுடைய ஒரு கடலானது, நெருப்புக்கொளுந்தி எங்கும் விளங்குகின்ற தீக்கொழுந்தோடு செல்வதைப்போன்று, செழுமையான கிரணங்களையுடைய சக்கரம் முதலான புகழப்படுகின்ற போர் செய்கின்ற ஆயுதங்களை ஏந்திக்கொண்டு போரிலே புக்கு அசுரர்களை அழித்தவனை எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற விளங்குகின்ற அழகிய நீண்ட மாடங்கள் உயர்ந்து தோன்றுகிற திருப்புலியூர் என்னும் திவ்விய தேசத்தின் வளப்பத்தை இவள் இரவும் பகலும் இடைவிடாது புகழாநின்றாள்.

**வி - கு :** 'புலியூர் வளம் இவள் இராப்பகல் நின்று புகழும்,' எனக் கூட்டுக. பொருநீர்க்கடல் தீப்பட்டு எங்கும் திகழும் எரியோடு செல்வது, எம்பெருமான் திவ்விய ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு செல்வதற்கு உவமை.

**ஈடு :** மூன்றும் பாட்டு. 'ஒப்பனை அழகு இருடிகளும் சொல்லார்களோ? இது கலவிக்கு அறிகுறி ஆக வேண்டுமோ?' என்ன, [1]'கணவனை நன்றாகத் தழுவிக்கொண்டாள்' என்கிறபடியே, 'வீரத்தின் சிறப்பினைக் கண்டு அணைக்கும் பிராட்டி வார்த்தையாக அன்றோ இவள் வார்த்தை இருக்கிறது?' என்கிறாள்.

புகழும் இவள் நின்று இராப்பகல் - வீரத்தின் சிறப்பினை அறிந்து ஈடுபடும் பருவம் அன்றிக்கே இருக்கிற இவள், கேட்டார் வாய் கேட்டு ஒருகால் சொல்லிவிட்டாளோ? இரவு பகல் நின்று வாய் புலற்றுநின்றாள். 'நெஞ்சாலே நினைத்துவிட்ட அளவேயோ? நாணம் குடிபோய் வாய்விட்டுப் புகழ்கிறாள்' என்பாள், 'புகழும்' என்கிறாள். பொருநீர்க் கடல் தீப்பட்டு - பொராநின்றுள்ள திரையையுடைத்தான கடல் [2]நெருப்புக் கொளுந்தி. எங்கும் திகழும் எரியோடு செல்வது ஒப்ப - பரப்பு மாறிக்கொண்டு பிரகா

---

1. 'தம் த்ருஷ்ட்வா ஶத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம்
பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்தாரம் பரிஷஸ்வஜே'

என்பது, ஸ்ரீராமா, ஆரண். 30 : 40.

2. 'நெருப்பு' என்றது, வடவாமுகாக்கினியை; இது. கடலின் நடுவில் உள்ளது.

'தாற்றுக் கமுக வனம்சூழ் அரங்கர் சயனமுகக்
காற்றுப் புலரும் படிமுதல் வீசும் கறைக்களத்தன்
நீற்றுச் சிவந்தெழும் கார்ஆழித் தீச்சுடும் நீள்கழலின்
ஆற்றுப் பெரும்பெருக்கு அண்டம்எல் லாம்கொள்ளு
[மந்தத்திலே.'

என்ற திருவரங்கத்து மாலைச் செய்யுள் இங்குக் கருதல் தகும்.

சிக்கின்ற நெருப்போடே கூட நடந்து செல்லுமாறு போலே ஆயிற்று ஆயுதங்களால் வந்த புகரும் திருமேனியும் இருக்கிறபடி. புகழும் பொருபடை செழுங்கதிர் ஆழி முதல் ஏந்தி - போர்செய்கின்ற மிக்க ஒளியையுடைத்தான திருவாழி முதலான அழகிய ஆயுதங்களை ஏந்திக்கொண்டு. 'புகழும்படை' என்றது, [1]'ஞானமுடைய திருவாழி முதலான ஆயுதங்களாலே புகழப்பட்ட வெற்றி ஒலியையுடைய பெருமானை' என்கிறபடியே, அழகிய ஆயுதங்களால் புகழப்படுகின்ற எம்பெருமான்' என்றபடி. அங்ஙன் அன்றிக்கே, [2]'பிரசித்தமான வீரத்தையுடையவனும் பராக்கிரமங்களாலே மகிழச்செய்கின்றவனுமான ஸ்ரீராமபிரான்' என்கிறபடியே, 'கையும் ஆயுதமுமாகப் பொருத்தம் இருந்தபடி என்?' என்று பகைவர்கள் புகழும்படியைச் சொல்லுகிறது என்று **எம்பெருமானார்** அருளிச்செய்வர். போர் புக்கு அசுரரைப் பொன்றுவித்தான் - ஆயுதம் தரித்தவனாய்ப் போரிலே புக்குத் தீயோர்களை முடித்தான். பொன்றுவிக்கை - முடிக்கை. திகழும் மணி நெடு மாடம் நீடு திருப்புலியூர் வளம் - ஒளி பொருந்திய மாணிக்கங்களையுடைய ஓங்கின மாடங்களையுடைத்தாய்க் கற்பகாலம் வரையிலும் அழியாததான திருப்புலியூரில் அழகைப் புகழும். வளம் - அழகு. பகைவர்களுக்குக் கிட்ட ஒண்ணாமைக்கு அவன்தான் வேண்டா; அவ்வூரே அமையும். 'பிராட்டி ஸ்ரீமிதிலையை விட்டு [3]'ஸ்ரீ ராகவனுடைய வீட்டில்' என்று திரு அயோத்தியைப் புகழுமாறு போலே, இவள் திருநகரியை விட்டுத் திருப்புலியூர்ப் புகழையே புகழாநின்றாள்' என்பாள், '**வளமே புகழும்**' என்கிறாள். [4]'பகைவர்களாலே வெல்ல முடியாத அயோத்யை' என்கிற பரமபதத்தை நினைத்திருக்குமாறு போலேகாணும், இவள்

---

1. 'ஹேதிபி: சேதநாவத்பி: உதீரித ஜயஸ்வநம்'
என்பது, இரகுவமிசம், 10.

2. 'ஶத்ரோ: ப்ரக்யாத வீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை:
பஶ்யத: யுத்தலுப்த: அஹம் க்ருத: காபுருஷ: த்வயா'
என்பது, ஸ்ரீராமா, சுந். 106 : 6.

3. 'ஸமா த்வாதஶ தத்ர அஹம் ராகவஸ்ய நிவேஶநே
புஞ்ஜாநா மாநுஷாந் போகாந் ஸர்வகாம ஸம்ருத்திநீ'
என்பது, ஸ்ரீராமா. சுந். 33 : 17.

4. 'திகழும் மணிநெடு மாடநீடு' என்ற அடைமொழிக்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'பகைவர்களாலே' என்று தொடங்கி.

அவ்வூரை நினைத்திருப்பது. [1]'மாக வைகுந்தம் காண்ப தற்கு என்மனம், ஏகம் எண்ணும் இராப்பகல் இன்றியே' என்பதே அன்றோ அங்கும் இவர் பாசுரம்? (3)

864

**ஊர்வ ளங்கிளர் சோலையும்**
**கரும்பும் பெரும்செந் நெலும்சூழ்ந்து**
**ஏர்வ ளம்கிளர் தண்பணைக்**
**குட்ட நாட்டுத் திருப்புலியூர்**
**சீர்வ ளங்கிளர் மூவுலகு**
**உண்டு உமிழ்தே வபிரான்**
**பேர்வ ளங்கிளர்ந்து அன்றிப்**
**பேச்சிலள் இன்றுஇப் புனைஇழையே.**

**பொ - ரை:** ஊரினது வளப்பத்தைக் காட்டுகின்ற சோலையும் கரும்பும் பெரிய செந்நெற்பயிர்களும் சூழ்ந்து ஏர்களினுடைய வளப்பம் விளங்குகின்ற குளிர்ந்த வயல்களையுடைய குட்டநாட்டிலே உள்ள திருப்புலியூரில் எழுந்தருளியிருக்கின்ற, குணங்களின் நன்மை முழுதும் செயலிலே விளங்கும்படி மூன்று உலகங்களையும் உண்டு உமிழ்ந்த தேவபிரானுடைய அழகிய திருப்பெயர்களைக் கிளர்த்தியோடே இன்று சொல்லுகிருள்; அதனைத் தவிர்ந்து, இந்தப் புனைஇழை வேறு ஒரு வார்த்தையும் சொல்லுகிருள் இலள்.

**வி - கு:** புனையிழை: வாளா பெயராய் நின்றது. பேச்சு இலள். அன்றிக்கே, 'பேசிலள்' என்னலுமாம்.

**ஈடு:** நான்காம் பாட்டு. 'வெறும் ஆண்பிள்ளைத் தனமே போராதே, ஆபத்திற்குத் துணைவன் ஆகவும் வேண்டுமே?' என்ன, 'அக்குறைதான் உண்டோ இவனுக்கு?' என்கிருள். [2]புனல்தரு புணர்ச்சியை அன்றோ இவள் வாய் புலற்றுகிறது?

ஊர் வளம் கிளர்சோலையும் - ஊரில் செல்வத்தைக் கோட்சொல்லிக் கொடுக்கும் சோலை என்னுதல். அன்

1. 'இப்படிப் பரமபதத்தை உத்தேசியமாக நினைத்திருப் பாரோ?' என்ன, 'மாக வைகுந்தம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர். இது **திருவாய்.** 9. 3 : 7.

2. 'மூவுலகு உண்டு' என்றதனைத் திருவுள்ளம் பற்றிப் 'புனல் தரு புணர்ச்சி' என்று தொடங்கி அருளிச்செய்கிருர்.

றிக்கே, [1]ஊர்களுக்கு இட்டுச் சொல்லும் சிறப்புகளைத் தெரிவிக்கும் சோலை என்னுதல். கரும்பும் பெருஞ்செந் நெல்லும் சூழ்ந்து - வயல் அடங்கக் கரும்பும், அதற்கு நிழல் செய்யும் செந்நெல்லும் சூழ்ந்து கிடக்கும். ஏர் வளம் கிளர் - ஏரால் உண்டான அழகையுடைத்தாய் என்னுதல். ஏரினுடைய கூட்டத்தைச் சொல்லிற்றுதல். என்றது, உழுவது நடுவதாய்ச் செல்லாநிற்கை. தண் பணை - மருதநிலம் என்னுதல்; அழகிய நீர் நிலம் என்னுதல். மருதநிலம் என்றதனால் வயலைச் சொன்னபடி. சீர் வளம் கிளர் மூ உலகு உண்டு உமிழ் - குணங்களின் நன்மை அடையச் செயலிலே தெரியும்படி எல்லா உலகங்களையும் வயிற்றிலே வைத்து, வெளி நாடு காண உமிழ்ந்த. தேவபிரான் - அயர்வு அறும் அமரர்கள் அதிபதி. பேர் வளம் - திருப்பெயர்களினுடைய அழகு என்னுதல்; திருப்பெயர்கள் முழுதும் என்னுதல். கிளர்ந்து அன்றிப் பேச்சு இலள் - குணங்களுக்கும் செயல்களுக்கும் வாசகமான திருப்பெயர்களை, கடல் கிளர்ந்தாற்போலே பெரிய கிளர்த்தியோடே அன்றோ இவள் சொல்லுகிறது? என்றது, 'நாம் திருப்பெயரைச் சொல்லுமாறு போலேயோ இவள் சொல்லுகிறது?' என்றபடி. இன்று - இவ்வேறுபாடும் நன்மையும் நேற்று இல்லைகாண். இப்புனையிழையே - திருப்பெயரைச் சொல்லச் சொல்ல ஒருபடி ஆபரணம் பூண்டாற்போலே இராநின்றாள். (4)

865

**புனையிழைகள் அணிவும் ஆடை**
**உடையும் புதுக்க ணிப்பும்**
**நினையும் நீர்மைய து அன்றுஇவட்கு**
**இதுநின்று நினைக்கப் புக்கால்**
**சுனையி னுள்தடம் தாமரை**
**மலரும் தண்திருப் புலியூர்**
**முனைவன் மூவுல காளி**
**அப்பன் திருஅருள் மூழ்கினளே.**

---

1. ஊர்களுக்கு இட்டுச் சொல்லும்' என்று தொடங்கும் இரண்டாவது பொருளுக்குக் கருத்து, 'ஒருவன் ஓர் ஊரைக் கவி பாடும் போது அதன் சிறப்பினைப் பாடுதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது திருப்புலியூர்ச் சோலை' என்பது.

**பொ - ரை :** ஆபரணங்களை அணிந்துகொண்டிருக்கிற அலங்காரமும், ஆடையை உடுத்துக்கொண்டிருக்கின்ற அழகும், வடிவிலே பிறந்திருக்கும் புதிய ஒளியும் நின்று நினைக்கப்புக்கால் இவளுக்கு இது நினைக்கக்கூடிய தன்மையது அன்று; நீர்ச்சுனைகளிலே பெரிய தாமரைகள் மலர்கின்ற குளிர்ந்த திருப்புலியூரில் எழுந்தருளியிருக்கின்ற முன்னோன், மூன்று உலகங்களையும் ஆளுகின்றவன், உபகாரகன் ஆகிய எம்பெருமானுடைய திரு அருளிலே மூழ்கினாள்.

**வி - கு :** 'இவட்கு இது நினையும் நீர்மையது அன்று,' என்று மாற்றுக. முனைவன் - முன்னோன்.

**ஈடு :** ஐந்தாம் பாட்டு. [1]'ஆபத்திற்குத் துணையாதல் மாத்திரம் போருமோ? இவளுக்குத் தக்க செல்வமும் அவனிடத்தில் உண்டாக வேண்டுமே?' என்ன, 'அதுவும் உண்டு' என்கிறார்.

புனை இழைகள் அணிவும் - ஆபரணங்கள் நாம் பூட்டினாற்போலே இருந்தனவோ? ஆடை உடையும் - முகத்தலை அறிந்து உடுத்ததாய் இருந்ததோ? புதுக்கணிப்பும் - **நீர் பாய்ந்த வயல் போலே** இவள் வடிவிலே பிறந்த செவ்வி பாரீர்கோள்! நின்று நினைக்கப்புக்கால் நினையும் நீர்மையது அன்று இவட்கு இது - தொடங்கிவிடுதல் அன்றியே, காலம் என்னும் ஒரு பொருள் உள்ள வரையிலும் நின்று ஆராயப்புக்காலும், இவளுக்குப் பிறந்த இவ்வழகுகள் நினைக்கப் போகா. என்றது, [2]''பேசமுடியாது வேதவாக்குகள் திரும்பின' என்கிற விஷயத்தை அளவிட்டு அறியினும், இவள்படி அளவிட்டு அறிய முடியாது' என்றபடி.

'இவை எல்லாவற்றாலும் நீ அறிந்த தன்மை யாது?' என்ன, **'அப்பன் திருவருள் மூழ்கினள்'** என்கிறாள். சுனையினுள் தடம் தாமரை மலரும் - [3]ஒரு பூவே தடாகத்தைக் கண்செறி இட்டாற்போலே மலரும். என்றது, 'அவ்வூரில் பொருள்கள் பிறர்க்கு இடம் கொடா என்கிறாள்' என்றபடி. இதனால், இவளுக்குப் புறம்பு போக்கு இல்லை என்பதனைத் தெரிவிக்கிறாள். திருப்புலியூர் முனைவன் -

---

1. 'மூவுலகு ஆளி' என்றதனைத் திருவுள்ளம் பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'யதோவாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸாஸஹ' என்பது **தைத்திரீய. ஆனந்.** 9 : 1.

3. 'தாமரை' என்ற ஒருமைக்குப் பொருள் அருளிச்செய்கிறார், 'ஒரு பூவே' என்று தொடங்கி.

அவ்வூருக்கு முதல்வன். மூ உலகு ஆளி - எல்லா உலகங்களையும் ஆளுகின்றவன். என்றது, 'ஐஸ்வரியத்துக்குப் புறம்பு ஒருவரைத் தேடிப் போகவேண்டாதவன்' என்றபடி. அப்பன் - 'ஐஸ்வரியத்தாலும் குறைவறப் பெற்றேன்' என்று தன் பிரீதியாலே சொல்லுகிறாள். திரு அருள் மூழ்கினள் - [1]கடல் கொண்ட பொருளை எங்ஙனே மீட்கப் பார்க்கிறபடி? அருட்கடலிலே மூழ்கின இவளை மீட்கலாமோ உங்களாலே? (5)

866

**திருவருள் மூழ்கி வைகலும்**
**செழுநீர் நிறக்கண் ணபிரான்**
**திருவருள் களும்சேர்ந் தமைக்குஅடை**
**யாளம் திருந்த உள**
**திருவருள் அருளால் அவன்சென்று**
**சேர்தண் திருப்புலியூர்**
**திருவருள் கமுகு ஒண்பழத்**
**ததுமெல் லியல்செவ் விதழே.**

பொ - ரை: கடல் போன்ற திருநிறத்தையுடைய கண்ணபிரானுடைய திரு அருளிலே எப்பொழுதும் முழ்கித் திருவருள்களையும் அடைந்தமைக்கு அடையாளம் மறைக்க ஒண்ணாதபடி இருக்கின்றன; திருவருளைச் செய்வதற்காக அவன் சென்று தங்கியிருக்கின்ற குளிர்ந்த திருப்புலியூர் என்னும் திவ்விய தேசத்தில் திருவருளாலே வளர்கின்ற பாக்கு மரத்தினது சிறந்த பழத்தைப்போன்று இருக்கிறது, இப்பெண்ணினுடைய சிவந்த உதடானது.

வி - கு: செழுநீர் - கடல். 'அடையாளம் திருந்த உள; இம் மெல்லியல் செவ்விதழ் கமுகு ஒண்பழத்தது' என்று கூட்டுக. அருள ஆல் - அருளால் என விகாரப்பட்டது. அருள - அருள்வதற்கு. சென்று என்பது, ஈண்டுத் தன்மையின்கண் வந்தது. வந்து என்பது பொருள். கமுகு - பாக்கு மரம். அதன் பழம், செந்நிறமாய் இருக்கும்.

**ஈடு:** ஆறும் பாட்டு. [2]'செல்வம் மாத்திரம் போருமோ? வள்ளலாக இருக்கவேண்டாவோ?' என்ன, 'அவனுடைய வள்ளல் தன்மையிலே அகப்பட்டுக் கலந்தமைக்கு அடையாளம் தெளிவாக உண்டு' என்கிறாள்.

---

1. 'மூழ்கினள்' என்றதனால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார், 'கடல்கொண்ட' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார், 'அருட்கடலிலே' என்று தொடங்கி.

2. மூன்றும் அடியைத் திருவுள்ளம் பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

வைகலும் திரு அருள் மூழ்கி - பல காலம் அவனுடைய அருளிலே மூழ்கி. [1]நாம் கண்டதனை அறிவோம் இத்தனை அன்றோ? எதிர்சூழல் புக்கு இப்படிப் பரிமாறித் திரிகிறது எத்தனைகாலம் உண்டு, அதனை அறிந்தோமோ? செழுநீர் நிறம் கண்ணபிரான் - அழகு எளிமைகளைக் காட்டிக்காணும் இவளை இப்படி அகப்படுத்திற்று. திருவருள்களும் சேர்ந்தமைக்கு - அவனுடைய அருள் எல்லாம் இந்த வடிவு ஒன்றிலும் வந்து சேர்ந்தமைக்கு. அடையாளம் திருந்த உள - அவனுடைய அங்கீகாரம் பெற்றமைக்கு அடையாளம் தெளிவாக உள. 'நீ இதனை அறிந்தபடி யாங்ஙனம்?' என்ன, திருவருள் அருள - [2]குணகுண நிரூபணம் பண்ணாமல் அங்கீகரித்தலாகிற தன்மையைச் செய்வதற்காக; 'திருவருள் செய்கைக்காக' என்றபடி, அவன் சென்று சேர் தண் திருப்புலியூர் - கலங்காப் பெருநகரம் கலவிருக்கையாக இருக்க அன்றோ, அவன் இங்கு வந்து அணியன் ஆயிற்று? திருவருள் கமுகு ஒண்பழத்தது மெல்லியல் செவ்விதழே - 'திருவருட் கமுகு' என்று சில உண்டு; அதாவது, நீரால் வளருகை அன்றிக்கே, பெரியபிராட்டியாரும் சர்வேஸ்வரனுமாகக் கடாக்ஷிக்க அதனால் வளருவன சில; அதனுடைய அழகிய பழம் போலே இராநின்றது, மெல்லிய தன்மையளான இவளுடைய அதரம். அவ்வாயிலே அறியலாய் அன்றோ இருக்கிறது? (6)

867

**மெல்லிலைச் செல்வ வண்கொடிப்**
**புல்க வீங்குஇளந் தாள்கமுகின்**
**மல்லிலை கடல்வாழை ஈன்கனி**
**சூழ்ந்து மணம்கமழ்ந்து**
**புல்லிலைத் தெங்கி னூடு**
**கால்உலவும் தண் திருப் புலியூர்**
**மல்லல்அம் செல்வக் கண்ணன்**
**தாள்அடைந் தாள்இம் மடவரலே.**

---

1. 'மேல் நான்காம் பாசுரத்தில் 'இன்று இப்புனையிழை' என்றதற்கு, 'வைகலும் திரு அருள் மூழ்கி' என்றது மாறுபட்டது ஆகாதோ?' எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'நாம் கண்டதனை' என்று தொடங்கி.

2. அருள் என்னாமல், 'திருவருள்' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'குணகுணநிரூபணம்' என்று தொடங்கி.

**பொ - ரை :** மெல்லிய இலைகளையும் அழகிய வளப்பத்தையுமுடைய வெற்றிலைக் கொடியானது தழுவ, அதனாலே பருத்த இளமை பொருந்திய அடியையுடைய பாக்கு மரங்களின் அருகிலுள்ள பெரிய இலையையும் மடலையுமுடைய வாழை மரங்களினுடைய இனிய கனிகள் சூழ, அதனால் வாசனை வீசிக்கொண்டு, இலைகளையுடைய புல்லாகிய தென்னை மரங்களின் மத்தியில் தென்றற்காற்றுத் திரிகின்ற குளிர்ந்த திருப்புலியூரில் எழுந்தருளியிருக்கின்ற மிக்க செல்வ வளப்பத்தையுடைய கண்ணபிரான் திருவடிகளை இப்பெண்ணானவள் அடைந்தாள்.

**வி - கு :** சூழ்ந்து - சூழ; எச்சத்திரிபு. 'சூழ மணம் கமழ்ந்து கால் உலவும் திருப்புலியூர்' என்க. கால் - காற்று. புல் என்பது, தெங்கின் தன்மையை விளக்க வந்தது. 'புறக்காழையுடைய தென்னை' என்பது பொருள். 'புறக்கா ழனவே புல்லென மொழிப' என்பது தொல்காப்பியம். இனி, புல்லுதல் – தழுவுதலுமாம்.

**ஈடு :** ஏழாம் பாட்டு. [1]'கேவலம் கொடையாளனாக மட்டும் இருந்தால் போராதே? காதல் குணம் உண்டாக வேண்டுமே?' என்ன, 'அவ்வூரில் தாவரங்களுங்கூட ஒன்றற்கு ஒன்று பற்றுக்கோடாம்படி அன்றோ அவனுடைய காதல் குணம் இருந்தபடி?' என்கிறாள்.

மெல் இலைச் செல்வம் வண்கொடி புல்க - மிருதுவான இலையையுடைத்தாய், ஆர்வத்தையுடைத்தாய் இருக்கிற வளவிய கொடிகள் தழுவ; [2]தன் கணவனை கமுகுக்குத் தன் உடம்பை முற்றூட்டாகக் கொடுக்கும்போலே காணும். வீங்கு இளந்தாள் கமுகின் - கொடி தழுவத் தழுவ வளராநின்று, ஒரு காலைக்கு ஒருகால் இளகாநின்றுள்ள தாளையுடைய கமுகு. [3]'அந்த ஜனககுலத்தில்

---

1. முதல் மூன்று அடிகளைத் திருவுள்ளம் பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'கொடிக்கு வண்மை யாது?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'தன் கணவனை' என்று தொடங்கி. பூங்கொடிகளை மகளிராகவும் மரங்களை (ஆடவர்களாகவும்) கணவனாகவும் கூறுதல் கவி மரபு.

3. 'வண்கொடி புல்ல அதனாலே வீங்கும்' என்றதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார், 'அந்த' என்று தொடங்கி.

'அப்ரமேயம் ஹி தத் தேஜஃ யஸ்ய ஸா ஜநகாத்மஜா
நத்வம் ஸமர்த்தஸ்தாம் ஹர்த்தும் ராம சாபாஶ்ரயம் வநே'

என்பது, **ஸ்ரீ ராமா ஆரண்.** 37 : 18.

'வண்கொடி' என்பதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார், 'ஓர் ஆயர் மடக்கொடியானவள்' என்று தொடங்கி.

பிறந்த பிராட்டி எவருக்கு மனைவியாக இருக்கிறாளோ, அவருடைய பராக்கிரமம் அளவிடற்கு அரியது' என்னும் நியாயத்தாலே. 'ஓர் ஆயர் மடக்கொடியானவள் மது என்கிற அசுரனைக் கொன்ற கிருஷ்ணனுடைய தோளில் கொடிபோன்ற கையைக் கொடுத்தாள்' என்கிறபடியே. கமுகின் மல் இலை மடல் வாழை - கமுகோடே கூடின பெரிய இலையையும் மடலையுமுடைய வாழை; [1]வெற்றிலைக் கொடிக்கும் கமுகுக்கும் வெயில் தட்டாதபடி நிழல் செய்து நிற்குமாயிற்று வாழை. ஈன் கனி சூழ்ந்து - [2]பழத்தாறுகள் தெற்றிக் கிடக்குமாயிற்று.

புல் இலைத் தெங்கின் ஊடு - [3]ஒன்றற்கு ஒன்று தழுவப்பட்ட இலையையுடைய தெங்கு என்னுதல்; வாழை இலையோடே தழுவின இலையையுடைய தெங்கு என்னுதல்; சோலை நெருக்கத்தாலே [4]நேரிதான இலையையுடைய தெங்கு என்னுதல். மணம் கமழ்ந்து கால் உலவும் தண் திருப்புலியூர் - காற்றானது விளைவது அறியாதே புக்கு, வாசனையில் ஆசையாலே அங்கே இங்கே சுழித்து, வாசனையை ஏறட்டுக்கொண்டு வாழை நெருக்கத்தாலே நெருக்குப்பட்டு, சிறிய வெளியையுடைய தெங்கின் சோலையிலே புறப்பட்டுச் சஞ்சரிக்கும்படியான திருப்புலியூர். மல்லல் அம் செல்வம் கண்ணன் - தனக்குமேல் ஒன்று இல்லாததாய் அழகிதான செல்வத்தையுடைய கண்ணன். தாள் அடைந்தாள் - காதல் குணத்துக்குத் தோற்றுத் திருவடிகளைப் பற்றினாள். இம்மடவரல் - முன்பு எனக்கு அடங்கினவளாய்ப் போந்த இவள் கண்டீர், மீட்க ஒண்ணாதபடி ஆனாள். (7)

---

'பரிவ்ருத்தி ச்ரமேண ஏகா சலத்வலய ஸாலிநீ
ததௌ பாஹுலதாம் ஸ்கந்தே கோபீ மது நிகாதிந:'

என்பது, ஸ்ரீவிஷ்ணு புரா. 5. 13 : 54.

1. 'மல் இலை மடல் வாழை' என்றதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'வெற்றிலைக் கொடிக்கும்' என்று தொடங்கி.

2. 'சூழ்ந்து' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'பழத்தாறுகள்' என்று தொடங்கி. தெற்றிக் கிடத்தல் - நெருங்கிக் கிடத்தல்.

3. 'புல்லிலை' என்பதற்கு, மூன்று வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார்: புல்குதல் - தழுவுதல். 'ஒன்றற்கு ஒன்று' என்றது, தென்னை மரத்தின் இலையோடு தென்னை மரத்தின் இலை என்றபடி.

4. மூன்றாவது பொருளில் புல்லிதான இலை என்றபடி. அதனையே உரையில் 'நேரிதான இலை' என்கிறார்.

868

மடவரல் அன்னைமீர்கட்கு என்சொல்லிச்
சொல்லுகேன்? மல்லைச் செல்வம்
வடமொழி மறைவாணர் வேள்வியுள்
நெய்அழல் வான்பு கைபோய்த்
திடவிசும்பில் அமரர் நாட்டை
மறைக்கும் தண்தி ருப்புலியூர்
படவரவு அணையான்தன் நாமம்
அல்லால் பரவாள் இவளே.

**பொ - ரை:** இவளுக்கு இருக்கும் மடப்பத்தைத் தாய்மாரா கிய உங்களுக்கு எந்த வகையில் சொல்லுவேன்? மிகுந்த செல்வத்தையுடைய பிராமணர்கள் யாகங்களிலே ஓமம் செய்கின்ற நெய்யால் எரிகின்ற நெருப்பினின்றும் புறப்படுகின்ற மிக்க புகையானது சென்று திடமான ஆகாயத்திலே உள்ள தேவ லோகத்தை மறைக்கின்ற குளிர்ந்த திருப்புலியூரில் எழுந்தருளியிருக்கின்ற படத்தையுடைய பாம்பினைப் படுக்கையாகவுடைய எம்பெருமானது திருப்பெயரை அல்லாமல் வேறு ஒன்றையும் இவள் கூறுள்.

**வி - கு:** 'மடவரலாகிய இவள் பரவாள்' என்று கூட்டிப் பொருள் கோடலுமாம். 'மல்லல் வளனே' என்பது தொல்காப்பியம். நடு இரண்டு அடிகளால் பிராமணருடைய ஒழுக்கத்தைக் கூறியவாறு.

**ஈடு:** எட்டாம் பாட்டு. [1]'வெறுங்காதல் மட்டும் இருந்தால் போராதே, [2]'ஜனகர் முதலானோர் கர்மங்களைச் செய்ததினுலேயே சித்தியை அடைந்தவர்கள்' என்னும்படி அன்றோ இக்குடி இருப்பது? ஆகையினுல், இதற்குத் தக்க ஆசாரம் உண்டாக வேண்டுமே அவனுக்கு?' என்ன, 'ஆனல், அவ்வூரிலுள்ளாருடைய ஆசாரம் இருக்கிறபடியைக் கேட்கலாகாதோ?' என்கிருள்.

மடம்வரல் - மடம் வந்த படியை. 'இவள் எனக்கு அடங்கி இருந்தபடியை' என்றபடி. அன்றிக்கே, 'மடம்' என்பது, 'பற்றிற்று விடாமை' என்னுதல். அன்னைமீர்

1. நடுவிலே உள்ள இரண்டு அடிகளையும் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிருர்.

2. 'கர்மணைவ ஹி ஸம்ஸித்திம் ஆஸ்த்திதா ஜநகாதய:
லோக ஸங்க்ரஹமேவாபி ஸம்பஶ்யந் கர்த்தும் அர்ஹஸி'
என்பது, ஸ்ரீ கீதை, 3 : 20.

32

கட்கு - என் கையிலே இவளைக் காட்டித்தந்திருக்கிற உங்களுக்கு. என் சொல்லிச் சொல்லுகேன் - [1]'இவள் என் வழி வருகின்றிலள்' என்னவோ? 'இவள் எனக்கு அடங்கினவள்' என்னவோ? மல்லைச் செல்வம் வடமொழி மறைவாணர் வேள்வியுள் நெய் அழல் வான் புகை போய் - எல்லை இல்லாத செல்வத்தையுடையராய், புராண இதிகாசங்களுக்கும் வேதத்துக்கும் வியாசபாதம் செலுத்த வல்லராய் இருக்கின்ற பிராமணர்களுடைய யாகங்களில் நெய்யாலே ஓமம் செய்த நெருப்பில் உண்டான செறிந்த புகையானது சென்று. திடம் விசும்பில் அமரர் நாட்டை மறைக்கும் - ஒரு நிலையான தன்மையையுடைய ஆகாயத்தில் தேவலோகத்தை மறைக்கும். என்றது, 'சுவர்க்கத்திலுள்ளவர்களான தேவர்களைத் தேவமாதர்கள் முகம் கண்டு அனுபவிக்க ஒட்டாமல் மறைக்கும்' என்றபடி. அன்றிக்கே, 'போகத்துக்குத் தனியாகத் திரை வளையாநின்றது' என்றுமாம்.

தண் திருப்புலியூர் - [2]'நான் கர்மத்தைச் செய்யேனாயின் இந்த மனிதர்கள் கெட்டுப்போவார்கள்; சங்கரசாதி உண்டாவதற்கும் காரணன் ஆவேன்; இந்த மக்களைக் கொன்றவனுமாவேன்,' என்பதே அன்றோ அவன் படியும்? படம் அரவு அணையான்தன் பாதம் அல்லால் இவள் பரவாள் - தன் சம்பந்தத்தாலே மலர்ந்த படத்தையுடையனை திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடையவனுடைய திருநாமம் அல்லது வாய் புலற்றுகின்றிலள். என்றது, 'நான் அருகே இருக்க, கலவிக் காலத்தில் படுக்கை அழகையே சொல்லி வாய் புலற்றாநின்றாள்' என்றபடி. 'என்னை ஒழிய வேறு ஒன்றிலும் செல்லுவதற்கு அறியாதவள்' என்பாள், 'இவள்' என்கிறாள். (8)

---

1. 'நாமம் அல்லால் பரவாள் இவள்' என்றதனை நோக்கி, 'இவள்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

2. 'ஊரில் உள்ளார் ஒழுக்கத்தைக் கூறியவதனால் இவன் ஒழுக்கமுடையவன் என்பதனை நாம் அறியுமாறு யாங்ஙனம்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'நான் கர்மத்தை' என்று தொடங்கி. என்றது, 'அவனைக் கண்டு இவர்களும் செய்கிறார்கள்' என்றபடி.

'உத்ஸீதேயுः இமே லோகா நகுர்யாம் கர்மசேத் அஹம்
ஸங்கரஸ்ய ச கர்த்தா ஸ்யாம் உபஹந்யாம் இமாः ப்ரஜாः'

என்பது, ஸ்ரீ கீதை, 3 : 24.

869

பரவாள் இவள்நின்று இராப்பகல்
பனிநீர் நிறக்கண் ணபிரான்
விரவார் இசைமறை வேதியர்
ஒலிவே லையின்நின்று ஒலிப்பக்
கரவார் தடந்தொறும் தாமரைக்
கயம்தீ விகைநின்று அலரும்
புரவார் கழனிகள் சூழ்திருப்
புலியூர்ப் புகழ்அன்றி மற்றே.

பொ - ரை: குளிர்ந்த தண்ணீர் போலே இருக்கின்ற நிறத்தை யுடைய கண்ணபிரான் எழுந்தருளியிருக்கின்ற, எங்கும் பரந்து கலந்து மிக்கிருந்துள்ள சாமவேதத்தை ஓதுகின்ற அந்தணர்களுடைய ஒலியானது கடல் ஓசை போன்று நிலைபெற்று ஒலிக்க, முதலைகள் தங்கியிருக்கின்ற குளங்கள்தோறும் பெருமை பொருந்திய தாமரைகள் நிலை விளக்கு எரியுமாறு போன்று மலர்கின்ற, கட்டளைப்பட்டிருக்கின்ற வயல்கள் சூழ்ந்த திருப்புலியூர் என்னும் திவ்விய தேசத்தினது புகழை அல்லாமல் வேறு ஒன்றையும் எக்காலத்திலும் இவள் நின்று பேசமாட்டாள்.

வி - கு: 'இவள் இராப்பகல் திருப்புலியூர் புகழ் அன்றி மற்றுப் பரவாள்' என்று கூட்டுக. தீவிகை - விளக்கு.

ஈடு: ஒன்பதாம் பாட்டு. [1]'ஆசாரமே போருமோ? செய்கின்ற தொழிலை அறிவிக்கிற நூலைப் பார்த்து, அநுஷ்டானத்துக்கு வேண்டுவது அறிந்திருக்க ஒண்ணுதே? [2]'எல்லா நூல்களையும் ஆராய்ந்தவரும் எல்லா வேதங்களையும் ஆராய்ந்தவரும் ஆன ஜனகர்' என்பது அன்றோ இக்குடியிலுள்ளார் படி? இதற்குத் தக்க வேதார்த்த தத்துவஞானம் உண்டாக வேண்டுமே?' என்ன, 'அதற்கும் ஒரு குறை இல்லை' என்கிருள்.

---

1. 'விரவார் இசை மறை வேதியர் ஒலி' என்றதனைத் திருவுள்ளம் பற்றி அவதாரிகை அருளிச்செய்கிருர். ஒழுக்கம் உண்டான போதே தத்துவ ஞானம் இருப்பதும் போதரும் அன்றோ? அதனைத் தனித்துக் கேட்பது என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிருர், 'செய்கின்ற' என்று தொடங்கி.

2. 'மிதிலாதிபதிம் ஶூரம் ஜநகம் ஸத்ய விக்ரமம்
நிஷ்டிதம் ஸர்வ ஶாஸ்த்ரேஷு ஸர்வ வேதேஷு நிஷ்டிதம்'
என்பது, ஸ்ரீராமா. பால. 13 : 21.

பரவாள் இவள் நின்று இராப்பகல் - [1]இவள் அடைவு கெடப் பேசாநின்றாள்; இராப்பகல் பேசாநின்றாள். [2]இதற்கு வேறு பிரமாணம் தேட வேண்டுமோ? இவள் வார்த்தையே அன்றோ இதற்குப் பிரமாணம்? பனிநீர் நிறக் கண்ணபிரான் - குளிர்ந்த வடிவையும், அப்படியே இருக்கிற சீலத்தையுமுடையவன். விரவு ஆர் இசைமறை - எங்கும் ஒக்கப் பரம்பி மிக்கிருந்துள்ள ஒலியையுடைத்தான வேதம். அன்றிக்கே, 'விரைவார்' என்பது பாடமாயின், 'விரை' என்று இனிமையாய், 'வார்' என்று அதில் மிகுதியாய், இசை மறை என்று சாமவேதத்தைக் குறிக்கிறாள் என்னுதல். வேதியர் ஒலி - வேத ஒலியும் வேதார்த்தத்தை விசாரம் செய்கின்றவர்களுடைய ஒலியும். வேலையின் நின்று ஒலிப்ப - கடல் ஒலியைக்காட்டிலும் நின்று ஒலிக்க.

கரவு ஆர் தடந்தொறும் - முதலை மிக்கிருந்துள்ள பொய்கைதோறும். தாமரைக்கயம் தீவிகை நின்று அலரும் - தாமரையின் திரள் நிலை விளக்குப் போலே அலர்ந்து நிற்கும். கயம் - [3]பெருமை; அல்லது திரள். புரவு ஆர் கழனிகள் சூழ் - [4]தலைத்தரப் பெருக்காய் இருக்கின்ற வயல்கள் சூழ்ந்த. பட்டர், 'அவ்வூரில் பிராமணர் இறுத்து மாய்கிறார்கள், இவர் ஊருக்குச் சிறப்புச் சொல்லுகிறார் அன்றோ?' என்று அருளிச்செய்வர். திருப்புலியூர்ப் புகழ் அன்றி மற்றுப் பரவாள் இவள் நின்று இராப்பகல் - [5]அவ்வூரிலுள்ளாருடைய வேத ஒலியும், வேதார்த்தவிசாரம் செய்கின்ற ஆரவாரமும், அவ்வூரில்

---

1. 'திருப்புலியூர்ப் புகழ் அன்றி மற்றுப் பரவாள்' என்றதனால் கிடைக்கும் மறுதலைப் பொருளை அருளிச்செய்கிறார், 'இவள்' என்று தொடங்கி.

2. புணர்ச்சிக்குரிய அடையாளத்தைச் சொல்லுகிற இவ்விடத்தில் தலைவியினுடைய செய்கையைச் சொல்லுகிற தோழியினுடைய மனக் கருத்தை அருளிச்செய்கிறார், 'இதற்கு' என்று தொடங்கி. இதற்கு - புணர்ச்சி உண்டு என்பதற்கு.

3. 'தடவும் கயவும் நளியும் பெருமை'
என்பது தொல். சொல். சூ. 320.

4. தலைத்தரம் - தலையீடு.

5. 'இவள் அடைவு கெடப் பேசும் திருப்புலியூர்ப் புகழாவது யாது?' என்ன, 'அவ்வூரிலுள்ளாருடைய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

இனிமையுமே அன்றோ இவள் அடைவு கெடச் சொல்லா நிற்பது ? (9)

870

**அன்றி மற்றோர் உபாயம்என்?**
**இவள்அம் தண்து ழாய்கமழ்தல்**
**குன்றம் மாமணி மாடமாளிகைக்**
**கோலக் குழாங்கள் மல்கித்**
**தென்தி சைத்தில தம்புரை**
**குட்ட நாட்டுத் திருப்புலியூர்**
**நின்ற மாயப் பிரான்திரு**
**அருளாம் இவள்நேர் பட்டதே.**

பொ - ரை : இவள் அடைந்தது, மலைகள் போன்று பெரிய அழகிய மாணிக்கங்கள் பதித்த மாடங்கள் மாளிகைகள் இவற்றினுடைய திரள்கள் மிகுந்து, தெற்குத் திக்கிற்கே திலகத்தைப் போன்ற குட்டநாட்டுத் திருப்புலியூரில் நின்ற மாயப்பிரானுடைய திரு அருளேயாம்; அது அல்லாமல், இவள் சரீரம், அழகிய குளிர்ந்த திருத்துழாயினது வாசனையை வீசுவதற்கு வேறு ஒரு காரணம் யாது இருக்கின்றது ?

வி - கு : 'இவள் நேர்பட்டது, திருப்புலியூர் மாயப்பிரான் திருவருள் ஆம் ; அன்றி இவள், அம் தண் துழாய் கமழ்தல், மற்று ஓர் உபாயம் என் ?' என்று கூட்டுக.

ஈடு : பத்தாம் பாட்டு. [1]'நீ சொல்லுகிறவை எல்லாம் கிடக்க ; இவளை அவனுக்குக் கொடுக்க வேண்டுவதற்குத் தக்கபடி சிறந்த காரணங்கள் உண்டாகில் சொல்லிக் காணாய்,' என்ன, சொல்லுகிறாள்.

அன்றி மற்று ஓர் உபாயம் என் இவள் அம் தண் துழாய் கமழ்தல் - [2]வேறு மற்று ஓர் உபாயம் உண்டோ, இவள், அழகிதாய்க் குளிர்ந்த திருத்துழாய் நாறுகைக்கு?

---

1. முதல் அடியை நோக்கி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'அன்றி மற்று ஓர் உபாயம் என் இவள் அம் தண் துழாய் கமழ்தல்?' என்பதற்கு இரண்டு வகையாகக் கருத்து அருளிச்செய்கிறார் : 'இவள் உடல்' திருத்துழாய் நாறுதற்கு அவனோடு உண்டான புணர்ச்சியே காரணமாகும் ; இது அன்றி வேறு ஒரு காரணம் யாது ?' என்பது முதல் கருத்து. இதனையே அருளிச்செய்கிறார், 'வேறு மற்று' என்று தொடங்கி. இரண்டாவது கருத்தை இவ் வியாக்கியானத்தின் ஈற்றில் காண்க.

[1]இராச புத்திரனை அணையாதார்க்குக் கோயிற்சாந்து நாறுகைக்கு விரகு உண்டோ? என் உடம்பாதல் உங்கள் உடம்பாதல் திருத்துழாய் நாறுநின்றதோ? '**அம் தண் துழாய் கமழ்தல்**' என்பதற்கு, 'அங்கீகாரத்துக்கு அறிகுறியாக இருக்கிறது' என்பது உள்ளுறைப்பொருள் (சுவாபதேசம்). குன்றம் மா மணி மாடமாளிகைக் கோலம் குழாங்கள் மல்கி - மலை போன்று சலிப்பிக்க ஒண்ணாததாய், பெருவிலையனவான இரத்தினங்களாலே செய்யப்பட்டிருந்துள்ள மாடங்களினுடையவும் மாளிகைகளுடையவும் காட்சிக்கு இனிய குழாங்களால் மிக்கு. தென்திசைத் திலதம் புரை குட்டநாட்டுத் திருப்புலியூர் நின்ற மாயப்பிரான் - தெற்கில் திக்கிற்குத் திலகம் போலே இருக்கிற குட்டநாட்டுத் திருப்புலியூரிலே நின்றருளின ஆச்சரியத்தையுடையவன். என்றது, '**அவனுக்கு இவள் தக்கவள் அல்லள்** என்னும்படி அன்றோ அவன் குணங்களால் மேம்பட்டு இருப்பது?' என்றபடி. திரு அருளாம் இவள் நேர்பட்டது - [2]இவள் நேர்பட்டது அவன் திரு அருளாம். [3]அன்றிக்கே, 'அன்றி மற்று ஓர் உபாயம் என்? இவள் அம் தண் துழாய் கமழ்தல்' என்பதற்கு, அவன் திரு அருளேயாம் என்றாள்; 'இதுவேயோ, வேறு அடையாளம் உண்டோ?' என்ன, 'அம் தண் துழாய் கமழ்தல் ஒழிய வேறு அடையாளம் உண்டோ?' என்கிறாள் என்று பொருள் கூறலுமாம். (10)

871

**நேர்பட்ட நிறைமூ வுலகுக்கும்**
**நாய கன்தன் அடிமை**
**நேர்பட்ட தொண்டர்தொண் டர்தொண்டர்**
**தொண்டன் சடகோ பன்சொல்**
**நேர்பட் டதமிழ் மாலை**
**ஆயி ரத்துள் இவைபத்தும்**
**நேர்பட் டார்அவர் நேர்பட்டார்**
**நெடுமாற்கு அடிமை செய்யவே.**

---

1. 'திருத்துழாய் நாறினால் அது புணர்ச்சிக்கு அடையாளம் ஆகவேண்டுமோ?' என்ன, 'இராசபுத்திரனை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. 'இவள் நேர்பட்டது அவன் திருவருளாம்' என்றது, 'அவன் திருவருளுக்கு இவள் தக்கவள் ஆனாள்' என்றபடி.

3. மேலே 'அன்றி' என்பதற்குப் 'புணர்ச்சியை ஒழிய வேறு காரணம் யாது?' என்று பொருள் அருளிச்செய்கிறார். இங்கு

**பொ - ரை :** நிறைந்த மூன்று உலகங்கட்கும் தகுந்த தலைவனை சர்வேஸ்வரனுடைய அடிமையிலே சேர்ந்த அடியார்கள், அவர்க்கு அடியார்கள், அவர்க்கு அடியார்கள், அவ்வடியார்கட்கு அடிமைப்பட்ட ஸ்ரீசடகோபராலே அருளிச்செய்யப்பட்ட தமிழ் மாலை ஆயிரத்துள் இவை பத்துப் பாசுரங்களையும் கற்றுத் தெளிந்தவர் யாவர்? அவர், நெடுமாற்கு அடிமை செய்வதற்கு வாய்த்தவர் ஆவர்.

**வி - கு :** 'இவை பத்தும் நேர்பட்டார் யாவர்? அவர் நெடுமாற்கு அடிமை செய்ய நேர்பட்டார்' என்று 'யாவர்' என்ற சொல்லைக் கூட்டிப் பொருள் காண்க.

**ஈடு :** முடிவில், [1]'இப்பத்தைக் கற்றவர், சொரூபத்திற்குத் தகுதியான கைங்கரியத்தைச் செய்யப்பெறுவர்,' என்கிறார்.

நிறை மூ உலகுக்கும் நேர்பட்ட நாயகன் தன் அடிமை - குறைவு அற்ற மூன்று உலகங்கட்கும் நேர்பட்ட நாயகன். [2]'எந்த நாதனால் மூன்று உலகங்களும் நல்ல நாதனை உடையனவாகுமோ?' என்கிறபடியே, பாதுகாக்கப்படுகின்ற பொருள்களின் அளவு அன்றிக்கே இருக்கிற பாதுகாக்கின்ற தன்மையின் துடிப்பு. இதனால் **நாயகன் படி** சொல்லிற்று. 'அந்த இராமன் தகுந்த நாதன்' என்னுமாறு போலே. அடிமை நேர்பட்ட தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன் - இதனால், **இவர்படி சொல்லுகிறது.** அவன் இறைவனும் தன்மைக்கு எல்லை ஆயினாற் போன்று, இவர் அடிமையாந்தன்மைக்கு எல்லை ஆனபடி. சொல் நேர்பட்ட தமிழ்மாலை ஆயிரத்துள் இவை பத்தும் நேர்பட்டார் - அந்தத் தகுதியான நாயகனுக்குத் தகுதியான சொற்கள் வாய்ந்த தமிழ்த்தொடை ஆயிரத்திலும் இத்திருவாய்மொழி நேர்பட்டவர்கள். நெடுமாற்கு அடிமை செய்ய நேர்பட்டார் - இவர் பாசுரத்தைச் சொன்ன

---

'அன்றி' என்பதற்கு 'அம் தண் துழாய் நாறுதல் ஒழிய, புணர்ச்சிக்கு வேறு அடையாளம் உண்டோ?' என்று இரண்டாவது வகையாக வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார், 'அன்றிக்கே' என்று தொடங்கி.

1. பின் இரண்டு அடிகளைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'நேர்பட்ட நாயகன்' என்பதில் உள்ள 'நேர்பட்ட' என்றதன் முடிந்த நிலத்தை அருளிச்செய்கிறார், 'எந்த நாதனால்' என்று தொடங்கி. இந்தப் பொருளையுடைய சுலோகத்தை மேலே காண்க.

வர், இவர் செய்ய விரும்பிய கைங்கரியத்திலே சேரப் பெறுவர். நேர்படுகை - சொல்லப்படுகை; 'சொல்லப்பட்டார்' என்றபடி.

ஆக, இப்பாட்டால், சர்வேஸ்வரனுடைய சொரூபத்தையும், ஆத்தும சொரூபத்தையும், இவற்றைச் சொல்லுகிற பிரபந்தத்தின் சிறப்பினையும், இதனைக் கற்றவர்கள் பெறும் பேற்றின் சிறப்பினையும் சொல்லிற்றாயிற்று. (11)

## திருவாய்மொழி நூற்றந்தாதி

கருமால் திறத்தில்ஒரு கன்னிகையாம் மாறன்
ஒருமா கலவி உரைப்பால்—திரமாக
அன்னியருக்கு ஆகாது அவன்தனக்கே யாகும்உயிர்
இன்னிலையை ஓர்நெடி தா. (79)

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

## பத்தாந்திருவாய்மொழி - 'நெடுமாற்கடிமை'

### முன்னுரை

[1]மேல் இரண்டு திருவாய்மொழியாலுமாக ஆத்துமாவினுடைய அநந்யார்ஹ சேஷத்துவம் சொல்லிற்று; அதனால், 'அது பிறர்க்கும் உரித்து அன்று, தனக்கும் உரித்து அன்று' என்றாயிற்றுச் சொல்லிற்று. [2]பிரணவத்தில் நடுப்பதத்தாலும், 'நமஸ்' சப்தத்தாலும் சொன்ன அர்த்தமாயிற்றுச் சொல்லிநின்றது. [3]அநந்யார்ஹ சேஷத்துவத்துக்கு எல்லை அவன் அடியார்க்கு அடிமையாதல் அளவும் ஆதல் அன்றோ? அதனைச் சொல்லுகிறது இத்திருவாய்மொழியில். [4]அவன் அடியார்க்குக் கிரய விக்கிரயங்கட்குத் தகுதியான அன்றுதான் அவனுக்கு அடிமைப்பட்டமை நிலை நின்றதாவது, [5]'எந்தம்மை விற்கவும் பெறுவார்கள்' என்றே

---

1. மேல் திருவாய்மொழிக்கும் இத்திருவாய்மொழிக்கும் இயைபு அருளிச்செய்வதற்காக, மேல் இரண்டு திருவாய்மொழிகளிலும் அருளிச்செய்த பொருளை அநுவதிக்கிறார், 'மேல் இரண்டு' என்று தொடங்கி. அநந்யார்ஹ சேஷத்துவம் - வேறு ஒருவர்க்கும் அடிமையாகாது அவனுக்கே அடிமையாய் இருத்தல். 'பிறர்க்கும் உரித்து அன்று' என்றது, 'உணர்வைப்பெற ஊர்ந்து இற ஏறி' என்றதனைத் திருவுள்ளம் பற்றி. 'தனக்கும் உரித்து அன்று' என்றது, 'அருமாயன் பேர் அன்றிப் பேச்சு இலள்' என்றதனைத் திருவுள்ளம் பற்றி. அது - ஆத்துமா.

2. இப்பொருளைத் திருமந்திரத்தில் ஏறிட்டுக் காட்டுகிறார், 'பிரணவத்தில்' என்று தொடங்கி. 'நடுப்பதம்' என்றது, அ உ ம என்னும் மூன்றில் நடுவிலே உள்ள உகாரத்தை. 'அகார வாச்சியனை எம்பெருமானுக்கே மகாரவாச்சியனை ஆன்மா அடிமை' என்பது பொருள். 'நம:' என்ற பதத்துக்கு 'நான் எனக்கு உரியவன் அல்லன்' என்பது பொருள்.

3. மேல் இரண்டு திருவாய்மொழிகளிலும் உகாரத்தினுடையவும் நமசினுடையவும் பொருள் சொல்லப்பட்டது. இத்திருவாய்மொழியில் 'நமஃ' என்றதன் பொருள் சொல்லப்படுகிறது என்கிறார், 'அநந்யார்ஹ சேஷத்துவத்துக்கு' என்று தொடங்கி.

4. 'அப்படி இருக்குமோ?' என்ன, 'அவன் அடியார்க்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. கிரய விக்கிரயங்கட்குத் தகுதியாக இருப்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'எம்தம்மை' என்று தொடங்கியும், 'இறைவன் மாட்டு' என்று தொடங்கியும். 'எம்தம்மை' என்பது, **பெரியாழ்வார் திருமொழி**, 4. 4 : 10.

அன்றோ இருப்பது? 'இறைவன் மாட்டு அன்பு வசப்பட்ட மனமுடையவர்களுக்கு விற்றற்கு உரியவன்' என்னக் கடவதன்றோ? [1] அம்முணி ஆழ்வான் போசல ராச்சியத்தினின்றும் வந்த நாளிலே, பட்டர் கண்டருளி, 'நீ ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் போர அடிமை செய்து போந்தாய் என்று கேட்டோம்; உன் தன்மைக்குச் சேர 'நெடுமாற்கு அடிமை, என்னும் திருவாய்மொழியைக் கேள்' என்று அருளிச்செய்தாராம். [2] ஈஶ்வரனுக்கு அடிமை என்று அறிந்த அன்று மயங்கி மீளவுமாம். அவன் அடியார்கட்கு அடிமை' யாதல் அளவும் உணர்ந்தால் மீள வேண்டா அன்றோ?

[3] 'செல்வமே புருஷார்த்தம்' என்று இருப்பார், 'ஆத்துமலாபம் புருஷார்த்தம்' என்று இருப்பார், 'பகவானுக்கு அடிமைப்பட்டிருத்தல் புருஷார்த்தம்' என்று இருப்பார், 'ஈஶ்வரனை 'ஆநந்தமய:' என்று இருக்கும் இருப்புப் புருஷார்த்தம்' என்று இருப்பாராய் அன்றோ இருக்கிறார்கள்? இப்படிப்பட்ட புருஷார்த்தங்கள், தனித்தனியும், [4] திரளவும் நான் பற்றின பாகவதர்களுக்கு அடிமைப்பட்டு இருத்தல் ஆகிற புருஷார்த்தத்தோடு ஒவ்வாது

---

'தத்பக்தி நிக்ந மநஸாம் க்ரய விக்ரயார்ஹ:'

என்பது, பிரமாணம்.

1. இத்திருவாய்மொழி பாகவதர்களுடைய வைபவத்தைப் பற்றிச் சொல்லுகிறது என்கைக்கு, ஐதிஹ்யம் காட்டுகிறார், 'அம்முணி ஆழ்வான்' என்று தொடங்கி.

2. பகவானுக்கு அடிமைப்பட்டிருத்தலைக்காட்டிலும் பாகவதர்களுக்கு அடிமைப்பட்டிருத்தலின் சிறப்பினைக் காட்டுகிறார், 'ஈஶ்வரனுக்கு' என்று தொடங்கி. 'மயங்கி' என்றது, 'அவனுடைய ஐஶ்வரியம் முதலானவற்றைக் கண்டு மயங்கி' என்றபடி.

3. இத்திருவாய்மொழியிற்சொன்ன அர்த்தங்களை எல்லாம் சேர்த்துப் பிடித்து அருளிச்செய்கிறார், 'செல்வமே' என்று தொடங்கி. 'வியன் மூ உலகு' என்றதனைத் திருவுள்ளம் பற்றிச் 'செல்வமே' என்று தொடங்கியும், 'தானே தானே யானலும்' என்றதனைத் திருவுள்ளம் பற்றி 'ஆத்துமலாபம்' என்று தொடங்கியும், 'உறுமோ பாவியேனுக்கு?' என்றதனைத் திருவுள்ளம் பற்றிப் 'பகவானுக்கு' என்று தொடங்கியும், 'மூ உலகின் வீடு பேறு' என்றதனைத் திருவுள்ளம் பற்றி 'ஈஶ்வரனை' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்.

4. 'திரளவும்' என்றது, 'முழுதும்' என்றதனைத் திருவுள்ளம் பற்றி. 'நங்கட்கு' என்றதனைத் திருவுள்ளம் பற்றி, 'என்னோடு சம்பந்தமுடையார்க்கும்' என்கிறார்.

என்று எடுத்துக் கழிக்கவும் போராது; இப்படி இருக்கிற இதுவே காலம் என்னும் ஒருபொருள் உள்ளவரையிலும் எனக்கும் என்னோடு சம்பந்தமுடையார்க்கும் வாய்க்க வேண்டும்' என்று வேண்டிக்கொண்டு தலைக்கட்டுகிறார். ''பயிலும் சுடரொளி' என்னும் திருவாய்மொழியைக்காட்டிலும் இத்திருவாய்மொழிக்கு வாசி என்?' என்னில், [1]'பாகவதர்கள் இறையவர்கள்' என்றது அங்கு; 'பாகவதர்கள் இனியர்' என்கிறது இங்கு. [2]'கச்சதா மாதுல குலம்' - ஸ்ரீசத்துருக்நாழ்வானுக்காதல், இவ்வாழ்வார்க்காதல் அன்றோ இவ்வர்த்தங்களில் ருசி உள்ளது? 'நித்யஶத்ருக்ந:- எப்பொழுதும் உட்பகைவர்களாயுள்ள இந்திரியங்களை வென்றவர்' என்றதனால், பெருமாள் இனியர் என்று அவர் பக்கல் கண் வையான் என்று கூறப்பட்டது அன்றோ?

872

நெடுமாற்கு அடிமை செய்வேன்போல்
அவனைக் கருத வஞ்சித்துத்
தடுமாற்று அற்ற தீக்கதிகள்
முற்றும் தவிர்ந்த சதிர்நினைந்தால்
கொடுமா வினையேன் அவன்அடியார்
அடியே கூடும் இதுவல்லால்
விடுமாறு என்பது என்? அந்தோ
வியன்மூ வுலகு பெறினுமே?

**பொ - ரை :** நெடுமாலுக்கு அடிமை செய்கிறவனைப் போன்று அவனை நான் நினைத்த அளவிலே, தடுமாற்றம் நீங்கின கொடிய நல்

---

1. 'பாகவதர்கள் இறைவர்கள் என்றது அங்கு' என்றது, 'எம்மை ஆளும் பரமர்களே' என்றதனைத் திருவுள்ளம் பற்றி. 'விடுமாறு என்பது என் வியன்மூவுலகு பெறினுமே' என்றதனைத் திருவுள்ளம் பற்றி, 'பாகவதர்கள் இனியர் என்கிறது இங்கு' என்கிறார்.

2. 'இப்படிப் பாகவத சேஷத்துவம் உத்தேசியம் என்று இருந்தவர் உளரோ?' என்ன, உளர் என்பதற்கும், அவர் இனியர் என்பதற்கும் பிரமாணம் காட்டுகிறார், 'கச்சதா' என்று தொடங்கி.

'கச்சதா மாதுலகுலம் பரதேந ததா அநகஃ
ஶத்ருக்நோ நித்ய ஶத்ருக்நோ நீதஃ ப்ரீதிபுரஸ்க்ருதஃ'

என்பது, ஸ்ரீராமா. அயோத். 1 : 1.

இச்சுலோகத்தின் பொருளை மூன்றும் பத்து ஈட்டின் தமிழாக்கம், 232ஆம் பக். காண்க.

வினை தீவினைகள் முழுதும் நான் அறியாமலே நீங்கின; இனிப் பெறும் பேற்றினை நினைந்தால், கொடிய பெரிய தீவினையேனை யான், அவனுடைய அடியார்களுடைய திருவடிகளையே சேர்தலாகிய இதுவே அல்லாமல், பரந்த மூன்று உலகங்களைப் பெற்றாலும் அவன் அடியார்களுடைய திருவடிகளைச் சேர்தலாகிற இதனை விடுதல் என்பது ஒன்று உண்டோ? இதனை யான் சொல்லவும் வேண்டுமோ?

வி - கு: 'அவனைக் கருதத் தடுமாற்று அற்ற தீக்கதிகள் முற்றும் வஞ்சித்துத் தவிர்ந்த' என்று கூட்டுக. தவிர்ந்த - முற்று; எச்சமாகக் கொண்டு பொருள் கூறலும் ஆம். வஞ்சித்தலாவது, தான் அறியாதபடியே தன்னை விட்டு நீங்குதல். சதிர் - பேறு. 'வியன் மூவுலகு பெறினும் விடுமாறு என்பது என்?' என்று மாற்றுக.

இத்திருவாய்மொழி அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஈடு: முதற்பாட்டு. [1]"உலகத்தார் விரும்புகிற செல்வமாகிய புருஷார்த்தமும் நான் பற்றின புருஷார்த்தத்தோடு ஒவ்வாது என்று எடுத்துக் கழிக்கவும் போராது,' என்கிறார்.

நெடுமாற்கு - நெடுமாலுக்கு என்றபடி. 'மால்' என்றது, 'பெரியோன்' என்றவாறு. நெடுமையால் நினைக்கிறது, அதில் பெருமையை; 'அறப்பெரியோன்' என்றபடி. [2]தாம் அடிமைத் தன்மையின் எல்லையைக் கணிசிக்கிறவர் ஆகையாலே, அவனுடைய இறைமைத் தன்மையின் எல்லையைப் பிடிக்கிறார். அன்றிக்கே, மால் என்பது, [3]வியாமோகமாய், 'மிக்க வியாமோகத்தையுடையவன்' என்னுதல்; 'நெடுமையால் மிகுதியை நினைக்கிறது' என்றது, 'தன்னளவு அன்றியே தன்னுடையார் அளவிலே நிறுத்தும்படியான வியாமோகம்' என்றபடி. 'அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன்' என்னக்கடவது அன்றோ? அடிமை செய்வேன் போல் அவனைக் கருத - அவனுக்கு

---

1. 'வியன் மூவுலகு பெறினும் விடுமாறு என்பது என் அந்தோ' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'நெடுமால்' என்று அவன் பெருமையைச் சொன்னதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'தாம்' என்று தொடங்கி. கணிசித்தல் - விரும்புதல்.

3. வியாமோகம் - காதல். காதலின் முடிந்த நிலத்தை அருளிச்செய்கிறார், 'தன்னளவு' என்று தொடங்கி. அதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'அடியார்க்கு' என்று தொடங்கி. இது, 'அமலனாதிபிரான்'-1.

அடிமை செய்வாரைப்போலே அவனை நினைக்க. [1]அன்புள்ளவர்களைப் போன்ற பாவனையேயாய், ஆராய்ந்தால் அதுதானும் போட்கன். தடுமாற்று அற்ற தீக்கதிகள் முற்றும் வஞ்சித்துத் தவிர்ந்த - ஒரு நல்ல காரியத்தைச் செய்து, அது நின்று தடுக்குமது இல்லாமையாலே தடுமாற்றம் அற்று வசிக்கிற அறிவின்மை [2]முதலானவைகள் முழுதும் வஞ்சித்துத் தவிர்ந்தன. [3]'பகல் முழுதும் ஒருசேர வசிக்கக் கடவோம்' என்று சொல்லிவைத்து, இரவு வந்தவாறே ஒரு கலத்திலே உண்டுவைத்து ஒக்கக்கிடந்து விளக்கை எரியவைத்துப் போனது அறியாமே வஞ்சித்துப் போவாரைப்போலே. இனி, 'அடிமை செய்வேன் போல் அவனை வஞ்சித்துக் கருத' எனக் கூட்டி வஞ்சித்தலைத் தமக்கு அடைமொழி ஆக்கலுமாம்.

முற்றும் தவிர்ந்த - [4]நான் போக்கிக்கொள்ளுமன்றே அன்றோ கிரமத்தாலே போக்க வேண்டுவது? 'பத்திமானுடைய புண்ணிய பாவங்கள் அனைத்தும் அழிகின்றன' என்னக்கடவதன்றோ? 'எல்லாப் பாவங்களினின்றும் உன்னை விடுவிக்கிறேன்' என்கிறபடியே அன்றோ அவன் போக்கும் போது இருப்பது? சதிர் நினைந்தால் - அவன் திருவடிகளிலே குனிந்த அளவிலே தீவினைகள் அடங்கலும் போனபடியை நினைந்தால் பேற்றுக்கு எல்லையானுரை

1. 'அடிமை செய்யக் கருத' என்னாமல், 'செய்வேன் போல் கருத' என்றதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'அன்புள்ளவர்களை' என்று தொடங்கி. போட்கன் - பொய்யன்.

2. 'முதலானவைகள்' என்றது, கர்மம், வாசனை, ருசி, பிரகிருதி சம்பந்தம் என்னும் இவற்றை.

3. வஞ்சித்த பிரகாரத்தை அருளிச்செய்கிறார், 'பகல் முழுதும்' என்று தொடங்கி.

4. 'முற்றும் தவிரக் கூடுமோ?' என்ன, 'நான்' என்று தொடங்கி அதற்கு விடையும், 'பத்திமான்' என்று தொடங்கி அதற்குப் பிரமாணங்களும் அருளிச்செய்கிறார்.

> 'ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே
> ய ஏதத் ஏவம் வித்வான் அக்நிஹோத்ரம் ஜுஹோதி'

என்பது, **சாந்தோக்யம்**. 5. 24 : 3.

> 'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ
> அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாஶுச:'

என்பது, **ஸ்ரீ கீதை**, 18 : 66.

அன்றோ பற்ற அடுப்பது? [1]உறுவது பார்க்கில் அவன் அடியாரை அன்றோ பற்ற அடுப்பது? கொடு மா வினை யேன் - [2]பிரீதி தலைமண்டை இட்டுச் சொல்லுகிறார், பாட்டுக் கேட்பார், பாட்டு ஈடுபடுத்தினவாறே 'பாவி யேன்' என்னுமாறு போலே. அன்றிக்கே, 'முதன்முதலி லேயே அவன் அடியாரைப் பற்றப் பெற்றிலேன்' என் பார், 'பாவியேன்' என்கிறார் என்னலுமாம். அவன் அடியார் அடியே கூடும் இது அல்லால் - [3]தன் திருவடி களைப் பற்றினார் திறத்திலே அவன் மிக்க வியாமோகத் தைப் பண்ணுவானேயானால், அவன் விரும்பினாரை அன்றோ நமக்கும் பற்ற அடுப்பது? என்றது, [4]'அவன் அடியார்களிடத்தில் வியாமோகத்தையுடையவன் ஆனால், பிரியமானவர்களை அன்றோ பற்ற அடுப்பது?' என்றபடி. அவ்வடியார்கள் கூட்டத்தில் அவர்களோடு ஒத்தவராய் இருப்பவர் அல்லர்; அவன் இறைவனும் தன்மையின் முடிந்த எல்லையிலே நிற்குமாறு போலே, இவர் அடிமை யாந்தன்மையின் முடிந்த எல்லையிலே நிற்கிறாராதலின் 'அடியே' எனத் தேற்றேகாரம் கொடுத்து ஓதுகிறார். பிரிநிலையாகவுமாம். என்றது, 'அவர்களோடு ஒப்பூண் உண்ண இருக்குமவர் அல்லர்; அவர்கள் காலைப் பற்று மவர்' என்றபடி.

விடுமாறு என்பது என் - [5]புறம்பு உண்டான விஷயத் திலே விடுவது பற்றுவது ஆன செயலை இவ்விஷயத்திலும்

---

1. 'பாவத்தைப் போக்குமவன் அவன் ஆனால், அவனைப் பற்று மதன்றோ செய்யத்தக்கது?' என்ன, அதற்கு விடை அருளிச்செய் கிறார், 'உறுவது' என்று தொடங்கி. உறுவது - சொரூபத்தின் நிலை.

2. 'பாகவதர்களுக்கு அடிமைப்பட்டதால் உளதாய இன்பத் தாலே உகந்து பேசுமது ஒழிய, 'பாவியேன்' என்கிறது என்?' என்ன, 'பிரீதி' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'முதன்முதலிலே' என்றது, 'பொய்ந்நின்ற ஞானமும்' என்று தொடங்கிய காலத்திலே என்றபடி.

3. 'விரோதிகளைப் போக்குமவன் ஈஸ்வரனாய் இருக்க, அவனை விட்டு, அவன் அடியார்களைப் பற்றுகிறது என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'தன் திருவடிகளை' என்று தொடங்கி. 'நெடுமால்' என்பதற்கு அருளிச்செய்த இரண்டாவது பொருளைத் திருவுள்ளம் பற்றி இங்கு இப்பொருளை அருளிச்செய்கிறார்.

4. 'நெடுமால்' என்பதற்கு அருளிச்செய்த முதற்பொருளைத் திருவுள்ளம் பற்றி, 'அவன்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

5. 'புறம்பு உண்டான' என்று தொடங்கும் வாக்கியத்துக்குக் கருத்து; ஒரு புருஷார்த்தத்தைப் பற்றுமவன், அதைக்காட்டிலும்

செய்யவோ? அந்தோ நான் பற்றின பேற்றுக்கு [1]நாலு மூன்று படி கீழே நிற்கும் செல்வம் இத்தோடு ஒவ்வாது என்ன வேண்டுவதே என்று '**அந்தோ!**' என்கிருர். வியன் மூன்று உலகு பெறினும் - காடும் மலையுமான பாகங்களைத் திருத்தி அனுபவயோக்கியமாம்படி செய்து, மூன்று உலகங்களையும் எனக்குக் கையடைப்பு ஆக்கினுலும் விடுமாறு என்பது என்? அந்தோ! [2]செல்வத்துக்கு உலகத்தாரால் விரும்பிப் போற்றப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகின்ற தன்மை உண்டாகையினுல் அன்றே, உவமையாக எடுத்துச் சொல்லுதற்கு ஒண்ணுததாயிருந்தும், 'இது, நான் பற்றின பாகவதர்களுக்கு அடிமை என்பதனேடு ஒவ்வாது' என்ன வேண்டுகிறது? (1)

873

வியன்மூ வுலகு பெறினும்போய்த்
தானே தானே ஆனுலும்
புயல்மே கம்போல் திருமேனி
அம்மான் புனைபூங் கழல்அடிக்கீழ்ச்
சயமே அடிமை தலைநின்ருர்
திருத்தாள் வணங்கி இம்மையே
பயனே இன்பம் யான்பெற்றது
உறுமோ பாவி யேனுக்கே?

---

அதிகமானது ஒரு புருஷார்த்தத்தைக் கண்டால், தாழ்ந்த அதனை விடுத்து மேலானதைப் பற்றுவான் அன்றே? இங்கு எல்லை நிலமான புருஷார்த்தம் ஆகையாலே அங்ஙனம் செய்வதற்கு இல்லை என்பது.

1. 'நாலு' என்றது, ஐஶ்வரியம் புருஷார்த்தம் என்றிருப்பார், கைவல்யம் புருஷார்த்தம் என்றிருப்பார், பகவானுக்கு அடிமைப்பட்டிருத்தல் புருஷார்த்தம் என்றிருப்பார், ஈஶ்வரனுய் 'ஆனந்தமயஃ' என்றிருக்கும் இருப்புப் புருஷார்த்தம் என்றிருப்பார் என்னும் நான்கு வகையினரையும். இவற்றின் விளக்கத்தை இத்திருவாய்மொழியின் அவதாரிகையில் கண்டுகொள்க. 'மூன்று' என்றது, மேலே கூறிய நால்வகையினருள் முதலிலே உள்ள மூன்று வகையினரை.

2. 'நாலு மூன்று படி கீழே நிற்பதாய், எடுத்துக் கழிக்கவும் தகாததாய் இருக்கும் செல்வத்தை எடுத்துக் கழிப்பான் என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிருர், 'செல்வத்துக்கு' என்று தொடங்கி.

**பொ-ரை:** பரந்த மூன்று உலகங்களின் செல்வத்தைப் பெற்றாலும், இந்தச் சம்சார சம்பந்தம் நீங்கிக் கைவல்ய சுகத்தைப் பெற்றாலும், கார்காலத்து மேகம் போன்ற திருமேனியையுடைய எம்பெருமானது மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வீரக்கழலை அணிந்த திருவடிகளிலே அடிமை செய்தலையே பிரயோஜனமாகக் கொண்டு அந்த அடிமையின் மேல் எல்லையிலே தலைநின்ற பாகவதர்களுடைய அழகிய திருவடிகளை வணங்கி இப்பிறப்பிலேயே யான் பெற்ற பயனாகிய இன்பத்திற்கு ஒக்குமோ தீவினையேனாகிய எனக்கு?

**வி-கு:** 'மூவுலகத்தையும் அரசாளுகின்ற இன்பம், கைவல்ய இன்பம் என்னும் இவ்விரண்டு இன்பமும், பாவியேனாகிய யான் இம்மையிலே பெற்றதாகிய பயனும் இன்பத்திற்கு ஒவ்வா' என்பது கருத்து. உறுமோ - ஒக்குமோ? 'பாவியேனுக்கு' என்பதிலுள்ள நான்காம் வேற்றுமையைப் பிரித்து, 'இன்பம்' என்பதனோடு கூட்டுக.

**ஈடு:** இரண்டாம் பாட்டு. [1]'மேலே கூறிய செல்வத்தோடே ஆத்தும அனுபவத்தைச் சேர்த்துத் தந்தாலும் பாகவதர்களுக்கு அடிமைப்பட்டிருத்தலாகிற பேற்றுக்கு ஒவ்வாது' என்கிறார்.

வியன் மூ உலகு பெறினும் - பரந்திருக்கின்ற மூன்று உலகங்களின் செல்வத்தையும் என் ஒருவனுக்கே ஆக்கினாலும். போய்த் தானே தானே ஆனாலும் - சம்சார சம்பந்தம் அற்றுப்போய்க் கேவலம் ஆத்தும அனுபவமே பண்ணப் பெற்றாலும். '**தானே தானே**' என்ற அடுக்குத்தொடரால், சம்சாரத்திலே புத்திரர் பௌத்திரர் முதலானவர்களும் தானுமாய் வாழ்கின்ற வாழ்க்கையும் தவிர்ந்து, பரம பதத்தே போய், [2]'நான் பரமாத்துமாவுக்கு இனியன், நான் பரமாத்துமாவுக்கு இனியன்' என்று களிக்குமதனையும் விட்டு, கேவலம் தானே ஆகையைத் தெரிவித்தபடி. புயல் மேகம் போல் திருமேனி அம்மான் புனை பூங்கழல் அடிக்கீழ் - மழை மேகம் போலே இருக்கிற திருமேனியைக் காட்டி எல்லா உலகங்களையும் எழுதிக்கொண்டிருக்கிறவனுடைய, சாத்தப்பட்ட பூக்களையும் வீரக்கழலையுமுடைய

1. 'வியன்மூவுலகு பெறினும் போய்த் தானே தானே ஆனாலும் பயனே இன்பம் யான் பெற்றது உறுமோ?' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'அஹம் அந்நம் அஹம் அந்நம் அஹம் அந்நம்
அஹமந்நாதஃ அஹமந்நாதஃ அஹமந்நாதஃ'
என்பது, தைத்திரீயம்.

திருவடிகளின்கீழே. அழகு இல்லாதவனாயினும் விட ஒண்ணாத சம்பந்தத்தையுடையவனாதலின், **'அம்மான்'** என்கிறது.

சயமே அடிமை தலை நின்றார் - அடிமை செய்தலே பிரயோஜனமாக எல்லா அடிமைகளையும் செய்யுமவர்கள். அன்றிக்கே, 'அவனுடைய அழகிலே தோற்று எல்லா அடிமைகளையும் செய்யுமவர்கள்' என்னுதல். சயம் - ஸ்வயம், அல்லது ஜயம். திருத்தாள் வணங்கி - [1]சரீரத்துக்கு வேறுபட்டதாய் நித்தியமான ஆத்துமாவை அடைவதைக்காட்டிலும், அவன் வடிவு அழகிலே தோற்றிருக்குமவர்கள் வடிவில் ஓர் உறுப்பு அமையும் என்கிறார். இம்மையே பயனே இன்பம் - [2]'சரீரத்தை விட்டுச் சென்று அனுபவிக்குமது அன்றிக்கே, 'இந்த உலகத்திலே பிரயோஜன ரூபமான சுகமாயிற்று யான் பெற்றது. ஒரு சாதனத்தைச் செய்ய அச்சாதனத்தாலே **'கைபுகுரும்'** என்று நினைத்திருத்தல் இல்லை' என்பார், **'பெற்றது'** என்கிறார். உறுமோ - இதனோடு ஒக்குமோ? பாவியேனுக்கு - [3]நிலைநின்ற புருஷார்த்தத்தின் எல்லைக்கும் புருஷார்த்தம் அல்லாததற்கும் வாசி சொல்லும்படியான பாபத்தைச் செய்தவன். [4]பகவத் விஷய அனுபவம் அல்லாமையாலே ஆத்தும அனுபவம் புருஷார்த்தம் ஆகமாட்டாது; 'செல்வம் போலே நிலையற்றது அல்லாமையாலே நிலை நின்ற புருஷார்த்தமாகும்' என்றபடி. (2)

---

1. 'திருத்தாள்' என்றதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'சரீரத்துக்கு' என்று தொடங்கி.

2. 'இம்மையே' என்ற ஏகாரத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார், 'சரீரத்தை' என்று தொடங்கி.

3. நிலை நின்ற புருஷார்த்தத்தின் எல்லையாவது, பகவானுக்கு அடிமைப்பட்டிருத்தலுக்கு எல்லை நிலமான பாகவதர்களுக்கு அடிமைப்பட்டிருத்தல்.

4. 'நித்தியமான புருஷார்த்தமாய் இருக்கிற கைவல்யத்தைப் புருஷார்த்தம் அல்லாதது என்பான் என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'பகவத்விஷய அனுபவம்' என்று தொடங்கி.

874

உறுமோ பாவி யேனுக்குஇவ்
உலகம் மூன்றும் உடன்நிறைய
சிறுமா மேனி நிமிர்த்தஎன்
செந்தா மரைக்கண் திருக்குறளன்
நறுமா விரைநாண் மலர்அடிக்கீழ்ப்
புகுதல் அன்றி அவன்அடியார்
சிறுமா மனிச ராய்என்னை
ஆண்டார் இங்கே திரியவே.

பொ-ரை: வடிவில் சிறுத்தவர்களாய் அறிவில் பெருத்தவர்களாய் மனித வடிவினராய் என்னை அடிமை கொண்டவர்களான அவன் அடியார்கள் இந்த உலகத்திலே சஞ்சரித்துக்கொண்டிருக்க, (அவர்களுடைய மலர் அடிக்கீழ்ப் புகுதல் அன்றி) இந்த உலகங்கள் மூன்றும் ஒருசேர நிறையும்படியாகச் சிறிய பெரிய திருமேனியை வளரச்செய்த என் செந்தாமரைக்கண் திருக்குறளனுடைய, பெருமை பொருந்திய சிறந்த வாசனையையுடைய அன்று மலர்ந்த மலர் போன்ற திருவடிகளிலே புகுதலும் பாவியேனாகிய எனக்குப் பொருந்துமோ?

வி-கு: 'சிறு மா மனிசராய் என்னை ஆண்டாராகிய அவன் அடியார் இங்கே திரிய (அவர்கள் மலர் அடிக்கீழ்ப் புகுதல் அன்றி) திருக்குறளன் நறு மா விரை நாண்மலர் அடிக்கீழ்ப்புகுதல் பாவியேனுக்கு உறுமோ?' என்று கூட்டி, இடையே சில சொற்கள் பெய்து பொருள் முடிவு காண்க. குறளன்-வாமனன். 'நிமிர்ந்த குறளன்' என்க.

ஈடு: மூன்றாம் பாட்டு. [1]'செல்வம் என்ன, கைவல்யம் என்ன, இவற்றைக்காட்டிலும் வேறுபட்டதாய் உயர்ந்ததாய் உள்ள பகவல்லாபம் உண்டானாலும், இங்கே இருந்து ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அடிமை செய்கைக்கு அது ஒவ்வாது,' என்கிறார். [2]'உலகம் அளந்த பொன்னடிக்கு நல்ல ஸ்ரீ வைஷ்ணவர்கள் இங்கே இருந்து என்னை அடிமை கொள்ளில், அதற்கு, உலகம் அளந்தவன் திருவடிகளில் அடிமைதான் உறாது' என்கிறார்.

---

1. 'அவன் அடியார் சிறு மா மனிசராய் என்னை ஆண்டார் இங்கே திரிய, அன்றி, நறுமாவிரை நாண்மலர் அடிக்கீழ் உறுமோ?' என்பதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'ஆயின், பகவானை விட்டவராய் இருக்கின்றாரோ?' எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'உலகம்' என்று தொடங்கி. என்றது, 'பகவத் சம்பந்தத்தைக் கொண்டு அவர்களை விரும்புகையாலே அவனையும் விடவில்லை,' என்பது கருத்து.

உறுமோ பாவியேனுக்கு - ஆத்தும அனுபவத்தையும் செல்வத்தையும் குறித்துச் சொன்ன வார்த்தையை, பகவத் விஷயத்திலும் சொல்லுகிறார். மேலே கூறியவை போன்று கழிக்க ஒண்ணாது: புருஷார்த்தத்தின் எல்லை அல்லாமையாலே கழிக்க வேண்டும். என்றது, 'தள்ளவும் கொள்ளவும் ஒண்ணாதபடியான பாவத்தைச் செய்தேன்' என்றபடி. பாவியேன் - [1]முதல் நிலத்துக்கும் முடிந்த நிலத்துக்கும் வாசி சொல்ல வேண்டும்படியான பாவத்தைச் செய்தவன். இவ்வுலகம் மூன்றும் உடன் நிறைய - [2]சில ஏரிகள் வற்றிப் பாழாய்க் கிடக்க, நினைவு இன்றிக்கே மழை பெய்ய நிறைந்து நிற்குமாறு போலே, தன் வாசி அறியாத மூன்று உலகங்களும் ஒருக்காலே நிறையும்படி. சிறு மா மேனி நிமிர்த்த - [3]கண்களாலே முகந்து அனுபவிக்கலாம்படி சிறுத்து, அழகுக்கு எல்லை இன்றிக்கே இருக்கிற திருமேனியை நிமிர்த்த. எம் - [4]'உன்னைப் பிரமாணித்தார் பெற்ற பேறு' என்கிறபடியே, அடியார்கட்காகச் செய்த செயல் அன்றோ? செந்தாமரைக்கண் திருக்குறளன் நறு மா விரை நாண்மலர் அடிக்கீழ் புகுதல் - மலர்த்தி, செவ்வி, குளிர்த்திகளுக்குத் தாமரையை ஒப்பாகச் சொல்லலாம்படி இருக்கிற கண்ணழகையுடைய ஸ்ரீ வாமனனுடைய, அழகிய மிக்க வாசனையையுடைத்தான நாட்பூப்போலே இருக்கிற திருவடிகளின் கீழே புகுதல். [5]நறு மா விரை -

---

1. முதல் நிலமாவது, பகவானுக்கு அடிமைப்பட்டிருத்தல். முடிந்த நிலமாவது, பாகவதர்களுக்கு அடிமைப்பட்டிருத்தல்.

2. 'உடன் நிறைய' என்றதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'சில ஏரிகள்' என்று தொடங்கி.

3. 'சிறுமா' என்கிற சிறுமைக்கும் பெருமைக்கும் விரோதம் இல்லாமல் பொருள் அருளிச்செய்கிறார், 'கண்களாலே' என்று தொடங்கி.

4. 'இந்திரனுடைய செயலைச் செய்த வாமனனை இவர் 'எம்' என்பான் என்?' என்ன, 'உன்னை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இது, இரண்டாந்திருவந். 61. பிரமாணித்தார் - நம்பினவர்கள்.

5. 'நறு' என்பதற்கு 'அழகு' என்று மேலே பொருள் அருளிச்செய்தார்; 'நறு என்ற சொல் அழகு என்ற பொருளைக் காட்டுமோ?' என்ற வினாவினைத் திருவுள்ளத்தே கொண்டு அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'நறுமாவிரை' என்று தொடங்கி. அதாவது, 'நறு என்பதற்கு நன்றாய் என்பது பொருள்; நன்றாய் என்பதற்கு அழகியதாய் என்பது பொருள்' என்றபடி.

நன்றாய் மிக்க வாசனை. [1]நறு மா விரை நாண்மலர் அடி காணும் இவர்க்கு வேப்பங்குடி நீராய் 'உறுமோ' என்று கழிக்கிறது. என்றது, 'பகவத் விஷயத்தில் [2]வெளிறு கழிந்த பாகமான இது ஆயிற்று, இவர்க்குப் பாகவத புருஷார்த்தத்தைப் பற்றக் கழிக்க வேண்டியது ஆகிறது' என்றபடி.

அன்றி - அவர்களைத் தவிர்ந்து. அவன் அடியார் - ஸ்ரீ வாமனனுடைய அழகிலே தோற்றிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள். அவர்கள் ஆகிறார், [3]"முன்னம் குறள் உருவாய் மூ அடி மண் கொண்டு அளந்த மன்னன் சரிதைக்கே மாலாகிப் பொன் பயந்தேன்' என்று இருக்குமவர்கள். சிறு மா மனிசராய் - வடிவு சிறுத்துப் பிரபாவம் பெருத்திருக்குமவர்கள். [4]"சிறுமை பெருமையாகிற மாறுபட்ட இரண்டு தர்மங்கள் ஒரு பொருளில் சேர்ந்திருத்தல் எப்படி?' என்று பட்டர் இளமைப்பருவத்திலே ஆழ்வானைக் கேட்க, 'நம்மோடு ஒக்க 'அன்னம் பானம் முதலானவைகள் தாரகம்' என்னலாய், பகவத் விஷயத்தில் மூழ்கி இருக்கும் தன்மையைப் பார்த்தால் 'நித்தியசூரிகளோடு ஒப்பர்கள்' என்னலாய் இருக்கிற ஆண்டான் அருளாளப் பெருமாள், ஸ்ரீ கோவிந்தப்பெருமாள் இவர்கள்காண் சிறுமா மனிசர் ஆகிறார்கள்,' என்று பணித்தார். என்னை ஆண்டார் - என்னை அடிமை கொண்டவர்கள். இங்கே திரிய - என் கண் வட்டத்திலே சஞ்சரியாநிற்க. அன்றி, நறு மா விரை நாண்மலர் அடிக்கீழ்ப் புகுதல், பாவியே

---

1. வியாக்கியாதாவின் ஈடுபாடு, 'நறுமாவிரை' என்று தொடங்கும் வாக்கியம்.

2. 'வெளிறு கழிந்த பாகம்' என்றது, 'பரத்துவம் முதலானவைகளை நோக்க அதிசுலபமானது' என்றபடி. வெளிறு - அஸார அமிசம்; அதாவது, கிடைத்தற்கு அரிய தன்மை. 'இது' என்றது, 'உலகமூன்றும்' என்று தொடங்கிச் சொன்ன நீர்மை குறைவு அற்ற விஷயத்தை.

3. 'முன்னம் குறள்' என்றது, பெரியதிருமொழி, 9. 4 : 2.

4. 'சிறுமாமனிசர்' என்றதற்கு ஆப்த சம்வாதம் காட்டுகிறார், 'சிறுமை பெருமை' என்று தொடங்கி. ஆண்டான் - முதலியாண்டான். 'அருளாளப் பெருமாள்' என்றது, அருளாளப் பெருமாள் எம்பெருமானார் சீயரை. 'ஸ்ரீகோவிந்தப் பெருமாள்' என்றது, எம்பாரை. இம்மூவரும் எம்பெருமானாருடைய சிஷ்யர்கள்.

னுக்கு உறுமோ - [1]இவருடைய கண்ணிநுண் சிறுத்தாம்பு இருக்கிறபடி. [2]ஸ்ரீ மதுரகவிகட்கும் அடி இதுவே அன்றோ? [3]'பொய்ந்நின்ற ஞானம்' தொடங்கி 'முனியே நான்முகனே' என்ற திருவாய்மொழி முடிய இவரைத்தொடர்ந்து பின் பற்றிய இடத்து, ஆழ்வார் தமக்கும் பிரயோஜனமாகச் சொன்ன 'பயிலுஞ் சுடரொளி', 'நெடுமாற்கு அடிமை' என்னும் திருவாய்மொழிகளையே தமக்குத் தஞ்சமாகப் பற்றினார். [4]'எவை எங்களுடைய நல்லொழுக்கங்களோ, அவை கொள்ளத்தக்கவை என்று ஆசாரியன் சிஷ்யனுக்கு உபதேசிக்கிறார்,' என்னக் கடவது அன்றோ? (3)

875

***இங்கே திரிந்தேற்கு இழுக்குஉற்றுஎன்?***
***இருமா நிலம்முன் உண்டுமிழ்ந்த***
***செங்கோ லத்த பவளவாய்ச்***
***செந்தா மரைக்கண் என்அம்மான்***
***பொங்கேழ் புகழ்கள் வாயவாய்ப்***
***புலன்கொள் வடிவுஎன் மனத்ததாய்***
***அங்கேய் மலர்கள் கையவாய்***
***வழிபட்டு ஓட அருளிலே.***

பொ - ரை: முற்காலத்தில், மிகப்பெரிய இந்த உலகங்களை எல்லாம் உண்டு உமிழ்ந்த, சிவந்த அழகினையுடையதான பவளம் போன்ற திருவாயினையும், செந்தாமரை போன்ற திருக்கண்களையு

---

1. இப்பாசுரம் ஆழ்வாருடைய 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்கிறார், 'இவருடைய' என்று தொடங்கி. 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்பது, ஸ்ரீ மதுர கவிகள் தம் ஆசாரியரான நம்மாழ்வார் விஷயமாக அருளிச்செய்த பிரபந்தம்.

2. 'ஸ்ரீ மதுரகவிகளுக்கு அன்றோ, கண்ணிநுண் சிறுத்தாம்பு உள்ளது?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'ஸ்ரீ மதுர கவிகட்கும்' என்று தொடங்கி.

3. ஸ்ரீ மதுரகவிகள் இதனை அடியாகப் பற்றினமையை விளக்குகிறார், 'பொய்ந்நின்ற' என்று தொடங்கி.

4. 'ஆழ்வீர் தம்முடைய அநுசந்தானமாக அருளிச்செய்தாரே ஒழிய, இவரை அநுஷ்டிக்கச்சொல்லி உபதேசித்தாரோ?' என்ன, 'எவை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, 'முன்னோர்களுடைய அநுஷ்டானமே பின்னையோர்களுக்கும் அநுஷ்டானம்' என்றபடி.

'யாநி அஸ்மாகம் ஸுசரிதாநி
தாநி த்வயா உபாஸ்யாநி நோ இதராணி'

**என்பது, தைத்திரீயம்.**

முடைய என் அம்மான், பொங்கி எழுகின்ற தன் கல்யாண குணங்கள் என் வாயிலே ஆகவும், இந்திரியங்களைக் கொள்ளைகொள்ளுகின்ற திருமேனி என் மனத்திலேயாகவும், அந்தத் திருமேனிக்குப் பொருந்திய மலர்கள் என் கையிலே ஆகவும், ஸ்ரீவைஷ்ணவர்கள் செய்யும் கைங்கரிய நெறியிலே நானும் சென்று நடக்கும்படி திருவருள் செய்தால், பரமபதம் செல்ல விரும்பாமல் இந்த உலகத்திலே சஞ்சரிக்கின்ற எனக்கு வந்த குற்றம் யாது?

வி - கு: 'வாயவாய் மனத்ததாய் கையவாய் வழிபட்டு ஓட அருளில் இங்கே திரிந்தேற்கு உற்றது இழுக்கு என்?' என்று கூட்டுக. 'உற்றென்' என்பது, 'உற்றது என்' என்பதன் விகாரம். 'உற்றது இழுக்கு என்?' என்று மாற்றுக.

ஈடு: நான்காம் பாட்டு. ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு உகப்பான பகவத்கைங்கரியம் கிடைக்குமாகில், அவர்கள் சஞ்சரிப்பதனாலே கொண்டாடத் தக்கதான இந்த உலகத்தில் இருப்பே புருஷார்த்தம்,' என்கிறார். அன்றிக்கே, 'மேற்பாசுரத்திலே 'சிறு மா மனிசர்' என்றீர்; 'இங்கே' என்றீர்; இது இருள் தரும் மாஞாலம் அன்றோ? பாகவத கைங்கரியத்தை வளர்க்கக் கூடியதான பகவானுடைய அனுபவம் முற்றும் கிடைப்பது பரமபதத்திலே அன்றோ?' என்னில், 'அந்த அனுபவம் அவன் திருவருளாலே கிடைக்குமாகில் இங்கேயே வசித்தால் குற்றம் என்?' என்றது, 'அங்குத்தை அனுபவத்துக்கும் அவன் திருவருள் அன்றோ காரணம்? அது இங்கே கிட்டுமாகில், இங்கே வசிப்பதனால் குற்றம் என்?' என்கிறார் என்றபடி.

இழுக்குற்று என் - [2]தண்மை என்? இரு மா நிலம் முன் உண்டு உமிழ்ந்த - மிக்க பரப்பையுடைத்தான பூமியைப் பிரளய காலத்திலே வயிற்றிலே வைத்து நோக்கி, படைப்புக் காலம் வந்தவாறே உமிழ்ந்த. செம் கோலத்த பவளம் வாய் - [3]பிரளயத்திலே தள்ளினாலும் விட

1. இப்பாசுரத்தில் பகவானுக்குச் செய்யப்படும் கைங்கரியம் சொல்லிற்றேயாகிலும், இடத்திற்கு ஏற்பப் பாகவத கைங்கரியபரமாகப் பொருள் அருளிச்செய்கிறார், 'ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு' என்று தொடங்கி. மேல் பாசுரத்தோடே பொருந்த வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார், 'அன்றிக்கே' என்று தொடங்கி.

2. 'உற்று' என்பதனை இடைச்சொல்லாகக் கொண்டு, 'இழுக்கு என்' என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறார், 'தண்மை என்' என்று. தண்மை - தாழ்வு.

3. திருவதரத்தின் அழகானது மனத்தைக் கவரக்கூடிய தன்மை வாய்ந்தது என்று அழகின் மிகுதியை அருளிச்செய்கிறார்,

ஒண்ணாத திரு அதரத்தையுடையவன். சிவந்து அழகி தான பவளம்போலே இருக்கிற திரு அதரம். **செந்தாமரைக்கண் என் அம்மான் - என்னை நோக்காலே 'உனக்கு வெற்றி'** என்னப் பண்ணினவன். [1]மேலே கூறிய குணத்தாலும் அழகாலும் என்னை எழுதிக்கொண்டவன். பொங்கேழ் புகழ்கள் வாயவாய் - பொங்கி எழாநின்றுள்ள கல்யாணகுணங்கள் வாயிலே உளவாய். ஆற்றுப் பெருக்குப்போலே கிளர்த்தியையுடைத்தாய்ப் புக்கரைக் கொண்டு கிளரவற்றுன குணங்கள் ஆகலின், **'பொங்கு ஏழ்'** என்கிறது. ஏழ் - எழுதல்; மேலே கிளர்தல். அன்றிக்கே, 'பொங்கி கேழ்' என்று பிரித்து, 'பரந்து அழகான குணங்கள்' என்று பொருள் கூறலுமாம். பொங்கி - பரந்து. கேழ் - அழகு.

**புனல்கொள் வடிவு என் மனத்ததாய் -** எல்லா இந்திரியங்களையும் கொள்ளை கொள்ளத்தக்கதான வடிவு என் மனத்திலே இருப்பதாய். **அங்கு ஏய் மலர்கள் கையவாய் -** அந்த வடிவுக்குத் தகுதியான மலர்கள் கையிலே உளவாய். **வழிபட்டு ஓட அருளில் -** நெறிப்பட்டுச் செல்லும்படி அருளப்பெறில். என்றது, [2]'மனம் வாக்குக் காயம் என்னும் இம்மூன்றும் அவன் திருவடிகளிலே எப்பொழுதும் அடிமை செய்யும்படி அவன் திருவருளைப் பெற்றுல்' என்றபடி. இங்கே திரிந்தேற்கு இழுக்குற்று என் - [3]'பாகவதர்களுடைய பிரீதியின் உருவமான பகவத் கைங்கரியத்தை அவன் திருவருளாலே இங்கே பெறில் எனக்கு அதுவே பேறு' என்கிருர். (4)

---

'பிரளயத்திலே' என்று தொடங்கி. பதப்பொருள் அருளிச்செய்கிருர், 'சிவந்து' என்று தொடங்கி.

1. 'மேலே கூறிய குணத்தாலும் அழகாலும்' என்றது, 'இருமாநிலம் முன் உண்டு உமிழ்ந்த' என்பதனையும், 'செங்கோலத்த பவளவாய்' என்பதனையும் திருவுள்ளம் பற்றி.

2. 'பொங்கேழ் புகழ்கள் வாயவாய், என் மனத்ததாய், மலர்கள் கையவாய்' என்றதனைத் திருவுள்ளம் பற்றி, 'மனம் வாக்குக் காயம்' என்கிருர்.

3. 'பாகவத கைங்கரியத்தைப் புருஷார்த்தம் என்கிறவர், பகவத்கைங்கரியம் புருஷார்த்தம் என்கிறது என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிருர், 'பாகவதர்களுடைய' என்று தொடங்கி.

'திரிதந் தாகிலும் தேவ பிரானுடைக்
கரிய கோலத் திருவுருக் காண்பன்நான்'

என்று ஸ்ரீ மதுரகவிகள் அருளிச்செய்ததற்கும் இப்பாசுரமே காரணம் என்பர். ஆசாரிய ஹ்ருதயத்தில் 'அழும்தொழும் ஸ்நேஹ

876

வழிபட்டு ஓட அருள்பெற்று
மாயன் கோல மலர்அடிக்கீழ்ச்
சுழிபட்டு ஓடும் சுடர்ச்சோதி
வெள்ளத்து இன்புற்று இருந்தாலும்
இழிபட்டு ஓடும் உடலினிற்
பிறந்து தன்சீர் யான்கற்று
மொழிபட்டு ஓடும் கவிஅமுதம்
நுகர்ச்சி உறுமோ முழுதுமே?

பொ - ரை: பாகவதர்களுடைய வழியிலே பட்டு நித்திய கைங்கரியத்தைச் செய்யும்படி அவன் திருவருளைப் பெற்று, எம்பெருமானுடைய அழகிய மலர்போன்ற திருவடிகளின்கீழே, சுழித்துக்கொண்டு ஓடுகின்ற சுடர்ச்சோதி வெள்ளம் என்னும்படியான பரமபதத்திலே ஆனந்தத்தையே வாழ்ச்சியாக அடைந்திருந்தாலும், இழிக்கப்பட்டுச் செல்லுகின்ற இந்தச் சரீரத்தோடே பிறந்து, தன்னுடைய கல்யாண குணங்களை யான் கற்று, அவ்வனுபவத்தால் உண்டான பிரீதி சொற்களின் உருவமாக வெளி வருகின்ற கவிகளாகிய அமுதத்தை அடியார்களோடு சேர்ந்து அனுபவிக்கின்ற அனுபவத்திற்கு, மேலே கூறிய ஐஶ்வரிய கைவல்யங்கள் முழுதும் கூடினாலும் ஒக்குமோ?

வி - கு: 'அருள் பெற்று இன்புற்று இருந்தாலும் கவி அமுத நுகர்ச்சிக்கு முழுதும் உறுமோ?' என்க. உறுதல் - ஒத்தல்.

ஈடு: ஐந்தாம் பாட்டு. [1]'இப்படிப்பட்ட பகவானுடைய அனுபவமும் மேற்பாசுரங்களிற்கூறிய புருஷார்த்தங்களும் எல்லாம் கூடினாலும், 'தொண்டர்க்கு அமுது உண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்' என்கிறபடியே, பாகவதர்களுக்குப் பிரியமாகத் திருவாய்மொழி பாடி அடிமை செய்யும் இதனோடு ஒக்குமோ?' என்கிறார்.

---

பாஷ்ப அஞ்சலியோடே' என்று தொடங்கும் சூத்திரத்தில் 'புலன் கொள் நித்தியசத்ருவிசிந்தனம்' என்ற பகுதி இங்கு அநுசந்திக்கத் தகும். இவ்வாழ்வார் பாகவத சேஷத்துவ நிஷ்டையைக் கொண்டிருந்தும் தமக்கு உத்தேசியரான அந்தப் பாகவதர்களுக்குப் பிரீதியை உண்டாக்குவது என்னும் காரணத்தால், 'புலன்கொள் வடிவு என் மனத்ததாய்' என்று, பாகவத சேஷத்துவ நிஷ்டைக்கு விரோதியான பகவானுடைய விக்கிரகத்தைத் தம்முடைய நெஞ்சுக்கு விஷயமாக்கிக்கொண்டிருந்தார் என்பது அவ்வாக்கியத்தின் கருத்து.

1. பின் அடிகளைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். 'முழுதும்' என்றதனை நோக்கி, 'மேற்பாசுரங்களிற் கூறிய புருஷார்த்தங்களும் எல்லாம்' என்கிறார்.

வழிபட்டு ஓட அருள் பெற்று - கைங்கரியத்திலே நெறிபட்டுச் செல்லும்படி அவன் திருவருளைப் பெற்று. என்றது, 'நித்திய கைங்கரியம் பண்ணும்படியாக' என்றபடி. மாயன் - அழகு சீலம் முதலியவைகளால் ஆச்சரியத்தையுடையவன். கோலம் மலர் அடிக்கீழ் - காண்டற்கு இனிய மலர் போலே இருந்துள்ள திருவடிகளின்கீழே. சுழிபட்டு ஓடும் சுடர்ச்சோதி வெள்ளத்து - ஆற்றுப்பெருக்குப் போலே சுழித்துச் செல்லுகிற [1]ஒளி அலைகளையுடைத்தான பரமபதத்திலே; [2]'சூரியன் அக்கினி ஆகியவற்றின் ஒளிகளைக் கடந்துள்ள ஒளியோடு விளங்குகிற மஹாத்துமாவான ஸ்ரீமந் நாராயணனுடைய ஸ்ரீவைகுண்டம்' என்னக்கடவது அன்றோ? இன்புற்று இருந்தாலும் - [3]'இந்தப் பரமாத்துமா ஆனந்திப்பிக்கிறான்,' என்கிறபடியே, அவன் ஆனந்திப்பிக்க, ஆனந்தத்திலே மூழ்கியிருந்தாலும்.

முழுதும் - மேலே கூறிய செல்வம் முதலானவைகளும் இதனோடே கூடப் பெற்றாலும். இழிபட்டு ஓடும் உடலினில் பிறந்து - தாழ்வுக்கு எல்லையாம்படி கைகழியப் போன சரீரத்தோடே பிறந்து. தன் சீர் - நித்தியசூரிகளும் குமிழி நீர் உண்ணும் கல்யாண குணங்களை. யான் கற்று - நித்திய சம்சாரியாய், அந்தக் குணங்களுக்கு அடைவு இல்லாத நான் அறிந்து. மொழி பட்டு ஓடும் - அவை உள் அடங்காமையாலே சொல்லாய் வெளிப்படுகின்ற. கவி அமுதம் நுகர்ச்சி உறுமோ - திருவாய்மொழியாகிற அமிருதத்தை அனுபவிக்கையோடு ஒக்குமோ? 'அவன் அடியார் சிறு மா மனிசராய் என்னை ஆண்டார் இங்கே திரிய, நறு மா விரை நாள் மலர் அடிக்கீழ்ப் புகுதல்

---

1. 'சுழிபட்டு ஓடும்' என்கையாலும், 'வெள்ளம்' என்கையாலும், 'ஒளி அலைகளையுடைத்தான' என்கிறார். 'எல்லை இல்லாத தேஜஸ் சமுத்திரமான பரமபதத்திலே' என்பது பொருள்.

2. எல்லை இல்லாத பேர் ஒளிப்பிழம்பாய் இருக்கும் பரமபதம் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார், 'சூரியன் அக்கினி' என்று தொடங்கி.

'அத்யர்க்காநல தீப்தம் தத் ஸ்தானம் விஷ்ணோ: மஹாத்மந:
ஸ்வயைவ ப்ரபயா ராஜந் துஷ்ப்ரேக்ஷம் தேவதாநவை:'

என்பது, பாரதம், ஆரண்ய பர்வம்.

3. 'ஏஷஹ்யேவ ஆநந்தயாதி'

என்பது, தைத்திரீயம்.

உறுமோ?' என்றுரே மேல்! அதனை விட்டு, 'கவி அமுதம் நுகர்ச்சி உறுமோ முழுதும்?' என்கிருரே இங்கு? அதனை விட்டாராய் இருக்கிறதோ?' என்னில், விட்டிலர்; [1]'தொண்டர்க்கு அமுது உண்ணச் சொல் மாலைகள்' என்கையாலே, அவர்களுக்கு அடிமை செய்கிறபடி. (5)

877

*நுகர்ச்சி உறுமோ? மூவுலகின்*
*வீடு பேறு தன்கேழ்இல்*
*புகர்ச்செம் முகத்த களிறுஅட்ட*
*பொன்ஆழிக்கை என்அம்மான்*
*நிகர்ச்செம் பங்கி எரிவிழிகள்*
*நீண்ட அசுரர் உயிர்எல்லாம்*
*தகர்த்துஉண்டு உழலும் புட்பாகன்*
*பெரிய தனிமாப் புகழே.*

பொ - ரை : தனக்கு ஒப்பு இல்லாத, புள்ளிகள் பொருந்திய சிவந்த முகத்தையுடைய குவலயாபீடம் என்னும் யானையைக் கொன்ற, அழகிய மோதிரத்தைத் தரித்த என் அம்மானும், தம் சாதிக்கு ஏற்றதான சிவந்த தலை மயிரையும் நெருப்புப்போன்ற கண்களையும் உயர்ந்த சரீரங்களையுமுடைய அசுரர்களுடைய உயிர்களை எல்லாம் கொன்று உண்டு சஞ்சரிக்கின்ற கருடப்பறவையை வாகனமாகக் கொண்டுள்ளவனுமான எம்பெருமானது பெரிய ஒப்பற்ற சிறந்த கல்யாண குணங்களை அனுபவிக்கும் அனுபவத்திற்கு, மூன்று உலகங்களையும் அழித்தும் படைத்தும் செல்லுதலாகிற ஐஶ்வரிய இன்பம் ஒத்தது ஆகுமோ?

வி - கு : 'மூவுலகின் வீடு பேறு, தனி மாப்புகழ் நுகர்ச்சிக்கு உறுமோ!' எனக் கூட்டுக. வீடு - அழித்தல். பேறு - படைத்தல். 'அட்ட அம்மான்' என்க. 'உயிர் எல்லாம் தகர்த்து உண்டு உழலும் புள்' என்க.

ஈடு : ஆரும் பாட்டு. [2]'மேலே கூறப்பட்ட செல்வம் முதலானவைகளும், இறைவனுய் உலகத்தின் படைப்பு முதலானவற்றிற்கு எல்லாம் காரணமான சர்வேஶ்வரனுய்,

1. திருவாய்மொழி பாடுகையாகிற இதுவும் பாகவத கைங்கரியங்களிலே ஒன்று ஆகையாலே, இவ்விஷயத்தை இப்பாசுரத்தில் அருளிச்செய்கிருர் என்றபடி. 'தொண்டர்க்கு' என்பது, திருவாய். 9. 4 : 9.

2. 'புட்பாகன் பெரிய தனி மாப்புகழ் நுகர்ச்சி மூவுலகின் வீடு பேறு உறுமோ?' என்பதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச் செய்கிருர். 'ஒரு பாசுரத்துக்கு ஒரு பாசுரம் மேன்மை சொல்ல

தனக்குமேல் ஒன்று இல்லாத ஆனந்தத்தையுடையனாய் இருக்கும் இருப்பும் பாகவத பிரீதி ரூபமாகத் திருவாய்மொழி பாடி அனுபவிக்கும் இன்பத்தோடு ஒவ்வாது,' என்கிறார். 'புட்பாகனுடைய பெரிய ஒப்பு இல்லாத விலக்ஷணமான புகழைத் திருவாய்மொழியாலே நுகருமதற்கு, விபுவான அவனுடைய ஆனந்தமும் போராது,' என்கிறார்.

நுகர்ச்சி உறுமோ - திருவாய்மொழி முகத்தாலே பகவானுடைய குணங்களை அனுபவிக்குமதனோடு ஒக்குமோ? மூன்று உலகின் வீடு பேறு - தன் நினைவின் ஏகதேசத்தாலே உலகத்தைப் படைத்தல் அழித்தல்கள் ஆகும்படி இருக்கிற இறைமைத் தன்மைதான் அதனோடு ஒக்குமோ? [1]அவனுக்கு அன்றோ இது ஐஸ்வர்யமாய்த் தோற்றுவது? இவர்க்கு இது புருஷார்த்தமே; [2]'உலகத்தைப் படைத்தல் முதலான தொழில்கள் நீங்கலாக ஏனையவற்றில் பரமாத்துமாவோடு ஒத்தவன் ஆகிறான் முத்தன்,' என்கிறபடியே, சொரூபத்திற்குத் தக்கவை ஆனவை அன்றோ புருஷார்த்தமாவது? தன் கேழ் இல் புகர்ச் செம்முகத்த களிறு அட்ட - மிடுக்கிற்குத் தனக்கு ஒப்பு இன்றிக்கே இருப்பதாய், புகரையும் சீற்றத்தாலே சிவந்த முகத்தையுமுடைத்தான குவலயாபீடத்தை முடித்த. பொன் ஆழிக்கை - அழகிய திரு ஆழி மோதிரத்தாலே அலங்காரத்தையுடைத்தான திருக்கையையுடையவன். [3]குவலயாபீடத்தின் கதுப்பிலே அடித்த போது கையும்

---

வேண்டுகையாலே, மேற்பாசுரத்திலே 'முழுதும்' என்றதனைக் கடாட்சித்து 'மேலே கூறப்பட்ட செல்வம் முதலானவைகளும்' என்கிறார். 'மூவுலகின் வீடு பேறு' என்றதனைத் திருவுள்ளம் பற்றி 'இறைவனாய்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். அந்வயம் கூறுமுகத்தால் மேலே கூறியதை விவரணம் செய்கிறார், 'புட்பாகனுடைய' என்று தொடங்கி.

1. 'இறைமைத்தன்மைக்குரியதான உலகப்படைப்பு முதலான தொழில்களைச் செய்கின்ற முதன்மையை 'அத்தோடு ஒக்குமோ' என்னலாமோ?' என்ன, 'அவனுக்கு அன்றோ' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. 'இவருக்கு இது புருஷார்த்தமாம்,' என்கைக்குப் பிரமாணம் காட்டுகிறார், 'உலகத்தை' என்று தொடங்கி.

'ஜகத் வ்யாபார வர்ஜம்'

என்பது, **சாரீ.** மீமா. 4. 4 : 17.

3. 'பொன்' என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'குவலயாபீடத்தின்' என்று தொடங்கி.

திருவாழி மோதிரமும் இருந்தபடி. என் அம்மான் - கையும் [1]அறுகாழியுமான வடிவைக்காட்டி என்னை எழுதிக்கொண்டவன். [2]உகவாதாரை மிடுக்காலே அழித்தான்; உகந்தாரை அழகாலே அழித்தான்.

நிகர்ச் செம்பங்கி எரி விழிகள் நீண்ட அசுரர் உயிர் எல்லாம் தகர்த்து உண்டு உழலும் புட்பாகன் - சாதிக்குத் தக்கதான சிவந்த மயிரையுடையராய், எரி போலே விழியாநின்றுள்ள கண்களையுடையராய், பெரிய வடிவையுடையரான அசுரர்களுடைய உயிரை எல்லாம் தகர்த்து உண்டு, இதுதானே இயல்பாயிருக்கிற பெரிய திருவடியைக் கருத்து அறிந்து நடத்துகின்றவனுடைய. பெரிய தனி மாப்புகழ் - 'அளவிடற்கு அரியனவாய் உபமானம் இல்லாதனவாய் இருந்துள்ள கல்யாண குணங்களைத் திருவாய்மொழி முகத்தாலே அனுபவிக்கும் அனுபவத்துக்கு ஒக்குமோ?' என்றது, 'திருவாய்மொழி நுகரும் ஆனந்தத்துக்கு, ஏழ் உலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கும் ஆனந்தமும் போராது' என்கிருர் என்றபடி. (6)

878

தனிமாப் புகழே எஞ்ஞான்றும்
நிற்கும் படியாத் தான்தோன்றி
முனிமாப் பிரம முதல்வித்தாய்
உலகம் மூன்றும் முளைப்பித்த
தனிமாத் தெய்வத் தளிர்அடிக்கீழ்ப்
புகுதல் அன்றி அவன்அடியார்
நனிமாக் கலவி இன்பமே
நாளும் வாய்க்க நங்கட்கே.

**பொ - ரை :** ஒப்பற்ற பெரிய புகழே எக்காலத்தும் நிற்கும் படியாகத் தான் படைப்புக் கடவுளாகத் தோன்றி, படைப்பதற்காக நினைக்கின்ற பரப்பிரஹ்மமாகிற பரமகாரணமாய் எல்லா உலகங்களையும் உண்டாக்கின ஒப்பற்ற பெரிய பரம்பொருளினுடைய தளிர் போன்ற மெல்லிய திருவடிகளின் கீழே புகுந்து அடிமை செய்தல் அன்று யாம் விரும்புவது; அவன் அடியார்களுடைய சேர்க்கையாலாய இன்பமே யாம் விரும்புவது; அதுவே எப்பொழுதும் எங்கட்கு வாய்க்க வேண்டும்.

---

1. அறுகாழி - மெல்லிய மோதிரம்.

2. 'களிறு அட்ட பொன் ஆழிக் கை என் அம்மான்' என்று கூட்டி, பாவம் அருளிச்செய்கிருர், 'உகவாதாரை' என்று தொடங்கி.

வி - கு: 'வாய்க்க வேண்டுவது, தெய்வத் தளிரடிக்கீழ்ப் புகுதல் அன்று; அவன் அடியார் நனிமாக்கலவி இன்பமே; அதுவே நங்கட்கு நாளும் வாய்க்க' என்று கூட்டிப் பொருள் காண்க. நனிமா - மிகச் சிறந்த.

ஈடு: ஏழாம் பாட்டு. [1]'தனியே அனுபவிக்கும் பகவானுடைய அனுபவம் எனக்குவேண்டா; பாகவதர்களோடு கூடி அனுபவிக்கும் பகவானுடைய அனுபவமே காலம் என்னும் ஒரு பொருள் உள்ள வரையிலும் எனக்கு உண்டாக வேண்டும்,' என்கிறார்.

தனி மாப்புகழே எஞ்ஞான்றும் நிற்கும்படியா - [2]உபமானம் இல்லாததாய், சிலாக்கியமான புகழே காலம் என்னும் ஒரு பொருள் உள்ள வரையிலும் நிற்கும்படியாக. தான் - மதத் தத்துவத்துக்குக் காரணமான [3]பிரகிருதியைச் சரீரமாகவுடைய தான். அன்றிக்கே, 'விரும்புவார் இன்றிக்கே இருக்க, பூர்ணனாய் இருக்கிற தான்' என்னுதல். தோன்றி - தன் பேருக [4]'நான் பல பொருள் ஆவேன்' என்று தோன்றி. [5]முனி மாப் பிரம முதல்

---

1. 'மேல் மூன்று பாசுரங்களாலே பகவானுடைய அனுபவத்தைச் சொல்லி, இப்பாசுரத்தில், 'அது வேண்டா; பாகவதர்களுடைய சேர்க்கையே அமையும்,' என்று கூறுதல் முரண் அன்றோ?' என்கிற சங்கையை விஷய பேதத்தாலே நீக்கிக்கொண்டு, 'புகுதல் அன்றி நனிமாக்கலவி இன்பமே நாளும் வாய்க்க' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'உபமானம் இல்லாததாய்ச் சிலாக்கியமான புகழ்' என்றது, நாம ரூபங்கள் அழிந்து இருளாலே மூடப்பட்ட நிலையிலே இவற்றை உண்டாக்க நினைத்த மஹா குணத்தை. 'காலம் என்னும் ஒரு பொருள் உள்ள வரையிலும் நிற்கும்படியாக' என்றது, இவ்வுபகாரத்தின் வாசியை அறிந்தவர்கள் 'ஒருவன் செய்யும் உபகாரமே!' என்று இதனையே எப்போதும் ஒக்க நினைக்கையை.

3. 'பிரகிருதியைச் சரீரமாகவுடைய தான்' என்றது, சூக்ஷ்ம சித்து அசித்துகளோடு கூடின பிரஹ்மத்தை.

4. ''நான் பல பொருள் ஆவேன்' என்று தோன்றி' என்றது, 'வியஷ்டி சிருஷ்டி பிரதானம் ஆகையாலே, அதனை நினைத்து, அதற்குத் தகுதியான சமஷ்டி சிருஷ்டியைச் செய்து' என்றபடி. வியஷ்டி - வேறு வேறு. சமஷ்டி - தொகுதி.

5. 'முனி' என்பதற்கு, மூன்று வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார்: முதற்பொருள், 'சங்கற்பத்தோடு கூடினவன்' என்பது. இரண்டாவது பொருள், 'துறந்தவன்' என்பது. துறக்கையாவது, இந்த உலகத்தில் உள்ளார் கரண களேபரங்களை இழந்த துக்கத்தாலே நித்தியசூரிகளை விடுதல். மூன்றாவது பொருள், 'வேறு தேசத்திற்கு' என்று தொடங்கி அருளிச்செய்வது.

வித்தாய் - சங்கற்பிக்கிற பரப்பிரஹ்மமாகிற பரம காரண மாய், அன்றிக்கே, முனி - துறந்தவன் என்றுமாம். அன்றிக்கே, வேறு தேசத்திற்குப் போன புத்திரனைத் தாய் நினைக்குமாறு போலே 'இவை என் பட்டன!' என்று திருவுள்ளத்திலே நினைத்து, [1]பரப்பிரஹ்மமான தானே மூன்று விதக்காரணமுமாய் என்னுதல். உலகம் மூன்றும் முளைப்பித்த - [2]காரியக் கூட்டம் அனைத்தையும் தன் பக்கலிலே அரும்பும்படி பண்ணினுனாயிற்று. எல்லாப் பொருள்களும் தோன்றும்படியான சங்கற்பத்தின் காரியமான வியஷ்டி சிருஷ்டி இருந்தபடி.

தனி மாத்தெய்வம் தளிர் அடிக்கீழ்ப் புகுதல் - ஒப்பு இல்லாத பரதேவதையினுடைய தளிர் போலே இருக்கிற திருவடிகளின்கீழே புகுதல்; [3]இதுகாணும் படைப்பிற்குப் பயன். [4]சேதனன் ஆனல் உபகாரத்தைச் செய்பவன் திருவடிகளைப் பற்றுதல் அன்றோ செய்யத்தக்கது? அன்றி- [5]அதனை விட்டு. அவன் அடியார் நனிமாக்கலவி இன்பமே நாளும் வாய்க்க - அந்த உபசாரத்திலே தோற்று எழுதிக் கொடுக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களோடு உண்டான, மிக்க சிறப்பினையுடையதாய் இருந்துள்ள கலவி இன்பமே நாள்

---

1. 'பரப்பிரஹ்மமான தானே' என்றதற்குக் கருத்து, 'தன் பெருமை பாராதே சிருஷ்டித்தான்'என்பது. மூன்றுவிதக் காரணம்: முதற்காரணம், துணைக்காரணம், நிமித்த காரணம். 'முதல்' என்றதனுல் நிமித்த காரணமும், 'வித்து' என்றதனுல் முதல் காரணமும் பெறுதும். இவ்விரண்டனைக் கூறியதனுல், துணைக்காரணத்தையும் உபலக்ஷணத்தாற்கொள்க.

2. 'முளைப்பித்த' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிருர், 'காரியக் கூட்டம்' என்று தொடங்கி. 'தோன்ற' என்றதனுல் சமஷ்டி சிருஷ்டியையும், 'முளைப்பித்த' என்றதனுல் வியஷ்டி சிருஷ்டியையும் கூறியபடி.

சுருதியிலும் 'பஹுஸ்யாம்' என்றதனுல் சமஷ்டி சிருஷ்டியையும் 'ப்ரஜாயேய' என்றதனுல் வியஷ்டி சிருஷ்டியையும் கூறியிருத்தலேயும் காண்க.

3. படைத்தலைக்கூறிய பின், திருவடிகளின்கீழே புகுதலைக் கூறுவதற்குக் கருத்து அருளிச்செய்கிருர், 'இதுகாணும்' என்று தொடங்கி.

4. 'அது எப்படி?' என்ன, 'சேதனன் ஆனல்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

5. 'அதனை விட்டு' என்றது, ஸ்ரீ வைஷ்ணவர்களோடே கூடி அனுபவியாத பகவத் அனுபவத்தை விட்டு' என்றபடி.

தோறும் வாய்க்க. நங்கட்கே - இதனை விரும்பி 'இதுவே பேறு' என்றிருக்கிற நமக்கு. [1]இது, காலம் என்னும் ஒரு பொருள் உள்ள வரையிலும் கிட்டவேணும். (7)

879

*நாளும் வாய்க்க நங்கட்கு*
*நளிர்நீர்க் கடலைப் படைத்துத்தன்*
*தாளும் தோளும் முடிகளும்*
*சமன்இ லாத பலபரப்பி*
*நீளும் படர்பூங் கற்பகக்*
*காவும் நிறைபல் நாயிற்றின்*
*கோளு முடைய மணிமலைபோல்*
*கிடந்தான் தமர்கள் கூட்டமே.*

பொ - ரை: குளிர்ந்த தண்ணீரையுடைய கடலைப் படைத்து, ஒப்பு இல்லாத தன்னுடைய பல திருவடிகளையும் தோள்களையும் திரு முடிகளையும் பரப்பிக்கொண்டு, நீண்ட படர்ந்த பூக்களையும் கற்பகச் சோலையையும் நிறைந்த பல சூரியர்களின் ஒளியையு முடைய மாணிக்க மலை போன்று திருக்கண்வளர்கின்றவனுடைய அடியார்களின் சேர்க்கை நங்கட்கு எப்பொழுதும் வாய்க்க வேண்டும்.

வி - கு: 'படைத்துப் பரப்பிக் கிடந்தான்,' என்க. நீளும் படர் பூங்கற்பகக் கா, தாள்களுக்கும் தோள்களுக்கும் உவமை. பல் நாயிற்றின் கோள் - திருமுடிக்கு உவமை. மணிமலை - திருமேனிக்கு உவமை. கூட்டம் - கூடுதல்; சேர்தல். 'கூட்டம் நங்கட்கு நாளும் வாய்க்க,' எனக் கூட்டுக.

ஈடு: எட்டாம் பாட்டு. [2]'பாகவதர்களுடைய கலவி இன்பம் வேண்டும்,' என்றார் மேல்; 'அதுதான் வேண்டுமோ? அவர்கள் திரளைக் கண்களாலே காண அமையும்,' என்கிறார் இதில்.

---

1. 'இன்பமே நாளும் வாய்க்க நங்கட்கே' என்றதிலே உள்ள ஏகாரத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார், 'இது' என்று தொடங்கி.

2. 'நாளும் வாய்க்க நங்கட்கே' என மீண்டும் இப்பாசுரத்தில் கூறியது, கூறியது கூறல் ஆகாமைக்குக் காரணத்தை அருளிச் செய்து, 'தமர்கள் கூட்டமே நாளும் வாய்க்க நங்கட்கு' என்றதனைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

நாளும் வாய்க்க நங்கட்கு - [1]இதுவே புருஷார்த்தம் என்று இருக்கிற நமக்கு, இது நாள்தோறும் வாய்க்க வேண்டும். நளிர் நீர்க்கடலைப் படைத்து - குளிர்ச்சியையே தன்மையாகவுடைய கடலை உண்டாக்கி. 'திருக்கண்வளர்கைக்கு ஒத்ததான தண்ணீர்' என்கை. சமன் இலாத தாளும் தோளும் முடிகளும் - உபமானம் இல்லாதவையான திவ்விய அவயவங்கள். பல பரப்பி - அந்தக் கடலிலே பாழ் தீரும்படி வடிவாலே அலங்கரித்து. நீளும் படர்பூங் கற்பகக்காவும் - [2]எல்லை இல்லாத இனிய பொருளான பூப்போல இருக்கிற தாளும், கற்பகக்காவைப் போலே இருக்கிற தோளும். தாளும் தோளும் இருக்கிறபடி. நிறை [3]பல் நாயிற்றின் கோளும் - 'முடிகள் ஆயிரத்தாய்' என்றதனைச் சொல்லுகிறது. அன்றிக்கே, 'ஆயிரங் கோடி சூரியர்களைத் திரட்டி முடியாக வகுத்தாற்போலே இருக்கிற முடி' என்னுதல். கோள் என்பன, கிரஹங்கள்; அவைதாம் ஒளிப்பொருள்கள் ஆகையாலே ஒளியைக் காட்டுகிறது இலக்கணை.

மணிமலைபோல் கிடந்தான் - ஓர் இரத்தினமலை சாய்ந்தாற்போலே ஆயிற்றுக் கண்வளர்ந்தருளுகிறபடி. [4]தமர்கள் கூட்டமே நாளும் வாய்க்க - இப்படி வைத்த கண் வாங்க ஒண்ணாதபடி கண்வளர்ந்தருளாநிற்குமவனை அன்று, நாளும் வாய்க்க என்கிறது; ''கிடந்ததோர் கிடக்கை' என்று கிடை அழகிலே தோற்றிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் திரளிலே நானும் ஒருவனாய்ச் சேர

---

1. 'இது' என்றது, ஸ்ரீ வைஷ்ணவர்கள் திரளிலே தாமும் ஒருவராகச் சேர்தலைக் குறித்தபடி.

2. 'நீளும்படர்' என்ற சொற்களுக்குப் பயன் அருளிச்செய்கிறார், 'எல்லை இல்லாத' என்று தொடங்கி.

3. 'பல் நாயிறு' என்றதனால், 'முடிகள் ஆயிரத்தாய்' என்றதனைச் சொல்லுகிறது என்கிறார். ஒவ்வொரு திருமுடிக்கும் ஒவ்வொரு சூரியன் உவமை என்பது கருத்து. 'முடிகள் ஆயிரத்தாய்' என்பது, **திருவாய்.** 8. 1 : 10.

4. 'தமர்கள் கூட்டமே நாளும் வாய்க்க நங்கட்கு' என்பதற்கு இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். முதற்பொருளில் 'நங்கட்கு' என்பது, தனித்தன்மைப் பன்மை. இரண்டாவது பொருளில் 'நங்கட்கு' என்பதற்கு, 'தம்முடைய கண்களுக்கு' என்பது பொருள். இவற்றையே, 'இப்படி' என்று தொடங்கியும், 'அன்றிக்கே' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார். 'கிடந்ததோர்' என்பது **திருமாலை,** 23.

வேண்டும்' என்கிருர் என்னுதல்; அன்றிக்கே, 'அத்திரளைக் கண்களாலே காண அமையும்,' என்கிருர் என்னுதல். [1]பசியர் '**கல அரிசிச்சோறு உண்ணவேண்டும்**' என்னுமாறு போலே, தம் காதல் எல்லாம் தோற்ற அருளிச்செய்கிருர். [2]'பெரியோர்கள் கூட இருக்க வேண்டும்' என்றும், 'ஈட்டங் கண்டிடக் கூடுமேல்' என்றும் சொல்லக் கடவதன்றே? [3]'அவன் செய்த உபகாரத்துக்குத் தோற்றிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களோடே கூடி இருக்க வேண்டும்,' என்ருர் மேல். 'கிடை அழகிலே தோற்றிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் திரளைக் கண்களாலே காண அமையும்,' என்கிருர் இதில். (8)

880

**தமர்கள் கூட்ட வல்வினையை**
**நாசம் செய்யும் சதுமூர்த்தி[4]**
**அமர்கொள் ஆழி சங்குவாள்**
**வில்தண்டு ஆதி பல்படையன்**
**குமரன் கோல ஐங்கணைவேள்**
**தாதை கோதில் அடியார்தம்**
**தமர்கள் தமர்கள் தமர்களாம்**
**சதிரே வாய்க்க தமியேற்கே.**

பொ - ரை: அடியார்களுடைய கூட்டத்திற்கு வருகின்ற கொடிய வினைகளை எல்லாம் அழிக்கின்ற சதுமூர்த்தியும், போரைச் செய்கின்ற சக்கரம் சங்கு வாள் வில் தண்டு முதலிய பல வகைப்பட்ட ஆயுதங்களைத் தரித்தவனும், குமரனும், அழகிய ஐந்து பாணங்களையுடைய மன்மதனுக்குத் தந்தையுமான எம்பெருமானுக்கு

---

1. 'தமர்கள்' என்ருல் போராதோ? 'கூட்டம்' என்பான் என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிருர், 'பசியர்' என்று தொடங்கி.

2. 'நங்கட்கு' என்றதற்கு அருளிச்செய்த இருவகைப் பொருள்கட்கும் சேரத் தனித்தனியே இரண்டு பிரமாணங்கள் காட்டுகிருர், 'பெரியோர்கள்' என்று தொடங்கியும், 'ஈட்டம்' என்று தொடங்கியும்.

'ஸத்பிரேவ ஸஹாஸீத ஸத்பிঃ குர்வீத ஸங்கமம்
ஸத்பிঃ விவாதம் மைத்ரம்ச ந அஸத்பிঃ கிஞ்சித் ஆசரேத்'

என்பது, மார்க்கண்டேய புராணம்.

'ஈட்டம்' என்பது, பெருமாள் திருமொழி, 2:1.

3. இப்பாசுரத்துக்கு அருளிச்செய்த அவதாரிகைக்குச் சேரப் பொருளை முடித்து அருளிச்செய்கிருர், 'அவன் செய்த' என்று தொடங்கி.

4. '**சதிர்மூர்த்தி**' என்பதும் பாடம்.

அடிமைப்பட்ட குற்றம் இல்லாத அடியார்களுக்கு அடியார்கள், அவர்களுக்கு அடியார்கள், அவ்வடியார்கட்கு அடியார்கள் ஆகின்ற பேறே தமியேற்கு வாய்க்க வேண்டும்.

வி - கு: சது மூர்த்தி - பல வடிவங்களையுடையவன்; 'சது' என்பது, ஈண்டுப் 'பல' என்னும் பொருளில் வந்தது. குமரன் - இளையோன். ஐங்கணை - ஐந்து புஷ்ப பாணங்கள்; அவை: தாமரைப்பூ, மாம்பூ, அசோகம்பூ, முல்லைப்பூ, நீலோற்பலப்பூ என்பன.

ஈடு: ஒன்பதாம் பாட்டு. [1]'ஸ்ரீ வைஷ்ணவர்களோடு சேர்ந்திருக்கும் சேர்க்கைதான் வேண்டுமோ? அவர்களுடைய அடிமையிலே முடிந்த நிலமாக அமையும்' என்கிறார்.

தமர்கள் கூட்ட வல்வினையை நாசம் செய்யும் - [2]ஸ்ரீவைஷ்ணவர்களுடைய திரளுக்கு வரும் வல்வினையை நாசம் செய்யும். அன்றிக்கே, 'தமர்களுடைய திரண்ட வல்வினையை நாசம் செய்யும்' என்னுதல். அன்றிக்கே, 'தமர்கள், வல்வினையைக் கூட்ட, அந்த வல்வினைகளை நாசம் செய்யும்' என்னுதல்; என்றது, [3]இவர்களுக்கு வல்வினையைக் கூட்டுகையே தன்மையானாற்போலே, அவனுக்கு அவ்வினைகளை நாசம் செய்தலே யாத்திரையாக இருக்கும்படியைத் தெரிவித்தவாறு. [4]சதுமூர்த்தி - விரோதிகளைப் போக்குகைக்குத் தக்கனவான பல வடிவுகளையும் கொள்ளாநிற்கும். என்றது, 'இவர்கள் கைங்கரியம் செய்வதற்குப் பல வடிவுகள் கொள்ளுமாறு போலே ஆயிற்று, அவன் காத்தல் நிமித்தம் பல வடிவுகள் கொள்ளுகிறபடி' என்பதனைத் தெரிவித்தவாறு.

அமர் கொள் ஆழி சங்கு வாள் வில் தண்டு ஆதி பல் படையன் - விரோதிகளை அழிப்பதற்கு உறுப்பாகப் போரை நோக்கியுள்ள திரு ஆழி தொடக்கமான திவ்விய

---

1. ஈற்றடியைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். மேல் பாசுரத்தில் 'நங்கட்கு' என்பதற்கு அருளிச்செய்த இருவகைப் பொருள்களில் முதற்பொருளைத் திருவுள்ளம் பற்றி இந்த அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'தமர்கள் கூட்ட வல்வினையை நாசம் செய்யும்' என்பதற்கு மூன்று வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். 'ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய' என்று தொடங்கி.

3. மூன்றாவது பொருளில், 'கூட்ட நாசம் செய்யும்' என்ற பதச் சேர்த்திக்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'இவர்களுக்கு' என்று தொடங்கி. இப்பொருளில் 'கூட்ட' என்பது எச்சம்.

4. சதுமூர்த்தி-சதுர்மூர்த்தி. என்றது, வாசுதேவ ஸங்கர்ஷண பிரத்யும்ந அநிருத்தர்களாய் இருக்குமவன் என்றபடி. இவற்றைக் கூறியது, அவதாரங்களுக்கும் உபலக்ஷணம்.

ஆயுதங்களையுடையவன். குமரன் - எப்பொழுதும் இளை யோனாய் இருப்பவன். கோலம் ஐங்கணை வேள் தாதை - ஐந்து பாணங்களையுடையனான காமனுக்கும் தந்தையான வன். என்றது, 'அழகுக்குத் தனக்குமேல் இல்லை என்றி ருக்கும் காமனுக்கும் அழகுக்குத் தோற்றுவாயாய் இருக் கும்' என்றபடி. கோது இல் அடியார்தம் தமர்கள் தமர் கள் தமர்களாம் சதிரே வாய்க்க - [1]அப்பருவத்துக்கும் அழகுக்கும் தோற்றிருக்கும், வேறு பிரயோஜனம் ஒன்றையும் கருதாதவரான ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய அடிமையில் முடிந்த நிலமாக வேண்டும் என்கிறார். இந்த மிக உயர்ந்த புருஷார்த்தம் என்றும் ஒக்க வாய்க்கவேண் டும் என்பார், 'சதிரே வாய்க்க' என்கிறார். தமியேற்கே - [2]சென்ற காலத்திலும் ஸ்ரீ சத்ருக்நாழ்வானைத் தேடிப் பிடிக்க வேண்டுகையாலே இப்பொழுது நடக்கும் காலத் தில் தமக்கு உபமானம் இன்றிக்கே இருக்கை. [3]'கேசவன் தமர்' என்ற திருவாய்மொழிக்குப் பின்பு தனியர் அல்லா மையாலே, மேல் 'நங்கட்கு' என்றார். இங்குத் 'தமியேற்கு' என்கிறது, சம்சாரிகளில் தமக்கு உபமானம் இல்லாமை யாலே. (9)

881

வாய்க்க தமியேற்கு ஊழிதோறு
ஊழி ஊழி மாகாயாம்
பூக்கொள் மேனி நான்குதோள்
பொன்ஆழிக்கை என்அம்மான்
நீக்கம் இல்லா அடியார்தம்
அடியார் அடியார் அடியார்எம்
கோக்கள் அவர்க்கே குடிகளாய்ச்
செல்லும் நல்ல கோட்பாடே.

---

1. பருவத்தையும் அழகையும் சொல்லி, 'கோதில் அடியார்' என்கையாலே, பலித்த பொருளை அருளிச்செய்கிறார், 'அப்பருவத் துக்கும்' என்று தொடங்கி. 'குமரன்' என்கையாலே, பருவம். 'வேள் தாதை' என்றதனால், அழகு. கோது - வேறு பயன்களை விரும்புகிற குற்றம்.

2. 'வேறு பிரயோஜனத்தை விரும்பாத அடியார் இலரோ? 'தமியேற்கே' என்பது என்?' என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார், 'சென்ற காலத்திலும்' என்று தொடங்கி.

3. 'ஆயின், மேல் 'நங்கட்கு' என்றாரே? அதனோடு முரண் ஆகாதோ?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'கேசவன் தமர்' என்று தொடங்கி.

**பொ - ரை :** பெருமை பொருந்திய காயாம்பூவைப் போன்ற திருமேனியையும் நான்கு திருத்தோள்களையும் அழகிய சக்கரத்தைத் தரித்த திருக்கையையுமுடைய என் அம்மானுக்கு, ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி அடிமை செய்கின்ற அடியார்களுக்கு அடியார், அவர்களுக்கு அடியார், அவர்களுக்கு அடியார் அவர்கள், எங்களுக்குத் தலைவர் ஆவர்; அந்த அடியார்கட்கே அடியவர்களாகச் செல்லுகின்ற நல்ல கொள்கையானது காலம் என்னும் ஒரு பொருள் உள்ள வரையிலும் தமியேற்கு வாய்க்க வேண்டும்.

**வி - கு :** 'நல்ல கோட்பாடு ஊழிதோறு ஊழி ஊழி தமியேற்கு வாய்க்க' எனக் கூட்டுக.

**ஈடு:** பத்தாம் பாட்டு. [1]'இப்பேறு, எனக்கும் என் சுற்றத்தார்க்கும் என்றும் வாய்க்க வேண்டும்,' என்கிறார்.

தமியேற்கு வாய்க்க - புருஷார்த்தத்தின் எல்லையிலே மூழ்குதலாலே உபமானம் இல்லாதவனான எனக்கு இப்பேறே வாய்க்க வேண்டும். ஊழிதோறு ஊழி ஊழி - 'காலம் என்னும் ஒரு பொருள் உள்ள வரையிலும் இடைவிடாதே உயிர் உள்ள வரையிலும் இதுவே புருஷார்த்தம்' என்கை. மா காயாம்பூக்கொள் மேனி நான்கு தோள் பொன் ஆழிக்கை என் அம்மான் - அழகிய காயாம்பூப் போலே இருக்கிற திருமேனியையும், கற்பகத் தருப்பணைத் தாற்போலே இருக்கிற திருத்தோள்களையும், கற்பகம் பூத்தாற்போலே இருக்கிற திரு ஆழியையும் காட்டி என்னைத் தனக்கே அடிமை ஆக்கினவன். நீக்கம் இல்லா அடியார் தம் அடியார் அடியார் எம் கோக்கள் - [2]பிரிய நினைக்கில் 'என்னை அடிமை கொள்ள வேண்டும்' என்ன வேண்டும்படி பிரியமாட்டாதவர்களில் எல்லை நிலமானவர்கள் என்

---

1. 'அவர்க்கே குடிகளாய்ச் செல்லும் நல்ல கோட்பாடு தமியேற்கு ஊழிதோறு ஊழி வாய்க்க' என்பதனைக் கடாட்சித்து, அவதாரிகை அருளிச்செய்கிறார். 'இப்பேறு' என்றது, 'நல்ல கோட்பாடு' என்றதனை. 'குடிகளாய்' என்றதனால் 'என் சுற்றத்தார்க்கும்' என்கிறார்.

2. 'நீக்கம் இல்லா' என்றதற்கு பாவம் அருளிச்செய்கிறார், 'பிரிய நினைக்கில்' என்று தொடங்கி.

> 'குருஷ்வம் மாம் அநுசரம் வைதர்ம்யம் ந இஹ வித்யதே
> க்ருதார்த்தஃ அஹம் பவிஷ்யாமி தவ சார்த்தஃ ப்ரகல்பதே'

என்பது, ஸ்ரீராமா. அயோத். 31 : 22.

சுவாமிகள். [1]'தமர்கள் தமர்கள் தமர்களாம்' என்று முடித்த எல்லையை முதலாகத் தொடங்குகிருர்.

[2]'சயமே அடிமை தலைநின்ருர்' ஆகிருர், ஸ்ரீ பரதாழ்வான் போல்வார்; 'கோதில் அடியார்' ஆகிருர், ஸ்ரீ சத்ருக்நாழ்வான்போல்வார்; 'நீக்கம் இல்லா அடியார்' ஆகிருர், இளைய பெருமாள் போல்வார். அவர்க்கே குடிகளாய் - [3]இருகரையராய் இராதே, [4]'வேண்டும் பலன்களைத் தருவதில் மிக உயர்ந்த **'ராமாநுஜ'** என்னும் இந்த நான்கு எழுத்துள்ள மந்திரமானது இல்லையாயின், என்னைப் போன்ற உயிர்கள் எத்தகைய கொடிய நிலையை அடைவார்களோ அறியேன்; ஆச்சரியம்!' என்று இருக்கை போலே காணும் அடுப்பது. அவர்க்கே குடிகளாய்ச் செல்லும் நல்ல கோட்பாடு - அவர்களுக்கே என் குடி முழுதும் அடிமைப்பட்டவர்களாய்ச் செல்லும் நல்ல கட்டளை, வாய்க்க தமியேற்கு. கோட்பாடு - கட்டளைப்பாடு. (10)

---

1. 'மேற்பாசுரத்திலும் அடிமையின் முடிந்த நிலத்தை அருளிச்செய்தாரே? அதற்கும் இதற்கும் வேற்றுமை என்?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிருர், 'தமர்கள்' என்று தொடங்கி.

2. இதுகாறும் அருளிச்செய்த மூன்று வித ஸ்ரீ வைஷ்ணவர்களையும் எடுத்துக்காட்டுகிருர், 'சயமே' என்று தொடங்கி. கைப்பட்ட இராச்சியத்தைப் போகட்டவர் ஆகையாலே, ஸ்ரீ பரதாழ்வானைச் 'சயமே அடிமை தலை நின்ருர்' என்கிருர். சயமே - ஸ்வயம் பிரயோஜனமாக. இராமபத்தியாகிற கோது இல்லாமையாலே, ஸ்ரீ சத்துருக்நாழ்வானைக் 'கோதில் அடியார்' என்கிருர். 'கோதில்' என்பதற்கு, வேறு பிரயோஜனங்களைக் கருதாதவர்கள் என்று பொருள் அருளிச்செய்தாரேயாகிலும், இராமபத்தி இல்லாமையையும் அதற்குப் பொருளாகக் கொள்ள வேண்டும்; இங்கே இராமபத்தியாகிய கோது என்றே பொருள் கூற வேண்டுகையாலே. 'குருஷ்வம் மாம் அநுசரம்' என்கையாலே இளைய பெருமாளை 'நீக்கம் இல்லா அடியார்' என்கிருர்.

3. 'அவர்க்கே' என்ற ஏகாரத்தின் பொருள், 'இருகரையராய் இராதே' என்பது. 'இருகரையர்' என்றது, எம்பெருமானையும் சரணமாகப் பற்றி, அவன் அடியார்களையும் சரணமாகப் பற்றுகின்றவர்களை.

4. இருகரையராய் இல்லாமல் இருந்ததற்குப் பிரமாணம் காட்டுகிருர், 'வேண்டும்' என்று தொடங்கி.

'நசேத் ராமாநுஜேதி ஏஷா சதுரா சதுரக்ஷரீ
காம் அவஸ்த்தாம் ப்ரபத்யந்தே ஜந்தவঃ ஹந்த மாத்ருஶঃ'

என்பது, கூரத்தாழ்வான் அருளிச்செய்தது.

882

நல்ல கோட்பாட்டு உலகங்கள்
மூன்றி னுள்ளும் தான்நிறைந்த
அல்லி கமலக் கண்ணனை
அம்தண் குருகூர்ச் சடகோபன்
சொல்லப் பட்ட ஆயிரத்துள்
இவையும் பத்தும் வல்லார்கள்
நல்ல பதத்தால் மனைவாழ்வர்
கொண்ட பெண்டிர் மக்களே.

பொ-ரை: பாகவதர்களுக்கு அடிமைப்பட்டிருத்தலே பேறு என்னும் நல்ல கொள்கையையுடைய உலகங்கள் மூன்றனுள்ளும் தான் நிறைந்திருக்கின்ற, மலர்ந்த தாமரை மலர் போன்ற திருக் கண்களையுடைய எம்பெருமானை, அழகிய குளிர்ந்த திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீ சடகோபராலே அருளிச்செய்யப்பட்ட ஆயிரம் பாசுரங்களுள் இவை பத்துப் பாசுரங்களையும் வல்லவர்கள், தாம் கொண்ட பெண்டிரோடும் புதல்வர்களோடும் பாகவதர்களுக்கு அடிமைப்பட்டிருத்தலாகிய நல்ல தன்மையோடு இல்லறத்திலே வாழ்வார்கள்.

ஈடு: [1]முடிவில், 'இத்திருவாய்மொழி வல்லார், இதிற் சொன்ன பாகவதர்களுக்கு அடிமைப்பட்டிருத்தலைப் பெற்று, பெண்டு பிள்ளைகளோடு வாழப் பெறுவர்,' என்கிறார்.

நல்ல கோட்பாட்டு உலகங்கள் - [2]இவர் 'பாகவதர்களுக்கு அடிமைப்பட்டிருத்தலே மிக மேலான பேறு' என்று 'நெடுமாற்கடிமை' என்னும் திருவாய்மொழி அருளிச் செய்தபின்புகாணும் உலகம் கட்டளைப்பட்டது. மூன்றினுள்ளும் தான் நிறைந்த - [3]பரந்து இருக்கும் தன்மையும்

---

1. 'நல்ல பதத்தால்' என்பது போன்றவைகளைக் கடாட்சித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. மேல் எல்லாம் அடியார்கட்கு அடிமைப்பட்டிருத்தலை அருளிச்செய்து, முடிவில் 'நல்ல கோட்பாட்டு உலகங்கள்' என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார், 'இவர்' என்று தொடங்கி. உலகம் கட்டளைப்படுதலாவது, எல்லாம் திருந்தி அவன் அடியார்கட்கு அடிமைப்பட்டவராதல்.

3. 'பரந்து இருக்கும் தன்மையும் தேவை ஆகை அன்றிக்கே புதுக்கணித்தது' என்றது, 'அவன் அடியார்கட்கு அடிமைப்பட்டிருத்தலாகிற ஞானமுடையவர்களுடைய மனத்தில் இருக்கையாலே வியாப்தியும் தேவையாய் இராதே புதுக்கணித்தது' என்றபடி.

தேவையாகை அன்றிக்கே புதுக்கணித்தது. **அல்லிக் கமலக் கண்ணனை** - [1]இவர், தன்னைப்பற்றினாரைப் பற்றி விரும்ப விரும்ப, திருக்கண்களும் சிவந்து புதுக்கணித்தது. **அம் தண் குருகூர்** - ஊரும் காண்பதற்கு இனியதாய்ச் சிரமத்தைப் போக்கக்கூடியதாயிற்று. **சடகோபன் சொல்லப்பட்ட ஆயிரம்** - வேதம் போலே தான் தோன்றி அன்றிக்கே இருக்கை. [2]பரத்துவம் போலே வேதம்; அவதாரம்போலே திருவாய்மொழி. **இவையும் பத்தும் வல்லார்கள்** - இப்பத்தைக் கற்க வல்லவர்கள். **நல்ல பதத்தால்** - நல்ல பதமாகிறது, பாகவதர்களுக்கு அடிமைப்பட்டிருத்தல் அன்றோ? அதனை இத்திருவாய்மொழியிலே இவர் அறுதியிட்டபடியாலே, அதனோடே கூட. **மனை வாழ்வர்** - இல்லற தர்மத்திலே வாழ்வார்கள்.

**கொண்ட பெண்டிர் மக்களே** - [3]தாங்கள் ஒன்றனை நினைக்க, தம் மனைவி மக்கள் முதலாயினோர் வேறு ஒன்றனை நினைக்கை அன்றிக்கே, குடும்பத்தோடே பாகவதர்களுக்கு உறுப்பாக வாழப்பெறுவர். [4]திருவனந்தபுரத்துக்குச் சாத்தாகப் போகா நிற்கச்செய்தே, திருக்கோட்டியூரிலே **செல்வ நம்பி** திருமாளிகையிலே போய்ப் புக்கார்களாக, நம்பி தாம் வேற்றூருக்குச் சென்றிருக்க, **நங்கையார்**, நூறு வித்துக்கோட்டை கிடக்க, அவற்றைக் குற்றி ஸ்ரீவைஷ்ணவர்களை அமுது செய்யப் பண்ணிவிட, பிற்றை நாள் நம்பி வந்து, 'அவை செய்தது என்?' என்ன, 'பரமபதத்திலே விளைவதாக வித்தினேன்' என்றாராம். [5]'**தொண்டனூர் நம்பி, எச்சான்**' என்று மஹாபுருஷர்கள்

---

1. இவர் - ஆழ்வார்.

2. 'வேதத்தைக்காட்டிலும் இதற்கு மேன்மை யாது?' என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார், 'பரத்துவம்' என்று தொடங்கி. 'வேதத்தின் அவதாரம் திருவாய்மொழி,' என்பது கருத்து.

3. கொண்ட - தங்கள் நினைவையே கொண்ட. இக்கருத்தையே, 'தாங்கள்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

4. 'குடும்பத்தோடு பாகவதர்களுக்கு உறுப்பாக வாழ்ந்தவர் உளரோ?' என்ன, 'திருவனந்தபுரத்துக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். சாத்தாக – கூட்டமாக. நங்கையார் – செல்வநம்பியின் திருத்தேவிகள்.

5. 'ஆழ்வாரைப் போன்று, பாகவத சேஷத்துவ நிஷ்டர்களாய் வாழ்ந்து போனவர்கள் உளரோ?' என்ன, 'தொண்டனூர் நம்பி' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

சிலர் உளர் அன்ரே, பாகவத சேஷத்துவமே யாத்திரையாகப் போந்தவர்கள்? அவர்கள் படியே ஆகப்பெறுவார்கள். (11)

## திருவாய்மொழி நூற்றந்தாதி

நெடுமால் அழகுதனில் நீள்குணத்தில் ஈடு
படுமா நிலையுடைய பத்தர்க்கு—அடிமைதனில்
எல்லைநிலம் தாகை எண்ணினுள் மாறன் அது
கொல்லைநில மானநிலை கொண்டு. (80)

எட்டாம்பத்து ஈட்டின் தமிழாக்கம்

முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானர் சீயர் திருவடிகளே அரண்.

வடக்குத் திருவீதிப்பிள்ளை மலரடி வாழ்க!
நம்பிள்ளை நற்ருள் வாழ்க!
மாறன் மலரடி வாழ்க!

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி


| செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|---|
| அங்கு மிங்கும் | 76 | எங்குவந் துறுகோ | 28 |
| அடியேன் உள்ளான் | 202 | எங்கே காண்கேன் | 155 |
| அதுவே வீடு | 220 | எடுத்த பேராளன் | 16 |
| அமர்ந்த நாதனை | 125 | எய்த்தார் எய்த்தார் | 222 |
| அருள்தான் இனி | 181 | எல்லியும் காலையும் | 160 |
| அல்லதோர் அரணும் | 114 | எனக்கு நல்லரணை | 116 |
| அறியேன் மற்றருள் | 189 | என்றே என்னை | 93 |
| அற்புதன் நாராயணன் | 171 | என்னமர் பெருமான் | 110 |
| அன்றி மற்றோர் | 253 | என்னுடை நன்னுதல் | 69 |
| அன்னைமீர் இதற்கு | 238 | ஒக்கும் அம்மான் உருவம் | 147 |
| ஆருயி ரேயோ | 25 | ஒருவர் இருவர் | 162 |
| ஆழி வலவனை | 58 | கண்கள் சிவந்து | 193 |
| ஆளுமாளார் | 81 | கருமா ணிக்கம் | 235 |
| இங்கே திரிந்தேற்கு | 269 | கலக்கம் இல்லா | 97 |
| இடையில்லை யான் | 65 | காண வாராய் | 134 |
| இதுவோ பொருத்தம் | 151 | காணுமா றருளாய் | 11 |
| இருத்தும் வியந்து | 176 | காண்கொடுப்பான் | 66 |
| இருந்தான் கண்டு கொண்டு | 178 | காலம் இளைக்கில் | 53 |
| இறந்ததும் நீயே | 30 | கூடச் சென்றேன் | 56 |
| உணர்வில் உம்பர் | 206 | கூடிற் றாகில் | 225 |
| உமர்உகந்து | 21 | கூத்த அம்மான் | 167 |
| உரையா வெந்நோய் | 98 | கொடியார் மாடம் | 86 |
| உளரும் இல்லை அல்லராய் | 227 | கொண்டல் வண்ணா | 143 |
| உறுமோ பாவியேனுக்கு | 266 | கொண்மின் இடர்கெட | 168 |
| ஊர்வளங்கிளர் | 242 | கோயில் கொண்டான் | 165 |
| எங்கள்செல் சார்வு | 107 | சரண மாகிய | 78 |
| | | சுடர்ப்பாம்பணை | 194 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| செவ்வா யுந்தி | 187 |
| சொல்ல மாட்டேன் | 141 |
| சோலைத் திருக்கடித் தானம் | 172 |
| ஞாலம் போனகம் | 83 |
| தமர்கள் கூட்டம் | 281 |
| தனிமாப் புகழே | 276 |
| தாயப் பதிகள் | 170 |
| தாள்களை எனக்கே | 38 |
| தான நகர்கள் | 169 |
| திகழஎன் சிந்தையுள் | 120 |
| திகழும்தன் திருவருள் | 184 |
| திருக்கடித் தானமும் | 161 |
| திருச்செங்குன் றூரில் | 119 |
| திருமால் நான்முகன் | 95 |
| திருவருள் மூழ்கி | 245 |
| தூநீர் முகில்போல் | 138 |
| தெருளும் மருளும் | 229 |
| தேவிமார் ஆவார் | 4 |
| தேனைநன் பாலை | 128 |
| தொல்லையஞ் சோதி | 60 |
| நங்கள் வரிவளை | 46 |
| நல்லகோட் பாட்டு | 286 |
| நன்றாய் ஞானம் | 217 |
| நாளும் வாய்க்க | 279 |
| நின்ற ஒன்றை | 213 |
| நுகர்ச்சி யுறுமோ | 274 |
| நெடுமாற் கடிமை | 259 |
| நேர்பட்ட நிறை | 254 |
| படைப்பொடு கெடுப்பு | 122 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| பணியா அமரர் | 89 |
| பரவாள் இவள் | 251 |
| பாதம் அடைவதன் | 71 |
| பிறந்த மாயா! | 153 |
| பிறிதில்லை எனக்கு | 112 |
| புகழும் இவள் | 239 |
| புனைஇழைகள் அணிவும் | 243 |
| பெரிய அப்பனை | 41 |
| பொருள் மற்று எனக்கும் | 186 |
| மடவரல் அன்னைமீர்! | 249 |
| மணந்தபே ராயா! | 33 |
| மாயக் கூத்தா! | 131 |
| மாயப்பிரான் | 164 |
| மாய மயக்கு | 183 |
| மாலரி கேசவன் | 62 |
| முடிசேர் சென்னி | 137 |
| மெல்லிலைச் செல்வம் | 246 |
| யானும் தானாய் | 209 |
| யானும் நீதானே | 36 |
| வந்து தோன்றாய் | 145 |
| வயிற்றில் கொண்டு | 191 |
| வருவார் செல்வார் | 91 |
| வழிபட் டோட | 272 |
| வாய்க்க தமியேற்கு | 283 |
| வார்கடா அருவி | 103 |
| வியன்மூ வுலகும் | 263 |
| வேண்டிச் சென்று | 50 |
| வைத்தேன் மதியால் | 193 |

## வியாக்கியானத்தில் வந்துள்ள ஐதிஹ்யங்கள்

திருக்கோட்டியூர் நம்பியின் ஸ்ரீ பாதத்திலே ஆறு மாதங்கள் ஆழ்வான் சேவித்து நின்று மீளப்புக்கவாறே, 'ஆழ்வான்! ஆழ்வார் '**அடியேன் உள்ளான்**' என்றபடி கண்டாயே?' என்ன, 'கிருதார்த்தன் ஆனேன்' என்று போந்தாராம். பக். 203,

அம்முணி ஆழ்வான் போசலராச்சியத்தினின்றும் வந்த நாளிலே, பட்டர் கண்டருளி, 'நீ ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குப் போர அடிமை செய்து போந்தாய் என்று கேட்டோம்; உன் தன்மைக்குச் சேர 'நெடுமாற்கு அடிமை' என்னும் திருவாய்மொழியைக் கேள்,' என்று அருளிச் செய்தாராம். பக். 258.

'சிறுமை பெருமையாகிற தர்ம த்வயத்துக்கு ஏகதர்மியில் ஸமாவேசம் கூடினபடி எங்ஙனே?' என்று பட்டர் பால்யத்திலே ஆழ்வானைக் கேட்க, 'நம்மோடு ஒக்க 'அந்நபாநாதிகள் தாரகம்' என்னலாய், பகவத்விஷயத்தில் அவகாஹநம் பார்த்தால் 'நித்தியசூரிகளோடு ஒப்பர்கள்' என்னலாயிருக்கிற ஆண்டான், அருளாளப்பெருமாள், ஸ்ரீ கோவிந்தப்பெருமாள் இவர்கள்காண், சிறு மா மனிசர்கள் ஆகிறார்கள்' என்று பணித்தார். பக். 268.

திருவனந்தபுரத்துக்குச் சாத்தாகப் போகாநிற்கச் செய்தே, திருக்கோட்டியூரிலே செல்வ நம்பியின் திருமாளிகையிலே போய்ப் புக்கார்களாக, நம்பி தாம் அஸந்நிஹிதராய் இருக்க, நங்கையார், நூறு வித்துக்கோட்டை கிடக்க, அவற்றைக் குற்றி ஸ்ரீ வைஷ்ணவர்களை அமுது செய்யப் பண்ணிவிட, பிற்றை நாள் நம்பி வந்து 'அவை என்?' என்ன, 'பரமபதத்திலே விளைவதாக வித்தினேன்' என்றாராம். பக். 287.

## பெரியோர்கள் உரைத்த உரை நயங்கள்

## வந்துள்ள இடங்கள்

1. ஸ்ரீ ஆளவந்தார்—பக். 4, 157, 173.
2. திருமலையாண்டான்—பக். 182, 215, 225.
3. எம்பெருமானார்—பக். 182, 241.
4. திருக்குருகைப்பிரான் பிள்ளான்—பக். 30, 135, 178.
5. ஆழ்வான்—பக். 226, 232.
6. எம்பார்—பக். 215.
7. பட்டர்—பக். 142, 192, 252.
8. நஞ்சீயர்—பக். 80.
9. அம்மங்கி அம்மாள்—பக். 99, 106, 142, 192.
10. பிறர்—பக். 51, 75, 198.

## வியாக்கியானத்தில் வந்துள்ள உவமைகள்

குழந்தை நலிந்தது என்னுத் தாய் சீருள், அது போன்று. பக். 5.

வழி பறிப்பார்க்கும் தரையிலே கால் பாவி நின்று கொள்ள வேண்டுமே, அது போன்று. பக். 6.

மின்னி முழங்கி வில்லிட்டு மழைபெய்யும் மேகத்தின் ஒலி போலே. பக். 8.

விடாயர் முகத்தே குளிர்நீர் வெள்ளத்தை வெட்டி விட்டாற்போலே. ப. 10.

மழைத்தாரையால் அல்லது தரியாத சாதகம் போலே. பக். 12.

நிரம்பின ஏரிகள் உடைந்து பெருக்கு எடுத்து ஓடுமாறு போலே. பக். 13.

நிதி எடுத்துக்கொண்டாற்போலே. பக். 17.

ஒரு கம்பத்தோடே சேர்ந்த களியானை போலே. பக். 19.

படை ஆண்டான் என்னுமாறு போலே. பக். 20.

காட்டுத்தீக் கிளர்ந்தாற்போலே. பக். 24.

மேருவின் சிகரத்திலே நிற்கிருன் ஒருவனை, ஒரு முடவன் சென்று கிட்ட முடியாதது போன்று. பக். 28.

சம்சாரியை அவன் ஆனந்திப்பிக்குமாறு போலே. பக். 33.

அம்பு பட்ட புண் மருந்திட்டு ஆற்றலாம்; அது போன்று. பக். 35.

ஒருவனுக்கு ஒருவன் கன்னியை அணைத்துக்கொடுக்குமாறு போலே. பக். 39.

நிதி எடுத்தவன், 'இன்னது கண்டேன், இன்னது கண்டேன்' என்னுமாறு போலே. பக். 43.

பெருமாள் தளருவர் என்று தம்முடைய தளர்த்தி தோற்றுதபடி இளையபெருமாள் தரித்திருந்தாற்போலே. பக். 48.

நல்ல நிலம் மணலீடாய்ப் போமாறு போலே. பக். 49.

ஒரு வலம்புரி கிடந்த இடத்தே ஆயிரம் சங்குகள் சேர்வது போன்று. பக். 53.

சித்திரம் உயிர் பெற எழுதினாற்போலே. பக். 68.

கற்பகத்தருப் பணைத்தாற்போலே. பக். 68, 138.

ஒருமலை நடந்து வருமாறு போலே. பக், 71.

கருமுகை மாலை போலே. பக். 77.

வயிறு ஆர உண்ண என்பாரைப் போலே. பக். 82.

கம்ஸ பயத்தாலே ஒளித்து வளர்ந்தாற்போலே. பக். 87.

சிரமமுடையார்க்கு உறங்க உறங்க முகம் தெளிந்து வருமாறு போலே. பக். 88.

பசளைக்கலம் போலே உடைத்தான். பக். 106.

புலி நின்ற தூறு போலே. பக். 106.

நித்தியசூரிகளை அடிமை கொண்டாற்போலே. பக். 108.

குழந்தைக்கு மிக அண்மையில் வசிக்கும் தாயைப் போலே. பக். 110.

பெருவிலையதான இரத்தினம் போலே. பக். 113.

எம்பெருமானாரைப் போலே ஆயிற்று அவ்வூரில் பிராஹ்மணர்களும். பக். 115.

அஞ்சின தேசத்திலே அச்சம் நீங்கினாற்போலே. பக். 118.

ஓர் அரணுக்குள்ளே இருக்கிருப்போலே. பக். 121.

இந்திரன் முதலாயினார்கட்கு உண்டான ஏற்றம் போலே. பக். 123.

இரவலர் தந்தாமுக்கு நல்லர் ஆமாறு போலே. பக். 126.

சேஷியாந்தன்மைக்கு அவன் தக்கிருக்குமாறு போலே. பக். 127.

அராஜகமானால் அரசபுத்திரன் தலையிலே முடியை வைத்து விலங்கு வெட்டிவிடுமாறு போலே. பக். 129.

காட்டுத்தீக் கதுவினாரைப் போலே. பக். 130.

வல்லார் ஆடினாற்போலே. பக். 132.

ஸ்ரீ வாமனனாய் வந்து அவதரித்தது இந்திரனுக்கு ஆனாற்போலே. பக். 132.

பல்லிலே பட்டுத் தெறித்தாற்போலே. பக். 132.

'ஒருகால் நாக்கு நனைக்க' என்பாரைப் போலே. பக். 134.

நாட்டூ என்னுமாறு போலே. பக். 136.

தெளிந்த நீரைப் பருகின காளமேகம் போலே. பக். 137.

கண்ட போதே விடாய் கெடும்படியான கார்காலத்திலே தோன்றுகிற மேகம் போலே. பக். 139.

கண்ட போதே நுகரலாம் கனி போலே. பக். 139.

வள்ளல் தன்மையுடையதாய்க் கறுத்து நெய்த்து இருப்பது ஒரு முகில் படிந்தாற்போலே. பக். 140.

இளஞ்சூரியர்கள் இருவரைப் போலே. பக். 142.

நீல நிறத்தையுடைய ஒரு சூரியன் அளவு இறந்த கிரணங்களைப் பரப்பிக்கொண்டு மலர்ந்தாற்போலே. பக். 147.

பாலினுள்ளே நெய் உண்டாய் இருக்கக் காண அரிதானாற்போலே. பக். 154.

மனைவியோடே வெறுப்பு உண்டானால் அவள் பக்கல் முகம் பெறுகைக்காகக் குழந்தைகளைக் கொண்டாடுவாரைப்போலே. பக். 157.

ஸ்ரீபரத்துவாசர் ஆஶ்ரமத்தில் தங்கியிருந்தாற்போலே. பக். 159.

அஸ்தினபுரத்திற்கு எழுந்தருளினாற்போலே. பக். 159.

செருப்பு வைத்துத் திருவடி தொழுவாரைப் போலே. பக். 166.

'ஸ்ரீ வால்மீகி முனிவராலே சொல்லப்பட்ட ஸ்ரீ ராகவனுடைய சரிதத்தை' என்னுமாறு போலே. பக். 173.

ஸ்ரீ விபீஷ்ணாழ்வான் கூட வந்த நால்வரோடும் திருவடிகளிலே விழுந்து தரைப்பட்டாற்போலே. பக். 175.

ஸ்ரீஜனகராஜன் திருமகள் தெளிந்து உவகையள் ஆனாற்போலே. பக். 175.

பெரிய நோய்க்குத் தப்பின புத்திரனைத் தாய்தந்தையர்கள் பார்த்துக்கொண்டிருக்குமாறு போலே. பக். 178.

வறிஞன் செல்வப்பேறு உண்டானால் பார்த்துக்கொண்டிருக்குமாறு போலே. பக். 179.

அரசர்கள் பகைவர்களை ஆசன பலத்தாலே வெல்லுமாறு போலே. பக். 179.

தாயானவள் குழந்தையை வயிற்றிலே வைத்து நோக்குமாறு போலே. பக. 192.

கௌஸ்துவத்தைப் போன்றும் பிராட்டிமாரைப் போன்றும். பக். 197.

நூபுரம் முதலியவைகளைப் போன்று. பக். 197.

நீறு மூடிய நெருப்புப் போலே. பக். 211.

இவனுக்கு அவன் இனியனாக இருக்குமாறு போலே. பக். 211.

தடாகம் சூடுபடத் தாமரை பூத்தாற்போலே. பக். 236.

கடல் கிளர்ந்தாற்போலே. பக். 243.

நீர் பாய்ந்த வயல் போலே. பக். 244.

ஒரு பூவே தடாகத்தைக் கண்செறி இட்டாற்போலே. பக். 244.

சில ஏரிகள் வற்றிப் பாழாய்க் கிடக்க, நினைவு இன்றிக்கே மழை பெய்ய நிறைந்து நிற்குமாறு போலே. பக். 267.

வேறு தேசத்துக்குப் போன புத்திரனைத் தாய் நினைக்குமாறு போலே. பக். 276.

பசியர் 'கல அரிசிச்சோறு உண்ண வேண்டும்' என்னுமாறு போலே. பக். 279.

பரத்துவம் போலே வேதம்; அவதாரம் போலே திருவாய்மொழி. பக். 287.